EB 4138

தமிழ்நாடு சட்டமன்றப்
பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

வெளியீடு 8.2.91 - Issued 8.2.91

Vol 27 No 3

1990

143806

D

V211,31'N9;

N90.27.3

## உள்ளடக்கம்.

12—4—1990


| | பக்கங்கள். |
|---|---|
| 1. வினாக்கள்-விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 351–380 |
| 2. தகவல் கோரல்— | |
| (அ) சில அமைச்சர்கள் அவைக்கு வராததால் வினாக்கள் எடுத்துக்கொள்ளப் பெறாமல் போவது குறித்து. .. .. .. | 381–387 |
| (ஆ) விளவன்கோடு தொகுதியில் கடையால் மேடு புனித இருதயப் பள்ளியில் காலரா தடுப்பு ஊசி போடப்பட்ட மாணவர்கள் மயக்கமுற்றிருப்பது குறித்து. .. .. | 387–389 |
| (இ) மாமண்டூரில் ஏற்பட்ட வாகன விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையும் நிவாரணமும் அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து. .. .. .. .. .. | 389 |
| (ஈ) மானியக் கோரிக்கைகளுக்கான கொள்கை விளக்கக் குறிப்புகள் உறுப்பினர்களுக்கு முன்னதாகவே வழங்கப்பட வேண்டிய அவசியம் குறித்து. .. .. .. | 397–398 |
| 3. அறிவிப்பு— | |
| சில அமைப்புகளுக்கான உறுப்பினர்களைத் தேர்வு செய்ய நியமனத் தாள்கள் அளிப்பது குறித்து. .. .. .. .. .. | 389–390 |
| 4. கவன ஈர்ப்பு— | |
| (அ) காஞ்சீபுரம் பச்சையப்பன் ஆடவர் கலைக் கல்லூரியில் தேர்வின் போது காப்பி அடித்த மாணவனைப் பிடித்த கண்காணிப்பாளர் தாக்கப்பட்டுள்ளது குறித்து. .. .. | 390–393 |
| (ஆ) சங்கு குளிக்கும் தொழிலாளர்களுக்கு சங்குகளைச் சொந்தமாக்கும் உரிமை வழங்கப் பெறாதது குறித்து. .. .. .. | 393–397 |

| | |
|---|---|
| ., அறிக்கை அளித்தல்— | பக்கங்கள். |
| பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு .. | 397 |
| ., மானியக் கோரிக்கைகள், 1990–91—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி. | |
| (அ) கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள். | 398–399 |
| (ஆ) கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும். | 399–400 |
| (இ) கோரிக்கை எண். 44—எழுதுபொருள்—அச்சுத் துறை. | 400–401 |
| *மாண்புமிகு திரு. கே. என். நேரு. | 401,511–529 |
| திரு. வி. பி. சந்திரசேகர். | 402–408 |
| திரு. இரா. மோகன். | 408–421 |
| *திரு. எச். எம். ராஜு. | 421–427 |
| *திரு. எஸ். குணசேகரன். | 427–429 |
| *திரு. சி. கோவிந்தராஜன். | 429–442 |
| திரு. டி. கே. பழனிச்சாமி. | 442–450 |
| *திரு. சோ. அழகர்சாமி. | 450–459 |
| *திரு. கோ. பூவராகன். | 459–466 |
| திரு. எஸ். எஸ். ராமசுப்பு. | 466–474 |
| திரு. பி. எச். பாண்டியன். | 474–479 |
| *திரு. கே. ஏ. மணி. | 479–486 |
| திரு. பா. அப்துல்சமத். | 486–491 |
| திரு. எம். கே. கரீம். | 491–493 |
| *திரு. சி. கோவிந்தசாமி. | 493–499 |
| *திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம். | 499–501 |
| *திரு. எஸ். டி. உகம்சந்த். | 501–511 |
| 7, பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 534 |


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 29, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2021
1990, ஏப்ரல் 12, வியாழக்கிழமை,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ. பெ. துரைசாமி அவர்கள் தலைமையில், காலை 9–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

"இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது."

இல்லாமை எனப்படும் வறுமையைக் காட்டிலும் கொடுமையானது எது என்று கேட்டால், வறுமையைக் காட்டிலும் கொடுமையானது, வறுமை ஒன்றே ஆகும்.

### 1. வினாக்கள்–விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண்கள் 2215 மற்றும் 6878 மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்படுகின்றன.

இதர மொழியில் கல்வி பயில்வோர் தமிழ் மொழியைக் கற்க வசதி.

* 2550—திரு. பெ. சு. திருவேங்கடம் :
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் இதர மொழியில் கல்வி பயில்வோர் தமிழ் மொழியைக் கற்க அரசு பிரத்யேகமான சலுகை அளிக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழ் அல்லாத பிற மொழிகளை முதல் மொழியின் கீழ் பயிலும் மாணவர்கள் தமிழ்மொழி பயில விரும்பினால், பயில விரும்பும் மாணவர்கள் எண்ணிக்கையைப் பொறுத்து, பள்ளி நேரம் தவிர்த்துப் பிற நேரங்களில், பள்ளி தலைமை ஆசிரியரே அதற்கான ஏற்பாட்டினைச் செய்ய அரசு ஆணை யிட்டுள்ளது.

**திரு. வ. முல்லை வேந்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்'' என்ற பாரதியின் கனவுகளை நனவாக்கி வரும் கலைஞர் அவர் களுடைய ஆட்சியில், தர்மபுரி மாவட்டத்தில், தளி தொகுதியில் தெலுங்கு மொழி மட்டும் பயிற்றுவிக்கப்படுகிறது. தமிழ் நாட்டிலே பிறந்த, அந்தக் குழந்தைகள் தமிழ் மொழியைப் படிக்கின்ற வாய்ப்பே இல்லாமல் இருக்கிறார்கள். அப்படிப் பட்ட இடங்களில், தமிழ் மொழியைப் பயிற்றுவிக்க, புதிய பாடத் திட்டத்திலே அல்லது கல்விக் கூடங்களிலே உருவாக்க முன்வருமா அல்லது புதிதாக தமிழ் பள்ளியை, தமிழ் பாடங் களைப் பயிற்றுவிப்பதற்கு, ஆரம்பிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** ''தேமதுரத் தமிழோசையை'' எல்லோரிடத்திலும் பரப்ப வேண்டும் என்பதற்காக: தெலுங்கை, கன்னடத்தை, அதுபோன்ற பிற மொழிகளைத் தாய்மொழியாக உள்ளவர்களிடத்தில் கட்டாய மாக தமிழைப் பயிற்றுவிப்பது முறையென்று இந்த அரசு கருதவில்லை. ஆனால், அவர்கள் தமிழ் பயில விரும்பினால், அதற்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. தமிழைப் படிக்க பிற மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட பிள்ளைகளி னுடைய எண்ணிக்கை குறைந்தபட்சம், இன்ன எண்ணிக்கை என்ற அளவுக்கு இருக்குமானால், அவர்கட்காகத் தனியாகத் தமிழ் பயிற்றுவிக்க ஏற்பாடு செய்யப்படும்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தமிழ் மொழி யைக் கற்காமல், அல்லது அவர்களுடைய தாய்மொழி அல்லது வேறு மொழிகளைக் கற்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்ற பாடசாலைகளுக்கு அல்லது பள்ளிகளுக்கு, அரசு மானிய உதவி அளித்து வருகிறது. அப்படிப்பட்ட நிலையிலுள்ள பள்ளிகளுக்கு, நிச்சயமாக தாய்மொழியைக் கற்க வேண்டும் என்கிற ஒரு நிலையை அரசு ஏற்படுத்துமா என நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியிலேயே விடை இருக்கிறது. எந்தச் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவராக





இருந்தாலும், குறிப்பிடப்பட்ட எண்ணிக்கை இருக்குமானால், அவர்கள் தாய் மொழியிலேயே படிப்பதை—தாய் மொழி மூலமாகக் கல்வி பெறுவதை, கொள்கை அடிப்படையில் இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அத்துடன் தமிழ் படிக்க விரும்புகிறவர்கள், அவர்களுடைய தாய்மொழி வேறு எதுவாக இருந்தாலும், ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலே இருப்பார்களேயானால், அவர்களுக்காகச் சிறப்பாகத் தமிழ் பயிற்றுவிக்க வழி செய்யப்படும்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழைக் கற்காதவர்கள், பிறகு அவர்கள் கல்வியில் தேர்ச்சி பெற்று, தமிழக அரசின் சார்பில் வேலை வாய்ப்பு கோருகின்ற நேரத்தில், அவர்களுக்கு தமிழ்மொழி தெரிந்திருக்க வேண்டிய ஒரு அவசியம் இருக்கிறது. ஆனால், நம்மைச் சுற்றியுள்ள மாநிலங்களில், தாய்மொழி கற்கவில்லை என்று சொன்னால், அங்கிருக்கின்ற வேலை வாய்ப்பு அலுவலகத்திலேகூட பதிவு செய்வதற்கு அனுமதிப்ப தில்லை. நம்முடைய மாநிலத்தில் தமிழ் கற்கவில்லை என்றாலும் கூட, வேறு மொழிகளில் அவர்கள் தேர்ச்சி பெற்றிருந்தாலும், இங்கே வேலை வாய்ப்பு பெறுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. இவைகளை எல்லாம் ஆவன செய்து அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியில் ஒரு குழப்பமும் சேர்ந்து இடம் பெற்றிருக்கிறது. தாய்மொழிக்கு முன்னுரிமை என்பதைத் தமிழக அரசு நீண்டகாலமாக ஏற்றுக் கொண்டிருக்கிறது. தாய் மொழி என்பது மிகச் சிறுபான்மை யோருக்கு—தெலுங்காக இருக்கலாம் ; மலையாளமாக இருக் கலாம் ; கன்னடமாக இருக்கலாம் ; வேறு எந்த மொழி யாகவும் இருக்கலாம் : அவர்களுக்குத் தாங்கள் தாய்மொழி யிலேயே படிக்காமல், தமிழிலேயே படிக்க விரும்பினால் அதற்கான வாய்ப்புகள் உண்டு. தாய்மொழியிலேயே படிக்க விரும்பினால், அதைத் தடை செய்வது, அரசாங்கத்தின் கொள்கைக்கு ஏற்றதல்ல.

9-05 மணி

**திரு. கே. ரமணி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல மலையாளம், தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட மைனாரிட்டி பள்ளிக் கூடங்கள் சில செயல்படுகின்றன. அவைகளுக்கு வேண்டிய நடவடிக்கைகள் அங்கே நடைபெறுகின்ற அளவிலே, அதாவது இஷ்டப் பாடமாக அங்கே தமிழையும் அவர்கள் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டு மொழி தமிழ்மொழி,

[1990 ஏப்ரல் 12

ஆரம்பத்தில் கற்கவேண்டிய மொழி தமிழ்மொழி. அது மாதிரி சமத்துவமான உரிமையும், சலுகைகளும் அவர்களுடைய தாய்மொழி என்ற அடிப்படையில் அனுமதிக்கும்படியான, மைனாரிட்டி மொழியினருக்கும் இங்குள்ளது போல சலுகைகளும் வசதிகளும் அளிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொடக்கத்திலிருந்து நான் இங்கே தெரிவித்துக் கொண்டிருப்பது எல்லாம் உறுப்பின ருடைய கேள்வியின் விளைவுதான். தாய்மொழியில் பயில குறிப்பிட்ட எண்ணிக்கையில் மாணவர்கள் இருந்தால் அவர் களுக்கு அதற்கான வாய்ப்பு வழங்கப்படுகிறது. ஆனால் 3, 4 பேர் இருந்தால் அத்தகைய வாய்ப்பு அளிக்க முடிய தில்லை. அவர்கள் தமிழ் படிக்க விரும்பினால் அவர்களுக்கு உரிமை உண்டு. தமிழ் படிக்க வேண்டுமென்று விரும்பினால் 10 பேர் இருந்தால் அவர்களுக்குத் தனியாக மாலை நேரத்தில் வகுப்பு நடத்த உதவி செய்யப்படுகிறது. ஆனால், அது அந்தந்தப் பள்ளியினுடைய நிலைமைக்கு ஏற்ப செய்யப்படும்.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாய்மொழி தமிழில் பி.ஏ., எம். ஏ., வித்வான் போன்ற பட்டங்களைப் பெற்றுள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்ன படிப்பு உள்ளவர்களுக்கு முன்னுரிமை என்ற நிலைமை வேலையைப் பொறுத்துத்தான் அமையும். எந்த வேலைக்கு அழைக்கிறார் களோ, அந்த வேலையைப் பொறுத்துதான் அது அமையும். ஆனால் எல்லா வேலைகளுக்கும் தமிழ் அறிவு வேண்டுமென்ற விதி இணைக்கப்படுகிறது. ஆகவே, தமிழ் அறிவு இல்லாமல் தமிழ்நாட்டில் வேலையில் தேர்ந்தெடுக்கப்படுகின்ற நிலைமை இயல்பாக இருக்க வாயப்பில்லை.

ஓய்வு பெற்ற கல்லூரி ஆசிரியர்களை மீண்டும் பணியில் சேர்த்தல்.

* 6908—திரு. கே. ரமணி ;

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சில கல்லூரிகள் ஓய்வு பெற்ற ஆசிரியர்களை பணியில் சேர்த்துள்ளது பற்றி பல்கலைக் கழக ஆசிரியர்களின் தமிழ்நாடு அமைப்பு (A.U.T.) எதிர்ப்பு தெரிவித்துள்ளது அரசு அறியுமா ?



1990 ஏப்ரல் 12]

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : உதவிபெறும் தனியார் கல்லூரிகளில் 58 வயது முடிவடைந்து ஓய்வு பெறும் ஆசிரியர்கள், மீண்டும் அரசு மான்யமற்ற முறையில், மானியத்தைப் பெறாத முறையில் 60 வயது முடிய நிருவாகம் விரும்பினால், பணி அமர்த்தப் படலாம்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏயூடி போன்ற அமைப்புகள் இதனால் ஏற்படும்படியான பாதகங்களை எடுத்துக்காட்டி யிருக்கிறார்கள். அவர்களில் ஏராளமான ஆசிரியர்கள் வேலை பெறாமல் இன்னும் இருந்துகொண்டிருக்கும் படியான சூழ்நிலையில், இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களை அளித்தால் தனியார் கல்லூரிகளில் இப்படிப்பட்டவர் களைப் பயன்படுத்தி குறைந்த ஊதியத்தில் அவர்களை வேலை யில் அமர்த்துவதன் மூலம் பணியில் இருக்கின்ற ஆசிரியர்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதை அரசு அறியுமா ? இதற்கு மாற்று எற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது பொதுவாக எல்லோரும் பின்பற்றக்கூடிய முறையாக இடம் பெறவில்லை. விதிவிலக் காக, ஒன்றிரண்டு நிகழ்வுகளில் இப்படி நிகழ்ந்திருக்கிறது. இப்படி இடம் பெறுவது கூட நிர்வாக வசதிக்காக நல்லது செய்வதற்காகத்தான். காரணம் இப்போதே எல்லா ஆசிரியர் களும் நிர்வாகத்தில் நல்லபடியாக நடந்துகொள்ளாததால் சில நேரங்களில் மாணவர்கள் குழம்பி நிற்கும் நிலைகூட இருக்கிறது. இங்கே இது கூட மானியம் இல்லாமல், தற்காலிக மாகத்தான் அந்தப் பணியில் அமர்த்தப்படுகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. அதுவும் எல்லா இடங்களிலும் அதுவே முறையாகுமாறு அப்படி ஏற்படுத்த நாங்கள் அனுமதிக்க வில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒருசில இடங்களில் விதிவிலக்காக, எக்சப்சனல் கேசஸ் ஆக தேவையையொட்டி இப்படி செய்வ தாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு தரம் இப்படி நாம் அனுமதிக்கும்படியான சூழ்நிலையில் மற்ற பணி நியமனம் போன்ற விஷயங்களில் தானாக பின்தங்கி போய்விடுகிற சூழ்நிலை ஏற்படுகிறது. இந்நிலையில்

படித்துப் பட்டம் பெற்று வேலையில்லாமல் கஷ்டப்படுகிறவர்களுக்கும் திறமையுள்ளவர்களுக்கும் மேலும் கஷ்டமான நிலையும் அவர்களுக்கு வாய்ப்பில்லாத நிலையும் ஏற்படுகிறது. ஆகவே, உதவி பெறும்படியான தனியார் பள்ளிகளுக்கோ அல்லது கல்லூரிகளுக்கோ ஓய்வுபெற்ற கல்லூரி ஆசிரியர்களை மீண்டும் பணியில் அமர்த்துகின்ற நிலையைக் கைவிட்டு, ஆசிரியர்களாக இருப்பவர்களையே அமர்த்தும்படியான நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

9-10 மணி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செலக்‌ஷன் போஸ்ட் என்பது போல நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு கல்லூரியையோ அல்லது பள்ளியையோ குறிப்பிடத்தக்க அளவுக்கு பொறுப்புணர்ச்சியோடு நடத்தக்கூடிய அளவுக்கு எல்லா ஆசிரியர்களும் இருக்கிறார்கள் என்று ஏற்றுக் கொள்வது சற்று கடினம். அதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்களும் உணர்ந்திருப்பார்கள். அப்படிப்பட்ட நிலைமை வரும்போது அனுமதித்தாலும், அரசாங்கம் அதை ஊக்குவிக்கக்கூடாது என்பதற்காக அரசாங்க மானியம் தருவது கிடையாது. அப்படி நியமிப்பவர்களை இடைக்கால ஏற்பாடாக ஆறு மாதம், ஓர் ஆண்டு நியமித்து, பிறகு அதுகூட மாற்றப்பட்டிருக்கிறது. எனவே அரசு இதை ஊக்கப்படுத்தாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் ஒரு இக்கட்டான நிலைமை ஏற்படும் போது நிர்வாகத்திற்கு அந்த வாய்ப்பு இருக்க வேண்டுமென்பதில் எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை.

திரு. எம். இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தஞ்சையில் உள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் முன்பிருந்த துணைவேந்தர் அவர்கள் ஓய்வு பெற்ற ஆசிரியர்களைப் பணியில் அமர்த்தியிருக்கிறார்கள். ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் பணி புரிவதைவிட, அந்த அளவுக்குப் படித்திருக்கிற மற்றவர்களைப் பணியில் சேர்த்தால், அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்ததாக அமையும். அதை அமைச்சரவர்கள் அறிவார்களா? அது குறித்து தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒன்று இந்தத் துணைக் கேள்வியை மூலக் கேள்வியிலிருந்து நேரடியாக எழுப்புவது முறையல்ல. பல்கலைக் கழகத்தைப் பற்றித் தனிக் கேள்வி போட்டால் தான் விளக்கம் தர முடியும். ஆனால் பல்கலைக் கழகங்கள் குறிப்பிட்ட ஆராய்ச்சிக்காகப் பணிகளை மேற்கொள்ளும்



போது, வேலை வாய்ப்பு என்ற முறையிலே நியமனம் நடைபெற்றால், சிலர் வேலை வாய்ப்பு பெறுவார்களே தவிர, ஆராய்ச்சி நடக்காது.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கல்லூரிகளிலே ஓய்வு பெற்ற ஆசிரியர்களை மீண்டும் பணியில் அமர்த்தும்போது அவர்களுக்கு அரசாங்கத்தின் மூலம் கொடுக்கின்ற ஓய்வூதியம் மட்டும் தருகிறார்களா அல்லது கல்லூரியில் கொடுக்கும் சம்பளம் மட்டும் கொடுக்கிறார்களா? அப்படி இரண்டும் கொடுத்தால், ஓய்வூதியத்தைக் கொடுக்காமல் இருக்க நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டால் தான் விவரமான விடை தர முடியும். மற்றும் ஒன்று, ஓய்வூதியம் யார் பெற்றாலும், அந்த ஓய்வூதியம் தவிர மிச்சம் இருக்கிற அளவுக்குத்தான் கடைசியாகப் பெற்ற ஊதியத்தை அந்த நிர்வாகம் அவர்களுக்கு வழங்கும் என்பது என் எண்ணம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, செல்ப்-பைனான்சிங் கல்லூரிகளிலும், ஈவனிங் காலேஜ்களிலும் ஓய்வு பெற்றவர்கள் வேலை செய்கிறார்கள். பார்ட்-டைம் என்ற முறையில் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கும் இந்த உத்தரவு பொருந்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள் 3696 மற்றும் 6228 மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கவும், வினாக்கள் 868 மற்றும் 5120 மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவும் தள்ளி வைக்கப்படுகின்றன.

### புதிய சலவைத் துறைகள்

*4163—திரு. மா. சுந்தரதாஸ் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

[1990 ஏப்ரல் 12

(அ) சென்னையில் கீழ்ப்பாக்கம், மேற்கு அண்ணா நகர், வியாசர்பாடி, வேளச்சேரி பகுதிகளில் புதிய சலவைத் துறைகள் கட்டும் திட்டம் உள்ளதா?

(ஆ) சைதாப்பேட்டை சலவைத் துறை அபிவிருத்தி செய்து தரப்படுமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) சைதாப்பேட்டை சலவைத் துறையை அபிவிருத்தி செய்ய சென்னை மாநகராட்சியினரால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இத்தகைய சலவைத் தொழில் செய்கின்ற தொழிலாளர்களுக்குத் தனியாக இடம் ஒதுக்கிக் கொடுத்து, சுத்தமான தண்ணீர் கொடுத்தால் அவர்களுக்கும் சூழ்நிலை நன்றாக இருக்கும், பொது மக்களின் சுகாதாரமும் நன்றாக இருக்கும். எனவே அத்தகைய திட்டம் அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மூலக் கேள்வி சென்னையில் கீழ்பாக்கம், மேற்கு அண்ணா நகர், வியாசர்பாடி, வேளச்சேரி பகுதிகளில் புதிய சலவைத் துறைகள் அமைப்பது பற்றியதாகும். இருப்பினும் பொதுவாக சென்னை மாநகரத்தில் இருக்கிற சலவைத் தொழில் செய்யும் இடங்கள் அனைத்திலும் தண்ணீர் வசதி கூடுமானவரை செய்து கொடுக்கப்படுகிறது. எல்லா இடங்களிலும் பற்றாக்குறை ஏற்படுவதுபோல அங்கேயும் பற்றாக்குறை ஏற்படுகிறது. ஆனால் இப்படிப்பட்ட இடங்களில் சலவை நிலையம் அமைக்க வேண்டுமென்று கோரியுள்ள இடத்தில் அதை ஏற்படுத்த சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்று ஆராய்ந்து பார்க்கும்போது, சில இடங்களில் பொது மக்களுடைய எதிர்ப்பு வருகிறது. சில இடங்களில் நிலங்கள் கிடைக்கவில்லை. எனவே தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கிற இடங்களில் எந்தவித குறையுமில்லாமல் பாதுகாக்கும் சூழ்நிலையை நம்முடைய அரசாங்கம் ஏற்கனவே 2. 3 மாதங்களுக்கு முன்னாலே சென்று பார்வையிட்டதற்குப் பிறகு, அந்த உத்தரவை அரசாங்கத்தின் சார்பாக இட்டிருக்கிறேன், அது நடவடிக்கையில் இருக்கிறது.



1990 ஏப்ரல் 12]

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சைதாப்பேட்டைப் பகுதி மக்களுக்கும் சரியானபடி தண்ணீர் வசதி இல்லை என்று பொது மக்களில் பலர் குறை சொல்கிறார்கள். அந்தப் பகுதியில் வாட்டர் பொலூஷன் வரும் என்று பொது மக்கள் அச்சப்படுகிறார்கள். எனவே தனிப்பட்ட இடத்தை அவர்களுக்கு ஒதுக்கிக் கொடுப்பதற்கும் வேளச்சேரி போன்ற பகுதிகளிலே புதிதாக ஒரு சலவை நிலையம் அமைக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

9-15 மணி

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தண்ணீர் தட்டுப்பாடு என்பது எல்லா நேரங்களிலும் ஏற்படுகிற வழக்கம் இல்லை. கூடுமான வரை அதிக அளவு தண்ணீர் பரப்பின் மீது உறிஞ்சப்படுவதை அடுத்து எல்லா இடங்களிலும் ஏற்படுவது தான் அங்கேயும் ஏற்படுகிறது. அதற்கான தனிக் கவனம் செலுத்தப்பட்டு உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்

திரு, மு. இராமநாதன் : துணைத் தலைவர் அவர்களே, நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம், சுத்தம் சோறு போடும் என்பது முக்கியமான பழமொழிகள். பொதுவாக இந்தப் புதிய சலவைத் துறை கட்டுவதில் மிகுந்த முக்கியத்துவம் இருக்கின்றது. கண்ட இடத்திலே குட்டைகளிலே, குளங்களிலே கொண்டு போய் சலவை செய்து அதன் மூலம் உபயோகப்படுத்தப்படும் துணிமணிகள் மூலம் பல்வேறு வகையான நோய் நொடிகள் வருகின்றன. ஆகவே அமைச்சர் அவர்கள் பொதுவாக சென்னை மாநகரத்திற்கு மட்டுமன்றி எல்லா இடங்களுக்கும் சலவைத் துறை என்பது ஒரு முக்கியமானது என்பதைக் கொள்கை அளவிலே ஏற்றுக் கொண்டு இது போன்ற கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்குத் திட்டமிடும் வகையிலே அரசு ஒரு குழுவை அமைத்தாவது சலவைத் துறை அமைப்பதில் கவனம் செலுத்துமா என்றும், அதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு உறுப்பினரின் யோசனையை அரசாங்கம் ஏற்கெனவே ஏற்று அமல் நடத்தி வருகிறது. ஆனால் சில இடங்களில் கட்டுவதற்கு சாத்தியக் கூறு இல்லாமல் போகிறது என்று நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டேன். அதைவிட எல்லா இடங்களிலே தெருத் தெருவாக கட்டுவது என்றாலும் பொது மக்களின் எதிர்ப்பு அதிகமாக இருக்கிறது. சில இடங்களில்

கொஞ்ச தூரம் சென்று அந்தத் தொழிலிலே ஈடுபடுவதற்குப் பயந்து கொண்டு கூவம் நதியிலே துவைத்து விடுகிறார்கள் அவர்களை நாம் பிடிப்பதற்கு முடியவில்லை. ஆகையினால் கூடுமான வரை இட நெருக்கடி இருக்கிற இடங் களைத் தவிர்த்து மற்ற இடங்களில் இந்தப் பணிகளை மேற்கொள்ளலாம் என்று திட்டமிடப்பட்டு இருக்கிறது.

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கழகத் தலைவர் கலைஞருடைய ஆட்சிக் காலத்தில் சைதாப்பேட்டையில் துணி துவைப்பதற் காக ஒரு இடம் நவீன முறையிலே கட்டப்பட்டது. இன்று அது சரியாகப் பராமரிக்கப்படவில்லை என்பது நமது அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் குறிப்பிடுகிற சைதாப் பேட்டையில் இன்றைய தினம் எல்லாம் பரிசீலிக்கப்பட்டு— அது அவருக்கே தெரியும் என்று நினைக்கிறேன்—அந்தப் பணி துரிதமாக நடைபெற வேண்டும் என்பதற்காகத் தான் இந்தத் துணை வினாவை அவர் எழுப்பி இருக்கிறார் என்று கருதுகிறேன் ; 2 இலட்சத்து 57 ஆயிரம் மதிப்பீட்டில் 10 ஓய்வு அறைகள் கூட, அவர்கள் வேலை முடிந்து வெயில் நேரங்களில் சற்று ஓய்வு எடுப்பதற்கான காரியத்திற்காக 10 ஓய்வு அறைகள் கூடக் கட்டப்படுகின்றன. மற்றும் சில பழுதுகள் பார்க்கப்பட்டு விரைவாக அந்தப் பணியை முடிப்பதற்கு ஏற்பாடு ஆகி இருக்கிறது.

திரு. உ. ரா. வரதராசன் : துணைத் தலைவர் அவர்களே, இதோடு சேர்த்து சென்னையில், வில்லிவாக்கம் பகுதியிலே ஒரு சலவைத் துறை கட்ட வெண்டும் என்பதற்காக நீண்ட நெடுங்காலமாக அந்த பரிந்துரை அமலில் இருந்து வருகின்றது. அதையும் விரைவுபடுத்தி அதற்கான நிலத்தையும் எடுத்து மாநகராட்சியின் மூலம் கட்டித் தருவதற்கான ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தனிக் கேள்வி போடவும்.

நகைக் கடன் மற்றும் சம்பளக் கடன்

*4267—திரு. உ. ரா. வரதராசன் :

திரு. எஸ். ஏ. தங்கராஜன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :



(அ) மத்திய கூட்டுறவு வங்கிகள் உள்ளிட்ட கடன் கூட்டுறவு சங்கங்களில் ஏழை, நடுத்தர மக்கள் பயன் பெறக் கூடிய நகைக் கடன் மற்றும் சம்பளக் கடன் ஆண்டு முழுவதும் ஒரே சீராக வழங்கப்பட அரசு ஏற்பாடு செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், இது குறித்து கூட்டுறவுக் கடன் கொள்கையில் திட்டவட்டமான மாற்றம் செய்து அறிவிக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே,

(அ) மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், நகரக் கூட்டுறவு வங்கிகள், அவற்றின் கிளைகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் பயன் பெறக்கூடிய நகையீட்டுக் கடன்களை ஆண்டு முழுவதும் ஒரே சீராக வழங்கிட அரசு ஏற்பாடு செய்யும். ஆனால் சம்பளக் கடன் வழங்கிட அத்தகைய ஏற்பாட்டினைச் செய்ய இயலவில்லை.

(ஆ) மேற்குறித்த கூட்டுறவு நிறுவனங்கள் வாயிலாக, நகையீட்டுக் கடன்கள் வழங்குவது குறித்து ஏற்கனவே கடன் கொள்கை திட்டமிடப்பட்டு கூட்டுறவுத் துறைக்கான கொள்கை விளக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் சம்பளக் கடன்களைப் பொறுத்தமட்டில் பணியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் கோரும் கடன் தேவைகளைப் பொறுத்து இக்கடன்கள் வழங்கப்படுவதால் இதனைக் குறித்து திட்டவட்டமான கொள்கை வகுக்க முடியாது.

9-20 மணி

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்தியக் கூட்டுறவு வங்கிகள் உட்பட கடன் கூட்டுறவு வங்கிகளிலே நகைக் கடன் ஆண்டு முழுவதும் ஒரே சீராக வழங்கப்படுவது இல்லை. எல்லாக் கிளைகளிலும் வழங்கப்படுவதில்லை. விருப்பம்போல் சில கிளைகளிலே வழங்குகிறார்கள், சில கிளைகளிலே வழங்குவதில்லை என் கின்ற புகாரெல்லாம் இருக்கிறது. நான் கேட்டது, பணியாளர் கூட்டுறவுச் சங்கத்திலே கடன் வழங்குவதைப்பற்றி அல்ல. தங்களுக்கு என்று கடன் கூட்டுறவு சொசைட்டி எதுவும் இல்லாத பல்வேறு தனியார் நிறுவனங்களிலே பணியாற்றக் கூடிய அந்த ஊழியர்கள், சம்பளக் கடனுக்காக மத்திய

கூட்டுறவு வங்கிகளை அணுகுகின்றபொழுது அவர்களுக்கு அதுவும் சீராகக் கிடைப்பதில்லை. இதுபற்றியும் ஒரு கொள்கை வகுக்கப்படுமா என்பதுதான் நான் கேட்டிருந்த கேள்வி. ஆகவே, இதற்கு விளக்கம் அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மத்திய மற்றும் மாநில அரசுத் துறைகள், அரசுத் துறை நிறுவனங்கள், தனியார் தொழில் நிறுவனங்கள், பள்ளிகள் முதலிய நிறுவனங்களில் பணிபுரியும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள் முதலியோருக்கும் குறைந்த வட்டியில் கடனுதவி செய்யவும், அவர்களிடையே சிக்கனத்தைக் கடைப்பிடித்து சேமிப்புப் பழக்கத்தை உண்டாக்கவும் பணியாளர்கள் கூட்டுறவு சிக்கனக் கடன் சங்கங்கள் செயல்படுகின்றன. அவ்வகை சங்கங்கள், அவற்றின் உறுப்பினர்கள் பணிபுரியும் நிறுவனங்களில் பெறுகின்ற ஊதியத்தை ஆதாரமாகக் கொண்டு மற்றொரு உறுப்பினரின் பிணையத்தின்பேரில் நபர் ஜாமீன் கடன்களை வழங்குகின்றன. தனியார் கடன்கள் அதிகபட்சம் 36 மாத தவணைகளில் உறுப்பினர்களின் ஊதியத்திலிருந்து வசூலிக்கப்படுகின்றன. மத்திய வங்கிகள் மற்றும் இதர வங்கிகளிடமிருந்து நிதி உதவி பெறும் பணியாளர் கூட்டுறவுச் சங்கத் தனி நபர் உச்சக் கடன்அளவு 12,000 ஆகும். சொந்த நிதியாதாரங்கள் கொண்டு செயல்படும் பணியாளர் கூட்டுறவுச் சங்கத் தனி நபர் உச்சக் கடன் 15,000 ஆகும். இதைத் தவிர, நுகர்வோர் கடன் 10,000 வரை பணியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்குகின்றன. ஒரு சில நிறுவனங்கள், அரசுத் துறை அலுவலகங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் பணியாளர்களுக்கு அவர்களுக்கென தனியே பணியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பெறாத நிலையில் அவர்கள் வேறு எந்தப் பணியாளர் கூட்டுறவுச் சங்கத்திலும் உறுப்பினர்களாக இல்லாதபட்சத்தில் சென்னையில் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி, சென்னை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் சில நகரக் கூட்டுறவு வங்கிகள் சம்பளக் கடன்களை வழங்குகின்றன. அக்கடன்களுக்குமே நான் மேலே குறிப்பிட்ட அந்த விவரங்கள் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மத்திய நகரக் கூட்டுறவு வங்கிகளில் நகைக்காகக் கொடுக்கப்படுகின்ற கடன் தொகை பழைய தங்க நகையின் மதிப்பீட்டின் விகிதாச்சார அடிப்படையில் வழங்கப்படுகிறது. இன்று தங்க நகைகளின் விலை உயர்ந்திருக்கின்ற காரணத்தால், விலை உயர்வுக்கு ஏற்றவாறு விகிதாச்சார முறையில் கடன் வழங்க அரசு செயல் குறிப்பு ஏதேனும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவரவர்களே, நகையினுடைய விலை
குறைந்தும் ஏறியும், ஏறியும் குறைந்தும் மாறி மாறி வருகின்ற
காரணத்தினாலே, எது எப்படியிருந்தாலும் ஏழை மக்களுக்கு
உதவிட வேண்டுமென்கின்ற வகையில் 1,500 ரூபாயிலிருந்து
1,800 ரூபாயாக உயர்த்தப்பட்டு இருக்கிறது என்ற விவரத்தைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. அர்ஜுனன் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, தற்போது ஒரு தனி நபருக்குக் கூட்டுறவு வங்கி
யிலே இவ்வளவுதான் கடன் என்ற சீலிங் இருக்கின்ற காரணத்
தை மாற்றி, ஒரு நபருக்கு, கொடுக்கின்ற நகையைப் பொறுத்து
எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்ற முறை
யைக் கொண்டு வர முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவரவர்களே, நகை பவுனுக்கு இவ்
வளவு என்றுதான் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அர்ஜுனன்
சொல்லுகின்ற விவரங்களின் அடிப்படையில் எங்கேயாவது
பிரச்சினை இருக்குமேயானால் என்னிடம் தெரிவித்தால் அதற்
குரிய விளக்கத்தைத் தரத் தயாராக இருக்கிறேன்.

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களே, சென்ற ஆண்டு கூட்டுறவு வங்கிகள், சங்கங்
கள் மூலம் கொடுத்த நகைக் கடன் எவ்வளவு ? பிரிக்கப்படாத
வடாற்காடு மாவட்டத்தில் கொடுக்கப்பட்ட நகைக் கடன்
எவ்வளவு என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1–4–1989 முதல்
28–2–1990 வரை வழங்கப்பட்ட நகையீட்டுக் கடன்கள்
விவரம் வருமாறு :—மாநிலம் முழுவதும், தொடக்க வேளாண்
மைக் கூட்டுறவு வங்கிகள் 2,950. வழங்கிய நகைக் கடன்
ரூபாய் கோடியில் 268.06. பயனடைந்தோர் எண்ணிக்கை 7.85
இலட்சம். மத்திய கூட்டுறவு வங்கிகள் கிளைகள் 510. வழங்
கப்பட்ட தொகை 133.15 கோடி. பயனடைந்தோர் எண்
ணிக்கை 2.92 இலட்சம். கூட்டுறவு நகர வங்கிகள் 134. வழங்கிய
தொகை ரூ. 208.80 கோடி. பயனடைந்தோர் எண்ணிக்கை.
5.50 இலட்சம். ஆக மொத்தம் 610 கோடி ரூபாய் வழங்கப்
பட்டிருக்கிறது. பயனடைந்தோர் எண்ணிக்கை 16 இலட்சம்.

9-25 மணி

[1990 ஏப்ரல் 12

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, மத்திய கூட்டுறவு வங்கிகள், கிராம கூட்டுறவு வங்கிகளில் வழங்கப் படுகிற கடனுக்கு வாங்கப்படுகிற வட்டி தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் வாங்கப்படுவதை விட மிக அதிக அளவில் இருக் கிறது. ஆகவே, இந்த வட்டியைக் குறைப்பதற்கு அரசு முயற்சிக் குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே, 16.5 சதவீதத்திற்கு மேல் நிச்சயமாக வட்டி வாங்கமாட்டார்கள். ஆனால், வெளியில் உள்ள கமர்ஷியல் வங்கிகளில் 18 சதவீதம் வசூலிக்கப்படுகிறது.

திரு. கே. ஆர். இராமசாமி : தலைவர் அவர்களே, தற் போது விவசாயக் கூட்டுறவு நாணயச் சங்கங்களில் ஒரு நபருக்கு 10,000 ரூபாய் அளவிற்கு மேலாக கடன் வழங்குவதில்லை. நகையீட்டின் பேரில் 10,000 ரூபாய்க்கு மேல் கடன் வழங்க இந்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே, நகையீட்டுக் கடன் என்பது அந்தந்த வங்கியி னுடைய சொந்த இருப்புத் தொகை, வைப்பு நிதி, சொந்த நிதியாதாரம் இவைகளை வைத்துதான் வழங்கப்படுகிறது. எனவே, இந்த நிதியாதாரத்திற்கு ஏற்ப தான் கடன் அளவு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. பிச்சாண்டி : தலைவர் அவர்களே, மத்திய அரசு நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ள 10,000 ரூபாய் விவசாயிகளுக்கு தள்ளுபடி செய்கிற உத்தரவின்படி, ஏழை நடுத்தர விவசாயிகள் வாங்கியுள்ள நகைக் கடனை ரூ. 10,000 வரையில் தள்ளுபடி செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று மத்திய நிதியமைச்சர் அவர்களை சந்தித்து விட்டு, இந்த மாமன்றத்தில் ஒரு அறிக்கையை தாக்கல் செய்திருக்கிறார்கள். எனவே, அதுவே அவர்களுக்கு விளக்க மாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, நிறைய கடன்களை கொடுக்கிறோம். நேஷனலைஸ்ட் பாங்கில் நகையீட்டுக் கடன் வாங்கிவிட்டு, திருப்புவதற்கு நாள் கடந்து விட்டால், மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை வட்டி போட்டு, அதுவும் காம்பவுண்டிங் இண்டரஸ்ட் போட்டு வசூல் செய்கிறார் கள். மழையில்லாத காரணத்தால் நகையை திருப்ப முடி யாமல் போய் விட்டால், அதற்கு சேர்த்து தொடர் வட்டி வசூலிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.



1990 ஏப்ரல் 12]

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய அந்த பிரச்சினைக்கான விவரம் என்னிடம் இல்லை. தனியாக கேள்வி போட்டால் உரிய விவரங்களை சேகரித்துத் தரலாம்.

திரு. ஆர். சிங்காரம் : தலைவர் அவர்களே, கிராம கூட்டுறவு வங்கிகளில் நகைக்கடன் வழங்குகிறபோது அதற்கு பங்குத் தொகை கேட்கிறார்கள். ஐ. ஆர். டி. பி. லோன் வாங்கினாலும் கூட பங்குத் தொகை கேட்கிறார்கள். ஆகவே, எந்தக் கடனை கொடுத்தாலும் அதற்கு பங்குத் தொகை கேட் கிறார்கள். இதர வங்கிகளில் பங்குத் தொகை கேட்பது கிடை யாது. ஸ்டேட் பாங்க், ஐ.ஓ.பி.யைப் போல இங்கும் நடைமுறைப் படுத்துவதற்கு, ஷேர் கேபிடல் இல்லாமல் கடன் வழங்க நட வடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே, இது கூட்டுறவு வங்கி— நம்மால் நடத்தப்படுகிற, நம்மால் நிதியுதவி செய்து நடத்தப்படுகிற கூட்டுறவு வங்கி. இதிலே பங்குத் தொகை பெறாமல் வங்கிகள் செயல்பட இயலாது. அதுதான் அடிப்படைத் தத்துவம்.

### கூட்டுறவு வார விழா

*4274—திரு. செ. நூர்முகமது :
திரு. உ. ரா. வரதராசன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

ஆண்டுதோறும் நடைபெறுகிற கூட்டுறவு வார விழாவிற்கு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவு கல்வி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து செலவிடப்படும் செலவுகளில் முறை கேடுகள் நடந்துள்ளனவா ?.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே, கூட்டுறவு வார விழாவிற்கான செலவுகளை, தமிழ் நாடு கூட்டுறவு ஒன்றியம், கூட்டுறவு கல்வி நிதியிலிருந்து மேற் கொள்ள வழிவகை உள்ளது. இவ்வாறு செலவு செய்ததில் சில முறைகேடுகள் குறித்த புகார் மனு அரசால் பெறப்பட்டு, தற் போது அப்புகார்கள் மீது ஊழல் தடுப்பு கண்காணிப்புத் துறை யினரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு விசாரணை நிலுவை யில் உள்ளது.

9-30 மணி

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப் பிடும்போது முறைகேடுகள் நடந்திருக்கிறது என்று

குறிப்பிட்டார்கள். எவ்வளவு தொகைக்கான முறைகேடுகள்
நடந்திருக்கின்றன என்பதை அவர்கள் அறிவிப்பார்களா என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன், முத்துஇரமலிங்கம் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில இனங்களின்
முறைகேடுகள் நடந்திருப்பதாகத்தான் விவரம், இருக்கிறது.
ஆனால் எவ்வளவு என்பதற்கான விவரம் இல்லை. தமிழ்நாடு
கூட்டுறவு ஒன்றியத்தில் கூட்டுறவு பேங்க்ஸ், கூட்டுறவு காகிதக்
கொடி, கூட்டுறவுத் துணிக் கொடி, கூட்டுறவுகள் குறித்த
தொலைப்பேசிப் புஸ்தகம், மர அடுக்குகள் விருந்தினர் விடுதிக்
குத் தேவைகான சில சாமான்கள், மற்றும் தமிழ்நாடு ஒன்றியம்
வெளியிடும் பிரசுரங்களுக்குத் தேவையான வெள்ளைத் தாட்கள்
போன்றவை வாங்கியதில் ஏற்பட்ட சில முறைகேடுகள் குறித்து
புகார் மனு ஒன்று அரசு மூலம் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர்
அலுவலகத்திலே பெறப்பட்டு, தற்போது அந்தப் புகார் மீது
ஊழல் தடுப்புக் கண்காணிப்புத் துறையினரால், விசாரணை
மேற்கொள்ளப்பட்டு; விசாரணை நிலுவையில் உள்ளது.

திரு. உ. ரா. வரதர்ாசன் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, இந்த முறைகேடுகள் எல்லாம் பல ஆண்டுக்கால
மாக கூட்டுறவு ஒன்றியத்திலே நடைபெற்றுக் கொண்டு
இருக்கின்றன. கூட்டுறவு வார விழா என்ற அதற்கு பல லட்சக்
கணக்கான தொகைகள் செலவிடப்படுகிறபோது அதிலே
தொடர்ந்து முறைகேடுகள் நடந்து வந்திருப்பதைப் பற்றி,
அங்குள்ள சங்கமும் புகார் எழுப்பியிருக்கிறது. பல்வேறு கூட்டுறவு
அமைப்புகளும், கூட்டுறவாளர்களும் புகார்களை எழுப்பி
யிருக்கிறார்கள். நம்முடைய அரசு ஆட்சி அமைந்து 15 மாத
காலம் ஆனதற்குப் பிறகும் கூட, இன்னும் விசாரணை விசா
ரணை என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். கூட்டுறவிலே
முறைகேடுகளை நடத்துபவர்களைப் பற்றி உரிய நடவடிக்கை
எடுப்பதற்கு தயக்கம் இருக்கிறதா ? இந்த விசாரணையைத்
துரிதமாக முடிப்பதற்கு ஏன் முடியவல்லை என்பதைப் பற்றி
அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. பொன், முத்துராமலிங்கம் : துணைத்
தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்டவர்கள் மீது பல்வேறு
புகார்கள் இருக்கின்றன. சில புகார்கள் தொடர்ந்து விசாரிக்கப்
பட்டுக் கொண்டு இருக்மின்றன. சில புகார்களின் அடிப்
படையில் சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு,
409, 420 ஆகிய இந்தியத் தண்டனைச் சட்டத்தின் கீழ் வழக்கு
பதிவு செய்யப்பட்டு, அவர்கள் மீது நடவடிக்கை தொடர்ந்த



நேரத்தில், தொடர்புடையவர்கள் உயர் நீதி மன்றத்திலே தடை
ஆணை பெற்றிருக்கின்ற காரணத்தாலேதான் இந்த வழக்கு
அத்தோடு நின்று கொண்டிருக்கிறது. தடை ஆணையைக் காலி
செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் அரசு தீவிரமான முயற்சி
மேற்கொண்டிருக்கிறது. கடந்த காலத்தில் நடந்தவைகளுக்கு
நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். எதிர்காலத்
திலே இந்த அரசு விழிப்பாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுகளுக்கு நீண்டகாலமாகத்
தேர்தல்கள் இல்லாததால், தனி அதிகாரிகளுடைய நிர்வாகத்
தின் கீழ் இருந்து வருகிறது. ஆகவே இம்மாதிரியான ஊழல்கள்
நடப்பதற்கு சந்தர்ப்பம் இருக்கிறபடியால், கூட்டுறவுத் துறைக்கு
உடனடியாக தேர்தல் நடத்துவதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்
பினர் கூட்டுறவுத் தேர்தல் பற்றி இங்கே கேள்வி எழுப்பியிருக்
கிறார்கள். நான் ஏற்கெனவே தெளிவாக இந்த மன்றத்திலேயே
குறிப்பிட்டிருக்கிறேன். உரிய சட்டத் திருத்தங்களை, கூட்
டுறவுச் சட்டத்திலும், கூட்டுறவு விதிகளிலும் கொண்டுவந்து
ஜூலை மாதம் அல்லது ஆகஸ்டு மாதத்திலே தேர்தலுக்கான
நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று இந்த மன்றத்திலே
வாக்குறுதி கொடுத்திருக்கிறேன். மீண்டும் வாக்குறுதி கொடுக்க
வேண்டிய அவசியம் இல்லை.

### வெள்ளாற்றின் மேல் பாலம் கட்டுதல்.

*3257—டாக்டர் து கிருஷ்ணமூர்த்தி :
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்ஆற்காடு மாவட்டத்தில் சி. முட்லூருக்கும்,
பி, முட்லூருக்கும் இடையே வெள்ளாற்றின் மேல் பாலம்
அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், 1989-90 நிதிநிலை அறிக்கையில்
குறிப்பிட்டுள்ள கடலூர்—கன்னியாகுமரி கடற்கரை சாலைத்
திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தென் ஆற்காடு மாவட்டத்தில்
சி. முட்லூருக்கும், பி. முட்லூருக்கும் இடையில் வெள்ளாற்றின்
மீது பாலம் கட்டுகிற திட்டம் ஏதும் தற்போது அரசின்
பரிசீலனையில் இல்லை.

டாக்டர் து. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வெள்ளாறு முட்லூர் என்ற ஊரின் நடுவிலே செல்வதாலேதான், சி. முட்லூர் பி. முட்லூர் என்றும் இது சிதம்பரத்தைச் சார்ந்தது, புவனகிரியைச் சார்ந்தது என்றும் பிரிக்கப்பட்டு இருக்கிறது. இதன் இருகரைகளிலும், இப்போது சி. முட்லூரில் கல்லூரியை ஆரம்பித்து இருக்கிறார்கள். அதல்லாமல் சிதம்பரம் இதிலிருந்து 2 கல் தொலைவில்தான் உள்ளது. இன்னும் தெற்கே போனால், நிறைய கோவில்களும், பல மதத்தைச் சார்ந்த கோவில்களும் இருக்கின்றன. சென்னை, புதுவை, கடலூர் பகுதியிலேயிருந்து வரும் பயணிகளின் எண்ணிக்கை அதிகமாவதோடு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், மற்றும் அரசுக் கல்லூரிகளும் அங்கே இருப்பதாலும், இன்னும் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி இருப்பதாலும், அந்தப் பகுதியிலிருந்து இந்தப் பகுதிக்குச் செல்லவேண்டிய பயணிகள் எண்ணிக்கை அதிகாமாகிக் கொண்டு வருவதாலும், பொதுமக்களுடைய முக்கியத்துவத்தைக் கருதியும், இன்னும் பிச்சாவரம் என்ற சுற்றுலா மையமும், சி. முட்லூர் அருகிலே இருப்பதாலும், சுற்றுலாப் பயணிகள் மற்றும் மாணவர்கள் அதிகமாக அந்தப் பாதையிலே செல்லவேண்டியிருப்பதாலும், அந்தப் கரையிலிருந்து இந்தக் கரை செல்வதற்கு அனாவசியமாக இந்த வெள்ளாற்றின் வடக்குக் கரை மேலே மேற்கே சுமார் 10 கிலோ மீட்டர் தூரமும் திரும்பிவர சிதம்பரத்தை நோக்கி அதாவது கிழக்கு நோக்கி, தெற்குப் பகுதியிலிருந்து 10 கிலோ மீட்டர் தூரம் வருவதால், இது அனாவசியமாக தேவையில்லாமல் 20 கிலோ மீட்டர் தூரம் சுற்றிவரவேண்டிய அவசியம் இருக்கிறது. இதைத் தவிர்க்சவும் எரிபொருள் பஞ்சம் உள்ள நேரத்தில், அது நமக்கு அவசியமாகத் தேவையாக இருக்கிற காரணத்தால், இதை முக்கியமாகக் கருதி இதற்கு முன்னுரிமை கொடுத்து, எடுத்து கட்டித்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

9-35 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய அத்தனை கருத்துக்களையும் அரசு கருத்தில் கொண்டு தான் சி. முட்லூருக்கும், பி. முட்லூருக்கும் இடையே ஒரு பாலத்தை அமைக்க முடிவு செய்தது. ரூ. 43 இலட்சம் செலவில், ஆனால் அந்த இடத்திலே வெள்ளாறு மிகக் குறுகி வளைந்து வளைந்து போகின்றது. Zig Zag ஆகப் போகிறது. அப்படி அந்த இடத்திலே பாலம் கட்டினால் தாக்கு பிடிக்குமா என்பதற்காக அதன் நீராற்றதலைப் பற்றி ஆராய்கின்ற Poondi Hydraulic Research Institute அதனுடைய ஆலோசனையைக் கேட்டோம். அவர்கள் சொன்னார்கள். அந்த இடத்திலே நீங்கள் பாலம் கட்டுவதானால், அங்கே வளைந்து வளைந்து





அந்த ஆறு செல்கிறது. ஆற்றின் போக்கை மாற்றுவதோடு
பாதையும் மாறிவிடும். எனவே இந்த இடத்தில் பாலம் கட்டு
வது உகந்தது அல்ல என்று அந்த நீராற்றலைப் பற்றி அரசுக்கு
ஆலோசனையாக அந்த பூண்டி நிலையம் தெரிவித்தது.
பிறகு அப்படியே நீங்கள் கட்டுவதனால் இன்னும் கொஞ்சம்
கூடவே ஒரு தடுப்புச் சுவர் கட்டவேண்டும். அந்தத் தடுப்புச்
சுவர் கட்டுவதற்கு மேலும் பணம் செலவாகும். அந்தத் தடுப்புச்
சுவர் வேண்டாம் என்று சொன்னால், நீங்கள் அடுத்து அதற்கு
மேற்கே கொஞ்சம் தள்ளி, வேறொரு பாலம் கட்டலாம் என்று
அவர்கள் ஆலோசனை கூறினார்கள். அந்த ஆலோசனையை
ஏற்றுக்கொண்ட பிறகு அரசு ஒரு மதிப்பீடு தயார் செய்து
ரூ. 245 இலட்சம் செலவிலே செய்தது. இதற்கு இடையில்
கிழக்குக் கடற்கரைச் சாலை A.D.B. யினுடைய உதவியோடு
நமக்குக் கிடைத்திருக்கிறது. திருவான்மியூரிலிருந்து
கடலூர் வரையில் அந்த கடற்கரைச் சாலையை முதற்கட்ட
மாக அமைப்பதற்கு எல்லாவிதமான ஏற்பாடுகளையும் செய்து,
இப்போது டெண்டர் போடுகிற நிலைமை வந்திருக்கிறது.
அந்தக் கடற்கரைச் சாலையோடு இந்தச் சாலையில் சி. முட்
லூரை இணைத்து விடலாம். அதற்கு சாத்தியக்கூறு இருக்கிறது
என்ற காரணத்தினால் அது கைவிடப்பட்டது. இருந்தா
லும் மாண்புமிகு உறுப்பினர் துரை கிருஷ்ணமூர்த்தி அவர்கள்
கூறிய பல்வேறு விதமான யோசனைகளை கருத்தில் கொண்டு
விருத்தாசலம், பரங்கிப்பேட்டை ஊராட்சியும், கிள்ளை பேரூ
ராட்சியும், விருத்தாசலத்தையும் பரங்கிப்பேட்டையையும்
இணைக்கக் கூடிய அளவிற்கு ரூ. 300 இலட்சம் செலவில் ஒரு
குறுக்குப் பாதையை அமைப்பதற்கு சுற்றுலா வாரியம் முயற்சி
எடுத்துக்கொண்டிருக்கிறது. அந்த சுற்றுலா வாரியத்திற்கு மத்
திய அரசினுடைய நிதியுதவி கிடைக்கும். எனவே சுற்றுலா
வாரியம் இந்த வழியை அமைக்கிறபோது தில்லை மற்றும்
பிச்சாவரம், சிதம்பரம் எல்லாவற்றையும் சுற்றிப் பார்ப்
பதற்கு வசதி வாய்ப்பாக இருக்கும். ஆனால் சி. முட்லூரையும்,
பி. முட்லூரையும் கிழக்குக் கடற்கரைச் சாலையோடு நெடுஞ்
சாலைத் துறை இணைக்கும்.

திரு. எஸ். சிவலோகம் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, முன்பு கழக ஆட்சியில் தானைத் தலைவர்
கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது தென்னாற்
காடு மாவட்டம் திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டில்
பொதுமக்களின் நன்மையைக் கருதி, இந்தப் பாலம் முக்கிய
மாகக் கட்டப்படவேண்டுமென்று தீர்மானத்தை நிறைவேற்றி
யிருக்கிறார்கள். இப்போது கழக ஆட்சி பொதுமக்களால் தரப்
பட்டிருக்கிறது. இப்போது முருகன் அவர்களையே நம்பியிருக்
கின்றவர்கள் நாங்கள். துரைமுருகனே இந்த இலாக்காவிற்கு
அமைச்சராக இருப்பதால் அமைச்சரவர்கள் இதை எப்படியும்
முயற்சி செய்து, இந்தப் பாலம் ஏற்படுவதற்கு முயற்சி எடுப்
பாரா என அறிய விரும்புகிறேன்.

[1990 ஏப்ல் 12

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்பினோர் கைவிடப்படார் என்பதற்கு எடுத்துக்காட்டாக உறுப்பினர் அவர்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. சுற்றுலா வாரியத்திலிருந்து விருத்தாசலம், பரங்கிப்பேட்டை, கிள்ளையை இணைக்கும் சாலை ரூ. 300 இலட்சம் செலவிலே அந்தப் பாலமும் வருகிறது. கிழக்குக் கடற்கரைச் சாலையை இணைக்கின்ற பாலமும் வருகின்றது. ஆகவே இரட்டிப்பு லாபம் மாண்புமிகு உறுப்பினருக்கு.

### காரணப்பட்டு ஓடையில் பாலம் கட்டுதல்

*3515—திரு. இ. புகழேந்தி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கடலூர் பஞ்சாயத்து யூனின் காரணப்பட்டு ஓடையில் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, ஆம். ரூ. 1.00 இலட்சம் மதிப்பீட்டில் கடின தளம் அமைக்க கடலூர் ஊராட்சி ஒன்றியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

9-40 மணி

திரு. இ. புகழேந்தி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே வினா நேரத்தில் நன்றி சொல்லக் கூடாது என் பதனால், நீண்டகாலமாக இந்தப் பகுதியினுடைய ஆயிரக் கணக்கான மக்களுடைய அந்த ஓடைப் பிரச்சினையை தீர்த்து வைத்ததற்காக மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கு அந்த ஆயிரக்கணக்கான மக்களின் சார்பாக பாராட்டாவது தெரிவிக்கலாமா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இங்கே பேரவையில் தெரிவித்துக் கொள்ளக் கூடாது.

### ஸ்ரீவைகுண்டம் ஆற்றுப் பாலத்தை விரிவுபடுத்துதல்.

*5363—திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :



1990 ஏப்ரல் 12]

ஸ்ரீவைகுண்டம் ஆற்றுப் பாலத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவைகுண்டத்திலே தாமிர பரணி ஆற்றின் குறுக்கே அமைந்திருக்கிற பாலமானது கிட்டத் தட்ட 1/2 கிலோ மீட்டர் நீளம் உள்ள மிகப் பெரிய பாலம். அத்தோடு குறுகிய பாலமாகவும் இருக்கிறது. ஒரு முனையி லிருந்து பார்த்தால் இன்னொரு முனை தெரியாத அளவுக்கு நீளமான பாலம். அத்தோடு மட்டுமல்லாமல் திருநெல்வேலியி லிருந்து திருச்செந்தூர் வரை செல்கிற அனைத்துப் பஸ்களும் இந்தப் பாலத்தின் வழியாகத்தான் ஸ்ரீவைகுண்டம் பேருந்து நிலையத்திற்கு வந்துக் கொண்டிருக்கின்றன. அதேபோன்று ஸ்ரீவைகுண்டத்திலிருந்து செல்லுகிற பஸ்களெல்லாம் இந்தப் பாலத்தின் வழியாகத்தான் செல்லுகின்றன. மேலும் லாரி போக்குவரத்துகள், மற்ற வாகனப் போக்குவரத்துகள் எல் லாம் இந்தப் பாலத்தின் மூலமாகத்தான் சென்று கொண்டிருக் கின்றன. ஆகையினால் இந்த போக்குவரத்து நெரிசலை மன திலே கொண்டு அடிக்கடி விபத்து நடப்பதை தவிர்க்கின்ற நோக் கத்திலே அந்த ஸ்ரீவைகுண்டம் ஆற்றுப் பாலத்தை விரிவு படுத்துவதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

9.40 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல 400 மீட்டர் நீளம் உள்ள ஒரு பாலம் அது. அந்தப் பாலம் 1869 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இரும்பு பாலம். அது இன்னமும் நல்ல நிலை யிலே இருக்கிறது. ஆகையினால் அதை மீண்டும் புதுப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது. 120 ஆண்டுகள் ஆனதற்கு பிறகும் இந்தப் பாலம் வலுவிழக்காமல் இருக்கிறது. ஆனால் அதிலே ஒரு பிரச்சினை என்னவென்றால் ஒரு வழி பாதையாகப் போகலாம். அதே பாலத்தை விரிவு படுத்தி இருவழி பாதையாக ஆக்கினால் அது தாங்குமா என் பது ஒரு கேள்விக்குறி. எனவே ஒரு வழிப் பாதையாக இந்தப் பாலம் இருக்கட்டும். அதற்கு இணையாக மற்றொரு பாலத்தை அமைக்கலாமா என்று அரசு யோசித்துக் கொண் டிருக்கிறது. அதற்கு சுமார் 400 லட்சம் செலவு ஆகும் என்று கணக்கிடப்பட்டிருகிறது. நிதி நிலை ஆதாரங்களை வைத்து அது பற்றி ஆய்வுக்செய்து வருங்காலத்தில் அரசு அதை அமைக்க முயற்சிகளை எடுத்துக் கொள்ளும்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவைகுண்டம் ஆற்றுப் பாலத்தை விரிவு படுத்துவதற்கு சில சங்கடங்கள் இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே போக்குவரத்து நெரிசலை தவிர்க்கின்ற விதமாய் ஸ்ரீவைகுண்டம் அருகிலே ஆழ்வார் திருநகரி, ஆழ்வார் தோப்பு ஆகிய கிராமங்களுக்கு இடையிலே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ஒரு பாலத்தை அமைப்பதன் மூலமாக அந்தப் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கும் முடியும். அதேபோல் பாளையங்கோட்டை தூத்துக்குடி. திருநெல்வேலி மெயின்ரோட்டுக்கும் ஆழ்வார் திருநகரிக்கும் இடையே ஒரு போக்குவரத்தை உருவாக்குவதற்கும் அது வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, ஆழ்வார் திருநகரி, ஆழ்வார் தோப்புக்கிடையே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ஒரு பாலத்தை அமைப்பதற்கு அரசு முன் வருமா என்பதைஅறிய விரும்புசிறேன்

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, தற்போது தந்த யோசனைக்கு நன்றி. பிறகு அது பற்றி யோசிக்கலாம்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நொய்யலாற்றின் மீது அல்லது ரயில்வே பாதைகளின் மீது வரும் நிதி ஆண்டில் தமிழகத்தில் எத்தனை பாலங்கள் எங்கெங்கு கட்டப்பட உள்ளன? அதில் திருப்பூர் ரெயில்வே மேம்பாலமும், நொய்யலாற்றின் மேம்பாலமும் சேர்க்கப்பட்டுள்ளதா? அந்தப்பணி எப்போது தொடங்கும் என்பதை அமைச்சர் மூலம் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, இது ஸ்ரீவைகுண்டம் பாலம் பற்றிய கேள்வி. ஆனால், ஆர்.ஓ.பி. பற்றி நேற்று கேள்வி வந்தது. நேற்று யு மிஸ்ட் இட்டீர்கள். நேற்று கேள்வி கேட்டிருந்தால் அது எப்போது வரும் என்பதை சொல்லியிருக்கலாம். நாளைக்கு வேண்டுமானால் சொல்லுங்கள் சொல்லுகிறேன்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் எல்லா ஊர்களுக்கும் பாலத்தைக் கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள். எங்கள் மாவட்டம், தஞ்சை மாவட்டம் நிறைய ஆறுகள் வாய்க்கால்கள் உள்ள மாவட்டம். அந்தப் பகுதியிலே வெள்ளக் காலங்களில் தண்ணீர் வரும் காலங்களில் மக்கள் மிகவும் சிரமப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கே சிறு சிறு பாலங்களாகத் தான் வருகின்றன. ஆகவே பகுதி 2 திட்டத்தின் கீழ் தஞ்சை மாவட்டத்திற்கு வந்திருக்கிற 3 பாலங்களையும்





சாங்ஷன் செய்வீர்கள் என்றால் மொத்த செலவும் கொஞ்சம் தான் ஆகும். ஆகையினால் அதை பரிசீலிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பொதுப் பணித்துறை மானியம் 23 ஆம் தேதி வருகிறது. அதற்குப் பிறகு மற்றவை வெள்ளித் திரையில் காண்க.

ஏரியில் வடிகால் வசதி.

*9150—திரு. மீ. அ. வைத்தியலிங்கம் :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, 148-வது வட்டம், வேளச்சேரியில் உள்ள சர்வே எண் 123/1-ல் உள்ள பொதுப்பணித் துறை ஏரியில் வடிகால் வசதி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : ஆம். மேற்கண்ட வேளச்சேரி ஏரிக்கு வடிகால் வசதி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

9.45 மணி

திரு. மீ. அ. வைத்தியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 123/1 சர்வே நம்பர் உள்ள பொதுப்பணி ஏரியில் தற்போது 56 ஏக்கர் பரப்பளவில் வீட்டு வசதி வாரியமும், 36 ஏக்கர் பரப்பளவில் குடிசை மாற்று வாரியமும், பல்வேறு பணிகளை மேற்கொண்டிருக்கிற காரணத்தால், கொள்ளளவு மிகவும் குறைந்து விட்ட நிலையில், அப் பகுதியிலே வாழ்கிற மக்கள் பாதிக்கப்படுகின்ற நிலை ஏற்பட்டிருக்கிற காரணத்தால் உடனடியாக இதை அரசு மேற் கொள்ளுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்காகத்தான் மேற்சொன்ன திட்டம் தீட்டியிருக்கிறது என்று சொன்னேன்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திட்டம் தீட்டி ஆண்டுகள் இரண்டாகின்றன. அதற்கான வரைபடத்தைக்கூட நான் மாண்புமிகு

[1990 ஏப்ரல் 12

அமைச்சரிடத்திலே தந்திருக்கிறேன். தற்போது கொள்ளளவு குறைகின்ற அளவிற்கு அரசு சீர்திருத்தப் பணிகளைச் செய்கின்ற காரணத்தால், ஒரு சிறு மழை பெய்தாலும் அந்தப் புறத்திலே இருக்கிற மக்கள் பாதிக்கின்ற அளவிற்கு மதகின் அளவையும் அரசு குறைத்துவிட்ட காரணத்தால் உட னடியாக இந்தக் கால்வாயை அமைப்பதற்கும், அந்தக் கால்வாய் அமைக்காத காரணத்தால் மாநகராட்சி அமைக்க வேண்டிய வடிநீர்க் கால்வாய்கள் கூட அமைக்காமல் இருப்பதால், விரைந்து இந்த ஆண்டே அமைச்சர் இதை மேற்கொள்வாரா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதில் ஒரு பெரிய பிரச்சினை என்னவென்றால், ஏரியிலே பாதி வீடு கட்டிவிட்டார்கள். மழைக் காலங்களில் தண்ணீர் வந்து விடுகிறது ஏரிக்கு, தெரியாத்தன மாக. பிறகு அந்த வீடுகளைப் போய் அது ஆக்கிரமிக்கிறது. இவர்கள் ஏரியை ஆக்கிரமித்தார்கள். பிறகு நீர் வந்து அந்த வீடுகளை ஆக்கிரமிக்கப் போகிறது, அப்போது வீட்டுக்குள் தண்ணீர் வந்து விட்டதே என்கிறார்கள். ஏரியில் போய் வீடு களைக் கட்டினால் தண்ணீர் வராமலா போகும்? தண்ணீர் வரும். ஆனால் ஒன்று, பிறகு அந்த வெள்ளத்தைத் தடுக்க வேண்டும். எப்படியோ கட்டி விட்ட வீட்டுக்குப் பாதுகாப்புத் தரவேண்டும் என்பதற்காக அந்த ஏரியினுடைய நீர் அளவை 4 அடி குறைக்க வேண்டும் என்பதற்காக ஒரு 'வீர்' கட்டினார்கள், 1986 இல். 1986 இலே ஒரு 'வீர்' கட்டினார்கள். அந்த 'வீர்' கட்டுகிறார்களே, அதிலிருந்து ஒரு நீர் வழிந்தோடி கட்ட வேண்டும். அதைக் கட்டவில்லை. 'வீரை' மட்டும் கட்டி முடித்து விட்டார்கள். அதற்குப் பிறகு என்னவென்றால் ஏற் கனவே மூன்று அபான்டன்ட் வீர்கள் இருக்கின்றன. அதற்கும் வழிந்தோடிகள் கிடையாது. ஆக ஏற்கெனவே மூன்று அபான் டன்ட் வீர்கள், புதிதாகக் கட்டப்பட்ட வீர், ஆக நான்கும் சேர்ந்து, நீர் போவதற்கு, சர்ப்ளஸ் கோர்ஸ் இல்லாமல் போய் விட்டது. ஆக, தண்ணீர் தேங்கிப் போய்விட்டது. அதை மாற்றுவதற்காக, ஏற்கெனவே இருக்கிற அபான்டன்ட் வீர்கள், புதிதாகக் கட்டப்பட்ட வீர், எல்லாவற்றிற்கும் சர்ப்ளஸ் கோர்ஸை ஏற்படுத்துவதற்காக 280 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டம் தீட்டப்பட்டு, அதற்கு அரசு நடவடிக்கைகளிலே இறங்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 9366 மாண்பு மிகு சமூக நலன்—ஊரகத் தொழிற்துறை அமைச்சரின் வேண்டு கோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்பெறுகின்றது.



1990 ஏப்ரல் 12]

நரிக்குறவர், நாவிதர் மற்றும் சலவைத் தொழிலாளர்களை தாழ்த்தப்பட்டோர் சமூகத்தில் இணைத்தல்.

*1563—திரு. ஆர். அண்ணா நம்பி :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள நரிக்குறவர், நாவிதர், சலவைத் தொழிலாளி ஆகியோரை தாழ்த்தப்பட்ட சமூகத்தில் இணைக் கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டிலுள்ள நரிக்குறவர் இனத்தைப் பழங்குடி யினர் பட்டியலில் சேர்க்கலாம் என மைய அரசுக்கு ஏற்கெனவே பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. நாவிதர் இனத்தைத் தாழ்த்தப் பட்டோர் பட்டியலில் சேர்ப்பதுபற்றி அரசின் ஆய்வில் உள்ளது, சலவைத் தொழிலாளரினத்தைத் தாழ்த்தப்பட்டோர் பட்டி யலில்சேர்ப்பது குறித்து ஏற்கெனவே ஆய்வு செய்யப்பட்டு தற் போதுள்ள நிலையே நீடிக்கலாம் என அரசு முடிவு எடுத்துள்ளது.

திரு. கே. அர்ஜுனன் : பேரவைத் தலைவர் அவர்களே. அதேபோன்று 'போயர்' இனத்தைச் சேர்ந்தவர்கள் கூட கிராமப் புறத்திலே தீண்டத் தகாதவர்களாக வீட்டிலேயே அனுமதிக் காத நிலை இருக்கிற காரணத்தால் அவர்களையும் தாழ்த்தப் பட்டோர் இனத்திலே சேர்ப்பதற்கான ஆய்வு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடி யினர் பட்டியல் குடியரசுத் தலைவர் ஆணையாக மத்திய அரசால் வெளியிடப்படுபவை ஆகும். இப்பட்டியல்களில் ஏதேனும் திருத் தம் செய்ய வேண்டுமென்றால் அது பாராளுமன்ற சட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட வேண்டும். அதற்கான அதிகாரம் மைய அரசிற்கு மட்டுமே உள்ளது. மாநில அரசிற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. இரகுமான் கான் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே நரிக்குறவர்கள் எந்தப் பட்டியலில் இருக்கிறார்கள்? மருத்துவக் கல்லூரி, என்ஜினியரிங் கல்லூரி அல்லது அரசாங்க வேலை வாய்ப்புக்களில் ஏதாவது இருக்கிறார்களா என்ற தக வலை அரசின் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நரிக்குறவர்கள் இனம் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கக் கோரி, இவ்வரசு ஏற்கெனவே மைய அர சிற்குப் பரிந்துரை செய்துள்ளது, அது மைய அரசின் பரிசீலனை

யில் உள்ளது. இதுவரை எத்தனை பேர் வேலைவாய்ப்பில் இருக்கிறார்கள் என்ற பட்டியலை, தனி வினா எழுப்பினால் அதற்குள்ள விளக்கமான விடையை அளிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நரிக்குறவர்கள் ஏற்கனவே எஸ்.சி.யில் இருக்கிறார்கள். சலவைத் தொழிலாளர்களும் அப்படியே இருந்து கொண்டிருக்கிறார்கள். நாவிதர்களுக்கு பரிசீலனை செய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்களே, கிராமப்புறங்களிலே இருக்கிற நாவிதர்களும், சலவையாளர்களும், அந்த அரிஜன மக்களுக்கு சலவை செய்வதும் இல்லை. ஷேவ் செய்வதும் இல்லை. அவர்களைக் கொண்டு போய் இந்த லிஸ்ட்டில் சேர்த்தால் அது எங்கே போய் முடியும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணருவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன.

9.50 மணி

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. கணேசமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் மலைப் பகுதிகளில் மலைவேளாளர் என்ற ஒரு இனம் இருக்கிறது. அதை எந்தப் பட்டியலிலும் சேர்க்காமல் அவர்கள் ஜாதி சான்றிதழ் பெறுவதற்கு தகுதிகூட இன்றைக்கு இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் இந்த அரசு சேர்க்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி ஏற்கெனவே நான் விளக்கமாக பதில் அளித்து இருக்கிறேன். எந்த இனத்தையும் தாழ்த்தப்பட்ட இனத்தில், பழங்குடி இனத்தில் சேர்க்கவோ, விலக்கவோ மத்திய அரசுக்குத் தான் அதிகாரம் உண்டு. மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை என்பதை பலமுறை தெரிவித்து இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நரிக்குறவர்கள் கூடியமட்டும் புலோட்டிங் பாப்புலேஷன் மாதிரி கிராமத்தை விட்டு கிராமம் போய்க்கொண்டிருக்கிறார்கள். மொபைல் மாதிரியாக அவர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள். அதே சமயத்தில் லம்பாடி என்ற ஒரு வகையறா இருக்கிறார்கள். அவர்களும் அந்த லம்பாடி இனமும் மொபைல் மாதிரி புலோட்டிங் பாபுலேஷன் மாதிரிதான் போய்க் கொண்டிருக்கிறார்கள். அவர்களும் இந்த தாழ்த்தப்பட்ட இனத்தில் சேர்க்கப்படுவார்களா என அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் எ. ராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு நம்முடைய தானைத் தலைவர் தமிழகத்தில் முதலமைச்சராக இருந்த போது நரிக் குறவர் இனத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து தான் அவர்கள் லம்பாடி இனத்தைப் போல் பல்வேறு இடங்களுக்குச் செல்லக் கூடாது; ஒரே இடத்தில் அவர்கள் அமர்த்தப்பட வேண்டும் என்ற ஒரு குறிக்கோளை முன்னிட்டு திருச்சியிலும், உத்திர மேரூரிலும் அவர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுத்து அவர்களுக்கு அந்த இடத்தை பட்டா வழங்க ஏற்பாடு செய்து தொகுப்பு வீடுகள் கட்டித் தந்து இருக்கிறார்கள். இதேபோல், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று நம்முடைய தானைத் தலைவர் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நரிக்குறவர்கள் சம்பந்தமாக திருச்சியில் கூட அவர்களுக்கு ஒரு காலனி கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் என்ன குறிப்பிட விரும்புகிறேன் என்று சொன்னால் ஒருவர் கூட அவர்களுக்கு எந்தவிதமான வேலையும் தருவது இல்லை. ஒருவர் மட்டும் எஸ்.எஸ்.எல்.சி. வரை கஷ்டப்பட்டு படித்து முன்னுக்கு வந்தும்கூட நான் பலமுறை முயற்சி செய்தும் அவருக்கு வேலை கிடைக்கவில்லை. ஆகவே, நரிக்குறவர்களில் படித்து முன்னுக்கு வரக்கூடியவர்களுக்கு ஒரு முன்னுரிமை கொடுத்து வேலை வாய்ப்பில் அரசு இடம் அளிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறை தாழ்த்தப்பட்ட இனத்தைப் பற்றியும், பழங்குடி இனத்தைப் பற்றியும் உள்ள துறையாக இருப்பதால் இந்த வகுப்பைச் சேர்ந்த அத்தனைக் குறிப்புகளும் மாண்புமிகு முதலமைச்சருடைய கோரிக்கையை ஏற்றுதான் செயல்படுத்த வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இது பற்றி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அணுகி கோரிக்கையை கொண்டு சென்று ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### மயிலாடுதுறை அரசு மருத்துவமனை

*2363—திரு. ஏ. செங்குட்டுவன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவப் பிரிவில் 50 படுக்கைகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நிதி ஆதாரங்களைப் பொறுத்து மயிலாடுதுறை மருத்துவமனையில் கூடுதல் கட்டிடங்கள் கட்டும்போது படுக்கைகளுடைய எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.

திரு. ஏ. செங்குட்டுவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை—குத்தாலம், சீர்காழி, பூம்புகார், நன்னிலம் ஆகிய பகுதிகளின் இடையில் இருக்கின்ற ஒரு பெரிய மருத்துவ மனை. 10 படுக்கைகள் மட்டும் தான் அங்கே இருக்கின்றன. 3 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட அந்த மருத்துவ மனையில் படுக்கை வசதி இல்லாமல் தாய்மார்கள் பிரசவக் காலத்தில் அடையும் கஷ்டத்தை விட அங்கே தங்கி சிகிச்சை பெற முடியாத நிலையில் இருக்கிறார்கள். இந்த ஆண்டு அரசு 50 படுக்கைகள் கொண்ட பிரசவ வார்டை உருவாக்கித் தா அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவ மனையில் குழந்தைகள் நலப் பிரிவுக்கு கட்டிடங்கள் கட்டுகின்ற பணி இப்போது நடைபெற்றுக்கொண்டு வருகிறது. 3½ இலட்சம் ரூபாய் செலவில் அந்தப் பணிமுடியும் தருவாயில் இருக்கிறது. ஆகவே, படிப்படியாக அரசினுடைய நிதிநிலையைப் பொறுத்து அங்கே புதிய கட்டிடங்கள் கட்டி படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க முயற்சியை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு ஏ. செங்குட்டுவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி மருத்துவமனையில் ரத்த சேமிப்பு நிலையம் ஒன்று இருக்கிறது. அது செயல்படாமல் 2 ஆண்டுக் காலமாக இருந்து வருகிறது. அது மட்டும் அல்லாமல் மேற்படி மருத்துவ மனையில் புதிய கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. அதற்கு டாக்டரும் இல்லை. மற்ற உபகரணங்களும் இல்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நேரில் எடுத்துச் சொன்னேன். இந்த ஆண்டு உடனடியாக மருத்துவ வசதி கிடைக்குமா என உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

9-55 மணி.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவர்கள் இல்லாத இடங்களிலேயெல்லாம் மருத்துவர்களை நியமிக்கிற



பணிகள் இப்போது துரிதப்படுத்தப்பட்டு வருகிறது. நிச்சயமாக, கூடிய விரைவிலே நியமிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இங்கே ரத்த சேமிப்பு நிலையத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். பெரும்பாலான மருத்துவமனைகளிலே ரத்த சேமிப்பு நிலையம் என்பது, வருகிறவர்களிடமிருந்து ரத்தத்தை எடுத்து உடனடியாகக் கொடுக்கிற வசதியோடுதான் ரத்த சேமிப்பு நிலையங்கள் இப்போது செயல்பட்டு வருகின்றன. முழுமையான ரத்த சேமிப்பு நிலையங்களாக அவைகளை அரசினுடைய நிதிநிலையைப் பொறுத்து, விரிவாக்குகின்ற பணியை அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் அறுவை அரங்கம் சென்ற ஆண்டு தமிழக முதல்வர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. அது இதுவரையில் செயல்படாமல் இருக்கிறது. அதை செயல்படுத்த ஆவன செய்ய வேண்டும். அத்தோடு அந்த மருத்துவ மனையில் 4 ஜெனரேட்டர்கள் மின்சார உற்பத்தி செய்வதற்காக இருக்கின்றன. அந்த ஜெனரேட்டர்களில் 3 பழுதாகி வேலை செய்யாமல் இருக்கின்றன. ஒரு புதிய ஜெனரேட்டர்-பெரியது வாங்கி ஒரு வருடமாக பிரிக்கப்படாமல் அப்படியே வைக்கப்பட்டிருக்கிறது. அவைகள் அத்தனையும் செயல்படுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடம் நேரடியாகச் சொல்லி நான் அவரை இயக்குநரிடமே அனுப்பிவைத்து, அவருக்கு முன்பாகவே இயக்குநர் அதற்கான ஏற்பாடுகளைச் செய்திருப்பதை உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். இருந்தாலும், கேள்வி கேட்க வேண்டுமென்பதற்காகக் கேட்டிருக்கிறார்கள். அரசு துரிதமாக நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்களே நேரில் சென்று அதைப் பிரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகப்பேறு மருத்துவமனைகளில், எந்தெந்த மருத்துவ மனையில் மகப்பேறு படுக்கைகள் விஸ்தரிக்கிற திட்டம் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து தனிக் கேள்வி எழுப்பக் கேட்டுக்கொள்கிறேன்.

### ஆழ்குழாய் கிணறு மூலம் குடிநீர் விநியோகம்

*2477—திரு. வெ. இராசு :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, இலுப்பூர் பேரூராட்சியைச் சேர்ந்த கிளிக்குடி வெள்ளாற்றில் ஆழ்குழாய் கிணறு மூலம் குடிநீர் விநியோகிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது இத்திட்டம் நிறைவேறும் ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

### ஆரம்ப சுகாதார நிலையம்.

*6279—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கமுதி ஒன்றியத்தில், அபிராமம் பஞ்சாயத்தில் உள்ள பஞ்சாயத்து மருந்தகத்தை அரசு பி.எச்.சி. ஆக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கமுதி ஒன்றியத்தில் உள்ள அபிராமம் ஊராட்சியிலுள்ள ஊராட்சி மருந்தகத்தை ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]





### 2. தகவல் கோரல்.

#### (அ) சில அமைச்சர்கள் அவைக்கு வராததால் வினாக்கள் எடுத்துக் கொள்ளப் பெறாமல் போவது குறித்து.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே ஒரு ஒழுங்குப் பிரச்சினைக்காக நான் எழுகிறேன். நாங்கள் கேள்வி கேட்பதற்கு மிகுந்த ஆர்வத்தோடு சில தகவல்களை திரட்டி இங்கே அனுப்புகிறோம். ஆனால், ரொம்ப நாளைக்குப் பிறகு வந்தாலும், 20 கேள்விகளிலே 7 கேள்விகள் தள்ளி வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த உரிமை இருந்தாலும், 7 கேள்விகள் தள்ளிவைக்கப்பட்டிருக்கின்றன. விடையளிக்க வேண்டிய 11 அமைச்சர்களிலே 5 அமைச்சர்கள் இங்கே வர வில்லை. எனவே, ஏறத்தாழ 50 சதவீத அமைச்சர்கள், விடையளிக்கவேண்டியவர்கள் வரவில்லை. ஏறத்தாழ 30 சத வீத கேள்விகளுக்கு இன்று விடையளிக்கப்படவில்லை. மிக முக்கியமான வேலைகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போவதை நாம் ஒன்றும் தடுக்கமுடியாது. நாட்டு நன்மைக்காக அவர்கள் போகிறார்கள். அது நியாயம் கூட. ஆனால் இவ்வளவு ஆப்சென்'டீஸ்கள் வேண்டுமா? என்பதனை மாண்புமிகு சபாநாயகர் அவர்கள், இனிமேல் கவனத்திலே வைத்து செயல்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்களுக்கு இவ்வளவு ஆர்வம் இருப்பதற்காக நான் உள்ளபடியே அவரைப் பாராட்ட கடமைப்பட்டிருக் கிறேன். ஆனால் அமைச்சர்கள் கூட்டுப் பொறுப்பு உள்ளவர்கள். பல்வேறு கடமைகள் அமைச்சர்களுக்கு உண்டு. எதிர் பாராத சூழ்நிலை என்பது சென்னையிலே இருக்கிற யாருக்கும் தெரிந்த ஒரு உண்மை. எனவே எதிர்பாராத வகையில் சில அமைச்சர்கள் வரவில்லை என்றாலும் நாங்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறோம். வரமுடியாத நிலைமை உள்ள அமைச்சர்கள் எங்களுக்குத் தெரிவித்துவிடுகிறார்கள். மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்கும்கூட தெரிவிக்கிறார்கள்.

*10-00 மணி*

சில நேரங்களில் தெரிவிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுச் சற்று தாமதமாக வர நேரிடுகிறது. ஆனால் ஏறத்தாழ கேள்வி நேரம் முழுவதும் ஒரு இரண்டு நிமிடங்கள் தவிர கேள்விக்குத்தான் செலவிடப்படுகிறது. ஒரு மணி நேரம் கேள்வி நேரம். எனவே அமைச்சர்கள் வரவில்லை என்பதை ஒரு குறையாக மாண்புமிகு உறுப்பினர்கள் கருதக்கூடாது. நாங்கள் அந்தக் கடமையை உணர்ந்து நிறைவேற்றுகிறவர்கள். சில நேரத்திலே எதிர்பாராத நிலைமை ஏற்படுகிறது. எனவே எத்தனைபேர் என்பது அவ்வளவு முக்கியம் அல்ல. என்ன நிலைமை என்பதுதான் முக்கியம்.

திரு. கே. ரமணி : பேரவைத் தலைவர்
தங்களுடைய அனுமதியோடு அஜண்டாவில் அவர்களே,
அமைச்சர்கள் வேறு வேலை வந்துவிட்டதால் ஏற்றிவிட்டபிறகு
என்று சொல்லக்கூடிய பதில் சரியான பதில் வரவில்லை
அப்படிச் சொல்வது சரியான பதிலாக அல்ல. (குறுக்கீடு)
ஆனால் அவசர நிமித்தம் சில நேரம் இருக்க முடியாது.
யாரும் எக்சப்ஷன் இல்லை, ஏற்படும். அதிலே
திரு. குமரி அனந்தன் குறிப்பிட்ட ஆனால் இன்றைக்கு நமது
இல்லாமல் போய் இருக்கிறார்கள். மாதிரி பல அமைச்சர்கள்
வருவது என்பதே ஒரு பெரிய கேள்வி நேரம் இங்கே
நாங்கள் பார்க்கிறோம். அனேகக் சுவர்க்கம் மாதிரிதான்
வந்தும் கூட அஜண்டாவில் கேள்விகளுக்குப் பதில்
நாங்கள் கேள்விப்படுகிறோம். ஒரு ஏறாமல் இருக்கிறது என்று
கிடைத்த பிறகு அதற்கு அமைச்சர் கேள்வி கிடைப்பதே அரிது.
சரியில்லை. கூட்டுப் பொறுப்பாக இல்லை என்று சொன்னால்
வேலை செய்யட்டும். அவ்வாறு அமைச்சர்கள் கறாராக
என்பதுதான் எங்களுடைய வேலை செய்யவேண்டும்
ஒரு அமைச்சருக்காவது வேண்டுகோள். எனவே வேறு
வேண்டிய 'நோஷன்' அவருக்குக் பொறுப்புக் கொடுத்து அதற்கு
மூலம் ஏற்பாடு செய்து எங்களுக்குப் கொடுத்து அதிகாரிகள்
அதைத் தாங்கள் பாதுகாக்கவேண்டும். பதில் சொல்லலாம்.
custodian of the House. You have to defend Because you are the
ஆகவே நீங்கள் அஜண்டாவிலே போட்டதற்கே our rights.
பதில் சொன்னால் நாங்கள் கைவிடப்பட்ட இப்படி
ஆகிறோம். ஆட்கள் மாதிரி

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மாண்புமிகு
திரு. ரமணி அவர்கள் மிகக் கறாராக உறுப்பினர்
என்று சொல்கிறார்கள். அமைச்சரவையில் இருக்க வேண்டும்
நான்கு பேர்கள் ஒரு குறிப்பிட்ட நாளில் உள்ள மூன்று,
என்ற நிலைமை ஏற்படுவது என்பது வர முடியவில்லை
மன்றத்தில் நாள்தோறும் அமைச்சர்களுக்குக் ஆச்சரியமில்லை. பாராளு
போது மூன்று அமைச்சர்களிலே கேள்வி போடுகிற
மாறிக் கேள்வி போடுவார்கள். ஒருவருக்குத்தான் மாறி
நாளைக்குத்தான் அங்கே கேள்வி மூன்று நாளில் ஒரு
அப்படி இல்லை. முதலமைச்சருக்கே வரும். ஆனால் இங்கே
கேள்வி போடப்படுகிறது. கூட தினந்தோறும்
முறையை மாற்றக் கூறவில்லை. நான் அதற்காக இங்குள்ள
கூடிய நாளில் அதாவது இன்றைக்கு ஆகவே அமைச்சர் வரக்
அந்தக் கேள்வி எடுக்கப்படும்; வராவிட்டால் நாளைக்கு
படும். அன்றையதினம் பதில் சொல்லப்

திரு. நேரு அவர்கள் மூன்று நாள் உடல் நலக்குறைவாக இருந்
தார்கள். எனவே அவர்கள் பதில் சொல்லவேண்டிய மானியக்
கோரிக்கையில் கூட இன்னொரு அமைச்சர் பதில் சொல்லலாமா
என்ற அளவுக்கு நேற்றைய தினம் யோசிக்கப்பட்டது. ஏன்



அதைச் சொல்கிறேன் என்றால் இந்த நிலைமை கூடத் தெரிந்து வரு
வதல்ல. ஆகவே அமைச்சர்கள் ஏன் வரவில்லை என்று கேட்டால்
சாதாரணமாக என்ன காரணம் என்று நான் கேட்டுச் சொல்ல
முடியும். அதை ஒரு குற்றச்சாட்டாகவோ குறையாகவோ குறிப்
பிடக்கூடாது. இன்றைக்கு விடுபட்ட கேள்விகள் நாளைக்கு வர
இருக்கிறது. கேள்வி இந்த மன்றத்தில் வருகிறதா அல்லவா
என்பது வேறு கேள்வி. எடுத்துக்கொள்ளப்பட்ட கேள்விகளுக்கு
இங்கே விடை அளிக்கக்கூடாது என்றோ, எப்படியாவது அதைத்
தவிர்க்கவேண்டும் என்றோ கருதி அவர்கள் வராத நிலைமை
ஏற்படவில்லை. எனவே அந்தக் கேள்வி எடுத்துக்கொள்ளப்படும்.
ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையில் அமைச்சர்
களுடைய கூட்டுப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, அவர்கள் அமைச்
சரவையில் ஏற்பட்ட நிலைமை பற்றிக் குறிப்பிடுகிறார்கள். அதைக்
குறிப்பிட வேண்டிய அவசியம் என்றாலும் நான் உங்களிடத்தில்,
தலைவர் அவர்களிடத்தில்தான் கேட்கிறேன். இந்தக் கேள்வி
சம்பந்தப்பட்ட வரையில் இதனை ஒழுங்கு படுத்தவேண்டிய
முழுப் பொறுப்பும் உங்கள் கையிலே உள்ளது. அது சம்பந்தமாக
நீங்கள் எப்படி எங்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கப் போகிறீர்கள்?

*திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு அவையினுடைய முதல்வர் அவர்கள்
சொல்லும்போது கூட்டுப் பொறுப்பில் சில நேரங்களில் அமைச்
சர்கள் வராமல் இருக்க வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னார்
கள், வாஸ்தவம்தான், திடீரென்று வேலைகள் வந்து விடலாம்.
கேள்வி நேரம் முக்கியமானது, இந்தப் பேரவை நடவடிக்கையில்
என்பது மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களுக்குத் தெரியும்.
பாராளுமன்றத்திலே இதிலே சில விதிமுறைகள் இருப்பதாகச்
சொல்கிறார்கள். ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட சில அமைச்சர்
கள்—மற்றவர்களைப் பற்றி நான் கவலைப்படவில்லை—அதாவது
குறிப்பிட்ட நான்கைந்து பேர் கட்டாயமாக இருக்கவேண்டும்
என்று சொல்லக்கூடிய ஒரு முறை இருக்கவேண்டும். இந்தக்
கேள்வி நேரத்தில் முக்கியமான கேள்விகள் வரும்போது நான்
அது சம்பந்தமாக உப கேள்விகள் கேட்கவேண்டி இருக்கும். அந்த
முக்கியமான கேள்வியை ஒட்டி சில விவரங்களை அரசின் இடத்
திலிருந்து பெறுவதற்கு உப கேள்வி கேட்கவேண்டிய நிலையில்
அந்தக் கேள்விகள் மறுநாள் வரும் போது எங்களுக்கு வேறு
வேலை வந்து நாங்கள் வரமுடியாமல் போக வேண்டி வரும்.
எனவே பாராளுமன்றத்திலே இருக்கிற முறையை நாமும் கடைப்
பிடித்து அந்தந்த நாட்களில் அந்தந்த அமைச்சர்கள் இருப்பார்
கள், அந்தந்த நாட்களில் அந்தந்த விடைகள் வரும் என்று சொல்
லக்கூடிய முறையில் ஒரு ஏற்பாட்டைப் பேரவைத் தலைவர் அவர்
கள் செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர்கள் உடல்நலக்குறைவு காரணமாக வரவில்லை என்றால் அது வேறு விவகாரம். அதைப்பற்றி யாரும் கேட்பதில்லை. ஆனால் அமைச்சர்கள் சட்டமன்றத்தில் பணிகளுக்குத் தான் முதலிடம் கொடுக்கவேண்டும். அதாவது ஃபர்ஸ்ட் ப்ரையாரிட்டி. அதைத்தான் இதுவரையில் நாம் கடைப்பிடித்து வந்திருக்கிறோம். அதையே பின்பற்றவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

10-05 மணி.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எச். பாண்டியன், இந்த அவையிலே, அவைத் தலைவராக இருந்தவர். நான் இந்த சபையிலே எதிர்க் கட்சி உறுப்பினராக இருந்தவன். சபைக்கே வராமல், கேள்விக்கே பதில் சொல்லாமல் ஒரு முதலமைச்சர் இருந்தார். அந்த நேரத்தில் இவர் தலைவராக இருந்தார். அப்போது இந்த நியாயத்தைச் சொல்லியிருந்தால் நான் பாராட்டியிருப்பேன், வரவேற்றிருப்பேன். (குறுக்கீடு).

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் சொல்லட்டுமே. (குறுக்கீடு) அவர் சொல்லட்டும். (குறுக்கீடு) இல்லை இல்லை அவர் சொல்லட்டும் (குறுக்கீடு) இதில் சத்தம் போடுவதற்கு இடம் இல்லை. (குறுக்கீடு) இப்படித் தேவை இல்லாமல் சத்தம் போடக் கூடாது. (குறுக்கீடு) இது ஒன்றும் குற்றச் சாட்டு அல்ல. உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் அவைத் தலைவராக இருந்தவர். (குறுக்கீடு) இது தேவை இல்லாதது.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அன்று தங்களுடைய ஆசனத்தில் இருந்து அன்றைக்கே ரூலிங் கொடுத்திருக்கிறேன். அமைச்சர்கள் கேள்வி நேரத்தில் கட்டாயம் வர வேண்டுமென்று சொல்லியிருக்கின்றேன். புரிந்து கொள்ளுங்கள். அன்றைக்கு நான் சொன்னது எல்லா பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது.

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அமைச்சரவையிலே உள்ள அமைச்சர்கள் எல்லோரும் சட்டமன்ற கடமைக்குத்தான் முன்னுரிமை தருகிறவர்கள். சட்டமன்றத்தைத்தான் இந்த அரசு, இந்த ஆட்சி மதித்துச் செயல் படுகிறது. இது நடை முறையிலேயே நீங்கள் பார்த்திருக்கக்கூடிய ஒன்று. எந்த அமைச்சரவையையும்விட அதிகமாக சட்டமன்றத்தை மதித்து நடைபெறக்கூடிய ஓர் அமைச்சரவை, எனக்குத் தெரிந்த வரையில், என்னுடைய அனுபவத்தில் இதுவாகத்தான் இருக்கும் என்று நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). நான் நாடாளுமன்றத்தில் இருந்திருக்கிறேன். வேறு பல மாநில அமைச்சரவை பற்றியும் நான் அறிந்தவன். ஆனால் ஒன்று, இங்கே கேள்வி கேட்கிற முறை, ஏற்கெனவே மேலவை இருந்தபோது நாள் தோறும் மாற்றி





மாற்றி இங்கே சில அமைச்சர்கள் அங்கே சில அமைச்சர்கள்
இருக்க வேண்டுமென்ற வரன் முறை இருந்தது. இப்போது
அந்த நிலைமை பின்பற்ற வேண்டிய தேவையில்லை என்கிற
காரணத்தால் அது பின்பற்றப்படுவதில்லை. ஆனால் மாண்பு
மிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் இங்கே சொன்
னதைப் போல, இனி எதிர் காலத்தில், ஒன்று விட்டு ஒரு
நாள் ஒவ்வொரு அமைச்சரும் கேள்விகளுக்குப் பதில் சொல்லக்
கூடிய ஒரு முறையை ஏற்படுத்த, கூடுமானவரை, அவைத்
தலைவர் அவர்கள், சபாநாயகர் அவர்கள், அதற்கான
ஒரு வழி முறையை வகுப்பார் என்று நம்புகிறேன். ஆனால்
ஒன்று. இந்தச் சபைக்கு வர முடியாமல் போகிற எதிர் பாராத
நிலைமை எப்போது ஏற்படும் என்று எங்களுக்கே தெரியாது.
நானே காலையிலே 9 மணிக்கு வருவதற்கு, 8-35 மணிக்கே
கிளம்புகிறபோது, 4, 5 பேர், நண்பர்களை எதிரிலே பார்த்து
விட்டு, அவர்களுக்குப் பதில் சொல்லி விட்டு, புறப்பட்டு
வருவதிலே 5 நிமிடம் காலதாமதம் ஏற்பட்டு இங்கு தாமதமாக
வர நேரிட்டு விடுகிறது. எதிர் பாராமல் ஏற்படுகிற நிலைமை
களுக்கு ஆட்படுகிறவன் தான் மனிதன். அந்த அடிப்படை
யில் அமைச்சர்களும் மனிதர்கள் தான் என்பதை நாம் முதலில்
உணர்ந்து, வேண்டுமென்றே வராதவர்கள் யாரும் இந்த
அமைச்சரவையில் இல்லை என்ற காரணத்தால், இதை முக்கிய
மான குறையாகக் கருதக் கூடாது என்று கேட்டுக் கொள்
கிறேன் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். (குறுக்
கீடு) தேவையில்லாமல் பிரச்சினையை உண்டாக்காதீர்கள்.
(குறுக்கீடு) இது தொடர்பாக அவர் கூட ஒரு கேள்வி கேட்க
நினைத்தார், அது பொருத்தமாக இருக்காது என்று உட்காரச்
சொன்னேன். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள்.
(குறுக்கீடு) அதே நேரத்தில் அமைச்சர் சொல்வதற்கு எல்லாம்
நீங்கள் மறுப்புத் தெரிவிப்பது என்று ஆரம்பித்தால் அது நல்லது
அல்ல. (குறுக்கீடு) அப்படி என்றால் நீங்களும் சொல்லுங்
கள். எல்லோரும் சொல்லி ஒரு முடிவுக்கு வாருங்கள். (குறுக்
கீடு) ஏன் என்றால் அவர் சொல்ல நினைத்ததை நான் தடுத்
தேன், அது நன்றாக இருக்காது என்று, பொருத்தமாக இருக்
காது என்று. ஆகவே மற்றவர்கள் உட்கார வேண்டும்.

*திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு தலைவர் அவர்கள் சொல்லும் போது
ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர்களுக்குக் கூட்டுப்
பொறுப்பு உண்டு என்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே
முதலமைச்சருடைய கேள்விகள் அனைத்திற்கும் பதில் சொல்லி
யிருக்கிறார்கள். எந்த அமைச்சர் வேண்டுமானாலும் சொல்ல
லாம் என்பது தான் கூட்டுப் பொறுப்பு என்று சொல்லுவார்
கள். அந்த அடிப்படையில் முதலமைச்சருடைய கேள்வி
களுக்கும் பதில்கள் சொல்லப்பட்டிருக்கின்றன என்று தெரி
வித்துக் கொள்கிறேன். அந்த அளவிலே வர வேண்டும், வர

வில்லை என்ற குறைபாடு இல்லா விட்டாலும், பதில்கள்
சொல்லப்பட்டிருக்கின்றன என்பதை இந்த அவைக்குத் தெரி
வித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தச் சட்டமன்
றத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுவது யாரையும்
அவமானப் படுத்துவதற்கோ அல்லது யாரையும் குறை சொல்
லவோ, அதனால் இப்போது பயன் பெறவோ சொல்லப்
படுவது அல்ல. ஒரு கருத்து விளக்கத்திற்காக அப்படிப் பேச
லாம். ஆனால் ஒன்று. அந்த நாள் முதலமைச்சர் ஏற்கெனவே
இந்த அவையில் பதில் சொல்ல வேண்டியவற்றுக்கு
முறையை மேற் கொண்டார்கள். நான் எதிர்க் கட்சித் துணைத்
தலைவராக இருந்த போதும் கூட, அவர்கள் பதில் சொல்கிற
முறையைக் கைவிட்டு விட்டார்கள். அவர்கள் சார்பில் அப்
போது இருந்த முன்னவர், சில கேள்விகளுக்கு 2 மாத கால
அளவிற்குப் பதில் சொன்னார்கள். அதற்குப் பின்னர் அவர்
சார்பாக வரும் கேள்வி இடம் பெறுகிற முறையே கைவிடப்
பட்டது. இது, சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புப் புத்த
கங்களை யார் எடுத்துப் பார்த்தாலும் தெரியும். முதலமைச்ச
ருடைய இலாகாவான காவல் துறை, இயணைப்புத் துறை
பற்றிய கேள்வி ஏற்கப்படுவதையே நிறுத்தி விட்டார்கள்
என்பதை அறிய முடியும். அது அவருடைய உரிமை. அவர்
முதலமைச்சராக இருந்தார். மக்கள் அவரை ஏற்றுக் கொண்
டிருந்தார்கள். கேள்விகளை எடுத்துக் கொள்வதும், எடுத்துக்
கொள்ளாததும் அவருடைய விருப்பம் ஆகியிருந்தது.
அதைப் பற்றிய செய்தியைச் சொல்கிற காரணத்தால், யாரும்
அதற்கு வருத்தப்படவோ, குறைபடவோ நியாயமில்லை என்
பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10-10 மணி

திரு. அ. இரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்
களே, இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு.
உக்கம்சிங் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள்......

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவரவர்களே, இங்கே
உக்கம்சிங் என்று யாரும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்பிற்குரிய உறுப்
பினர் பெரு மக்களே, உங்கள் உணர்வுகள் முற்றிலும் முழு
மையானவை, ஏற்கத் தகுந்தவை. அவற்றில் இரண்டாவது
கருத்தே கிடையாது. எந்த வினாக்கள் போடப்படுகின்றனவோ
அவை தொடர்புடைய அமைச்சர்கள் இங்கே அவையிலே
இருந்து, அவ்வினா எழுப்பப்படும் போது, மூலக் கேள்விக்கும்,
துணைக் கேள்விகளுக்கும் விடை சொன்னால் தான் முழுமை
கிடைக்கும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை.
ஆனால் சில நாட்களில் ஒரே நேரத்தில் பல வினாக்கள் தள்ளி



வைக்கப்படுகின்றபோது ஒரு பெரிய ஏமாற்றம் நிலவுகிறது
என்பதை நான் மறுப்பதற்கில்லை. எனவே இரண்டு தரப்
பாருக்கும் நான் சொல்வது, வினாக் கேட்பவர்களும் அருள்
கூர்ந்து வினாப் போடப்படுகிறபோது இடத்தில் இருக்க
வேண்டும். இது ஒன்று, அதே நேரத்தில் அமைச்சர்களுக்கு
எதிர்பாராத உடல் நலக் குறைவு ஏற்பட்டு, தள்ளி வைக்கப்
பட்டிருந்தால் அது பற்றி அவர்கள் கவலைப்படவேண்டிய
தில்லை. ஆனால் திட்டவட்டமாக இந்த வாரத்தில் வெளி
யூரில் தங்களுக்கு நிகழ்ச்சிகள் இருக்கின்றன என்று அவர்
களுக்கு உறுதியாகத் தெரிந்தால், அந்த நிகழ்ச்சிகளுக்கு நாள்
கொடுக்கிற போது, அந்த நாளைப் பேரவைத் தலைவர்
அவர்களுக்கும் கண்டிப்பாக அறிவிக்க வேண்டும். அப்படி
அறிவித்து விட்டால் அந்த வினாவை நானே இயல்பாக
வேறொரு நாளுக்குத் தள்ளி வைத்து விட முடியும். இந்த
முறையைக் கைப்பிடித்தால், இந்த நிலைமை வராமல் முழுமை
யாகச் செயல்பட முடியும். எனினும் எதிர்பாராமல் ஏற்பட்ட
தடங்கலுக்கு வருந்துகிறோம்.

(ஆ) விளவன்கோடு தொகுதியில் கடையாலமேடு புனித இருதயப்
பள்ளியில் காலரா தடுப்பு ஊசி போடப்பட்ட மாணவர்கள் மயக்க
முற்றிருப்பது குறித்து.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவரவர்களே
என்னுடைய சட்டமன்ற தொகுயிலே 9–2–1990 அன்று கடை
யாலமேடு ஆர்.சி. மிடில் ஸ்கூலிலே காலரா தடுப்பு ஊசி
மாணவர்களுக்குப் போடப்பட்டது. ஏறத்தாழ 560 மாணவர்
களுக்கு 2 மணி நேரத்தில், 12 மணியிலிருந்து 1 மணிக்குள்
அந்தத் தடுப்பு ஊசி போடப்பட்டு, ஏறத்தாழ 56 மாணவர்கள்
மயக்கம் அடைந்தார்கள்' அவர்களை மயக்கம் அடைந்த
நிலையிலே நானும் சென்று பார்த்தேன். அங்கேயுள்ள தலைமை
மருத்துவமனை, பிரைவேட் ஆஸ்பிடல்களில் அவர்களை
அனுமதித்தோம். அந்த மாணவர்கள் இன்றும் சரியான
முறையில் குணமடையவில்லை. அடிக்கடி மயக்கம் அடைகிறார்
கள். அந்த மாணவர்களுடைய வாழ்க்கை எப்படி அமையும்
என்பது குறித்து எங்களுக்கு அச்சமாக இருக்கிறது. இது
அங்கே உள்ள பத்திரிக்கையில், குறிப்பாக தினமலர் பத்திரிக்கை
யில் தெளிவாக வந்திருககிறது. அதனுடைய காப்பியைக் கூட
நேற்று தங்களுக்குக் கொடுத்திருக்கிறேன். சென்னைப் பதிப்
பிலே கூட அந்தச் செய்தி வந்திருக்கிறது. நம்முடைய அரசாங்க
அதிகாரிகள் சரியாக மருந்து கொடுக்கவில்லை. தடுப்பு
ஊசி போடப்பட்டு, மயங்கி விழுந்த நாளன்று, கன்னியாகுமரி
மாவட்டத்திலுள்ள டி.எச்.ஓ. வோ, டிஸ்டிரிக்ட் மெடிகல் ஆபீ
சரோ கிடையாது. அந்த அளவுக்கு அவர்கள் சரியாக கவனிக்கப்
படவில்லை. நாங்கள் அவர்களை வலியுறுத்தி, கட்டாயப்
படுத்தி மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டு, அவர்களுக்கு என்ன
நோய் என்று கேட்டால் அவர்களால் சொல்ல முடியவில்லை.
ஏன் மாணவர்கள் மயக்கமாக இருக்கிறார்கள் என்று கேட்டால்

[திரு. மா. சுந்தரதாஸ்] [1990 ஏப்ரல் 12

பிளட் டெஸ்ட் பண்ண வேண்டுமென்று சொல்லி, பிளட் டெஸ்ட்
செய்து விட்டு, நன்றாக இருக்கிறதென்று சொல்லுகிறார்கள்.
ஆகையால் மக்கள் அந்த மருத்துவர்கள் மீது நம்பிக்கை இழந்து
விட்டார்கள். நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வது,
தயவு செய்து ஒரு மருத்துவக் குழுவை சென்னையிலிருந்து
அனுப்ப வேண்டுமென்பது தான். இப்போது 15 மாணவர்கள்
மருத்துவ மனையில் இருக்கிறார்கள். அரசாங்க மருத்துவ
மனையில் நம்பிக்கை இல்லாமல், தனியார் மருத்துவமனையில்
இருந்து கொண்டிருக்கிறார்கள். தயவு செய்து ஒரு மருத்துவக்
குழுவை சென்னையிலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்திற்கு
அனுப்பி, பாதிக்கப்பட்ட மாணவர்களைக் கவனிக்க வேண்டும்.
ஏன் அவர்கள் மயக்கமாக இருக்கிறார்கள் என்பது தெரிய
வேண்டும். இரண்டாவது, அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்
பட வேண்டும். அதிகாரிகள் 2 மணி நேரத்திற்குள் ஏறத்தாழ
500க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு தடுப்பு ஊசி போட்டிருக்
கிறார்கள். அந்த மருந்துக்கு நான்கு மாதத்தில் எக்ஸ்பைரி
டேட் முடிந்து விடுகிறது. அதைச் சரியான முறையிலே ப்ரிஜில்
வைத்து பாதுகாக்கவில்லை. மருந்து மோசமான நிலையில்
இருந்ததாலும், இன்ஜெக்ஷன் கொடுத்த முறை சரி
இல்லாததாலும் இந்த நோய் வந்திருக்கிறது. இப்போது
ஏறத்தாழ 12, 20 மாணவர்கள் மருத்துவமனையில் இருக்
கிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கவும், அதிகாரி
மீது நடவடிக்கை எடுக்கவும் தங்கள் மூலம் அரசைக் கேட்டுக்
கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:**
மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி
மாவட்டத்தில் கடையாலமோடு கிராமத்தில் 9-2-1990 அன்று
புனித இருதய நடுநிலைப் பள்ளியைச் சேர்ந்த 561 பள்ளிக்
குழந்தைகளுக்கு காலரா தடுப்பு ஊசி போடப்பட்டது. அதில்
56 குழந்தைகள் பாதிக்கப்பட்டதாக செய்தி வந்ததன் பேரில்
வட்டார உதவி இயக்குநர், மற்றும் கன்னியாகுமரி மாவட்ட உடல்
நல அலுவலர், ஆகியோர் இடத்திற்கு விரைந்து சென்று பாதிக்
கப்பட்ட குழந்தைகளுக்கு தகுந்த சிகிச்சைகளை மேற்
கொண்டனர். அனைத்துக் குழந்தைகளும் அரசு மருத்துவ
மனையிலும் தனியார் மருத்துவ மனையிலும் அனுமதிக்கப்பட்டு,
தேவையான சிகிச்சைக்குப் பின் வீட்டுக்கு அனுப்பப்பட்டனர்.
மேற்படி கிராமம், தற்போது பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த்
தடுப்பு அலுவலர்களின் கண்காணிப்பின் கீழ் எந்தவிதப் பாதிப்பும்
இல்லாமல் வைக்கப்பட்டிருக்கிறது.

*10-15 மணி*

இதில் 5 குழந்தைகள் மட்டும் உள் நோயாளிகளாக மருத்துவ
மனையில் அனுமதிக்கப்பட்டு சில நாட்களுக்குப் பிறகு பூரண
நலத்துடன் திருப்பி அனுப்பப்பட்டு இருக்கின்றனர். உறுப்பினர்



1990 ஏப்ரல் 12] [டாக்டர் க. பொன்முடி என்கிற
தெய்வசிகாமணி]

அவர்கள் குறிப்பிடுவதைப் போல இன்னும் ஏதேனும் குழந்தை
களுக்கு அது போன்று தொடர்ந்து நோய்கள் இருக்குமானால்
நிச்சயமாக இந்த அரசு அதற்கான மருத்துவ வசதி அளிக்கும்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(இ) மாமண்டூரில் ஏற்பட்ட வாகன விபத்தினால் பாதிக்கப்பட்டவர்
களுக்குச் சிகிச்சையும் நிவாரணமும் அளிக்க வேண்டியதன்
அவசியம் குறித்து.**

**திரு. எஸ். டி. உகம்சந்த்** : மாண்புமிகு தலைவர் அவர்
களே 9-4-1990 திங்கட்கிழமை அன்று மதுராந்தகம் தொகுதி
யைச் சேர்ந்து இருக்கிற மாமண்டூர் நகரில் தந்தைப் பெரியார்
போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக கட்டப்படுகின்ற உணவு
விடுதிக்கு செங்கல் ஏற்றிக் கொண்டு வந்த பெரியார் போக்கு
வரத்துக் கழகத்தைச் சேர்ந்த லாரியும், திருவள்ளுவர் போக்கு
வரத்துக் கழகத்தைச் சேர்ந்த பஸ்ஸும் மோதிக் கொண்டதின்
காரணமாக 3 பேர் மரணமடைந்தும், பலர் இன்றைக்கு மிகவும்
பாதிக்கப்பட்டு பல்வேறு காயங்கள் அடைந்தும் சிகிச்சை
பெற்றுக் கொண்டு வருகிறார்கள். அவர்களிலே ஒருவருடைய
நிலைமையானது மிகவும் அதிகமான அளவிலே பாதிக்கப்பட்டு
சென்னை மருத்துவமனைக்கு இன்று காலையிலே கொண்டு வரு
கின்ற சூழ்நிலை ஏற்பட்டு இருக்கின்றது. பாதிக்கப்பட்டவர்
களுக்கு—தனியார் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக ஏதாவது
பாதிப்பு ஏற்பட்டால் அவர்கள் உடனடியாக நிவாரணம்
கொடுப்பது முறையாக இருந்து வருகிறது—அந்த இரண்டு பேருந்து
களுமே அரசு போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்தவை
களாக இருந்தும் அவர்களுக்கு நிவாரணப் பணம் கிடைக்க
வில்லை. அரசாங்கம் அவர்களுக்கு உடனடியாக நிவாரணப்
பணமும், தகுந்த சிகிச்சையும் அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்** : தலைவர் அவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் உகம்சந்த் அவர்கள் சொல்லிய தகவல்
எனக்கும் கிடைத்து இருக்கின்றது. மற்றப் பேருந்துகளுக்கு
எல்லாம் எப்படி நிவாரண உதவியோ அல்லது மருத்துவ
உதவியோ வழங்கப்படுமோ அதுபோல இந்த விபத்துக்கும்
வழங்கப்படுவதற்குரிய உரிய நடவடிக்கைகள் விரைவில் மேற்
கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### 3. அறிவிப்பு.

**சில அமைப்புகளுக்கான உறுப்பினர்களைத் தேர்வு செய்ய
நியமனத்தாள்கள் அளிப்பது குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வேளாண்மைப்
பல்கலைக் கழக நிர்வாக வாரியத்துக்கு ஓர் உறுப்பினரும், தமிழ்
நாடு அரசின் அநாதை இல்லங்கள் மற்றும் கருணை இல்லங்கள்

குழுவுக்கு இரு உறுப்பினர்களும், அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழுவுக்கு மூன்று உறுப்பினர்களும், தமிழ் நாடு நில மேம்பாடு வாரியத்துக்கான மூன்று உறுப்பினர்களும் தேர்ந்தெடுப்பதற்கான வேட்பாளர் நியமனத் தாள்கள் 19-4-1990 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்கப்பட வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம். நியமனத் தாள்கள் 20-4-1990 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 21-4-1990 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக்கொள்ளலாம். நியமனத்தாள் தாக்கல் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப் பட வேண்டிய எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 23-4-1990 திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை பேரவை வளாகத்திலுள்ள குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

## 4. கவன ஈர்ப்பு.

(அ) காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கலைக் கல்லூரியில் தேர்வின் போது காப்பி அடித்த மாணவனைப் பிடித்த கண்காணிப்பாளர் தாக்கப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எஸ். டி. உகம்சந்த், மா. சுந்தரதாஸ் ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வித் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''19-3-1990 அன்று காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரியில் நடந்த பல்கலைக் கழகத் தேர்வின்போது நடந்த முறைகேடுகளால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

19-3-1990 அன்று காலை காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கலைக் கல்லூரியில் நடந்த பல்கலைக் கழகத் தேர்வில் மாணவர் ஒருவர் தேர்வின்போது காப்பி அடித்திருக்கிறார். அதை அங்கிருந்த அறைக் கண்காணிப்பாளர் (Hall Superintendent/Invigilator)





பார்த்துப் பிடித்திருக்கிறார். இவ்விவரம் அக்கல்லூரி முதல்
வரும் தலைமைக் தேர்வு கண்காணிப்பாளருமான டாக்டர்
முத்துராமன் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த
மாணவர் தொடர்ந்து தேர்வு எழுத அனுமதி மறுக்கப்பட்டு
வெளியில் அனுப்பப்பட்டிருக்கிறார். வெளியே சென்ற மாணவர்
சிறிது நேரத்தில் வெளி ஆட்கள் (நண்பர்கள்) சிலரை உடன்
அழைத்துக் கொண்டு வந்து அவர் காப்பி அடித்ததைக் கண்டு
பிடித்துக் கொடுத்த ஆசிரியரைத் தாக்கியிருக்கிறார். இதனால்
கொதிப்படைந்த ஆசிரியர்கள் முதல்வரிடம் இதனைத் தெரி
வித்திருக்கிறார்கள். முதல்வர் இதன்மீது எடுத்த நடவடிக்கை
அவர்களுக்கு உடன்பாடு இல்லாத நிலையில் சென்னைப்
பல்கலைக்கழக பதிவாளரை அன்று மாலை அவருடைய அலு
வலகத்தில் சந்தித்திருக்கிறார்கள். விவரம் அறிந்த பதிவாளர்
உடனே தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறார்.

01. டாக்டர் எம். முத்துராமன் அவர்களை தலைமைத்
தேர்வுக் கண்காணிப்பாளர் பொறுப்பிலிருந்து நீக்கிவிட்டு அதே
கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர் திரு. டி. பி. கோபாலன் என்ப
வரைத் தலைமைத் தேர்வுக் கண்காணிப்பாளராக செயல்படு
மாறு செய்திருக்கிறார்.

02. சென்னை தியாகராயா கல்லூரியிலிருந்த ஆசிரியர்
ஒருவரை கூடுதல் தலைமைத் தேர்வுக் கண்காணிப்பாளராக
தொடர்ந்து பணியாற்ற ஏற்பாடு செய்துள்ளார்.

காப்பி அடித்த மாணவருடைய நடவடிக்கை குறித்து
அறிக்கை பல்கலைக் கழக பதிவாளரால் கல்லூரியிலிருந்து எதிர்
பார்க்கப்படுகிறது. அறிக்கை கிடைத்தவுடன் பல்கலைக் கழகத்
தால் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இதற்கிடையில் காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கலைக்
கல்லூரியில் தொடர்ந்து பல்கலைக் கழகத் தேர்வுகள் நடை
பெறுவதற்குப் போதுமான பாதுகாப்பை காவல் துறை அளித்து
வருகிறது. தேர்வுகளும் பிரச்சினை ஏதுமின்றி நடந்து வரு
கின்றன.

ஆசிரியரைத் தாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட மாணவர்
மீது போலீசில் புகார் (Criminal Complaint) கொடுத்திருப்பதாகத்
தெரிகிறது.

தாக்கப்பட்ட ஆசிரியரின் செயின் பறிக்கப்பட்டது பற்றி
உறுதியான செய்தி ஏதுமில்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு தலைவர் அவர்
களே, அன்றைய தினம் தேர்வு நடைபெறுகின்ற சூழ்நிலையில்
அங்கே மாணவர்கள் காப்பி அடித்து இருக்கின்றார்கள். அந்த

[திரு. எஸ். டி. உகம்சந்த்] [1990 ஏப்ரல் 12

மாணவனைத் தேர்வாணைக் குழுவைச் சேர்ந்தவர்கள் கையும் களவுமாகப் பிடித்து முதல்வருடைய அறைக்கு அன்றைக்கு அழைத்துச் சென்று இருக்கிறார்கள். ஆனால் அந்தக் கல்லூரி முதல்வர் அவர்கள் அந்த மாணவனைக் காப்பாற்றுகின்ற அள விலே அந்த மாணவனை விட்டுவிட வேண்டுமென்று சொன்னதன் காரணமாக, அவருடன் அந்த ஆசிரியப் பெருமக்களும் போராடி இருக்கின்றார்கள். அதற்குப் பிறகுதான் நடவடிக்கை எடுக்கப் பட்டு இருக்கின்றது என்பதை நான் அறிகின்றேன். அந்தச் சூழ் நிலையில் அந்த ஆசிரியருக்கு வேண்டிய பாதுகாப்பும், அவரிட மிருந்து பறிக்கப்பட்டு இருக்கின்ற அந்த செயினையும் திருப்பிப் பெறுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதோடு மட்டுமல்லாமல்....................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள். ஒரு வினாவோடு முடிக்க வேண்டும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : கேள்வியாகக் கேட்டு விடுகிறேன். மறு தினமும் அது போன்று காப்பி அடித்து இருக்கின்றார்கள். முதல்வரிடம் கொண்டு சென்று இருக்கிறார்கள். அந்த மாண வனை விட்டுவிட வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். அப்படிப்பட்ட தவறு செய்து இருக்கின்ற அந்த முதல்வர் மீதும் அந்த மாணவன் மீதும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக் கின்றது என்பதை அரசு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

10-20 மணி

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்த அறிக்கையை விவர மாகப் படித்திருப்பார் என்று நான் நம்புகிறேன். ஏனென்றால், அந்தத் தேர்வு நடத்துகிற அந்தத் தலைமைப் பொறுப்பு அந்தக் கல்லூரி முதல்வரிடமிருந்து நீக்கப்பட்டு, இன்னொருவரிடத்திலே, ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதே கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர் கோபாலன் என்பவரைத் தலைமைத் தேர்வுக் கண்காணிப்பாள ராகச் செயல்படுமாறு சென்னைப் பல்கலைக் கழகப் பதிவாளர் தெரிவித்திருக்கிறார். தாக்கிய மாணவனைக் குறித்துக் காவல் துறையிலே புகார் செய்யப்பட்டு இருக்கிறது. ஆனால் செயின் பறிக்கப்பட்டதாக உறுதியான தகவலோ புகாரோ இருக்கவில்லை. எனவே, அது குறித்துக் காவல் துறை விசாரிக்கும். அந்த மாண வரோ பிறரோ, மேலும் வன்முறையிலோ அல்லது கலவரத்திலோ ஈடுபடாதிருப்பதற்குக் காவல் துறையினுடைய கண்காணிப்பு நடைபெற்ற தேர்வுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையை நான் படித்தேன். கிரிமினல் கம்ப்ளெயிண்ட் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது.



1990 ஏப்ரல் 12] [திரு. மா. சுந்தரதாஸ்]

கிரிமினல் கேஸ் கொடுத்தால் கிரைம் நம்பர் என்ன? அந்த மாணவர்
கைது செய்யப்பட்டிருக்கிறாரா? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்
டிருக்கிறது என்பது விவர அறிக்கையில் இல்லை. இந்த நிலைமை
யிருந்தால் நிச்சயமாக யாருமே நிம்மதியான முறையிலே ஒரு
இன்ஸ்பெக்ஷன் செய்ய முடியாது; ஒரு எக்சாமினேஷன் நடத்த
முடியாது. ஆனால், அந்த மாணவர்மீது நடவடிக்கை எடுக்கா
மல், கல்லூரி முதல்வரை மாற்றியிருப்பதாக இருக்கிறது. ஆனால்
தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுதான், இந்த
எக்சாமினேஷனை நடத்துகின்ற ஹால் சூப்பிரண்டெண்ட் அவர்
களுடைய நினைப்பிலே இருந்து கொண்டிருக்கிறது. அரசு
எடுத்த நடவடிக்கை சரியில்லை என்று சொல்லப்படுகிறது.
எனவே, தெரிகிறது என்ற நிலைமையெல்லாம் இல்லாமல், அந்த
மாணவன்மீது எடுக்கப்பட்ட கிரைம் நம்பர் என்ன, கைது
செய்யப்பட்டிருக்கிறாரா ? அந்த மாணவன் மேல் என்ன நட
வடிக்கை எடுத்திருக்கிறது என்று தெளிவான முறையிலே கூறப்
படவில்லை. இந்த நிலைமை நீடிக்கக் கூடாது என்றும், நிச்சய
மாக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதையும் வலியுறுத்
தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே,
அந்தக் குற்றச்சாட்டு—புகார் என்னிடத்திலே வரவில்லை. இரண்
டாவது, பல்கலைக் கழகப் பதிவாளருக்குக் கிடைத்து, அவர்
அவருடைய கடமையைச் செய்திருக்கிறார். அதற்கு மேலும்
குற்றச்சாட்டுக்குரிய நிலைமையிருக்குமானால் ஆசிரியர்களோ,
மற்றவர்களோ, அறங்காவல் குழு ஒன்று இருக்கிறது பச்சையப்பன்
கல்லூரியைப் பொறுத்தவரையில்—இருப்பதால் அந்தக் குழுத்
தலைவருக்கும் தெரிவிக்கலாம். அப்படி ஒருவேளை தெரிவித்து
நிறைவு அடைந்திருக்கலாம். என்னிடத்தில் நேரடியாக விவரங்கள்
எதுவும் வரவில்லை. துறையிடமிருந்து கிடைத்த பதிலைத்
தான் நான் தெரிவித்து இருக்கிறேன். பல்கலைக் கழகப் பதி
வாளரே தலையிட்டு, ஓரளவு நியாயம் வழங்கியிருக்கிறார்கள்.
மேலும் குறையிருக்குமானால் தெரிவித்தால், விசாரித்து உண்மை
யிருந்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்
கொள்கிறேன்.

(ஆ) சங்கு குளிக்கும் தொழிலாளர்களுக்கு சங்குகளைச் சொந்த
மாக்கும் உரிமை வழங்கப் பெறாதது குறித்து.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, "கடலில் சங்கு எடுக்கும் தொழிலாளர்களுக்கே
சங்கு சொந்தம் என்ற உரிமை சிதம்பரனார் மாவட்டச் சங்கு
குளிக்கும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படாதது குறித்த"
அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு
கால்நடை வளர்ப்புத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு
வருகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின்முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

பேரவை உறுப்பினர் தெரிவித்துள்ளதுபோல் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் கடலில் சங்கு குளித்து சங்கு எடுக்கும் தொழிலாளர்களுக்கு சங்கு சொந்தம் என்ற உரிமை ஏதும் வழங்கப்படவில்லையென தெரிவிக்கிறேன். தமிழ்நாட்டில் இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடியில்தான் சங்கு குளிப்பு தொழிலாக செய்யப்பட்டு வருகிறது. இந்த இரண்டு மையங்களிலும் சங்கு கொள்முதல் நிலையங்கள் மூலம் அரசால் சங்கு கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இதர இடங்களிலும் சங்கு கொள்முதலை அரசுதான் செய்யவேண்டுமென்றாலும் இவ்விடங்களில் மிகவும் குறைவான அளவில் சங்குகள் கிடைப்பதால் அரசு கொள்முதல் நிலையம் அமைக்கப்படவில்லை. ஆனால், வலைகளில் கிடைக்கும் சங்குகளை மீன் துறை கொள்முதல் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

தமிழ்நாட்டில் 1971 ஆம் ஆண்டில், சங்கு குளித் தொழிலாளர்களிடமிருந்து வரப்பெற்ற முறையீட்டின்பேரில் குத்தகை மூலம் விடப்பட்டிருந்த சங்கு சேகரித்துக்கொள்ளும் உரிமைகள் இரத்து செய்யப்பட்டு, ஆண்டுதோறும் ரூபாய் 10 செலுத்தி உரிமம் பெற்ற சங்கு தொழிலாளர், குளித்தெடுக்கும் சங்குகளை குளித்தெடுக்கும் தொழிலாளர்களுக்கு அரசு உரிமையாக்கியது. அப்பொழுதும் முத்துப்படுகைகள் நிறைந்த சிதம்பரனார் மாவட்டக் கடல் பகுதியில் மீன் துறையின் மூலமே சங்குகுளிப்பு பணிகள் நடைபெறுகின்றனவென்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கண்ட உரிமம் முறையில் தொழிலாளர்கள் எதிர்பார்த்த அளவு நன்மை பெறவில்லை. மேலும் அரசிற்கு உரிமம் மூலம் வரவேண்டிய வருவாய் வராததால் மீண்டும் 1977 ஆம் ஆண்டில் உரிமம் முறை இரத்து செய்யப்பட்டு மீன் துறை மூலமே சங்கு குளித் தொழிலாளர்கள் பதிவு செய்து சங்கு குளித்து அவர்கள் குளித்தெடுத்துவரும் சங்குகளுக்கு அரசே கொள்முதல் விலை நிர்ணயம் செய்து கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. தற்போது ஜாதி முழு அளவு-I சங்கு ரூபாய் 7 வீதமும், ஜாதி முழு அளவு-II சங்கு ரூ. 5 வீ மும் சொத்தை சங்கு ரூ. 1 வீதமும் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. வருகின்ற ஆண்டிலிருந்து சங்கு கொள்முதல் விலை கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்படவுள்ளது :—





| | | | | ரூபாய். |
|---|---|---|---|---|
| முழு அளவு முதல் தரம் (75 மி.மீ. மேல்) | .. | | .. | 10 |
| முழு அளவு இரண்டாம் தரம் (64 மி.மீ. மேல். ஆனால் 75 மி.மீ.-க்குக் குறைவு). | | | | 7 |
| சொத்தை | .. | .. | .. | 1 |

தமிழ்நாட்டில் சிதம்பரனார் மாவட்டத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்திலும் சங்கு குளிப்பு மீன் துறை மூலம் நடத்தப்பட்டு சங்கு குளித் தொழிலாளர்கள் தரகர்களிடமும், சங்கு வியாபாரிகளிடமிருந்தும் அடிமைத்தளை விடுபட்டு சுதந்திரமாகச் செயல்படுகிறார்கள். மற்ற மாவட்டங்களில் சங்கு குளித்தொழிலாளர்கள் என குறிப்பாக இல்லை என்பதாலும், கடலில் இயற்கை நிலையினையொட்டியே சங்கு குளிப்பு செய்யப்பட வேண்டியுள்ளதாலும் மற்ற மாவட்டங்களில் சங்கு குளிப்பு மீன் துறை மூலம் செய்யப்படுவதில்லல. மீனவர்கள் அவர்கள் தம் மீன்பிடி வலைகளில் கிடைக்கும் வலைச் சங்குகளை தாமாகவே முன்வந்து ஒப்படைக்கும் பட்சத்தில் அவைகளை முழுஅளவு—I சங்கிற்கு ரூபாய் 1, முழு அளவு II சங்கிற்கு ரூபாய் 0.60 காசுகள் மற்றும் சொத்தை சங்கிற்கு ரூபாய் 0.10 காசுகள் கொடுத்து கொள்முதல் செய்ய மண்டல மீன் துறை உதவி இயக்குநர்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, பேரவை உறுப்பினர் குறிப்பிட்டுள்ளது போல தொழிலாளர்களிடம் பாரபட்சம் காட்டி ஒரு சாரருக்கு குளித்தெடுக்கும் சங்குகள் அவருக்கு உரிமை என்ற நிலை இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சங்கு குளிக்கும் தொழிலாளர்களினுடைய வேண்டுகோளின்படி 1971 ஆம் ஆண்டு தூத்துக்குடி நீங்கலாக, சங்கு குத்தகையை ரத்து செய்து விட்டு, சங்கு குளிக்கும் தொழிலாளர்களுக்குச் சங்கு சொந்தம் என்ற உரிமை அரசால் வழங்கப்பட்டது. அந்தநேரத்திலே தூத்துக்குடியிலே, தூத்துக்குடி கடலில் முத்துக் குளித்தல் நடைபெறுகின்ற வாய்ப்பு இருப்பதன் காரணமாக, தூத்துக்குடியிலே இருக்கின்ற சங்கு குளி தொழிலாளர்களுக்கு—சங்கு குளிப்பவர்களுக்குச் சங்கு சொந்தம் என்ற உரிமை வழங்கப்படவில்லை. அதேநேரத்திலே, இப்பொழுது தூத்துக்குடி கடலிலே சங்குகளைப் பொறுத்தமட்டிலே அதிகமாக உற்பத்தி கிடையாது. அதே நேரத்தில், மீன் துறையைப் பொறுத்தமட்டில், மீன் துறை இலாக்காவினர் கடுமையாக நடவடிக்கைகள் எடுக்கிற காரணத்தால், சங்குத் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, சங்கு

குளி தொழிலாளர்களுக்கு, அதுவும் குறிப்பாக, தூத்துக்குடி
யிலே சங்கு குளிக்கும் தொழிலாளர்களுக்கு இப்பொழுது முத்துக்
குளித்தல் தூத்துக்குடியிலே இல்லாததன் காரணமாக கடந்த
முப்பதாண்டுக் காலமாகத் தூத்துக்குடியிலே முத்துக்குளித்தல்
இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அரசே அதை அறிவித்திருக்
கிறது. தூத்துக்குடி கடலிலே அறவே முத்து இல்லை என்று
அரசு அறிவித்திருக்கிற காரணத்தால், சங்கு குளி தொழிலாளர்
களுக்கு—சங்கு குளிப்பவர்களுக்குச் சங்கு சொந்தம் என்ற உரி
மையை வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரொம்ப ஆழமாகப்
போய் விட்டீர்கள். (சிரிப்பு).

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தமிழகத்திலே எந்தப் பகுதியிலே
சங்கு குளித்து எடுத்து வந்தாலும், அதைக் குளித்து எடுத்து
வந்தவர்களுக்கு உரிமையாக்குகின்ற ஒரு செயற்குறிப்பு அரசின்
பரிசீலனையில் தற்போது இல்லை என்பதை வலியுறுத்த விரும்பு
கிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : தலைவரவர்களே, . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் ஆழமா ?

*10-25 மணி*

திரு. எஸ். டேனியல்ராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே,
சங்கு கொள்முதலைப் பொறுத்தவரையில் சங்குத் தொழிலாளர்
களிடமிருந்து மீன்வள இலாக்காவினர் வாங்குவதில் முதல் தர
சங்குக்கு 7 ரூபாயும், இரண்டாம் ரக சங்குக்கு 5 ரூபாயும்
சொத்தை சங்குக்கு ஒரு ரூபாயும் வழங்கி வருகிறார்கள். இப்
போது அதை உயர்த்தி முதல் ரக சங்குக்கு 10 ரூபாயும், இரண்
டாம் ரக சங்குக்கு 7 ரூபாயும், சொத்தை சங்குக்கு ஒரு ரூபாயும்
வழங்க இருப்பதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.
அதை நான் பாராட்டுகிறேன். இருந்தாலும்கூட இந்த சங்கை
வெளியே தனி வியாபாரிகளிடத்தில் விற்கின்றபோது 50 ரூபாய்,
75 ரூபாய் அளவிற்கு அவர்கள் விற்கின்ற சூழ்நிலை இருந்து வரு
கிறது. ஆகவே, சங்கு குளி தொழிலாளர்களுக்கு ஒரு கூட்டுறவுச்
சங்கத்தை அமைத்து, அந்தச் சங்கம் மூலமாக குத்தகை
முறையைக் கொண்டு வந்து, குத்தகை முறையில் கூட்டுறவுச்
சங்கங்களுக்கு வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்பு
கிறேன்.





மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் ; தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்களை இந்த அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**5. அறிக்கை அளித்தல்.**

**பேரவை முன்வைக்கப்பட்ட ஏடுகள் குழு.**

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் ஐந்தாவது அறிக்கையை குழுத் தலைவர் சார்பாக அவைக்கு அளிக்கிறேன்.

**2. தகவல் கோரல்—தொடர்ச்சி,**

**(ஈ) மானியக் கோரிக்கைகளுக்கான கொள்கை விளக்கக் குறிப்புகள் உறுப்பினர்களுக்கு முன்னதாகவே வழங்கப்பட வேண்டிய அவசியம் குறித்து.**

* திரு. உ. ரா. வரதராசன் : தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். இன்றைக்கு 3 மானியக் கோரிக்கைகள் மீது விவாதிக்க இருக்கிறோம். தாங்கள் இந்த அவையில் அறிவித்தீர்கள். மானியக் கோரிக்கைகள் எடுத்துக் கொள்வதற்கு 48 மணிக்கு முன்னால் அதுபற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் உறுப்பினர்களுக்குச் சேர்க்கப்பட வேண்டுமென்று தெரிவித்தீர்கள். இன்றைய நிகழ்ச்சி நிரலில் உள்ள இரண்டு மானியக் கோரிக்கைகள் மீதான விளக்கக் குறிப்புகள் நேற்றையதினம் தான் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்று பதிவாகி இருக்கிறது. இது தொடர்ந்து நீடித்தால், அவைத் தலைவர் அறிவித்த அறிவிப்பைச் செயல்படுத்துவதில்லை என்று சொன்னால், எங்களின் உரிமையை யாரிடத்தில் போய் பாதுகாக்க வேண்டுமென்று கேட்பது என்று தெரியவில்லை. இனிமேலும் அவைத் தலைவருடைய அறிவிப்பு கடைபிடிக்கப்படுவதற்கு ஆவன செய்யப்படுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; நம்முடைய உறுப்பினர் அவர்களுடைய உணர்வை நான் ஏற்கெனவே அறிவித்து இருக்கிறேன். மானியக் கோரிக்கைகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் உறுப்பினர்களுக்குக் கண்டிப்பாக 48 மணி நேரத்திற்கு முன்னால் தரப்படவேண்டும் என்று சொல்லியிருக்கிறேன் அதற்குக் காரணம் அவற்றை அவர்கள் படித்து இந்த அவையிலே பேசவேண்டும். பல செய்திகளை எடுத்து வைக்கவேண்டும்.

திறனாய்வு செய்யவேண்டும். அரசிற்குத் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும் என்று விரும்புகிறவர்களுக்கு மிகுந்த வாய்ப்பளிக்க வேண்டியது இந்த அவையினுடைய பொறுப்பு. அதுவும் பேரவைத் தலைவருடைய பொறுப்பு. எனவே, மீண்டும் இதை அனைத்து அமைச்சர்களும், அனைத்துத் துறைகளுடைய செயலாளர்களும், மற்றும் ஆணையாளர்களும், மிகக் கவனமாகவும், எச்சரிக்கையாகவும் எடுத்துக் கொண்டு இதில் முழுமையாக உறுப்பினர்களுடைய முழு வாய்ப்பிற்கும் இடமளிக்கத்தக்க வகையில் அடுத்து வருகின்ற மானியக் கோரிக்கைகளுடைய கொள்கை விளக்கக் குறிப்புகள் அனைத்தும், நான் ஏற்கெனவே அறிவித்தபடி இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்கப்படவேண்டும் என்றும், அதை அனைவரும் மதித்துச் செயல்படவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கிறேன்.

*திரு. வி. கே. சின்னசாமி ; தலைவர் அவர்களே, இன்றைக்கு வியாழக்கிழமை. நாளைய தினத்திலிருந்து 3 நாட்களுக்குச் சட்டமன்றம் இல்லை. ஆகவே, நீங்கள் சொன்னபடி இரண்டு நாட்கள் என்றால்,இன்றைக்கே எல்லா உறுப்பினர்களும் ஊருக்குச் சென்று விடுவோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருந்து வாங்கிக் கொண்டு போக வேண்டும்.

திரு. வி. கே. சின்னசாமி : திங்கள்கிழமை வருகிற மானியக் கோரிக்கை குறித்த அறிக்கைகளை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இருந்து வாங்கிக் கொண்டு போகவேண்டும் என்ற பொறுப்பில்தான் நான் சொல்கிறேன். ஊருக்குப் போவது என்றால் சொல்லுங்கள், ஏற்றி அனுப்பி வைக்கிறேன். (குறுக்கீடு) விடுமுறை நாட்களில் இன்னும் கொஞ்சம் முன்னதாக இவர்களைக் கவனிக்க வேண்டும்.

### 6. மானியக் கோரிக்கைகள், 1990-91— விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

#### (அ) கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள்.

* மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் ;

"மானியக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 3,46,08,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."



திரு. உ. ரா. வரதராசன் : தலைவர் அவர்களே, ஆவின் நிறுவனத்தில் உள்ள தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு முந்திய ஒரு நபர் குழுவின் பரிந்துரைகளின்படியான சம்பள விகிதங்களுக்கு ஏற்ப, புதிய சம்பள ஊதியங்களை ஐந்தாவது ஊதியக் குழு மாற்றியமைக்காதது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,46,08,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

திரு. ஆர். சிங்காரம் : தலைவர் அவர்களே, தமிழகத்தில் இயங்கும் கூட்டுறவு பால் உற்பத்திச் சங்கத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் பணி நிரந்தரம் அடிப்படை வசதிகள் வழங்குவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 3,46,08,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

10-30 மணி

திரு. டி. சி. விஜயேந்திரய்யா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண், 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 3,46,08,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் உடனடியாக நடத்துவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 3,46,08,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

#### (ஆ) கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ், ரூ. 34,09,09,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீப்பெட்டித் தொழிலாளர்களின் நலன்களைப் பாது காக்கவும், குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தை முழுமையாக அமுல் டுத்த வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 34,09,09,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. மா. சுந்தரதாஸ்: Mr. Spe ker Si, I move that—"to discuss ebo. the inc easing use of child workers at several fac o ies includ ng match facto ies and Bathi inoust ies and the need to take severe action ag inst such owne s/p op ieto s"

the sum of Rs. 34,09,09,000 under Demand No. 29—Labour, Factories and Employment and Training be reduced by Rs. 100.

திரு. டி.சி. விஜயேந்திரையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 34,09,09,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பேத்கார் வட ஆற்காடு மாவட்டம், காட்பாடி தொகுதியில் பீடி சுற்றும் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சிறு வர்கள் நிலை குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 34,09,09,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(இ) கோரிக்கை எண் 44—எழுதுபொருள்-அச்சுத்துறை.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :







"மானியக் கோரிக்கை எண். 44—எழுதுபொருள்-அச்சுத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 22,77,75,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 44—எழுதுபொருள்-அச்சுத் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 22,77,75,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

திரு. டி. சி. விஜயேந்திரையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 44—எழுதுபொருள்-அச்சுத்துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 22,77,75,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்று விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 44—எழுதுபொருள் அச்சுத் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 22,77,75,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை களும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது வழங்குவதாயின் வழங்கலாம்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் துறையின் மீதும், பால்வளத் துறையின் மீதும் எழுதுபொருள்-அச்சுத்துறையின் மீதும் பல்வேறு கருத்துக்களை உறுப்பினர்கள் எடுத்துச்சொன்ன பிறகு, துறை யின் சார்பாக என்னுடைய பதிலுரையை அளிக்கிறேன் என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களைக் கேட்க ஆவலாக இருக்கிறேன். பேரவை முன் உள்ள இத் துறைகளின் கொள்கைக் குறிப்புகளை* நான் படித்ததாக அவை நடவடிக்கைக் குறிப்பில் ஏற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*185-286-ம் பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப் பெற்றுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஓர் அறிவிப்பு. இன்று விவாதத்தில் பங்கு பெறுகிறவர்கள், பகல் 1 மணிக்கு இந்த அவை முடித்து வைக்கப்பட்டு, மீண்டும் மாலை 4 மணிக்குக் கூடும் என்பதை நினைவில் கொண்டும், சரியாக 5.30 மணிக்கு எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும் என்ற கட்டுப்பாட்டை வகுத்துக் கொண்டும், நேரத்திற்கு உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டும். நேற்றுப்போல் நீண்டநேரம் இழுத்துக் கொண்டு போனால், அதனால் முழுமையாக யாரும் தங்கள் கருத்துக்களைச் சொல்ல முடியாத நிலைமையும், அமைச்சர் அவர்களும், முழுமையாகத் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைக்க முடியாத நிலையும் ஏற்பட்டு, பேச்சில் மிகப் பெரிய சோர்வும் எரிச்சலும் ஏற்படுகின்றன என்பதை நீங்கள் அருள்கூர்ந்து உணர வேண்டும். ஏற்கெனவே விதிகளில் கூட அதிகமாகச் சோர்வு தட்டும் அளவிற்கு யாரும் பேசக்கூடாது என்று இருக்கிறது. அவற்றையும் மனதிலே வைத்துக் கொண்டு தேவையில்லாத கருத்துக்களை அருள் கூர்ந்து தவிர்த்து,தேவையான ஆக்கப்பூர்வமான கருத்துக்களுக்கு நிறைய வாய்ப்பு அளித்திட அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முதலில் இந்த விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் திரு. சந்திரசேகர்.

10-35 மணி

திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சரவர்கள் கொண்டுவந்த பால் வழங்கு திட்டம், தொழிலாளர் நலம், எழுதுபொருள்-அச்சுத் தொழில் மானியக் கோரிக்கைகளின் மீது பேசுகின்ற வாய்ப்பு கொடுத்ததற்காக தலைவர் அவர்களுக்கு நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழகத்தில் இருக்கின்ற, கிராமப் புறங்களில் இருக்கின்ற மக்களில் 70 சதவீதம் பேர் விவசாயத் தொழிலை செய்துகொண்டிருக்கிறார்கள், செய்து கொண்டிருந்தார்கள். அவர்களுடைய உப தொழிலாக கறவை மாடுகளை வளர்த்து, அதன் மூலம் பால் உற்பத்தி செய்கின்ற தொழிலை கிராமப் புறங்களில் இருக்கின்ற விவசாயப் பெருமக்களும் கிராமப் புறங்களில் இருக்கின்ற ஏழை எளிய மக்களும் செய்து வந்தார்கள் என்பதை நான் இங்கே நினைவூட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையிலே கிராமப்புறங்களில் இருக்கின்ற விவசாயிகள் அங்கே மழை குறைந்ததின் காரணமாக பாதிக்கப்பட்டு, உப தொழிலாக இருந்து வந்த அந்த பால் பெருக்குத் திட்டத்தை இப்போது தொழிலாக மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை ஞாபகப்படுத்த கடமைப் பட்டிருக்கிறேன். இன்றைக்கு கால்நடைகளை வாங்கி, அவை



களை வளர்த்து, பால் பெருக்குவதற்கு முற்படுகின்ற நேரத்
திலே மழை இல்லாத காரணத்தால் அங்கே அந்த கால்நடை
களுக்குத் தேவையான பச்சைத் தீவனங்கள் கிடைக்காத நிலை
யிலே அரசாங்கம் கொடுக்கின்ற ஆவின் மாட்டுத் தீவனத்தை
வாங்கி அதை மாடுகளுக்கு பயன்படுத்துவதின் மூலம்
அந்தப் பாலை பெருக்குகின்ற திட்டத்தை இன்றைக்கு செயல்
படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவற்றைக் குறிப்பிடு
கின்றபோது அந்த ஆவின் மாட்டுத் தீவனத்தை வாங்குகின்ற
மக்கள், ஏழை எளிய மக்கள், அதனுடைய விலை கிலோவிற்கு
ரூ. 2.35 பைசா என்று இருக்கின்ற நிலையைப் பார்க்கின்றபோது,
அந்த மாட்டுத் தீவனத்தால் மாடுகளுக்கும் பாலினுடைய தரம்
நன்றாக இருந்தாலும்கூட, அதன் விலை அதிகமாக இருக்கின்ற
காரணத்தால் அப்படிப்பட்ட மாட்டுத் தீவனங்களை வாங்கிப்
போட முடியாத நிலையில் இன்றைக்கு இருந்துகொண்டிருக்
கிறார்கள். அதற்குப் பிறகு அப்படி அவர்கள் உற்பத்தி செய்
கின்ற பாலை கிராம பால் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொண்டு
செல்கின்றபோது பாலினுடைய தரத்தை நிர்ணயம் செய்து
அதற்கு விலை கொடுக்கின்றார்கள். அந்தப் பாலை எடுத்துச்
செல்கின்றபோது இன்றைக்கு கிராமங்களிலே மாடுகளிலிருந்து,
எருமைகளிலிருந்து கறக்கப்படுகின்ற பாலினுடைய தரம்
குறைந்தே காணப்படுகிறது. அதற்குக் காரணம், கால்நடை
களுக்குத் தேவையான பச்சைத் தீவனங்கள் கிடைப்பது கிடை
யாது. அந்தப் பால் வழங்கு தரத்தை நிர்ணயிக்கிறபோது,
அந்தப் பாலினுடைய கொழுப்புச் சத்து 4.5 சதவீதம் என்றும்,
இதர சத்துக்கள் 8 சதவீதம் இருக்கவேண்டுமென்றும் சொல்லப்
படுகிறது. அப்படி இருந்தால்தான் அந்தப் பாலினுடைய விலை
ஒரு லிட்டருக்கு ரூ. 3.28 பைசா என்று சங்கத்திலே அறிவித்
திருக்கிறார்கள். ஆனால் கறக்கப்படுகின்ற பாலினுடைய தரம்
கறவை மாடுகளுடைய உணவு போதாமை காரணமாக சத்து
குறைந்து, அந்தக் கொழுப்புச் சத்தானது 4.5 சதவீதம் இருந்
தாலும் கூட, இதர சத்துக்கள் 7.9 சதவீதமாகவோ, அல்லது
7.8 சதவீதமாகவோ சிறிது குறைந்திருக்கின்ற நேரத்திலே,
அப்படி பாலினுடைய தரத்தைக் குறைத்து 50 பைசா, 60 பைசா
என்று மிகவும் குறைவான விலையில் கொடுக்கிறார்கள். நான்
சொல்வது எல்லாம், அப்படி பாலின் தரம் சிறிது குறைகின்ற
போது, அதற்கு 10 பைசாவோ, அல்லது 20 பைசாவோ, அந்தப்
பாலின் தரம் என்ன குறைந்திருக்கிறதோ, அதற்கு ஏற்றாற்
போல் குறைத்துக் கொடுப்பீர்களேயானால், இன்றைக்கு இருக்
கின்ற அந்தக் கறவை மாடுகளை வைத்து ஜீவனம் செய்கின்றவர்
கள் பயனடைவார்கள் என்பதை கூறிக்கொள்ள கடமைப்பட்
டிருக்கிறேன்.

அதே போன்று கறவை மாடுகள் வாங்குவதற்காக கடன் கொடுக்கிறார்கள். அரசின் மூலமாக வங்கிகளில் கடன் கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுக்கப்படுகின்றபோது, அதை

[திரு. வி. பி. சந்திரசேகர்] [1990 ஏப்ரல் 12

வாங்குகின்ற மக்கள் அனைவருமே அந்தப் பணத்தின் மூலமாக கறவை மாடுகளையோ மற்றவைகளையோ வாங்குவது கிடையாது. ஒரு சிலர் அந்தப் பணத்தை மற்ற செலவுகளுக்காக வைத்துக் கொள்கிறார்கள். இந்த நிலை மாற்றப்படவேண்டும். அதற்கு நல்லவிதமான ஜாதிப் பசுக்களை அரசாங்கமே வாங்கி, அப்படிப்பட்ட பசுக்களை பால் உற்பத்தி செய்கின்றவர்களுக்குக் கொடுக்க முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று வாங்கப்படுகின்ற மாடுகளுக்குக் கொடுக்கப்படுகின்ற கடன் மிகவும் குறைவாக இருக்கிறது. ரூ. 3,700 என்று சொன்னால் இன்றைக்கு நாட்டு மாடுகளே ரூ. 3,000, ரூ. 3,500 என்று இருக்கின்ற நிலையிலே ரூ. 3700-ஐப் பெற்றுக் கொண்டு உயர்ந்த ஜாதி மாடுகளை வாங்குவது என்பது முடியாத நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே அப்படி கொடுக்கின்ற கடனை உயர்த்திக் கொடுக்கின்ற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

10-40 மணி

அதே போன்று எங்கள் கோவை மாவட்டத்திலே விவசாயிகள் பால் பெருக்குத் திட்டத்திலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏழை எளிய மக்கள் சிறந்த முறையில் இந்தத் தொழிலைச் செய்யவேண்டுமென்பதற்காக கால்நடைகளை நல்லமுறையில் வளர்த்து அதிகப்படியான பாலை உற்பத்தி செய்கிறார்கள். அப்படி உற்பத்தி செய்த பாலை கூட்டுறவுச் சங்கங்களுக்கு எடுத்துச் செல்கின்றபோது இன்றைக்கு மாவட்ட ஒன்றியத்திலே இருக்கின்றவர்கள் அதனுடைய விலைக்கு ஏற்ப பாலை மட்டும் எடுத்துக்கொண்டு மீதம் இருக்கின்ற பாலை பால் கோவாவாக மாற்றுவதற்கு எங்களுடைய கோவை மாவட்டத்திலே எந்தவிதமான தொழிற்சாலைகளும் கிடையாது அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருக்கிற போது அதிகப்படியாக வருகிற பாலை அவர்கள் வாங்குவதற்கு ஒரு காரணம் சொல்லுகிறார்கள். பாலினுடைய தரத்தை அதிகமாக்கி, உயர்த்திக் காட்டி, அந்தப் பாலுடைய தரம் நன்றாக இருந்தால் தான் வாங்குவோம் என்று சொல்லி உற்பத்தியாளர்களிடமிருக்கும் பாலை திருப்பி அனுப்பி விடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலை மாற வேண்டுமென்று சொன்னால் எங்கள் து கோவை மாவட்டத்திலே மீதமாகிற பாலிலிருந்து பால் பவுடரை தயாரிக்கிற தொழிற்சாலையை நீங்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதே போல இன்றைக்கு சத்துணவு அளிக்கப்படும்போது அத்தோடு முட்டையை சேர்த்துக் கொடுக்கிறார்கள். அப்படி கொடுக்கிற



1990 ஏப்ரல் 12] [திரு. வி. பி. சந்திரசேகர்]

போது முட்டை கொடுப்பதற்கு பதிலாக சத்துக்கள் நிறைந்த பாலை சத்துணவோடு கொடுக்கலாம் என்று அரசை நான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல கிராமங்களிலே, கிராம கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தை தொடங்கி இருக்கிறார்கள். ஒரு பஞ்சாயத்துக்கு ஒரு சங்கம் என்று சொன்னால் கிட்டத்தட்ட 4, 6 கிராமங்களை சேர்ந்த மக்கள் அங்கு உற்பத்தியாகிற பாலை அந்தச் சங்கத்திற்கு கொண்டு வந்து கொடுப்பதன் மூலம் பால் உற்பத்தியினால் அந்தச் சங்கம் பயன்படுவதோடு அதனால் கிடைக்கும் லாபத்தின் மூலமாக அந்தப் பால் உற்பத்தியாளர்களும் பயன் அடைவார்கள். ஆனால் இப்போது சில இடங்களில் கிராமத்திற்கு கிராமம் ½ கிலோ மீட்டர் 1 கிலோ மீட்டர் தூரம் இருக்கும் இடத்தில் கூட அந்த மாதிரி சங்கங்கள் இருப்பதன் காரணமாக பாலுடைய வரத்து பிரிக்கப்பட்டு அதன்மூலம் வருகிற லாபமும் பிரிக்கப்படுகிற காரணத்தினாலே சங்கங்கள் நலிவு அடைகிற நிலையிலே இருந்துகொண்டிருக்கிறது.

ஆகவே அதைக் கருத்தில் கொண்டு ஒரு பஞ்சாயத்திற்கு ஒரு சங்கம் என்ற அமைப்பிலே அதை செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல அந்த சங்கங்களில் தேர்ந்து எடுக்கப்பட்ட நிர்வாகத் தலைவர்கள் இருந்து கொண்டிருந்தார்கள். அதன்மூலம் சங்கம் சிறந்த முறையில் நடந்துகொண்டிருந்தது. திடீரென்று நிர்வாக தலைவரை இந்த அரசு நீக்கிவிட்டது. தனி அதிகாரிகளையும் ஆலோசகர்களையும் நியமித்து இருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கிற நிலைமை எல்லாம் அப்படி நியமிக்கப்பட்டிருக்கிற ஆலோசகர்கள் எல்லாம் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களாக இருக்கிற காரணத்தினாலே அங்கே வேலை செய்து கொண்டிருக்கிற ஊழியர்களை பழி வாங்குகிற நிலையில் இருந்து கொண்ருக்கிறார்கள். இதை நான் ஏன் சொல்லுகிறேன் என்று கேட்டால் பால் வளம் பெருக்க வேண்டும் அதன்மூலம் சங்கமும் சிறந்து நடக்க வேண்டும் என்ற நிலையிலே ஊழியர்களை பழிவாங்குவது என்பது அவசியம் அற்றது என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆனால் வேலை செய்துக் கொண்டிருக்கிற ஊழியர்கள் எப்போதுமே ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களாக நம்முடைய கண்ணுக்கு தெரிவது வழக்கம். அப்படித்தான் அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அப்படியானால் இப்படிப்பட்ட காழ்ப்புணர்ச்சி இல்லாமல் ஊழியர்களுடைய நன்மையை கருதி செயல்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல சங்கங்களின் நிர்வாக செலவிற்காக பால் உற்பத்தியாளர்களிடமிருந்து வாங்குகிற பாலிலிருந்து கிட்டத்தட்ட 40 ஆண்டுக்காலமாக ...... க்கு 10 பைசா வீதம்

லாபம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நிர்வாக செலவிற்கு அந்தப் பணம் போதாமல் இருந்து கொண்டிருக்கிறது. கடந்த 40 ஆண்டுகாலமாக சங்கங்கள் நடத்துவதற்கு தேவையான எல்லா விதமான பொருள்களும் இன்றைக்கு பல மடங்கு விலை உயர்ந்து விட்ட காரணத்தினால் அவர்களுடைய லாபத்தை பத்து பைசாவிலிருந்து அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு கிராமங்களிலுள்ள கிராம மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறது. வெண்மை புரட்சி ஏற்பட்டிருக்கிறது. அப்படி ஏற்படுகிற நேரத்திலே சங்கங்களுடைய ஊழியர்களுக்கு இந்த அரசு எந்த நன்மையையும் செய்யவில்லை என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த ஊழியர்களுக்கு அரசாங்கம் 1—1—1990 ஆம் தேதி முதல் தொடர்ந்து 180 நாட்கள் பணிபுரிந்துள்ள அனைத்து சங்க ஊழியர்களுக்கும் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். பணி நிலைகளுக்கேற்ப அரசினுடைய நிலை ஊழியர்களுடைய அளவுக்கு சங்க ஊழியர்களுக்கு சம்பள நிர்ணயம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

10.45 மணி

விடுமுறை நாட்களில் பணி புரியும் ஊழியர்களுக்கு எல்லா மாவட்டங்களிலும் ஆணையாளர் உத்தரவு எண் 42886/84-ன் படி இரட்டிப்பு ஊதியம் வழங்கப்படுகிறது. ஆனால் கோவை மாவட்டத்தில் அப்படிப்பட்ட ஊதியங்கள் வழங்குவதில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அரசு ஊழியர்கள் பணிக்காலத்தில் இறந்தால் அவர்கள் குடும்ப நிதியாக 40,000 ரூபாய் கொடுப்பதாக அரசு உத்தரவிட்டு இருக்கிறது. ஆனால் இந்தச் சங்கத்திலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு ஆரம்பத்திலே 60,000 கொடுக்கிறேன் என்று அறிவித்து, அதற்குப் பின்னால் 12,000 என்றும், தற்போது 20,000 என்றும் அறிவித்து இருக்கின்றார்கள். சங்க ஊழியர்கள் உயிருக்கு விலைக் குறைப்பு என்பதை மாற்றி அவர்களுடைய குடும்பங்களுக்கு 40,000 ரூபாய் வழங்கப்படவேண்டும், என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுச் சட்டத்தின் துணை விதிகளின்படி ஊழியர்களுக்கு போனஸ், மூன்று மாத அடிப்படைச் சம்பளம் அல்லது 1,200 ரூபாய் இதில் எது குறைவோ அது வழங்கப்படுகிறது. இது அதிகரிக்கப்பட்டு அந்த போனஸ் உச்சவரம்பு 3,000 ரூபாய் அல்லது மூன்று மாத சம்பளம் என்று வழங்கப்பட வேண்டும், காவல்துறை, தீயணைப்புத் துறை, குடிநீர், மின்சாரம் மற்றும் மருத்துவப் பிரிவு போன்ற அத்தியாவசியச் சேவைகள் போலவே இந்தப் பால் வழங்கு துறையும் சேர்கின்ற காரணத்தால் அப்பணியிலுள்ள அனைத்து ஊழியர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன.



அதே போல் கிராமத்தில் இருக்கின்ற விவசாயிகளுக்கு, ஏழை மக்களுக்கு, கால்நடைகள் வளர்ப்பதற்குத் தேவையான பச்சைத் தீவனங்கள் பயிரிடுவதற்காக அரசு மானியம் அளிக்கின்றது. அப்படிப்பட்ட மானியத்தைப் பெறுகின்றவர்கள் ஒருசிலராக மட்டும் தான் இருப்பார்கள். அதற்குக் காரணம் நிலங்களுடைய விவசாயிகள் மட்டுமே அப்படிப்பட்ட காரியங்களை செய்ய முடிகிறது. அதற்கு அரசாங்கமே அந்தப் பச்சைப் பயிர்களை வளர்த்து குறைவான விலையிலே அப்படி மாடுகளுக்கு கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளர் நலம் என்கிறபோது, அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்கள் நாட்டில் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். பெரும்பான்மையான மக்கள் நம்பிக் கொண்டிருக்கின்ற விவசாயத் துறையிலே விவசாயக் கூலிகளுக்கு இது வரை கூலி நிர்ணயம் செய்யப்படவில்லை. கிராமத்தில் எங்கேயோ வாழ்ந்து கொண்டிருக்கிற விவசாயிகள், கூலித் தொழிலாளர்கள், அதற்குரிய கூலியைப் பெறாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். அரசு அளிக்கின்ற பல நன்மைகளிலிருந்து அவர்கள் விடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட விவசாயக் கூலிகளுக்கு, எல்லா தொழிலாளர்களுக்கும் கிடைக்கின்ற வகையில் அந்த நன்மை சேரவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

நகர்ப்புறங்களிலே இருக்கின்ற பாரந்தூக்கும் தொழிலாளர்கள் அப்படிப்பட்ட தொழிலாளர்கள் ஒரு சங்க அமைப்போடு இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டிருந்தாலும்கூட, அப்படி பாரம் தூக்குகின்ற தொழிலாளர்களுடைய தொழில்கள் மிகக் கடுமையாக இருக்கின்றன. அவர்கள் செய்கின்ற நேரத்தில் பல்வேறு விதமான விபத்துக்கள் ஏற்படுகின்றன. அப்படிப்பட்ட தொழிலாளர்களை ஒருமைப்படுத்தி இருந்தாலும் கூட, இப்போது அரசு அறிவித்திருக்கின்ற செயல்பாடுகள் அவர்களைச் சேர முடியாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கு அவர்களையும் அரசினுடைய சலுகையிலே சேர்க்கின்ற வண்ணம் தொழிலாளர் நலச் சட்டத்திலே அவர்கள் சேர்க்கப்பட வேண்டும். அப்படிச் சேர்த்துக் கொள்வதற்கு அரசு முன் வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு தொழிலாளர்களுடைய பிரச்சினையை எடுத்துக் கொண்டால், அரசாங்கம் அவர்களுக்கு நன்மை அளிப்பதைவிட அவர்களைப் பழி வாங்கும் நிலையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு பல்லவன் போக்குவரத்துக் கழகத்தை எடுத்துக் கொண்டால், அவர்கள் 72 பேர் பணி நீக்கம் செய்யப்பட்டு இருக்கின்றார்கள். அதற்குக் காரணம் அவர்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்ல. எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற ஒரே காரணத்தினால் அப்படிப்பட்ட நிலை

ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது.) இப்படிப்பட்ட நிலை மாற, பல்வேறு தொழிற்சாலைகள் திறக்கப்பட இருக்கின்றன. திறக்கப்பட வேண்டும். அதன்மூலமாக தொழிலாளர்களுடைய நலன் பாதுகாக்கப்பட வேண்டும் என்று இந்த அரசை நான் கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்ததற்காக நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

10-50 மணி

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை.)

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. கே. என். நேரு அவர்கள், இன்றைக்கு கொண்டு வந்திருக்கின்ற இந்த மானியக் கோரிக்கையின்மீது, திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியின் சார்பிலே, என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு புதிதாக உருவாகியிருக்கிற இந்த அரசு, தமிழ் நாட்டிலே தொழில் வளம் பெருக வேண்டும் ; அதே நேரத்தில், தொழிலாளர்களும் காப்பாற்றப் பட வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு, இந்த ஓராண்டு காலத்தில், தொழிலாளர்களுடைய நலன் பேணுவதற்காக பல்வேறு நல்ல ஆக்கபூர்வமான திட்டங்களைச் செயலாற்றி வருகிறது. அதே போல, தொழிற்சாலைகளை புதிதாக உருவாக்கிட, தொழில் வளத்தைப் பெருக்கிட, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாக கவனம் செலுத்தி, தமிழ் நாட்டிலே நல்லபல தொழிற்சாலைகள் உருவாக வேண்டுமென்ற முனைப்பான எண்ணத்தோடு, செயல்படுவதை நம்மால் பார்க்க முடிகிறது. தொழிலாளர்களின் நலன் பேணப்பட வேண்டுமென்று சொல்லப்படுகிறபோது, இன்றைக்கு பலர் நோட்டீஸ் எல்லாம் அச்சிட்டு வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். '' தமிழக முதலமைச்சர் அவர்களே, தொழிலாளர் நலனைக் காப்பாற்றுங்கள் '' என்றெல்லாம். அப்படி அறிக்கைகள், துண்டறிக்கைகள் தேவையே இல்லை. இன்றைக்கு, சரியாக 40 ஆண்டுகளுக்கு முன்னால் அந்த சூழ்நிலையில் நங்கவரத்திலே விவசாயக் கூலிகள் பாதிக்கப்பட்ட நேரத்தில், அவர்களின் வாழ்க்கைக் கண்ணீரைத் துடைத்திட, நங்கவரத்தில் விவசாயிகளையெல்லாம் ஒன்று திரட்டி, போராட்டம் நடத்தி, அவர்களுடைய உரிமையைப் பெற்றுத்தந்தவர்தான், இன்றைக்கு முதலமைச்சர் பொறுப்பிலே வீற்றிருக்கிற டாக்டர் கலைஞர் அவர்கள். அதேபோல், திருச்சியிலே பீடித் தொழிலாளர்களின் பெரும் பிரச்சினை உருவான நேரத்திலே, பல ஆண்டு காலத்திற்கு முன்னால், அந்தத் தொழிலாளர்களை ஒன்று திரட்டி, அவர்களின் கூலி உயர்வுக்காக போராடி, அதிலே மாபெரும் வெற்றி கண்டு, அவர்களின் கண்ணீரைத் துடைத்தவர்தான் இன்றைக்கு நமக்கு





முதலமைச்சராகக் கிடைத்திருக்கின்ற டாக்டர் கலைஞர் அவர்கள். ஆக, அவருடைய ஆட்சியில், தொழிலாளர்களின் பிரச்சினைகளை உணர்ந்த ஒருவர் நமக்கு கிடைத்திருக்கின்ற இந்த ஆட்சியில், தொழிலாளர்களுடைய பல்வேறு திட்டங்கள் நிச்சயமாக செயல்படும். அவர்களுடைய கண்ணீரெல்லாம் துடைக்கப்படுமென்ற நம்பிக்கை இன்றைக்கு அனைவருக்கும் ஏற்பட்டிருக்கிறது. நான் இதைச் சொல்லுகிறபோது, என்னுடைய கவனமெல்லாம், என்னுடைய தொகுதியை நோக்கித்தான் முதலிலே போகிறது. நம்முடைய அமைச்சர் அவர்கள், எப்படிப்பட்ட முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியும். சிங்கநல்லூர் தொகுதி என்று சொன்னாலே கோவை மாவட்டம் என்று சொன்னாலே, ஏராளமான பஞ்சாலை தொழிலாளர்களைக் கொண்ட ஒரு இடம். அங்கே தடுக்கி விழுந்தால், நீங்கள் ஒரு பஞ்சாலைத் தொழிலாளி மீதுதான் விழ வேண்டும். அல்லது, தடுக்கி விழுந்தால், நீங்கள் ஒரு என்ஜினியரிங் பவுண்டரியிலே பணியாற்றுகின்ற ஒரு தொழிலாளிமீதுதான் விழ வேண்டும். அப்படிப்பட்ட தொழிலாளர்கள் அதிகமாக இருக்கக்கூடிய அந்தத் தொகுதியிலே இன்றைக்கு நிலைமை மிகவும் மோசமானது. கண்ணீரும், கம்பலையுமாக பல்லாண்டுகளாக தொழிலாளர்கள் வாடிக் கொண்டிருக்கிறார்கள். என்ன காரணம் என்றால், 5 ஆண்டுகளாக, 7 ஆண்டுகளாக, பல பஞ்சாலைகள் மூடப்பட்டு, அந்த பஞ்சாலைகள் என்றைக்குத் திறக்கப்படும், விடிவுகாலம் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு அந்தத் தொழிலாளர்கள் அங்கே காத்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள், மிக நல்ல அறிவிப்பினை அன்றைக்கு செய்தார்கள். மூடப்பட்ட பஞ்சாலைகளிலே, 6 பஞ்சாலைகளை தமிழக அரசே ஏற்று நடத்தும் ; நிர்வாகத்தை ஏற்று நடத்தும் என்ற அந்த அறிவிப்பினைச் செய்தார்கள். ஆனால், மத்திய அரசிலே இருந்து அதற்காக நமக்கு வரவேண்டிய தாக்கீது, உத்தரவு வந்து சேராத காரணத்தினால், இதற்கு முன்னால் இருந்த மத்திய அரசாங்கம் காலதாமதம் செய்த காரணத்தினால், அது பி.ஐ.எஃப்.ஆர்–க்கெல்லாம் அனுப்பிய காரணத்தினால், இன்னும் அந்த தாக்கீது தமிழக அரசுக்கு வந்து சேராத நிலையில் ஆயிரக்கணக்கான பஞ்சாலைத் தொழிலாளர்கள், பல்லாண்டுகாலம் அங்கே பஞ்சாலைகள் மூடப்பட்ட காரணத்தினாலே, பாதிக்கப்பட்டவர்கள், இந்த அறிவிப்பு வந்ததற்குப் பின்னர் இன்னும் விடிவுகாலம் கிடைக்காதா என்று ஏக்கத்தோடு துடித்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர், பெருமதிப்பிற்குரிய நேரு அவர்கள், நேரடியாக இதிலே மேலும் கவனம் செலுத்தி—அவர் பட்டுக்கொண்டிருக்கிற பாடு, முழு முயற்சியாக எடுத்துக் கொண்டிருக்கிற சூழ்நிலை இவையெல்லாம் எனக்குத் தெரியும் — ஆனாலும், நம்முடைய அமைச்சர் நேரு அவர்கள் இன்னும் அதிலே கவனம் செலுத்தி, தேவைப்பட்டால் டெல்லிக்கே சென்று, அந்த உத்தரவைப் பெற்றுத் தர

[திரு. இரா. மோகன்] [1990 ஏப்ரல் 12

வேண்டும்; உடனடியாக மூடப்பட்ட அந்தப் பஞ்சாலைகள் திறக்கப்படுவதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

10-55 மணி

அடுத்து, இங்கே மிக முக்கியமாக நான் குறிப்பிட வேண்டிய ஒன்று இரண்டு பிரச்சினைகள், தொழிலாளர் துறையும், தொழிற்சாலைகள் ஆய்வாளர் துறையும்—பேக்டரிஸ் இன்ஸ்பெக்டர்களை—சில ஆண்டுகளுக்கு முன்பு வரை தொழிலாளர் துறை ஆணையர் நேரடி நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்தன. ஆனால் கடந்த ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னால் அதாவது ஒரு ஆண்டு காலத்திற்கு என்று தொழிற்சாலைகள் ஆணையர் துறை தனி நிர்வாகத்தின் கீழ் இயக்குவது என முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் அந்த அடிப்படையில் தொழிற்சாலை ஆய்வாளர் துறை கடந்த காலத்தில் இருந்த செயல்பாடுகள் கூட இல்லாமல் பல்வேறு குறைபாடுகள் சொல்லத்தக்க வகையில் இயங்கி அந்தத் துறையில் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான பயனும் இல்லையோ என எண்ணத் தோன்றுகிறது. இன்றைக்கு அங்கே ஏற்பட்டு இருக்கக்கூடிய நிலைமை. இந்த நிலைமையில் ஏற்கெனவே இருந்ததைப் போல தொழிலாளர் துறை ஆணையர் நிர்வாக தலைமையின் கீழ் தொழிற்சாலை ஆய்வாளர் துறையும் இயங்குமானால் சமரச அதிகாரியான தொழிலாளர் துறை ஆணையாளர் சுமுகமான முடிவுகள் காண, தொழிற்சாலைச் சட்டங்கள் செயல்படுத்தும் பொறுப்புகள் உள்ள துறை தொழிலாளர் ஆய்வாளர் துறை உபயோகமாக இருக்கும். எனவே, தொழிலாளர் துறை ஆணையாளர் நிர்வாகத் தலைமையின் கீழ் மீண்டும் தொழிற்சாலைகள் ஆய்வாளர் துறை இயங்க வைக்க அரசு முன்வர வேண்டும் என்ற கோரிக்கை இன்றைக்கு எழுப்பப்பட்டுள்ளது. இதிலே பேக்டரிஸ் இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்களே அவர்கள் தரப்பிலே இருந்து இப்படி இது இயங்கக்கூடாது, தனியாக தான் இயங்கவேண்டும் என்ற கருத்து சொல்லப்படுகிறது. ஆனால் பொதுவாக தொழிலாளர் மத்தியில் இருக்கக்கூடிய இன்றைய பிரச்சினை இது மீண்டும் பழைய நிலைமைக்கு வந்தால் தான் அந்த தொழிலாளர்களுக்கு ஒரு பெரிய நன்மை ஏற்படுத்த முடியும் என்ற ஒரு கோரிக்கை தான் எழுந்துள்ளது. ஆகவே பழைய முறைப்படி தொழிலாளர்கள் ஆணையாளர் நிர்வாகத்தின் கீழ் இந்த பேக்டரி இன்ஸ்பெக்டர்கள் வருகின்ற வகையில் சட்டத் திருத்தத்தை அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.



1990 ஏப்ரல் 12] [திரு. இரா. மோகன்]

அதேபோல் தொழிலாளர் துறையில் நீண்டகாலமாக பல உதவி தொழிலாளர் துணை ஆணையாளர் 'அசிஸ்டென்ட் லேபர் கமிஷனர்' பதவிகள் காலியாக இருப்பதால் பல்வேறு தொழில் தகராறுகள் தீர்வு காணாமல் தேங்குவதும், குறைந்த பட்ச ஊதியச் சட்டங்கள், தொழிலாளர் நலச் சட்டங்கள் சரியாக செயல்படுத்த முடியாத நிலைமையும் இருக்கிறது என்ற ஒரு நிலைமை எழுந்துள்ளது. ஆகவே, நீண்டகாலமாக இந்த அசிஸ்டென்ட் லேபர் கமிஷனர் பதவிகள் வேகன்சி இருந்தும் நிரப்புவதில் என்ன தாமதம். அந்த தாமதத்தை தவிர்க்கவேண்டும். ஏற்கனவே பல்வேறு தொழிலாளர்கள் பிரச்சினைகள் தேங்கிக் கிடக்கின்றன. உடனடியாக தீர்க்கப்படுவது இல்லை என்ற ஒரு கோரிக்கை இருக்கின்றபோது. ஒரு நிலைமை இருக்கின்றபோது காலியாக இருக்கக்கூடிய அந்த அசிஸ்டென்ட் லேபர் கமிஷனர் பதவிகளை எல்லாம் உடனடியாக நிரப்பி மிக வேகமாக தொழிலாளர்களுக்கு நன்மை கிடைக்கின்ற வகையில் அரசு தங்களுடைய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

11-00 மணி

அடுத்து, இங்கே சொல்ல விரும்புவது, பால்வள நிறுவனத்தில் கடந்த ஆட்சிக் காலத்திலே உங்களுக்கு எல்லாம் தெரியும் அதை பற்றி யாரையும் நான் குற்றம் சொல்ல விரும்பவில்லை. அவைகள் நடைபெற்று விட்ட சம்பவங்கள். ஏறக்குறைய 1,500 தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டு வீதியில் நிறுத்தப்பட்டார்கள், பல ஆண்டுகாலமாக வீதியில் நிறுத்தப்பட்ட 1,500 தொழிலாளர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்து இன்றைக்கு அந்த 1,500 தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்கப்பட்டு இருப்பதால் மிக மகிழ்ச்சியோடு, நன்றியோடு அந்த குடும்பங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. நேரு அவர்களையும் வாழ்த்திக் கொண்டு இருப்பதை நம்மால் பார்க்க முடிகிறது. இதிலே கடந்த ஆண்டு மற்ற தொழிலாளர்கள் அனைவருக்கும் போனஸ் வழங்கியபோது போனஸ் பெறுவதற்கு தகுதி இல்லாத நிலைமையில் இருந்த இந்த பால்வள நிறுவனத் தொழிலாளர்களுக்கு 250 ரூபாய் முன் பணமாக நம்முடைய அரசு கொடுத்தது. ஆனால் அந்த முன் பணமாக கொடுத்த 250 ரூபாயை போனஸ் அவர்களுக்கு அந்த எலிஜிபிலிட்டி இல்லை என்ற காரணத்தால் அரசு கொடுத்த அந்த 250 ரூபாயை இன்றைக்கு அந்த பால்வள நிறுவனத்தில் இருக்கக்கூடிய அதிகாரிகள் அரசை கலந்து ஆலோசிக்காமல் அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள் என்ன செய்கிறார்கள் என்றால் மாதம் 50 ரூபாய் வீதம் அந்த 250 ரூபாயை ஒவ்வொரு மாதத்திலும் நாங்கள் பிடிக்கப் போகிறோம். அந்த 250 ரூபாயை

[திரு. இரா. மோகன்] [1990 ஏப்ரல் 12

நாங்கள் உங்களிடமிருந்து ரெக்கவரி செய்யப் போகிறோம்;
மாதம் 50, 50 ரூபாய் நீங்கள் திருப்பிச் செலுத்தவேண்டு
மென்று ஒரு நிலையை அங்கே உருவாக்கியிருக்கின்றார்கள்.
உடனடியாக நம்முடைய அமைச்சர் அவர்கள்—அரசாங்கம்
அறிவித்து, 250 ரூபாய் எலிஜிபிலிட்டி இருக்கிறது; உங்களுக்
குத் தருகிறோம் என்று சொன்னதை ஏன் அதைத் திருப்பிப்
பிடிக்கிறீர்கள்—அதை தயவுசெய்து, அந்த 250 ரூபாய்க்கு
பிடித்தம் இல்லாமல் அந்தப் பால்வளத் துறையிலே பணி
யாற்றுகின்ற பணியாளர்கள் அனைவருக்கும் கிடைக்க, தக்க
அளவில் கருணை உள்ளத்தோடு நம்முடைய அரசு நடவடிக்கை
களை மேற்கொள்ளவேண்டுமென்று நான் பணிவன்போடு
கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, பால்வள நிறுவனத்திலே, ஈரோட்டிலே
தற்காலிகத் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்தியதைப்போல
ஏனைய பகுதிகளிலேயும் பல ஆண்டுக்காலமாக வேலை
செய்கின்ற கேசுவல் லேபரர்களாக பணியாற்றிக் கொண்டிருக்கக்
கூடிய தொழிலாளர்களை நிரந்தரப்படுத்தி, அவர்களுக்கு
மறுவாழ்வு அளிக்கவேண்டும். ஏனென்றால், தமிழ்நாடு
முழுவதும் நம்முடைய அரசாங்கத்தினுடைய கொள்கை
ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். பெரியார் மாவட்டத்திலே
பணியாற்றிய அந்தத் தொழிலாளர்களையெல்லாம் பர்மெ
னென்ட் ஓர்க்கர்களாக இப்போது பண்ணியாகிவிட்டது.
அப்போது மற்ற மாவட்டங்களிலே பணியாற்றுகிற அதே
பால்வள நிறுவனத்திலே வேலைசெய்கின்ற கேசுவல் லேபரர்ஸ்
என்ன சொல்கிறார்கள் என்றால், ஈரோட்டிலே மட்டும்
பண்ணியிருக்கிறார்கள், எங்களையும் பர்மனென்ட் ஓர்க்கராக
மாற்றக் கூடாதா நிரந்தரத் தொழிலாளர்களாக மாற்றக்
கூடாதா என்ற நியாயமான கோரிக்கையை எழுப்பியுள்ளார்கள்.
ஆகவே, தமிழ்நாடு முழுவதும் நம்முடைய பாலிசி ஒரேமாதிரி
யாக இருக்கவேண்டும். ஒரு டிஸ்ட்ரிக்ட்லே ஒரு மாதிரி, மற்
றொரு டிஸ்ட்ரிக்ட்லே இன்னொரு மாதிரி அப்படியென்கிற
மாதிரி அதைப் பிரிக்கக்கூடாது. ஆகவே, அதிலே மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி மற்ற மாநிலங்களிலே
இருக்கக்கூடிய இந்தக் கேசுவல் லேபரர்ஸுக்கெல்லாம்
நல்வாழ்வு தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு அச்சகங்களிலே பணியாற்றக்கூடிய தொழி
லாளர்களுக்கு அரசு ஊழியர்களுக்குச் சமமான ஊதியம்
கொடுக்கப்பட்டு வந்துள்ளது. அந்த முறையில் ஐந்தாவது
ஊதியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மத்திய
அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியத்தை வழங்கிட
உடனடியாக ஆணையிட வேண்டுமென்று நான் நம்முடைய
மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.
அச்சகத் தொழிலாளர்கள், பொதுத் தேர்தல் நேரத்திலே
கூடுதலாக பணிபுரிந்தமைக்கு ஏற்கனவே கொடுத்து வந்த



1990 ஏப்ரல் 12] [திரு. இரா. மோகன்]

அந்த இன்சென்டிவ்வை, ஊக்கத் தொகையை அதிகப்படுத்தித்
தர வேண்டுமென்ற கோரிக்கையை தொழிற்சங்க முன்னேற்ற
பேரவை அரசுக்குக் கொடுத்திருக்கிறது. மற்றத் தொழிற்
சங்கங்களும் அந்தக் கோரிக்கையைக் கொடுத்து இருக்கின்றன,
அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து,
அந்தத் தொழிலாளர்களுக்கு ஊக்கத்தொகையை அதிகப்
படுத்தித் தருவதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று
மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நான் மிக முக்கியமாக அமைச்சர் அவர்களிடத்
திலே சுட்டிக்காட்டக்கூடிய பிரச்சினை, பஞ்சாலைகளிலே
ஏற்பட்டிருக்கக்கூடிய ஒரு புதிய சூழ்நிலை. பல ஆண்டுகாலமாக
இல்லாமல் தமிழ்நாட்டிலே இருக்கின்ற நூற்றுக்கணக்கான
பஞ்சாலைகளிலே இப்படி ஒரு புதிய முறை தற்போது இருக்
கிறது. அதை வளர விட்டீர்கள் என்று சொன்னால் எல்லா
பக்கமும் இதே நிலைமை பரவும். ஏனென்றால், கடந்த 15
ஆண்டுகளாக பஞ்சாலைகளின் எந்திரங்களினுடைய எண்ணிக்
கைக்கு ஏற்ப, கணக்கெடுத்து, அதற்கேற்ப நிரந்தரத் தொழி
லாளர்களை வைத்துக்கொள்வதில்லை. மேலும் மேலும்
அதை அப்படியே குறைத்துவிட்டார்கள். இரண்டாவது,
நாளதோறும் நூற்றுக்கணக்கான தினக்கூலி தொழிலாளர்களை
வைத்துக்கொண்டு, மிகக் குறைந்த கூலி கொடுத்து, அந்தத்
தினக்கூலி தொழிலாளர்களை முழுவதுமாகப் பயன்படுத்திக்
கொள்வது. பர்மனென்ட்டாக வைத்துக்கொள்வதில்லை.
எல்லா ஆலைகளிலும் இந்த மாதிரி தினக்கூலிகளாக
உள்ளவர்களை, நிரந்தரத் தொழிலாளர்களாக மாற்றவேண்டும்.
ஆலைகளிலே வேலை இருக்கிறது. வேலை செய்வதற்கு தொழி
லாளர்களும் வருகிறார்கள். தினசரி அவர்களுக்கு வேலை
இருக்கிறது. பர்மனென்ட் ஓர்க்கர்ஸாக வைத்துக்கொண்டால்
அவர்களுக்கு அதிகப்படியான சம்பளம் தர வேண்டும்:
அவர்களுக்கு கிராஜுவட்டி, போனஸ் மற்ற எல்லாம் தர
வேண்டும் என்ற காரணத்திற்காக ஒவ்வொரு பஞ்சாலையிலும்
இப்போது புதிய முறையைக் கையாள ஆரம்பித்து இருக்
கிறார்கள். 200 டெம்பரரி ஓர்க்கர்ஸ், 300 டெம்பரரி
ஓர்க்கர்ஸ், 400 டெம்பரரி ஓர்க்கர்ஸ் என்று வைத்துக்கொண்டு
ஒரு ஆலையை ஓட்டுவது. நீங்கள் பஞ்சாலைகளுக்கு முன்னாலே
பார்த்தீர்களானால், முன்பெல்லாம் நீங்கள் அப்படிப் பார்க்க
முடியாது. அவனவன் கார்டு வைத்திருப்பான். அதைக்கொண்டு
போனவுடன் உள்ளே வேலைக்குப் போய் விடுவான். இப்
போது அப்படி இல்லை. ஆனால் பர்மனென்ட் ஓர்க்கர்ஸ்
எல்லாம் போனவுடன், வெளியிலே ஒரு 400, 500, ஆயிரம்
பேர் நின்று கொண்டிருப்பார்கள். யாரை உள்ளே கூப்பிடு
வார்கள் என்று தெரியாது. 300 பேர் 400 பேரை கூப்பிட்டு
நீங்கள் இன்றைக்கு வேலை செய்யுங்கள் என்று சொல்வார்கள்.
நாளைக்கு மறுபடியும் வெளியிலே வந்து நின்றவுடன் யாரை

[திரு. இரா. மோகன்] [1990 ஏப்ரல் 12

யெல்லாம் கூப்பிடுகிறார்களோ அவர்கள் வேலைக்குப் போக
லாம். யாரையெல்லாம் கூப்பிடவில்லையோ அவர்கள் வீட்
டிற்குப் போகவேண்டும். வேலை தெரிந்த, எல்லாவேலையும்
தெரிந்த பஞ்சாலைத் தொழிலாளர்களை இதைப்போலப்
பயன்படுத்துவதை நீங்கள் அனுமதிப்பீர்களேயானால் வருங்
காலத்தில் இது எல்லா பஞ்சாலைகளிலும் பரவி, ஒரு மிக
மோசமான அணுகுமுறையை, தொழிலாளர் பிரச்சினையை
தோற்றுவிக்கும் என்பதை நான் மாண்புமிகு அமைச்சர்
அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரவிரும்புகிறேன்.

11-05 மணி

அதேபோல் பஞ்சாலைகளைப் பற்றி மற்றொன்றை
நான் சொல்ல விரும்புகிறேன். கான்ட்ராக்ட் லேபர் சிஸ்டத்தை
ஆரம்பித்திருக்கிறார்கள். புதிதாக ஆரம்பித்து இருக்
கிறார்கள். முன்பெல்லாம் கோவை மாவட்டத்திலே உள்ள
பஞ்சாலைகளில் எல்லாம் எப்படி என்றால் அந்தந்த பெர்மனன்ட்
ஓர்க்கர்ஸ் அந்தந்த வேலைகளைச் செய்வார்கள். இப்போது
சில செக்ஷன்ஸ் என்ன பண்ணுகின்றன என்றால் கான்ட்ராக்ட்
விட்டுவிடுகின்றன. இது எல்லாம் முதலாளிகளின் சில அணுகு
முறைகள். இத்தனை நாளும் இல்லாத புதிய முறைகள் இவை.
இந்த வேலைகளுக்கெல்லாம் கான்ட்ராக்ட் விடப்படுகிறது.
தொழில் தகராறு வருகிற போது, தொழிற்சங்கத் தலை
வர்கள் போய்க் கேட்டால் எங்களுக்கும் இதற்கும் சம்பந்தம்
இல்லை, அவர்கள் எல்லாம் கான்ட்ராக்ட்காரர்கள், கான்ட்
ராக்ட் விடப்படுகிறது, அந்த கான்ட்ராக்டரிடம் போய்ப்
பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். யார்
அவர்களை வேலைக்கு அனுப்புகிறார்கள் என்பது எங்களுக்குத்
தெரியாது என்கிறார்கள். இவ்வாறு செய்வது முற்றிலும்
தொழிலாளர்களுக்கு விரோதமான நிலைமையை உருவாக்குவ
தாகும். அது கண்டிக்கக்கூடியது, அதை வளரவிடக் கூடாது
என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.
(மணியடிக்கப்பெற்றது).

அடுத்து நான் சொல்ல விரும்புவது, தொழிலாளர்களுக்கு
சட்டப்படியாகவும், நீதிமன்றத் தீர்ப்பின்படியும் கிடைக்கக்
கூடிய சலுகைகளைப் பாதிக்கக்கூடிய வகையில் 12(3)
செட்டில்மென்ட் போடும் அதிகாரிகள் மீது நடவடிக்கை
எடுக்கவேண்டும். இது ரொம்ப முக்கியம். எப்படி என்றால்,
தொழிலாளர்களுக்கு என்று சில உரிமைகள் இருக்கின்றன.
சட்டப் பாதுகாப்பு இருக்கிறது. அந்த சட்டப்பாதுகாப்புக்கு
உட்பட்டுத்தான் 12(3) செட்டில்மென்ட் போடவேண்டுமே தவிர,
சட்டத்திற்குப் புறம்பான வகையில் அந்தத் தொழிலாளர்
களுக்குப் பாதகமான முறையில் 12 (3) செட்டில்மென்ட்



1990 ஏப்ரல் 12] [திரு. இரா. மோகன்]

போடக்கூடாது. ஆனால் இப்போது அந்தச் சட்டத்திற்கு
முற்றிலும் புறம்பாக அந்த 12 (3) செட்டில்மென்ட் போடு
கிறார்கள். அதற்கென்று அதிகாரிகள் இருக்கிறார்கள்.
நிராதரவான தொழிற்சங்க வாதிகளை அழைத்து, தொழி
லாளர்களை அழைத்துப் பேசி இந்த 'டெர்ம்ஸ் அன்ட் கண்டிஷ
னுக்கு' ஒத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்கிறார்கள்.
எதை நீதிமன்றம் வேண்டாம் என்று சொல்கிறதோ அதைச்
செய்கிறார்கள். இவ்வாறு ஒப்பந்தம் ஆகிறது என்று சொன்
னால் அதற்குக் காரணமாக இருக்கக்கூடிய அதிகாரிகளை நிச்சய
மாக இந்த அரசு கண்டிக்க வேண்டும். நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.
அதற்காக ஒரு ஆர்டர் இருக்கிறது. The Secretary to Government
has issued an order. திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற்சங்கம்
எல்.பி.எப் பிரச்சினையில் இந்த மாதிரி சட்டத்திற்குப்
புறம்பான முறையில் 12 (3) அக்ரிமென்ட் போடக்
கூடாது என்று அதிகாரிகளுக்கு கவர்ன்மென்ட் செக்க
ரட்டரி ஆர்டர் போட்டிருக்கிறார். ஆனால் இந்த ஆணை
யைப் பல அதிகாரிகள் இன்றைக்கு காற்றிலே பறக்கவிட்டுக்
கொண்டிருக்கிறார்கள். இதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் கவனிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்
கிறேன். அடுத்தது ரொம்ப முக்கியமான விஷயம். தொழிற்
சாலைகளில் கேன்டீன்கள் இருக்கின்றன. அந்த கேன்டீன்
களின் நிர்வாகத்தை தொழிலாளர்களின் பிரதிநிதிகளை
வைத்து நடத்தவேண்டும் என்பது ஒரு கோரிக்கை. இரகசிய
வாக்கெடுப்பு மூலமாக அவர்களைத் தேர்ந்தெடுத்து அவ்வாறு
கேன்டீன் நடத்துகிற உரிமைகள் அந்தத் தொழிலாளர்
களுக்குத் தரப்படவேண்டும் என்று இருக்கிறது. ஆனால் அதை
பலபேர் செய்வதில்லை. ஒரே ஒரு எடுத்துக்காட்டை மாண்பு
மிகு அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரையிலே 'மதுரா கோட்ஸ்' என்று ஒரு ஆலை இருக்
கிறது. அங்கே 20 ஆண்டுகாலமாக தேர்தல் நடத்தப்பட
வில்லை. ஏன் நடத்தவில்லை. அந்த மதுரா கோட்ஸ் கம்பெனி
சாதாரண கம்பெனியா? விவரம் தெரியாத கம்பெனியா?
அல்லது சட்ட நுணுக்கங்கள் தெரியாத கம்பெனியா? இரகசிய
வாக்கெடுப்பின் மூலம் தேர்தல் நடத்தினால் அவர்கள் நினைக்
கிற மாதிரி கட்சிக்காரர்கள் அங்கே வரமாட்டார்கள். ஆகவே
தான் 20 வருடமாகத் தேர்தல் நடத்தாமல் அந்த கேன்டீன்
நிர்வாகம் இயங்கிக்கொண்டிருக்கிறது. இவைகளை எல்லாம்
தடுக்க அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டு
மென்று நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.
அடுத்து, இன்றைக்குத் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மிகப்
பெரிய தொழிற்சங்கங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்
தொழிற்சங்கமும் ஒன்று. கம்யூனிஸ்ட் தொழிற்சங்கம்,

[திரு. இரா. மோகன்] [1990 ஏப்ரல் 12

ஐ.என்.டி.யு.சி. தொழிற்சங்கம் என்று இன்னும் பல்வேறு பெரிய பெரிய தொழிற்சங்கங்கள் எல்லாம் இருக்கின்றன. அதேபோல் திராவிட முன்னேற்றக்கழகத் தொழிற்சங்கம் இன்றைக்குத் தமிழ்நாட்டில் இருக்கிற ஒரு பெரிய தொழிலாளர் அமைப்பாகும். தொழிலாளர்களின் சார்பில் பல்வேறு கோரிக்கைகள் அரசுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு இருக்கிறது. அவற்றிலே ஒன்றிரண்டை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதாவது பணிப்பாதுகாப்பு.—ஜாப் செக்யூரிட்டி, தேவையின் அடிப்படையில் குறைந்தபட்ச ஊதியம், அதாவது நீட் பேஸ்ட் மினிமம் வேஜஸ் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். பல்வேறு சங்கங்கள் இதிலே முனைப்பாக இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகச் சங்கம் இதிலே மிகத் தீவிரமாக வலியுறுத்தி வருகிறது கேசுவல் தொழிலாளர்கள் ஆக காண்ட்ராக்ட் தொழிலாளர்கள் ஆக பல ஆண்டுகாலமாகப் பணியாற்றிக் கொண்டு இருக்கிற அந்தத் தொழிலாளர்களுக்கெல்லாம் பணிப் பாதுகாப்பு வழங்கவேண்டும். பல ஆண்டுகாலமாக இருக்கிறார்கள். எந்தவிதமான ஜாப் செக்யூரிட்டியும் அவர்களுக்குத் தாப்பட வில்லை. கேட்டால், நாங்கள் 15 வருஷம் கேசுவல் லேபராக இருக்கிறோம், 20 வருஷம் கேசுவல் லேபராக இருக்கிறோம் [illegible] கிறார்கள். ஆனாலும் இன்றுவரை அவர்களுக்குப் பணிப்பா[illegible] காப்பு இல்லை. இவ்வளவு பெரிய தொழிலாளர் நலச் சட்டங் கள் இருக்கும்போது, இந்தத் தொழிலாளர்களையும் பாது காக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஈக்வல் பே பார் ஈக்வல் ஒர்க் என்ற அடிப்படையில், சம வேலைக்கு சம ஊதியம் என்று இருக்கிற நிலையில் ஒரே வேலையை செய்கின்ற நிரந்தர தொழிலாளர்களுக்கும் தற்காலிக தொழிலாளர்களுக்கும் ஊதியத்தில் வேறுபாடு இல்லாமல் வழங்கவேண்டும்.

11–10 மணி

அடுத்து, தொழிற்சங்கங்கள் என்பது ஜனநாயக உரிமைக்கு உட்பட்டது. அதில் முதலாளிகள் தலையிடக் கூடாது என்று வற்புறுத்த வேண்டும். எந்தத் தொழிற்சங்கம் தங்களுக்கு வேண்டும் என்பதை தொழிலாளர்களின் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தீர்மானிக்க வேண்டும். ஒரு தொழில் அமைப்புக்கு எந்தத் தொழிற்சங்கம் வேண்டும் என்கிற முடிவை தொழிலாளர்கள்தான் முடிவெடுக்க வேண்டும். ஆகவே, இரகசிய வாக்கெடுப்பு மூலம் முடிவெடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஹோசூரில் டி.வி.எஸ். சுசுகி தொழிற்சாலையில் 1,570 தொழிலாளர்கள் வேலை[illegible]



1990 ஏப்ரல் 12] [திரு. இரா. மோகன்]

செய்கிறார்கள். அதில் 1,281 தொழிலாளர்கள் தி.மு.க வினுடைய தொழிற்சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்கிறோம் என்று சொல்லி, உறுப்பினர் படிவத்திலே, செக் அப் பார்ம்ஸ்-ல் கையெழுத்து இட்டு, தொழிலாளர் ஆணையாளரிடத்தில் வழங்கியிருக்கிறார்கள். ஆனால் அதை அங்கீகரிக்காமல், அதை ஏற்றுக்கொள்ளாமல், அங்கே மைனாரிட்டியாக இருக்கிற ஒரு சங்கம்தான், நிர்வாகத்திற்கு ஆதரவான சங்கம் தான் அங்கே இருக்க வேண்டுமென்று அந்த நிர்வாகம் தவறான ஒரு போக்கைக் கடைப்பிடிக்கிறது. அதனால்தான் அங்கே வேலைநிறுத்தம் ஏற்பட்டிருக்கிறது. (மணியடிக்கப் பெற்றது).

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கின்ற அந்த சங்கம் மைனாரிட்டி சங்கம் அல்ல. சென்ற ஆண்டு மறுபடி கோர்ட் உத்தரவோடு நடைபெற்ற வாக்கெடுப்பின்போது மெஜாரிட்டியாக தேர்ந்தெடுக்கப்பட்டது அந்த சங்கம் மெஜாரிட்டியானவர்கள் கையெழுத்திட்டிருக்கிறார்கள். அதற்கு எதிராக சில தீவிரவாதிகள், அந்த நிர்வாகத்தை எப்படியும் செயல்பட விடக் கூடாது என்று வன்முறையில் ஈடுபட்ட காரணத்தால் ஹோசூரில் இருக்கிற டி.வி.எஸ். சுசுகி தொழிற்சாலையை நிர்வாகம் கதவடைப்பு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓசூரில் இருக்கிற டி.வி.எஸ்., சுசுகி தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் மட்டுமல்ல, டி.வி.எஸ். சாம்ராஜ்யத்திலேயே இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தொழிற்சங்கம் எது என்று முடிவெடுக்கிற உரிமையை வழங்க முடியாது என்கிற பிடிவாதம் அவர்களுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மோகன் அவர்கள் தெரிவித்த கருத்துக்கு இங்கே நான் பதில் சொல்ல இருக்கிறேன். அதற்கிடையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் அங்கே ஒரு தேர்தல் நடைபெற்றதாகவும், அங்கே இருப்பது மெஜாரிட்டி தொழிற்சங்கம் தான் என்றும் சொல்லியிருக்கிறார்கள். பேரவையிலே ஒருவர் விட்டு ஒருவர் என்று விவாதம் நடைபெறவில்லை. விவாதம் முடிந்தவுடன், இறுதியாக, முழுமையாக நான் பதில் தெரிவிக்க இருக்கிறேன். ஒவ்வொரு நேரமும் குறுக்கிட்டு பேசுவதென்றால் பேசுகிறவருடைய பேச்சு தடைபடும் என்கிற காரணத்தால் தான் என்னுடைய கருத்தைச் சொல்லாமல் இருக்கிறேன்.

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இன்ன பெயரில், இன்னொரு சங்கம்
அங்கே இருக்கிறது என்றுகூட நான் சொல்லவில்லை. சொல்ல
வேண்டாமென்றுதான் சொல்லவில்லை. ஏதோ தவறான
தகவலை இந்த சபைக்கு தருவதாக மாண்புமிகு உறுப்பினர்
திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் கருதக் கூடாது. மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். நான் சொல்வதை
குறித்து, எழுதி வைத்துக் கொள்ளுங்கள். அங்கு இருக்கிற
1,570 தொழிலாளர்களில், 1,281 தொழிலாளிகள் இந்த
முன்னேற்றச் சங்கத்தில் உறுப்பினர்களாக ஆகி, சந்தா
படிவத்திலே, செக் ஆப் பாமில் கையெழுத்துப் போட்டு,
யாரிடத்திலோ கொடுக்கவில்லை, தொழிலாளர் நல ஆணை
யாளரிடத்தில் வழங்கியிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரம் ஆயிற்று,
சீக்கிரம் முடியுங்கள்.

11–15 மணி

திரு. இரா. மோகன் : ஒரே ஒரு நிமிடம். மிக முக்கியமான
பிரச்சினை, தொழிலாளர்கள் பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எனக்கு அதை
விட முக்கியம், நேரத்தைப் பார்க்க வேண்டும்.

திரு. இரா. மோகன் : அவர்கள் செக்-அஃப் பார்ம்மில்
கையெழுத்துப் போட்டு கொடுத்திருக்கும்போது, அதைத்
தெரிந்து கொள்வதில் ஒன்றும் அதிசயம் இருக்காது. இங்கே
சொன்னார்கள், எங்களுடையதுதான் மெஜாரிட்டி என்று.
அப்படி என்றால் தொழிலாளர் நல ஆணையாளரிடம் போய்
எப்படிக் கையெழுத்து போட்டுக் கொடுக்க முடியும் ? போலிக்
கையெழுத்து போட்டுக் கொடுக்க முடியுமா ? நிச்சயம் முடி
யாத காரியம் அவைகள் எல்லாம். ஆகவே நம்முடைய
மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராசன் அவர்கள் சொன்னது
போல இந்தச் சங்கம்தான் தொழிற்சங்கத்தை நடத்த
வேண்டும், இந்தக் "கட்சி சங்கம்தான் இருக்க வேண்டுமென்று
அவர்கள் டிக்டேட்" பண்ண விடக்கூடாது. அப்படி என்றால்
தொழிலாளர் நலனை எப்படி பாதுகாக்க முடியும் ? அந்தச்
சங்கம் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பான சங்கமாக
இராது. அப்படி உருவாக்கப்படுகிற சங்கம் அந்த முதலாளி
களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் சங்கமாக இருக்குமே
தவிர, அது தொழிலாளர்களைப் பாதுகாக்கும் சங்கமாக
இருக்காது. அதிலே மிகுந்த கவனத்தை அரசு கொள்ள
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உடனடியாக இதிலே
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
அங்கே கதவடைப்பு பண்ணியிருக்கிறார்கள். அந்தக்



விரோதமானது என்று டிக்ளேர் செய்து,
கதவடைப்பு சட்ட தொழிற்சாலையை ஓட்ட வேண்டு
உடனடியாக அந்தத் உத்தரவிட வேண்டும். பழி வாங்கிய
மென்று அரசாங்கம் பாதுகாப்பு தர வேண்டுமென்றும்
தொழிலாளர்களுக்கெல்லாம் புதிதாக 12 (3) ஒப்பந்தம் போடு
கேட்டுக் கொள்கிறேன். அங்கே மேற்கொள்ள
வதற்கான அந்த நடைமுறையை மூலமாக யாரை விரும்பு
வேண்டும். இரகசிய வாக்கெடுப்பு தேர்ந்தெடுக்க வேண்டும். ஐ.என்.
கிறார்களோ அவர்களைத் ஐ.என்.டி.யு.சியை தேர்ந்தெடுக்
டி.யு.சி.யை விரும்பினால் தி.மு.க.வை தேர்ந்
கட்டும், தி.மு.க.வை விரும்பினால் கட்சி, ஜனதா கட்சி
தெடுக்கட்டும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தேர்ந்தெடுக்கட்டும். அதற்கு
எதை விரும்பினாலும் அதைத் இந்தச் சங்கம்தான்
அனுமதி கொடுக்க வேண்டும். இருக்க வேண்டு
இருக்கவேண்டும், இந்தக் கட்சிதான் அனுமதிக்கக்கூடாது
மென்று சொல்ல, அந்த மூதலாளியை (மணி
என்று பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். மூடிக் கிடக்கிற
அடிக்கப்பெற்றது) கடைசியாக ஒன்றே ஒன்று. முடித்துக்கொள்கிறேன்.
பிரச்சினை. அதை மட்டும் சொல்லி

நம்முடைய அரசாங்கத்திற்குச் சொந்தமான, அரசு நிறு
வனமான புகளூர் காகித ஆலையிலே 840 தற்காலிகப் பணி
யாளர்களும், 906 நிரந்தரப் பணியாளர்களும் இருக்கிறார்கள்.
1-ம் தேதியிலிருந்து நேற்றைய தினம் இரவுவரை அங்கே
ஸ்டிரைக் என்று கேள்விப்பட்டேன். இப்போது செட்டில்
ஆகிவிட்டால் நான் பேசவில்லை. உட்கார்ந்து விடுகிறேன்.
பிரச்சினை முடிந்தது என்றால் நான் பேசவில்லை. இது மிக
முக்கியமான பிரச்சினை.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்களே
நேரடியாகத் தலையிட்டு பேசிக் கொண்டிருக்கிறார்கள்.
இன்றோ அல்லது நாளை காலையியோ அது முடிந்துவிடும்.

திரு. இரா. மோகன்: துணைத் தலைவர் அவர்களே,
மிகுந்த மகிழ்ச்சி தருகிற ஒரு அறிவிப்பினை நம்முடைய
அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்திருக்கிறார்கள். உண்மை
யிலேயே மகிழ்ச்சியான அறிவிப்பு அது.

அடுத்து பீடித் தொழிலாளர்களுக்கு ஆயிரம் வீடுகள்
கட்டித் தரப்படுமென்று திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள்.
அதுவும் '' பரிசீலிக்கப்படுகிறது '' என்று ஒரு வார்த்தை
இருக்கிறது. அதைத் தயவு செய்து மாற்றி, கண்டிப்பாக
அந்தப் பீடித் தொழிலாளர்களுக்கு 15,000 ரூபாயில்—5000
ரூபாய் நாம் மானியம் கொடுக்கிறோம், 10,000 ரூபாய் ஹட்
கோவில் தருகிறார்கள்—கட்டித் தரப்படுமென்று அரசு அறிவிக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. இரா. மோகன்] [1990 ஏப்ரல் 12

அடுத்து வேலை வாய்ப்பகங்கள் எல்லா பகுதிகளிலும் இருக்கின்றன. ஆனால் அந்த வேலை வாய்ப்பு அலுவலகங்களைப் பார்த்தாலே உள்ளே போக கஷ்டமாக இருக்கிறது. 2, 3 ரூம்களை வைத்துக்கொண்டு, ஆயிரக்கணக்கானோர் வெளியிலே நின்று கொண்டிருப்பார்கள். ஹைதர் அலி காலத்திலே வாடகைக்குப் பிடித்த கட்டிடங்கள் அவை. அங்கே பெயரைப் பதியப் போகிறவர்களுக்கு நம்பிக்கை வரும்படியான நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, அரசு அச்சகங்களிலே வேலை செய்பவர்கள் லெட் எல்லாம் எடுத்து வேலை செய்கிறார்கசுள். ஈயம் எல்லாம் அவர்கள் உடம்புக்குக் கெடுதல் என்று சொல்லி, அவர்களுக்கு 250 மில்லி லிட்டர் பால் வழங்கப்பட்டு வந்தது. எதற்காக அப்படி வழங்கப்பட்டது என்றால், முழுக்க முழுக்க லெட் எல்லாம் எடுத்து வேலை செய்யும்போது, காச நோய், ஆஸ்துமா நோய் போன்றவை வரும் என்பதால், அதற்கு எதிர்ப்புச் சக்தி இருக்க வேண்டுமென்ற காரணத்திற்காக 250 மில்லி லிட்டர் பால் தரப்படுகிறது. அது நல்ல ஸ்கீம். அதற்குப் பதிலாக தினம் 60 பைசா கொடுப்பதென்று அதிகாரிகள் முடிவு செய்திருக்கிறார்கள். என்ன 60 பைசா? 60 பைசா கொடுத்தால் அரைக் கட்டு பீடி வாங்கிக் குடித்து விடுவார்கள். அது ஒரு ஹெல்த் ஸ்கீம். அது மானிட்டரி பெனிபிட்டுக்காக தருவதல்ல. அது முழுக்க முழுக்க உடல் நலத்துக்காகத் தரப்படுவது. ஆகவே இந்த 60 பைசா கொடுப்பதை தயவு செய்து நிறுத்தி விட வேண்டும். அந்த 60 பைசாவுக்குப் பால் வாங்க முடியாது ; பீடியும் வாங்க முடியாது. எனவே அந்த 60 பைசாவுக்குப் பதிலாக பாலே வழங்க வேண்டும். அரசாங்கத்திற்குப் பால் கிடைப்பது என்பது ஒரு பெரிய விஷயமில்லை.

11-20 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது நிறையக் கிடைக்கிறது. முடித்து விடுங்கள்.

திரு. இரா. மோகன் : முடித்து விடுகிறேன். ஆகவே தயவு செய்து மீண்டும் அவர்களுக்கு பாலே வழங்குகிற அந்தத் திட்டத்தை அரசாங்கம் அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையிலே நான் இறுதியாகச் சொல்கின்ற ஒரே ஒரு வார்த்தை தொழிலாளர் நலனுக்காக. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எனக்குத் தெரிந்த வரை ' ஐந்து இறுதி ' சொல்லி இருக்கிறீர்கள். எது இறுதி என்று சொல்லிவிட்டீர்களேயானால் எனக்குக் கொஞ்சம் தெளிவாகப் போய்விடும். இது ஆறாவது இறுதியா?



1990 ஏப்ரல் 12]

திரு. இரா. மோகன் : தொழிலாளர் நலனுக்காகப் போடப்பட்டு இருக்கிற அதிகாரிகளின் அலுவலகங்கள், இன்னும் சற்று விறுவிறுப்பாக வேலை செய்வதற்கு ஒரு நடவடிக்கை தேவை. தொழிலாளர் நலச் சட்டங்கள் போட்டாலும் கூட, கோர்ட்டில் ஆர்டர் வாங்கி வந்தால் கூட தொழிலாளர்கள் அதனால் பயன் அடைய முடியாதபடி சில இடங்களில் முதலாளிகள் தடையாக இருந்தாலும் கூட, அதை இம்பிளிமென்ட் பண்ணுவதற்கு நம்முடைய அதிகாரிகள் தயாராக இருப்பது இல்லை. இன்னும் கொஞ்சம் விறுவிறுப்பாக அந்த அதிகாரிகள் இயங்குவதற்கான ஒரு நிலைமையை உருவாக்குவீர்கள் என்று சொன்னால், இவ்வளவு நல்ல எண்ணத்தோடு தொழிலாளிகளுக்காகச் செயல்படுகின்ற இந்த அரசு இன்னும் நல்ல பெயர் பெறக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்று கேட்டு இந்த மானியக் கோரிக்கையை மனதார வரவேற்று நான் விடை பெறுகின்றேன். வணக்கம்.

*திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளிலே எனக்குப் பேசச் சந்தர்ப்பம் அளித்த உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு சில கருத்துகளை இங்கே கூற விரும்புகிறேன். பால் உற்பத்தியாளர்களுக்கு நல்ல விலை கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இன்றைய விலைவாசியிலே அவர்களுடைய பசு மாடுகளுக்குத் தீவனம் போட்டு பிறகு உற்பத்தி செய்து அவர்கள் கொடுக்கும் தருணத்தில் அவர்களுக்குக் கிடைக்கும் விலை குறைவாக இருக்கின்றது என்று நம்முடைய மாநிலம் முழுவதும் சொல்கிறார்கள். அது தலைவர் அவர்களுக்கும் தெரியும். அதேமாதிரி நுகர்வோர்களுக்கும், விலைவாசிக்கு ஏற்ப அந்த விலையை ஒவ்வொரு முறையும் சீர் செய்து அந்த விநியோகத்தை நல்ல முறையிலே அவர்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உற்பத்தியாளர்கள் தரும் பாலை ' ஏ ' கிரேடு, ' பி ' கிரேடு என்று பிரிக்கிறார்கள். ஆனால் விநியோகிக்கப்படும்போது அந்தமாதிரி பிரிப்பது இல்லை. ஒரே மாதிரியாகத்தான் அந்த விலையைக் கொடுக்கிறார்களேயொழிய ' ஏ ' கிரேடு பால் இவ்வளவு ' பி ' கிரேடு பால் இவ்வளவு என்று சொல்வது இல்லை. ஆனால் உற்பத்தியாளர்களிடம் இருந்து வரும் பாலை அந்த கிரேடாக பிரிக்கிறார்கள். இந்த அரசு மனதில் கொள்ள வேண்டும். ஒரே விலைக்கு விற்பனை செய்தால் மிகவும் நன்றாக இருக்கும். அந்த முறை தவிர்க்கப்பட வேண்டும்.

பால்வளக் கூட்டுறவு அங்கத்தினர்களுக்குச் சில சலுகைகள் இன்னும் நல்ல முறையிலே அரசால் செயல்படுத்தப்பட வேண்டும்.

[திரு. எச், எம், ராஜு] [1990 ஏப்ரல் 12

இலவசக் கால்நடை மருத்துவ வசதி செய்தல், செயற்கை முறை கருவூட்டல் நல்ல முறையிலே செயல்படுத்தப்பட வேண்டும். ஜெர்மனி நாட்டிலிருந்து கொண்டு வரப்படும் ஜெர்ஸி காளை மாடுகள் வழியாக அந்த செயற்கை முறை கருவூட்டலையும் அந்த உற்பத்தியாளர்களின் மாடுகளுக்குக் கொடுத்து உதவலாம். கால்நடைத் தீவனம் விநியோகத்தை இன்னும் நல்ல முறையிலே செய்து பால் வளத்தை இன்னும் அதிகமாக்கி பெருமளவிலே பெறலாம். நவீன கால்நடைப் பராமரிப்புப் பயிற்சியும் அளித்து அந்த அங்கத்தினர்களுக்கு பால் பெருக்கும் எவ்வாறு செய்ய வேண்டும் என்பதை சொல்லிக் கொடுக்கலாம். மேலும் ஏற்கனவே சொன்னது போல ஜெர்மனி நாட்டிலிருந்து ஜெர்ஸி பசுக்களையும் கொண்டு வந்து அவர்களுக்கு 50 சதவீத மானியத்தில் கொடுத்தால் கண்டிப்பாக நாட்டிலே இன்னும் பால்வளம் அதிகமான அளவு பெருகும் என்பதிலே எந்த விதமான சந்தேகத்துக்கும் இடம் இல்லை. அதிக அளவில் பால் கிடைக்க விஞ்ஞான முறையிலும் அங்கத்தினர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டிய கடமை அரசுக்கு உண்டு.

பால் குளிரூட்டும் நிலையங்கள் எல்லா மாவட்டங்களிலும் ஒன்றாவது அமைக்கப்பட வேண்டும். இது மிகவும் முக்கியம்.

11-25 மணி

மேலும், அதிக அளவிலே பால் உற்பத்தியாளர்களுக்குக் கடனுதவியைக் கொடுத்து, விலைவாசி உயர்ந்துள்ள நாட்களிலே நல்ல விதமாகப் பாலை அவர்கள் விநியோகம் செய்ய உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தில், நமது பால் உற்பத்தியாளர்களுடைய பசு மாடுகள் இறக்கின்றபொழுது, அவர்களுக்கு உடனடியாக அந்த இன்ஷ்யூரன்ஸ் பணம் கிடைப்பதில்லை. உடனடியாக அவர்களுக்கு அந்த இன்ஷ்யூரன்ஸ் பணம் கிடைப்பதற்கு என்னென்ன அவசியமோ அந்த நடவடிக்கைகளை அரசு எடுத்து, உடனடியாக அவர்களுக்கு அந்த இன்ஷ்யூரன்ஸ் தொகை கிடைக்குமாறு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், வெண்ணெய், நெய், ஐஸ்கிரீம், YOGHURT போன்றவைகளைச் சிறந்த முறையில் தயார் செய்து மக்களுக்கு விநியோகம் செய்யலாம்.

அமுல் என்று ஒருவித சீஸ் இருக்கிறதே அது நமது நாட்டில் பிரசித்தி பெற்றது. நமது உதகையிலுள்ள பால் வளத்திலே கூட நல்லமுறையிலே அமுல் போல் அந்த சீஸைச் செய்கிறார்கள். ஆனால் மார்க்கெட்டிங் பற்றி, அதாவது அதை எவ்வாறு விற்பனை செய்வது என்பது அவர்களுக்குத் தெரியாமல்



1990 ஏப்ரல் 12] [திரு. எச். எம். ராஜு]

இருக்கிறது. அதை அரசு உடனடியாக எடுத்து அமுல் போன்ற வழியிலே அந்த சீஸைச் செய்து, மக்களுக்குக் குறைந்த விலையிலேகூடக் கொடுக்கலாம். தரம் மிகவும் நன்றாக இருக்கிறது.

பால் துறையிலே பணிபுரியும் தொழிலாளர்களுக்கு எல்லா அலவன்ஸ்களும் கொடுக்கப்பட வேண்டும். அவர்கள் பணி நிரந்தரம் ஆக்கப்பட வேண்டும். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மார்ச், ஏப்ரல், மே, ஜூன் மாதங்களிலே, சீசனல் அலவன்ஸ் கொடுக்க வேண்டும். சீசன் என்று ஆரம்பித்து அங்கே விலைவாசி அதிகமாக ஏற்பட்டு விடுவதால், அந்தத் தொழிலாளர்களுக்கெல்லாம் மாதம் 150 ரூபாய் வீதம் அரசு ஊழியர்களுக்கும்கூட கொடுக்க வேண்டும் என்று நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். சுமார் 12,000 பேர்களுக்கு மாதம் 150 ரூபாய் வீதம் வழங்குவதால் நான்கு மாதங்களுக்கு அரசுக்கு ஏற்படும் செலவு சுமார் 72 இலட்சம்தான். இதைச் செய்வீர்களானால், அரசு ஊழியர்களும், எல்லாத் தொழிலாளர்களும் அரசுக்கு எப்பொழுதும் கடமைப்பட்டவர்களாக இருப்பார்கள். ஏன் என்றால், அந்த சீசனல் அலவன்ஸ் அவர்களுக்குக் கண்டிப்பாகத் தேவைப்படுகிறது.

பால் துறையில் இருக்கும் தொழிலாளர்களுக்கு தற்போதைய ஊதியம் மிகவும் குறைவாக இருக்கிறது. ஏற்கனவே சொன்னதைப்போல, சில மாவட்டங்கள்—தஞ்சாவூர், நீலகிரி, புதுக்கோட்டை போன்ற நான்கு மாவட்டங்கள்—தவிர்த்து, மிச்சமுள்ள மாவட்டங்களுக்குத் தரும் சலுகையை, இந்த நான்கு மாவட்டங்களுக்குத் தராமலும் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட டிஸ்கிரிமினேஷன் முறை இல்லாமல், எல்லோருக்கும் ஒரே முறையாக இருக்க வேண்டும் என்பதைஇந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, தொழிலாளர் நலன். தொழிலாளர்களின் ஊதிய உயர்வு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்—வருஷத்திற்கு ஒரு முறையாவது பரிசீலனை செய்யப்பட வேண்டும். அவ்வாறு செய்தால்தான், கடந்த காலங்களில் அவர்களுக்கு எவ்வளவு ஊதியம் கொடுக்கப்பட்டது, எப்பொழுது ஊதியத்தை உயர்த்த வேண்டும், அவர்களுடைய நலன் எவ்வாறு இருக்கிறது என்பது போன்றவை அரசுக்குத் தெரிய வரும். மினிமம் வேஜஸ் என்ற சட்டம், சரியான முறையில் அமுல்படுத்தப்பட வேண்டும். விலைவாசி ஏற்றத்திற்குத் தகுந்தாற்போல, இந்த மினிமம் வேஜஸைச் சில காலத்திற்குள்ளாக பரிசீலனைச் செய்து, அந்தச் சட்டத் திருத்தங்களை நாம் செய்யக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

[திரு. எச். எம். ராஜு] [1990 ஏப்ரல் 12

வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர்களிடத்தில் உடனடியாக அரசானாலும் சரி, அந்த நிர்வாகமானாலும் சரி, பேச்சு வார்த்தை நடத்தி, ஒரு சமாதான முறையைக் கடைப்பிடித்தாக வேண்டுமென்று இந்தத் தருணத்திலே கூறிக்கொள்கிறேன்.

இலாபத்தின் அடிப்படையிலேகூட இந்த போனஸ் முறை யை நாம் உயர்த்திக் கொடுக்க வேண்டும். சில கம்பெனி களில், அதிகமாக அவர்கள் சம்பாதித்தாலும்கூட, தொழி லாளர்களுக்கு அந்த போனஸைக் குறைந்த அளவிலேதான் கொடுக்கிறார்கள். அதிக இலாபம் வரும் பொழுது, கண்டிப் பாகத் தொழிலாளர்களை ஊக்குவிக்கும் வகையிலே, போனஸை அதிகமாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்றும், இந்தக் குறையை நிவர்த்தி செய்ய வேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளர் பிரச்சினை குறித்து நீதிமன்றங்கள் தீர்ப்பு கள் அளிக்கின்றன. அந்தத் தீர்ப்புகளுக்கு ஏற்ப உடனடியாகச் செயல்படக்கூடிய ஒரு நிலை இல்லை. அந்த நீதிமன்றங்கள் கொடுக்கும் தீர்ப்புகள் உடனடியாகச் செயற்படுத்தப்பட்டால் தான், கண்டிப்பாக அந்தத் தொழிலாளர் பெருங்குடி மக்கள் நலம் அடைவார்கள் என்று சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

விபத்துக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில், நீதி மன்றங்களும் தாமதிக்காமல், குறித்த ஒரு கால கட்டத்திற்குள், ஆறு மாதமோ அல்லது ஒன்பது மாதமோ, அதற்குள்ளாக நிலுவையிலுள்ள அந்தத் தாவாக்களை முடித்து, அவர் களுக்கு உரிய காலத்திலே அந்த நிவாரணத்தை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

11.30 மணி

குழந்தைகள் காப்பகங்கள். இந்தக் காப்பகங்கள்—கிரிஷ் என்று சொல்வார்கள்—நல்ல முறையிலே செயல்பட வேண்டும். இந்தப் பராமரிப்பு, குழந்தைகளினிடையே ஒரு வயது முதல் ஐந்து வயது வரையில் மிகவும் சிறந்த முறையில் இருந்தால் தான், குழந்தைகளுடைய உடல் நல்ல முறையில் இருக்க உதவும். ஒரு குழந்தையின் எதிர் காலம் நல்ல முறையில் அமைய வேண்டுமென்றால், அந்தக் குழந்தையின் ஐந்தாவது வயது வரை சிறந்த சத்துணவு உண்ண வேண்டும். குழந்தைகளுக்கு சுகாதாரமான சூழ்நிலை மிக முக்கியமாகும். சுகாதாரமான உணவு பண்டங்கள் குழந்தைகளுக்கு கொடுக்கப் பட வேண்டும். அந்த காப்பகங்கள் சிறந்த முறையில் செயல்பட்டால் தான் தொழிலாளர்களின் குழந்தைகள் நல்ல முறையில் வளர ஏதுவாக அமையும்.



1990 ஏப்ரல் 12] [திரு. எச். எம். ராஜு]

சிவகாசியில் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் சிறுவர், சிறுமியர், பெரியவர்களை காட்டிலும் அதிக அளவில், சிறந்த முறையில் வேலை செய்கிறார்கள். பெரியவர்களுக்கு கொடுக்கப்படும் வகையில் ஊதியம் அந்த சிறுவர்களுக்கு கொடுக்கப்படுவதில்லை. பெரியவர்களைக் காட்டிலும் நல்ல முறையில், குறைவில்லாமல், வேகமாக செயல்படும் சிறுவர், சிறுமியருக்கும் கண்டிப்பாக ஊதியத்தை அதிகரித்து கொடுக்க வேண்டும். பெரியவர்களுக்கு தகுந்தாற்போல சிறுவர் களுக்கு ஊதிய விகிதங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம் நாட்டில் நீலகிரி மாவட்டத்தில் 15 தேயிலைத் தொழிற் சாலைகள் இருக்கின்றன. கேரளா மாநிலத்தில் ஒரே ஒரு தொழிற்சாலை மாத்திரம் இருக்கிறது. ஆக மொத்தம் 16 தொழிற்சாலைகள் நம் பகுதியில் இருக்கின்றன. அந்த தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் ஊதிய விகிதங்கள் மிகவும் குறைவாக இருக்கிறது. அவர்களுடைய ஊதியத்தை அதிகரிக்க வேண்டும். அவர்களுக்கு எல்லா அலவன்சுகளும் கொடுக்க வேண்டும். சீசன் அலவன்ஸ் உள்பட அனைத்தும் கொடுக்க வேண்டும். அந்தத் தொழிலாளர்களுடைய நலன் இதுவரையில் சரியாக கவனிக்கப்படவில்லை என்பதை வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

விபத்தில் இறந்துவிடும் தொழிலாளர்களுடைய வாரிசு களுக்கு ஒருவருக்காவது வேலை கொடுக்க வேண்டும். ஒரு குடும்பத்தில் உள்ள அந்தத் தொழிலாளியின் வாரிசுகளில் ஒருவருக்காவது வேலை அளித்து, அந்த குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று சொல்ல கடமைப்பட்டு இருக் கிறேன்.

தொழிலாளர் நல ஆலோசனைக் குழுக்களில் சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள், ஓய்வு பெற்ற நீதிபதிகள், ஓய்வு பெற்ற தொழிலாளர் நல அதிகாரிகள், கண்டிப்பாக இடம் பெற வேண்டுமென்று அரசுக்கு கோரிக்கை விடுகிறேன்.

தொழிற்சாலைகளில் கட்டட வசதி, குடிநீர் வசதி, சுகாதார வசதி, கழிப்பிட வசதி போன்ற வசதிகளை அடிக்கடி ஆய்வு செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

தொழிலாளர்கள் இன்ஷூரன்ஸ் திட்டம் மீண்டும் கொண்டு வர வேண்டும். ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள், முக்கியமாக விவசாய கூலிகள், மூட்டை சுமக்கும் கூலிகள், மரம் ஏறும் தொழிலாளர்கள் எல்லாம் இந்த இன்ஷூரன்ஸ் திட்டம் மீண்டும் கொண்டு வர வேண்டுமென்று கேட்பதால் இந்த கோரிக்கையை உங்கள் முன் வைக்கிறேன்.

[திரு. எச். எம். ராஜு] [1990 ஏப்ரல் 12

தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்த வேண்டி யது அவசியம். உதகை இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலைக்கு கலர் பிலிம் பிரிவு கொண்டு திட்டத்தை மத்திய அரசுக்கு நம்முடைய மாநில வரும் பரிந்துரை செய்து, சீக்கிரமாக அந்தத் திட்டத்தை அரசு வர வேண்டும். இன்னும் சில ஆயிரம் தொழிலாளர்கள் கொண்டு இதனால் பயன் அடைவார்கள் என்று சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழில் நீதிமன்றங்கள் இப்போது 4, 5 மாவட்டங்களுக்கு ஒன்று என்ற அளவில் தான் இருக்கிறது. ஒரு மாவட்டத்திற்கு ஒரு நீதிமன்றம் என்று அமைத்தால் நிலுவையில் உள்ள தாவாக்களை சீக்கிரம் முடித்து, தொழிலாளர்களுக்கு நலம் செய்ய ஏதுவாகும் என்று சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். வழக்குகள் குறைந்தது 6 மாதத்திற்குள் முடிக்கப்பட வேண்டும் அப்படி முடிந்தால் தான் தொழிலாளர்களுக்கு சேர வேண்டிய நன்மைகள் போய் சேரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து டிரிபியூனல் என்பதை இரண்டு ஜோன் அல்லது ஈஸ்ட், வெஸ்ட், நார்த், சௌத் என்று நான்கு Zon:- ஆகப் பிரித்து அமைக்க வேண்டுமென்று கோரிக்கை விடு கிறேன்.

புதியதாக தொழிற்சாலைகள் ஆரம்பிக்கும் போது அந்தப் பகுதியின் சுற்றுப்புறச் சூழ்நிலை பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும். பள்ளிக்கூடங்கள், கோவில்கள், வீடுகள் அருகில் இருக்கின்றனவா என்று பார்த்து, அவைகள் பாதிக்கப்படாமல், சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படாமல் இருக்கும் அளவில் தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அச்சுத் துறை பாட புத்தகங்களை பள்ளிக்கூடம் திறந்து 15 நாட்களுக்குள் மாணவர்களுக்கு தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கக் கூடிய குழந்தைகள், ஆதி திராவிட குழந்தைகள் ஆகியவர் களுக்கு 3 மாதம், 4 மாதம் என்று நீடிக்காமல் முன்னதாக பாடப் புத்தகங்களை அச்சுத் துறை நிறுவனம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பாட புத்தகங்களில் அதிகமான பிழைகள் வருகின்றன. இதனைத் தடுக்க வேண்டும். ஹிஸ்டரி போன்ற பாடங்களில் வருடங்களில் பிழை ஏற்பட்டு விட்டால், — மாணவர்கள் உதாரணமாக சுதந்திரம் பெற்ற வருடத்தில் பிழை என்றால் பிழையாக அச்சிடப் பெற்ற வருடத்தையே சரியென்று நினைத்துக் கொண்டு விடுவார்கள். அதனை



1990 ஏப்ரல் 12] [திரு. எச். எம். ராஜு]

மனதில் வைத்து, பிழைகள் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்தத் துறையில் உள்ள தொழிலாளர்களுக்கு தேவையான அலவன்ஸ்களை கொடுத்து, அவர்களின் பதவி உயர்வுக்கும் அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

11.35 மணி

பழைய இயந்திரங்களை மாற்றி நவீன இயந்திரங்களை அமைக்க வேண்டும். அப்படி செய்தால் பாடப் புத்தகங்கள் நன்றாக அச்சிடப் பெறும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, பாட புத்தகங்களின் பேப்பர் தரம் இப்போது சுமாராக தான் இருக்கிறது. அந்தத் தரம் நல்ல முறையில் இருந்தால், இன்னும் நன்றாக இருக்கும். அது கூடிய விரைவில் கிழியாமல் 1 வருடம், அல்லது 2 வருடம் தாங்கக் கூடிய முறையில் அதை வைத்து, அந்த பேப்பரின் தரத்தை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த அளவோடு எனக்குப் பேச சந்தர்ப்பத்தைத் தந்த தலைவர் அவர்களுக்கு மீண்டும் நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். ஜெய் ஹிந்த்.

*திரு. எஸ் குணசேகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தங்கத் தமிழகத்தின் சிங்கத்தமிழ் மறவராம் பேரறிஞர் அண்ணாவின் இதயத்தை இரவலாகப் பெற்றத் தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் இலக்கியப் பெட்டகமாம், 1990–91 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையினை நெஞ்சாரப் பாராட்டி வரவேற்கிறேன். அந்த இலக்கிய அறிக்கையிலே தான் பால் வளம் மற்றும் தொழிலாளர் நலம், சீர் பெற, சிறப்பு பெற வகை வகையாகத் திட்டங்கள் அடுக்கடுக்காக இருப்பதைக் கண்டு பெரும் மகிழ்வு கொள்கின்றவர் கிராமப்புறத்து மக்களும், தொழிலாளர் நண்பர்களும் என்றால் மிகையாகா.

பால் செழித்திட, பாவை மணம் குளிர்ந்திட இல்லத்தில் இன்பம் பொங்கிட பால் வளத்தை பெருக்கிடுவீர் என்ற கவிஞர் முல்லையின் கூற்றுக்கு இணங்க பால் பண்ணைகளின் வளர்ச்சிக்கான திட்டங்களைத் தீட்டியிருப்பது எதிர்காலத்தில் தமிழகத்தில் வேலையில்லா கிராமப்புற மக்களே இருக்க மாட்டார்கள் என்பதற்கு ஓர் உத்தரவாதம் அளிக்கவல்ல ஒன்றாகும்.

1963 ஆம் ஆண்டு முதன் முதலாக நவீனப் பால் பதனப் படுத்தும் தொழிற்சாலை மாதவரத்தில் தொடங்கப்பட்டு, தற்போது மாநிலம் முழுவதும் பரவலாக்கப்பட்டு, படிப்

படியாக வளர்ந்து இவ்வாண்டு, மேட்டூரிலே துவங்கப்பட திட்டமிடப்பட்டு இருப்பது இத்துறையின் ஏற்றமிகு வளர்ச்சிக்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

அது மட்டுமா, இவ்வாண்டு 13 மாவட்டங்களிலே பால் பண்ணைகளை நிறைவேற்ற ரூ. 68 கோடியில் திட்டமிடப்பட்டு உள்ளது பெருமைக்குரிய ஒன்றாகும். இவ்வாண்டு துவங்கப்பட உள்ள பால் பண்ணைகளில் ஒன்றினை எனது தலைவாசல் தொகுதியில் துவங்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் ஆவன செய்து உத்தரவிட அன்போடு வேண்டுகிறேன்.

அது மட்டுமல்லாது எத்தரப்பு மக்களானாலும், கிராமப்புறத்து விவசாயிகளுக்கும், கூலித் தொழிலாளர்களுக்கும் மானியத் திட்டத்தில் கறவை மாடுகள் வாங்க கடன் வழங்கிடவும், உயரினக் கன்றுகளை ஒவ்வொரு பால் உற்பத்தியாளர் சங்கத்தில் இருப்போர்களுக்கும் 10 கன்றுகள் இலவசமாக வழங்கிட வேண்டுகிறேன்.

தொழிலாளர் நலம். ஆம், தொழிலாளர் தலைவனாகவும், தொழிற் சங்கத் தலைவராகவும் விளங்கிடும் தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலான கழக அரசு தொழிலாளர் நலம் காத்திடும் திட்டங்களைத் தீட்டி, வாழ்வு அளித்திட வகை செய்திருப்பது வரவேற்க வேண்டிய ஒன்றாகும்.,

படித்த, படிக்காத அனைவருக்கும் வேலை வாய்ப்பு வழங்கிடவும், கலைஞர் ஆட்சியிலே தான் நாடெங்கும் தொழிற்சாலை. ஆலையில் பணி புரிவோர் அனைத்து சலுகைகளையும் பெறும் திட்டம், அன்றாடம் அவர் தம் கோரிக்கைகளைக் கேட்டு அழைத்துப் பேசி தீர்த்து வைத்து அரவணைத்துச் செல்லும் பாங்கு கண்டு பாராட்டாதவர் உண்டா. படித்து விட்டு வேலை வேண்டி வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து விட்டு, பல்லாண்டு காத்துக் கிடப்போர் இனி ஏங்கிக் கிடக்கும் அவல நிலை அகற்றப்பட வேண்டும் என்று தீவிர நடவடிக்கை மேற்கொண்டு இருப்பது, வேலையற்றோருக்கு ஒரு பெரும் ஆறுதல் அளிப்பதாக இருக்கிறது. விரைந்து அனைவருக்கும் வேலை வாய்ப்பினை நல்கிட புதிய புதிய தொழிற்சாலைகளை மாவட்டந்தோறும் உருவாக்கிட வேண்டுகிறேன். தொழிலாளர் நலச் சட்டங்களை அமுல்படுத்தாத ஆலைகளின் உரிமைகளை ரத்து செய்திடவும், தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றாத ஆலை அதிபர்களிடமிருந்து தொழிலாளர்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தந்திடவும் வேண்டுகிறேன்.





தொழிற் கூடங்களில் சட்டப்படியான அடிப்படை வசதிகளைப் பெற்று அளித்திடவும், மூடிக் கிடக்கும் ஆலைத் தொழிலாளர் அனைவருக்கும் நிவாரணம் வழங்கிடவும் வேண்டுகிறேன். மூடிக் கிடந்த ஆலைகளைத் திறந்து பல்லாயிரம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பினை அளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை நெஞ்சாரப் பாராட்டி வணங்குகிறேன்.

இறுதியாக என் தொகுதியோ தலைவாசல், சேலம் மாவட்டத்தின் முதல் வாசல், தலையும் உண்டு, வாசலும் உண்டு. ஆனால் தொழில் வளம் ஏதும் இல்லை. மகளிருக்கோ மாடு மேய்ப்பதே வழக்கமான வேலை. அதற்கும் வறட்சி தடையாகி விட்ட அவல நிலை. எங்கள் பகுதியில் உள்ள மகளிர் அவல நிலை போக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என் தொகுதிக்கு அடிக்கடி வந்து போய்க் கொண்டிருக்கிற நிலை இருக்கிறது—அவருக்கும் எனது தொகுதியைப் பற்றி தெரியும்— தலைவாசலில், பெண்களுக்கு என்று ஒரு உயர்நிலைப் பள்ளியும் கிடையாது. அங்கே அரசுக்குச் சொந்தமான நிலங்கள் நிறைய உள்ளன. ஆகவே, அந்த இடத்தில் பெண்களுக்கு என்று பாலிடெக்னிக் ஒன்றை உருவாக்கித் தர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன். மேலும் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் வேலை வாய்ப்புக்காக பதிவு செய்தும் இன்னும் ஏராளமான பேருக்கு வேலை வாய்ப்பில் இதுவரை நேர்முகத் தேர்வுக்கு ஆர்டர் வராமல் இருக்கிறது. காத்திருப்போர் லிஸ்டில் நானும் ஒருவனாக இருந்து கொண்டிருக்கிறேன். ஆகவே, இந்த அவல நிலையைப் போக்கி, நான் 1978 ஆம் ஆண்டில் பதிவு செய்து, இது வரையிலும் நேர்முகத் தேர்வு ஆர்டர் வராத நிலையில் இருந்து கொண்டிருக்கின்றேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இதுவரையில் பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு மாண்புமிகு துணைத் தலைவருக்கு நன்றியைச் செலுத்தி அமர்கின்றேன், வணக்கம்.

11.40 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு வேலை வேண்டுமா, அல்லது, எம்.எல்.ஏ. வாகத் தொடர்ந்து இருக்கப் போகிறீர்களா ?

* திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த தொழிலாளர் நலன், தொழிற்சாலைகள் மானியத்தின் மீது மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியினுடைய கருத்துக்களை இங்கே கூற முற்படுகின்றேன்,

[திரு. சி. கோவிந்தராஜன்] [1990 ஏப்ரல் 12

இந்த ஆண்டு கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய கொள்கைக் குறிப்பை நான் படித்துப் பார்த்தேன். அதிலே உங்களுடைய முடிவிற்கு உகந்தாற் போல் சில புள்ளிவிவரங்களை இங்கே கொடுத்திருக்கின்றீர்கள். பக்கம் 4-ஐப் பாருங்கள், தமிழில். அதே மாதிரி 60-ஐப் பாருங்கள். வேலை நிறுத்தங்கள் கடந்த ஆண்டை விட குறைந்திருப்பதாக ஒரு புள்ளிவிவரம். 1988-ல் மனித நாட்கள் இழப்பு 16,93,193 ; 1989-ல் 14,54,084 இரண்டு லட்சம் குறைவு என்று அது காட்டுகிறது. ஆனால் அதே சமயத்தில் மனித நாட்கள் இழப்புக்குரிய 'லாக் அவுட்டைச் சேர்த்து, 60 ஆம் பக்கத்தில் நீங்கள் கொடுப்பது, கடந்த ஆண்டு ஒட்டு மொத்தமாக 21,23,646, இந்த ஆண்டு 23,16,925. நீங்கள் எந்த முடிவிற்கு வர வேண்டுமென்று நினைக்கிறீர்களோ. அதற்குத் தகுந்த மாதிரி புள்ளி விவரத்தை அமைத்துக் கொண்டு, 4 ஆம் பக்கத்தில் ஒன்று சொல்வதும், விவரங்களை 60 ஆம் பக்கத்தில் வேறு விதமாகக் கொடுப்பதும் சரியல்ல என்பதை நான் இந்தச் சமயத்தில் கூறிக்கொள்ள பிரியப்படுகிறேன்.

கடந்த ஆண்டு கொடுக்கப்பட்ட கொள்கை குறிப்பிற்குப் போவதற்கு முன்பாக, இந்த ஆண்டு கொள்கை குறிப்பிலே என்ன நீங்கள் கூறியிருக்கிறீர்கள் ? 'While this Government are not against the right of strike by workmen of lock-out by Management' என்று நீங்கள் கூறும்போது தமிழில் வேறு விதமாக மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களுடைய வேலை நிறுத்த உரிமைகளை நீங்கள் அங்கீகரிக்கும் போதே முதலாளிகள் தொழிலாளர்களை பழி வாங்குவதற்காக உபயோகப் படுத்தக் கூடிய அந்த லாக்-அவுட் உரிமையை நீங்கள் அங்கீகரிக்கின்ற காரணத்தால்தான் அவர்கள் அதை வைத்து, தொழிலாளர்களை பணிய வைப்பதற்கு முற்படுகிறார்கள், இதை நீங்கள் அங்கீகரித்து விட்டு மனித நாட்கள் இழப்பைப் பற்றி நீங்கள் கவலைப்படுவதாக இங்கே குறிப்பிட்டிருக்கிறீர்கள். மனித நாட்கள் இழப்பு லாக்-அவுட் செய்வதன் மூலமாக அதிகமாகிறது என்பதை உங்களுடைய புள்ளி விவரமே இங்கே காட்டுகிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டு கொள்கைக் குறிப்பிலே நீங்கள் கூறியது, இந்த அரசு ஏழை எளியவர்களாலும், சமுதாயத்தில் நலிந்தவர்களாலும் ஆக்கப்பட்ட அரசு என்றும், அவர்களுக்கு சட்டங்கள் மூலமாக அளிக்கப்பட்டிருக்கக் கூடிய சலுகைகளைப் பெற்றுத் தருவதற்கு முயற்சி செய்யும் என்றும் நீங்கள் கூறினீர்கள். இதில் இந்த அரசு உறுதியாக இருக்கிறது என்றும் கூறினீர்கள், நீங்கள் இப்படிக் கூறிய அந்தக் கொள்கை நடைமுறையில் எந்த அளவிற்கு அமுல் ஆகியிருக்கிறது என்பதை இந்தச் சமயத்திலே நீங்கள் பரிசீலித்துப் பார்க்க வேண்டு



1990 ஏப்ரல் 12] [திரு. சி. கோவிந்தராஜன்]

மென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்கள் தான் மொத்த தொழிலாளர்களுடைய எண்ணிக்கையில் அதிகம் என்று கூறினீர்கள். அவர்களுக்குப் புகலிடமாக விளங்குவது ஓரேயொரு சட்டம், Minimum Wages Act அதாவது குறைந்தபட்ச சம்பளச் சட்டம். அந்த சம்பள சட்டத்தை எந்த அளவிற்கு இந்த அரசு நிறைவேற்றியிருக்கிறது அல்லது அதிகாரிகள் நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதை சற்று பரிசீலித்துப் பார்த்தால் தெரியும் ஏற்கெனவே கைத்தறி மானியத்தின் மீது நான் பேசும்போது இதை எடுத்துக் கூறினேன். கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் கூலிச் சட்டம், அது இன்றைக்கு நிறைவேற்றப்படாமல் இருக்கின்றது, அதற்குக் காரணம், கைத்தறித் துறை இயக்குநர், அது முடியாது என்று மறுக்கிறார். அதே மாதிரி வனத் துறையில் அந்த ஊழியர்களுக்காக நீங்கள் குறைந்தபட்ச சம்பளச் சட்டத்தை அமலாக்க வேண்டுமென்று ஒரு சட்டத்தை நிறைவேற்றுகிறீர்கள். அதை அமலாக்கவும் உத்தரவு போடுகிறீர்கள். ஆனால் வனத் துறை சம்பந்தப்பட்ட செயலாளர் அதை அமல்படுத்த முடியாது என்று மறுக்கிறார். அதைப் போன்று அச்சகத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தினை நீங்கள் நிறைவேற்றுகிறீர்கள். அரசுத் துறையிலுள்ள மகளிர் மேம்பாட்டுக் கழகத்திலுள்ள அந்த அச்சகத்திலுள்ள நிர்வாகிகள் அதை அமல்படுத்த மறுக்கிறார்கள். வேறு பல இடங்களிலேயும் கூட இவ்வாறு அமல்படுத்த மறுக்கிறார்கள்.

11-45 மணி

இவ்வாறு அடுக்கிக் கொண்டே போகலாம். குறைந்த பட்ச ஊதியம் என்று சொன்னால் அதை விட குறைந்த ஊதியம் இருக்கக்கூடாது என்றுதான் நாங்கள் புரிந்துக் கொள்கிறோம். இந்த ஊதியத்தைக் கூட அவர்கள் அடைய முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது என்று சொன்னால் இதில் எந்த அளவுக்கு நீங்கள் அதிகமான கவனம் செலுத்த வேண்டியிருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள். இதற்கு என்ன காரணம் என்பதை நீங்கள் பரிசீலிக்க வேண்டும். அந்தச் சட்டத்தை அமல்படுத்துவதில் நடைமுறைச் சிக்கல் இருக்கிறது, பிராக்டிகல் பிராப்ளம்ஸ் இருக்கிறது என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். அமைச்சர் அவர்களும் கூறினார்கள் அன்றைக்கு. அதையே தான் முதலாளிகளும் கூறுகிறார்கள். அரசாங்கத் துறையிலேயே நிலைமை இப்படி இருக்கிறது என்று சொன்னால் தனியார்களும் இதை காப்பியடிக்கிறார்கள். அவர்கள் ஒரு பத்து படி மேலே சென்று இதை அமல்படுத்தவே மறுக்கிறார்கள் —இந்த குறைந்த பட்ச சம்பள சட்டத்தை—எனவே அந்த பிராக்டிகல் பிராப்ளம் இல்லாது இருந்தால் தான் அந்த குறைந்தபட்ச சம்பளத்தை அமல்படுத்துவீர்களா என்று இந்தச் சமயத்திலே கேட்க விரும்புகிறேன்.

[திரு. சி. கோவிந்தராஜன்] [1990 ஏப்ரல் 12

அடுத்து தொழிலாளர் நலச் சட்டங்களை அமல்படுத்துவதில் இந்த அரசு கறாராக இருக்கிறது என்றும் அது மட்டுமல்ல. நம்முடைய மாநிலத்தில் தான் அது நேர்த்தியாக அமல்படுத்தப்படுகிறது என்றும் நம்முடைய அருமை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். அவர்கள் ஏதோ அதிகாரிகள் மத்தியிலே இருந்து வரக்கூடிய அறிக்கையை அப்படியே படித்தார்கள் என்று நினைக்கிறேன். அடுத்த சட்டம் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்தக் கூடிய சட்டம் 1981-வது வருஷத்திய சட்டம். இது அரசு துறையினால் நிறைவேற்றப் பட்டிருக்கிறதா என்பதை நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். குடிநீர் வடிகால் வாரியத்தை எடுத்துக் கொள்ளுங்கள். கோவில்பட்டியிலே இருக்கக்கூடிய குடிநீர் வடிகால் வாரியத்திலே தொழிலாளர்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பி அது மதுரை தொழில் கோர்ட்டுக்கு சென்று தொழிலாளர்களுக்கு ஆதரவாக அங்கே தீர்ப்பு கிடைத்தது, அந்த தீர்ப்பை எதிர்த்து அரசாங்கமே உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடுக்கிறார்கள். இது நியாயமா ? அப்படியானால் தனியார் துறையிலே எப்படி நடக்கும் இது ? அந்த நீதிபதி அவ்வழக்கிற்கு ஸ்டே கொடுக்கவில்லை. ஸ்டேகூட பெறமுடியாத அளவுக்கு இருக்கக்கூடிய வழக்கு அது. ஆனால் அந்த வழக்கு தொடர்ந்து நடந்துக் கொண்டிருக்கிறது. நான் இங்கே குறிப்பிட விரும்புவது என்னவென்று சொன்னால் நாம் போட்ட சட்டத்தை நம்முடைய அரசுத்துறை செயல்படுத்துவதற்கு பதில் — தொலாளர்களுக்கு ஆதரவாக உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு வருவது என்பதே ரொம்ப அரிது—அப்படி வரும்போது அவர்களுக்கு ஆதரவாக நடக்காமல் அதை எதிர்த்து நீதிமன்றங்களுக்கு அரசே செல்வது எப்படி நியாயம் என்று நீங்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட தீர்ப்புகள் திண்டுக்கல் மதுரை போன்ற கோர்ட்டுகளில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

திருச்சியிலே குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய வொர்க் ஷாப் இருக்கிறது. அந்தத் தொழிலாளர்களும் நிரந்தரப் படுத்தப்படவில்லை. இந்தச் சட்டத்தை அமல்படுத்தக் கோரிதான் 9-ஆம் தேதி அன்றைக்கு ஒரு பேரணியை இங்கே நடத்தினார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதே போல ஹவுசிங் போர்டு. நான் அரசு துறைகளிலே இருக்கும் நிறுவனங்களைத்தான் சொல்லுகிறேன். டுவார்டு போர்டு ஆகியவற்றில் போனஸ் பிரச்சினை. தொழில் கோர்ட்டுக்கு சென்று அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பு வந்திருக்கிறது. அதை எதிர்த்து நீங்கள் உயர்நீதி மன்றத்திற்கும் உச்ச நீதி மன்றத்திற்கும் செல்லுகிறீர்கள். இது நியாயம் தானா என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்.



1990 ஏப்ரல் 12] [திரு. சி. கோவிந்தராஜன்]

அது மட்டுமல்ல, சட்டங்களை நிறைவேற்றுவதற்கு நீங்கள் கறாராக நடவடிக்கை எடுக்கவில்லை என்பது மட்டுமல்ல இந்த அரசாங்கமே நீங்கள் போட்டிருக்கிற உத்திரவு—உள் ளாட்சி துறை, துப்புரவு தொழிலாளர்களுக்காக 1—10—1973-ல் போட்ட ஒரு உத்தரவு இன்று வரை அமல் படுத்தப்படாமல் இருக்கிறது. அதை அமல் படுத்துவதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர்களும் இந்த மாதம் 25 ஆம் தேதி சென்னை கோட்டையை நோக்கி வருவ தற்கு தயாராக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை அங்கே இருந்துக் கொண்டிருக்கிறது என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

அடுத்து பீடித் தொழிலாளர்களுக்கான சட்டம். 5 லட்சம் பீடித் தொழிலாளர்களுக்கான ஒரு சட்டம். இது அந்தச் சட்டம் அமலாகாத காரணத்தினால் உச்ச நீதிமன்றமே இதில் தலையிட்டு இதற்காக ஒரு தனி நபர் கமிஷனை அமைக்க வேண்டும் என்று கோரி அதற்காக 5 ஆயிரம் ரூபாயை இந்த மாநில அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று உச்ச நீதி மன்றமே சொல்லக் கூடிய அளவுக்கு இந்தச் சட்டம் அமலா காத நிலையில் இருக்கிற ஒரு சட்டம் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பீடித் தொழிலாளர்கள் வேலை நிறுத் தத்தை செய்தார்கள். அன்றைக்கு இருந்த தொழிலாளர் நல அமைச்சர் இரு சாராரையும் கூப்பிட்டு பேசினார்கள். முத்தரப்புக் கூட்டம் நடந்தது. அது ஒத்தி வைக்கப்பட்டது. அடுத்தக் கூட்டம் கூடவே இல்லை. முதலாளிகள் பீடி இலையை குறைவாக கொடுத்து தொழிலாளர்களின் சம்ப ளத்தைக் குறைக்கிறார்கள்.

நேற்றைய தினம் பத்திரிக்கையில் பார்த்தேன். பெண் தொழிலாளர்களுக்கு பாஸ் புத்தகத்தில் பெயரைக் குறிப்பிட வில்லை என்று திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கணேஷ் பீடி தொழிற்சாலையில் 20 ஆயிரம் பேர்களுக்கு வேலை கொடுக்கப்படவில்லை. அங்கு கிட்டத்தட்ட கத வடைப்பே நடந்துக் கொண்டிருக்கிறது. சுங்க அதிகாரிகள் பரிசீலித்து பார்த்ததில் பெண் தொழிலாளர்களுக்கு பாஸ் புத்தகத்தில் பெயரைப் போடாமலேயே அவர்களை உள்ளே விடுகிறார்கள் என கண்டு பிடித்திருக்கிறார்கள். ஏனென்று சொன்னால் பெண் தொழிலாளர்களுக்கு பெயரைப் போட் டால் அவர்களுக்கு பல்வேறு சட்ட சலுகைகள் கொடுக்க வேண்டும் என்ற காரணத்தினால் அந்த பீடி முதலாளிகள் அப்படிச் செய்திருக்கிறார்கள் என்பதையும் அதனால் அந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதையும் உங்கள் கவனத்திற்கு இந்தச் சமயத்திலே கொண்டு வர விரும்புகிறேன்.

[திரு. சி. கோவிந்தராஜன்] [1990 ஏப்ரல் 12

11-50 மணி

காண்ட்ராக்ட் ஒர்க்கர்ஸ். ஒப்பந்தத் தொழிலாளர்கள்.
தொழிலாளர்களுக்கான சட்டங்களெல்லாம் எப்படி அமலா
கிறது என்பதற்காகத் தான் நான் இதைக் குறிப்பிட விரும்பு
கிறேன். மிகக் கொடிய சுரண்டலுக்கு ஆளாக்கப்பட்டிருக்கக்
கூடிய காண்ட்ராக்ட் தொழிலாளர்கள். அதை இந்த அரசே
ஒத்துக் கொள்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே
ஒத்துக் கொள்கிறார்கள். இங்கிருக்கக்கூடிய அமைச்சர்கள்
பூராவும் ஒத்துக் கொள்கிறார்கள், கடுமையான சுரண்டல் என்று.
15 ஆண்டுக் காலம் ; 20 ஆண்டுக் காலம் வேலை செய்தவர்கள்,
அந்தக் காண்ட்ராக்டிலே இருந்தவர்கள். காண்ட்டிராக்ட்
முடிந்து விட்டால் அவர்களை நிரந்தரப்படுத்த வேண்டும்
என்று சட்டத்தில் இல்லை என்று அந்த காண்ட்ராக்ட் அபா
லிஷன் ரெகுலேஷன் ஆக்ட்-இல் இல்லை என்ற காரணத்திற்காக
அன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர். அவர்கள் கூட கூறி
னார்கள், பட்ஜெட் உரையில் இறுதியாகச் சொல்லும்போது
அந்தச் சட்டத்தில் இருக்கக்கூடிய ஓட்டையில் புகுந்துக்
கொண்டு அந்த முதலாளிகள் பூராவும் அவர்களை நிரந்தரப்
படுத்தாமல் இருக்கிறார்கள் என்று. எனவே, சட்டத் திருத்தத்தை
நாங்கள் கோண்டு வரவிருக்கிறோம். அதாவது 10 (2)-ஐத்
திருத்தி 10 (3) என்று ஒரு புதிய செக்ஷனைக் கொண்டு
வருவதாக இருக்கிறோம், அப்படியானால் ஏற்கெனவே பணி
புரிந்தவர்களை இங்கே அமர்த்த முடியும் என்று சொன்னார்கள்.

நான் கேட்கிறேன். தனிப்பட்ட முதலாளிகளைக் கட்டுப்
படுத்துவதற்கு இந்தச் சட்டம் தேவை. இந்தக் கருத்தோடு
இருக்கக்கூடிய இந்த அரசிற்கு ஒரு சட்டம் தேவையா?
மின்சார வாரியத்திலே 25,000 காலியிடங்கள்
இருக்கின்றன. அதற்கு 10 (3) என்ற ஒரு
செக்ஷன் உங்களுக்கும் தேவையா என்று நான் கேட்க விரும்பு
கிறேன். அதே மாதிரி மின்சார வாரியத்தில், தூத்துக்குடி
அனல் மின் நிலையத்தில் காண்ட்ராக்ட் தொழிலாளர்கள்,
வேலை நிறுத்தம் நடந்தபோது என்ன நடந்தது
என்பதையெல்லாம் விரிவாகக் கூறுவதற்கு இங்கே எனக்கு
நேரம் கிடையாது.

இப்போது புகளூரில் நடந்து கொண்டிருக்கக்கூடிய காண்ட்
ராக்ட் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம். தொழிலாளர் நல
அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுச் சொன்னார்கள். நம்முடைய
மாண்புமிகு உறுப்பினர் மோகன் அவர்கள் இங்கே பேசும்போது
முதலமைச்சர் அவர்களே தலையிட்டு அதைப் பேசிக் கொண்
டிருக்கிறார்கள், இன்றைக்கு அல்லது நாளைக்கு முடிந்துவிடும்
என்ற ஒரு நல்ல செய்தியை இங்கே குறிப்பிட்டார்கள். நான்
வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். ஆனால் காண்ட்ராக்ட்
தொழிலாளர்கள் நீண்ட நாட்களாக வேலை செய்து கொண்



1990 ஏப்ரல் 12] [திரு. சி. கோவிந்தராஜன்]

டிருக்கும்போது அவர்கள் நிரந்தரப்படுத்தப்பட வேண்டும்
என்று இன்னும் சில கோரிக்கைகளை வைத்துப் போகும்போது,
இது எந்தத் தொழில் ? தமிழ்நாடு நியூஸ்பிரிண்ட் அண்டு பேப்
பர்ஸ்—நம்முடைய தொழில், மாநில அரசினுடைய தொழில்,
அந்தக் காண்ட்ராக்ட் தொழிலாளர்களுடைய போராட்டத்தை
உடைப்பதற்குப் போலீஸ். அங்கே 28 தொழிலாளர்களை
போலீஸ் உள்ளே நுழைந்து வெளியே கொண்டு வந்து
போடுகிறது. அதற்கு ஆதரவாக நிரந்தரத் தொழிலாளர்கள்
வேலை நிறுத்தம் செய்கிறார்கள். நேற்றைய தினம் இங்கே
ஜாயிண்ட் கமிஷனர் ஆஃப் லேபர் முன்னிலையிலே பேச்சு
வார்த்தை. அந்த நிர்வாகம் என்ன சொல்கிறது ? அந்தக்
காண்ட்ராக்ட் தொழிலாளர்களைப் பற்றி நான் பேசமாட்டேன்,
பெர்மனன்ட் தொழிலாளர்கள் 3 பேர்கள் சஸ்பென்ட் செய்யப்
பட்டிருக்கிறார்கள். அந்தப் பற்றி வேண்டுமானாலும் பேசலாமே
தவிர காண்ட்ராக்ட் தொழிலாளர்கள் பிரச்சினை பற்றி பேச
மாட்டோம் என்கிறது. அந்தத் தொழில் பாதிக்கப்பட்டிருக்கிறது,
உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. அதைப் பற்றிக் கவலைப்
படாமல் அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள், அந்த நிர்வாகத்தி
னுடைய அதிகாரி கூறுகிறார். இதுதான் நேற்று வரை நிலை.
இன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் தலையிட்டு அதை
முடிக்கிறார்கள் என்று சொன்னால் மெத்த மகிழ்ச்சி.

அடுத்து, மெட்ராஸ் பெர்ட்டிலைசர்ஸ். 20 மாதங்களாக
அந்த தொழிலாளிகள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.
அந்தக் காண்ட்ராக்ட் முடிவதற்கு முன்னதாகவே அவர்கள்
வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். வேண்டுமென்றே, 1,300
தொழிலாளர்கள் பல்வேறு இயக்கங்களை நடத்தி
யிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய உரிமைக்காக போரா
டும்போது எப்படி அங்கே காவல்துறை சென்று அவர்களை
அடக்கியிருக்கிறது என்ற விவரத்திற்குள் நான் போக
விரும்பவில்லை. அண்மையில்கூட அவர்கள் பெரிய ஆர்ப்
பாட்டம் நடத்தினார்கள். ஊர்வலமாக வந்தார்கள். 1,000
பேர் கைது செய்யப்பட்டு ராஜரத்தினம் ஸ்டேடியத்திலே
கொண்டு போய் வைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.
காண்ட்ராக்ட் முடியும் முன்பே அவர்கள் வேலையிலிருந்து
நீக்கப்பட்டால் இது சம்பந்தமாக அந்தத் தொழிற்சங்கத்
தலைவர்கள் நம்முடைய தொழிலாளர் நல ஆணையரிடத்தில்
பேசப் போகும்போது அவருக்கு வந்தது கோபம், அவர்
சொல்லியதை கேட்கவில்லை என்று சொன்னால், " you get
out " என்று சொல்லக்கூடிய நிலைமைகள்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்னும் மூன்று
மணித்துளிகளுக்குள் முடியுங்கள். ஒவ்வொரு உறுப்பினருக்கும்
15 மணித்துளிகள் என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. சி. கோவிந்தராஜன் : ஏற்கெனவே 30 நிமிஷம்,
40 நிமிஷம் எல்லாம் பேசியிருக்கிறார்கள். (குறுக்கீடு) தொழி
லாளர் நலச் சட்டங்கள், ஒப்பந்தங்கள், நீதிமன்றத் தீர்ப்புகள்
ஆகியவற்றைச் செயல்படுத்துவதில் இந்த அரசு கறாராக இருக்
கும், உறுதியாக இருக்கும் என்று கடந்த ஆண்டிலே கூறப்
பட்டது. அது அப்படி இருக்கிறதா ? விளக்க எனக்கு நேரம்
இல்லை. பல்வேறு நிலைமைகளைப் பார்க்கும்போது, அது
கறாராக இல்லை, அவர்களுடைய இஷ்டத்திற்கு அது போய்க்
கொண்டிருக்கிறது. அது பூராவும் நடைமுறைக்கு வரவில்லை.
அதற்கு அடுத்து தொழிலாளர் நல இலாக்கா செயல்படக்கூடிய
நிலைமைகள் பற்றி கூற விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்
பினர் நம்முடைய இரா. மோகன் அவர்கள் இங்கே பேசினார்
கள். பல்வேறு இடங்களிலே, தனியார் துறையிலே இருக்கக்
கூடிய முதலாளிகள் அவர்களுடைய இஷ்டத்திற்கு, அவர்க
ளுக்கு வேண்டிய சங்கங்களை உருவாக்கி ஊக்குவித்து வரு
கின்றார்கள். நியாயப் பிரகாரம், சட்டப் பிரகாரம் நடக்காமல்
இருக்கக்கூடிய அந்த முதலாளிகளைத் தடுத்து நிறுத்தி, சட்டப்
பிரகாரம் நடத்துவதற்கு நம்முடைய தொழிலாளர் நல
இலாக்கா அதிகாரிகள் செயல்படுவதில்லை. இது என்னுடைய
அனுபவம். 40 ஆண்டுக் காலமாக மட்டுமல்ல, குறிப்பாக
இந்த அரசு வந்த பிறகும்கூட, அதற்கு முன்னாலும்கூட, என்
னுடைய அனுபவத்தை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

11-55 மணி

உங்களுக்கு நன்றாகத் தெரியும், தொழிலாளர் நலம்
காக்கக்கூடிய அரசு என்று நாம் சொன்னாலும் அது யார்
மூலமாக காக்கப்படவேண்டும். தொழிலாளர் நல இலாக்கா
அதிகாரிகள் மூலமாகத்தான் காக்கப்பட வேண்டும். அமைச்சர்
களே நேரில் சென்று அந்தக் காரியங்களை செய்ய முடியாது.
அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள் உங்களுடைய கொள்கையை
நிறைவேற்றக்கூடிய மனோபாவம் கொண்டவர்களாக
இருக்கிறார்களா என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அன்றையதினம் வட லூர் சேஷசாயி நிறுவனத்தின் லே ஆப்
பிரச்சினையை இங்கே எழுப்பினேன். மாண்புமிகு தொழி
லாளர் நல அமைச்சர் அவர்கள் லே ஆப் வராமல் தொழி
லாளர்கள் பக்கமாக இந்த அரசு இருக்கும் என்ற உறுதி
மொழியைக் கொடுத்தார். ஜனவரி 25-ஆம் தேதி, 29-ஆம்
தேதி லே ஆப் செய்யப்படுகிறது. ஜாயின்ட் கமிஷனர் அனு
மதி வழங்குகிறார் சட்டத்திற்கு விரோதமாக. முதலாளிகள்
சொல்வதை ஏற்றுக் கொண்டு, அனுமதி கொடுக்கப்படுகிறது.
அதற்குப் பிறகு மீண்டும், மீண்டும் நாங்கள் இங்கே கிளப்பியக்
காரணத்தால் பட்ஜெட் உரையின் இறுதியில் பதில் அளிக்கும்
போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே



இந்தப் பிரச்சினையில் லே ஆப் என்பது பாதி சம்பளம் என்று
இருந்தாலும் அது அச்சத்தைக் கிளப்புகிறது, அவர்கள்
கஷ்டப்படுகிறார்கள் என்ற முறையில் வற்புறுத்துவதால்
அந்த லே ஆப் அறவே நீக்கப்படுவதற்கு இந்த அரசு முடிவு
செய்கிறது என்ற உறுதியை நான் இங்கே சொல்லுகிறேன்
என்று சொன்னார்கள். பத்திரிக்கைகளிலும் செய்தி வெளி
வந்தது. அது குறித்து தொழிலாளர் ஆணையாளர் அவர்
களிடம் கேட்டபோது அவர் என்ன சொல்கிறார், நீங்கள்
ஒரு எம். எல். ஏ., சட்டமன்றத்தைப் பயன்படுத்துகிறீர்கள்,
அரசியலுக்காக; முதலமைச்சர் அவர்கள் அதற்கு ஒரு பதில்
சொல்கிறார் என்று தான் அவர் சொல்கிறாரே தவிர இங்கே
சட்டமன்றத்தில் நடப்பதும் அமைச்சர் அவர்கள் வாக்குறுதி
கொடுப்பதும் அவர்களுக்கு சம்பந்தமில்லை, அவர்கள் நடை
முறைப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்ற முறையில்
இந்த பதில் வருகிறது என்பதை இந்த சமயத்தில் நான் உங்
களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். Payment of
Wages Act மீறப்படுகிறது. அதுவும் வடலூரில் கூட
10-ஆம் தேதி கொடுக்க வேண்டிய சம்பளம் 2 மாதங்கள்,
3 மாதங்கள் கழித்தாவது கொடுத்து விடு என்று
ஆலோசனைத்தான் இங்கே இருந்து தொழிலாளர் நல அதிகாரி
கள் இடத்திலிருந்து போகிறது, கொடுத்தால் போதும் என்ற
முறையில், சட்டத்தை நீங்கள் மீறுகிறீர்கள் என்று சொல்
வதற்கு அவர்களால் முடியவில்லை. இப்படித்தான் வருகிறது.
இந்த லே ஆப் சம்பந்தப்பட்ட வரையில் மாண்புமிகு முத
லமைச்சர் அவர்கள் சொன்னால் என்ன ; தொழிலாளர்
நலத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னால் என்ன
அந்த I. D. Act-ல் எங்களுக்கு 25 (M) பிரிவு படி லே ஆப்
கொடுக்க எங்களுக்கு அதிகாரம் இருக்கிறது என்ற
தோரணையில் அந்த ஜாயின்ட் கமிஷனர் ஆப் லேபர் அவர்
கள் அன்றைக்கு லே ஆப்-க்கு அனுமதி கொடுத்து இருக்
கிறாரே தவிர அமைச்சர் சொல்லியிருக்கிறார் என்பதைப்
பற்றி அவர் கவலைப்படவில்லை.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற நட
வடிக்கை என்பது வேறு; சட்டத்தின் கீழ் நடவடிக்கை
எடுக்கக்கூடிய quasi judicial proceedings என்பது வேறு;
எனவே அவர்கள் நடத்தக்கூடிய அந்த நடவடிக்கைகளில்
நாம் எப்படி தலையிடுவது ?

திரு. சி. கோவிந்தராஜன் : தலைவர் அவர்களே, அன்
றைக்கு சட்டமன்றத்தில் இந்தப் பிரச்னை வந்தபோது
அமைச்சர் அவர்கள் சட்டப் பிரகாரம் நீங்கள் பார்த்துக்
கொள்ளுங்கள் என்று சொல்லியிருந்தால் பரவாயில்லை. இந்த
அரசு சம்பந்தப்பட்ட வரைக்கும் லே ஆப் இல்லாமல் செய்யும்
என்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்
அவர்கள் அன்றைக்கு உறுதி கொடுத்தார்கள் அது ஏன்?. அது

[திரு. சி. கோவிந்தராஜன்] [1990 ஏப்ரல் 12

மட்டுமல்லாமல் 28-ஆம் தேதி அன்றைக்கு மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களே உறுதி கொடுத்தார்கள். அங்கே
அப்படி நிலைமை இருக்கும்போது நாங்கள் யாரிடத்தில்
சென்று முறையிடுவது ; அமைச்சர் இடத்திலும்; முதலமைச்சர்
இடத்திலும் தானே சென்று முறையிட முடியும்?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
திரு. கோவிந்தராஜன் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு
முன்னாள் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள்
அருமையான பதிலைத் தந்து இருக்கின்றார்கள். மேலும் எந்த
ஆணையாளரிடம் தீர்ப்பு வழங்கப்பட்டதோ அதை ஆணை
யாளரிடம் அவரே மேல் முறையீடு செய்து இருக்கிறார்கள்.
அதற்காக விவாதித்து இருக்கிறார்கள். நீங்கள் செய்தது தவறு
என்று அவர்களிடம் சொல்லியிருக்கிறார்கள். அது இன்னும்
தீர்ப்பு வழங்கப்படாமல் இருக்கிறது. அப்படி தீர்ப்பு மறு
படியும் லே ஆப் என்று வழங்கப்படுமானால் நீங்கள் இன்றைக்கு
எங்களைப் பார்த்துச் சொல்லிக் கொண்டு இருக்கிற குற்றச்
சாட்டு சரியாக இருக்கும். தீர்ப்பு வழங்கிய பிறகு நீங்கள்
எங்களைப் பார்த்துச் சொல்லுங்கள் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

திரு. சி. கோவிந்தராஜன் : தலைவர் அவர்களே, லே ஆப்
அனுமதிப்பதற்கு உடனடியாக உத்திரவு வழங்கினார்கள்.
அதிக அவகாசம் 60 நாட்கள் என்று இருந்தும் கூட ஒரு மாதத்
திற்குள்ளே கொடுத்தார்கள். நான் 28-ஆம் தேதி
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே பதிலை கொடுத்த
போது அன்றைக்கு தான் நான் சென்று 2½ மணி நேரம் வாதம்
செய்தேன் அந்த கோர்ட்டில். இன்றைக்கு 15 நாள் ஆகிறது.
இதுவரை அதற்கு தீர்ப்பு ஏன் வரவில்லை என்பது தான்
என்னுடைய கேள்வி இங்கே.

கடந்த காலத்தில் தொழிலாளர்கள் கிளர்ச்சிகள் அடக்கப்
பட்டன; அதை எதிர்த்து நாம்—தி.மு.க. மார்க்சிஸ்ட் கட்சி
அனைவரும் கண்டனக் குரல் எழுப்பினோம்; பல்வேறு
கிளர்ச்சிகளைச் செய்தோம்; ஆனால் அதே பழைய பாணி
யில் இன்றைக்குப் போகக்கூடிய நிலைமை சரியல்ல. தொழி
லாளர் கிளர்ச்சியை ஏகபோக முதலாளிகள் தான் கண்டு பயப்
படுவார்கள். அவர்களுக்கு தான் வயிற்று வலி வரும். நீங்கள்
ஏன் அவைகளைக் கண்டு ஆத்திரப்படுகிறீர்கள்? நான் ஒரு
விஷயத்தை குறிப்பிட விரும்புகிறேன். தொழிலாளர்களின்
கிளர்ச்சி குறித்து உங்களுடைய அணுகுமுறை சரியில்லை என்று
நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தோழமை உணர்வோடு
அதை ஏன் நான் சொல்லுகிறேன் என்று சொன்னால் இப்போது
வருவாய்த் துறை அலுவலர்களுடைய—அவர்கள் தொழிலாளர்
களாக இல்லாவிட்டாலும் வேலை நிறுத்தம்—நடைபெற்று
வருகிறது.



1990 ஏப்ரல் 12] [திரு. சி. கோவிந்தராஜன்]

12-00 மணி

அந்த வேலைநிறுத்தத்தை உடைப்பது, வேலை நிறுத்தத்
தத்தைக் கைவிட்டதால்தான் பேச்சுவார்த்தைக்கு வருவது
என்று முதலாளிகள்தான் சொல்வார்கள். அப்படிப்பட்ட ஒரு
அணுகுமுறையை நீங்கள் இங்கே, ஒரு அரசாங்க இயந்திரத்
தில் செயல்படக்கூடிய 15 ஆயிரம் ஊழியர்கள் இருக்கக்
கூடிய துறையில் அப்படிப்பட்ட அணுகுமுறையை மேற்கொள்
கிறீர்கள். அது சரியல்ல, அவர்களைக் கைது செய்துவிட்டு,
ரிமாண்டில் வைத்துவிட்டு, பேச்சுவார்த்தைக்கு கதவைத்
திறந்திருக்கிறோம் வாருங்கள் என்று சொன்னால், எப்படி
நடக்கும்? எனவே, இந்த அணுகுமுறை சரியல்ல.
தொழில்துறையில் இருக்கக்கூடிய முதலாளிகளும் இதே
முறையைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு
வழிவகுக்கிறமாதிரி, இது இருந்துகொண்டிருக்கிறது என்று
இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஒரு விஷயத்தை நான் உங்களிடத்திலே தெளிவாக எங்
களுடைய கட்சியின் சார்பாக சொல்லிக் கொள்கிறேன்.
எங்களைப் பொறுத்தவரையில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி
இந்த அரசுக்கு ஆதரவுதான், திராவிட முன்னேற்றக் கழகத்
திற்கு தோழமைக் கட்சிதான். ஆனால், தொழிலாளர்களுடைய
நலன், தொழிலாளர் வர்க்கத்தினுடைய நலன், பாட்டாளி
வர்க்கத்தினுடைய நலன் என்று வரும்போது, அவர்களுடைய
நலனை விட்டுக் கொடுப்பதற்கு நாங்கள் என்றைக்கும் தயா
ராக இல்லை. அவர்களுக்காக எந்தவிதமான தியாகமும்
செய்து, நாங்கள் காப்பாற்றுவோம். எனவே, அந்த விஷயத்
தில் காம்ப்பரமைஸ் இல்லை.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுகின்ற கட்சி
யான திராவிட முன்னேற்றக் கழகம், மார்க்சிஸ்ட் கட்சி
யிடம், தொழிலாளர் நலனை விட்டுக் கொடுங்கள் என்று என்
றைக்கும் பேரத்தில் உறுதியாக ஈடுபடாது என்று தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தராஜன்: அதேமாதிரிதான்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடித்து
விடுங்கள்; மாலையில் வேறு பேச வேண்டியிருக்கிறது.

திரு. சி. கோவிந்தராஜன் : நெல்லிக்குப்பம் ஈ.ஐ.டி.
பாரி நிறுவனத்தின் முதலாளியைக் கட்டுப்படுத்த முடிய
வில்லை. கேன்டீனைப் பற்றி பேசினார்கள் நம்முடைய
மாண்பமிகு உறுப்பினர் திரு. மோகன் அவர்கள். ஈ.ஐ.டி.

[திரு. சி. கோவிந்தராஜன்] [1990 ஏப்ரல் 12

பாரி கம்பெனியில் ஓர்க்ஸ் கமிட்டியினுடைய சட்டப் பிர
காரம் நடத்த வேண்டியது; அப்படி நடத்தப்படாவிட்டால்,
பிராசிக்யூஷன் செய்யலாம் என்று உள்ளது. அதைக்கூட
செய்வதற்கு நம்முடைய தொழிலாளர் நல இலாகாவினால்,
முடியவில்லை. அவர்கள் முழு மனோபாவமே, " Mo e
loyal than the King'' என்று சொல்லப்படுவதுபோல்
முதலாளிகளைக் காட்டிலும் அதிகமான முதலாளித்துவ
மனப்பான்மையோடு தொழிலாளர் நல இலாக்கா அதி
காரிகள் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான்
சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, தொழிற்சாலை சட்டங்கள்—Chief Inspector
of Factories, Deputy Chief Inspector of Factories இவர்
களைப் பற்றி கொள்கைக் குறிப்பிலே கூறப்பட்டிருக்கிறது
அவர்கள் மாதத்திற்கு ஒரு முறை வந்து விஜயம் செய்து
பார்ப்பார்கள் என்று. வேலூரிலே இருக்கக் கூடிய
Deputy Chief Inspector of Factories — மற்ற இடங்
களில்கூட, அப்படித்தான் இருக்குமென்று நினைக்கிறேன்.
2, 3 மாவட்டங்களுக்கு அவர் பொறுப்பு. அவர்கள், மாதந்
தோறும் அங்கிருக்கக்கூடிய தொழிற்சங்கப் பிரதிநிதிகளை
அவர்கள் இருக்கக்கூடிய இடங்களுக்கு அழைக்கிறார்களே தவிர,
அவர்களே நேரடியாக வந்து பார்ப்பதில்லை. எங்களைக்
கலந்து பேசுவது இல்லை.

தொழிற்சாலைகள் சட்டத்தில் " First Day of
the Week is a Holiday '' என்று சொல்லப்பட்டிருக்கிறது.
ஆனால் தொடர்ந்து ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையிலும்
வேலை செய்யவேண்டிய சூழ்நிலை பாரி கன்பெக்ஷனரி
கம்பெனியில் இருக்கிறது.

மூடிய மில்கள் திறப்பது சம்பந்தமாக இங்கே கூறப்பட்
டது. அதற்கான முயற்சிகள் எடுத்துக் கொண்டிருப்பது
குறித்து, நாங்கள் பாராட்டுகிறோம். ஆனால் மில்கள் எப்படி
மூடப்படுகிறது? மில்களை மூடிவிட்டு, பல நிபந்தனைகளை
விதிக்கிறார்கள். ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் பற்றி குறிப்
பிட்டிருக்கிறீர்கள். மெட்டல் பாக்ஸ் பற்றி குறிப்பிட்டிருக்
கிறீர்கள். எல்லா முதலாளிகளும் என்ன செய்கிறார்கள்
என்று சொன்னால், மில்களை மூடிவிட்டு, பல்வேறு நிபந்
தனைகளை விதிக்கிறார்கள். இவ்வளவு ஆட்களைத்தான்
வைத்துக் கொள்வோம். இவ்வளவு சம்பளம்தான் தருவோம்
என்று சொல்லி நிபந்தனைகளை விதிக்கிறார்கள். அப்படி,
பல ஆண்டுக்காலம் அவதிப்பட்ட தொழிலாளர்கள் வேறு வழி
இல்லாமல், அந்த நிபந்தனைகளுக்கு ஆளாகவேண்டிய ஒரு
சூழ்நிலை ஏற்படுகிறது. இந்த விஷயத்தில் நாங்கள் ஏதாவது



1990 ஏப்ரல் 12] [திரு. சி. கோவிந்தராஜன்]

எதிர்த்துக் கேட்டால் எங்கள் மீது உங்களுடைய சட்டம் பாய்
கிறது. அல்லது, காவல்துறை வருகிறது. முதலாளிகள் மீது
நடவடிக்கை எடுப்பது இல்லை.

அதே நிலைமையில்தான், இப்போது பின்னி ஆலை
பிரச்சினை நடைபெற்று வருகிறது. அந்த ஆலையைப்
பொறுத்தவரையில், கடந்த 10 ஆண்டுகளில், இரண்டு முறை
மூடப்பட்டு, 4 ஆயிரம் உழைப்பாளர்கள் ஏற்கனவே வெளி
யே தள்ளப்பட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், நான்கு
முறை தனியார் முதலாளிகள் மாறி மாறி அந்த ஆலையை
ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இப்போது வந்திருக்கக்கூடிய
ஒரு முதலாளி வேறு சாம்ராஜ்யத்திலிருந்து இந்த சாம்ராஜ்
யத்திற்கு வந்திருக்கிற அந்த முதலாளி, பல்வேறு நிபந்தனை
களை விதித்து, அந்த ஆலையும் இப்படிப்பட்ட மோசமான
நிலையில் இருக்கிறது. உஷாராக நீங்கள் நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்று இந்த சமயத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.
இப்படிப்பட்ட நிலைமையில் பல்வேறு பஞ்சாலைகள் மூடப்
பட்டிருக்கின்றன. பெரிய பெரிய என்ஜினியரிங் நிறுவனங்
களின் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அடுத்து, 'உழைப்பவர் உலகம்' என்ற பத்திரிகையை
இப்போது நீங்கள் வெளியிடாமல் தடுத்து நிறுத்தி விட்டீர்கள்.
அது பல்வேறு விவரங்களை தொழிலாளர்களுக்கு கொடுத்து
வந்தது. தொழில் நீதிமன்றங்களின் தீர்ப்புகள், பஞ்சப்படி
போன்ற புள்ளி விவரங்களையெல்லாம் கொடுத்து வந்தது.
பணம் இல்லையென்ற காரணத்திற்காக நிறுத்தி விட்டீர்கள்.
அதைச் சொல்ல வேண்டிய அவசியம் இருப்பதால் நான்
கூறுகிறேன். லேபர் வெல்ஃபேர் போர்டு செக்ரட்டரி முறை
கேடாக பண விஷயத்தில் நடந்த காரணத்தினால், அவர்மீது
நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இப்படி எல்லாம் 'லேபர்
வெல்ஃபேர் பண்ட்' டினுடைய பணம் செலவழிக்கப்படுகிறது.

அடுத்தபடியாக, இறுதியாக, நான் உங்களிடத்திலே
சொல்ல விரும்புவது, ஐ.டி.ஐ. அலுவலர்கள், மாணவர்களு
டைய பிரச்சினைகளை உடனடியாக தீர்ப்பதற்கு ஏற்பாடு
செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்
பெற்றது).

தொழிற்சாலைகளைப்பற்றிகூட இங்கே குறிப்பிட்டார்கள்.
ஜின்னிங், வேஸ்ட் காட்டன் போன்ற தொழில்களில், இரவு
நேரங்களில் பெண்கள் அதிகமாக வேலை வாங்கப்படுகிறார்
கள். குழந்தைக் காப்பகங்கள் கிடையாது. கழிப்பிடங்கள் கூடக்
கிடையாது. இறுதியாக, இங்கே சென்னையிலே, தொழி
லாளர்களுடைய இயக்கங்கள், கிளர்ச்சிகள் அடக்கப்படுகின்றன.

[திரு. சி. கோவிந்தராஜன்] [1990 ஏப்ரல் ..

12-05 மணி

நசுக்கப்படுகின்றன என்ற அந்த வார்த்தைக்கு நான் போக
வில்லை. தொழிலாளர்களுக்கு எந்த அளவிற்கு உரிமைகள்
கொடுக்கப்பட வேண்டுமோ அதைக் கொடுக்கவேண்டும். ஆனால்
அடக்கப்படுகிறார்கள். உங்கள் ஆட்சியிலேகூட இது நீடிக்
கிறது. இப்படிப்பட்ட பிரச்சினைகளையெல்லாம் ஓரளவிற்கு
சீர்தூக்கிப் பார்த்து நிச்சயமாக நீங்கள்......

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உரிமைகள் அடக்கப்
படுகிறது அல்லது ஒடுக்கப்படுகிறது என்று சொல்வதைவிட,
ஒழுங்குபடுத்தப்படுகிறது என்பதுதான் உண்மை.

திரு. சி. கோவிந்தராஜன் : ஒழுங்குபடுத்தப்படுகிறது என்
பது உங்களுடைய வியாக்கியானம். ஆனால் தொழிலாளர்கள்
அடக்கப்படுகிறார்கள். உரிமைகள் நசுக்கப்படவில்லை. அடக்
கப்படுகின்றன. உரிமைகள் கட்டுப்படுத்தப்படுகின்றன என்
பதைத்தான் நான் இங்கே கூற விரும்புகிறேன். அந்த உரிமைகள்
அளிக்கப்படவேண்டும். உங்களுடைய ஆதரவு இருந்தால்,
அரசினுடைய ஆதரவு இருந்தால், எந்தெந்த முதலாளிகள்
என்னென்ன அட்டகாசங்கள் செய்கிறார்கள் என்று மாண்பு
மிகு உறுப்பினர் மோகன் அவர்கள் குறிப்பிட்டார்களோ அவை
களை அவர்கள் செய்ய முடியாது. எனவே இதையெல்லாம்
பரிசீலித்து அரசு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு, எனக்கு
வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

திரு. டி. கே. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, தொழிலாளர் நல மானியக் கோரிக்கையின்
மீது எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கு என்
னுடைய நன்றியைத் தெரிவித்து, சில கருத்துக்களைச் சொல்ல
விரும்புகிறேன்.

நமது தமிழினத் தலைவர், ஒப்பற்றத் தலைவர், தமிழகத்
தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்ச
ராகப் பொறுப்பேற்று, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்
பிலே, தொழிலாளர் நலன்களுக்காக, தொழிலாளர்களுக்காக,
அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளை இங்கே நண்பர் மோகன்
அவர்கள் பேசுகின்றபோது சிறப்பாக பாராட்டிப் பேசினார்கள்.

அதிலே ஒன்றுதான், மாதவரம் பால்பண்ணைத் தொழிலாளர்
களுக்கு வாழ்வளித்தது, புரட்சி நடிகர் முதலமைச்சராக இருந்த
போது 1500 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு, கோர்ட் உத்தர
வைக்கூட அமல்படுத்தாத நிலையிலே அந்த 1500 தொழிலாளர்
களும் வேலையிழந்து நடுவீதியிலே தவித்த காட்சியை நாம்



1990 ஏப்ரல் 12] [திரு. டி.கே. பழனிச்சாமி]

பார்த்திருக்கிறோம். மாண்புமிகு டாக்டர் கலைஞர்
அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு
சட்டப்பேரவையிலே நான் பேசுகின்றபோது, அந்தத் தொழி
லாளர்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்கவேண்டுமென்று
கேட்டுக்கொண்டேன். அருமைத் தலைவர் அவர்கள், அவரு
டைய உரையிலே உடனடியாக, பாதிக்கப்பட்ட அந்த மாத
வரம் பால்பண்ணைத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுத்
திட வேண்டுமென்ற உத்தரவினைப் போட்டார்கள். இன்
றைக்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் மகிழ்ச்சி
யோடு திருவொற்றியூர் தொகுதியிலே இருக்கிறார்கள் என்பதை
இந்த நேரத்திலே நன்றி உணர்வோடு நான் சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன். இங்கே பேசிய நண்பர் கோவிந்தராஜன்
அவர்கள்........

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு துணைச் சபாநாயகர்
அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தர
விட்டது பிப்ரவரி மாதம் 1989 ஆம் ஆண்டாகும். இந்த சட்டப்
பேரவையிலே அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சொன்னதை
வைத்துக்கொண்டு அதிகாரிகள் 24–2–1989-லே உத்தரவும்
இட்டார்கள். ஆனால் 489 பேரைத்தான் அவர்கள் வேலைக்கு
எடுப்பதாக ஒத்துக் கொண்டிருக்கிறார்களே தவிர 581 பேருக்கு
வேலை தரமுடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த
489 பேரிலும், அவர்கள் உண்ணாவிரதத்தில் கலந்துகொண்ட
அந்த நாட்களையெல்லாம் கணக்கில் எடுக்கக்கூடாது என்பது
மட்டுமல்ல, புதிதாக வேலைக்கு சேருகிறோம் என்ற ஒப்பந்தத்
தின் அடிப்படையிலே நீங்கள் வருகிறீர்களா என்று 400-க்கும்
மேற்பட்டவர்களைக் கேட்டு இருக்கிறார்கள். அதாவது, 581
பேருக்கு வேலையே இல்லை என்று சொல்லிவிட்டார்கள். 489
பேரிலே, நூற்றுக்கணக்கான பேரை, நாங்கள் இப்போதுதான்
புதியதாகச் சேருகிறோம் என்று எழுதிக் கொடுத்தால் சேர்க்
கிறோம் என்று சேர்த்து இருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, 1500 தொழிலாளர்களுக்கு
வேலையே இல்லை என்று கோர்ட் உத்தரவிட்டுகூட, வேலை
தரமுடியாதவர்களை அழைத்து, புதியதாக நாங்கள் வேலை
தருகிறோம் என்று சொல்கிறோமே அதையாவது தாங்கள்
பாராட்ட வேண்டாமா?

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைச்
சபாநாயகர் அவர்களே, பணி மூப்பு அத்தனையும் போய்
விடும் என்பதற்காகச் சொல்கிறேன். தொழிலாளர்களுக்காகச்
சொல்கிறேன்.

[1990 ஏப்ரல் 12

12-10 மணி

திரு. டி, கே. பழனிச்சாமி : இலக்கியச் செல்வர் அவர்
களுக்கு ஒன்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.
9 ஆண்டுக் காலமாக நடு வீதியில் இருந்தவர்களில் ஒரு 500
பேருக்காவது வேலைவாய்ப்பு கொடுத்த தலைவர் அவர்களுக்கு
நன்றி தெரிவிக்கவில்லையே என்று நான் கொஞ்சம் வருந்து
கிறேன். குறைகளைச் சொல்லிக்கொண்டிருப்பதை விட
பாராட்டுவதற்கு அவர்கள் பக்குவப்படவேண்டும் என்று நான்
தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே,
அந்தப் பக்குவத்தை நான் பலரிடமிருந்து பெற வேண்டிய
மாணவனாகத்தான் இருக்கிறேன். உங்களிடமிருந்தும் பெறு
கிறேன். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் என்பவர் உங்களுக்கு
மட்டுமல்ல எனக்கும் நமக்கும், தமிழ்நாட்டுக்கும், அவர் சொன்ன
உத்தரவு நிறைவேற்றப்படவில்லை என்றால் அவருக்காக நான்
குரல் கொடுக்கிறேன். நீங்கள் அவருக்காகக் குரல் கொடுக்கவில்
லையா என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. டி. கே. பழனிச்சாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, எங்கள் தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்
பேற்ற பிறகு தாம்பரத்திலே மூடப்பட்ட ஆலையை, மோட்டார்
தொழிற்சாலையைத் திறந்திருக்கிறார்கள். வட சென்னையில்
இருக்கிற மெட்டல் பாக்ஸ் தொழிற்சாலை திறக்கப்பட்டிருக்
கிறது. அதுமட்டுமல்ல, இன்றைக்குத் திருவொற்றியூர் தொழி
லார்கள் நகரத்திற்கு வேலைக்கு வர வேண்டுமென்றால், கத்தி
வாக்கத்திற்கு வேலைக்கு வரவேண்டும் என்றால், போக்கு
வரத்து 3, 4, 5 ஆண்டுகளாகப் பழுதடைந்திருக்கிறது.
தொழிலாளர்கள் குறித்த நேரத்தில் வேலைக்கு வர முடியாத
நிலைமை இருந்தது. இன்றைக்கு 13 கோடி ரூபாயைத் தொழி
லாளர் நலனுக்காக, அவர்களுக்காகப் பாலம் கட்டுவதற்காக
ஒதுக்கிய தானைத் தலைவர் அவர்களுக்கு நான் என்னுடைய
நன்றியைத் திருவொற்றியூர் தொகுதி மக்களின் சார்பாகத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு உறுப்பினர் நண்பர் கோவிந்தராஜன்
அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். திருவொற்றி
யூர் தொகுதியில் அடங்கிய மணலியில் மெட்ராஸ் உரத் தொழிற்
சாலை இருகிறது. கவர்னர் காலத்திலே அங்கே மிகப் பெரிய
ஸ்ட்ரைக் நடந்து ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலை செய்ய
முடியாமல் ஸ்ட்ரைக் செய்தார்கள். கவர்னர் ஆட்சியின்போது
அந்த போலீஸ் நிர்வாகம், அவர்கள் கேட்டுக்குக் கூட போக
அனுமதிக்கவில்லை. உண்ணாவிரதம் இருப்பதற்காக கேட்டுக்
குக் கூட போக முடியவில்லை. அந்த நிர்வாகம்



1990 ஏப்ரல் 12] [திரு. டி. கே. பழனிச்சாமி]

அந்தத் தொழிலாளர்களைப் பழி வாங்கியது. கலைஞர் ஆட்சி
ஏற்பட்ட பிறகுதான் ஆங்கங்கே அருமை நண்பர் திரு. வரத
ராஜன் அவர்கள் கூறியதைப் போல இன்றைக்குப் போலீஸ்
அராஜகத்தை ஒழித்து, அங்கே தொழிலாளர்கள் உண்ணாவிரதம்
இருந்து வருகிறார்கள். எனவே நண்பர் கோவிந்தராஜன் அவர்
கள் இதைத் தொழிலாளர் நல அரசு என்று எடுத்துக்கொள்ள
வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஓராண்டுக் காலமாகப் போராடிய தொழிலாளர்களால் கேட்
டுக்குக் கூட போக முடியவில்லை. அங்கே கொட்டா போட
முடியவில்லை உண்ணாவிரதம் இருப்பதற்கு. ஆனால் இப்
போது அந்த கேட் அருகே கொட்டா போட்டு உண்ணாவிரதம்
இருந்து போராடுவதற்குரிய உரிமையை இந்த அரசுதான் தந்
திருக்கிறது. ஆனால் அதைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க
வேண்டும் என்று அமைச்சரிடத்திலே மனுக்கள் கொடுத்து பேசப்
பட்டு வந்தது. ஆனால் லேபர் கமிஷனருக்குச் சென்ற பிறகு
லேபர் கமிஷனர் முரட்டுத்தனமாக சிலவற்றைச் சொன்
னதாக நான் அறிகிறேன். அந்தப் பிரச்சினையைப் போக்கி
தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் 13,000
தொழிலாளர்களுக்கு வேலை கிடைத்திட உதவி செய்யவேண்டும்.
13,000 தொழிலாளர்களும் ஆதி திராவிடர்கள். அவர்
களுக்கு எப்படியும் வேலை கொடுத்தாக வேண்டும். அந்த
ஸ்ட்ரைக்கைக்கூட உடைத்துக் கொண்டிருக்கின்ற காங்கிரஸ்காரர்.
ஒருவருக்குத்தான் ஒப்பந்தம் கொடுக்கப்பட்டு அங்கே காங்கிரஸ்
காரர்கள் வேலை செய்து கொண்டு வருகிறார்கள். எனவே
அந்த நிலைமையைப் போக்குவதற்கு உடனடியாக நமது தொழி
லாளர் நல அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுத்துக்
கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்குத் தமிழகத்தில் எத்தனையோ தொழிற்சாலை
களைத் திறந்தாலும் கூட ஒரு சில முதலாளிகள் பிடிவாதமாக
தொழிற்சாலைகளை மூடிக் கொண்டு வருகிறார்கள்.
இருந்து எடுத்துக் கொண்டால் அசோக் நிறுவனத்
கும்மிடிப்பூண்டியை தொழிற்சாலையில் வேலை பார்க்கும்
திற்குச் சொந்தமான தொழிலாளர்கள் இன்றைக்கு வேலை
ஆயிரத்திற்கும் மேற்பட்ட இருக்கிறார்கள். அவர்களைக் கவனிக்கி
நிறுத்தத்தில் ஈடுபட்டு கேட்டுக் கொள்கிறேன்.
வேண்டும் என்று நான்

அதுமட்டுமல்ல, ஒரே ஒரு பல்ப் தொழிற்
சாலையான கல்பனா லேம்ப்ஸ் தொழிற்சாலை என்னு
டைய தொகுதியான மாதவரத்தில் இருக்கிறது. அங்கே 400-
க்கும் மேற்பட்ட பெண்கள் வேலை செய்கிறார்கள். கலைஞர்
அவர்கள் தாய்க் குலத்தின் முன்னேற்றத்திற்கென பல திட்
டங்களை அறிவித்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையில்
அங்கே பணியாற்றுகின்ற 400 பெண்களுக்கும் வாழ்வளிக்கக்

[திரு. டி. கே. பழனிச்சாமி] [1990 ஏப்ரல் 12

கூடிய வகையில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
ஆனால் அந்தத் தொழிற்சாலையில் தயாரிக்கப்படக்கூடிய பல்பு
களை எல்லாம் தமிழ்நாடு அரசு வாங்குவதில்லை. அதற்கு
மாறாக மைசூர் லேம்ப்ஸ் நிறுவனத்திலே தயாரிக்கப்படுகின்ற
பல்புகளைத்தான் வாங்குகிறார்கள். வெளி மாநிலங்களில்
தயாரிக்கப்படும் பல்புகளைத்தான் வாங்குகிறார்கள்.
கல்பனா லேம்ஸ் பல்பை வாங்கினால் அந்த 400 பெண் தொழி
லாளர்களின் வாழ்க்கைக்கு வசதி ஏற்படும். அவர்கள் இன்பகர
மாக வாழ்வார்கள். அந்தத் தொழிற்சாலையை தமிழ்நாடு
அரசே எடுத்துக் கொள்ளவேண்டும் என்றும் இந்த நேரத்தில்
நான் கேட்டுக்கொள்கிறேன்.

12-15 மணி

''கல்பனா லேம்ப்ஸ்'' தொழிற்சாலையை தமிழக அரசே
ஏற்றுக் கொள்ள வேண்டும். அதன் மூலமாக அங்கே பணியாற்று
கின்ற தொழிலாளர்களுக்கு அதிக ஊதியம் கிடைக்கின்ற
நிலைமை ஏற்படும். அந்த தொழிற்சாலை சங்கத்திற்கு நான்
தான் தலைவராக இருக்கிறேன். அந்தத் தொழிற்சாலைக்கு
மூன்பாக கோர மண்டலம் என்ற ஒரு தொழிற்சாலை இருக்
கிறது. அது இன்றைக்கு 3 மாத காலமாக மூடப்பட்டிருக்கிறது.
அதை உடனடியாகத் திறப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்
கித் தர வேண்டும். கனம் உறுப்பினர் திரு. கோவிந்தராஜன்
அவர்கள் மிகக் கடுமையாக இங்கே விமர்சனம் செய்தார்.
தோழமை இயக்கமாக இருந்தாலும், அவர் சொன்ன சில
கருத்துக்களை நாங்கள் ஆதரிக்கிறோம் என்று சொல்ல மாட்
டோம். ஏனென்றால், இந்த அரசு நிச்சயமாக—சத்தியமாக
தொழிலாளர் அரசுதான் என்பதை நீங்கள் உணர வேண்டும்.
பாராட்டுகின்ற நிலையிலே நீங்கள் இன்னும் வரவில்லை. உருகு
தொழிற்சாலையில் 1,300 தொழிலாளர்கள் அன்றைக்கு கவர்னர்
ஆட்சியிலே அடித்து நொறுக்கப்பட்டார்கள். அப்போது வாயே
திறக்கவில்லை. இன்றைக்கு 1,300 தொழிலாளர்களுக்கு உறு
துணையாக இருந்து, இந்த அரசு உண்ணாவிரதப் போராட்
டத்தைத் துவக்கி இருக்கிறோம். நன்றி சொல்ல வேண்டாமா?
அதற்கு மாறாக, ஏதோ, எங்கேயோ ஒரு சம்பவம் நடக்கிறது.
போலீஸ்காரர்கள் மீது கோபத்தை வைத்துக் கொண்டு, இந்த
அரசை கோபித்துக் கொள்வது நியாயம் இல்லை. தோழமைக்
கட்சிக்கு பொருளும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்
கிறேன்.

அதோடு மட்டுமல்ல, இன்றைக்கு தமிழ்நாடு அரசு, அச்சக
தனியச்சுப் பிரிவு என்று ஒன்று இருக்கிறது. அதன் சங்கத்திற்கு
நான் தலைவராக இருக்கிறேன். அந்தத் தொழிலாளர்களுக்கு,
அரசு அச்சக ஊழியர்களுடைய........



1990 ஏப்ரல் 12]

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிச்சாமி
அவர்கள் பேசும்போது, இது தொழிலாளர் நல அரசு என்று
அறுதியிட்டு சொன்னார்கள். ஆட்சேபனை இல்லை. அது முழு
மையாக அப்படி இருக்க வேண்டும்; குறைபாடுகள் இருப்பதை
நீக்கவேண்டும் என்பதுதான் எங்கள் கட்சியினுடைய கொள்கை.

திரு. டி. கே. பழனிச்சாமி: கனம் அம்மையார் அவர்களுக்கு
நன்றி.

திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, நாங்கள் தோழமைக் கட்சிதான் என்பதை
உறுதியாகச் சொன்னேன். இப்படிப்பட்ட நிலைமையை எதிர்த்து
நாம் கடந்த காலங்களில் ஒன்று சேர்ந்துதான்
கிளர்ச்சிகளை நடத்தியிருக்கிறோம். இன்றைக்கு ஏதோ அதற்கு
மாறாக போகக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. நாம்
தொழிலாளர்களை விட்டு அதிகமாக விலகிப் போய்விடுவோமோ
என்ற அச்சத்தினால்தான், இதைத் தோழமையுணர்வோடு,
பணிவன்போடு, சுட்டிக்காட்டக் கூடிய கடமையைச் செய்கிறேன்
என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. டி. கே. பழனிச்சாமி: உறுப்பினர் எண்ணத்திற்கு
நன்றி. அடுத்து, பால் பண்ணையிலே பணியாற்றுகின்ற தொழி
லாளர்களுக்கு அங்கே குடியிருப்பதற்கு, நீங்கள் (குறுக்கீடு) அந்தத்
தொழிலாளர்களுக்கு, ஒருவர் வேலையின்றி சென்று விட்டால்
அவர் மகன் அங்கே பணி புரிந்தால், அந்த மகனுக்கு அந்த வீடு
கொடுக்கப்பட வேண்டும். ஆனால் அதை காலி செய்யச்சொல்
கிறார்கள். அதை பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கவ
னித்து ஆவன செய்ய வேண்டுகிறேன். இது நியாயமான
கோரிக்கை. இதில் ஒன்றும் தவறு இல்லை. (மணியடிக்கப் பெற்
றது) மேலும் மூன்று நிமிடங்கள் தரவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

சித்திரைத் திருநாள், தமிழர் திருநாள்—தமிழர் புத்தாண்டு
வருகிறது. அன்றைய தினம் தமிழக மக்களுக்கு இனிப்பான
செய்தியை, நம்முடைய பால்வளத் துறை அமைச்சரவர்கள்
அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்
றால், சென்னையிலும், சென்னையைச் சுற்றியுள்ள திருவொற்றி
யூர், தாம்பரம், ஆலந்தூர், மாதவரம் புறநகர் பகுதிகளைச்
சேர்ந்த ரூ. 1,000 கார்டுதாரர்களுக்கு இனாமாக பால் வழங்க
வேண்டுமென்று — ஒரு நாளைக்கு மட்டும் — அந்த புத்தாண்டு
தினத்திற்கு மட்டும் இனாமாக பால் வழங்க வேண்டுமென்று
பால்வளத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கி
றேன். அது நியாயமான கோரிக்கை. இன்று அறிவிப்பார் என்று
நினைக்கிறேன். அடுத்து, ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பற்றி
சொன்னார்கள். திருவொற்றியூரிலே ஈ.டி.பி.எஸ். ஒன்று இருக்
கிறது.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உறுப்பினர் சென்னைக்கு மட்டும் இலவசமாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். தமிழகம் முழுவதும் இது உண்டா என அறிய விரும்புகிறேன்.

திரு. டி. கே. பழனிச்சாமி: அது என்னுடைய கோரிக்கை. உங்களுடைய கோரிக்கையை, நீங்கள் பேசும்போது கேட்டுக் கொள்ளுங்கள் (சிரிப்பு).

அடுத்து, ஈ.டி.பி.எஸ். தொழிலாளர்களாக — 7 ஆண்டுக் காலமாக வாட்ச் அண்டு வார்டிலே செக்யூரிடியிலே இருந்தார்கள். அதை ஒப்பந்தக்காரர்கள் வேறு ஒருவருக்கு கொடுத்து, 200 தொழிலாளர்கள் இன்றைக்கு நடுவீதியிலே நிற்கிறார்கள். நான் மின்துறை அமைச்சர் அவர்களைக் கூட பார்த்து சொல்லியிருக்கிறேன். அவர்களும் ஆவன செய்வதாக சொல்லியிருக்கிறார்கள். நிச்சயமாக, அந்த 200 தொழிலாளர்களுக்கு, மீண்டும் வேலைவாய்ப்பு அங்கே போட்டுத் தர வேண்டும். இன்றைக்கு தமிழக அரசு, தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள், தமிழகத்திலே தொழிற்சாலைகள் துவங்க இருக்கின்றன என்பதை அறிவித்து, திருவொற்றியூர் தொகுதியிலே மட்டும், கிட்டத்தட்ட 3, 4 பெரிய தொழிற்சாலைகள் அங்கே வர இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். அந்தத் தொழிற்சாலைகளுக்கு, திருவொற்றியூரிலுள்ளவர்களுக்கு மட்டும் வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும். இன்னும் சில மாதங்களிலே, அந்தத் தொழிற்சாலைகளை திறக்க இருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலைகளில், திருவொற்றியூரில் வசிக்கும், அந்தத் தொகுதி மக்களுக்கே வேலைவாய்ப்பைக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

12-20 மணி.

(மாண்புமிகு பேரவைத்தலைவர் தலைமை)

மேலும், மூடிய தொழிற்சாலைகளை எல்லாம் விரைவில் திறப்பதற்கான முயற்சிகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கட்சியின் கடைசிப் பேச்சாளருக்கு நேரம் குறைக்கப்படும்.

திரு. டி. கே. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீக்கிரம் முடித்து விடுகிறேன். தயவு செய்து திருவொற்றியூரில், மணலியில் துவங்க இருக்கின்ற தொழிற்சாலை



களில் எல்லாம் திருவொற்றியூரில் உள்ளவர்களுக்கே வேலை வாய்ப்பு வழங்க உத்தரவிடவேண்டும். காரணம், வேலையில் லாமல், தினமும் 100 பேர், 200 பேர் என்னைத் தேடி வருகிறார்கள். நான் நகரமன்றத் தலைவராக இருந்தும் ஒருவருக்குக் கூட என்னால் வேலை வாங்கிக் கொடுக்க முடியவில்லை, வது, 10வது படித்தவர்கள், மேற்கொண்டு பட்டம் படித்தவர்கள் எல்லாம் வருகிறார்கள். இவர்கள் எல்லாம் வேலைவாய்ப்பகத்திற்கு போனால் அங்கே படுமோசமான நிலைமை. அந்த வேலைவாய்ப்பு அலுவலகத்தை அங்கிருந்து எடுத்து விட்டால் கூட நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேலை வாய்ப்பையே எடுத்துவிட வேண்டுமென்று சொல்கிறீர்களா? (சிரிப்பு).

திரு. டி. கே. பழனிச்சாமி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அலுவலகத்தைத்தான்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிச்சாமி தன்னுடைய தொகுதியிலுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு தர தன்னால் முடியவில்லையே என்று வருத்தப்படுகிறார். அவர் வசதிப்படைத்தவர். அவர் முயன்றால் முடியும். அவரது தொகுதியில் சில தொழிற்சாலைகளை அவர் ஏற்படுத்தி அதன் மூலம் அவர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கலாமே. அதை அவரே செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. கே. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உதவி செய்தால் நான் அதற்குத் தயாராக இருக்கிறேன். எல்லாம் அவர் கையில் தான் இருக்கிறது. அவர் நினைத்தால், நான் அந்தப் பணியைச் செய்யலாம். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுபற்றித் தனியாக பேசலாம். (சிரிப்பு).

திரு. டி. கே. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கத்திவாக்கம் நகரத்தில் பெரிய பெரிய தொழிற்சாலைகள் எல்லாம், குறிப்பாக ஈ.ஐ.டி. பாரி கம்பெனி, கோத்தாரி கெமிக்கல்ஸ் போன்ற கம்பெனிகள் எல்லாம் இருக்கின்றன. இந்தத் தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகிற விஷவாயு காரணமாக அங்கே கிணறுகளிலுள்ள தண்ணீர் எல்லாம் கெட்டுவிட்டது. ஒரு சொட்டு கூட நல்ல தண்ணீர் கிடைக்கவில்லை. அங்கே தொழிலாளர்கள் பெருமளவில் வசிக்கிறார்கள். ஆகவே, அங்கே குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக் தண்ணீர் சப்ளை செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இங்கே நான் தொழிலாளர்களைப்
பற்றி சொன்னேன். அவர்களுக்காக பல்வேறு
சங்கங்கள் இருக்கின்றன. பல பிரிவுகள் இருக்கின்றன.
அதிலே ஒரு சங்கம்தான் அரசு அச்சக ஊழியர்கள் சங்கம். அவர்
கள் நீண்ட நாட்களாக கோரிக்கை ஒன்றை வைத்திருக்கிறார்
கள். அதாவது 18 மாத விடுப்பு, வாரத்தில் 5 நாட்கள் வேலை
நாள், தொழிலாளர்களுக்கு சீருடை வழங்குதல் போன்ற பல்
வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அந்த அச்சகத்
தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்ற
வேண்டுமென்று கேட்டுக் கொண்டு கடைசியாக ஒன்றே ஒன்று.
இன்றைக்கு, ஆதி திராவிடர் நலத் துறை என்ற ஒன்று இருக்
கிறது. அதன் மூலமாக ஆதி திராவிட மக்களுக்கு பல
லட்ச வீடுகளைக் கட்டிக்கொடுத்து வருகிறோம்.
அதுபோல, சவரத் தொழிலாளர்களுடைய வாழ்க்கைத் தரம்
உயர அவர்களுக்கும் இந்த அரசு மாடி வீடுகளைக் கட்டித்தர
வேண்டும். இந்த நாட்டிலே, ஆயிரக்கணக்கான சவரத் தொழி
லாளர்கள் குடியிருக்க வீடு இல்லாமல் தவிக்கிறார்கள். நமது
அரசு ஆயிரக்கணக்கான மாடி வீடுகளை தொழிலாளர்களுக்
காக கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கும் வேளையில், இந்தச்
சவரத் தொழிலாளர்கள் வசிக்க குடிசை வீடு கூட இல்லையாத
லால் அவர்களுக்கும் ஒரு திட்டத்தை நடை முறைப்படுத்த
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, தூத்துக்குடியிலே உள்ள உப்பளங்களில்
மிக அதிக அளவில் தொழிலாளர்கள் வாழ்கிறார்கள்.
அவர்களுக்காக அங்கே பல சங்கங்கள் இருக்கின்றன. அவர்கள்
சங்கங்களின் மூலமாக பல்வேறு கோரிக்கைகளை சம்பந்தப்
பட்ட துறைக்கு வைத்திருக்கிறார்கள். என்றாலும் அவர்
களுடைய கோரிக்கைகள் நிறைவேறவில்லை. அந்தத் தொழி
லாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டத்தை நடை
முறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சவரத் தொழிலாளர்கள், சலவையாளர்கள், கட்டடத்
தொழிலாளர்கள் இப்படி எங்கெங்கு அடித்தளத்திலே வாழ்கிற
ஏழையெளிய மக்கள் இருக்கிறார்களோ அவர்களுக்கு எல்லாம்
வீடு கட்டிததரும் வகையில் அரசு ஆவன செய்ய வேண்டுமென்று
கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு தலைவருக்கு நன்றி தெரிவித்து,
அமர்கிறேன், வணக்கம்.

12.25 மணி.

* திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர்
அவர்களால் இங்கே சமர்ப்பிக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்
கைகளின் மீது எங்களுடைய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே





ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே
இங்கே, சென்னையிலே ஒரு கருத்தரங்கு மத்திய தொழி
லாளர் நல அமைச்சர் மதிப்பிற்குரிய திரு. ராம்விலாஸ் பாஸ்
வான் அவர்கள் தலைமையிலே நடந்திருக்கிறது. அதிலே பல்
வேறு முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய மாண்பு
மிகு அமைச்சரவர்கள் அதிலே தலைமை தாங்கியிருக்கிறார்கள்.
அதிலே எடுத்த முக்கியமான முடிவு, தொழிற்சாலைகளின்
நிர்வாகத்திலே தொழிலாளர்களுக்கு பங்கு அளிக்க வேண்டு
மென்ற முடிவை எடுத்திருக்கிறார்கள். சரியான முடிவு.
அதற்கு வேண்டிய சட்டங்கள் பின்னாலே வந்தாலும் கூட,
நம்முடைய அரசினுடைய நிர்வாகத்திலே இருக்கிற மின்சார
இலாக்கா, ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் இது மாதிரி அரசு நிறு
வனங்களிலே இதை முதன் முதலாக அமுல் படுத்தி, ஒரு முன்
னுதாரணமாக நம்முடைய மாநிலம் திகழ வேண்டுமென்று
அமைச்சரவர்களைக் கேட்டுக்கொளகிறேன். 3 மாநிலங்களைச்
சேர்ந்த அதிகாரிகள், சம்பந்தப்பட்ட முதலாளிகள் எல்லாம்
வந்து, அந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக, குறைந்த பட்ச ஊதியச் சட்டம் சம்பந்த
மாக மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசினார்கள். அந்தச்
சட்டம் சரியாக அமுல் படுத்தப்படுகிறதா என்றால் அந்தச்
சட்டம் சீராக அமுல் படுத்தப்படவில்லை என்று ஆளுங் கட்சியைச்
சேர்ந்தவர்களும் சொல்லுகிறார்கள், மாண்புமிகு கோவிந்த
ராஜன் அவர்களும் சொன்னார்கள். உதாரணத்திற்கு ஒன்று
சொன்னால் சரியாக இருக்கு மென்று கருதுகிறேன். இன்
றைக்கு விசைத் தறியை எடுத்துக் கொள்ளுங்கள். எங்க
ளுடைய பகுதியில் இருக்கிறது. ஆண்டிப்பட்டிக்கு ஒரு மாநாட்
டிற்குப் போனபோது, பக்கத்திலுள்ள ஜக்கம்பட்டியில் அதிக
மான தறிகள் இருப்பதைக் கண்டேன். ஆயிரக் கணக்கானோர்
அந்தத் தறிகளை நம்பி வாழ்கிறார்கள். காலை 7 மணி முதல்
இரவு 7 மணி வரை வேலை செய்கிறார்கள். சட்டம் என்ன
சொல்கிறது என்று அவர்களுக்குத் தெரியாது. அந்தச் சட்டத்தை
ஏன் அமுல் படுத்த முடியவில்லை ? அதற்கு நமக்குக்
காரணம் தெரியாது. எனவே நாம் போடும் தொழிலாளர் நலச்
சட்டங்களை சீராக அமுலாக்க சரியான நடவடிக்கைகளை
எடுக்க வேண்டுமென்று பணிவன்போடு தெரிவித்துக் கொள்
கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் இதில் தீவிரமாகச்
செய்ய வேண்டுமென்று விரும்புகிறவர்கள் என்று தெரியும்.
அதைச் செய்வதற்கு, அதிகாரிகளை முடுக்கி விட்டு, சரியாக
அமுலாக்கச் செய்யுங்கள். முடியவில்லை என்றால் ஏன் முடிய
வில்லை, என்ன காரணம் என்பதைப் பார்த்து, உதவி செய்
யுங்கள். எனவே போடுகின்ற சட்டங்களை சரியாக அமுலாக்க
வேண்டும்.

இன்றைக்குப் பஸ் முதலாளிகள் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்
டில் தரும் ஊதியத்தைக் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது.
பஸ் முதலாளியே ஒரு லெட்டர் எழுதியிருக்கிறார். முன்னாள்

[திரு. சோ. அழகர்சாமி] [1990 ஏப்ரல் 12

சட்டமன்ற உறுப்பினர் திரு. நாராயண [ரெட்டியார் எழுதியிருக்கிறார். கடிதத்தைக் கொண்டு வர வேண்டுமென்று நினைத்தேன், எடுத்து வரவில்லை. எந்த] பஸ் முதலாளியும் இந்தச் சட்டத்தின்படி எந்தத் தொழிலாளிக்கும் ஊதியம் கொடுப்பதில்லை. அந்த ஊதியம் வேண்டுமென்று கேட்டால் வேலையே இல்லாமல் போய் விடுகிறது. அதனால் யாரும் அந்த ஊதியத்தைக் கேட்க மாட்டேன் என்கிறார்கள். அதை அமுல் படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அதில் ஆர்வத்தோடு செய்ய வேண்டும்.

அடுத்து, வர்த்தக நிலையங்களில் ஒரு ஆள் இருந்தாலும். சட்டப்படி சலுகைகள், ஊதியம் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். 4 பேர் வேலை செய்தாலும், மூன்று பேர் உறவினர்கள், ஒருவர் தான் வேலை செய்கிறார் என்று சொல்லி, அந்தச் சட்டத்தை அமுலாக்காமல் இருந்தார்கள். அதற்காக ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன். அதை அமுலாக்க வேண்டும். சட்டப்படி எனக்கு ஊதியம் கொடு என்று கேட்டால், கடையிலிருந்து போகும்போது 2 ரூபாயைத் தூக்கிக் கொண்டு போய் விட்டாய், சாமானைக் கொண்டு போய் விட்டாய் என்று பொய்க் காரணம் சொல்லி அவர்களை வீட்டுக்கு அனுப்பும் நிலை இருக்கிறது. அதற்குப் பாதுகாப்பு வேண்டும். பெரிய பெரிய ஜவுளிக் கடைகள் இருக்கின்றன. ஒரு நாளைக்கு 5 இலட்சம், 10 இலட்சம் அங்கே விற்பனையாகிறது. நான் அங்கே வேலை செய்பவர்களைக் கேட்டேன், எனக்கு சம்பளம் 300 ரூபாய், 500 ரூபாய் என்கிறார்கள். பெரிய கடைகளில் 300, 400 ரூபாய்தான் இன்றைக்கும் கொடுக்கிறார்கள். காலையிலே இருந்து ராத்திரி 10 மணி வரையில் வேலை பார்த்தாலும் 300, 400 ரூபாய் தான். பெரிய கணக்குப் பிள்ளைக்கே 600 ரூபாய் தான். எனவே அவர்கள் வேலைக்குப் பாதுகாப்பு வேண்டும், நியாயமான ஊதியத்தை அவர்களுக்குப் பெற்றுத் தர வேண்டும். அதற்கு என்ன ஏற்பாடு என்று தொழிற் சங்கத் தலைவர்களைக் கூப்பிட்டுப் பேசுங்கள். மற்ற கட்சிகளைக் கூப் பிட்டுப் பேசுங்கள். இதை அமுலாக்குங்கள். சட்டத்தைப் போட்டால் மட்டும் போதாது. இன் றைக்கு பல்வேறு தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர் களுக்கெல்லாம் சட்டம் போட்டு, அந்த ஊதியம் கிடைக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இன்னும் பல்வேறு தொழில் தகராறு வழக்குகள் ரொம்ப நாளாக நீதி மன்றத்தில் இருக் கின்றன. அதற்காக 3 நீதிபதிகளை நியமிக்க இருப்பதாக அமைச்ச ரவர்கள் அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். அந்த மூன்று நீதிபதிகளைப் போட்டால் அந்த வழக்குகள் எல்லாம் சீக்கிர மாகப் பைசலாகிவிடும். அவ்வப்போது அந்த நீதிமன்றங்களில். காலியாகும் ஸ்தானங்களை உடனுக்குடன் ஃபில் அப் பண்ண வேண்டும். நீதிபதியாக இருந்தாலும் சரி, வேறு பணியாளராக



1990 ஏப்ரல் 12] [திரு. சோ. அழகர்சாமி]

இருந்தாலும் சரி அவர்கள் இல்லாத காரணத்தால் பல்வேறு வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. அதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த மாதிரி செய்வது மட்டுமல்லாமல், வழக்குகளின் துரிதமான பைசலுக்கு வேண்டிய ஏற்பாட்டையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தேயிலைத் தோட்டம் சம்பந்தமாக ஒரு ஒப்பந்தம் இப்போது நடை பெற்றிருக்கிறது. 18 (1) என்கிற முறையில் இருதரப்பு ஒப்பந்தம் செய்து இருக்கிறார்கள். அதில் ஏ.ஐ.டி.யூ.சி., சி.ஐ.டி.யூ. போன்ற பெரிய சங்கங்கள் கையெழுத்துப் போடவில்லை ; ஒப்புக் கொள்ளவும் இல்லை. இருந்தாலும் கூட அதை 12 (3) ஒப்பந்தமாக மாற்றுவதற்கு வேண்டிய ஒரு ஏற்பாடு நடப்பதாகச் சொல்லப் படுகிறது. அப் படியானால் என்ன அர்த்தம் ? முதலாளிக்குச் சாதகமாக ஒரு நடவடிக்கை செய்ய இருக்கிறார்கள் என்று அர்த்தம். ஆகவே அந்த மாதிரி பெரும்பான்மையான தொழிலாளிகள் எதிர்க்கும் அந்த 18 (1) செட்டில்மென்ட்டை 12 (3) செட்டில்மென்ட்டாக மாற்றுவது நியாயம் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

12-30 மணி

அதே மாதிரி தீப்பெட்டித் தொழில் இருக்கிறது. அதிலே குறைந்த கூலிதான் கொடுக்கப்படுகிறது. அதைச் சரியாக அமுலாக்கவில்லை. இது சம்பந்தமாக தேசியக் குழந்தைகள் தொழிலாளர் திட்டம் என்று ஒரு கமிட்டியை அரசு போட்டு இருக்கிறது. அதில் உறுப்பினர் எல்லோரும் அதிகாரிகளாக இருக்கிறார்கள். தொழிற்சங்கத்தின் பிரதிநிதிகளையும் அந்த அமைப்பில் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, மூடிய ஆலைகளைப் பூராவும் திறக்க எல்லா ஏற்பாடுகளும் செய்திருப்பதாக கூறியுள்ளீர்கள். இருந் தாலும் இன்னும் திறக்காத ஆலைகள் ரொம்ப இருக்கின்றன. அவைகளை உடனடியாகத் திறக்க வேண்டும்.

அடுத்து, ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலை மூடப் பட்டு ஒரு வருடம் ஆகிவிட்டது. அங்கு 3,000 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். வருகிற ஜூன் மாதம் கட்டாயம் திறக்கப் படும் என்று நம்முடைய ஆணையர், அமைச்சர் ஆகியோர் எல்லாம் சொல்லி ஒரு ஏற்பாடு நடந்து இருக்கிறது. இன்னும் அதிலே கொஞ்சம் சந்தேகம் இருக்கிற மாதிரி தெரிகிறது. இங்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலேயும் இந்த ஜூன் மாதம் கட்டாயம் திறப்போம் என்று சொல்லி இருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலையில் பணிபுரியும்

[திரு. சோ. அழகர்சாமி] [1990 ஏப்ரல் 12

3,000 பேர் பட்டினி கிடக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. அதைப் போக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். நம்முடைய
திரு. கோவிந்தராஜன் ஏற்கெனவே சொல்லி விட்டார். கான்ட்
ராக்ட் லேபர் என்பது ரொம்ப அநியாயமாக இருக்கிறது. அதைத்
தனிப்பட்ட முதலாளிகள் மட்டும் செய்யவில்லை. நம்முடைய
அரசாங்கத் துறையிலேயும் இன்றைக்கு கான்ட்ராக்ட் லேபர்
முறை மிக மோசமாக இருக்கிறது. கான்ட்ராக்ட் லேபர்
முறையை ஒழிப்பதற்கு ஏற்கெனவே ஒரு கமிட்டி இருக்கிறது
என்று சொல்லி இருக்கிறார்கள். அரசுக்கு ஆலோசனை சொல்ல
தொழிலாளர்கள் பிரதிநிதிகள், முதலாளிகள் பிரதிநிதிகள்
அடங்கிய ஒரு ஆலோசனைக் குழு இருக்கிறது. அது கான்ட்
ராக்ட் லேபர் முறையை ஒழிப்பதற்குப் பதிலாக, கான்ட்ராக்ட்டை
ஒழித்து விட்டு பிறகு இன்னொரு புதிய கான்ட்ராக்ட் கொண்டு
வருகிறோம் என்கிறார்கள். பிறகு அவர்கள் புதிதாக ஆட்
களைக் கொண்டு வந்து அவர்கள் எல்லாம் ஒரு சங்கத்தை
உருவாக்கி மறுபடியும் ஏதாவது கேட்க ஆரம்பிப்பதற்குள் அவர்
களை நீக்கி விடுகிறார்கள். அந்தச் சட்டத்தை மாற்றுவதற்கு
நாம் இங்கிருந்து சிபாரிசு செய்து இருக்கிறோம். 10[3-ல் ஒரு
செக்ஷன் சேர்க்கச் சொல்லி நீங்கள் சிபாரிசு செய்து இருக்கிறீர்
கள். அந்தக் குழு மத்திய அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்து
இருக்கிறது. இந்த கான்ட்ராக்ட் லேபர் முறையை ஒழித்தால்
அந்தத் தொழிலாளர்களுக்கு அங்கே வேலை கொடுக்க வேண்டும்
என்ற முறையில் திருத்தம் கொண்டு வருவதற்காக முயற்சி
செய்து இங்கிருந்து அனுப்பி இருக்கிறார்கள். நான் அதைப்
பாராட்டுகிறேன். அதைத் துரிதப்படுத்த வேண்டும். இப்
போது நமக்குச் சாதகமான அரசாங்கம் மத்தியில் வந்து இருக்
கிறது. அது பற்றி மத்தியத் தொழிலாளர் அமைச்சரிடம்
சொல்லி சீக்கிரமாக அந்தச் சட்டத்தைப் போட்டு, அந்த
விதியைச் சேர்க்கச் சொல்லுங்கள். ஏனென்றால் அந்த
கான்ட்ராக்ட் லேபர் முறை ரொம்ப அநியாயமாக இருக்கிறது.
உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், இங்கு மணலியில்
மெட்ராஸ் ஃபெர்டிலைசர்ஸ் லிமிடெட் இருக்கிறது. அங்கு
300 பேர் தான் நிரந்தரத் தொழிலாளர்கள். 1,500 பேர்
கான்ட்ராக்ட் தொழிலாளர்கள். இது எப்படி இருக்கிறது
பார்த்தீர்களா ?

அது மாதிரி ஸ்ரீராம் பைபர்ஸ் இருக்கிறது. அது பரத்ராம்
குருப்புக்குச் சொந்தமானது. அங்கு 400 பேர் நிரந்தரத்
தொழிலாளிகள் ; 500 அல்லது 600 பேர் கான்ட்ராக்ட் தொழி
லாளிகள். இது எல்லாம் எதைக் காட்டுகிறது ? உதாரணத்
திற்காக இதைச் சொல்கிறேன். 300 பேர் நிரந்தரத் தொழி
லாளர்கள் இருக்கும் போது 900 பேர் அல்லது 1,500 பேர்



1990 ஏப்ரல் 12] [திரு. சோ. அழகர்சாமி]

கான்ட்ராக்ட் தொழிலாளர்களாக இருக்கிறார்கள் என்றால்,
எதற்காக அப்படி கான்ட்ராக்ட் தொழிலாளர்கள் இருக்க
வேண்டும் ? ஒரு நிரந்தரமான தொழிற்சாலையில் கான்ட்
ராக்ட் தொழிலாளிகள் இருக்கக் கூடாது. சீஸனல் ஆக
ஓடக் கூடிய தொழிற்சாலையில் வேண்டுமானால் கான்ட்ராக்ட்
தொழிலாளர்களை வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லலாம்.
ஆனால் வருடம் பூராவும் இயங்கக் கூடிய ஒரு தொழிற்சாலையில்
கான்ட்ராக்ட் முறையில் தொழிலாளிகள் வைத்து இருக்க வேண்
டிய அவசியம் என்ன ? தொழிலாளிகளை இடைஞ்சல்படுத்தக்
கூடிய இந்த முறையை ஏன் முதலாளிகள் கையாளுகிறார்கள் ?
அரசாங்கம் நிர்வகிக்கும் தொழிற்சாலையிலும் ஏன் அந்த
முறையைக் கையாள வேண்டும் ? அரசாங்கம் நடத்தும்
தொழிற்சாலையில் முதலாளிகளுக்கு ஒரு முன் மாதிரியாக இதைச்
செய்யுங்கள் என்று சொல்லக் கூடிய முறையில் அரசாங்கத்
தொழிற்சாலைகள் முன் மாதிரியாக நடக்க வேண்டும். அந்த
மணலி எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை மத்திய சர்க்
காருக்குச் சொந்தமானது. நம்முடைய தொழிலாளர் நல
அமைச்சர் அவர்கள் அது குறித்து மத்திய சர்க்காரிடம் எடுத்துச்
சொல்லி, இங்கு உள்ளவர்களிடமும் சொல்லி வேண்டிய நட
வடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

12-35 மணி

பிறகு. ஏற்கெனவே சொன்னது தான். ''தொழிலாளர்
உலகம்'' என்று ஒரு பத்திரிகை நடந்து கொண்டிருந்தது. அதை
ஏன் மூடினீர்கள் ? எதற்காக நிறுத்தினீர்கள்? அது தொழி
லாளர்களுக்கு எவ்வளவு பிரயோஜனமாக இருந்தது. சில
சட்டங்களைத் தெரிந்து கொள்வதற்கு உதவியாக இருந்தது.
திரும்பவும் அதை உடனடியாகக் கொண்டு வர வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரிகையாளர்களுக்காக ''பச்சாவத் ஊதியக் குழு''
என்று ஏற்கெனவே ஒரு ஊதியக் குழு ஒரு தீர்ப்பு சொல்லியிருக்
கிறது. 1988 ஜனவரி முதல் இந்தியா முழுவதிலுமுள்ள
எல்லாப் பத்திரிகையாளர்களுக்கும் அதை அமுல்படுத்த வேண்டு
மென்று சொல்லப்பட்டிருக்கிறது. அது இங்கே என்னவோ
இரண்டு மூன்று பத்திரிகைகளுக்குத் தான் அமுல் ஆகிறது என்று
நினைக்கிறேன். ''இந்து''விலே, பி.டி.ஐ.யிலே, யூ.என்.ஐ.யிலே
மற்ற பத்திரிகைகளிலேயெல்லாம் அமுல் நடத்தவே இல்லையாம்.
அதை அமுல் படுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பால் வளத்துறை சம்பந்தமாகச் சொல்ல விரும்பு
கிறேன். ஏற்கெனவே சொன்னார்கள். இங்கே கேட்டதற்குப்
பதில் சொன்னார்கள். இருக்கின்ற 1,070 பேரிலே 450
பேருக்கு வேலை கொடுத்திருக்கிறோம் என்று மாண்புமிகு

[திரு. சோ. அழகர்சாமி] [1990 ஏப்ரல் 12]

அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மீதிப் பேர் என்ன ஆயிற்று?
அவர்களுக்கு என்ன செய்வது? இரண்டாவதாக அமைச்சர்
சொன்னார், நாங்கள் கருணையோடு கொடுத்தோம் என்று.
நான் சொல்வது, அந்தக் காலத்திலே தப்பாக, அக்கிரமமாக
நீக்கி விட்டார்கள். அதிலே நியாயமே கிடையாது. ஏதோ
ஒரு நாள் ஸ்ட்ரைக் செய்தார்கள் என்பதற்காக, ஐந்து வருஷம்,
ஆறு வருஷம் வேலை பார்த்தவர்களைக் கூட வீட்டுக்கே அனுப்பி
விட்டார்கள். அநியாயமாக வீட்டுக்கே அனுப்பி, பல பேர்
அதிலே செத்தும் போய் விட்டார்கள். அமைச்சருக்கும் தெரி
யும், எனக்கும் தெரியும். செத்தும் போய் விட்டார்கள். இந்தக்
குரலை நான் தொடர்ந்து பல நேரங்களிலே இங்கே எழுப்பி
இருக்கிறேன். மாறி மாறி இந்தச் சபையிலே எத்தனையோ
தடவை சொல்லியிருக்கிறேன். அதிலே 450 பேர்களுக்கு
நீங்கள் வேலை கொடுப்பதாகச் சொன்னீர்கள். புதிதாக
வேலை கொடுத்திருக்கிறீர்கள். எப்படி என்றால், பழைய
உரிமைகளைக் கேட்கக் கூடாது, கோர்ட்டுக்குப் போய் எனக்குப்
பழைய உரிமை வேண்டுமென்று கேட்கக் கூடாது, அந்த வேஜ்
ஏதாவது மிச்சம் இருந்தால் அதையும் கேட்கக் கூடாது என்று
புதிதாகச் சேர்ந்த மாதிரி சேர்ப்பது நியாயம் தானா? நான்
உங்களிடத்திலே தொழிலாளர்களின் சார்பிலே கேட்கிறேன்.
இது நியாயம் தானா? அவர்கள் காலத்திலே நீக்கியிருந்தால்
அதற்கு ஒரு நியாயத்தை நீங்கள் வழங்குங்கள். புதிதாக ஏன்
சேர்க்க வேண்டும்? பழைய ஆட்களைச் சேருங்கள். கூப்பிட்டுப்
பேசுங்கள், தொழிற் சங்கத் தலைவரைக் கூப்பிட்டுப் பேசுங்கள்,
பேசி எது நியாயமோ அதைச் செய்யுங்கள். ஏனென்று கேட்டால்
அநியாயமாகப் போய் புதிதாகச் சேர்ப்பது மாதிரி சேர்ப்பது
நியாயம் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 450
பேரிலும், நிபந்தனையோடு போட்டிருப்பவர்கள் 303 பேர்
தான். மீதிப் பேர் வரவில்லை. 450 பேரை நீங்கள் சொல்லி
இருக்கிறீர்கள். இந்த நிபந்தனையை ஒத்துக் கொள்ளாததால்
303 பேர் போக மற்றவர்கள் வரவில்லை. ஏன் வர
வில்லை? நீங்கள் போட்ட நிபந்தனையை அவர்கள் ஏற்றுக்
கொள்ளவில்லை. கோர்ட்டிலே நீண்ட காலமாக பெண்டிங்
காக இருக்கிறது, அதற்குத் தனியாக ஒரு நீதிபதியை—ஸ்பெஷல்
நீதிபதியைப் போட்டு, அதற்கு உடனடியாகத் தீர்வு கண்டு,
அதற்கு ஒரு தீர்ப்பு வழங்கி, அவர்கள் பிரச்சினையைத் தீருங்கள்
என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பால்வளத் துறையிலே இதற்கு முன்னாலே அந்த ஊழியர்
களுக்கு ஊதியம் எப்படி இருந்தது என்றால், நமது அரசு
ஊழியர்களுடைய ஊதியக் குழு என்னென்ன சொல்கிறதோ
அதுபோல அவர்களுக்கெல்லாம் கொடுப்பது மாதிரி இருந்தது.
இப்பொழுது ஐந்தாவது ஊதியக் குழுவிலே, இங்கேயிருந்து
டெபுடேஷனிலே வேலை பார்க்கின்ற அரசாங்க ஆட்களுக்கு
மட்டும்தான் இந்த ஊதியக் குழுவினுடைய ஊதியம்



1990 ஏப்ரல் 12] [திரு. சோ. அழகர்சாமி]

கொடுக்கிறார்களே தவிர, அங்கே இணையத்திலே-பால் உற்
பத்தியாளர் இணையத்திலே வேலை செய்கிற ஆட்களுக்கு
அந்த ஊதியம் கொடுப்பதில்லை. அவர்களுக்கு அவர்கள்
இஷ்டம்போல, 300, 400 என்று கொடுக்கிறார்கள். இதற்கு
முன்னாலே எப்படி என்று சொன்னால், அந்தப் பால்வளத்
துறையிலே, அரசாங்க ஊழியர்களுடைய ஊதியக் குழு
என்ன சிபாரிசு செய்கிறதோ, அந்த சிபார்சின் அடிப்படை
யிலே கொடுத்திருக்கிறீர்கள், இப்பொழுது ஐந்தாவது ஊதி
யக் குழுவின் சிபார்சின்படி, டெபுடேஷனிலே வேலை செய்
கின்ற அரசாங்க ஆட்களுக்கு மட்டும் கொடுக்கிறீர்களே
தவிர, மீதிப் பேர்களுக்கு இணையத்திலே இருப்பவர்களுக்கு
கொடுப்பதில்லை. ஆகவே, ஒரே வேலைக்கு சம வேலைக்குச்
சம ஊதியம் என்பது என்னவாயிற்று அங்கே? சம வேலைக்கு
சம ஊதியம் என்று சொல்லக்கூடிய முறையிலே அவர்களுக்கு
வழங்கப்படவேண்டும். ஆகவே, சம வேலைக்குச் சம ஊதியம்
என்று சொல்லுவதற்கு விரோதமாக இந்த நடவடிக்கை
இருக்கிறது. ஆகையினாலே, ஒரே மாதிரி சம்பளத்தைக்
கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரியாக, அரசு நிறுவனங்களாக இருப்பவை
தனியார் நிறுவனங்களுக்கு ஒரு முன்னுதாரணமாக
இருக்க வேண்டும். ஏனென்றால், சேமநல அரசு என்று
சொல்கிறோம், தொழிலாளர்களுக்குச் சாதகமாக இருக்கி
றோம் என்று சொல்கிறோம். அதை வாயால் சொன்னால்
மட்டும் போதாது. நடைமுறையிலேயும், அது வாஸ்தவம்
தான் என்று அந்தத் தொழிலாளர்கள் நினைக்கக்கூடிய
வகையிலே நடவடிக்கைகள் இருக்க வேண்டுமென்று பணிவன்
போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக ஒரேயொரு விஷயம். தமிழ்நாடு பீங்கான்
நிறுவனம் என்று ஒன்று இருந்தது. அதை மூடி விட்டார்கள்.
மூடி, அந்தத் தொழிலாளர்கள் எங்கே போனார்கள் என்றே
தெரியாது. இப்பொழுது அதிலே இருப்பவர்கள் 46 பேர்—
ஸ்டாஃப்-வரும் பொழுதுதான் சொன்னார்கள். நான் புறப்பட்டு
வரும்பொழுது மறித்து வந்து சொன்னார்கள். 46 பேர் அதிலே
வேலை பார்க்கக்கூடிய ஸ்டாஃப், அந்த 46 பேர் லே ஆஃப்-
லேயே தொடர்ந்து இருந்து, கொண்டிருக்கிறார்கள். அவர்
களுக்கு ஏதாவது ஒரு மாற்று வேலை கொடுக்க வேண்டும்.
வரும்போது மறித்துச் சொன்னதால், தயவு செய்து வேலை
கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர் நலத்திலே கடைசியாக ஒன்று. வாரிசுக்கு
வேலை என்று கொடுக்கிறோம், வாரிசுக்கு வேலை ஏன்று
கொடுத்தால் பத்து வருடத்திற்குமேல் ஆகிறது. நேற்று
தன் தந்தை போலீஸ்காரர் இறந்து விட்டார் என்று சொல்லி

ஒரு பையன் வந்து தேடி என்னை கூப்பிட்டுப் போனான்.
பத்து வருஷங்களுக்கு முன்பு பெட்டிஷன் போட்டிருக்கிறது.
இப்பொழுது கேட்டால் 25 ஆம் நம்பரிலே இருக்கிறது என்று
சொல்கிறார்கள். எப்பொழுது வரும் என்று கேட்டால்
25 வருஷம் ஆகும் என்கிறார்கள். என்ன ஆகிறது ?
ஆகவே, வாரிசுக்கு வேலை—அவர் இறந்து விட்டால், அவர்
டியூட்டிலேயே இருக்கும்பொழுது இறந்ததனாலே அந்தக்
குடும்பத்தைப் பாதுகாப்பதற்கு வழியில்லை. அந்தக் குடும்
பத்திலே இருப்பவர்களுக்கு—வேலை இல்லை என்று சொன்னா
லும் கூட, வேலையை உருவாக்கி—உருவாக்கவில்லை என்று
சொன்னாலும்கூட போட்டுவிட்டு உருவாக்குங்கள் வேலையை.
அந்த மாதிரி வாரிசுகளுக்கு வேலை கொடுப்பதிலே, வேலைக்கு
போட்டுவிட்டு, பிறகு உருவாக்குங்கள் அந்த போஸ்டை.
அப்படிச் செய்ய வேண்டுமென்று கேட்டு........

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் பேசி வருகிற செய்தி, சம்பளம்
இல்லாமலேயே வேலை பார்க்கத் தயாராக இருந்தால்,
வேலையை உருவாக்கிவிடலாம். சம்பளம் தர வேண்டு
மானால், நிதி கிடைத்தால்தான் வேலையை உருவாக்க
முடியும். இல்லையானால், கருணைதான் மிச்சப்படுமே தவிர,
செயல்படுத்துவது மிகக் கடினம். 100-க்கு 5 பேருக்குத் தான்
அந்த முறையிலே மூன்றாண்டுகளுக்குள் வேலை கிடைத்
திருக்கிறது. அப்படிப்பட்ட நிலையினால் 100-க்கு 90 பேருக்கு
அந்த வாய்ப்பை உருவாக்க பல துறைகளில் முடியவில்லை.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, கல்வி
அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்
நான் சொல்வது ஒருவர் இறந்துவிட்டால் அவருக்கு
பதில் தான். அந்த வேலை காலியாகத்தானே இருக்கும்.
அவருடைய வாரிசுக்கு என்கிறபோது......

12-40 மணி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே,
இறந்து போனவர் ஆசிரியராக இருக்கிறார். அவருடைய
மகன் எட்டாவது படித்து இருக்கிறான். அவனை நான்
எப்படி ஆசிரியராக்குவது, ஆகவே, அதற்கு கூட பயிற்சிப்
பள்ளிகளில் படிக்கக்கூடிய தகுதி இருக்குமானால், அங்கே
இரண்டு வருடங்கள், கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு
கேட்டு, கிடைக்காதவர்களுக்கு கொடுக்க வேண்டுமென்று
தீர்மானித்து இருக்கிறோம், சில துறைகளில் அந்த வாய்ப்பும்
சரியாக இல்லை,

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, அதே
வேலை, அதே தகுதி உள்ளவர்களுக்கு கிடைக்காமல் இருக்கிறது
வயர்மேனாக இருக்கிறார், அந்த வயர்மேன் தகுதி இருந்து.



மின்சாரத் துறையில் வாரிசுகளுக்கு அமைச்சர் அவர்கள் கொஞ்
சம் பேர்களுக்கு வேலை போட்டு கொடுத்தார்கள். அதே
தகுதி உள்ளவர்களுக்கே கொடுக்கவில்லை என்பதைத் தான்
நான் சொல்கிறேன், அதே தகுதியிருந்தால், கொடுக்கக்கூடிய
ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பிற்கு
நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

*திரு. கோ. பூவராகன் : தலைவர் அவர்களே, இன்றைய
தினம் மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கிற பால்வளம், அச்சுத்
துறை, தொழிலாளர் நலன் மானியக் கோரிக்கைகள் மீது
என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

பால் வளத் துறை இன்றைய தினம் நல்ல முறையில் செயல்
படுவதற்கு அமைச்சர் அவர்கள் உறுதுணையாக இருந்து பல
முயற்சிகளை எடுத்து வருகிறார்கள். எல்லா பகுதிகளிலும்
பால் சீராக வழங்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு,
மேலும் நல்ல முறையில் செயல்படுவதற்கு இந்த அறிக்கையில்
பல கருத்துக்களை அவர்கள் வெளியிட்டு இருக்கிறார்கள்.
பால் இன்றைய தினம் பயன்படுத்தாத இடமே இல்லை,
சிறு கிராமமாக இருந்தாலும், பெரிய நகரமாக இருந்தாலும்
எல்லாருடைய வீடுகளிலும் இன்றைய தினம் பால் பயன்
படுத்தப்படுகிற ஒன்றாக இருக்கிறது, அதன் முக்கியத்து
வத்தை உணர்ந்து, அத்துறையின் வளர்ச்சியை மனதில்
கொண்டு, அதிகம் பால் உற்பத்தி செய்வதற்கு அமைச்சர்
அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

பல இடங்களில் பால் மாடு வளர்ப்பதற்கு ஊக்கம்
இருப்பவர்களுக்கு பால் மாட்டை வழங்க வேண்டும்.
நாம் நிதி கொடுக்கிறோம், உதவி அளிக்கிறோம் என்று
ஒரு பகுதியில் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கருதி,
வரவேற்பு இல்லாத இடங்களில் பால் மாடு வளர்ப்பதற்கு,
பாலைப் பெருக்குவதற்கு ஏற்பாடு செய்வார்களானால் அது
பயனற்ற முயற்சியாக போகக் கூடிய நிலை ஏற்பட்டுவிடும்.
எங்கெல்லாம், வாய்ப்பு இருக்கிறதோ, உற்சாகம் இருக்கிறதோ:
மக்கள் விரும்புகிறார்களோ, அங்கெல்லாம் பால் வளர்ப்புத்
திட்டத்தை ஏற்பாடு செய்வது நலமாக இருக்கும் என்று
கருதுகிறேன். ஒரு விவசாயிக்கு பால் மாட்டை கொடுத்து,
பாலை பெருக்குவதன் மூலம், அவன் வருவாயைப் பெருக்கு
வதற்கு இந்த அரசு மறைமுகமாக உதவி அளிக்கிறது.

பால் மக்களுக்கு பயன்படக்கூடிய அளவில் இன்றையதினம்
இருப்பதை நாம் பார்க்கிறோம். கடந்த காலத்தில் ஈரோடு
பகுதியில் பால் பவுடர் தயாரிக்கப்பட்டு, கோடிக்கணக்கான

ரூபாய் மதிப்புள்ள பால் பவுடர் பயன்படுத்த முடியாத நிலை இருந்ததை மாற்றி, அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு திறமையாக, செம்மையாக செயல்பட்டு வருகிறார்கள் என்பது எனக்குத் தெரியும். இன்றையதினம் பால் பவுடர் விற்பனை செய்வதற்கு இந்தியாவில் கல்கத்தா ஒன்று தான் இருக்கிறது. அதைத்தான் எல்லா மாநிலங்களும் நம்பி இருக்கின்றன. எவ் வளவு பால் உற்பத்தி செய்து, பால் பவுடராக்கினாலும் அதனை விற்பனை செய்வதற்கு கல்கத்தாவை நம்பியிருக்கிற நிலை இருக் கிறது. இன்றையதினம் எவ்வளவு பால் பவுடர் கல்கத்தாவிற்கு அனுப்பி இருக்கிறீர்கள்? அந்த மார்க்கெட் நம்மை விட்டுப் போய்விடாமல் இருக்க ஏற்பாட்டை செய்து வருகிறீர்களா? சென்ற ஆண்டு எவ்வளவு உற்பத்தியானது? இந்த ஆண்டு எவ்வளவு ஆகிறது? அடுத்த ஆண்டு எவ்வளவு பால் பவுடர் அந்தப் பகுதிக்கு விற்க இருக்கிறீர்கள் என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் தெரியப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பால் மிச்சப்படாத நேரத்தில் கூட பாலை வாங்கி, பதப் படுத்தி, பவுடராக்கி அந்தப் பகுதிகளுக்கு விற்று நல்ல இலாபம் அடையக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அப்போது தான் பாலை வாங்குவதற்கு, பதப்படுத்துவதற்கு உங்களால் முடியும் என்பதை இந்தச் சமயத்தில் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். பாலைப் பதப்படுத்த நிலையங்கள் இல்லை. பால் வாங்கினால் போதுமான பணவசதி இல்லை என்று சொல்லிக் கொண்டிருப்பீர்களானால், பால் பவுடர் மார்க்கெட் நம்மை விட்டு பிற மாநிலங்களுக்குப் போகிற சூழ்நிலை ஏற்படும். திடீ ரென்று பால் உற்பத்தி பெருகி, பால் பவுடர் நம்மிடம் ஸ்டாக் இருக்கிறபோது, அதை விற்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும். அதைத் தவிர்க்க வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

12-45 மணி

நம்முடைய சென்னை நகரில் தானியங்கி பால் வழங்கும் நிலை யங்களில் நிறையக் களவு போகிறது. மீட்டரிலே கொஞ்சம் குளறுபடி செய்து, தகுந்த அளவோடு பால் விற்பனை செய்யவில்லை என்று பல புகார்கள் இன்றையதினம் இருப்பதை நாம் பார்க்கிறோம். பைகளிலே அடைக்கின்ற பாலின் அளவு கூட குறைந்த அளவிற்கு இருக்கிறது என்பது பரவலாக சென்னை நகரத்திலே பேசப்பட்டு வருகிறது. அதற்கு முக்கியக் காரணம், பால் பைகளைத் தயாரித்துக் கொடுக்கின்றவர்கள் தகுந்த முறையிலே நல்ல தரமுள்ள பைகளிலே அடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு தரப்படவில்லை. தனிப்பட்ட ஒருவருக்கு குறைந்தபட்சம் நீங்கள் கோடிக்கணக்கான ரூபாய் அளவிற்கு பால் பைகளைத் தயாரிப்பதற்கு கொடுப்பதாலே இந்தச் சங்கடங்





கள் வருகின்றன. அவர்கள் ஏதோ செல்வாக்கு படைத்த ஒருவ ராக இருப்பதாலே, அங்கே அவர்கள் பணம் பெறுவதற்குக் கூட சொல்கிறார்கள். திடீரென்று இத்தனை ரூபாய் எங்களுக்குக் கொடுங்கள், இத்தனை பைகள் உங்களுக்கு வருகிறது என்று சொல்கிறபோது, அதைச் சரி பார்க்காமல், எடை பார்க்காமல், தரம் பார்க்காமல் கூட அவர்களுக்கு அந்த செக் வழங்கப்படு கிறது. இவ்வளவு பெரிய செல்வாக்கு படைத்தவர்கள் இன்றைய தினம் அந்தப் பைகளை பால் வழங்கு அலுவலகத்திற்கு வழங்கிக் கொண்டு இருக்கிறார்கள். அவைகள் தரமுள்ள பைகளாக இல்லை. பக்கத்திலே உள்ள, அண்டை மாநிலத்தில் உள்ளதை நீங்கள் எடுத்துச் கொள்வீர்கள் என்று சொன்னால், பல சிறு தொழில்களைச் செய்கின்றவர்களுக்கு பரவலாக கொடுக் கிறார்கள். ஒருவருக்கே ஒரு கோடி ரூபாய்க்கு அந்த ஆர்டரைக் கொடுப்பதற்குப் பதிலாக, 25 லட்சம், 15 லட்சம், 10 லட்சம், 5 லட்சம் என்ற அளவிலே சிறுதொழில் நிறுவனங்களுக்கு கொடுப்பீர்கள் என்று சொன்னால் அவைகள் தரமுள்ளவை களாகவும் இருக்கும், குறைந்த விலையிலே கூட உங்களுக்கு கிடைக்கக்கூடிய நிலையை ஏற்படுத்தித் தரும். எனவே இந்தத் துறையைக் கவனிக்கின்ற அமைச்சர் அவர்கள் இதைக் கண் காணிப்பு செய்து, நல்ல முறையில், சரியான முறையில் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டு ஒரு தனியார் துறைக்கு இந்த பால் பைகளைத் தயாரிப்பதற்குச் கொடுக்கப்பட்டபோது சில தவறுகள் நடந் திருக்கின்றன. அதற்குக் கூட அந்த ஒப்பந்தம் அடிப்படையிலே அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. முறையாக அவர்கள் ஒப்பந்தத்திலே கையெழுத்திடாமல், அவர்கள் தனியாகப் பேச்சுவார்த்தை மூலம் அந்தப் பைகளை வழங்கிக் கொண்டு இருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது. முழுக்க முழுக்க அந்தப் பைகளை வாங்குகிறபோது, மொத்தம் நூற்றுக்கு நூறு கான்ட்ராக்ட், அதாவது டெண்டர் மூலமாக நீங்கள் வாங்கு வதற்கு முயற்சி எடுக்க வேண்டும். 25 சதவீதம் அந்த இலாக்கா விலே இருப்பவர்கள் தானே பேசி, நேரிடையாகப் பேசிப் பெற்றுக் கொள்ளலாம், 75 சதவீதத்தை டெண்டர் மூலம் பெற லாம் என்று இருப்பதை மாற்றி, முழுக்க முழுக்க எல்லாமே டெண்டர் மூலம் பெறுவதற்கு நீங்கள் முயற்சி எடுத்தால், குறைந்த விலையில் தரமுள்ளதாக, நல்லவிதமாக, காலா காலத்திலே கிடைக்கும். நல்ல முறையிலே, சரியான முறையிலே அந்த விநியோகம் நடப்பதற்கு பயனுள்ள தாக இருக்கும் என்பதை இந்தச் சமயத்திலே சொல்லிக் கொள் கிறேன்.

அடுத்து அச்சுத்துறை. இந்த அச்சுத் துறையிலே இன்றைய தினம் நம்முடைய இலாக்கா பல பேர்களுக்கு வேலை வாய்ப்பைத் தேடிக் கொடுக்கவேண்டும் என்ற முயற்சியின் அடிப்படையிலே

பல மாவட்டங்களிலே அச்சுத் துறை கிளை அச்சகங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றன. ஆனால் பல இடங்களில் பார்த்தால், 180 பேர்கள், 200 பேர்கள்—பல லட்ச ரூபாயிலே கட்டி, அங்கே கோடவுன்கள் எல்லாம் ஏற்பாடு செய்து, 500 பேர்களுக்கு மேலே வேலை செய்யக்கூடிய அளவிற்கு வசதி, வாய்ப்பு இருந்தும்கூட 150 பேர்கள், 200 பேர்கள், 100 பேர்கள்—என்ற அளவிலேதான் அந்தக் கிளை அச்சகங்கள் இருக்கும் என்று சொன்னால், எந்த அளவிற்கு நாம் வேலை வாய்ப்பினைத் தேடிக் கொடுக்கக்கூடிய அளவிலே இருக்கிறோம் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

சென்னை நகரத்திலே மட்டும் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இந்தத் தொழிலிலே ஈடுபட்டு இருக்கிறார்கள். பல கிளை அச்சகங்களில் மாவட்டங்களிலே இருக்கின்ற கிளை அச்சகங்களில் மிகக் குறைவான எண்ணிக்கையிலேதான் இருக்கிறார்கள். அதிலேகூட ஆள் சேர்ப்பதிலே சில தவறுகள் நடக்கின்றன. சென்ற முறை இந்த எலக்ஷன் சமயத்திலே 200, 300 பேர்களுக்கு மேலே பெண்களை வேலைக்கு எடுத்தார்கள், தற்காலிகமாக. தற்காலிகமாக முதலிலே வேலைக்கு எடுக்கப்பட்டது. பிறகு 1 மாதம் எக்ஸ்டன்ஷன் என்று சொல்லி கொடுக்கப்பட்டது. பிறகு நிரந்தரம் என்று சொல்லி நிரந்தரமாக்கப்பட்டு இருக்கிறது. இந்த 3 நிலைகளிலேயும் தவறுகள் நடந்திருக்கின்றன. இதை அரசு உணர்ந்து சரிசெய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே நமக்கெல்லாம் அச்சிட்டுக் கொடுக்கின்ற புத்தகங்களில் உள்ள அச்சுக்களைப் பார்க்கிறபோது, இது ஏதோ ஹைதர் அலி காலம் என்று சொல்வார்களே, அதைப்போல அந்தக் காலத்திலே வாங்கப்பட்ட அச்சுக்களாக இருக்குமோ என்று எண்ணக்கூடிய அளவிற்கு இருக்கிறது. இன்றைய தினம் இந்த பிரிண்டிங் அண்டு டெக்னாலஜியிலே நாம் மிக அட்வான்சாகப் போய்க் கொண்டிருக்கிறோம். பல துறையிலே நுணுக்கமாக, நல்லவிதமாக, கண்ணைப் பறிக்கக்கூடிய அளவிற்கு அச்சுக்கள் எல்லாம் வந்திருக்கிறபோது, இந்த அச்சுக்களை எங்கே கண்டுபிடித்தார்கள் என்று தெரியவில்லை. ஒரு பக்கத்திலே பார்த்தால் படிக்கக்கூடிய அளவிற்கு இல்லை. நிறையப் பிழைகள் இருக்கின்றன. இந்தத் தவறுகளைத் தவிர்ப்பதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது? குறிப்பாக சட்டமன்றத்திற்குக் கொடுக்கப்படுகின்ற, ஆங்கிலத்திலும், தமிழிலும் அச்சடித்துக் கொடுக்கப்படுகின்றவைகளிலே பாதிப் பிழைகள் திருத்தித் திருத்தி கையாலே எழுதப்பட்டு இருக்கிறது. இதற்கு அச்சுக்கே போகவேண்டாம். கையினாலே எழுதி இதை நமக்குக் கொடுத்திருக்கலாம் என்று இந்தச் சமயத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.





நாம் எல்லாம் பேசுகின்ற பேச்சுக்களை எலலாம் அச்சடித்து புத்தகங்களாக எங்களுக்கு அனுப்புகிறார்கள். அதிலே பார்த்தால், 10 பக்கங்களுக்கு வெள்ளையாக இருக்கிறது. அச்சே இல்லை. எங்களுக்கு வருகிற புத்தகங்களிலே அப்படியிருக்கிறது. இது சம்பந்தமாக அந்தத் துறை இலாக்கா அதிகாரிகளுக்கு எழுதியிருந்தும்கூட அது இன்னும் திருந்தினபாடாகத் தெரியவில்லை. இதிலே எங்கே கோளாறு இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து, நல்லவிதமாக, குறைந்தபட்சம் சட்டமன்றத்திற்குக் கொடுக்கின்ற புத்தகங்களையாவது சரியான முறையிலே அச்சடித்து, அதாவது குறுகிய காலத்திலே நல்ல விதமாக அவரவர்களுக்குக் கிடைக்கச் செய்வதற்குண்டான பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். சட்டமன்றம் நடக்கின்ற சமயங்களிலேகூட பல பதிப்புகள் அங்கே அச்சிடப்படுகின்றன. சில மோசமாக இருக்கின்றன. சிலவற்றில் ஒரு எழுத்திற்கும் இன்னொரு எழுத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது. அதைப் பார்த்தால், தொடர்பு இல்லாத அளவிலே இருக்கிறது. அமைச்சர் அவர்களுக்குக்கூட நன்றாகத் தெரியும். நம்முடைய முதல்வர் அவர்கள் அறிக்கை படிக்கின்றபோது, எந்த அளவிற்கு கஷ்டப்பட்டார்கள், சிரமப்பட்டார்கள் என்று. ஒரு பக்கத்திலேயிருந்து அடுத்த பக்கத்திற்குப் போய்விட்டார்கள். தொடர்பு இல்லை.

12-50 மணி

தொடர்பு இல்லாமல் எண்ணற்ற தவறுகள் நடக்கின்ற அளவுக்கு இருக்கிறது. இந்தச் சமயத்தில் நிறைய நல்ல 'டெக்னாலஜி' வளர்ந்திருக்கிறது. நல்ல பயிற்சி பெற்ற நபர்களும் கிடைக்கிறார்கள். அப்படி எல்லாம் இருக்கும்போது இந்தத் துறையில் நல்ல முன்னேற்றம் ஏற்படுவதற்கு என்னென்ன முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது? முன்னேற்றம் இருப்பதாகத் தெரியவில்லை. அரசாங்கம் கொடுக்கிற எல்லாப் புத்தகங்களும் காலா காலத்தில் சேரவேண்டிய இடத்திற்குப் போய்ச் சேரவேண்டும். தற்போது அந்த நிலை இல்லை; பெருத்த தாமதம் ஏற்படுகிறது. இனிமேலாவது அச்சிட்டு, குறித்த காலத்தில் போய்ச் சேருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு நிறைய 'ஸ்டேட்மென்ட்ஸ் பிரின்ட்' செய்யப் படுகின்றன. அதைப்போல நிர்வாக அறிக்கைகள் நிறைய அச்சிடப்படுகின்றன. அவற்றை எல்லாம் ஏன் நம்முடைய அச்சகத்தில் பிரின்ட் செய்யாமல் தனியாரிடம் கொடுத்து பிரின்ட் செய்கிறார்கள்? நம்முடைய அச்சகத்திலே கொடுத்தால் இன்னும் ஏராளமானவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்; போதுமான இடவசதி இருக்கிறது. நல்ல செலவு குறையும். பயிற்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் வேலை கொடுக்கலாம். அரசாங்கத்தின் பொறுப்பிலே பல் வேறு துறைகள் இருக்கின்றன. ட்ரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் இருக்கிறது. அதைப்போன்று பல துறைகள் இருக்கின்றன

[திரு. கோ. பூவராகன்] [1990 ஏப்ரல் 12

அவற்றினுடைய அறிக்கைகள் புத்தகங்கள் எல்லாவற்றையும்
தனியார் அச்சிடுவதைத் தவிர்க்க வேண்டும். தனியாருக்குக்
கொடுப்பதனால் நிறைய பணம் விரயம் ஆகிறது. அதுமட்டு
மல்லாமல் கணக்குவழக்குகூட இல்லாமல் போய்விடுகிறது. அந்த
வேலைகளை இந்தத் துறைக்குக் கொடுத்தால் பணம் விரயம்
ஆவது தவிர்க்கப்படும்; ஒரு கட்டுப்பாட்டிற்குள்ளும் வரும்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இது போன்ற தவறுகள் நடக்காமல் இருப்பதற்கும்
அரசாங்க அச்சகத்திலே துரிதமாகப் பணி நடைபெறுவதற்கும்
புதிய 'மெஷினெரீஸ்' வாங்க வேண்டும். இப்போது பழைய
மெஷினரீஸ்தான் இருக்கிறது. சென்ற ஆண்டிலேகூட
சொன்னார்கள். புதிய மெஷினரீஸ் வாங்கப்படும், வாங்கத்
தயாராக இருக்கிறோம்; நல்லமுறையில் அச்சிட்டு வழங்கத்
தயாராக இருக்கிறோம் என்று சொன்னார்கள். அதற்காக
பல இலட்சம் ரூபாய் ஒதுக்குகிறோம் என்று சொன்னது அந்தக்
குறிப்பிலும் இருக்கிறது. அதேதான் இந்த ஆண்டுக் குறிப்பிலும்
இருக்கிறது. அதற்கு என்ன முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது?
எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது? எவ்வளவு
மெஷினரீஸ் வாங்கப்படும்? ஏற்கெனவே எவ்வளவு வாங்கப்
பட்டிருக்கிறது? இதற்கு வெளிநாட்டு மெஷினரீஸ் தேவையில்லை.
இந்திய நாட்டிலே தயாரிக்கப்பட்டவையே போதுமானது.
ஆகவே, இந்திய நாட்டிலே கிடைக்கிறது, நல்ல பயிற்சி பெற்ற
வர்களும் இங்கே இருக்கிறார்கள். அவர்களை வைத்து நல்ல
முறையிலே அச்சிட்டு வழங்கும் பணியை இந்தத் துறை செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, இந்தத் துறையிலே பயன்படுத்தும் காகிதம்
கூட தரமானதாக இல்லை. சட்டமன்ற உறுப்பினர்களாகிய
எங்களுக்கு வழங்கப்படுகின்ற காகிதம்கூட எழுதுவதற்கு வசதி
யாக இல்லை. நமக்கே இப்படித்தான் இருக்கிறது என்றால்
மற்றவர்களுக்கு எப்படி இருக்கும்? நாம் எண்ணிப்பார்க்க
வேண்டும். பேனா வைத்து எழுதுவதற்கு ஏற்றதாக, தரமான
தாக காகிதம் அமைந்திருக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல. இந்தத் துறையிலிருந்து 'கவர்'
கொடுக்கிறார்கள். அச்சகத்திலிருந்து செய்து கொடுக்கிற
அந்தக் கவர் எப்படி இருக்கிறது என்றால் கவர் உள்ளே
பேப்பரைப் போட்டால் தனியாக வெளியே வந்துவிடும்.
அப்படி இருக்கிறது. 'லெட்டர் பேட்' கொடுக்கிறார்கள்.
தரமான காகிதமாக இல்லாத காரணத்தால் அதை நாங்கள்
பயன்படுத்த முடியவில்லை. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு
நல்ல காகிதத்திலே அச்சடித்துக் கொடுக்க ஏற்பாடு செய்ய
வேண்டும். நல்ல காகிதத்தைப் பயன்படுத்துவதில் இந்த
அரசாங்கத்திற்கு என்ன சங்கடம் இருக்கிறது என்று தெரிய
வில்லை. அதைக் கவனிக்க வேண்டும்.



1990 ஏப்ரல் 12] [திரு. கோ. பூவராகன்]

அடுத்தபடியாக இருப்பது தொழிலாளர் நலத் துறை.
எனக்கு நேரம் இல்லாத காரணத்தால் வேகம் வேகமாக சில
கருத்துக்களை மட்டும் சொல்லுகிறேன். 15 நிமிடம்தான்
எனக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்குள்ளே முடித்துக்
கொள்ள முயற்சி செய்கிறேன். தொழிலாளர் நலத் துறை
யிலே, எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள்,
நம்முடைய அரசாங்கம் போட்டிருக்கிற உத்தரவுகளையும்
சட்ட திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுக்க
வில்லை என்று சொன்னார்கள். அரசாங்க உத்தரவுகளை
நிறைவேற்றுகின்ற அதிகாரிகள் சரியாகத் தொழில் நிர்வாகங்
களைக் கவனிக்காததுதான் இதற்குக் காரணமாக இருக்க முடியும்.
தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு முன்னாலே நிறைய உறுதி
மொழிகளைச் சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் 3 மணித்
துளிகளில் உங்களுடைய உரையை முடித்துக்கொள்ள வேண்டும்.
3 மணித் துளிகள் முடிந்தவுடன் அடுத்த உறுப்பினர் அழைக்கப்
படுவார்.

திரு. கோ. பூவராகன்: தலைவரவர்களே, அதற்குள்
முடித்து விடுகிறேன். நம்முடைய தொழிற்சாலைகளைப்
பார்க்கும்போது—நிதி நிறுவனங்களை அணுகும்போதும் அரசாங்
கத்தை அணுகும்போதும் தொழில் நிர்வாகிகள் என்ன சொல்லு
கிறார்கள்? நிறையப் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்
கிறோம், தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியடைய உதவு
கிறோம், அனுமதி கொடுங்கள் என்று கேட்கிறார்கள்.
தொழிலை ஆரம்பித்தபின்னால் அவர்கள் சொன்னமாதிரி
நடந்துகொள்கிறார்களா என்று பார்த்தால் நிச்சயமாக
இல்லை என்றுதான் நான் சொல்வேன். தொழிலைத்
தொடங்கிய பின்னால் எத்தனை பேர்களுக்கு வேலை கொடுத்
தோம் என்று அவர்கள் எப்போதாவது சொல்கிறார்களா
என்றால் இல்லை. இத்தனை பேர்களை நியமித்திருக்கிறோம்,
இத்தனை பேர்களுக்கு வேலை கொடுத்திருக்கிறோம், இன்னின்
னாருக்கு இவ்வளவு சம்பளம் கொடுக்கிறோம், ஊதிய உயர்வு
இவ்வளவு கொடுக்கிறோம் என்று அவர்கள் எப்போதாவது
சொல்லியிருக்கிறார்களா? இல்லை.

தற்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழிற்சாலை நிர்
வாகத்தைக் கவனிக்க தொழிலாளர் நலத் துறை அதிகாரிகள்
இருக்கிறார்கள். அந்தந்த மாவட்டத்தில் தொழிலாளர் நல
இலாகா இருக்கிறது. அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று
பார்க்க வேண்டும். யாராவது தவறு செய்தால் அதை உடனடி
யாக எடுத்துச்சொல்லி கண்டிக்க வேண்டும், கண்டிக்க முயற்சி

செய்தாலே ஓரளவுக்கு நன்றாக இருக்கும் ஆனால் இப்போது தொழிற்சாலைக்கும் அவர்களுக்கும் சம்பந்தம் இல்லாமல் இருக்கிறது. இந்த நிலைமை மாற வேண்டும்.

இத்தனை பேர்களுக்கு வேலை கொடுப்போம் என்று சொல்லி தொழிற்சாலையை ஆரம்பித்தீர்களே, அந்த அளவுக்கு கொடுத்திருக்கிறீர்களா என்று கேட்டால் அடுத்த வருஷம், அடுத்த வருஷம் என்று சொல்லி, மேலும் மேலும் பணத்தைப் பெற்று, வேறு தொழில்களை ஆரம்பிக்கிறார்களே தவிர ஏற்கனவே தொடங்கிய தொழிலை அபிவிருத்தி செய்வது கிடையாது. வேறு தொழில் தொடங்கி மேலும் இலாபம் சம்பாதிக்க முயற்சி செய்கிறார்களே தவிர இருக்கின்ற தொழிலை மேம்படுத்தும் முயற்சி இல்லை. அதனால் எதிர்பார்த்த அளவுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவில்லை. ஆகவே, நம்முடைய தொழிலாளர் நல இலாகா துருவித் துருவி கேட்டறிந்து எல்லோருக்கும் வேலைவாய்ப்பு கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்கின்ற முறையை சற்று மாற்றியமைக்கவேண்டும். எல்லாப் பகுதிகளிலிருந்தும் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் வேலை தேடி பதிவு செய்கின்ற நிலைமை பெருகிக்கொண்டே இருக்கிறது. அப்படி பதிவு செய்தவர்களுக்கு வேலை கொடுக்கும் போது, குறிப்பாக தொகுப்பு முறையில் வேலை கொடுக்கும் போது, அரிசனங்களுக்கு இத்தனை சதவீதம், மற்றவர்களுக்கு 20 சதவீதம், 30 சதவீதம் என்று வைத்திருக்கிறோம். ஒரு குறிப்பிட்ட இலாகாவுக்கு வேலைக்கு ஆள் எடுக்கும்போது அந்தக் குறிப்பிட்ட விகிதாசாரத்தில் வேலைதேடி பதிவு செய்தவர்களை அனுப்பிவைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள்; அவ்வாறே அனுப்புகிறோம் என்று வேலைவாய்ப்பு அலுவலகத்திலும் சொல்லுகிறார்கள். ஆனால் நடைமுறையில் சில சிக்கல்கள் வருகின்றன. ஆகவே, வேலைதேடி பதிவு செய்து காத்திருப்பவர்களை 'ரீ ரெஜிஸ்டர்' செய்ய வேண்டும். சரியான முறையிலே அது பதிவேட்டிலே இருக்க வேண்டும். சில பேர்களுக்கு, மாவட்டங்களிலே இருக்கின்றவர்களுக்கு, 20 வருஷங்களாகியும்கூட, வேலை வாய்ப்பே இல்லை. அவர்களுக்கு வயது கடந்து போய் விட்டது. நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, அந்த மாதிரி இருக்கின்றவர்களுக்கு முன்னுரிமை தந்து பாதுகாப்பு தரவேண்டுமென்பது தான். இத்துடன் என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

12-55 மணி

**திரு. எஸ். எஸ். ராமசுப்பு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால்வளத் துறை, தொழிலாளர் நலன், பொது பொருள் அச்சுத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது





பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தொழிலாளர்கள் பெரும் பங்கு ஆற்றிக் கொண்டு இருக்கின்றார்கள். தொழில் வளர்ச்சிக்கும், விவசாய வளர்ச்சிக்கும் தொழிலாளர்கள் இந்த நாட்டினுடைய முதுகெலும்பாக இருந்து பணியாற்றி வருகிறார்கள். தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் சுமுகமான உறவு இருந்தால்தான் இந்த மேம்பாட்டை நாம் அடைய முடியும். தொழிற்சங்கங்களும், அரசாங்கமும் தொழிலாளர்கள் நலம் காக்க ஒரு பாலமாக அமைய வேண்டும். தொழிலாளர் நலச் சட்டங்களை அமுல்படுத்துவது, தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் நடக்கும் பேச்சுவார்த்தைகள் சுமுகமாக இருந்து, கோரிக்கைகளைத் தீர்க்கப் பாடுபடுவது, மூடப்பட்ட ஆலைகளைத் திறப்பது, தொழிலாளர்கள் நிர்வாகத்தினரிடையே சுமுகமான உறவை ஏற்படுத்துவது தொழிற்சாலைகளைத் திறந்து வேலைவாய்ப்பை உயர்த்துவது போன்றவற்றைச் செய்வது அரசின் கடமையாகும். மூடப்பட்ட ஆலைகளைத் திறந்துள்ளதாகவும் அரசு பல முயற்சிகள் எடுத்துள்ளதாகவும் இந்தக் கொள்கைக்குறிப்பிலே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் கோவையிலே சுமார் 6 ஆண்டுக்காலமாக, மூடிக் கிடக்கின்ற ராதாகிருஷ்ணா மில், ஜனார்த்தனா, பவானி, ஜெயலட்சுமி, மது ஸ்பின்னிங் போன்ற மில்கள் இன்னும் திறக்கப்படவில்லை. அங்கு வேலை செய்யும் 6,000-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பசி, பட்டினி, போன்ற கொடுமையால் இன்னும் வாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு இன்னும் கவனிக்கவில்லை.

சென்னையில் டபிள்யூ. எஸ். இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனம் ஒன்று இருக்கிறது. அங்கே இருக்கிற தொழிலாளர்களுக்கு இன்னும் போனஸ் முதலியவை வழங்கப்படாமல் இருக்கின்றன. புதிதாக ஒரு பொம்மை சங்கத்தை அங்கே நிறுவி, அந்தச் சங்கத்தின் மூலமாகத் தொழிலாளர்களைப் பிரித்தாளுகிற சூழ்ச்சியை அந்த நிர்வாகமே செய்கின்றது. இது போன்ற சூழ்ச்சியையும், அந்த நிர்வாகத்தின் கோட்பாட்டையும் அரசு ஆதரிக்காமல், தொழிலாளர்களுக்கு நல்வாழ்வு கொடுக்க வேண்டும். அவர்களுக்குப் போனஸ் பெற்றுத் தர அரசாங்கம் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நிவாரண நிதியாக, ரூ. 35.25 இலட்சம், 1989-ல் கொடுக்கப்பட்டதாகச் சொல்லி இருக்கின்றார்கள். ஆனால், அந்தத் தொகையானது தொழிலாளர் நல நிதியிலிருந்து தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர்கள் வீடு கட்ட வேண்டுமென்றால் அவர்களுடைய நலனுக்காக அந்த நலநிதியிலிருந்து செலவிடலாம். அவர்கள் ரூ. 1, ரூ. 2 என்று சேர்த்த பணத்தை, இப்படிக் கொடுப்பதைவிட, முதலமைச்சருடைய நிவாரண நிதியிலிருந்து

கொடுப்பதுதான் முறை என்பதை நான் இங்கே தெரிவித்துக்
கொள்கிறேன். ஆனால், இங்கே கொள்கைக் குறிப்பிலே சொல்
லும்போது, முதல் அமைச்சர் நிதியிலிருந்து கொஞ்சம்
கொடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படியிருக்கும்
போது, இந்த ரூ. 35 இலட்சம் மட்டும் ஏன் இதிலே இருந்து
கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியவில்லை. அந்தப்
பணத்தை, தொழிலாளர் நல நிதிக்கே திருப்பிக் கொடுக்க
வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். தொழிலாளர்
நல நிதியை இப்படிக் கொடுப்பதைப் பார்க்கும்போது, கடைத்
தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்த கதை
யாக இருக்கிறது என்பதை இங்கே சொல்லிக்கொள்கிறேன்.

தொழிற்சங்கங்கள் அதிகமான எண்ணிக்கையில் இருப்பது
வீண் குழப்பங்களையும் தொழிலாளர்கள் மத்தியில் உருவாக்கத்
தான் செய்கின்றன. சங்கத் தலைவர்களும் சுமுகமான ஒரு
உறவை தொழிலாளர் மத்தியிலே உருவாக்கப் பாடுபடவேண்டும்.
அதை விட்டுவிட்டு, இன்னொரு சங்கத்தை உடைத்து, தங்கள்
சங்கத்தில் உறுப்பினர்களைச் சேர்க்கவேண்டும் என்று நினைப்
பது, ''பாலைக் கறப்பதற்குப் பதிலாக, மடி அறுப்பதற்குச்
சமமாக இருக்கிறது'' இது போன்ற தொழிலாளர்களுடைய
மோதலை உருவாக்குவதும் அடியாட்களை வைத்து, தொழி
லாளர்களை அடக்க முயற்சிப்பதும் நடைமுறைப் பழக்க
மாக இருக்கிறது. அதற்கு இந்த அரசு ஆதரவளிக்கக்கூடாது
என்பதற்காகச் சொல்கிறேன். டி.வி.எஸ். சுகுகி என்ற
நிறுவனத்தில் இப்பொழுது கதவடைப்பு நடக்கின்றபொழுது
இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பேசினார்கள்,
தி.மு.க. சங்கம் ஒன்று இருக்கிறது என்று.

13-00 மணி)

நான் அதைச் சொல்லவிரும்பவில்லை. ஆனால் அங்கே வேலைக்
குச் சென்ற தொழிலாளர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும்
கிடைக்காமல் அவர்கள் பஸ்ஸிலே போகும்போது கூட பஸ்ஸை
'ஆசிட்' விட்டு எரித்த கதை எல்லாம்கூட அங்கே இருக்
கிறது. இது தொழிலாளர்களுக்குப் போதுமான ..........
(மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் காலை
நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று. பேரவை மீண்டும் இன்று
மாலை 16-00 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 13-00 மணிக்கு ஒத்திவைக்கப்
பெற்றது.



16-00 மணி

மாலை 16-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத்
தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில்
பேரவை மீண்டும் கூடியது.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அம்பாசமுத்திரம் மதுராகோட்ஸ் நிறுவனத்தில்
ஓய்வு பெற்ற 3 ஆயிரம் தொழிலாளர்களுக்கு பணிக்கொடை
பாக்கித் தொகையை அந்த நிறுவனம் வழங்க வேண்டி உள்ளது.
அரசு பணிக் கொடைச் சட்டம் 9-வது பிரிவின் படி
அந்த நிறுவனத்தின் மீது அரசு நடவடிக்கை எடுக்க காலதாமதம்
செய்து வருவதால் அந்த ஓய்வு பெற்ற தொழிலாளர்கள் பணிக்
கொடை பாக்கியைப் பெற முடியாமல் பல்வேறு போராட்டங்
களை நடத்தி வருகிறார்கள். அந்தப் பணிக்கொடையை சீக்கிர
மாகக் கொடுப்பதற்கு இந்த அரசு தக்க நடவடிக்கையை எடுக்க
வேண்டும் என்பதை நான் கேட்டுக் கொள்கிறேன்.

முறைப்படுத்தப்படாத அனைத்து ஈட்டுறுதித் தொழி
லாளர்களின் நலனைப் பாதுகாக்க இந்த அரசு முயற்சிகளை
மேற்கொண்டுள்ளது என்று இந்தக் கொள்கை விளக்கக்
குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அது வெறும்
வார்த்தையாகத்தான் உள்ளது. ஏனென்றால் இப்போது
தமிழகத்திலே அன்-ஆர்கனைஸ்டு லேபர் என்று சொல்லக்
கூடியவர்கள் பலர் ஏராளமான அளவில் ஏழைகளாக, நிலமற்ற
விவசாயிகளாக, கூலிகளாக, கல் உடைப்பவர்களாக, மூட்டை
தூக்குபவர்களாக இது போன்ற வேலை செய்பவர்களே
அதிகமாக வாழ்கிறார்கள். ஆனால் அவர்கள் எந்த விதமான
பணிப் பாதுகாப்பும் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்கள்
குறைந்தபட்சக் கூலியைக்கூட பெற முடியாமல் இருக்கிறார்கள்.
முந்தைய அரசு கொண்டுவந்த ஈட்டுறுதியுடன் இணைந்த ஓய்வு
ஊதியத் திட்டம் என்ற ஒரு திட்டத்திலே ஒவ்வொருவரும் 10
ரூபாய் கட்டி, அவர்கள் இறந்தால் பத்தாயிரம் ரூபாயாக
கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்தது. ஆனால் இடையிலே
அந்தத் திட்டத்தை எடுத்து விட்டதனால் கட்டிய பணம் என்ன
ஆனதோ, திருப்பிக் கிடைக்குமோ என்ற நிலையிலே அவர்
கள் ஐயப்படுகிறார்கள், ஒரு காலத்திலே வங்கிகளோ அல்லது
சீட்டுக் கம்பெனிகளோ முறிந்து போனால் அந்தக் கம்பெனி
களிடமிருந்து பணத்தை மக்கள் பெற முடியாத ஒரு சூழ்நிலை
இருந்தது. அது போல் அரசாங்கமே திருப்பிக் கொடுக்க
வேண்டிய காலகட்டத்தில் அதைத் திருப்பி கொடுக்காமல் இருப்
பது மக்களுக்கு அரசாங்கத்தின் மேலேயே ஒரு ஐயப்பாடு எல்லாம்
எழக்கூடும் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். ஆகவே
அந்தத் தொகையை சீக்கிரமாக எவ்வளவு துரிதமாகக் கொடுக்க
முடியுமோ அதை முழுவதுமாக அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்க
வேண்டும்.

[திரு. எஸ். எஸ். ராமசுப்பு] [1990 ஏப்ரல் 12

அடுத்து பீடித் தொழிலாளர்கள். எங்கள் பகுதியிலே
பீடித் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். முக்கிய
மாக திருநெல்வேலி மாவட்டத்திலே பீடித் தொழிலாளர்கள்
மிக அதிகமாக இருக்கிறார்கள். தமிழகம் முழுவதுமாக 5
லட்சம் பீடித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அதிகமான
பேர்கள் ஆலங்குளம் பகுதியிலே அந்தத் தொழிலைத்தான்
நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அங்குள்ள மக்கள்
இப்போது மிகவும் அல்லலுக்கு உள்ளாகி இருக்கிறார்கள்.
அந்த பீடி கம்பெனிகள்—ஒரு கம்பெனி என்று சொல்ல முடி
யாது—ஒட்டு மொத்தமாக அனைத்துக் கம்பெனிகளும் வாரத்தில்
3 நாட்களுக்குத்தான் வேலை கொடுக்கக்கூடிய அளவிலே பீடி
இலைகளையும் பீடித் தூள்களையும் அவர்களுக்குக் கொடுக்
கின்றன. அதிலும் நல்ல இலை கொடுக்கப்படாததால்
அந்தத் தொழிலாளர்கள் வெளியே இருந்து வாங்கி
பீடியைச் சுற்றித் தரவேண்டிய ஒரு சூழ்நிலை உருவாகி இருக்
கிறது. இப்படி வெளியே வாங்கிச் சுற்றுவதால் அவர்கள்
மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் தங்கள் கையிலிருந்து
பணத்தைச் செலவழிக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.
அதிலும் 3 நாட்களுக்கு மட்டுமே வேலை கொடுப்பதால் அந்தத்
தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். முக்கியமாக
தாய்மார்கள், 90 சதவீதம் பெண்கள்தான் இந்த பீடி
சுற்றும் தொழிலை மேற்கொண்டிருக்கிறார்கள். அந்த பீடி
சுற்றும் தொழிலாளர்களுடைய அவல நிலையைப்
போக்க வேண்டும். இந்த அரசாங்கது அங்குள்ள ஒவ்வொரு
கம்பெனிக்கும் ஆணையிட்டு 6 நாட்களுக்கு அதாவது வாரத்தில்
ஒரு நாள் லீவு போக 6 நாட்களுக்கும் அவர்களுக்கு அந்தத்
தொழிலில் வேலை வழங்குவதற்கு ஏற்பாட்டைச் செய்து,
அவர்களுக்கு ஊதிய உயர்வு என்ற வகையில் ஆயிரம் பீடிக்கு
20 ரூபாய் என்ற விதத்தில் ஊதிய உயர்வையும் கொடுப்பதற்கு
இந்த அரசு முன் வர வேண்டுமென்று நான் சொல்லிக் கொள்ள
விரும்புகிறேன்.

அடுத்தபடியாக வேலை வாய்ப்பு அலுவலகம்.
கொள்கைக் குறிப்பிலே சொல்லியிருக்கிறீர்கள் இந்தக்
அலுவலகத்திலே சுமார் 31 லட்சம் வேலை வேலை வாய்ப்பு
ரெஜிஸ்டர்ட் அன்-எம்பிளாயிட் இல்லாத அதாவது
அளவிலே வேலை வாய்ப்பு என்று சொல்லக் கூடிய
ரெஜிஸ்டர்ட் என்ற வகையிலே இல்லாமல் இருக்கிறார்கள். அன்-
மான பேர்கள் இருக்கிறார்கள். வேலை இல்லாதவர்கள் ஏராள
பேர்கள் இப்படி இருந்தும் ஆனாலும்கூட 31 லட்சம்
நலப் பணியாளர்கள் என்ற கூட இன்றைக்கு மக்கள்
பேர்களை தமிழகத்திலே முறையிலே சுமார் 25 ஆயிரம்
அவர்கள் உங்களுடைய நீங்கள் நியமித்திருக்கிறீர்கள். ஆனால்
கட்சியினுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள். உங்களுடைய
பேரை எடுப்பது எந்த தொண்டுக்காக நீங்கள் இப்படி 25 ஆயிரம்
வகையிலே நியாயம்? ஏனென்றால் வேலை



1990 ஏப்ரல் 12] [திரு. எஸ். எஸ். ராமசுப்பு]

வாய்ப்பு அலுவலகத்திலே 31 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள்,
இவர்கள் எல்லாம் என்ன நினைப்பார்கள் என்று நீங்கள்
சிந்திக்க வேண்டும். அப்படி ஆண்டுக்கணக்காக வேலை
வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துவிட்டு ஒரு நாளைக்கு
ஒரு இன்டர்வியூவாவது வராதா என்று, ஒரு கம்பெனியிலிருந்
தாவது வராதா என்று ஏங்கிக் கொண்டிருக்கும் அந்த வேலை
வாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்தவர்களுக்கு நீங்கள்
என்ன பாதுகாப்பு கொடுத்திருக்கிறீர்கள். இதுபோன்ற
நிலைமை தமிழகத்திலே உருவானால் எப்படி உங்களை
மக்கள் நம்புவார்கள். இப்படி வேலை வாய்ப்புக்காக வேலை
தேடி அலைந்துக் கொண்டிருக்கிற மக்களுக்கு என்ன பாது
காப்பைக் கொடுத்திருக்கிறீர்கள். அந்த வேலை வாய்ப்பு
அலுவலகங்களினால் என்ன பயன் என்று கேட்டுக் கொள்கி
றேன். அந்த வேலை வாய்ப்பு அலுவலகத்திலே சிலர் வேலை
செய்கிறார்கள். அங்கு அதிகாரிகளை நியமித்திருக்கிறார்கள்.
பல கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அது தவிர இந்த
வேலை வாய்ப்பு அலுவலகம் இருந்து என்ன பயன் என்பதை
இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அது மட்டும் அல்ல
அயல் நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் என்று ஒன்று இங்கே

16.05 மணி

இந்த வேலை வாய்ப்பு நிறுவனத்தின் மூலமாக
இருக்கிறது. வெளிநாட்டில் சென்று வேலை செய்பவர்களுக்கு 1989 வரை
சுமார் 116 ஆட்களுக்குத்தான் வேலை கொடுத்திருப்பதாக
இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஆனால் தனியார் முகவர்கள்
மூலமாக ஏராளமாக அனுப்பப்படுகிறார்கள். அப்படி அனுப்
பப்படுகிறபோது பலர் இந்த நாட்டிலே ஏமாற்றப்படுகிறார்கள்.
இப்படி பல ஏழை மக்கள் சுமார் 20,000, 30,000 என்று
கொடுத்து வெளிநாட்டிலே வேலை கிடைக்கும் என்று நம்பி
இப்படி மோசம் போய் இருக்கிறார்கள். அயல் நாட்டு வேலை
வாய்ப்பு நிறுவனம் என்று நிறுவியும்கூட இந்த இழிநிலை தமிழகத்
திலே இருக்கின்றதே இதை நீங்கள் அகற்றுவதற்கு என்ன செய்
திருக்கிறீர்கள் என்பதை நான் கேட்க விரும்புகிறேன். அதுமட்டு
மல்ல, இப்பொழுது ஏழையாக அன்-ஆர்கனைஸ்டு லேபர் என்று
சொல்லக்கூடிய மக்கள் கிராமத்திலேயும் வாழ்கிறார்கள்.
அவர்களுக்கு வருமானமும் மிகவும் குறைவு. மிகவும் குறைந்த
வருமானத்தில் உள்ள அவர்கள் மலிவு விலையில் வாங்கக்கூடிய
அரிசியை ஒரு ரூபாய் கூட்டியிருக்கிறீர்கள். இந்த அரிசியை
ஒரு ரூபாய் கூட்டி இருப்பதனால் பாதிக்கப்படுவது ஏழைத்
தொழிலாளர்கள்தான். அதுமட்டுமல்ல, கிராமத்திலே வாழ்
கின்ற ஏழை விவசாயிகள், கூலித் தொழிலாளர்கள்தான்
இதினால் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை
மனதிலே கொண்டு அரிசி விலையைக் குறைக்க வேண்டும்

[திரு. எஸ். எஸ். ராமசுப்பு] [1990 ஏப்ரல் 12

அதுமட்டுமல்ல. கள்ளச் சாராயப் பேர்வழிகள் இந்த ஏழை மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏழை மக்களிடமிருந்து பணத்தை எல்லாம் உறிஞ்சி விட்டார்கள். அதுபோக இப்பொழுது அரசாங்கமே மலிவு விலை மதுவை இங்கே அமல்படுத்தப் போகிறார்கள். இந்த மலிவு விலை மதுவையும், கள்ளச் சாராயத்தையும் கிராமங்களிலே கொண்டு சென்றால் ஏழை மக்கள் எவ்வளவு பாதிக்கப்படுவார் கள் என்பதை நீங்கள் நினைத்துப் பார்த்து மதுவிலக்கை தீவிரப் படுத்த வேண்டும் என்று உங்கள் மத்தியிலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. பால்வளத்துறையிலே நீங்கள் பாலினு டைய உற்பத்தியைப் பெருக்க வேண்டும். அதே போல குறைந்த விலையிலே பால் விநியோகம் செய்யப்பட வேண்டும் என்று இந்தக் கொள்கைக் குறிப்பிலே சொல்லியிருக்கிறீர்கள். பால்வளத்தைப் பொருத்தவரையிலே, கிராமங்களிலே இப் பொழுது பால்வள கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. பால்வள கூட்டுறவுச் சங்கங்களிலே பல முறைகேடுகள் நடக்கின்றன. நீங்கள் கண்காணிப்பாளர்கள் என்று 5 பேர்களை நியமித் திருக்கிறீர்கள். அந்தக் கண்காணிப்பாளர்கள் உங்கள் கட்சிக் காரர்களாக இருக்கிறார்கள். நன்றாக, திறமையாக செயல்படு கின்ற பல சங்கங்கள் இன்று கிராமங்களிலே நொடித்துப் போகக்கூடிய அளவிலே உங்களுடைய தலையீடு அதிகமாக இருக்கிறது.

மாண்புமிகு திரு கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ராமசுப்பு அவர்கள் சொல்கிறார்கள், கிராம பால் உற்பத்தியாளர் சங்கத்திலே ஐந்து பேர்களைக் கொண்ட கண்காணிப்பாளர் குழு ஒன்று அமைத்திருப்பதாக. எந்தப் பால் உற்பத்தியாளர் சங்கத்திலும் கண்காணிப்புக் குழு இன்னும் அமைக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரியாக 10 மணித் துளியில் அடித்துவிடுவேன். முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : எங்கள் தொகுதியிலே கங்கைகொண்டான் என்ற ஊர் இருக்கிறது. அங்கே யாதவர் குலமக்கள் ஒரு கிராமத்திலே வாழ்கிறார்கள். அங்கே நடராஜ கோனார் என்பவர் எங்கள் கட்சிக்காரர். அவர் தலைமை யிலே ஒரு கூட்டுறவுச் சங்கம் அங்கே அமைந்திருந்தது. அந்தக் கூட்டுறவுச் சங்கமானது சிறப்பாக அந்த கிராம மக்களுக்கு, அதுவும் பெண்களுக்கு முக்கியமாக நல்ல பணி ஆற்றிக் கொண்டிருந்தது. அவர்களுக்கு மாடுகளை எல்லாம் வாங்கிக் கொடுத்து சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருந்த அந்தச் சங்கத்தை எப்படியாவது ஒழிக்க வேண்டும் என்பதற்காக



1990 ஏப்ரல் 12] [திரு. எஸ். எஸ். ராமசுப்பு]

உங்களுடைய கட்சிக்காரர்கள் அங்கே செயல்பட்டுக் கொண்டிருந் தார்கள். அதில் கண்காணிப்புக் குழு என்று இரண்டு பேர் இருந்தார்கள் என்று என்னிடம் சொன்னார்கள். அவர்கள் இப்படி ஒரு மோசமான முறையிலே அவர்களை எப்படியாவது அடித்துவிட வேண்டும் என்பதற்காக வெளியூர்க்காரர்களைக் கொண்டு வந்து அவர்களைத் தாக்கியிருக்கிறார்கள். இப்படித் தாக்கியிருப்பதை போலீஸ் ஸ்டேஷனிலே சொன்னபோதிலும் கூட அவர்கள் அதற்கு தக்க நடவடிக்கை எடுக்கவில்லை.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : உள்ளூரில் நடக்கின்ற தகராறுக்கெல்லாம் பால்வளத் துறையா பொறுப்பு ஏற்க முடியும் ?

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நிலைமைகள் எல்லாம் இருப்பதால் சத்தான பால் உற்பத்தியெல்லாம் தடைபடுகிறது என்பதைத்தான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு மணித் துளிதான்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மேலும் அச்சுத் துறை பற்றி இங்கே சொல்லியிருக்கிறார்கள். இங்கே வெளி யிடுகின்ற கொள்கைக் குறிப்பை எல்லாம் நாம் பார்க் கின்றபோது, சில நேரங்களிலே கண்ணுக்குத் தெரியாமல் இருக்கிறது. அந்த எழுத்துக்கள் எல்லாம் சரியாகத் தெரிய வில்லை. சரியாகத் தெரியாததால் படிக்கவே கஷ்டமாக இருக்கிறது. எழுது பொருள் அச்சுத் துறை என்று கொள்கைக் குறிப்பு போட்டிருக்கிறார்கள். அது தெளிவாக இருக்கிறது. இது போன்ற நிலைமைகள் இங்கே இருக்கக் கூடாது. என்னை மாதிரி இருக்கின்ற ஆட்களாலே படிக்க முடியவில்லை என்றால் மாண்புமிகு உறுப்பினர் ஐயா தீட்சிதர் அவர்களால் எப்படித் தான் படிக்க முடியுதோ என்று எனக்குத் தெரியவில்லை. கொள்கைக் குறிப்புகளை எல்லாம் படிக்கும்பொழுது கொஞ்சம் அழகாகத் தெளிவாகப் போட்டுக் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். இங்குள்ள புரொசீடிங்ஸ் எல்லாம் லைப்ரரியில் இருக்கிறது. லைப்ரரியில் இருக்கின்ற காங்கிரஸ் ஆட்சிக் காலத்து புரொசீடிங்ஸ் எல்லாம் மிகவும் அருமையாக பைண்ட் பண்ணி வைத்திருந்தார்கள். அட்டை எல்லாம் கிழியாமல் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போதுள்ள புரொசீடிங்ஸ் எல்லாம் பார்த்தால் உடனடியாக கிழிந்து போய்விடும் நிலையில் இருக்கிறது. அது மட்டுமல்ல..........

16-10 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடித்து விடலாம்.

[1990 ஏப்ரல் 12

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : சட்டமன்ற உறுப்பினர்களுக்கு காப்பி எல்லாம் அனுப்பும்போது மிகவும் லேட்டாக அனுப்புகிறார்கள். அதையும் கொஞ்சம் சீக்கிரம் அனுப்ப வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். மேலும் அங்கு பணிபுரிகின்ற ஊழியர்களுக்கு........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவ்வளவுதான். முடியுங்கள். வாக்கியத்தை முடிக்கத் தெரிய வேண்டும். இல்லையென்றால் நான் முடித்து விடுவேன்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி நான் இத்துடன் முடித்து விடுகிறேன். நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. எச். பாண்டியன் இயன்றவரை சுருக்கமாக. (குறுக்கீடு) ''point of order-ஐத் தவறாகப் பயன்படுத்தினீர்கள் என்றால் ஜென்மத்திற்கும் ''point of order'' இருக்காது. திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : பால்வள சங்கத்தைப் பற்றி உறுப்பினர் பேசுகின்றபோது அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பால்வள சங்கத்தை புதியதாக அமைக்கின்றார்கள். அதற்கு சீப் புரோமோட்டர் என்று ஒருவர் தலைமையிலே 5 பேர் கொண்ட குழு அமைக்கிறார்கள். அந்தக் குழு அமைப்பதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அத்தனை பேரையும் உறுப்பினர்களாகச் சேர்த்து, அத்தனை பேரையும் கட்சி சார்பாகப் போட்டு பதியப்பெறுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'Point of order' என்றால் புதிய ஒரு கருத்தைச் சொல்வதற்காகவோ, புகுத்துவதற்காகவோ எழுப்பக் கூடாது என்பது விதி. நன்றாக படித்துப் பார்த்துக் கொள்ளுங்கள். திரு. பி. எச். பாண்டியன்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலன் மானியக் கோரிக்கையில் என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க முற்படுகிறேன்.

மானியக் கோரிக்கை எண். 29-ல் தொழிலாளர் பெருமக்களுக்கு எந்தப் பிரிவைச் சேர்ந்த தொழிலாளர்களாக இருந்தாலும் அவர்களுக்கு என்று தனியாக இங்கே ஏதாவது பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்று நான் இந்தப் புத்தகத்தைப் படித்துப் பார்த்தேன். தொழிலாளர் மக்களுக்கு உள்ளே நிதி ஒதுக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக தொழிலாளர் இலாக்காவை நிர்வகிப்பதற்கு அந்த டிபார்ட்மெண்டிற்கு காம்பவுண்டு சுவருக்கு இங்கே மானியக் கோரிக்கையை நம்முடைய மாண்புமிகு



1990 ஏப்ரல் 12] [திரு. பி. எச். பாண்டியன்]

அமைச்சர் அவர்கள் முன் வைத்திருக்கிறார்கள். இதை நான் இங்கே முதலில் எடுத்துச் சொல்வதற்குக் காரணம் தொழிலாளர் இல்லாமல் தொழிலாளர் நலனும் கிடையாது, ஒரு நாடும் வளர முடியாது. தொழிற்சாலைகள் இல்லாமலும் ஒரு தொழில் வளத்தை பெருக்காமலும் ஒரு நாட்டை முன்னேற்ற முடியாது. ஆகவேதான் நம்முடைய மானியக் கோரிக்கையில் லேபர் வெல்ஃபேர் என்று எழுதப்படாமல் லேபர் என்று போட்டிருக்கிறார்கள். ஆனால் தமிழில் தொழிலாளர் நலன் என்று எழுதியிருக்கிறார்கள். மானியக் கோரிக்கையில எழுதியிருக்கிறார்கள். இன்றைக்கு கோடிக்கணக்கான தொழிலாளர் மக்கள் உழைத்து நம்முடைய நாட்டை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் சென்றாலும், உழைக்காமல் இருப்பவர்களைப் பற்றி நாம் சிந்திக்காமல் இருக்க முடியாது. அதிகமாக உழைக்கக் கூடிய தொழிலாளிகள் வாழக் கூடிய அளவிற்கு அவர்களால் சம்பளத்தைப் பெற முடியாமல் அவர்கள் வாழ்க்கையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை நாம் மறுக்க முடியாது. 1948 ஆவது ஆண்டு நிறைவேற்றப்பட்ட மினிமம் வேஜஸ் ஆக்ட் இப்போது இருக்கக் கூடிய இந்தக் கால கட்டத்திற்கு அது ஒரு மினிமம் லிவிங் வேஜஸ் ஆக்ட்டாக இருந்திருக்க வேண்டும். வாழ்வதற்கு அது போதுமா என்றால் போதாது. அதிகமாக இருக்கக் கூடிய தொழிலாளிகளில் 10 சதவீதம், 15 சதவீதம் கேஷுவல் லேபராக எல்லாத் துறைகளிலும்—தனியார் துறையானாலும், அரசாங்கத் துறையானாலும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். கேஷுவல் லேபர்ஸுக்கு உரிமை கிடையாது. அவர்களுக்கு ரைட் கிடையாது. ஆண்டுக்கு 240 நாட்கள், இரண்டு ஆண்டுக் காலத்திற்கு 480 நாட்கள் அவர்கள் பணியாற்றினார்களேயானால் ஒரு நற்சான்றிதழோடு சில நேரங்களில் அவர்கள் நிரந்தரமாக்கப்படுகின்றார்கள். ஆனால் அவர்கள் தொழிற்சாலையின் நிர்வாகத்திற்கோ இல்லாவிட்டால் அரசாங்கத்தின் கருணைக்கோ ஏங்கிக் கொண்டு வாழக் கூடிய ஒரு கட்டாயம் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே கேஷுவல் லேபர் என்ற நிலையை ஏதோ கொஞ்ச காலத்திற்கு சட்டம் இருந்தாலும் இருக்கட்டும் அவர்களை எல்லாம் நிரந்தரமாக்கி அவர்களுடைய வாழ்க்கைக்கு ஒரு உத்திரவாதத்தைக் கொடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளை நான் முதலிலே இங்கே வைக்கின்றேன்.

16-15 மணி

வேலை இருக்கின்ற அன்றைக்கு வேலை பார்ப்பதுதான் கேஷுவல் லேபர். இன்றைக்கு பெரிய, பெரிய பதவிகளில் இருந்தாலும் கூட சில நேரங்களில் நாள்தோறும் வேலை இருப்பது கிடையாது. என்றைக்காவது தான் வேலை உண்டு. ஏன், நம்முடைய சட்ட மன்றத்தை எடுத்தால் கூட, ஆண்டு முழுவதும், நாள்தோறும் வேலை கிடையாது.'

ஆகவே, இதையாவது ஒட்டிப் பார்த்து கேஷுவல் லேபரர்களை அவர்கள் நாள்தோறும் வேலை பார்க்கின்ற காரணத்தினால் அவர்களை நிரந்தரமாக்கி அந்த உரிமையை வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளை தொழிலாளர்களின் சார்பில் நான் முதலில் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

காரணம், தொழிலாளிகளுக்கு எந்த அரசியல் கட்சியானாலும், தேர்தலுக்கு முன்னால்—எல்லாக் கட்சியையும் சேர்த்தே சொல்கிறேன்—தேர்தலுக்கு முன்னால் பேசுவது வேறு. தேர்தல் நேரத்தில் பேசுவது வேறு. தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு முதலாளிகள் வரக்கூடிய அந்தக் காலக் கட்டத்தில் அவர்களுடைய கொள்கையே மாறக் கூடிய கட்டாயம் உருவாகிக் கொண்டிருக்கின்றது. என்றைக்கு வரை நம்முடைய கம்பெனிச் சட்டத்தில் தொழிற்சாலை அதிபர்களிடமிருந்து டொனேஷன் வாங்கலாம் என்ற சட்டம் இருக்கிறதோ, அதுவரை எந்த அரசியல் கட்சியும் தொழிலாளிகளுக்காகப் பாடுபடவும் முடியாது. உண்மையாக உழைக்கவும் முடியாது. ஆகவே நான் இங்கே தெரிவித்துக் கொள்வதெல்லாம், சாதாரண, சாமானிய, ஏழைத் தொழிலாளிகளுக்காக குரல் கொடுக்கக் கூடிய ஒரு கட்டாயம், உழைப்புக்கு மதிப்புக் கொடுக்கக் கூடிய கட்டாயம் இன்றைக்கு உருவாகியிருக்கிறது.

உலக நாடுகளிலேயே ஓர்க்கிங் கிளாஸை ஆளக்கூடிய ரஷ்யா, ருமேனியா போன்ற நாடுகளில் எல்லாம், கம்யூனிசம் தழைத்தோங்கிய அந்த நாடுகளில் எல்லாம் இன்றைக்கு மாறுதல் வந்து கொண்டிருக்கிறது. அதுவும், நம்முடைய சமுதாயத்திலும் இன்றைக்கு ஒரு மறுமலர்ச்சி தேவை, கட்டாயம் தேவை, இன்னும் சொல்லப் போனால் ஒரு தொழில் புரட்சியே தேவை. உழைத்துப் பிழைக்கக் கூடிய ஒரு வர்க்கம் இருக்கும்போது உழைக்காமலே வாழக்கூடிய ஒரு வர்க்கமும் வாழ்ந்து கொண்டு இருக்கிறது. அந்த வர்க்கத்தைக் கண்காணிக்க வேண்டும் என்பதற்காக நான் இங்கே சொன்னேன்.

அடுத்து, எம்ப்ளாய்மென்ட் அண்டு டிரெயினிங். இன்றைக்கு சுமார் 20 இலட்சம் பேர் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து வேலை வாய்ப்பு கார்டுகளுக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றார்கள். 10 ஆண்டுக் காலமாக காத்துக் கொண்டிருக்கின்றார்கள். சில பேர் 10 ஆண்டுக்கு மேலும் காத்துக் கொண்டு இருக்கின்றார்கள். உண்மையைச் சொல்லப் போனால், இன்றைக்கு இருக்கக் கூடிய நிதி நிலையையும் பார்க்கும் போது, பொருளாதாரத்தை உலக நாடுகளோடு வளர்த்துக் கொண்டு ஒரு நாட்டை நல்லதொரு வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்ல முடியாத காரணத்தினால்



இன்றைக்கு அந்த இளைஞர்களுக்கு, 10 ஆண்டுகளுக்கு மேல் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் காத்துக் கொண்டிருக்கக் கூடிய இளைஞர்களுக்கு உண்மையிலேயே வேலை கிடைக்காது என்ற நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. இந்த உண்மையைச் சொல்லியாக வேண்டும். காத்துக் கொண்டிருப்பவர்களுக்கு எங்கேயிருந்து வாய்ப்பு வரப் போகிறது? ஏதாவது ஒரு அலுவலகத்தில் வேலை வந்தால், அங்கே ஓரிருவருக்கு வேலை கொடுப்பார்கள். ஆனால் நேர்முகக் காணலுக்கு 10, 15 பேர் வந்து கொண்டிருப்பார்கள். ஆகவே, எல்லோருக்கும் வேலை கிடைப்பதற்காக 'ரைட் டு ஓர்க்'. அதை நம்முடைய தேசிய முன்னணி அரசு தேர்தல் அறிக்கையிலே சொன்னார்கள். தேர்தல் அறிக்கையில் சொன்ன அந்த 'ரைட் டு ஓர்க்'-ஐ இன்னும் அரசியல் சட்டத்தில் கொண்டு வருவதற்கு, புகுத்துவதற்கு, எழுதுவதற்கு முன் வரவில்லை, பாராளுமன்றத்தில். எவ்வளவோ விவகாரங்கள் வந்திருக்கிறது. (குறுக்கீடு) ஒரு கட்சிக்காக அல்ல. எவ்வளவோ சட்டங்களைக் கொண்டு வந்து இருக்கின்றார்கள்,

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு பாண்டியன் சொல்வதை நான் ஒப்புக்கொள்கிறேன். கல்யாணம் ஆன பிறகு, உடனேயே பிள்ளை பெக்க முடியுமா? 10 மாதம், கர்ப்பம் ஆகி—இப்போதுதான் நாங்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறோம். 4 மாதம் ஆகிறது. அதற்கு மேலே எல்லா சடங்குகளும் நடக்கவேண்டும். அதற்கு மேலே வளர்ந்து, நீங்கள் அப்புறம்தான் மெட்டர்னிட்டி ஆஸ்பிட்டலுக்குப் போகவேண்டும். அதற்குப் பிறகுதான் அது உருவாகும். அதற்கு முன்னாலே நீங்கள் சொல்லவே முடியாது. (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படிப்பட்ட ஓர் அரிய உண்மையைச் சொன்னதற்காக உங்களைப் பாராட்டி (சிரிப்பு) தொடர்ந்து திரு. பாண்டியனைப் பேச அழைக்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன்: நம்முடைய மாண்புமிகு தீட்சிதர் அவர்கள் சொல்வது போல், அவர்கள் சொல்கின்ற காலம் வரை காத்திருப்போமேயானால், அந்த இளைஞர்களுக்கு எல்லாம் வயதாகிவிடும். ரிட்டயர் ஆகிவிடுவார்கள். அதற்குள்ளே மத்தியில் என்னென்ன அளவுக்கு ஆட்சி மாற்றங்கள், தேர்தல்கள் வரப்போகிறதோ எனக்குத் தெரியாது. ஆகவே, நான் இங்கே சொல்வதெல்லாம், 'ரைட் டு ஓர்க்' 1947-க்குப் பிறகு சுமார் 40 ஆண்டுக் காலம் கழிந்த பிறகும் இன்னும் நம்முடைய அரசியல் சட்டத்தில் இடம் பெறவில்லை. யாராலும் அதை ஒன்றும் செய்யமுடியவில்லை. ஆகவே, இந்த நிலையைப் பார்க்கும்போது, இன்றைக்கு தொழிலாளர் வர்க்கம்,

16–20 மணி

வேலை செய்து பிழைக்கவேண்டிய வர்க்கம், ஒரு ஏக்கத்தில்,
ஒரு ஆதங்கத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை யாரும்
மறந்து விட முடியாது. அடுத்து, இன்றைக்கு தொழிற்சாலை
கள், எவ்வளவோ தொழிற்சாலைகள் நம்முடைய தமிழகத்
தில் உருவானாலும், வந்து கொண்டிருந்தாலும் அத்தனை
தொழிற்சாலைகளும் நம்முடைய நாட்டின் வளர்ச்சிக்குப் பாடு
படுகிறதா, பொருளாதார உயர்விற்குப் பாடுபடுகிறதா என்பதை
நாம் மத்திய அரசின் கொள்கைக் குறிப்பில் படிக்கும்போது
புரிந்து கொள்ளலாம். தொழிற்சாலைகள் வந்தால் மட்டும்
இன்றைக்கு ஒரு பகுதி வளர்ந்து விடுவது இல்லை. தொழில்
அதிபர்கள் வேண்டுமானால் வளரலாம். காரணம் இங்கே சீப்
லேபர், இங்கே கேசுவல் லேபர் அதிகம். சீப் லேபர்களுக்கு
சில நேரங்களில் ஒரு நாளைக்கு ஒரு ரூபாய், 2 ரூபாய்க்கு சப்
சிடைஸ்டு சாப்பாடு போட்டு வேலை வாங்கக்கூடிய பல்
வேறு தொழிற்சாலைகள் இன்றைக்கு இருந்து கொண்டிருக்
கின்றன. ஆகவே, தொழிற்சாலைகளும் வேண்டும், வேண்டாம்
என்று சொல்லிவிட முடியாது. தொழிலாளர்களும் வாழ வேண்
டும். ஆனால் தொழிலாளர்கள் தொழிற்சாலை ஆரம்பித்த
உடன் அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால் யாரும்
இனிமேல் தொழிற்சாலை துவக்க முன்வர மாட்டார்கள்.
அந்த அளவுக்கு நம்முடைய தமிழகத்தில் நிலைமை உருவாகிக்
கொண்டிருக்கிறது. இன்றைக்கு பல்வேறு தொழிலாளர் நலச்
சட்டங்கள் வந்து கொண்டிருக்கின்றன ஆர்கனைஸ்டு லேபருக்கு.
அன் ஆர்கனைஸ்டு லேபருக்கு எந்தச் சட்டத்தையும் யாரும்
கொண்டுவரவில்லை. அவர்களை யார் பாதுகாப்பது? அவர்
களுக்கு எல்லாம் இன்றைக்கு பாதுகாப்பு இல்லை. ஆகவே,
ஒட்டு மொத்தமாக ஒர்க்கிங் கிளாஸ்க்கு ஒரு காம்ர
ஹென்ஸிவ் லெஜிஸ்லேஷன் இருக்குமானால் நலமாக இருக்கும்.
கேட்கலாம் இதற்கு முன்பு ஏன் வரவில்லை என்று. இங்கே
வந்து இங்கே இருந்து பேசக்கூடிய ஒரு கட்டாயமும், வாய்ப்பும்
இப்போது இருக்கிறது. ஆகவே, இன்றைக்கு சொல்கிறேன்.
நான் சொல்லுவது எல்லாம், இன்றைக்கு கிராமத்திலே மனித
சக்தி, மனித வளம் அதிகமாகி இருக்கிறது. அந்த மனித
வளத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமானால் ஆங்காங்கே
சிறிய சிறிய தொழில்களை துவக்கி அந்த தொழிலாளர்களின்
மனித சக்தியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்
டுக் கொள்கிறேன். இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்
திரு. ராமசுப்பு அவர்கள் சொன்னதைப் போல் நெல்லை
மாவட்டத்தில் பீடி சுற்றக்கூடிய தொழிலாளர்கள்
பல லட்சம் பேர் இருக்கிறார்கள். பீடி சுற்றக்கூடியவர்களுக்கு
அதிகமான சம்பளம் கிடையாது. அதிகமான வாய்ப்பும் கிடை
யாது. ஆனால் காச நோய் மட்டும் வாழ்நாளில். நிச்சயம்
அவை சுற்றி, சுற்றி அந்த இலை வாசத்தை சுவாசித்து



கடைசியில் காச நோயாளியாக மாறிவிடுகிறார்கள். அப்படிப்
பட்ட அந்தத் தொழிலாளர் பெருமக்களுக்கு ஒரு நலச் சட்
டத்தை உருவாக்கி இருந்தாலும் அதை வேகமாக அமல்
செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பீடி அதிபர்
கள் இடமிருந்து அவர்களை எல்லாம் காப்பாற்ற வேண்டும்.
இலையைக் கொடுக்கிறார்கள்; சம்பளத்தைக் கொடுப்பது இல்லை.
ஒரு ஆண்டு காலம், இரண்டு ஆண்டு காலம் சம்பளம் வழங்
காமல் இருக்கிறார்கள். இப்படி என்னுடைய தொகுதியில்
சம்பளம் வழங்காமல் இருந்தார்கள். நான் தேர்தலில் நின்ற
காரணத்தால்தான் அவர்கள் தேர்தலுக்கு முந்தைய நாள்
இரண்டு ஆண்டு சம்பளத்தையும் கொடுத்தார்கள் வாக்குகள்
பெறவேண்டும் என்ற எண்ணத்தோடு. ஆகவே, தொழிலாளர்
பெருமக்களை தொழில் அதிபர்கள் ஜனநாயகத்தை மாற்று
வதற்காகப் பயன்படுத்தக்கூடாது. ஒரு நாட்டின் ஆட்சி
மாற்றத்திற்காக அவர்களைப் பயன்படுத்தக்கூடாது. தொழிற்
சாலை வைத்து இருக்கக்கூடியவர்கள் தொழிலைப் பெருக்க
வேண்டும். தொழிற்சாலையை வளர்க்க வேண்டும். தொழி
லாளர் வர்க்கத்தை உயர்த்திட வேண்டுமே அல்லாமல் அவர்கள்
தாங்கள் வைத்து இருக்கக்கூடிய பண பலத்தை வைத்துக்
கொண்டு இன்றைக்கு நம்முடைய ஏழை எளிய தொழிலாளர்
களை நசுக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த பண
பலத்தை பொது வாழ்வில் ஜனநாயக ரீதியில், ஜனநாயக
அமைப்புகளை அழிப்பதற்கு யாராவது பயன்படுத்துவார்களா
னால் அவர்கள் மீது அரசாங்கம் கடுமையான நடவடிக்கை
எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்
பெற்றது) இத்துடன் நன்றி சொல்லி முடிக்கிறேன். நன்றி,
வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி.

*திரு. கே. ஏ. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பால்வளத் துறை மானியத்தின் மீது பால் உற்
பத்தியாளர்கள் சார்பாக என்னுடைய கருத்துக்களை கூற
விழைகிறேன்.

இன்று தமிழகத்தில் பால்வளம் பெருகி வளர்ச்சியடைந்
துள்ள இந்த நிலைமைக்கு முழு முதல் காரணமாக இருந்த
தேசிய பால்வள வாரியத்தின் தலைவரும், இந்திய பால்
பண்ணை கழகத்தின் தலைவரும் குஜராத் பால் உற்பத்தியாளர்
கள் இணையத்தின் தலைவருமான டாக்டர் குரியன் அவர்
களுக்கு தமிழக பால் உற்பத்தியாளர்கள் சார்பாக நன்றியினை
தெரிவித்துக் கொள்கிறேன்.

1973-ஆம் ஆண்டு பெரியார் மாவட்டத்தில் தொடங்கி
இன்று 17 மாவட்டங்களில் 7816 உற்பத்தியாளர்கள் சங்கங்கள்
தொடங்கப்பட்டு மிகச் சிறப்பாக நடைபெறுவது பாராட்டப்

படவேண்டிய ஒன்றாகும். இருப்பினும் இந்த அமைப்புகளின்
இன்றைய நிலையினைப் பார்க்கும்போது வருந்தத்தக்கதாக
உள்ளது.

16–25 மணி

இன்றைய தினம் பெரும்பாலான ஒன்றியங்கள் நஷ்டத்தில்
தான் நடந்து கொண்டிருக்கின்றன. இதற்கு அடிப்படைக்
காரணமே அரசின் தவறான கொள்கைதான் என்பதை தெளி
வாகக் கூறமுடியும். எடுத்துக்காட்டாக, 1988 ஆம் ஆண்டு
கவர்னர் ஆட்சியின் போது பால் உற்பத்தியாளர்கள் பாலுக்கு
விலை கேட்டுப் போராடினார்கள். அன்று நமது முதல்வர்
அவர்கள் பாலுக்கு விலை உயர்வு கோருவது நியாயம் என்றும்,
லிட்டருக்கு 1 ரூபாய் வரை உயர்த்தித் கொடுக்க வேண்டு
மென்றும் போராடுபவர்களை அழைத்துப் பேச வேண்டும் என்றும்
அறிக்கை கொடுத்து பால் உற்பத்தியாளர்களுக்கு ஆதரவு
காட்டியமைக்கு பால் உற்பத்தியாளர்கள் சார்பாக நன்றி கூறக்
கடமைப்பட்டிருக்கிறேன். ஆளுநரின் பேச்சு வார்த்தை மூலம்
1 கிலோ கொழுப்பு சத்து பாலுக்கு ரூபாய் 5·80 கொடுப்பது
என்றும் 1989 ஏப்ரல் முதல் ரூபாய் 6.90 கொடுப்பது என்றும்
உடன்பாடு ஏற்பட்டது. இன்றைய அரசு பொறுப்பேற்ற
பிறகு கவர்னரின் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட உடன்பாட்டின்
படி இன்றுவரை இரண்டு ரூபாய் கூட்டிக் கொடுக்கவில்லை.
கவர்னர் ஆட்சிக் காலத்தில் ஆதரவு அளித்த முதல்வர் அவர்கள்
இன்று பால் உற்பத்தியாளர்களின் கோரிக்கையை கருணை
யுடன் பரிசீலித்து ஏற்றுக் கொண்டு விலை உயர்வை அறிவிக்கக்
கேட்டுக் கொள்கிறேன். மேலும் ஆளுநரின் ஆட்சிக் காலத்தில்
1988 ஆம் ஆண்டு முதல் பால் உற்பத்தியாளர்கள் சங்கத் தேர்தல்
களில் முழுக்க முழுக்க பால் உற்பத்தியாளர்களே வாக்களிக்கும்
வகையில் ஆண்டு ஒன்றுக்கு 300 லிட்டர் பால் அல்லது 120
நாட்கள் பால் வழங்கிய உற்பத்தியாளர்களைக் கொண்டு
தேர்தல் நடத்தப்பட்டது. இவ்வகையில் தமிழகத்தில் உள்ள
அனைத்து கிராம கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்
கும் முறையாக தேர்தல் நடைபெற்று நிர்வகிக்கப்பட்டுவந்த
போது இன்றைய அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற
குறுகிய தினங்களில் கிராம கூட்டுறவு பால்உற்பத்தியாளர்கள்
சங்க நிர்வாக சபையினைக் கலைத்தது மிகவும் வருந்தத்
தக்க செயலாகும். தகுதியுடைய பால் உற்பத்தியாளர்களால்
முறையாக தேர்தல் நடத்தப்பட்டு நிர்வாகப் பொறுப்பேற்றுக்
கொண்ட ஒரு வருட காலத்தில் எந்தவிதமான நியாயமான
காரணங்களும் இன்றி கலைத்தது கூட்டுறவு அமைப்பினையே
படுகொலை செய்ததாகும். அதுவும் இல்லாமல் தனி அலுவலர்
களுக்கு ஆலோசனை கூறும்பொருட்டு இருவர் கமிட்டி என்று
நியமித்தது அங்குள்ள பால் உற்பத்தியாளர்களிடையே பெரும்
அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்
பிருந்து இன்றுவரையில் எந்த பால் கூட்டுறவு உற்பத்தியாளர்



கள் சங்கத்திலும் செய்திராத அளவிற்கு தேவையே இல்லாத
அளவில் பால் உற்பத்தி என்னவென்றே தெரியாதவர்களை உறுப்
பினர்கள் ஆக்கிய, விதிகளுக்கு புறம்பான செயலை வன்மையாக
கண்டிக்கிறேன். உதாரணத்திற்கு எனது பகுதியில் உள்ள ஒரு
சங்கத்திற்கு பால் உற்பத்தியாளர்களின் ஆலோசனைக் குழு
உறுப்பினராக நியமிக்கப்பட்ட ஒருவர் பால் உற்பத்தியைப் பற்றி
தெரியாத, பால் உற்பத்தி செய்யாத, சலவைக் கடை வைத்திருப்
பவர் என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு
வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நிர்வாக சபை கலைக்கப்பட்ட தினத்திற்குப் பிறகு மாவட்
டங்களிலுள்ள கிராம கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள்
சங்கங்களில் உறுப்பினராக சேர்க்கப்பட்டவர்களில் பால் உற்
பத்திக்கு தொடர்பில்லாதவரும், அந்தந்த சங்க இருப்பிட விவ
கார எல்லைக்கு வெளியே வசிப்பராகவும் மேலும் ஆளுங்
கட்சியைச் சேர்ந்தவர்களாகவும் நிரப்பப்பட்டுள்ளார்கள். ஜாதி
மத பேதமின்றி அரசியல், கட்சி பாகுபாடுகள் இன்றி உற்பத்தி
யாளர்களே முன் நின்று நிர்வகிக்கும் இந்த கிராம கூட்டுறவு
அமைப்புகளில் பால் உற்பத்திக்கு சம்பந்தமில்லாத நபர்களை
உறுப்பினர்களாக்கி, அப்படி சேர்க்கப்பட்டவர்களின் அறுதிப்
பெரும்பான்மை பலம் உயர்ந்துள்ளதைக் கண்ட பால் உற்பத்தி
யாளர்கள் மிகவும் வேதனையுடன் பால் வழங்குகிறார்கள் என்
பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகம் கலைக்கப்பட்ட பின்பு
கடந்த குறுகிய காலத்தில் பால் உற்பத்திக்கு சம்பந்தம் இல்
லாதவர்களை உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டிருக்கும் விகிதாச்
சாரத்தை இங்கு அறிவிப்போமானால் மேலே கூறிய நடவடிக்கை
களின் தீவிரம் தெரியும். தற்போது கிராம பால் உற்பத்தியாளர்
கள் சங்கங்களுக்கு நிர்வாக சபையினராக கட்சியைச் சார்ந்தவர்
களே நியமிக்கப்படுவதாக எல்லா கிராமங்களிலும் பால் உற்
பத்தியாளர்களால் பேசப்பட்டு வருகிறது. ஒருகால் அரசு
நிர்வாக சபை உறுப்பினர்களை நியமிப்பதாக இருந்தால்
கலைக்கப்பட்ட நிர்வாக சபையினரிடமே பொறுப்பை மீண்டும்
ஒப்படைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதை
அமைச்சர் அவர்கள் ஏற்காவிட்டாலும், குறைந்த பட்சம் பால்
உற்பத்தியாளர்களை மட்டுமே நியமிக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அகில இந்திய அளவில் உலக வங்கிக் கடன் திட்டத்தின்
நிதி உதவியால் தேசிய பால்வள வாரிய தொழில் நுட்ப
அறிவுரைக்கிணங்க முறையாக பின்பற்றி முழுமையாக பால்
வளத்தில் வெற்றி கண்ட மாநிலங்களில் நம் தமிழகம் முதன்மை
வகிக்கின்றது. திட்டத்தினை ஏற்றுக்கொள்கிற அமைப்பு,
அந்த அமைப்பினை நிர்வகிப்பவர்களின் பொறுப்புணர்வு ஆகிய
வைகளால்தான் தமிழகத்தில் பால் வளத் திட்டங்கள் வெற்றி

[திரு. கே. ஏ. மணி] [1990 ஏப்ரல் 12

கண்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் கவனத்தில்
கொள்ள வேண்டும். கிராம கூட்டுறவு பால் உற்பத்தியாளர்
கள் சங்க உறுப்பினர்களுக்கு அவர்கள் விற்ற பாலுக்குண்டான
பணத்தை தவிர மற்ற உதவிகள் ஏதும் பெரிதாக கிட்டிவிட
வில்லை. மருத்துவ உதவி, நோய்த்தடுப்பு உதவி, பால்பண்ணை
அமைக்கும் மூலதன உதவிகள் ஏதுமே பொருளாதார வளத்தைக்
கூட்டிவிடவில்லை. கன்று வளர்ப்புத் திட்டம் மூலம் உருவாக்
கப்பட்ட கலப்பின கறவை மாடுகள்கூட பால் உற்பத்தியை
இரண்டு மடங்கு, மூன்று மடங்கு அளித்து ஒன்றிய பால் கொள்
முதல் அளவை உயர்த்திக் காட்டியதே தவிர பால் உற்பத்தி
செய்பவர்களுக்கு லாபம் கொடுத்து விடவில்லை.

16-30 மணி

கிராம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு
அரசு தற்போது மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகளைத்
தொடர்ந்து நிறைவேற்றுமானால், கிராமச் சங்கங்களில் ஆங்
காங்கே கருத்து வேறுபாடுகள் தோன்றி பால் உற்பத்தி பெரு
மளவில் பாதிக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்
கொள்கிறேன். நமக்காக மட்டும் அல்லாது, நகரங்களில் உள்ள
வர்களுக்கும் பால் கொள்முதல் செய்யவே அரசாங்கம் இந்த
திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறதென்று நன்றாக புரிந்து
வைத்திருக்கின்ற பால் உற்பத்தியாளர்கள், தங்களது ஆர்வத்
தைக் குறைத்துக் கொண்டார்களானால், அரசாங்கம், நகர
மக்களுக்குப் பால் வழங்குவதில் பெருத்த சிரமத்தை மேற்
கொள்ள நேரிடும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்
கிறேன்.

கடந்த ஆண்டு பால் உபரியாக வந்தபோது, வாங்கி
சேகரித்து அதைப் பயப்படுத்தி விற்பனை செய்வதற்கு சக்தி
இழந்த நிலையில் உற்பத்தி செய்த பாலை, உற்பத்தியாளர்
களிடமே திருப்பியனுப்பிய ஒரு நிலைமை இங்கே ஏற்பட்டது.
ஆகவே எதிர்வரும் ஆண்டுகளில் இதுபோன்ற நிலையை மாற்றி,
ஆக்கபூர்வமான திட்டங்களை உருவாக்கி செயல்படுத்த முயற்
சிக்காத அரசு, கிராம மட்டத்தில் உள்ள நிர்வாக அமைப்பு
களை நிந்திப்பது எந்த வகையில் நியாயம் என்று கேட்டுக்
கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, 4 சதவீத கொழுப்பு 8 சதவீத எஸ்.என்.
எம்.-க்கு குறைவில்லாமலும், உயர்ந்து வரும் தரத்திற்கேற்ப
பசும்பால் மொத்த திடப் பொருளுக்கு விலை கொடுக்கப்படு
கின்றது. 8 சதவீத எஸ்.என்.எம்.-க்கும் குறைந்து 7.9 சத
வீதம் என்று வந்தால் கொழுப்புச் சத்துக்கு மட்டும் விலை
என்று குறைத்து பசும்பால் வாங்கப்படுகிறது. இதன் அடிப்படை
யில் பசும்பால் லிட்டர் ஒன்றுக்கு 40 பைசா முதல் 60 பைசா



1990 ஏப்ரல் 12] [திரு. கே. ஏ. மணி]

வரை பலன் குறைந்து வழங்கப்படுகிறது. பல ஆண்டுகளுக்கு முன்பே
அதிகமாக வழங்கப்படுகிறது. பல ஆண்டுகளுக்கு முன்பே
சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில், கலப்பு
இன கறவைகளின் பால் சிறிதளவும் தண்ணீர் கலக்காத நிலை
யில் எஸ். என். எம். 7.7 வரை வருவதாக அறிந்து ஒன்றிய
நிர்வாக இயக்குநர், கால்நடை மருத்துவர் மற்றும் நியமிக்கப்
பட்ட நிர்வாக உறுப்பினர் ஆகியோர் கொண்ட ஆய்வுக்குழு
நேரடியாக பல கறவைகளின் பாலை பரிசோதித்து உறுதிப்
படுத்திக் கொண்டபின்னர், 8 சத எஸ். என். எம். க்குக்
குறைவாக 7.7 சத எஸ்.என்.எம். வரை பாயிண்ட்டுக்கு 15
பைசா வீதம் குறைத்து மொத்த திடப் பொருள் விலை கொடுக்
கப்பட்டு வந்தது. இந்த அடிப்படையில் பசும்பால் மொத்த
திடப்பொருள் விலை கொடுக்கப்பட்டு வருகின்ற வேளையில்
பால் உபரியாக வருவதைக் குறைக்கும் நோக்கத்தில் இப்படி
விலை கொடுக்கக்கூடாது என்று உத்தரவு இட்டு, நடைமுறையை
மாற்றியுள்ளனர். இந்த உத்தரவுபடி தற்போது 8 சதவீத
எஸ்.என்.எம்.—க்குக் குறைவாக 7.9 சதவீதம் வந்தாலும் அந்த
பாலுக்குக் கொழுப்புச் சத்து அடிப்படையிலேயே பாயிண்ட் ஒன்
றுக்கு 40 பைசாவிலிருந்து 60 பைசா வரை சங்கங்கள் பால் உற்
பத்தியாளர்களுக்குக் குறைக்கிறது. கன்று வளர்ப்புத் திட்டத்தில்
உயர்ந்த ஜாதி கலப்பின பசுக்களை வளர்த்து உருவாக்கி, அதன்
பாலை லிட்டர் 60 பைசா குறைத்து விற்கும் பால் உற்பத்தி
யாளர், எவ்வளவு நாட்களுக்கு தொடர்ந்து பால் உற்பத்தி செய்
வான் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அது
போலவே, ஈரோடு ஒன்றியத்திலும் 8 சதவீத எஸ்.என்.எம்.
வரை வாங்கி வந்த பாலின் தரத்தை, 8.5 சதவீத எஸ்.என்.எம்.
என்று உயர்த்தி விலை நிர்ணயம் செய்த நடவடிக்கையை
அங்கேயிருக்கின்ற பால் உற்பத்தியாளர்கள் கூட்டம் போட்டு
தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை தெரி
வித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்குக் கிராமங்களில் உள்ள விவசாயிகளின் பொரு
ளாதாரப் புழக்கம் என்பது பால் விற்பனையிலிருந்து கிடைக்கும்
பணம் தான். அதுதான் அவர்கள் கையில் வெகுவாகக் கையாளப்
படுகிறது. விவசாயத் தொழிலாளர்கள் தாங்கள் பெற்ற கற
வை மாட்டுக் கடனை தவணை தவறாமல் செலுத்த வேண்டு
மானால் இதன் அடிப்படை அமைப்புகள் சிறப்பாக இயங்கினால்
தான் அது சாத்தியமாகும்.

காந்திஜீ கண்ட கிராம ராஜ்யம் இந்த பால் தொழிலில்
பங்கு பெற்றுள்ளதை இன்றையதினம் நாம் காண்கிறோம். இப்
படிப்பட்ட இந்த விவசாயிகளின் அங்கமான தொழிலில் உற்
பத்தி செய்யப்பட்ட பாலுக்கு அன்றாடம் பால் பணம் கொடுக்
கப்படவில்லை என்று யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

[திரு. கே. ஏ. மணி] [1990 ஏப்ரல் 12

மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியம் கிராம சங்கங் களுக்கு பால் பணம் குறித்த காலத்தில் அனுப்பவில்லை என் பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். கிராமச் சங்கம் தனது உறுப்பினருக்கு குறித்த காலத்தில் பட்டுவாடா செய்ய வில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையின் காரணமாக, சிறப்பான பால் உற் பத்தி பாதிக்கப்படும் என்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்பு கிறேன்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய தணிக்கை அறிக்கை தகவலின்படி ஒன்றியத் தில் இழப்பு இதனால் ஏற்படுகின்றது. இந்த மாவட்ட பால் உற் பத்தியாளர்கள் ஒன்றியத்தின் நஷ்டத்திற்கு நிர்வாகத் திறமை யின்மை காரணமா? அன்றி வேறு காரணம் உண்டா? என்பதை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பலகோடி ரூபாய் கடன் வாங்கப்பட்டு இக்கடன் தொகையில் உருவாக்கப்பட்ட இந்த அமைப்புகள் அனைத்தும் கடன் கட்ட சக்தியற்ற நிலைக்கு வந்து, கலைப்பு நிலைக்கு (Liquidation) தள்ளப்பட்டு வந்துள்ளது. தெரிந்தே ஏற்படுத்தப்பட்ட இந்த நஷ்டங்களை உடனடியாக ஆராய்ந்து தீர்க்கப்பட வேண்டும். கடந்த பத்தாண்டுகளில் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்களின் தணிக்கை வரவு செலவு லாப நஷ்டக் கணக்குகளை சமர்ப்பிக்க முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, எந்தெந்த ஆண்டுகளில் எதனால் நஷ்டம் ஏற்பட்டது என்ற விபரக்கணக்கு கண்டுபிடிக்கப்பட்டால்தான் வருங்காலத்திலாவது பால் வளத்துறை பிழைக்கும். இந்த துறை தொழில் நுட்பம் வாய்ந்தது என்பதால் ஐ.ஏ.எஸ். அதிகாரி களைத் தலைவர்களாகப் போடுவதும், ரெவின்யூ அதிகாரிகளை மேல்மட்டத்தில் போடுவதும், நியமிக்கப்படுகின்ற சேர்மன்களை யும் தவிர்க்கப்பட்டால் Technocrate என்று சொல்லப்படு கின்ற தொழில் நுட்ப அதிகாரிகளைக் கொண்ட தேர்ந்தெடுக்கப் பட்ட சேர்மன்களைக் கொண்டு நிர்வகிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

16-35 மணி

மாவட்ட ஒன்றியம் இணையத்தின் கட்டுப்பாடின்றி, தான் கொள்முதல் செய்த பாலினையும், தயாரித்த உப பொருட்களை யும் கட்டுப்படியான விலைக்கு விற்கும் உரிமைகளை ஒன்றியத் திற்கு இணையம் வழங்க வேண்டும்.

கடந்த சில மாதங்களாக கிராம பால் சங்கங்கள் ஒன்றியத் திற்கு அனுப்பும் பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு 5 பைசா வீதம் பராமரிப்புக் கட்டணமாகப் பிடித்தம் செய்கிறது. பால் உற்பத்தி



1990 ஏப்ரல் 12] [திரு. கே. ஏ. மணி]

யாளருக்குக் கொடுக்க வேண்டிய உண்மையான பால் விலையில் பிடித்தம் செய்து ஒன்றியத்தைப் பராமரிப்பு செய்யும் அவல நிலைமை, நிர்வாகச் சீர்கேடுகள் தவிர்க்கப்பட வேண்டும்.

தற்போது பால் வளத்துறை அதிகாரிகளும், பால்வள அமைச் சரும் பால் உற்பத்தியாளர்கள் சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை மூலம் குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டு மெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நாள் ஒன்றுக்கு உற்பத்தியாளர்கள் நிதிநிலை அறிக்கையில் 12.5 லட்சம் லிட்டர் பாலின் அளவு 27.6 லட்சம் லிட்டராக உயர்த்தப்படும் எனக் குறிப்பிட்டு இருப்பது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

குறிப்பாக, ஈரோடு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் மட்டும் ஆண்டு ஒன்றுக்குக் குறைந்தபட்சமாக ரூபாய் 1 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது. 1987-88 ஆம் ஆண்டில் மட்டும் 1,67,22,708 ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதற்கு முதன்மையான காரணமாக ஒன்றியங்கள் தாங்கள் கொள்முதல் செய்யும் பாலையும், மற்றும் உப பொருட்களையும் கட்டுப்படி யாகக் கூடிய விலைக்கு விற்றுக் கொள்கின்ற உரிமை ஒன்றியங் களுக்கு வழங்கப்பட வேண்டும்.

1987-88 ஆம் ஆண்டு ஈரோடு ஒன்றியத்தின் தணிக்கை அறிக்கையில் மிகத் தெளிவாக நஷ்டத்திற்கான காரணங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இதில் ஒன்றியம் ரூ. 3,25-க்கு ஒரு லிட்டர் பாலைக் கொள்முதல் செய்து இதர செலவுகள் லிட்டர் ஒன்றுக்கு 0.70 பைசா செலவழித்து இணையத்திற்கு ரூ. 3.35க்கு வழங்குகிறது. இதன் மூலம் லிட்டர் ஒன்றுக்கு 0.60 பைசா ஒன்றியத்திற்கு இழப்பு ஏற்படுகின்றது. நாளொன்றுக்கு ஈரோடு ஒன்றியம் 40,000 லிட்டர் பாலை இணையத்திற்கு அனுப்பும் வகையில் தினந்தோறும் ரூ. 24,000 இழப்பு ஏற்படுகின்றது. இவ்வகையில் மட்டும் ஆண்டுக்கு சுமார் 95 லட்சம் இழப்பு ஏற்படுகின்றது. மேலும் டேங்கர் வாடகைமூலம் தினமும் ரூ. 1,000 ஒன்றியத்திற்கு இழப்பு ஏற்படுகின்றது.

பால் கொள்முதல் விலை ரூ. 50 இருக்கும்போது ஒன்றியத் திடமிருந்து கிலோ ரூ. 30 கொடுத்து வெண்ணெய் வாங்கிய இணையம் ரூ. 58-க்குபால் கொள்முதல் விலை இருக்கும் போதும் அதே ரூ. 30-க்கு வெண்ணெய் வாங்குகிறது. இதன் மூலம் பேரிழப்பு ஒன்றியத்திற்கு ஏற்படுகின்றது.

இவற்றிற்கு இணையத்தின் ஏதேச்சாதிகாரப் போக்கும் நியாயமற்ற கொள்கையுமே காரணமாக உள்ளன. குறிப்பாக ஒன்றியம் துணை விதிகளின்படி இணையத்தைவிட நல்ல விலைக்கு

[திரு. கே. ஏ. மணி] [1990 ஏப்ரல் 12

விற்க முடியுமெனில் இணையத்தின் அனுமதி பெற்று
உப பொருட்களை விற்கலாம் என்ற விதி உள்ளது. ஆனால்
ஒருபோதும் இணையம் இதை அனுமதிப்பதில்லை. இதன் காரண
மாகத்தான் ஒன்றியங்கள் பெருத்த நட்டத்திற்கு தள்ளப்பட்
டுள்ளன. எனவே இணையம் இவ்விதியின்படி ஒன்றியங்களைத்
தன்னிச்சையாக விற்பனை செய்ய அனுமதிக்க வேண்டும் என
கேட்டுக் கொள்கிறேன். பால் வளம் பெருக வேண்டுமானால்
பால் உற்பத்தியாளரின் நலன் போற்றப்பட வேண்டும் என்று
கூறி முடிக்கிறேன.

திரு. பா. அப்துல்சமத் : பேரவைத் தலைவர் அவர்களே,
வாய்ப்பிற்கு நன்றி. தொழில் நீதிமன்றங்களைப் புதிதாக
வேலூர், சேலம், திருச்சி, போன்ற நகரங்களில் ஏற்படுத்துவதாக
அறிக்கையில் தெரிவித்துள்ளீர்கள். வாணியம்பாடி, ஆம்பூர்
போன்ற நகரங்களில் தோல் தொழிற்சாலை, பீடித் தொழிற்
சாலைகள் அதிகமாக இருக்கின்றன. தோல் தொழிற்சாலையில்
மிக அதிகமான வழக்குகள் ஏற்படுகின்றன. அந்த ஒரே
காரணத்தை வைத்து வாணியம்பாடியினை தலைமைநிலையமாக
வைத்து தொழில் நீதி மன்றம் ஏற்படுத்த வேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் உள்ள பீடித்தொழிலாளர்
கள் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். பீடித் தொழிலாளர்
களுக்கு 1,000 வீடுகள் கட்டித் தருவதாக அரசு அறிவித்து இருக்
கிறது. ஆகவே அந்த ஆயிரம் வீடுகளைப் பீடித் தொழிலாளர்
கள் எங்கெங்கு அதிகமாக இருக்கிறார்களோ அந்தந்தப் பக்கங்
களில் உள்ள இடங்களில் வீடுகளைக் கட்டிக் கொடுக்கிற போது
அதற்காக நிலம் கையகப்படுத்தும்போது பல சிக்கல்கள் ஏற்படு
கின்றன. ஆகவே பீடித் தொழிலாளர்களுக்குச் சொந்தமான
பட்டா இடம் ஒரு சென்டோ இரண்டு சென்டோ இருந்தால் அந்த
இடத்திலேஅவர்களுக்குச் சொந்தமான இடத்திலேயேதொகையை
கொடுத்து அவர்களுக்கு வீடு கட்டித்தர வேண்டும் என்று நான்
கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்காக ஒரு தனி இடத்தைப்
பார்த்து அந்தஇடத்தில் மட்டும் பீடித் தொழிலாளர்கள் தனியாக
வாழ்கிறார்கள் என்கிற நிலைமையை மாற்றுகின்ற வகையில்
நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆதிதிராவிட மக்களுக்கு அப்
படிப்பட்ட ஒரு நிலைமை இருக்கிறது. அவர்களைப் மக்களிடத்
திலே இருந்து பிரிக்காமல் அவரவர்கள் எந்தெந்த இடத்தில்
கேட்கிறார்களோ அந்த இடத்தில் தொகையைக் கொடுத்து வீடு
களைக் கட்டித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்
கிறேன்.

அடுத்து கூலி வெட்டு, 2,000 பீடிகள் ஒரு கிலோவுக்கு வேண்
டும் என்று கம்பெனியிலே அறிவிக்கிறார்கள். ஆனால் 1,500
பீடிகள் கூட வருவதில்லை, இன்றைக்கிருக்கிற நிலைமையைப்



1990 ஏப்ரல் 12] [திரு. பா. அப்துல்சமத்]

பார்த்தால் ஒரு கிலோ இலையின் விலை 40 ரூபாய் ஆகிறது.
இந்த நிலைமை 100 இலை குறைந்தால் ஒரு ரூபாய் ஐம்பது காசு
இரண்டு ரூபாய் என்று கணக்கிட்டு ஆயிரம் பீடிக்கும் கூலி கொடுக்
கின்ற நேரத்தில் அதாவது 15 ரூபாய் கொடுக்கிறார்கள் என்
றால் கடைசியாக தொழிலாளர்களுக்குப் போய்ச் சேருகிற நேரத்
தில் அது ஒழுங்காகப் போய்ச் சேராமல் கூலி குறைகின்ற நிலைமை
வருகிறது, அதாவது சட்டத்திலிருந்து மீறி 7 ரூபாய் 50 காசு,
8 ரூபாய், 9 ரூபாய் என்ற அளவுக்குத்தான் தரப்படுகிறது.

16-40 மணி

ஆகவே, அதிகாரிகளை வைத்துக்கொண்டு, பீடித்தொழிலாளர்
களைக் காப்பாற்றுவதற்காக, அவர்களின் நலனிலே அக்கறை
கொண்டு பீடி இலைகளை எந்த அளவுக்குக் கொடுக்கிறார்
கள், எந்த அளவுக்கு வருகிறது என்று கணக்கு எடுத்து, தவறு
செய்யும் தொழில் அதிபர்கள் மீது நடவடிக்கை எடுத்து உடனுக்
குடன் தீர்வு காணவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தது, வாராந்திர விடுமுறை. வாரத்திற்கு ஒரு நாள்
விடுமுறை கொடுத்தால், அதற்கு கூலி கொடுக்க வேண்டுமென்று
சட்டம் இருந்தும், இது வரையில் அதை அமல் படுத்தவில்லை.
ஆகவே, அதை உடனடியாக அமல் செய்யப்பட வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

பெண்கள் பாஸ் புத்தகத்தில் அவர்களின் பெயர் இடம்
பெறாத காரணத்தால் ஏறத்தாழ 20 ஆயிரம் பெண்கள் திருநெல்
வேலியிலே வேலையில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்,
கணேஷ் பீடியினுடைய அக்கிரமங்கள் எடுத்துச் சொன்னால் அதிக
மாக இருக்கும். தமிழ்நாட்டிலேயே எந்த ஒரு ஃபேக்டரியும்
இப்படிப்பட்ட சூழ்நிலையை ஏற்படுத்தியது இல்லை, கடந்த,
கவர்னர் ஆட்சி காலத்தில் கூட, அந்த கணேஷ் பீடி கம்பெனி
அரசாங்க ஜி.ஓ. வரவில்லை என்று குறைவாக கூலியைக் கொடுத்து
மற்ற கம்பெனிகள் அதிகமாகக் கூலி கொடுக்கின்ற நேரத்திலே
கூட, கணேஷ் பீடி கம்பெனி முதலாளி மட்டும் அப்படி கொடுக்க
வில்லை, ஆனால், அரசாங்க ஜி.ஓ. வந்த பிறகு, இந்த அரசு
ஆணை பிறப்பித்த பிறகுதான், சரியான முறையில் கொடுத்தார்
கள் என்று தெரிவித்து, கணேஷ் பீடி உரிமையாளர்கள் மீது
கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து, தற்போது கூலி உயர்வு வேண்டுமென்று பல சங்கங்
கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள், தமிழ்நாட்டில், ஒரே
ஒருவிதமான கூலிதான் ஏற்படுத்த வேண்டும், தற்போது அர
சாங்கம் ஒரு கூலியை நிர்ணயித்தாலும், மாவட்ட வாரியாக
தென்னாற்காடு மாவட்டம். வட ஆற்காடு மாவட்டத்திற்கு ஒரு

[திரு. பா. அப்துல்சமத்] [1990 ஏப்ரல் 12

கூலி, திருச்சி மாவட்டத்திற்கு ஒரு கூலி, தஞ்சை மாவட்டத்திற்கு
ஒரு கூலி, சேலம் மாவட்டத்திற்கு ஒரு கூலி என்று அரசு, அதிகாரி
களை வைத்துக் கொண்டு பல சங்கங்களோடு கூடிப்பேசி, அந்
தந்த மாவட்டத்திலுள்ள அசோசியேஷனை வைத்துக் கொண்டு
தனித்தனியாக ஒரு ஒப்பந்தம் போடுகிறார்கள். அப்படிப்பட்ட
ஒப்பந்தம் போடக்கூடாது, அரசாங்கம் என்ன சொல்கிறதோ,
அதைத்தான் தமிழ்நாடு பூராவும் அமல்படுத்த வேண்டுமென்று
ஆணை பிறப்பிக்க வேண்டும், மாவட்டத்திற்கு மாவட்டம் தனி
யாக இருக்கக் கூடாது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்

அடுத்தது, தமிழ்நாட்டில் கூலி அதிகமாக இருக்கின்ற காரணத்
தால், தமிழ்நாட்டிலே இருக்கின்ற தொழிற்சாலைகள் இன்றைக்கு
ஆந்திராவிற்கு சென்று கொண்டிருக்கின்றன, நான் இந்தத்
துறையின் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வேன். ஆந்தி
ராவில் தொழிலாளர் நலத் துறை அமைச்சரை அணுகி, அதே
போல் கர்நாடக மாநிலத்தில் தொழிலாளர் நல அமைச்சரை
அணுகி, அவர்களுடன் மத்திய அரசுக்கும் எடுத்துச் சொல்லி,
தென் மாநிலங்கள் அனைத்துக்கும் ஒரே ஒரு விதமான
கூலியை நிர்ணயிப்பதற்கு நீங்கள் பாடுபட வேண்டும். தற்போது
இருக்கிற மத்திய அரசை நீங்கள் கேட்டுக் கொண்டால், அவர்
கள் ஒரு ஜி.ஓ. வை போடுவார்கள் என்று நான் தெரிவித்துக்
கொள்கிறேன.

ஆந்திராவில் கூலி குறைவாக இருக்கின்ற காரணத்தால்
தமிழ்நாட்டில் இருக்கின்ற தொழிற்சாலைகள்-தொழில்களை எல்
லாம். ஆந்திராவிற்கு எடுத்துச் செல்கிறார்கள் என்று நான் சொன்
னேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு உறுப்பினர்
சொல்கிறார், தொழிலாளர்களுக்கு அதிகமாக கூலியைத் தரு
கிறோம் என்று, நாங்கள் தொழிலாளர்களுக்காக பாடுபடுகின்ற
துறை அவர்களுக்கு அதிகக்கூலியைத் தரவேண்டுமென்றுநாங்கள்
பாடுபடுகிறோம். நீங்கள் தொழிலாளர்களுக்கு இங்கே கூலி அதிக
மாக இருக்கிறது மத்திய அரசைக் கேட்டு, குறையுங்கள் என்
றால், .. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே, தீட்சிதர் என்ன
சொல்கிறார்? ஐயா, நீங்கள் சொல்லுங்கள் ஐயா.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பாய் என்ன
சொல்கிறார் என்றால், (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : " Boy " என்பது
எத்தனை வயதுக்குக் கீழே? (சிரிப்பு)



1990 ஏப்ரல் 12]

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : சமத் பாய், இங்கே
முதலாளிகளெல்லாம் கூலி குறைவாக இருக்கிறது என்கிற காரண
காரணத்தினால், அங்கே போகிறார்கள் என்கிறார்கள். இவர்
முதலாளிக்கு பேசுகிறாரா அல்லது தொழிலாளிக்கு பேசுகிறாரா
என்பது புரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாலை என்று சொன்
னாலே, அதற்கு மயக்கம் என்றும் ஒரு பொருள் உண்டு.
(சிரிப்பு).

திரு. பா. அப்துல்சமத் : தலைவர் அவர்களே, ஆந்திராவில்
கூலி குறைவாக இருக்கிற காரணத்தால், தமிழ்நாட்டில் இருக்கிற
முதலாளிகளெல்லாம், தங்களுடைய தொழிலை, ஆந்திராவிற்கு
கொண்டு செல்கிறார்கள். 'தமிழ்நாட்டில் இருக்கின்ற தொழி
லாளர்களுக்கு தொழில் கிடைப்பதில்லை. தொழில் இல்லாமல்
அவர்கள் அவதிப்படுகிறார்கள், ஆகவே, ஆந்திராவில் கூலி அதிக
மாகக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள், மத்திய அரசைக்
கேட்டு, ஆவன செய்ய வேண்டுமென்றுதான் நான் சொன்னேனே
தவிர, கூலியைக் குறையுங்கள் என்று சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதைத் தவிர, வேறு
மாநிலத்திற்கும் ஏதாவது கோரிக்கை இருக்கிறதா?

திரு. பா. அப்துல்சமத் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நான் சட்டமன்ற உறுப்பினராக வருவதற்கு முன்,
ஒரு பீடி முதலாளியிடம் மேனேஜராக இருந்தேன். ஏறத்தாழ
7,000 தொழிலாளர்களுக்கு நான் மேனேஜராக இருந்த காரணத்
தினால், அந்தத் தொழிலில் இருக்கின்ற அனைத்துக் குறைகளை
யும் அறிந்து, தற்போது தொழிலாளர்களுக்காக பேச வேண்டிய
காரணத்தால், நான் பேசுகிறேன். நானே தொழில் செய்து....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்பொழுது கூலியெல்
லாம் முழுமையாகக் கொடுத்தீர்களா ? (சிரிப்பு)

16-45 மணி

திரு. பா. அப்துல்சமத்: அடுத்து, பீடி தொழிலாளர்கள் அதிகமாக
பாதிக்கப்படுவது டி. பி. நோயினால்தான். ஆகவே, மாண்புமிகு
அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்வதெல்லாம், தயவு
செய்து தாலுக்காக்களில் இருக்கிற ஒவ்வொரு மருத்துவமனை
களிலும், குறிப்பாக பீடி தொழில் செய்கிற இடங்களில் இருக்
கிற மருத்துவமனைகளில் எல்லாம் ஒரு டி. பி. வார்ட் ஏற்
படுத்த வேண்டும்,

[திரு. பா. அப்துல்சமத்] [1990 ஏப்ரல் 12

அடுத்து, ஈ. எஸ். ஐ. மருத்துவமனைகள் எல்லாம் இன்
றைக்கு லீவு போட தொழிலாளர்களுக்கு
மட்டும்தான் இருப்பதாக சொல்கிறார்கள். உதவுவதற்காக
களை எல்லாம் தீர்க்கவேண்டும். அதிலுள்ள குறை

அடுத்து, ஐ,டி.ஐ. பயிற்சி துறையில் பணியாற்றும் அனை
வருக்கும் மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக ஊதியம்
வழங்க வேண்டும். அதுபோல் அங்கு வேலை செய்கிற அனை
வருக்கும் பணி மூப்பு அடிப்படையில் பதவி உயர்வு கொடுக்க
வேண்டும். பணிமனை உதவியாளர்களுக்கும், பண்டக உதவி
யாளர்களுக்கும் சமமான ஊதியம் வழங்க வேண்டும். பெரிய
ஐ.டி.ஐ. களில் பயிற்சி அலுவலர் நிலையில் உடற்பயிற்சி அலு
வலர்களை ஏற்படுத்த வேண்டும். பயிற்சி நிலைய இடங்களில்
அலுவலர் குடியிருப்பு கட்டித்தர வேண்டும். பயிற்சி நிலையங்
களில் பர்னிச்சர் வசதி, காற்றோட்ட வசதி, குடிநீர் வசதி செய்து
தரவேண்டும். பயிற்சியாளர்களுக்கு இலவச சீருடை, மற்றும்
1962ல் இருந்து உதவித் தொகையாக வழங்கப்பட்டு வரும்
ரூபாய் 25ஐ, 200 ரூபாயாக உயர்த்தி அளிக்க வேண்டும். பயிற்சித்
துறையில் தொழில் நுட்ப தகுதியுடைய இயக்குநரை நியமிக்க
வேண்டும். இப்பொது ஐ.ஏ. எஸ். அதிகாரிகளை நியமிக்கிறார்
கள். அந்தப் பயிற்சி பற்றி அவர்களுக்கு அதிகமாக தெரியாத
காரணத்தால் அப்பயிற்சி பெற்றவர்களையே நியமிக்கவேண்டும்.
தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களை துவக்க அனுமதிப்
பதை நிரந்தரமாக ரத்து செய்ய வேண்டும். தேசிய பயிற்சித்
திட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி அதன்படி கூடுதல்
ஊழியர்களை நியமிக்க வேண்டும். தேசிய பயிற்சித் திட்டத்
திற்காக மத்திய அரசு நாங்கள் செலவு செய்வதில் 50 சதவிகிதத்
தைக் கொடுக்கிறார்கள். நாங்கள் செய்வது 20 சதவிகிதம்.
அப்படி இருக்கும்போது மத்திய அரசு மூலம் கிடைக்கின்ற
தொகை எப்படி முழுமையாகக் கிடைக்கும். அப்படி வருகின்ற
உதவியை நாங்கள் பெறாமல் விட்டுவிடக் கூடாது என்று
கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, பால்...................
(மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; 'பால்' பற்றி அடுத்துப்
பார்த்துக்கொள்ளலாம்.

திரு. பா. அப்துல்சமத் ; மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, முடித்துவிடுகிறேன். ஏற்கெனவே, எதிர்க்கட்சி
உறுப்பினர்கள் சிலர், அரசு ஆளும்கட்சியைச் சார்ந்தவர்களை
இயக்குநர்களாக நியமித்து, பணிபுரியும் செயலாளர்களுக்கு,
தொல்லைக் கொடுப்பதாக சொல்லப்பட்டது. இது உண்மைக்கு
மாறானது. தனி அதிகாரிகளும், செயலாளர்களும் சேர்ந்து
கொண்டு, அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படும் வகையில்,
நடந்துகொள்கின்றார்கள். அதனால் அரசு இன்னும் மூன்று



1990 ஏப்ரல் 12] [திரு. பா. அப்துல் சமத்]

உறுப்பினர்-தலைவர்களை நியமித்து, நிர்வாகத்தைச் சீரமைக்க
வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, (மணியடிக்கப்பெற்றது)
இத்துடன் என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. எம். கே. கரீம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, தொழிலாளர் நல கோரிக்கை மீது சில கருத்துக்களைச்
சொல்ல விரும்புகிறேன். தொழிலாளர்கள், குறிப்பாக தேயிலை,
காப்பி, ரப்பர், ஏலம் போன்ற தோட்டங்களில் வேலை செய்வ
தோடு பஞ்சாலை, சிமெண்ட், சர்க்கரை மற்றும் கல் உடைக்கும்
தொழிலாளர்கள் தொழிற்சாலைகளில் வேலை செய்யும்தொழி
லாளர்கள் இப்படி பல்வேறு தொழிலாளர் பிரிவினர் இருக்கி
றார்கள். தேயிலை தொழிலைப் பொறுத்தவரையில் அந்நியச்
செலாவணியை அதிகமாக பெற்றுத் தரும் இந்தத் தொழிலில்
தொழிலாளர்களுக்கு இன்னும் மினிமம் வேஜஸ் அமல்படுத்தப்
படவில்லை. பலவகைகளில் முயன்றும் அது இன்னும் நடை
முறைக்கு வரவில்லை. அதேநேரத்தில் ஒரிசாவில் 'மினிமம்
வேஜஸ்' 25 ரூபாய் என்று கொடுக்கப்படுவதாக தெரிய
வருகிறது. அதுபோல இங்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கு
'மினிமம் வேஜஸ்' என்கிற அடிப்படையில் அக்ரிமெண்ட் ஒன்றை
கொண்டுவந்து நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து, நீலகிரியிலுள்ள தேயிலைத் தோட்டங்கள் துண்டா
டப்படுவதைத் தடுக்கும் முகத்தான், அதற்காக என்று தனியாக
சட்டம் கொண்டுவர வேண்டும். காரணம், அங்கு 500, 300,
200 ஏக்கர் என்று இருக்கக்கூடிய எஸ்டேட்டுகளை எல்லாம்
4, 5 பாகங்களாக துண்டாடி, அங்கே நிரந்தர தொழிலாளர்
களாக 500, 400, 300 என்கிற எண்ணிக்கையில் இருப்பவர்களை
எல்லாம் வெளியேற்றி விட்டு தோட்டத் தொழிலாளர்களுக்கு
கிடைக்கிற அனைத்து சலுகைகளும் இல்லாமல் செய்வதற்கான
முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

16-50 மணி

அரசுக்கு கிடைக்கக்கூடிய நிதியும்கூட குறைவதற்கு இத்தகைய
துண்டாடல்கள் நடத்தப்படுகின்றன. அதற்கு என்று ஒரு சட்டம்
கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்
போல தோட்டத்தொழிலாளர்களுக்கு தனியாக வீடுகள் இல்லை
இப்போது எஸ்டேட் வீடுகளில்தான் தங்கியிருக்கிறார்கள்.
அவர்கள் தங்குவதற்குக்கூட சொந்த வீடுகள் இல்லை. ஆகை
யால் அவர்களுடைய கிராஜுவட்டி, பிராவிடண்ட் பண்ட் போன்ற
வற்றை கணக்கில் எடுத்துக்கொண்டு, சம்பளத்திலிருந்து நீண்ட
நாள் பிடித்தம் செய்யக்கூடிய அளவிலே 30,000 ரூபாய் அளவுக்கு
வீடுகளைக் கட்டித் தரும் திட்டத்தைக் கொண்டுவர வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். கே. கரீம்] [1990 ஏப்ரல் 12

அடுத்து கிராஜுட்டி என்பது தற்போது இருக்கக்கூடியது
ஓராண்டு 15 நாட்களாகும். அதை மாற்றி, ஆண்டுக்கு 30
நாட்கள் என்று கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். அதைப்போல போனஸ் என்பது மினிமம் போனஸ்
என்ற அளவில் 8.33 சதவிகிதம்தான் இருக்கிறது. இது உயர்த்தப்
பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நீலகிரி மாவட்டத்தில் சிலோன் ரீபேட்ரியாட்சுக்
காக துவங்கியிருக்கும் தமிழ்நாடு தேயிலைத் தோட்ட வாரியத்
தில் பணி புரிபவர்களுக்கு தனியார் தோட்டத்தில் கொடுக்கும்
சம்பளம் கொடுப்பதில்லை. தனியார் தோட்டத்தைவிட அதிகச்
சம்பளம் அவர்கள் பெறுவதற்கு வழிவகை செய்ய வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே போனஸ்கூட மினிமம்
போனஸ் 8.33 சதவிகிதம் என்ற அளவுக்கு மட்டும்தான் கொடுக்
கிறார்கள். அதே நேரத்தில் ஒரு ஏக்கருக்கு 2,000 ரூபாய் லீஸ்
என்ற அடிப்படையில் அவர்கள் ஆண்டுதோறும் கட்டிக்
கொண்டு வருகிறார்கள். ஆகையால் அந்தத் தொழிலாளர்கள்
பெறக்கூடிய அத்தனை சலுகைகளும் இவர்களுக்கு இல்லாமல்
போகிறது. அதைப்போல சின்கோனா என்று சொல்லக்கூடிய
நிறுவனம் மிகவும் நஷ்டமான நிலையில் ஓடிக்கொண்டிருப்ப
தாகச் சொல்லுகிறார்கள். அங்கே தொழிலாளர்கள் மிகவும்
குறைந்த சம்பளம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதைத்
தமிழ்நாடு தேயிலைத் தோட்ட வாரியத்தோடு இணைத்தால்
மிகவும் நன்றாக இருக்குமென்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து இன்றைக்கு லேபர் கோர்ட்டுகளில் தொழிலாளர்
களுடைய கேஸ்கள் அதிகமாகத் தேங்கிக் கிடக்கின்றன. அதை
மாற்றுவதற்கு, ஒரு ஜில்லாவுக்கு ஒரு லேபர் கோர்ட் என்ற
கணக்கில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
அதைப்போல பிளான்டேஷன்ஹில்களில் டாக்டர்கள் இருக்கிறார்
கள். அவர்கள் அனைத்துத் தொழிலாளர்களின் குறைகளையும்
பார்க்கக்கூடியவர்கள். நீலகிரி, வால்பாறை, ஹைவேஸ் என்ற
3 இடங்களுக்கு ஒரே ஒரு டாக்டர் தான் இருக்கிறார். அதை
மாற்றி ஒவ்வொரு இடத்திற்கும் ஒரு அரசு டாக்டரை நியமிக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தேர்தல் நாளில் தோட்டத் தொழிலாளர்களுக்கு
மட்டும் சம்பளம் இல்லை என்று சொல்லுகிறார்கள். தனியார்
தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு தேர்தல்
நாளில் சம்பளத்தோடு விடுமுறை கொடுக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல லேபர் ஆபீசர்கள் இருக்
கிறார்கள். அவர்களுக்கு போக்குவரத்து வசதி இல்லை, தொலை
பேசி வசதியில்லை. சென்னையில் அனைத்து தொழிலாளர்
நலத்திற்கான அலுவலகங்களும் ஒரே இடத்தில் இருக்கிற
மாதிரி, ஜில்லாக்களிலும் அனைத்து அலுவலகங்களையும் ஒரே



1990 ஏப்ரல் 12] [திரு. எம். கே. கரீம்]

இடத்தில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
மேலும் தொழிலாளர்கள் டெம்பரரியாக 2 அல்லது 3 ஆண்டுகள்
வேலை செய்தால், அவர்களை நிரந்தரமாக்குவது என்ற
கட்டாயம் இருக்க வேண்டும்.

16–55 மணி

ஏனென்றால் பல தொழிலாளர்கள் 12 அல்லது 13 ஆண்டுக்
காலமாக டெம்பரரியாக வேலை செய்து 40 வயதுக்கு மேல்
அவர்கள் நிரந்தரமாக்கப்படுமேயானாலும் அவர்களுக்கு
கிராஜுவிட்டி என்பது மிகக் குறைவாகத்தான் கிடைக்கும்.
ஆகையினால் அவர்களை உடனடியாக நிரந்தரமாக்கவேண்டும்
என்று கேட்டுக்கோள்கிறேன்.

அடுத்து லேபர் வெல்ஃபேர் பண்டு இருக்கின்றது. அது
தொழிலாளர்களுக்குப் பயன்படும் வகையில் அதாவது பாலிடெக்
னிக் அல்லது கல்லூரி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

பால் வழங்கும் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். பால்
அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் அனைத்து பஸ் ஸ்டாண்
டுகளிலும், மற்ற பொது இடங்களிலும், சத்துணவுக் கூடங்
களிலும் பால் அதிகமாகக் கொடுக்க வேண்டும். பஸ் ஸ்டாண்டு
களில் குளிர்ந்த பாலும், சூடான பாலும் விற்கப்படுமேயானால்
தேங்கிக் கிடக்கும் பால் விற்கப்படுவதற்கு ஏதுவாக இருக்கும்
என்று சொல்ல விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் சொன்னார்கள்.
ஒசூரில் டி.வி.எஸ். நிறுவனத்தில் லாக்-அவுட் இன்று நடந்து
கொண்டிருக்கிறது. அதை உடனடியாக நிறுத்தி அந்தத் தொழி
லாளர்களுக்கு வேலை கிடைக்கும்படிச் செய்ய வேண்டும் என்று
சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்கின்றேன்.
நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. சி. கோவிந்
தசாமி. சரியாகப் பத்துமணித்துளிகள்.

*திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே,
தொழிலாளர் நலத் துறை மானியக் கோரிக்கையின் மீது காலை
யில் எங்கள் கட்சியின் சார்பாக உறுப்பினர் கோவிந்தராஜன்
அவர்கள் பலமுக்கியமான விவரங்களை இங்கே குறிப்பிட்டிருக்
கிறார்கள். அதையொட்டி ஒருசில விவரங்களை நானும்
அமைச்சர் அவர்களின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்பு
கின்றேன்.

[திரு. சி. கோவிந்தசாமி] [1990 ஏப்ரல் 12

குறிப்பாக இன்றைக்கு உழைக்கும் பெண்களைப் பொறுத்த
வரையில் ஒரு பாதுகாப்பற்ற நிலை பொதுவாக தனியார்
துறையிலும்சரி, அல்லது பொதுத் துறையிலும்சரி பெண்களுக்கு
என்று இருக்கிற சில பிரத்தியேகமான உரிமைகள் அமலாக்கப்
படாமல் தொடர்ந்து பலகீனமான நிலையில் இருந்துகொண்டு
இருக்கின்றது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன். குறிப்பாக இன்றைக்கு பிரசவ கால விடுமுறை வழங்
கப்பட வேண்டும் என்பதற்காசவே பாரம்பரியமாக இருக்கிற
தொழில்களில் கூட பெண்களைக் கொஞ்சம் கொஞ்சமாக வேலை
யிலிருந்து வெளியேற்றுகிற நிலை இருக்கிறது. இன்றைக்குக்
நம்முடைய அரசு வேலை வாய்ப்பிலே பெண்களுக்கு 30 சதவீத
இட ஒதுக்கீடு உண்டு என்று சொல்கிற இந்தக் காலக்கட்டத்திலே
கூட தனியார் தொழிற்சாலைகளில் பெண்களை வீட்டுக்கு
அனுப்புகிற நிலை இன்றைக்குத் தொடர்ந்து இருந்துகொண்
டிருக்கிறது. குறிப்பாக பஞ்சாலைகளில் ரீலிங் டிபார்ட்மென்ட்
டில் தொடர்ந்து அந்த டிபார்ட்மென்ட் முழுவதும் பெண்
களுக்கு என்று இருந்த நிலை இன்றைக்கு மாற்றப்பட்டு—
அவர்களை வெளியே அனுப்பும் நிலை இருப்பதை நாம் பார்க்
கின்றோம்.

மதுரா கோட்ஸ் மில்லில் தேசம் விடுதலை அடைந்த போது
4 ஆயிரம் பெண்கள் வேலை செய்ததாகக் குறிப்பிடுகின்றார்கள்.
ஆனால் இன்றுள்ள நிலை அங்கே வெறும் 3 பெண்களே பணி
யாற்றுவதாகச் சொல்கின்ற நிலை ஏற்பட்டு இருக்கிறது என்
பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இப்படி வேலை
யில் இருக்கக்கூடிய பெண்களுக்கு கூட இன்றைக்குப் போதுமான
வசதிகள் இல்லாதநிலை இருக்கிறது. இன்றைக்குப் பல இயக்கங்
கள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன.

பொதுத் துறையிலே வேலை செய்யக்கூடிய பெண்களுக்கு
ஓய்வு அறைகள் தனியாகக் கிடையாது. பல தனியார் தொழிற்
சாலைகளிலே பெண்களுக்கு என்று தனியாக கழிப்பிட வசதிகள்
கூட இல்லாத நிலை இருக்கின்றது. 30 பெண்கள் வேலை
செய்தால் குழந்தைகள் காப்பகம் வைக்க வேண்டும் என்ற
நிலை இருக்கிறது. ஆனால் அதை அமுலாக்குவதில்லை.
ஒன்றிரண்டு இடங்களிலே இருப்பது கூட போதுமான பாது
காப்போடு, சுகாதார வசதிகளோடு இல்லை என்பதை நாம்
பார்க்க முடியும். அதுமட்டுமல்லாமல் 30 பெண்கள் இருந்தால்
அதை வைக்க வேண்டும் என்று சொல்கிற இடத்திலே கூட
அந்தப் பெண்களை ஆய்வு செய்கிறார்கள். திருமணமானவர்கள்
எத்தனை பேர்; குழந்தைகள் உள்ளவர்கள் எத்தனை பேர்
என்பதை எல்லாம் பரிசீலித்துத்தான் இன்றைக்கு குழந்தைகள்
காப்பகம் அமைக்கின்ற நிலை இருக்கிறது. 30 பெண்கள்
இருந்தால் ஒரு காப்பகம் அமைக்க வேண்டும் என்ற நிலை
அமுலாக்கப்படுவதில்லை என்பதை நான் அமைச்சர் அவர்கள்
கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.



1990 ஏப்ரல் 12] [திரு. சி. கோவிந்தசாமி]

அதுபோல பெண்கள் அதிகமாக வேலை செய்யக்கூடிய முக்கிய
மான தொழில் கேந்திரங்களில், நகரங்களில் பெண்கள் தங்கு
வதற்கான தங்கும் விடுதிகளை அரசு பொறுப்பிலே கட்டித்தர
வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்பு
கிறேன்.

அதுபோல இரவு நேரங்களிலே பெண்களை வேலைக்கு
வைக்கக்கூடாது என்ற பொதுவான நிலை இருந்தாலும் கூட
இன்றைக்கு தவிர்க்க முடியாமல் பெண்களை இரவு நேரங்களில்
வேலை வாங்குகிற ஒரு நிலைமை தொடர்கிறது. அப்படிப்
பட்ட நிலை ஏற்படுகிற போது வறுமையின் காரணமாக அந்தப்
பெண்களும் வேலை செய்ய வேண்டிய ஒரு நிர்ப்பந்தமான
நிலைமை இருக்கின்ற காரணத்தால் வேலை முடிந்து அவர்கள்
இரவு நேரங்களிலே வீடு திரும்புவதற்குக் கூட எந்த வாகன
வசதியும் இல்லாத நிலையில் இன்றைக்கு பல்வேறு சமூக
விரோதிகளினுடைய தாக்குதலுக்கு அவர்கள் ஆளாகக் கூடிய
ஒரு அவல நிலை இருக்கிறது.

17-00 மணி

குறிப்பாக திருப்பூரிலே இருக்கின்ற பனியன் தொழில்,
ஜின்னிங் பேக்டரி போன்ற தொழில்களிலே பெண்கள் இரவு
பகலாக வேலை செய்யும் நிலை இருக்கிறது. அவர்களெல்
லாம் வீடுகளுக்குத் திரும்பிச் செல்வதற்கு எந்த வாய்ப்பும்
இல்லாத காரணத்தால் பல சமூக விரோதிகளின் தொல்லை
களுக்கு ஆளாகின்ற நிலை இருக்கிறது. ஆகவே, அப்படி
இரவு நேரங்களிலே வேலை செய்கிற காலங்களில் அந்தப்
பெண்கள் வீட்டிற்குச் செல்வதற்குரிய பாதுகாப்புக்கு ஏற்பாடு
கள் செய்ய வேண்டுமென்று சம்பந்தப்பட்ட தனியார்
நிர்வாகமாக இருந்தாலும், எந்தத் துறையாக இருந்தாலும்
அவர்களை வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சம வேலைக்கு சம ஊதியம் என்பது தொடர்பான
ஒரு ஆலோசனைக் குழு 1980-லே அமைக்கப்பட்டது. டத்து
வருஷங்களான பிறகும் அந்தக் குழு என்ன செய்து கொண்
டிருக்கிறது. அரசுக்கு அது என்ன தெரிவித்திருக்கிறது.
என்பதையும் அமைச்சரவர்கள் பதிலுரையிலே தெரிவிக்க
வேண்டுமென்டு நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள
விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, குழந்தைத் தொழிலாளர்கள். இந்த
வருஷம் பெண் குழந்தைகளினுடைய ஆண்டு என்றும், எழுத்
தறிவு இயக்க ஆண்டு என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.
ஆனால், இப்படிப்பட்ட நிலையிலேதான் இன்றைக்குத் தமிழ்
நாட்டிலே பல்வேறு தொழில்களிலே, குறிப்பாக சிவகாசி
பட்டாசுத் தொழில், தீப்பெட்டித் தொழிற்சாலை, திருப்பூரிலே

[திரு. சி. கோவிந்தசாமி] [1990 ஏப்ரல் 12

ஷணுயன் தொழில் போன்ற தொழில்களில் பல ஆயிரக் கணக்கான இளம் குழந்தைகள், ஆண் பெண் குழந்தைகள் இன்றைக்கு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவொரு பாதுகாப்பும் அற்ற நிலைமை இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, வறுமையின் கொடுமை யால் வேலைக்கு வரக்கூடிய அந்தப் பிஞ்சுக் குழந்தைகளுக்கு, அவர்களுடைய எதிர்காலத்திற்குத் தேவையான சில வழி களைச் செய்வதற்கு இந்த அரசு முன் வர வேண்டும்.

குறிப்பாக, அவர்களுக்குக் கட்டாயக் கல்வி என்ற நிலையை உருவாக்கி, அந்த வேலை நேரத்திலேயே ஒரு குறிப்பிட்ட நேரத்தைக் கல்விக்காக ஒதுக்கீடு செய்து, அந்தக் குழந்தைத் தொழிலாளர்களுக்குக் கல்வியைக் கற்றுத் தருவதற்ககுரிய ஒரு ஏற்பாட்டை அரசு உத்தரவாதப் படுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள் கிறேன்.

பல்வேறு குழந்தைகளுக்குச் சத்துணவு—முட்டையோடு வழங்குகின்ற இந்த அரசு இன்றைக்கு ஆலைகளில் வேலை செய்கின்ற அந்த இளம் பிஞ்சுக் குழந்தைத் தொழிலாளர் களுக்கு, அரசு வழங்கவில்லை என்றாலும், அந்த நிர்வாக மானது மதிய உணவு வழங்குவதற்கு அரசு ஒரு உறுதியான ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

உழைக்கும் பத்திரிகையாளர்கள் மற்றும் செய்தித் தாள்களிலே பணி புரியக்கூடிய ஊழியர்களுக்கு ஊதிய போர்டு தீர்ப்புப்படி இன்றைக்கு ஊதியம் வழங்கப்படவில்லை. ஜனவரி மாதம் 1988-லேயே வழங்கப்பட்ட அது இதுவரை யில் அமலாக்கப்படவில்லை. ஆகவே, இது தொடர்பாக ஒரு முத்தரப்பு கண்காணிப்புக் குழு ஒன்றை மாநில அரசு அமைக்க வேண்டும் என்று மைய அரசு ஏற்கனவே பரிந்துரை செய்தது. ஆனால் இத்தகைய குழு இதுவரையில் நியமிக்கப் படவில்லை. ஏன் இக்குழு நியமிக்கப்படவில்லை என்பதோடு, இந்தக் குழுவை நியமித்து உரிய கண்காணிப்போடு அந்த ஊதியக் குழுவினுடைய பரிந்துரையின்படி அந்த ஊதிய உயர்வை அமல் ஆக்குவதற்கு உத்தரவாதம் ஏற்படுத்த வேண்டு மென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குப் பெரும்பாலான பத்திரிகைகள் இதை அமலாக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, அரசு என்ன வழிகளை, என்ன நிர்ப்பந்தங்களை ஏற்படுத்த முடியுமோ அவைகளை ஏற்படுத்தி அந்தப் பத்திரிகையாளர்களுக்கு அந்த ஊதியக் குழுவின் பரிந்துரையை அமலாக்குவதற்கான உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத் திலே கேட்டுக்கொள்கிறேன்.



1990 ஏப்ரல் 12] [திரு. சி. கோவிந்தசாமி]

பத்திரிகையாளர்களுக்கு வீடு கட்டுவதற்காக ஐந்தரை ஏக்கர் நிலம் இருப்பதாகவும், அந்த நிலம் இன்றைக்கு அவர்களுக்கு இன்னும் வழங்கப்படாமல் இருக்கின்ற காரணத்தினால் அந்தப் பத்திரிகையாளர்கள் வாங்குகின்ற சம்பள அடிப்படையிலே அவர்களுக்கு ஸ்லாப் முறையிலே அந்த வீட்டு மனைகளைக் கொடுப்பதற்கு அரசு முன் வரவேண்டுமென்று இந்த நேரத் திலே கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற்சங்க அங்கீகாரம் குறித்து இன்றைக்கு மத்தியிலே வந்திருக்கின்ற தேசிய முன்னணி அரசாங்கம் இரகசிய வாக் கெடுப்பின் மூலமாக தொழிற்சங்கங்களை அங்கீகரிப்பதற்கான கொள்கையை முன் வைத்திருக்கின்ற இந்த நல்ல நேரத்தில் ஏற்கனவே மேற்கு வங்க அரசும், ஆந்திர அரசும் இதைச் சட்டமாக அறிவித்திருக்கின்ற நிலையில், நம்முடைய மாநில அரசாங்கமும் அந்தத் தொழிற்சங்க அங்கீகாரத்திற்கான இரகசிய வாக்கெடுப்பு முறையைக் கொண்டு வருவதற்கான ஒரு நல்ல முடிவை, நம்முடைய தொழிலாளர் நல அமைச்ச ரவர்கள் தன்னுடைய பதிலுரையில் தெரிவிப்பார்கள் என்று நான் நம்புகிறேன். அப்படிப்பட்ட ஒரு நிலைமை வருமானால் டி.வி.எஸ். சுஸ்கி மட்டுமல்ல, தமிழகத்திலே இருக்கக்கூடிய இன்னும் பெரும்பான்மையான ஆலைகளில் இன்றைக்கு மைனா ரிட்டி ஆட்களை வைத்துக் கொண்டு, நிர்வாகம் தனக்குத் தக்க முறையிலே காரியங்களைச் செய்யாமல் தடுப்பதற்காக ஒரு வாய்ப்பு இருக்கிறது. அந்த முறையிலே அதை நீங்கள் அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல, ஹோட்டல் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம் 1983-லே அமைக்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு வரையில் அது திருத்தியமைக்கப்படவில்லை. ஆகவே, இன்றைக்கிருக்கின்ற விலைவாசி உயர்வையெல்லாம் கவனத்திற்கொண்டு, அது திருத்தியமைக்கப்படுவதற்குரிய நட வடிக்கைகளை அரசு செய்ய முன் வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாதவரம் கோரமண்டல் ஃப்ளோரைட் நிறுவனத்தில் 31—1—1990-லேயிருந்து வேலை நிறுத்தம் நடைபெற்று வருவதாகவும், அங்கே வேலை நிறுத்தம் நடந்து கொண் டிருக்கின்ற இந்த நேரத்திலேயும் கூட, நடைபெறுகின்ற பேச்சு வார்த்தைக்கு அந்த நிர்வாகம் கலந்து கொள்ள மறுக்கிறது; பிடிவாத குணத்தோடு இருக்கிறது. ஆகவே, அந்தப் பேச்சு வார்த்தை நடத்தக்கூடிய அந்தத் தொழிலாளர் நல அதிகாரி, ஏ.சி. (எல்.) அவர்கள் அது குறித்து என்ன நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்? இப்படிப் பிடிவாத குணத்தோடு, இருக்கின்ற நிர்வாகத்தின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

[திரு. சி. கோவிந்தசாமி] [1990 ஏப்ரல் 12

17.05 மணி

அதேபோல டான்சி நிறுவனத்தில் வேலை செய்யகூடிய
தொழிலாளர்கள் நீண்டகாலமாக கோரிக்கை முன்வைத்தும்
கவனிக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே, அரசு உரிய முறையில்
தலையிட்டு, டான்சி நிறுவனத்தில் பணியாற்றக் கூடிய
தொழிலாளர்களின் கோரிக்கைக்கு தீர்வு காண நடவடிக்கை
எடுக்கவேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன்.

கட்டடத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம்
சட்டம் இன்றைக்கு பல இடங்களில் அமல்படுத்தப்படாமல்
இருக்கிறது. அதை அமலாக்குவதற்கு உரிய நடவடிக்கை
களை சம்பந்தப்பட்ட துறையின் மூலமாக மாநில அரசு
எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஐ.டி.ஐ.யில் பணிபுரியக் கூடிய தொழிலாளர்கள்,
தொழிற் பயிற்சி நிலையங்களில் பணியாற்றக்கூடிய பணியாளர்
கள் பிரச்சினை. 44 பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன
(ஐ.டி.ஐ.). 16,000-க்கு மேற்பட்ட ஊழியர்கள் இருக்கிறார்
கள். அவர்களுடைய பிரச்சினைகளுக்காக பல இயக்கங்
கள் உண்ணாவிரதம், தர்ணா, ஆர்ப்பாட்டம் எல்லாம்
நடத்திக்கொண்டிருக்கிறார்கள். நான் கூட அமைச்சர் அவர்
களிடத்தில் நேரிடையாக அழைத்துப் பேசுங்கள் என்று
சொல்லி இருக்கிறேன். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பேசட்டும்
என்று சொன்னார்கள். அதிகாரிகள் காலம் கடத்துகிற
நிலைமை ஏற்படுமானால் அமைச்சர் அவர்களே நேரிடையாக
தலையிட்டு அந்த ஐ.டி.ஐ. தொழிலாளர்களுடைய பிரச்சி
னைக்கு தீர்வு காண முன்வரவேண்டும்.

மூடப்பட்ட மில்கள் சம்பந்தமாக, அவைகள் திறம்பட
நடத்த தொழிலாளர்களின் தியாகம் மட்டும் தான் பெறப்
படுகிறது. ஊதியத்தை குறைத்துக் கொள்ள வேண்டும், ஆட்
களை குறைத்துக் கொள்ளவேண்டும். நிர்வாகம் எந்த
தியாகமும் செய்யத் தயாராக இல்லாத நிலை இருக்கிறது.
ஆகவே, இதை பரிசீலித்து அதற்கு நடவடிக்கை எடுக்க
வேண்டும். கோவை மாவட்டத்தில் பல்வேறு மில்கள்,
திருப்பூர் காட்டன் மில், புதுக்கோட்டையில் காவேரி மில்,
நமனசமுத்திரம் மில் போன்ற மில்கள், மேட்டூர் உள்பட
திறக்கப்படாத நிலை இருக்கிறது. அவைகளை திறக்க அரசு
உரிய நடவடிக்கையெடுக்க வேண்டும்.

அதைப் போல தொழிலாளர்களுக்கு ஈ.எஸ்.ஐ. மருத்துவ
மனைகள் இருப்பது போதுமான அளவிற்கு இல்லை. அதற்குரிய
வசதிகள் குறைவாக இருக்கிறது. அதற்குரிய நடவடிக்கை
களை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1990 ஏப்ரல் 12] [திரு. சி. கோவிந்தசாமி]

1988-ஆம் ஆண்டு நாம் அனைவருமாகச் சேர்ந்து நாடு
தழுவிய முறையில் நடத்திய பாரத் பந்திலே கலந்துகொண்டதற்
காக பல்வேறு துறைகளில் தனியார் துறை, பொதுத் துறை
அவர்கள் பழிவாங்கப்பட்டு, வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்
கிறார்கள். அவைகளை இந்த அரசு பரிசீலித்து அப்படி
எந்தெந்த இடங்களில் நீக்கப்பட்டு இருக்கிறார்களோ அவர்
களுக்கு வேலை கொடுக்க உத்தரவாதத்தை இந்த அரசு
ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றை கூறி முடித்துக் கொள்கிறேன். 1980-
ஆம் ஆண்டு மாதவரம் பால் பண்ணையில் ஒருநாள் அடையாள
வேலை நிறுத்தம் செய்ததற்கு 1,112 பேர் வேலை நீக்கம்
செய்யப்பட்டு, 10 ஆண்டுகளாக அது தீர்க்கப்படாமல்
தொடர்ந்து இருக்கிறது. சமீபத்தில் சென்ற ஆண்டு நம்
முடைய முதலமைச்சர் அவர்கள் 489 தொழிலாளர்கள்
வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என்று சட்ட
சபையில் அறிவித்தார்கள். ஆனால், நிர்வாகம் அந்த
அறிவிப்புக்கு மாறாக, புதியதாக வேலைக்கு சேர்க்கிறேன்,
வழக்குகளிலிருந்து வாபஸ் பெறுகிறேன் என்று எழுதி
கொடுப்பவர்களை மட்டும் வேலைக்கு எடுப்பேன் என்று
சொல்லி, இன்றைக்கு அப்படிப்பட்ட காரியங்களில் அரசி
னுடைய அறிவிப்பிற்கு புறம்பாக ஈடுபட்டிருக்கிறது. நான்
கேட்டுக்கொள்ள விரும்புவது, இப்படி பல இருக்கின்றன.
பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தில் பணிபுரியக்
கூடிய ஊழியர்களுக்கு ஊதியம் அமலாக்கப்படுவதில் பல்வேறு
குறைபாடுகள் இருக்கின்றன. ஆகவே. அரசு அறிவிக்கக்கூடிய
அந்த முடிவுகளை சம்பந்தப்பட்ட துறை நடைமுறையில்
அமல் நடத்துவதற்கு மாறாக-பல்வேறு நிர்வாகங்களின்
இயக்குநர்கள்—கைத்தறித் துறை, பால்வளத் துறை, போன்ற
துறைகளில் மறுப்பு தெரிவிக்கிறபோது, இதில் அரசின் முடி
வெடுப்பது அரசாங்கமா, அல்லது, அதிகாரிகளா என்ற ஐயப்பாடு
எழுந்திருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்களும், அரசாங்
கமும் இதிலே உரிய முறையில் தலையிட்டு, நீங்கள் எடுக்கிற
முடிவை கடைசியாக நடைமுறைப்படுத்தி, அதனால் ஏழை
எளிய, பாட்டாளி மக்கள் பயனடைகிற வகையில் அதை
கறாராக கண்காணித்து அமலாக்க வேண்டுமென்று இந்த
சந்தர்ப்பத்தில் கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி முடித்துக்
கொள்கிறேன்.

* திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே,
ஜனநாயகத்தின் முக்கியமான அங்கங்களாக கருதப்
படுவது Executive, Legislature, Judiciary என்று சொல்
வார்கள். அரசு, சட்டமன்றம், நீதித் துறை, அதைப்
போல ஜனநாயகத்தின் நான்காவது அங்கமாக கருதப்படுவது
பத்திரிகைகள்—'பிரஸ்'. பிரெஞ்சு புரட்சியைப் பற்றிச்

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்] [1990 ஏப்ரல் 12

சொல்லும்போது கூட—There has probably bee no era in the
history of the world when literary men have exercised such an
influence upon the minds of and actions of men.
என்று சொல்வார்கள். பிரெஞ்சு புரட்சியைப் பொறுத்தவரை
யில் அது மலர காரணமாக இருந்து, அதை வழி நடத்திச்
சென்று, வெற்றி பெறச் செய்தவர்கள் எழுத்தாளர்கள்.
எனவே, நம்முடைய நாட்டில் கூட இன்றைய தினம் இந்த
சுதந்திர உரிமைகள் காப்பாற்றப்பட வேண்டுமென்றால்
Eternal vigilance is the price of freedom என்று
சொல்வார்கள். ஜனநாயக உரிமைகளையும், சுதந்திரத்தை
யும் காப்பாற்ற மக்கள் விழிப்புணர்ச்சி அவசியம். சமுதா
யத்தின் கண்களாக, காதுகளாக விளங்கி அந்த உரிமைகளை
காப்பதில், மக்களை வழி நடத்திச் செல்வதில் இன்று முக்கிய
பங்கு வகிப்பது பத்திரிகைகள். இந்த உழைக்கும் பத்திரிகை
யாளர்களுக்கு—எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் அவர்கள்
கூட சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு ஊதியம் நிர்ணயம்
செய்ய வேண்டுமென்று 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை குழு
அமைக்கப்படுகிறது.

17.10 மணி

அப்பொழுது இந்த பச்சாவத் குழு அமைக்கப்பட்டது. பச்சாவத்
குழுவினுடைய தீர்ப்பு வந்து ஓர் ஆண்டுக்கு மேலே ஓடிவிட்டது.
1988 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் தேதியிலிருந்து அந்தக்
குழுவினுடைய பரிந்துரைகளை, ஊதிய நிர்ணயம் செய்யப்
பட்டபடி தரவேண்டும் என்று அவர்கள் நிர்ணயித்து இருக்கிறார்
கள். ஆனால் நம்முடைய மாநிலத்தில், தமிழ்நாட்டில், எத்தனை
பத்திரிகைகள் பச்சாவத் குழுவினுடைய தீர்ப்பை அமல் செய்
திருக்கிறார்கள். நான் அறிந்தவரையில் ஹிந்து பத்திரிகை அமுல்
செய்திருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்தியன் எக்ஸ்பிரஸ்
பத்திரிகையும், தினமணி பத்திரிகையும் அமுல்படுத்தியிருப்பதாக
சொல்லப்படுகிறது. அதேபோல் தினத்தந்தி பத்திரிகை செய்
திருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். பெரும்பாலான பத்திரி
கைகள் இன்னும் பச்சாவத் குழுவினுடைய தீர்ப்பை அமுல்
படுத்தவில்லை. உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கு நியாயமாக
கிடைக்க வேண்டிய ஊதியம் இன்று வரையில் கிடைக்காமல்
இருக்கின்றது. பெரும்பாலான பத்திரிகைகள் பச்சாவத் தீர்ப்பை
அமுல் செய்யவில்லை. இந்தக் குழுவை மத்திய அரசு அமைத்
தாலும், பச்சாவத் குழுவினுடைய தீர்ப்பை அமுல்படுத்தும்
பொறுப்பு மாநில அரசையே சாரும். 'மானிடரிங் அத்தாரிட்டி'
நம்முடைய மாநில அரசாங்கம்தான். சில பத்திரிகைகள் உழைக்
கும் பத்திரிகையாளர்களுக்கு அப்பாயின்ட்மென்ட் ஆர்டர் கூட
தருவதில்லை என்று பத்திரிகையாளர்கள் சொல்கிறார்கள். அதே
போல் சில பத்திரிகைகள் கன்பர்மேசன் ஆர்டர் தருவதில்லை.
இ.எஸ்.ஐ.-க்கு பணியாளர்களிடமிருந்து பணம் பிடித்தம் செய்
யப்படுகிறது. ஆனால் அந்தப் பணம் தொழிலாளர் நல இன்



143806

1990 ஏப்ரல் 12] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்]

ஸுரன்சுக்குச் செலுத்தப்படுகிறதா என்று கேட்டால் செலுத்தப்
படுவதில்லை. இரண்டு பத்திரிகைகள் நிறுத்தப்பட்டு, 6 ஆண்டு
களுக்கு மேலாக நடந்த பத்திரிகைகள் இரண்டு, தமிழ்நாட்டிலே
அண்மையிலே நிறுத்தப்பட்டு இருக்கிறது. அவர்களுக்குக் கிடைக்
கக்கூடிய, அந்த உழைக்கும் பத்திரிகையாளர்களுக்குக் கிடைக்க
வேண்டிய நியாயமான நஷ்டஈடு கிடைத்திருக்கிறதா என்றால்
கிடைக்கவில்லை. பத்திரிகை நடத்தப்பட்ட நேரத்திலே அவர்
களுக்கு எந்தவிதமான ஊதிய உயர்வும் தரப்படவில்லை.
போனஸ் தரப்படவில்லை. அவர்களுக்கு எல்லாம் நியாயமான
நஷ்டஈடு கிடைக்க வழி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

பச்சாவத் தீர்ப்பை அமுல்படுத்த மத்திய தொழிலாளர்
நல அமைச்சர் அவர்கள் முத்தரப்புக் குழு, டிரைபார்ட்டைட்
கமிட்டி அமைக்கும்படி மாநில அரசுக்கு ஏற்கனவே சொல்லி
யிருக்கிறார்கள். ட்ரைபார்ட்டைட் கமிட்டியிலே தமிழக அரசு,
நம்முடைய மாநில அரசு இடம் பெறும். (மணியடிக்கப்பட்டது.)
தமிழக அரசு இடம் பெறும். அதேபோல் பத்திரிகை உரிமை
யாளர்கள் இடம் பெறுவார்கள். சென்னை பத்திரிகையாளர்
சங்கமும் அந்த மானிடரிங் கமிட்டியிலே இடம் பெறும். உடனடி
யாக முத்தரப்புக் கண்காணிப்புக் குழு அமைக்க வேண்டும்.
ஏற்கனவே உத்தரப் பிரதேச அரசு இதை அமுல் செய்திருக்கிறது.
தமிழ்நாட்டில் உடனடியாக பச்சாவத் தீர்ப்பை அமுல் செய்ய
நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
எந்தப் பத்திரிகைகள் எல்லாம் பச்சாவத் தீர்ப்பை அமுல் செய்ய
வில்லையோ அவர்களுக்கு அரசு தரும் விளம்பரத்தை உடனடி
யாக நிறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எந்
தெந்தப் பத்திரிகைகள் பச்சாவத் தீர்ப்பை அமுல் செய்திருக்
கிறார்கள் என்பதையும் அமைச்சர் அவர்கள் தெளிவாக்க வேண்
டும். பச்சாவத் தீர்ப்பை அமுல் செய்யாத பத்திரிகைகளுக்கு
நிச்சயமாக விளம்பரங்கள் நிறுத்தப்பட வேண்டும் என்று கேட்டு
அமைகிறேன், வணக்கம்.

*திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பால் வழங்குத் திட்டங்கள், தொழிலாளர் நலனும்,
தொழிற்சாலைகளும், மற்றும் எழுது பொருள் அச்சுத்துறை
போன்ற இந்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்ப
ளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

இன்றைக்குக் கிராமங்களைப் பொறுத்தவரையில் பால்
உற்பத்தியானது மிக முக்கிய இடத்தை வகித்துக் கொண்டு
வருகிறது. விவசாயம், நெசவுத் தொழில், அதற்கு அடுத்த
படியாக பால் உற்பத்தியானது அந்த மக்களுடைய பொருளாதார
வளத்தை மேம்படுத்தக்கூடிய அளவிலே இன்றைக்கு பங்கை
வகித்துக் கொண்டு வருகிற இந்த சூழ்நிலையில், இந்தத் துறை

D



V211,31 N90
N91.27.3

யிலே இன்றைக்கு நடைபெறுகிற பல்வேறு தவறுகளையும் சுட்டிக் காட்ட வேண்டிய நிலைமையில் நாங்கள் இருந்து கொண்டு வருகிறோம். ஒரு பக்கத்தில் சொல்லப்பட்டு இருப்பது எல்லாம், பால் உற்பத்தி செய்கின்ற அந்த உற்பத்தியாளர்களுக்கு அத னுடைய பலன் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற முறையிலே தான் இன்றைக்கு சட்டங்கள் மாற்றப்பட்டு இருக்கின்றன. ஆனால் சென்ற ஆண்டு திடீரென்று ஏற்கனவே இருந்த அமைப்பு களை எல்லாம் கலைத்துவிட்டு, அதற்குப் பதிலாக அதிகாரிகள் அந்த அமைப்புகளை நடத்துவார்கள் என்ற முறையிலே, அதற் காக ஆலோசனை சொல்வதற்கு 2 பேர்கள் கொண்ட குழுவை நியமித்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு அந்தச் சங்கங்களிலே இன்றைக்குப் பலரைச் சேர்த்திருக்கிறார்கள். சட்ட விதிகளுக்கு புறம்பாக 300 லிட்டர் பால் உற்பத்தி செய்பவர்களை மட்டும் தான் உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும் என்ற விதியை இன்றைக்குக் கடைப்பிடிக்காமல் உற்பத்தி செய்யாதவர்கள், பால் என்றால் என்ன என்று தெரியாத பலரும் அந்தச் சங்கத்திலே சேர்ந்து, அந்தச் சங்கங்கள் நசிந்து போகின்ற ஒரு நிலைமையை ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

17-15 மணி

அதோடு மட்டுமல்ல நம்முடைய உறுப்பினர் மணி அவர்கள் பேசுகின்ற நேரத்தில் ஒன்றைச் சுட்டிக் காட்டினார்கள். இந்தச் சங்கத்திற்குக் குழுவை நியமித்திருக்கிறார்கள். இதற்கு சம்பந்தமே இல்லாத பலசரக்கு கடைக்காரர்கள் போன்றவர் களை எல்லாம் நியமித்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள், அருமை சகோதரர் அர்ச்சுனன் அவர்களும் சொல்லியிருக் கிறார்கள். அவர்களுடைய தொகுதியைச் சார்ந்திருக்கின்ற ராமநேரி சொசைட்டியில் பலசரக்குக் கடைக்காரரை அங்கே அட்வைசரி போர்டில் போட்டிருக்கிறார்கள். அதுவாவது பர வாயில்லை. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் சம்பாவிநல்லூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திலே ஒருவரை அட்வைசராகப் போட்டிருக்கிறார்கள். அவர் இறந்து 3 வருடங்கள் ஆகின்றன. அந்த அளவிற்கு யாரைப் போட வேண்டும், எப்படிப் போட வேண்டும் என்றுகூடப் பார்க்காமல் போட்டிருக்கிறார்கள். ஏன் அதைச் சொல்கிறேன் என்று சொன் னால், ஏதோ கட்சியினுடைய அடிப்படையிலே வோட்டு வேண்டு மென்பதற்காக, யாரோ உட்கார்ந்து கொண்டு எழுதிக் கொடுத் ததை, இன்றைக்கு அட்வைசராகப் போட்டிருக்கிறார்கள். அந்தத் தவறுகளின் காரணமாகத்தான் இறந்தவர்கள் கூட அட்வைசராக, அதுவும் மூன்று ஆண்டுகளுக்கு முன்பே இறந்தவர், இன்றைக்கு அட்வைசரி போர்டில் போடப்பட்டு வருகின்ற நிலைமை இருக்கின்றது என்று சொன்னால், எந்த அளவிற்கு அதிலே தவறுகள் நடைபெறுகின்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தால் பால் உற் பத்தி செய்யும் பால் உற்பத்தியாளர்களுக்கு நியாயங்கள் எப்படி கிடைக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.





மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன் னார்கள். சலவைக் கடைக்காரரை உறுப்பினராக்கியிருக்கின்றார் கள் என்று திரு. மணி அவர்கள் சொன்னார்கள். அதேபோன்று அண்ணன் உகம்சந்த் அவர்கள் மளிகைக் கடைக்காரரை உறுப் பினராக்கியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். சலவைக் கடைக்காரர்களும், மளிகைக் கடைக்காரர்களும் மாடுகளை வளர்க்கக் கூடாதா? அவர்கள் பாலைக் கறக்கக் கூடாதா? இதற்கு ஏதாவது விதி விலக்கு இருக்கிறதா? ஏன் அவர்களை உறுப்பினர்களாக அங்கே சேர்க்கக் கூடாதா?

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அவர்களை உறுப்பினர்களாகச் சேர்த்தது தவறு என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்று சொன்னால், இன்றைக்கு அதிலே சொல்லப்பட்டிருக்கின்ற உத்தரவு எல்லாம், 120 நாட்கள் அவர்கள் பாலை உற்பத்தி செய்து அந்தச் சங்கத் திற்கு ஊற்றியிருந்தால் அந்த சங்கத்தில் அவர்களை உறுப்பினர் களாகச் சேர்க்க வேண்டுமென்ற விதி இருக்கிறது. அந்த விதி மீறப்பட்டிருக்கிறது. நான் சொல்வது, அவர்களைப் போட்டது பரவாயில்லை. ஆனால் இறந்தவர்களை போட்டிருக்கிறார்களே என்றுதான் கேட்டேன். ஆனாலும் இன்றைக்கு உள்ள நிலைமை கள் எல்லாம் பாலை உற்பத்தி செய்து அதை அனுப்புகின்றார்கள், அந்த 'ஃபேட்' மூலமாக, அதனுடைய 'கன்டென்ட்' மூலமாக அவர்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்படுகின்றது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதிலே பல்வேறு தவறுகள் நடைபெறுகின்றன. அங்கே சென்றவுடன் யார் எல்லாம் அங்கே யிருக்கின்ற ஊழியர்களை கவனிக்கின்றார்களோ, அவர்களுக்கு அதிகமான அளவிலே பணம் கிடைக்கின்ற வழிவகை செய்யப் பட்டிருக்கிறது. அங்கே அப்படிப்பட்ட தவறுகள் நடைபெறு கின்றன. அதை அரசு கண்டுபிடித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் இன்றைக்கு பால் உற்பத்திக்காக ஐரோப்பிய பொருளாதாரத் திட்டத்தின் மூலமாக மூன்றாவது பால் பெருக்குத் திட்டத்தை ஏற்கனவே உருவாவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அதன் மூலமாக தமிழகத் தில் இன்னும் விடப்பட்டிருக்கின்ற ஐந்து மாவட்டங்களில் இந்தத் திட்டத்தை விரிவாக்கம் செய்தும், மேலும் எல்லா பகுதிகளிலும் இந்தப் பால் உற்பத்தியை அதிகப்படுத்தி மக்களுக்கு இந்தப் பால் விநியோகத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் இன்றைக்கு உள்ள குறைகள் எல் லாம் சில மாதங்களில் பால் உற்பத்தி அதிகமாக இருக்கின்றது. அந்த மாதங்களில் அரசு அந்தப் பாலை வாங்குவதற்கு தயங்கிக்

[திரு. எஸ். டி. உகம்சந்த்] [1990 ஏப்ரல் 12

கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்தப் பால்
எல்லாம் வீணாகிக் கொண்டிருக்கிற நிலைமைகள் எல்லாம்
இருந்து கொண்டிருக்கின்றன. அதற்காக நான் ஒன்றைச்
சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு நாம் முட்டையை சத்
துணவு மையங்களில் போடுகின்றோம். அந்த முட்டை போடு
வதில் பல்வேறு தவறுகள் நடைபெறுகின்றன. என்பது ஏற்
கனவே சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நேரத்
தில் நல்ல சத்துள்ள உணவாக இந்தப் பாலை அங்கே கொடுப்
பதற்கு நீங்கள் வழிவகை செய்தால் அதன் மூலமாக பல்லாயிரக்
கணக்கான ஏழை விவசாயிகளுக்கு, பால் உற்பத்தி செய்கிற
அந்த விவசாயப் பெருமக்களுக்கு வாழ்வு கிடைக்கின்ற ஒரு
நிலைமை ஏற்படும். அதோடு மட்டுமல்லாமல், அந்தக் குழந்தை
களுடைய எதிர் காலமும் நல்ல முறையில் இருக்கும் என்பதை
இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்,

அதோடு மட்டுமல்லாமல், அன்றைக்கு நம்முடைய பேரறிஞர்
அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தொழிலாளர் நல
னுக்காக எவ்வளவு செலவிட்டாலும் அது சமூகத்திற்கு ஒன்றுக்கு
ஒன்பதாகத் திரும்பிவிடும் என்று சொல்லியிருக்கின்றார்கள்.
அதோடு மட்டுமல்லாமல் தொழிலாளர்களுக்காக செல
விடும் தொகை ஒரு நாளும் நட்டக் கணக்கில் எழுதப்படாது.
அது மேலும் மேலும் பெருகி அந்தச் சமுதாயத்திற்கு திரும்பி
வரும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்
கள். அந்த வகையில் இந்தத் தொழிலாளர்களைப் பொறுத்த
வரையிலும், நாம் அவர்களுக்கு வேண்டிய அனைத்து வசதி
களையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு
நாட்டிலே உள்ள நிலைமைகள் எல்லாம் இன்று தொழிலாளர்
ஒற்றுமையைக் குலைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை
எடுத்துக் கொண்டு வருகிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல
வேண்டுமென்று சொன்னால், இதற்கு முன்பு 1970-71-72 ஆம்
ஆண்டுகளில் அன்றைக்கு ஏற்பட்ட பல்வேறு நிலைமைகளும்,
பிறகு சிம்சனில் நடைபெற்ற அந்தப் போராட்டங்களில், அங்கு
யாரைப் புகுத்த வேண்டுமென்று நடைபெற்ற அந்த வன்முறைச்
செய்கையின் காரணமாக அங்கே அமைதி குலைந்தது மட்டு
மல்லாமல், அந்தப் போராட்டங்கள் நடந்து முடிந்த பிறகு
மீண்டும் தேர்தல்கள் நடைபெற்ற அந்தச் சூழ்நிலையில் கூட
அவர்கள் யாரைத் திணிக்க வேண்டுமென்று சொன்னார்களோ
அவர்கள் வெற்றி பெற முடியாத நிலைமைதான் அங்கே ஏற்
பட்டது.

17-20 மணி

ஆனால், தொழிலாளிக்கும் அதனால் பல்வேறு தொல்லைகள்
ஏற்பட்டன. அதே நேரத்தில் நிறுவனத்திற்கும் பல கோடிக்
கணக்கான ரூபாய்கள் நஷ்டம் ஏற்பட்டன. இந்த அளவிலே
எதையும் செய்து கொண்டு கட்சிக்காரர்களை புகுத்த வேண்டும்



1990 ஏப்ரல் 12] [திரு. எஸ். டி. உகம்சந்த்]

என்ற முறையிலே இன்றைக்கு ஆளுகின்ற பொறுப்பிலே
இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்
செய்து கொண்டு வருகிறார்கள் என்பதை கண்கூடாகப்
பார்த்துக் கொண்டு இருக்கிறோம்.

போரூருக்கு அருகாமையில் இருக்கிற டபுள்யூ. எஸ். இன்சு
லேட்டர்ஸ் என்ற தொழிற்சாலையிலே சமீபத்திலே நடைபெற்
றது என்ன? அங்குள்ள அந்தத் தொழிலாளர்களுக்கு
ஏற்கெனவே தொழிற் சங்கம் இருந்து கொண்டு வருகிறது.
அதைக் கலைக்க வேண்டும், அங்கு எப்படியாவது திராவிட
முன்னேற்றக் கழகத்தினுடைய தொழிற்சங்கத்தை உருவாக்க
வேண்டும் என்ற முறையிலே அங்கே அமைதி குலைகின்ற காரி
யத்திலே அரசே அதற்கு துணையாக இருக்கிறது என்று சொல்
லத்தான் வேண்டும்.

காலையிலே கூட ஒரு பிரச்சினை வந்தது. ஹோசூரிலே
இருக்கிற அந்த டி.வி.எஸ். சுசுகியினுடைய தொழிற்சாலை
யிலே நடைபெற்ற பல்வேறு சம்பவங்களைப் பற்றிச் சொன்
னார்கள். அங்கே அந்த நிறுவனம் எப்படி இருக்கிறது. அந்த
நிறுவனம் சம்பந்தமாக பல்வேறு வழக்குகளுக்கான லிஸ்டுகளை
தந்தாலும், கிரிமினல் வழக்கு கூட அதிலே 65 லே ஒன்றுதான்
போடப்பட்டிருக்கிறது என்று இந்தியா முழுவதும் விற்பனை
ஆகிற பல்வேறு பத்திரிகைகளிலே எடுத்துச் சொல்லி இருக்கிறார்
கள். அதற்கு காரணமே அரசாங்கத்தினுடைய இயந்திரம் ஒரு
பக்கமாக சாய்ந்து இருப்பதன் காரணமாக ஒரு புதிய சங்கத்தை
அந்தத் தொழிற்சாலையிலே உருவாக்க வேண்டும் என்ற முறை
யிலே அவர்கள் செய்கிற காரணத்தால் அப்படிப்பட்ட நிலைமை
ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறேன். இது
தொழில் அமைதி குலைகின்ற ஒரு காரியம் என்பதையும் நான்
சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நீங்கள் இப்படிப்பட்ட காரி
யத்தைச் செய்து கொண்டே சென்றால் தொழில் வளம் மேலும்
குலைகின்ற நிலைமை ஏற்பட்டு ஆங்காங்கே தொழிற்சாலைகள்
மூடப்படுகிற ஒரு நிலைமை ஏற்பட்டு பட்டினி சாவுகள் அதிக
மாகி நாட்டிலே வளம் குன்றக் கூடிய நிலைமைதான்
ஏற்படும். அது மட்டும் அல்லாமல் இன்றைக்கு நம்
முடைய திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்த
வரையில் அதிலே அரசாங்கமே அதாவது அரசு அதிகாரிகளே
ஒரு தொழிற்சங்கத்தை வளர்க்க வேண்டுமென்று காரணத்திற்
காக அங்கே காரியத்தை ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்ற
குற்றச்சாட்டை சுமத்த நான் விரும்புகிறேன்.

அங்கே ஏற்கெனவே அண்ணா பணியாளர்கள் சங்கத்திலே
பல்வேறு பொறுப்பிலே இருந்தவர்களை பழி வாங்க வேண்டு
மென்ற அளவிலே அவர்களையெல்லாம் வேறு வேறு இடங்

களுக்கு திடீர் என்று மாற்றினார்கள். அதற்குப் பிறகு அவர்கள்
திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சங்கத்திலே உறுப்பினர்
களாக சேர்ந்ததற்குப் பிறகு மீண்டும் அவர்களை பழைய இடத்
திலேயே அமர்த்துவதற்கு வழி முறைகள் செய்யப்பட்டு உத்திர
வுகள் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், திராவிட முன்னேற்றக்
கழகச் சங்கத்திலே சேராதவர்களுக்கு அந்தப் பணி மாற்றம்
செய்யப்படவில்லை. அவர்கள் மாற்றப்பட்டது மாற்றப்பட்டது
தான் என்று சொல்கிறார்கள். ஏன் இந்த நிலைமை என்பதைச்
சிந்திக்க வேண்டும்.

ஆளுகிற கட்சிக்கு ஆதரவாகத்தான் தொழிற்சங்கத்திலே
உள்ளவர்கள் இருக்கவேண்டும் என்ற கொள்கையை இந்த அரசு
கடைப்பிடிக்கிறதா. அத்தோடு மட்டுமல்லாமல்
அரசாங்க அதிகாரிகளை துணை போக வேண்டும் என்ற அதற்கு
தான் இன்றைக்கு உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் நிலைமை
சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அத்தோடு என்பதைச்
இன்றைக்கு மிக வேகமாக பேசப்படுவது ஸ்டாண்டர்ட் மட்டும் அல்லாமல்
ருடைய நிலைமை தான் என்பதை நான் சுட்டிக் காட்ட மோட்டா
கிறேன். முதலிலே அந்தப் போராட்டம் வந்த விரும்பு
என்ன சொல்லப்பட்டது (குறுக்கீடு). 4 நேரத்திலே
யிருக்கிறது. இன்னும் சற்று நேரம் நிமிடம்தான் ஆகி
ஸ்டாண்டர்டு மோட்டார்ஸைப் பொறுத்த கொடுங்கள். இந்த
பிரச்சினை எழுந்த நேரத்திலே இதே மன்றத்திலே வரையில் அந்தப்
அமைச்சர் அவர்களும் மற்றவர்களும் சொன்னார்கள். மாண்புமிகு
அந்த தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்புகிற நாங்கள்
ஏற்படுத்த மாட்டோம். ஒரு தொழிலாளியைக் கூட நிலைமையை
அனுப்புவதற்கு அரசு ஒப்புக் கொள்ளாது என்று வீட்டுக்கு
ஆனால், இன்றைக்கு நிலைமை என்ன ? சொன்னார்கள்.
பேரை அவர்கள் பணியிலிருந்து அனுப்புவதற்கு, இன்றைக்கு ஆயிரம்
நீக்குவதற்கு வேண்டிய வழி வகைகளை வேலையிலிருந்து
திருக்கிறார்கள் என்று சொன்னால்.. ... ஒப்பந்தத்தை செய்

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் :
பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டாண்டர்டு மோட்டார் மாண்புமிகு
சினையை பொறுத்த மட்டில் மாண்புமிகு உறுப்பினர் பிரச்
சரியாக உண்மைகளை புரிந்துக் கொண்டு அவர்கள்
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சபைக்கு தெரிவிக்க
தெல்லாம் ரிட்டிரன்ச்மென்ட் கூடாது. நாங்கள் சொல்லிய
ஷன் என்று சொல்லி அவர்களே விரும்பி வாலண்டரி செப்பரே
செல்லட்டும். நாங்கள் ரிட்டிரன்ச்மென்ட்டுக்கு செல்லுவதாக இருந்தால்
மாட்டோம் என்று நிலையை தான் ஒத்துக் கொள்ள
பட்டது. இப்போதும் அதே நிலை ஆரம்பத்திலேயும் சொல்லப்
இல்லை. தான். நிலை மாற்றம்



திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதிலே
நான் மாறுபடுகிறேன். ஏனென்று சொன்னால் அதைப் பணி
நீக்கம் ல்லை என்று சொன்னால் வேறு என்ன ? அவர்க
ளாகவே வெளியே செல்ல வேண்டும், இல்லை என்று சொன்
னால் மாதத்திலே 20 நாட்கள் தான் வேலை என்று சொன்னால்
அது 1/3-ஐ வீட்டுக்கு அனுப்புவதற்கு சமம் தான் என்று தான்
சொல்ல வேண்டும். அவர்களும் அதற்கு ஒத்துக் கொண்டு
இருந்தாலும் சரி.......

17-25 மணி

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : வாலண்டரி
செப்பரேஷன் ஸ்கீம் என்பது தொழிலாளர்களே விருப்பப்படி
அவர்களே பணி முடித்துக் கொண்டு செல்வது. அதிலே எந்த
விதமான அரசினுடைய கட்டாயமும் இல்லை. அல்லது அந்த
ஆலை அதிபருடைய கட்டாயமும் இல்லை. ரெட்ரென்ச்மென்ட்
என்று சொன்னால், ஒப்பந்தத்தின் அடிப்படையில் அவர்களை
வேலையிலிருந்து நிரந்தமாக நீக்கிவிடுவது. நீக்கிவிட்டால் அது
தொழிலாளர்களுக்கு அரசு இழைக்கக்கூடிய ஒரு தீமை. அது
கூடாது, அது அரசாங்கத்தினுடைய கொள்கை அல்ல, புரொக்ர
சிவ் கவர்ன்மென்டினுடைய கொள்கை அல்ல. எனவே அவர்க
ளாகவே, தொழிலாளர்களே விரும்பிச் சென்றால் செல்லலாமே
ஒழிய, நாங்கள், அரசாங்கம் வந்து தொழிலாளர்களை வேலை
யிலிருந்து நீக்குவதற்கு ஒப்புக்கொள்ள மாட்டோம் என்ற நிலை
தான் ஆரம்பத்திலேயும் எடுத்தோம். இன்றைக்கும் அதே நிலை
தான். அதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
குழப்பிக் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.
(குறுக்கீடு.)

திரு. ரா. சொக்கர் : பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷன். வாலண்டரி
செப்பரேஷனில் போகும்போது நிர்வாகத்தினர் அந்தத்
தொழிலாளர்களுக்கு ஏதாவது பணம் ஈட்டுத்தொகையாகக்
கொடுப்பது வழக்கம். அந்தத் தொகையும் கொடுக்கப்படும்
என்று நினைக்கிறேன். அப்படிக் கொடுக்கப்பட்டு, அவர்களாகவே
செல்வதாக இருந்தால் அவர்களே, அவர்களுடைய விருப்பத்
தின் பேரில்தான் செல்வதாக வழக்கம். அதையும் தெளிவுபடுத்
தினால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
சொக்கர் அவர்கள் தெரிவித்தது, அவர்களுக்கே அந்த விவரங்கள்
எல்லாம் தெரிகிறது. வாலண்டரி செப்பரேஷன் என்றால்
வேலை செய்யக்கூடியவர் விருப்பத்தின் அடிப்படையில் செல்வார்.

அவருக்கு அந்த ஊதியம், சட்டப்படிக்கான சலுகைகள் அனைத்தும் மொத்தமாகக் கொடுக்கப்பட்டு அவருடைய விருப் பத்தின் அடிப்படையில்தான் செல்வார்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன விளக் கத்தை நான் மறுப்பதற்குக் காரணமே, அந்த அளவிற்கு அவர் கள் தள்ளப்பட்டிருக்கின்றார்கள். ஏனென்று சொன்னால், லாக் அவுட் செய்வதற்கு முன்பு ஐந்து மாதங்கள் அவர்களுக்கு ஊதி யங்கள் வழங்கப்படவில்லை. இன்றைக்கு அந்த ஆலை மூடப் பட்டு, சுமார் 13, 14 மாதங்கள் ஆகியிருக்கின்றன. ஆகவே, 19 மாதங்கள் அவர்களுக்குச் சம்பளம் கிடைக்காத சூழ்நிலையில், பட்டினியால் வாடுவதைவிட கிடைப்பதே போதும் என்ற நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டிருக்கின்றார்கள். அதற்கு மேல் தான் அரசாங்கம் அவர்களே ஒப்பந்தம் செய்தாலும் சரி, அல்லது அவர்கள் மறைமுகமாக இருந்து கொண்டு ஆதரவு அளித்து அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றி இருந்தாலும், அந்த அளவுக்கு அவர் கள் தள்ளப்படுவதற்குக் காரணமே அரசினுடைய அணுகுமுறை என்று தான் நான் சொல்ல வேண்டும். அதோடு மட்டுமல்லாமல் இந்த ஒப்பந்தத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. ஐந்தாண்டுக் காலத்திற்கு அவர்களுக்கு.......

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய அணுமுறை தவறு, அதனால் இவ்வாறு தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்கிறார். எவ்வாறு அணுகியிருந்தால், அவர்களுக்குச் சம்பளம் கிடைத் திருக்கும் என்பதை விளக்க வேண்டும். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரம் முடிந்து போன தால் அவருக்கு விளக்குவதற்கு நேரம் இருக்காது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : என்னுடைய நேரத்தை எல்லாம் அவர்கள் உங்கள் அனுமதியோடு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த மாதிரியெல்லாம் வாதம் செய்வது கூடாது. (குறுக்கீடு.) உங்களுக்கு மட்டுமே தனியாக ஒதுக்குவது இல்லை. (குறுக்கீடு.) வாதம் செய்தீர்கள் என்றால், மறுபடியும் பிரச்சினை வரும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : அவர்கள் எடுத்த நேரத்தை எனக்குக் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த மாதிரியெல்லாம் வாதம் செய்வதை விட்டுவிட வேண்டும். ஒரு மணித்துளியில் முடித்து விடுங்கள். (குறுக்கீடு.) நீங்கள் இனிமேல் எந்தக் காரணம்



ணம் கொண்டும் யார் பேசினாலும் குறுக்கே எழுந்திருக்கக் கூடாது, உங்கள் கட்சியின் சார்பிலே, அதற்கு உறுதியளிக்கிறீர் களா ? (குறுக்கீடு) அந்த வாதம் எல்லாம் வேண்டாம். ஒரு மணித் துளியில் முடியுங்கள். எவ்வளவு சொன்னாலும் அவ் வளவுதான். அழுத்தமாகச் சொல்லி, முடியுங்கள்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : இன்றைக்கு நான் இதை ஏன் சொல்கிறேன் என்றால், ஸ்டாண்டர்டு மோட்டார்ஸைப் பொறுத்தவரையில், 5 ஆண்டுகளுக்கு அவர்களுக்கு ஊதிய உயர்வு கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன் னால், எந்த அளவிற்கு நிலைமைகள் சென்றிருக்கின்றன என் பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஜனவரி மாதத்தில் கூட, நம்முடைய அருமைச் சகோதரர் கோவிந்தராஜன் அவர்கள் பேசு கின்ற நேரத்தில் கூடச் சொன்னார்கள். அங்கேயிருக்கின்ற வட லூர் சேஷசாயி பேப்பர் மில்லிலே நடைபெறுகின்ற லே-ஆஃபைப் பற்றிச் சொன்னார்கள். இந்த மன்றத்திலேயே உறுதிமொழி கொடுக்கப்பட்டது. ஆனால், சமீபத்திலே அந்த உறுதிமொழி மாற்றப்பட்டு, அவர்களுடைய பொருளாதார நிலைமை மிகவும் பாதிக்கப்பட்டு இருப்பதன் காரணமாக, லே-ஆஃப் கொடுக்க வேண்டுமென்ற நிலமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால், எந்த அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எப்படி ஒப்பந்தம் செய்யப்பட்டு இருக்க வேண்டும் என்று என்னைப் பாாத்துக் கூட கேள்வி கேட்டார்கள். நான் சொல்வது, தொழி லாளர்களை வீட்டிற்கு அனுப்புகின்ற நிலைமைகள் ஏற்படாமல், அவர்களுக்கு நியாயமான முறையிலே எப்படி விலைவாசி ஏறுகின் றதோ, அந்த அடிப்படையிலே அவர்களுக்கும் அந்த ஊதிய உயர்வும் கிடைக்கின்ற அளவுக்கு ஒப்பந்தம் இருக்க வேண்டும். ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்த அன்று, அந்த ஒரு வாரத்தில் சொன்னது, நாங்கள் ஒரு தொழிலாளியைக் கூட வீடடுக்கு அனுப்ப மாட்டோம் என்று சொன்னீர்கள். ஆனால், அதற்கு மாறான நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஏனென்றால் அன்று ஆட்சிப் பொறுப்பிலே அமர்கின்ற சூழ்நிலையிலும் சரி, அதற்கு முன்பும் நீங்கள் எந்த நிலையை எடுத்தீர்களோ, அந்த நிலையில் தான் இன்றைக்கு ஒப்பந்தத்தை செய்திருக்க வேண்டுமே தவிர, அதற்கு மாறாக இன்றைக்கு ஒப்பந்தத்தைச் செய்திருக்கிறீர்கள் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம்.

17.30 மணி

இன்றைக்கு இருக்கின்ற நிலைமை எல்லாம் வருவாய்த் துறை தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் பழிவாங் கப்படுகின்ற அளவுக்கு இன்றைக்கு அந்த தொழிலாளர்கள்

[எஸ். டி. உகம்சந்த்] [1990 ஏப்ரல் 12

அனைவருடைய உரிமையையும் பறிக்கின்ற அளவுக்கு அவர்
களை கட்டாயப் படுத்துகின்ற நிலைமை இருந்து கொண்டிருக்
கின்றன. அவர்கள் இன்று போராட முடியாத நிலைமை இருந்து
கொண்டிருக்கின்றன. போராட்டம் நடத்த வேண்டும் என்று
சொன்னால் அதற்கு அனுமதி இல்லை ; அவர்கள் உண்ணா
விரதம் இருக்க வேண்டும என்று சொன்னால் அதற்கு அனுமதி
இல்லை ; ஊர்வலம் நடத்த வேண்டும் என்று சொன்னால்
அதற்கு அனுமதி இல்லை ; அந்த அளவுக்கு அவர்களுடைய
நிலைமை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. முன்பு
எல்லாம் நாம் பார்ப்போம் அந்த காமராஜ் சாலையில் அந்த
உண்ணாவிரதம் அவர்கள் எல்லாம் அமர்ந்து நடந்து கொண்
டிருந்தது. ஆனால் இன்றைக்கு அவைகள் எல்லாம் மறுக்கப்
பட்டு அவர்கள் அந்த தொழிற்சாலையின் முன் ால் உண்ணா
விரதம் உட்காரக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள்.
வருவாய்த் துறையைச் சேர்ந்தவர்கள் பற்றி நாம் சபையில்
சொல்லுவது ஒன்று, ஆனால் வெளியில் அவர்கள் நடத்தப்
படுவது வேறு வகையில் இருக்கும் நிலைமை தான் பார்க்கி
றோம். அந்த அளவுக்கு அரசு இன்றைக்கு தொழிலாளர்
களை பழி வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். காவல் துறை
யில் 2 ஆண்டுகளுக்கு முன்பு சேர்க்கப்பட்டு இருக்கின்ற காவல்
துறை எஸ்.ஐ.க்களை பழிவாங்குகின்ற அளவுக்கு நட
வடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது என்
பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களை வீட்டுக்கு
அனுப்புகின்ற அளவுக்கு வேண்டிய நடவடிக்கைகளை அர
சாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்
கொள்கிறேன். இந்த நிலைமையில் இன்றைக்கு அரசைப்
பொறுத்த வரையில் இந்த அரசு தொழிலாளர்கள் நலனில்
அக்கறை இல்லாமல் இருந்து கொண்டு வருகிறது என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்கிறேன்.
சென்ற ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு
அறிவிப்பைச் செய்தார்கள். இனி அடுத்த ஆண்டு மே 1 ஆம்
தேதி முதற் கொண்டு ஒரு நாளைக்கு 6 மணி நேரம் தான்
வேலை செய்வதற்கு தான் நடவடிக்கை எடுக்க இருக்கிறேன்.
அதற்கான சட்டத்தை இயற்ற இருக்கிறோம் என்று சொல்
யிருக்கிறார்கள். அந்த அறிவிப்பினை நம்முடைய மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்று நினைக்கிறேன். அதே
போல்.................
(மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தான் கடைசி
தடவை. இனிமேல் இப்படிச் செய்தால் கண்டிப்பாக நான்
கடுமையாக இருப்பேன். அவ்வளவு தான் சொல்வேன்.



1990 ஏப்ரல் 12]

திரு. எஸ். டி. உகம்சந்த் : என்னுடைய நேரத்தை அவர்கள்
எடுத்துக் கொண்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த வாதம் எல்லாம்
வேண்டாம் என்று சொல்கிறேன். கட்டுப்படவில்லை என்றால்
அப்புறம் நான் கட்டுப்போட வேண்டியதாகப் போய் விடும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் குறைந்த
போனஸை நாங்கள் உயர்த்தப் போகிறோம் என்று சொல்லி
யிருக்கிறார்கள். அதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்
என்று கேட்டுக் கொண்டு, தொழிலாளர்கள் இந்த நாட்டி
னுடைய முதுகெலும்பு என்பதை அறிந்து அதற்கு வேண்டிய
அளவுக்கு அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று
கேட்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன்,
நன்றி, வணக்கம்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இன்று காலையிலிருந்து 15-க்கும் மேற்
பட்ட மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தொழிலாளர் நலத்
துறையிலும், எழுது பொருள் அச்சுத் துறையிலும், வேலை
வாய்ப்புத் துறையிலும், பால்வளத் துறையிலும் தங்களுடைய
மேலான கருத்துக்களை எடுத்துரைத்து இருக்கிறார்கள். குறிப்
பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சந்திரசேகரன் அவர்
களும், திரு. மோகன் அவர்களும், திரு. எச்.எம். ராஜு அவர்
களும், திரு. குணசேகரன் அவர்களும், திரு. சி. கோவிந்த
ராஜன் அவர்களும், திரு. டி.கே. பழனிச்சாமி அவர்களும்,
திரு. சோ. அழகர்சாமி அவர்களும், திரு. கோ. பூவராகன்
அவர்களும், திரு. எஸ்.எஸ். ராமசுப்பு அவர்களும், திரு. கே.ஏ.
மணி அவர்களும், திரு. பா. அப்துல் சமத் அவர்களும், திரு.
எம்.கே. கரீம் அவர்களும், திரு. சி. கோவிந்தசாமி அவர்களும்
மற்றும் பலரும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். பொதுப்படை
யாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கோவிந்தராஜன், திரு.
கோவிந்தசாமி மற்றும் திரு. சோ. அழகர்சாமி ஆகிய மூவரையும்
தவிர பாக்கி அத்தனைப் பேரும் பால்வளத் துறையில் மிக
கவனத்தைச் செலுத்திப் பேசியிருக்கிறார்கள்.

உள்ளபடியே மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களில்
எல்லாம் நல்ல கருத்துக்களை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்.
உங்கள் நல்ல கருத்துக்களை எவ்வாறு செயல் படுத்த வேண்டுமோ
அவ்வாறு எல்லாம் செயல் படுத்துவோம் என்ற உறுதியை முதலில்
தந்து இந்தத்தொழிலாளர் நலத் துறையைப் பற்றிப்பொதுவாக
கடந்த ஆண்டு நமது மாண்புமிகு முன்னாள் தொழிலாளர்
நலத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.
நமது அரசினுடைய கொள்கை இருக்கின்ற சட்டத்தை வைத்துக்

கொண்டு 'ஆர்கனைஸ்டு செக்டார்' அன்-ஆர்கனைஸ்டு செக்டார்
இவைகளில் பணி புரிகின்ற தொழிலாளர்களுடைய நலனை இந்தச்
சட்டத்தின் மூலமாக எப்படி பேணிப் பாதுகாப்பது என்பதை
ஆராய்வது இந்த அரசினுடைய கொள்கை என்று கடந்த முறை
சொன்னார்கள். அதே போல் கடந்த முறை அவரும் சொல்லி
யிருக்கிறார். மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும்
மணம் உண்டு என்று எங்களை ஆளாக்கிய எங்களுடைய
தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்.
அதையுமே நானும் சொல்லி உங்களுடைய கருத்துக்
களை ஏற்றுக் கொள்கிறேன் என்று சொன்னதற்கு இணங்க,
அவர் வழியே நான் உங்கள் கருத்துக்களை எல்லாம் இந்தத்
துறையினுடைய அதிகாரிகள் மூலம் எதை எதைச் செயல் படுத்த
முடியுமோ அதை அதை எல்லாம் செயல் படுத்த வேண்டும்,
நாங்கள் செயல் படுத்துவோம் என்ற உறுதியை இந்த நேரத்தில்
தெரிவித்துக் கொள்கிறேன். ஏதோ தமிழ் நாட்டில் இந்த
அரசு தொழிலாளர் விரோதப்போக்கில் இருக்கிறது என்று மாண்பு
மிகு உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்கள் இங்கே எடுத்துச்
சொன்னார்கள். உள்ளபடியே இங்கே இந்த ஆட்சி பொறுப்பு
ஏற்றதற்கு பின்னால் மூடிய தொழிற்சாலைகளை எல்லாம் திறப்
போம் என்று சொன்னதை இன்றைக்கு செய்து கொண்டு இருக்
கிறோம்.

17.35 மணி

குறிப்பாக 16 மாதங்களாக மூடிக் கிடந்த மெட்டல் பாக்ஸ்
நிறுவனத்தைத் திறந்திருக்கிறோம். அதைப் போல 10 மாதங்
களுக்கு மேலாக மூடியிருந்த ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ்
தொழிற்சாலையை வருகின்ற ஜூன் மாதம் திறப்பதாக ஒப்பந்தம்
உருவாகி இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் தமிழகம்
முழுவதும் உள்ள சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் மீதான
தொழில் ரீதியான செட்டில்மென்ட், இந்த செட்டில்மென்ட்டை
அகில இந்தியாவிற்கே முன்னோடியாக நாம் தான் போட்டு
இருக்கிறோம். முதன் முதலாக சினிமா தொழிலுக்கு நாம் தான்
செட்டில்மென்ட் போட்டிருக்கிறோம். தமிழக தோட்டப்
பணியாளர்களுக்கான செட்டில்மென்ட்டை நாம் தான் போட்டி
ருக்கிறோம். தமிழக தோல் பதனிடும் தொழிலாளர்களுக்கான
செட்டில்மென்ட்டை நாம் தான் போட்டிருக்கிறோம். இங்கிலீஷ்
எலக்ட்ரிக் கம்பெனி தொழிலாளர்களுக்கான செட்டில்மென்ட்,
நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் தொழிலாளர்களுக்கான
செட்டில்மென்ட், சேசசாயி பேப்பர்ஸ் மற்றும் போர்ட் தொழி
லாளர்களுக்கான செட்டில்மென்ட், இது போன்று பல செட்டில்
மென்டுகளுக்காக இந்தத் துறையினுடைய அதிகாரிகள் மிக
முனைப்போடு செயல் பட்டு இவ்வளவு காரியங்களை
செய்திருக்கிறார்கள்.



தேர்தல் நேரத்தில், தலைவர் அவர்கள் சொன்னார்கள்,
மூடிய மில்களையெல்லாம் நாங்கள் திறப்போம் என்று. தலைவர்
அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் 9 மில்களை உடனடி
யாகத் திறந்தும் இருக்கிறோம். மீதம் இருக்கின்ற 6 மில்களைத்
திறப்பதற்காக பல்வேறு முறை சுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்று
கடந்த 9 ஆம் தேதி கூட இரண்டு அமைச்சர்கள் கூட்டம்
போட்டு அதை எப்படித் திறப்பது என்பதைப் பற்றியெல்லாம்
விவாதித்து இருக்கிறார்கள். கடைசியாக, அரசின் ஒரு
கொள்கையாக இன்றைக்குத் தலைவர் கலைஞர் அவர்கள்
அரசின் கொள்கைப்படி உடனடியாகத் திறக்க வேண்டுமென்று;
மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு தனியாக ஒரு கடிதம் தர
வேண்டுமென்று கேட்டு, அதை எடுத்துக் கொண்டு அந்தத்
துறையினுடைய அமைச்சர் டெல்லி செல்ல இருக்கிறார். எவ்
வளவு விரைவாக அதைத் திறக்க முடியுமோ அவ்வளவு விரை
வாகத் திறப்பதற்கு முனைப்போடு செயல் பட்டுக்கொண்டு இருக்
கிறோம், அதோடு மட்டுமல்ல, இன்றைக்கு தொழிற்சாலை
களிலே ஆய்வகத் துறையினர், தொழிற்சாலைகள் அதிகமாக
இருந்தாலும் ஆய்வகத் துறையினருடைய பணியின் காரணமாக
1987 ஆம் ஆண்டு தொழிற்சாலைகளில் ஏற்பட்ட மரண விபத்துக்
கள் 83. ஏனைய விபத்துக்கள் 17 ஆயிரம். ஆனால் இந்த
ஆண்டு 49 மரண விபத்துக்கள் தான், ஏனைய விபத்துக்கள்
12 ஆயிரம் என்ற அளவிலே இருக்கின்றன. அந்த அளவிற்கு
ஆய்வகத் துறையினர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

வேலை நிறுத்தம் என்று வைத்துக் கொண்டால் கூட,
ஆளுநர் ஆட்சியிலே 190 வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டிருக்
கின்றன. கதவடைப்பு 21. 1989-ல் 168 வேலை நிறுத்தங்
களும் 18 கதவடைப்புகளும் தான். தமிழகத்தில் இழக்கப்
பட்ட மனித நாட்கள் 23.17. நம் மாநிலத்தில் லட்சக் கணக்கில்
இருந்தால் பல்வேறு மாநிலங்களில் கோடிக் கணக்கில்
இருக்கிறார்கள். இன்றைக்கு வேலை நிறுத்தங்கள் என்ற
அளவிலே 1988 ஆம் ஆண்டு எழுப்பப்பட்டவை 190. அதில்
தீர்க்கப்பட்டவை 177. ஆனால் 1989-ல் 168 கோரிக்கைகள்
எழுப்பப்பட்டு 160 தீர்க்கப்பட்டிருக்கின்றன. கதவடைப்பு
என்று வைத்துக் கொண்டால் 1988 ஆம் ஆண்டு 21 எழுப்பப்
பட்டு 17 தீர்க்கப்பட்டன. ஆனால் 1989—ல் 18 எழுப்பப்பட்டு
16 தீர்க்சப்பட்டிருக்கின்றன. தொழிற் தகராறு 10,061.
அதில் தீர்க்கப்பட்டவை 8,577, இது 1988 ஆம் ஆண்டு,
ஆனால் 1989-லே 11,110 எழுப்பப்பட்டு 9,213-ஐ தீர்த்
திருக்கிறார்கள். இதில் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டவை
1,395 ஆகும். அதில் நல்ல தீர்ப்பு வழங்கப்பட்டவை 862.
ஆனால் 1989-லே நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட வழக்குகள்
2,774, அதில் தீர்ப்பு வழங்கப்பட்டவை 1,293 என்ற அளவிலே
இந்தத் துறை சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது.
பல்வேறு உறுப்பினர்கள் வழக்குகளெல்லாம் தேங்கி நிற்கின்றன
என்று குறிப்பிட்டார்கள். இந்த வழக்குகளை எல்லாம் உடனடி

[திரு. கே. என். நேரு] [1990 ஏப்ரல் 12

யாகப் பைசல் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு கேட்ட
காரணத்திற்காக இந்த அரசு மத்திய அரசிடம் வாதாடி மூன்று
இடங்களிலே புதிய நீதிமன்றங்கள் தொழிலாளருக்கென்று
வேலூரிலும், சேலத்திலும், திருச்சியிலும், அமைக்க
இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப் போல தற்காலிகத் தொழிலாளர்களை நிரந்தரப்
படுத்துவதற்காக கடந்த முறை சட்டமன்றத்திலே மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். தற்காலிக பணியாளர்
களில் 10 ஆயிரம் பேரை நாங்கள் நிரந்தரப்படுத்துவோம் என்று.
இன்றைக்கு ஆய்வகத் துறையினர் ஆய்வு செய்து கடந்த ஆண்டு
16,533 பேரை நிரந்தரப்படுத்தி இருக்கிறார்கள். இந்த
ஆண்டு கூட சட்டமன்றத்திலே இன்றைக்கு நாங்கள் அறிவிக்கி
றோம் மிகப் பெருமையோடு. மீண்டும் 15 ஆயிரம் பேர்களை,
தற்காலிகப் பணியாளர்களை நிரந்தரப்படுத்துவோம் என்று
இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.
(மேசையைத் தட்டும் ஒலி).

அதைப் போல 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச்
சட்டத்தின் கீழ் இது வரை வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத
அளவு நம்மாநிலத்தில் மட்டும்தான் 70 இனங்களை குறைந்த
அளவு ஊதியச் சட்டத்தின் கீழ் எடுத்திருக்கிறோம்.
17-40 மணி.

மற்ற மாநிலங்களில் எல்லாம் 56 என்ற அளவில் தான்
அதை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நமது மாநிலத்தில்
மட்டும் தான் 70 இனங்களை குறைந்த அளவு ஊதியத்தின் கீழ்
கொண்டு வந்திருக்கிறோம். அதிலும் குறைந்தஅளவு ஊதியம்
என்று சொல்லும் போது 15 ரூபாய் என்ற அளவில் மட்டும்
இல்லாமல், விலைவாசி உயர்வைக் கணக்கில் வைத்துக் கொண்டு
அதையும் இணைத்து குறைந்த அளவு ஊதியத்தை நிர்ணயிக்கி
றோம், அதை நமது அரசு கொள்கையாகவே வைத்திருக்கிறது
என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்கான விபரங்கள் என்ன என்றால், தமிழ்நாட்டில் 3
மீட்டர் சேலை நெய்தால், அதற்குக் கூலி ரூ. 24.85 என்று
நிர்ணயம் செய்திருக்கிறோம். கேரளாவில் அதற்கு ரூ. 21.80
என்றும், ஆந்திராவில் ரூ. 21 என்றும் நிர்ணயித்திருக்கிறார்கள்.
கர்நாடகத்தில் அதற்கான நிர்ணயம் இன்று வரை இல்லை. அதே
போல, வேட்டி 3 மீட்டர் நெய்தால் தமிழ்நாட்டில் ரூ. 25.68,
ஆனால் கேரளா, ஆந்திரா, கர்நாடகா போன்ற மற்ற மாநிலங்
களில் அதற்கான நிர்ணயம் இல்லை. அதே போல துண்டு 3
மீட்டர் நெய்தால், தமிழ்நாட்டில் ரூ. 18.30 என்று இருக்கிறது.
ஆனால் கேரளாவில் ரூ. 15.68 தான். ஆந்திராவிலும் கர்நாட
கத்திலும் இன்னமும் நிர்ணயிக்கப்படவில்லை என்பதையும்
நான் மன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே இந்தியாவிலேயே அதிக அளவுக்கு குறைந்த பட்ச
ஊதியத்தை நிர்ணயித்திருப்பது தமிழ்நாட்டில் தான் என்பதை
நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.



1990 ஏப்ரல் 12] [திரு. கே. என். நேரு]

பீடித் தொழிலாளர் நலன் பாதுகாக்கப்பட வேண்டும், அவர்கள் ஊதியம் உயர்த்தப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். உள்ளபடியே, பீடித் தொழிலாளர்களில் இரண்டு வகை இருக்கிறார்கள். ஒன்று ஒரு கூடாரம் அமைத்து, அந்த இடத்திலேயே தொழிலாளர்கள் சேர்ந்து கொண்டு பீடி சுற்றுவது. இன்னொன்று, பீடி இலையை வீட்டுக்கு எடுத்துச் சென்று, அங்கே இருக்கிற பெண்களை வைத்துக் கொண்டு பீடிகளை சுற்றுவது, அப்படி இலையை வீடுகளுக்குக் கொண்டு செல்லும் போது, அங்கே வேலை செய்கிற பெண் தொழிலாளர்களுக்கு உரிய தொகை மற்றும் சலுகைகள் அளிக்கப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க ஆண் அதிகாரிகளால் முடியவில்லை என்பதால், இதற்காக இரண்டு பெண் அதிகாரிகளைத் தமிழ்நாட்டில் நியமித்து, ஒவ்வொரு இல்லத்திற்கும் அவர்கள் நேரடியாகச் சென்று பார்த்து விசாரித்து, அவர்களுக்கு லாக் புக் போடச் செய்திருக்கிறோம்.

பீடித் தொழிலாளர்களுக்கு 1,000 வீடுகளை, ரூ. 5,000 மானியத்தில் கட்டித் தர இருக்கிறோம். பல்வேறு இடங்களை இதற்காகத் தேர்ந்து எடுத்திருக்கிறோம். பல்வேறு மாவட்ட ஆட்சியாளர்களைக் கேட்ட போது, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் அதற்கான இடத்தைத் தந்திருக்கிறார்கள் என்பதால், இன்றைக்கு திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் அவர்களுக்காக 800 வீடுகளைக் கட்ட இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள், தொழிலாளர் நலக் கொள்கைகள் பற்றிப் பேசாமல் பச்சாவத் கமிட்டி அறிக்கை பற்றி விளக்கமாகப் பேசியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் 5 செய்தி நிறுவனங்களும், 86 பத்திரிகைகளும் இருந்தாலும், அவற்றில் 4 செய்தி நிறுவனங்களும் 42 பத்திரிகைகளும் இன்றளவில் பச்சாவத் கமிட்டி அறிக்கையை அமல் செய்து இருக்கிறார்கள். மீதமுள்ள நிறுவனங்களிலும் அதை அமல்படுத்த முத்தரப்புக் குழு அமைத்து நிச்சயமாக அதையும் அமல் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈ. எஸ். ஐ. மருத்துவமனைகள் பற்றிப் பேசினார்கள். கடந்த ஆண்டு ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகள் புதிதாகக் கட்டப்படும் என்று அரசு அறிவித்தது. அதை நிறைவேற்றும் வகையில், கோவையில் இரண்டு இடங்களிலும், திருச்சியிலும், புதுக்கோட்டையிலும், தாமபுரியிலும் ஈ. எஸ். ஐ. மருத்துவமனைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டும் புதிதாக சில மருத்துவமனைகள் கட்டப்பட இருக்கின்றன. வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் மேல்விஷாரத்திலும், திருநெல்வேலி கட்டபொம்

[திரு. கே. என். நேரு] [1990 ஏப்ரல் 12

மன் மாவட்டத்தில் சங்கரன் கோயிலிலும், ஒசூரிலும் மேலும்
123.20 ரூபாய் செலவில் 50 படுக்கைகள் கொண்ட புதிய
மருத்துவமனைகள் துவக்கப்பட இருக்கிறன்றன. அதே போல,
திருச்சி ராஜாஜி மருத்துவமனையில் 50 படுக்கைகள் கொண்ட
புதிய பிரிவு கட்டுவதற்கும், ராணிப்பேட்டையில் 50 படுக்கைகள்
கொண்ட மருத்துவமனை கட்டுவதற்கும் இந்த ஆண்டு திட்ட
மிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே
போல, புதுடில்லியில் தொழிலாளர் காப்புறுதி திட்டத்தின் கீழ்
ஒப்புறுதி எதிர்பார்த்து மேற்படி வேலைகள் எல்லாம் துவக்கப்
பட இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒப்பந்தத் தொழிலாளர்கள் நிரந்தரப்படுத்தப்பட வேண்டு
மென்று நாம் கோரினாலும், ஒப்பந்தத் தொழிலாளர்கள் வைத்
துக் கொள்ளக் கூடாது என்றுதான் சட்டம் இருக்கிறதே தவிர,
அந்தத் தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளவேண்டு
மென்று சட்டம் இல்லாத காரணத்தால், அதற்கான புதிய
சட்டத்தை கொண்டுவர வேண்டுமென்று அரசு ஆய்வு செய்து
கொண்டிருக்கிறது. அதைப் போல வீட்டு வாடகைப்படிக்கான
ஒரு சட்டத்தையும், தொழிலாளர் பாதுகாப்புக்கான
சட்டத்தையும், ஆக இந்த மூன்று சட்டங்களையும் கொண்டு வர
அரசு ஆய்வு செய்துகொண்டு இருக்கிறது என்பதை நான் தெரி
வித்துக் கொள்கிறேன்.

இன்னும் இந்தத் தொழிலாளர் நலத்துறையின் சார்பாக,
தொழிலாளர் நல வாரியத்தின் முலம் தொழிலாளர் நலக் கல்வியும்
இன்றைக்கு போதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தொழி
லாளர் நல வாரியத்தின் சார்பாக அவர்களுக்கு பல்வேறு நன்மை
களைச் செய்து கொண்டிருந்தாலும், தொழிலாளர்கள் கோடை
நாட்களில் கோடை விடுமுறையில் சென்று தங்குவதற்கான பல்
வேறு இடங்களில் இல்லங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டு
இருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

17-45 மணி

அந்த வகையில் இந்த வருடம் 3 இடங்களில் புதிய இல்லங்
களை அமைக்க இருக்கிறோம் என்பதை நான் மிகப் பெருமை
யோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து தொழிலாளர் நல வாரியத்தின் நலப் பணிகள், ஊட்டி,
கொடைக்கானல், இராமேஸ்வரம் போன்ற இடங்களில் விடு
முறை இல்லங்களைக் கட்டுதல்; வேலூர், மதுரை போன்ற
இடங்களில் அரசு மருத்துவமனைகளில் தொழிலாள்ர்களுக்குக்
காசநோய்ப் பகுதிகளைக் கட்டுதல்; கோடை நாட்களில் தொழி
லாளாகள் தங்குவதற்கு மட்டுமல்லாமல், இன்றைக்கு பீடி
சுற்றும் தொழிலாளர்கள் எல்லாம் காச நோயால் பாதிக்கப்
படுகிறார்கள். அவர்களுக்கு எல்லாம் நல்லது செய்ய வேண்டு



1990 ஏப்ரல் 12] [திரு. கே. என். நேரு]

மென்ற ஒரு நோக்கத்தோடு ஒவ்வொரு மருத்துவமனையிலும்
தொழிலாளர் நல வாரியத்தின் சார்பாக 10, 15 படுக்கைகள்
கொண்ட ஆஸ்பத்திரி கட்டுவதற்கும் இந்தத் தொழிலாளர் நல
வாரியம் ஏற்பாடு செய்திருக்கிறது. தொழிலாளர் நல வாரி
யத்தின் சார்பாக பி.எல்.எம். என்றும் எம்.எல். எம். என்றும்
படிப்புகள் சொல்லித் தரப்பட்டு இன்றைக்கு 189 மாணவர்கள்
கற்றுத் தேறி இந்த வருடம் வர இருக்கிறார்கள். தொழி
லாளர் துறையிலே அவர்களுக்கு முன்னுரிமையும், வேலையில்
முன்னுரிமையும் வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்
கொள்கிறேன்.

தொழிலாளர் துறையின் சார்பாக கருத்துக்கள் எடுக்கப்
பட்டன. மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் அவர்
களும், திரு. கோவிந்தசாமி அவர்களும் தீர்ப்பு அளிக்கப்பட்ட
பிறகும் கூட அதை நிறைவேற்றுவதில் அரசு அதிகாரிகள்
கொஞ்சம் தயக்கம் காட்டுகிறார்கள் என்று சொன்னார்கள்.
உள்ளபடியே நானும் காலையிலே அதிகாரிகளைச் சந்தித்துப் பேசி
இருக்கிறேன். நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்த
ராஜன் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வதெல்லாம் தோழமைக்
கட்சியின் சார்பாக இந்த நேரத்தில் கூட எடுத்து வைக்கப்படக்
கூடிய கருத்துகளை, அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்ற
ஆர்வத்தின் காரணமாக நீங்கள் எடுத்துச் சொன்னாலும் அதே
ஆர்வத்தின் காரணமாக நானும் அதிகாரிகளுடன் கலந்து உடனடி
யாகச் செய்ய வேண்டும் என்று சொன்னாலும் சட்டத்தில் இருக்
கிற ஒரு சில இடர்பாடுகளை வைத்துக் கொண்டு தொழில்
அதிபர்கள் தப்பித்துக் கொண்டு இருக்கிறார்கள். எனவே
நிச்சயமாக உங்களுடைய உணர்வுகளிலே ஒரு துளி அளவும்
கூட நாங்களும் குறைந்தவர்கள் அல்ல தொழிலாளர்களின்
நலத்தில் என்பதைத் தெள்ளத் தெளிவாக நான் எடுத்துச்
சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.).

அடுத்து எழுதுபொருள் அச்சுத்துறையின் சார்பாக பல்வேறு
இடங்களில் உள்ள பல்வேறு பிரச்சினைகள் பற்றி எல்லாம் ஓரிரு
உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். எழுதுபொருள்
அச்சுத் துறையின் சார்பாக 8 அச்சுத் துறைகள் இருக்கின்றன.
அதில் 5,000-க்கு மேற்பட்டவர்கள் பணியாற்றுகிறார்கள். அப்
படி 5,000-க்கும் மேற்பட்டவர்கள் பணிபுரிந்தாலும் சென்னை
யில் மட்டும் தான் 3,700-க்கு மேற்பட்ட பணியாளர்கள் பணி
புரிந்து கொண்டு இருக்கிறார்கள். சூளையில் இருக்கின்ற அச்ச
கம் மிகப் பழமையாக இருக்கின்ற காரணத்தால் அந்த அச்ச
கத்தைப் புதுமையாக்கவும் அந்தச் சூளையில் இருக்கின்ற இடத்
தைத் திரும்பவும் கிண்டியில் இருக்கிற இண்டஸ்ட்ரியல் எஸ்
டேட்டுக்குக் கொண்டு வரவும் இந்த ஆண்டு திட்டமிடப்பட்டு
உள்ளது. அதே போல் திருச்சியில் 20 இலட்சம் ரூபாய் செலவில்
கட்டப்பட்ட புதிய கட்டடத்திலே அந்த அச்சகத்தை நிறுவவும்

[திரு. கே. என். நேரு] [1990 ஏப்ரல் 12

இந்தத் துறையின் சார்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்
பட்டிருக்கின்றன. அதோடு மட்டுமல்லாமல் பணியாளர்களுக்
காக சென்னை, தண்டையார்பேட்டையில் உள்ள 300 குடி
யிருப்புகளுக்கு மேலும் வசதிகள் செய்ய இந்தத் துறையின்
சார்பாகத் திட்டமிடப்பட்டுள்ளது.

அடுத்து இங்கே வெகுநாட்களாக தொழிலாளர்களால்
கோரிக்கை எழுப்பப்பட்டு இதுவரையில் தீர்க்கப்படாமல் இருந்த
சீருடைப் பிரச்சினைகள் தீர்க்கப்பட இருக்கின்றன. அதாவது
அச்சகத் தொழிலாளர்கள் 1,728 பேர்களுக்கு மட்டும் சீருடை
கொடுக்கப்பட்டிருந்தது. மீதம் இருந்த 3,285 பேர்களுக்கும்
இந்த வருடம் சீருடை வழங்கப்படும் என்பதை நான் மகிழ்ச்சி
யுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து வேலைவாய்ப்புத் துறையைப் பற்றி இங்கே பல்வேறு
உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அந்தக்
கட்டடத்தை எல்லாம் இடித்து விட வேண்டும் என்று கூட
மாண்புமிகு உறுப்பினர் திரு டி. கே. பழனிச்சாமி அவர்கள்
தெரிவித்தார்கள் இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு தமிழ்
நாட்டிலே அரசு அமைந்ததிலிருந்து கலைஞர் அவர்களைத் தவிர
இந்த வேலை வாய்ப்புத் துறையையும், தொழிலாளர் நலத்
துறையையும் பற்றி எண்ணிப்பார்த்தவர்கள் யாரும் இல்லை
என்பதை மிகத் தெள்ளத் தெளிவாக நான் எடுத்துச் சொல்ல
வேண்டும். அப்படி ஆங்காங்கு வாடகைக் கட்டிடங்களில் இரு
கின்ற காரணத்தால் இன்றைக்குத் தமிழ்நாட்டில் இருக்கின்ற
வேலைவாய்ப்பு அலுவலகங்கள் அத்தனையும் சொந்தக் கட்டிடத்
தில் இயங்க வேண்டும் என்று திட்டமிட்டு இந்த ஆண்டு 5 இடங்
களில் அந்தக் கட்டிடங்கள் கட்டப்பட இருக்கின்றன என்பதை
நான் மிக மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் தொழிலாளர் நலத்துறைக்கென்று இதுவரையில்
கட்டட வசதி இல்லை. இந்த ஆண்டு மாண்புமிகு முதல்வர்
அவர்கள் கோவையிலும், திருச்சியிலும், மதுரையிலும் தொழி
லாளர் நலத்துறைக்கு என புதிய கட்டடங்கள் கட்டப்பட இருக்
கின்றன என்றும் அதேபோல் இந்த ஆய்வகத் துறையினரும் இன்
றைக்குத் தொழிலாளர் துறை அதிகாரிகளும் மிகவும் நல்ல முறை
யில் பணியாற்றுவதற்காக அவர்களுக்கு வாகன வசதியும் இந்த
ஆண்டு செய்து தருவதாக முதலமைச்சர் அவர்கள் உறுதியளித்து
இருக்கிறார்கள் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்
கொள்கிறேன். இப்படி வேலைவாய்ப்புத் துறையிலே 30 இலட்
சத்திற்கு மேற்பட்டவர்கள் காத்திருக்கிறார்கள். அவர்கள்
கிராமப் பணியாளர்கள் என்று நீங்கள் எடுக்கலாமே என்று
திரு. ராமசுப்பு அவர்கள் கேட்டார்கள். கிராமப் பணியாளர்களை
என்று எடுக்கும்போது அந்தந்தப் பகுதியில் இருக்கும் 5 மைல்
சுற்றளவில் இருக்கின்றவர்கள் வேண்டும்.



1990 ஏப்ரல் 12] [திரு. கே. என். நேரு]

17-50 மணி

அப்படி அந்த அளவிலே கிடைக்காது என்ற காரணத்தால்
தான் நேரடியாக கிராமங்களில் எடுக்கவேண்டும். எப்படி நீங்கள
கிராம சேவக் எடுத்தீர்களோ, எப்படி கடந்த ஆட்சியில்
சத்துணவுப் பணியாளர்களை எடுத்தீர்களோ, அதே வழியில்தான்
நாங்கள் கிராமப் பணியாளர்களை எடுக்கிறோமே தவிர, நீங்கள்
காட்டிய வழியில்தான் நாங்கள் போகிறோமே தவிர, வேறு
புதிய வழியில் நாங்கள் போகவில்லையென்பதைத் தெள்ளத்
தெளிவாகத் தெரிவித்துக் கொளகிறேன்.

அதேபோல், படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்ற
இளைஞர்களுக்கு இதுவரை தந்த உதவித் தொகையை இரட்டிப்
பாக்கித் தந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். பட்டதாரி
களுக்கு ரூபாய் 100 என்று இருந்ததை, ரூபாய் 200 ஆகவும்,
பிளஸ் டூ படித்தவர்களுக்கு ரூபாய 75 என்று இருந்ததை ரூபாய்
150 ஆகவும், ஏனையோருக்கு ரூபாய் 50 என்று இருந்ததை
ரூபாய் 100 ஆகவும், 5 ஆண்டுகளுக்கு வழங்க உத்தரவிடப்
பட்டுள்ளது.

அதேபோல், தொழில் பயிற்சி நிலையங்களைப் பற்றி எல்லாம்
சொன்னார்கள். தொழில் பயிற்சி நிலைய மாணவர்களுடைய
பிரச்சினை, அங்கு வேலை செய்கிற ஆசிரியர்களுடைய பிரச்சனை
களை எல்லாம் தீர்க்க வேண்டுமென்று சொன்னார்கள். அவர்
களுடைய கோரிக்கைகள் மிகப் பரிவோடு கவனிக்கப்பட்டு
நிச்சயமாக அவையெல்லாம் நிறைவேற்றப்படும் என்று தெரி
வித்துக் கொள்கிறேன்.

தொழில் துறையைப் பொறுத்தவரையில், இன்றைக்கு 44
இடங்களிலே அரசாங்கத் தொழில் பயிற்சி நிலையத்தில் 1 வருடத்
திற்கு 16,000-க்கு மேற்பட்ட மாணவர்களைத் தயார் செய்கி
றோம். அரசாங்கத்தின் இந்த 44 தொழிற் பயிற்சி நிலையங்
களில் மட்டும் அல்லாமல், தனியார் நடத்துகின்ற தொழில்
பயிற்சி நிலையங்களிலும், அரசாங்கம் 50 சதவீத மாணவர்
களைச் சேர்க்கும் என்ற ஒரு புதிய சட்டத்தையே இந்த வருடம்
கொண்டு வந்திருக்கிறோம். நிச்சயமாகத் தனியாருக்கு, தொழில்
பயிற்சி நிலையம் தொடங்க அனுமதி இல்லையென்பதையும்
இந்த வருடம் சட்டமாகக் கொண்டு வந்திருக்கிறோம்.

மேலும் பெண்களுக்கு இந்த ஆண்டு 5 இடங்களிலே புதிய
ஐ.டி.ஐ. தொடங்கப்பட இருக்கின்றது. அதோடு மட்டுமல்ல,
ரூபாய் 10½ கோடி மைய அரசு உதவியுடன், ரூபாய் 10½
கோடி மாநில அரசு உதவியுடன், 16 பழைய ஐ.டி.ஐ-களில்
இருக்கின்ற பொருள்களை எல்லாம் எடுத்து நவீனப்படுத்துகின்ற
ஒரு பணியையும் இந்த ஆண்டு செய்கின்றோம். அதோடு மட்டு

[திரு. கே. என். நேரு] [1990 ஏப்ரல் 12

மல்ல, நாளுக்கு நாள் வளருகின்ற விஞ்ஞானத் தேவைக்கு ஏற்ப
இந்த வருடம் ஐ.டி.ஐ.-யிலே கம்ப்யூட்டர் டிரேட் என்றும்
கெமிக்கல் டிரேட் என்றும் புதிதாக அறிமுகப்படுத்துகிறோம்.

விருதுநகரிலும், ஈரோட்டிலும் இருக்கின்ற ஐ.டி.ஐ.-யிலே
குடிநீருக்காக ரூபாய் 2 இலட்சம் செலவில் மோட்டார்கள்
பொருத்தி ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க இருக்கின்றோம் என்
பதையும் மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துறையில்தான் 1973-வது ஆண்டு நடத்தப்பட்ட
மின் கம்மியர் தேர்வு அதன் பிறகு நடத்தப்படவே இல்லை.
இந்த ஆண்டு மின் கம்மியர் தேர்வு நடத்தப்பட இருக்கிறது
என்பதையும் மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு உறுப்பினர்கள் எல்லாம் வேலை வாய்ப்பகத்தில்
இலட்சக் கணக்கான பேர்கள் காத்திருக்கிறார்கள் என்று சொன்
னார்கள். இதுவரை பட்டதாரி ஆதிதிராவிடர்களுக்கு
1982-ஆம் ஆண்டு வரை கார்டுகள் அனுப்பியிருக்கிறோம். அதே
போல், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 1979-ஆம் ஆண்டு வரை
அனுப்பிக் கொண்டிருக்கிறோம். மோஸ்ட் பாக்வார்ட் கிளாஸ்
பிரிவினருக்கு 1980-ஆம் ஆண்டு வரை கார்டுகள் அனுப்பிக்
கொண்டிருக்கிறோம். மற்றவர்களுக்கெல்லாம் 1981-ஆம் ஆண்டு
வரை அனுப்பிக்கொண்டிருக்கிறோம். எஸ். எஸ். எல். சி. படித்
தவர்களுக்கு 1977-ஆவது ஆண்டுவரை பதிவு செய்தவர்களுக்கும்,
பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்
களுக்கும் மற்றவர்களுக்கும் 1976-ஆம் ஆண்டு வரை பதிவு
செய்தவர்களுக்கும் இன்றைக்குக் கார்டுகள் அனுப்பப்பட்டுக்
கொண்டிருக்கின்றன. எஸ். எஸ். எல். சி.-க்குக் கீழ், 8-ஆவது
வரை படித்தவர்களுக்கு, 1977-ஆவது ஆண்டு வரை பதிவு செய்
தவர்களுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறோம். 8-ஆவது வகுப்புக்
கீழ் 1980-ஆம் ஆண்டு வரை பதிவு செய்தவர்களுக்கு அனுப்பிக்
கொண்டிருக்கிறோம் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு நான்
தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மேலும், பால் வளத் துறையைப் பற்றிப் பல்வேறு உறுப்
பினர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். பால்வளத் துறை
யிலே பல்வேறு குறைபாடுகள் நடக்கின்றன. பால்வளச் சங்கத்
திலே கட்சிக்காரர்களையே நியமிக்கிறார்கள், அதை எடுக்க
வேண்டும், பால் உற்பத்தியாளர் சங்கம் எல்லாம் நசித்து விட்ச்
செய்தோம் என்று சொன்னார்கள். இல்லை. நாங்கள் செயல்
பட்டதன் காரணமாக, நாள் ஒன்றுக்கு 1.75 இலட்சம் லிட்டர்
பால் அதிகமாகி இருக்கிறதே தவிர, எந்த இடத்திலும் குறைய
வில்லையென்பதை நான் மிக்கப் பெருமையோடு தெரிவித்துக்
கொள்கிறேன்.



1990 ஏப்ரல் 12] [திரு. கே. என் நேரு]

அதோடு மட்டமல்ல, நீங்கள் இன்றைக்கு, கட்சிக்காரர்களை
இதிலே இணைக்கிறீர்களே, நியாயமா, இறந்தவர்களை எல்லாம்
இணைக்கிறீர்களே, நியாயமா என்று கேட்கிறீர்கள், எத்தனை
சங்கம் 140 உறுப்பினர்கள் என்று வைத்துக் கொண்டு, ஓட்டுப்
போடுபவர்கள் 7 பேர்கள் என்று வைத்து இருந்தார்கள்? கணக்
குத் தரட்டுமா எத்தனை மாவட்டங்களில் என்று? மொத்த
உறுப்பினர்கள் 400 பேர்கள் இருப்பார்கள், ஆனால் ஓட்டளிக்
கின்ற உரிமை மட்டும் 4 பேர்களுக்கு, 5 பேர்களுக்கு என்று ஒரு
தனிப்பட்ட சொத்தாக இருந்ததை மாற்றி, அத்தனை மக்களும்
அதில் உறுப்பினராக வேண்டுமென்ற எண்ணத்தில்தான் (மேசை
யைத் தட்டும் ஒலி) இன்றைக்கு உற்பத்தியாளர்களாகச் சேர்க்கப்
பட்டிருக்கிறார்கள்.

17-55 மணி

இன்றைக்கும் அரசு சட்டத்தை மீறவில்லை. 120 நாள் பால்
ஊற்றியிருக்க வேண்டும் அல்லது 300 லிட்டர் பால் தந்திருக்க
வேண்டும். அவர்கள்தான் தேர்தலிலே நிற்க முடியும் என்ற
ஒரு சட்டத்தையும் இன்றைக்கு வைத்திருக்கிறோம். எல்லோ
ரும் தேர்தலிலே நிற்க முடியாது என்ற அளவிலே அதை நாங்கள்
செய்திருக்கிறோம் என்பதை மிகப் பெருமையோடு நான் தெரிவித்
துக்கொள்கிறேன்.

மூன்றாவது பால் பெருக்கத் திட்டம் என்ற அளவிலே
கடந்த ஆண்டு சட்டமன்றத்திலே நாங்கள் அறிவித்தோம்.
மூன்றாவது பால் பெருக்கத் திட்டம் தமிழ்நாட்டிலே அமல்
படுத்தப்படுமானால் அதனுடையமுடிவுகாலத்திலே மூன்றுஇலட்சம்
லிட்டர் பால் உற்பத்தியாக இருப்பதை 27 இலட்சம் லிட்டராக
உயர்த்துவோம் என்று சொன்னோம். தேசிய பால் வள நிறுவனம்
அதற்கு ஒப்புதல் அளித்து முதல் முறையாக ஈரோட்டிலே இந்த
ஆண்டு 30 டன் பால் பவுடர் பண்ணை ஆலை அமைக்கவும்
அதைப்போலவே சென்னை அருகில் சோளிங்கநல்லூரில் கடந்த
ஆண்டு அறிவித்தோமே அந்த பால் பண்ணையை இந்த ஆண்டு
நிறுவவும், அம்பத்தூரில் 3 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தியை
4 இலட்சம் லிட்டராக உயர்த்தவும், சேலத்தில் இருக்கிற 2
இலட்சம் லிட்டர் பால் கொள்ளளவை 3 இலட்சம் லிட்டராக
உயர்த்தவும், மதுரையில் இருக்கிற 1.5 இலட்சம் லிட்டர் பால்
பண்ணையை 2 இலட்சம் லிட்டராக உயர்த்தவும், திருச்சியில்
ஒரு 10 டன் பவுடர் பிளான்டை அமைக்கவும் என்.டி.டி.பி.
அப்ருவல் தந்திருக்கிறது. அதை எல்லாம் இந்த ஆண்டு முதல்
ஆரம்பிக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல தேசிய பால் வள நிறுவனம் அல்லது என்.சி.
டி.சி. மூலம் திருநெல்வேலியில் இருக்கிற பால்பண்ணையை
விரிவு படுத்தவும்; அதைப்போல ஸ்ரீவில்லிபுத்தூரிலே புதிதாக
ஒரு பால் பண்ணையை உருவாக்கவும் முடிவு செய்திருக்கிறோம்.
அது மட்டுமல்ல. ஸ்ரீவில்லிபுத்தூரில்—காமராஜ் மாவட்டத்தில்

[திரு. கே. என் நேரு] [1990 ஏப்ரல் 12

25,000 லிட்டர் உள்ள 'பிராஸசிங் யூனிட்'
செங்கை—அண்ணா மாவட்டத்தில் காக்கனூரில் 50,000 லிட்டர்
கொள்ளளவுள்ள 'பிராஸஸிங் யூனிட்', ஒன்றையும்
சென்டர்' போன்ற பல்வேறு திட்டங்களையும், 'சில்லிங்
வதாக ஏற்கெனவே அறிவித்ததை எல்லாம் இந்த ஆண்டு நிறை
வேற்ற இருக்கிறோம்.

அதோடு தேசிய பால் வள நிறுவனம், என்.சி.டி.சி. மூலம்
செய்யப்படுவதைத் தவிர இன்றைக்கு பால் பண்ணை அமைப்ப
தில் அங்காங்கே கிராமமக்கள் ஆர்வமாகப் பங்கேற்கிற
காரணத்தால் கடந்த ஆண்டு சொன்னோமே 1,000 சங்கங்களை
உருவாக்குவோம் என்று, அதிலே கிட்டத்தட்ட 900 சங்கங்களை
உருவாக்கியிருக்கிறோம். இந்த ஆண்டும் 1,000 சங்கங்களை
உருவாக்க வேண்டும் என்பதைக் கொள்கை அளவில் ஏற்று முடிவு
செய்யப்பட்டிருக்கிறது. இப்படிச் சங்கங்களை உருவாக்கி, ஆங்
காங்கே இருக்கிற விவசாயிகளுடைய பாலை உடனுக்குடன்
எடுத்து, பதப்படுத்தி வைக்க சில்லிங் சென்டர் ஏற்படுத்த
வேண்டுமென்று கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்
கிறது.

தற்போது பால் உற்பத்தியாளர் சங்கத்திலே மீதப்படுத்தப்
படும் பணத்தை எல்லாம் பல்வேறு வங்கிகளிலே போட்டிருக்
கிறார்கள். அந்த வட்டி அவர்களுக்குக் கிடைப்பதைவிட ஓரளவு
அதிகமாக வட்டி தந்து, அந்தப் பணத்தை எல்லாம் இணையத்
தில் வாங்கி, இணையத்தின் மூலமாக நேரடியாக சில்லிங்
சென்டர், பிராஸஸிங் யூனிட் எல்லாம் ஏற்படுத்துவதற்கான
ஒரு கொள்கையை இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்
பதைத் தெள்ளத்தெளிவாக எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

மேலும் இன்று காலையில் திரு. பூவராகன் அவர்கள் சொன்
னார்கள். தமிழ்நாட்டிலிருந்து தயாரிக்கப்படுகிற பொருள்களைக்
கல்கத்தாவில் விற்றுக்கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு பொருள்
களை விற்றுக்கொண்டிருக்கிறார்கள், இந்த ஆண்டு எவ்வளவு
விற்கிறார்கள், அதனுடைய தரத்தை நீங்கள் நிர்ணயிக்க வேண்டு
மென்று சொன்னார்கள். இன்றைக்கு கல்கத்தாவிலே மட்டு
மல்ல. கேரளா, கர்நாடகா, மகாராஷ்டிரா, குஜராத், டெல்லி,
ராஜஸ்தான், பீகார், அஸ்ஸாம் போன்ற அத்தனை மாநிலங்
களிலும் நமது இணையத்தினுடைய 'ப்ராஞ்ச்'கள் திறக்கப்
பட்டு அங்கே பொருள்கள் விற்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

கடந்த ஆண்டு 8,500 டன் பவுடர் விற்றிருக்கிறோம்.
அதைப் போல 3,000 டன் நெய்யும் 20 டன் சீசும் உற்பத்தி
செய்து விற்றிருக்கிறோம். இதை எல்லாம் விட கல்கத்தாவிலே
இன்றைக்கு மேற்குவங்க அரசாங்கத்திற்கும் நமக்கும் ஒரு புதிய
ஒப்பந்தம் ஏற்படுவது பற்றி பேச்சுவார்த்தை நடந்துகொண்டி



1990 ஏப்ரல் 12] [திரு. கே. என். நேரு]

ருக்கிறது. தினந்தோறும் 40,000லிட்டர் பால் எடுத்துக்கொள்
வதென பேச்சுவார்த்தையிலே இருந்துகொண்டிருக்கிறது. அதை
யும் முடிவு செய்தால் தமிழ்நாட்டிலிருந்து கல்கத்தாவுக்கு
தினந்தோறும் 40,000 லிட்டர் பால் அனுப்பும் நிலைமை இருக்
கிறது என்பதை எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

18-00 மணி

மேற்கொண்டு பல்வேறு உறுப்பினர்கள், பல்வேறு பிரச்சினை
களைப் பற்றியெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்
கள். உங்களுடைய கருத்துக்களையெல்லாம் ஏற்றுக்கொண்டு,
நல்ல கருத்துக்களை நிறைவேற்றுவோம். எங்களால் முடிந்த
அளவு, உங்களுடைய கருத்துக்களை ஏற்றுக்கொண்டு நிறை
வேற்றுவோம் என்ற உறுதியைக் கூறி, நீங்கள் தந்திருக்கின்ற
வெட்டுப் பிரேரணைகளை நீக்கி, அரசுக்குத் தரவேண்டிய
மானியக் கோரிக்கையைத் தருமாறு கேட்டு, அமைகிறேன்.
வணக்கம்.

*திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நல
அமைச்சர் அவர்கள், தனக்கு இருக்கின்ற கடுமையான ஜுரத்தை
யும் பொருட்படுத்தாது, அதைச் சமாளித்துக் கொண்டு, இந்த
மானியக் கோரிக்கைகளில் கலந்துகொண்டு, தன்னுடைய கருத்
துக்களை இங்கே வெளியிட்டதற்கு, நான் அவரைப் பாராட்டு
கிறேன்.

ஆனால் ஒன்று, அவர் இங்கே கூறும்போது, மக்கள் நலப்
பணியாளர்களை எடுக்கும்போது, கடந்த ஆட்சி நடந்துவந்த
பாதையைத்தான் நாங்கள் பின்பற்றுவோம் என்றார், தயவு
செய்து, அந்தப் பாதையைப் பின்பற்ற வேண்டாம் என்று கேட்டுக்
கொண்டு, வடலூர் சேஷசாயி நிறுவனத்தில். லே-ஆப் கொடுத்
திருப்பதைப் பற்றி, ஏற்கனவே சட்டமன்றக் கூட்டத்திலே,
ஜனவரி மாதம் 25 ஆம் தேதி, அமைச்சர் அவர்கள், தொழிலாளர்
பக்கம்தான் இந்த அரசு இருக்கும் என்றும் லே-ஆப் இருக்காமல்
பார்த்துக் கொள்வோம் என்றும் கூறினார்கள். அதற்குப் பிறகு,
லே-ஆப் வந்தது. அதைச் சட்டபூர்வமாக சமாளிப்பதற்கு
கோர்ட்டிலே நான் வழக்காடினேன். லே-ஆப் கொடுப்பதற்கு
சட்ட விரோதமாகவும் அவசர அவரசமாகவும் அனுமதி தந்த
அதிகாரி—அதே அதிகாரி முன்னால் அந்த வழக்கை நான் நிரூ
பித்து, ''லே-ஆப் தேவையில்லை; இது சட்டவிரோதம்; பொரு
ளாதார நிலைமையும் அப்படி இல்லை; அவர்கள் 2 கோடி
ரூபாய் கடனுக்கு, $1\frac{1}{2}$ கோடி ரூபாய் வட்டியாகக் காட்டுகிறார்
கள்'' என்ற விவரங்களை எல்லாம் கொடுத்தும், பேலன்ஸ்-ஷீட்
டையெல்லாம் படிக்காமலேயே நீங்கள் அனுமதி வழங்கியிருக்
கிறீர்கள் என்று சொல்லிய பிறகும்கூட, அதற்குப் பிறகு, நம்

[திரு. சி. கோவிந்தராஜன்] [1990 ஏப்ரல் 12

முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பட்ஜெட் உரையிலே சென்ற மாதம் 28-ஆம் தேதி அன்று, பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடிய அந்த லே-ஆப்பை அகற்றுவதற்கு முயற்சி செய்வோம் என்று உறுதி கொடுத்த பிறகும்கூட, எந்த சட்டம் குறுக்கே நிற்கிறது ? ஏன் அந்த லே-ஆப் நீக்கப்படாமல், இன்றையதினம் வரை நீடிக் கிறது ? அங்கு உண்ணாவிரதமும், பல்வேறு கிளர்ச்சிகளும் நடக்கக்கூடிய நிலைமைகள் இன்னும் தொடர்கின்றன ? இப் பொழுதாவது அந்த லே-ஆப்-ஐ, நீக்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன். சட்டப்படி அமைக்கப்பட்ட வழக்கு மன்றத்தில்கூட நான் வாதாடி. இருக்கும்போது, சட்ட விரோதம் என்று நிருபித்து, கம்பெனி நிர்வாகம் பதில் சொல்லவே முடியாத நிலைமை இருக்கும்போது அந்த தீர்ப்பையாவது வழங்கி, இந்தச் சமயத்திலே ஒரு நல்ல அறிவிப்பினை நீங்கள் கொடுக்கக்கூடிய அளவிற்கு வந்திருக்கலாம் அல்லவா ? அதையாவது இப்போது உடனடியாகச் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடு செய்வீர்களா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் அவர்கள், இதை அவசரகால வினாவாகவும், அதன் பிறகு கட் மோஷனாகவும் தந்து, அதற்கான விளக்கமாக பதிலையும் தந்திருக்கிறோம், மேலும், யார், எந்த அதிகாரி, லே-ஆப் தருவதற்கு அனுமதி அளித்தாரோ, அதே அதிகாரியிடம் நீங்கள் வாதாடி இருக்கிறீர்கள். உங்களுடைய கருத்துக்களை எடுத்துச்சொல்லியிருக்கிறீர்கள். அதனுடைய தீர்ப்பு வரவில்லை. தீர்ப்பு வந்தபிறகு, நிச்சயமாக, விரைவாக, ஏற்கனவே மாண்பு மிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த உறுதிமொழியின்படி, நடத் தப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புகளூர் காகித ஆலை, தொழிலாளர்கள் 1ஆம் தேதியிலிருந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார் கள்; நிர்வாகம் கதவடைப்பு செய்திருக்கிறது என்று இன்று காலையில் நான் சொன்ன நேரத்தில், அது அரசு நிறுவனமாக இருக்கிற காரணத்தால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அங்கு பேச்சுவார்த்தையிலே ஈடுபட்டிருக்கிறோம் என்ற அறிவிப்பினைத் தந்தார். முதலமைச்சர் அவர்களுப் இந்த மன்றத்திலே இப்போது இருக்கிற காரணத்தினால், அதை யொட்டி ஏதாவது முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதா என்பதை யும், புகளூர் காகித ஆலை தொடர்ந்து நடைபெறுவதற்கு ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறதா என்பதையும், அந்த ஸ்டிரைக் தீர்ந்துவிட்டதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.



1990 ஏப்ரல் 12]

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. மோகன் அவர்கள், தினமும் என்னைச் சந்திக்கும் போதெல்லாம், மூடிய மில்களைத் திறக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்து. இன்றைக்கு திருச்சி மாவட்டத்திலுள்ள, புகளூர் காகித ஆலைக்கு வந்திருக்கிறார்கள். நேற்றைய முன்தினம், அதனுடைய மேனேஜிங் டைரக்டர் அவர் கள் திருச்சியிலிருந்து வந்திருந்தார். அவரைச் சந்தித்து பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டன. அதனுடைய தொழிற் சங்கத் தலைவர் திரு. டி. பி. மூர்த்தி அவர்களைச் சந்தித்தும் பேசியிருக்கிறோம். சுமுகமான நிலை ஏற்படும் . விரைவில் அந்த மில் திறக்கப்படும்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் வரையில், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய உழைக்கும் பெண்களைப் பற்றி, ஒரு வார்த்தைகூடக் கூறவில்லை. உழைக்கும் பெண்களைப் பற்றி கூறவில்லை என்பது மட்டுமல்ல. அவர்களின் பிரச்சினைகளைத் தொட்டுக்கூடப் பார்க்கவில்லை என்பதை நான் இங்கே தெரி வித்துக்கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்ல. பீடித்தொழிலில் இருக்கக்கூடிய பெண்களுக்கு. இரண்டு அதிகாரிகளைப் போட்டு விட்டோம்; அதைச் செய்ய விட்டோம்; இதைச் செய்து விட்டோம் என்ற 'நாகாசு' வேலை பயன்படாது. ஒரு வருடமாக இந்த பீடி தொழிலாளிப் பெண்களுக்கு பாஸ் புத்தகம் கொடுக்க வேண்டுமென்று நான் வாதாடிக் கொண்டிருக்கிறேன். அது நிச்சயமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பது எனக்குத் தெரிய வேண்டும். அதுமாதிரி உழைக்கும் பெண்களுக்கு ஓய்வறை குழந்தைகளுக்கு காப்பகம் போன்றவை பல இடங்களில் ஏற்படுத்தப்படவில்லையாதலால் அவை பற்றி அமைச்சர் அவர் கள் கருத்துக் கூறுவதோடு, குழந்தைத் தொழிலாளர்களுக்கு கல்வி பயில ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென்றும் சொல்லி யிருந்தேன். சிவகாசியில் ஒன்றிரண்டு இடங்களில் மட்டும் அதற்கு வசதி செய்யப்பட்டிருப்பதால் கட்டாயம் அதை தமிழகத்தி லுள்ள எல்லா இடங்களிலும் ஏற்படுத்த வேண்டும். இவற்றைப் பற்றி எல்லாம் அமைச்சர் அவர்கள் என்ன கூறுகிறார்கள் ?

18-05 மணி

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே கூறியிருக் கிறேன். உறுப்பினர்கள் சொல்லும் நல்ல கருத்துக்களை இந்த அரசு ஏற்றுக்கொண்டு செயல்படும். பெண்களைப் பற்றிப் பேச வில்லையென்றார்கள். பெண்களைப் பற்றி பேசவில்லையென்று சொன்னால், பீடித் தொழிலில் அதிகமாக பெண்கள் ஈடுபட் டிருக்கிற காரணத்தால் அவர்களின் நலனுக்காக அதிகமாக

[திரு. கே. என். நேரு] [1990 ஏப்ரல் 12

2 பெண் தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களே,
அவர்கள் பெண்கள் இல்லையா ? (சிரிப்பு). அதுபோல குழந்தை
களுக்குக் காப்பகம் என்பது பற்றியும் சொல்லியிருக்கிறார்கள்.
உறுப்பினருடைய கருத்துக்களை ஏற்று, எவ்வாறு சிறப்பாகச்
செயல்பட முடியும் என்பதைப் பார்த்துச் செயல்படுத்துவோம்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்
கள் வேலை வாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்திருப்பவர்
களுக்கு ஆண்டுவாரியாக அளிக்கப்படுகின்ற வேலை வாய்ப்புப்
பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். இதே மானியத்தின் மீது
சென்ற ஆண்டு, அப்போது தொழிலாளர் நல அமைச்சராக
இருந்த மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள்
பேசும்போது ஓர் உறுதிமொழியை அளித்திருக்கிறார்கள்.
வது வேலைவாய்ப்பில் 30 வயதைக் கடந்து விடுகிறவர்களுக்கு
முன்னுரிமை வழங்குவோம் என்று அரசின் சார்பில் உறுதிமொழி
தந்திருக்கிறார்கள். அந்த உறுதிமொழியைக் காப்பாற்றியிருக்
கிறார்களா ? அது எந்த அளவு நிறைவேற்றப்பட்டிருக்கிறது
என்பதை மாண்புமிகு அமைச்சர் மூலம் தெரிந்துகொள்ள விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு.
ஸ்டாலின் அவர்கள் 28 வயதாக இருந்ததை 30 ஆண்டுகளாக
உயர்த்த வேண்டுமென்று கேட்டதையொட்டி 30 வருடமாக அது
உயர்ந்தது. அதைத் தவிர வேலைவாய்ப்பு என்று வரும்போது, 30
வயதைத் தாண்டி ஒரு 3 மாதம் அல்லது 6 மாதம் வயது அதிக
மாகப் போகிறவர்களைக் கூட அனுமதிக்கலாம் என்பதற்கான
அனுமதியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்துள்ளார்கள்
என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள தாய்மார்களைப்
பொறுத்தவரையில் அவர்கள் இன்றையதினம் மிகவும்
நல்லமுறையிலும், சிறந்த முறையிலும் தொழில் செய்ய
முன்வந்திருக்கிறார்கள். இப்படி முன்வந்திருக்கிற தாய்
மார்களுக்கு, எந்தத் தொழிலாக இருந்தாலும் ஆண்களுக்குச்
சமமாக ஊதியம் வழங்க இந்த அரசு ஏற்பாடு செய்யுமா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, சம வேலைக்கு சம ஊதியம்
இதுதான் இந்த அரசின் கொள்கை. நிச்சயமாக அது
நிறைவேற்றப்படும்.



1990 ஏப்ரல் 12]

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சம வேலைக்கு சம
ஊதியம் என்கிற தத்துவத்தைப் பொறுத்தவரையில், 'ஆக்கு
பேசன் வேஜ்' என்பதை கடந்த ஆண்டு, 25 ஆயிரம் சக்கரை
ஆலைத் தொழிலாளர்களுக்காக, இந்தியாவிலேயே முதன்
முதலாக நிறைவேற்றியது தமிழகம்தான், தமிழக அரசு
தான் என்பதைத் தெரிவித்துக் கொளகிறேன் (மேசையைத்
தட்டும் ஒலி).

*திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, பால்வள நிறுவனத்தில், பாலை அடைப்
பதற்காக வாங்குகின்ற பாலிதீன் பைக்கான பணி ஒரு தனிப்
பட்ட நிறுவனத்திற்கு $1\frac{1}{2}$ கோடி ரூபாய்க்கு மேல் கொடுக்கப்
பட்டு வருவதைத் தடுத்து நிறுத்தி, எல்லோருக்கும் அப் பணி
பரவலாகச் சேரும் வகையில் இந்த அரசு மாற்று ஏற்பாட்டினைச்
செய்யுமா ? இதோடு, தற்போது இந்த அரசு பாலிதீன் பைகளை
உற்பத்தி செய்வதற்காக ஏற்பாடு செய்வதாக பத்திரிகைகளில்
செய்தி வந்திருக்கிறது. அந்த நிறுவனத்தின் மூலமே இந்த
பாலிதீன் பைகளை உற்பத்தி செய்து அளிக்க ஏற்பாடுகளைச்
செய்ய இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, போட்டி என்ற வகையில்,
லோயஸ்ட் கொட்டேசன், குறைந்த செலவிலே யார் செய்ய
முன்வருகிறார்களோ அவர்களுக்கு அதற்கான வாய்ப்பினைத்
தருவதுதான் வழக்கம். அதன்படிதான் இப்போதும் தர
இருக்கிறோம். ஆனால், தமிழகத்தில் இருக்கிற சிறு
தொழில்களுக்கு முன்னுரிமை தர வேண்டுமென்ற அடிப்படை
யில் சில சலுகைகளை அரசு தந்திருக்கிறது. ஆகவே, நிச்சயமாக,
சிறு தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இந்த ஆண்டு
இதில் வாய்ப்புத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத்துணைத்
தலைவர் அவர்களே, ஜூன் மாதம் 1 ஆம் தேதி ஸ்டான்டர்ட்
மோட்டார்ஸ் தொழிற்சாலையைத் திறக்க நடவடிக்கை
எடுத்திருக்கிறோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு பத்திரிகைகளில்
வந்திருக்கிற செய்தி என்னவென்றால், அதற்கு நிதி உதவி
செய்வதாகச் சொல்லியிருக்கின்ற பல்வேறு அமைப்புகள்,
நிதியுதவி செய்ய முடியாது என்று சொல்லியிருப்பதன் காரண
மாக அந்த நிறுவனத்தை ஜூன் 1 ஆம் தேதி திறக்க முடியாது
என்று சொல்லியிருக்கிறார்கள். இதைப்பற்றி அமைச்சர்
அவர்கள் விளக்க வேண்டும் என்பதோடுகூட, இன்றைக்கு

[திரு. எஸ். டி. உகம்சந்த்] [1990 ஏப்ரல் 12

பால் உற்பத்தியாளர் சங்கத் தேர்தல் எப்போது நடைபெறும்
என்பதையும் திட்டவட்டமாக அறிவிக்க முடியுமா என்று
அறிய விரும்புகிறேன்.

18-10 மணி

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, ஜுன் மாதம் 1 ஆம் தேதி என்ப
தல்ல, ஜுன் மாதம் 30 தேதிக்குள் ஸ்டான்டர்ட் மோட்டார்ஸ்
திறப்பதாகவும், அவர்கள் அரசாங்கத்திலே 3 கோடி ரூபாய்
நிதி உதவி கேட்டார்கள். அரசின் சார்பிலே நிதி உதவி
அளிக்க இயலாது என்று அறிவித்தவுடன், அவர்கள் வங்கி
களுக்குச் சென்று, அந்தப் பணத்தைப் பெற்று, திறப்பதாகச்
சொல்லி இருக்கிறார்கள். மீண்டும் மீண்டும் அவர்களோடு
தொடர்பு கொண்டு ஜுன் 30 ஆம் தேதிக்குள் திறக்க இந்த
அரசு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது.

அதைப்போல கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் நடைபெறும்
போது முதலிலே நடப்பது பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச்
சங்கத் தேர்தலாக இருக்கும். வருகிற ஆகஸ்ட் மாதத்திலிருந்து
தேர்தல்கள் தொடங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

*திரு. சே. அழகர்சாமி : துணைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லும்போது கடந்த ஆட்சி
சென்ற வழியிலே செல்வதாகச் சொன்னதற்கு மாண்புமிகு
உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் அவர்கள் சொன்னதை நான்
வலியுறுத்துகிறேன். இரண்டாவது பால் கூட்டுறவுச் சங்கங்
களின் நிர்வாகத்தைக் கலைத்துவிட்ட பிறகு, அதிகமான வளர்ச்சி
ஏற்பட்டிருப்பதாகக் கூறியதை என்னால் ஏற்றுக்கொள்ள முடிய
வில்லை. இன்று தனி அதிகாரிகளைப் போட்டதற்குப் பிறகு
கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் பல்
வேறு சீர்கேடுகளுக்கு ஆளாகியிருக்கிறது. என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன். நான் கேட்க விரும்புவது, யார் யார்
பால் கறக்கிறார்களோ அல்லது பால் கறக்கக்கூடிய தகுதி
இருக்கிறதோ அத்தனை பேரையும் சேர்க்க சட்டத்திலே விதி
இருக்கிறது. சில இடங்களில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச்
சங்கங்களில் அப்படியில்லாமல் 600, ஆயிரம் பேர் இருக்கிற
கூட்டுறவுச் சங்கங்களில் 2000, 3000 பேரைப் புதிதாகச் சேர்த்
திருக்கிறார்கள். சம்பந்தம் இல்லாதவர்களைச் சேர்த்திருக்
கிறார்கள். ஆகவே இது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சரவர்
கள் சீரான ஏற்பாட்டை செய்து, கூடிய சீக்கிரம் தேர்தல்களை
நடத்த ஏற்பாடுகளைச் செய்வார்களா என்று அறிய விரும்பு
கிறேன்.

ஸ்டான்டர்ட் மோட்டார்ஸ் சம்பந்தமாக ஏற்கனவே
கேட்டுவிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம்
வேறு சந்தர்ப்பங்களில் கேட்டிருக்கிறேன். அரசாங்கம் அவர்



1990 ஏப்ரல் 12] [திரு. சோ. அழகர்சாமி]

கள் கேட்கும் பணத்தைக் கொடுத்தோ அல்லது எந்த
முறையிலோ உதவி செய்து, மாண்புமிகு முதலமைச்சரவர்கள்
சொன்ன வாக்குறுதியின் அடிப்படையிலே ஜுன் மாதத்
திற்குள் கட்டாயம் அதைத் திறக்க வேண்டும். 3 ஆயிரம்
தொழிலாளர்கள் பட்டினி கிடக்கிறார்கள். எனவே இது
சம்பந்தமாக நான் அமைச்சர் அவர்களுடைய பதிலை எதிர்
பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவை
துணைத் தலைவரவர்களே, பால் உற்பத்தியாளர் சங்கங்களில்
பல்வேறு உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டிருப்பதாக உறுப்பினரவர்
கள் சொன்னார்கள். இன்றைக்குக்கூட, அன்றைக்குப் போட்டச்
சட்டத்திலிருந்து இந்த அரசு மாறவில்லை. இன்றைக்கும்
தேர்தலில் நிற்க வேண்டுமென்றால் 120 நாட்கள் பால் ஊற்றி
யிருக்க வேண்டும் அல்லது 300 லிட்டர் பால் தந்திருக்க
வேண்டுமென்ற சட்டத்தை வைத்திருக்கிறோம். ஒருசில குறிப்
பிட்ட இடங்களில் அப்படி நடந்திருந்தால், அதையெல்லாம்
நாங்கள் திருத்திக்கொள்ள தயாராக இருக்கிறோம் என்பதைத்
தெரிவித்துக்கொண்டு, ஸ்டேண்டர்ட் மோட்டார்ஸ் பற்றி நான்
சொன்னதை மீண்டும் வலியுறுத்தி அமைகிறேன்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,
தொழிலாளர் நல மானியத்தின்மீது ஒரு விரிவான நல்ல விவாதம்
இன்று காலையும், மாலையும் நடைபெற்று, அநேக கருத்துக்
களையும், சட்டபூர்வமான நிலைமைகளையும், தொழிலாளர்கள்
போராடிப் பெற்றிருக்கும்படியான உரிமைகளைப் பாதுகாப்
பதற்கான கொள்கை சம்பந்தமான விஷயங்கள் பலவற்றையும்
பேசி, நமது அமைச்சரவர்கள் நல்ல பதிலைக் கொடுத்திருக்கிறார்
கள். நான் நமது தொழிலாளர் நல அமைச்சரவர்களிடத்திலே
எந்தக் கோரிக்கையையும் இப்போது கேட்கவில்லை. நமது மாண்பு
மிகு முதலமைச்சரவர்கள் இங்கே இருப்பதால் கேட்கிறேன்.
இந்த மாநிலம் முழுவதும் இருக்கும்படியான தொழிலாளர்களைப்
பற்றி நாம் பேசிக் கொண்டிருக்கும்போது, அரசாங்கத்தினுடைய
ஊழியர்களாக இருக்கக்கூடிய வருவாய்த் துறை ஊழியர்களுடைய
போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நேற்றைய
தினம் கைது செய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்படாமல் ரிமாண்ட்
செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்தப் போராட்டத்தினை சம
ரசப் பேச்சுவார்த்தைகள் மூலம் முடிவுக்குக் கொண்டுவர
நமது மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் பல நடவடிக்கைகளை
எடுத்திருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆகவே,
அந்த விஷயத்தை மனத் திருப்தியோடு ஒரு முடிவுக்குக்
கொண்டுவா நமது முதலமைச்சரவர்கள் நடவடிக்கை எடுத்து,
உடனடியாக அதை முடிவுக்குக் கொண்டு வருவார்களா
என்பதை மட்டும் அவரிடத்திலே வேண்டிக் கேட்டுக்கொள்
கிறேன்.

18-15 மணி [1990 ஏப்ரல் 12

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :
யின் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு பேரவை
கட்சியினுடைய தலைவர் திரு. ரமணி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
பிரச்சினை மிகச் சாமர்த்தியமாக அவர்கள் எழுப்பியுள்ள
பட்டுள்ள பிரச்சினையாகும். இந்த நேரத்திலே எழுப்பப்
களுக்கு மேலாக வருவாய்த் கடந்த 17 அல்லது 18 நாட்
அவர்கள், அதிகாரிகள் துறை அமைச்சர்
களுடைய இந்த அரசு அலுவலர்களோடு நாஞ்சிலார்
வார்த்தைகள் பிரச்சினைகளையொட்டி—தொடர்ந்து—அவர்
இணங்காத நடத்தி வருகிறார்கள். பேச்சு
வர்களைப் அரசு என்றோ, பேச்சுவார்த்தைக்கு
முடியாத புறக்கணிக்கின்ற அரசு என்றோ வருகின்ற
நடைபெற்று அளவுக்கு அவ்வளவு தடவை யாரும் கூற
துறை இருக்கின்றன. இதிலே கூட பேச்சுவார்த்தைகள்
அமைச்சரால் அமைச்சரையும் பிரித்துப் என்னையும் வருவாய்த்
மைச்சர் தான் இது நடைபெறாமல் பார்த்து வருவாய்த் துறை
கூடக் தலையிட்டால் நடைபெற்றுவிடும் இருக்கிறது; முதல
திலே கூறப்பட்டு ஒரு நம்பிக்கை அந்த அரசு என்றெல்லாம்
இன்றைக்கு வழங்கப்பட்டு இருக்கின்றது. ஊழியர்களிடத்

நான் நேற்றைக்குக் கூட ஒரு நிகழ்ச்சியிலே
சொன்னேன் ; ஆனால் வருவாய்த்துறை பேசும்போது
பற்றியோ, இந்த ஊழியர்களைப் பற்றியோ அதிகாரிகளைப்
காரணம் சட்டமன்றம் நடைபெற்றுக்கொண்டு குறிப்பிடவில்லை.
பொழுது இங்கே இந்தப் பிரச்சினை இருக்கும்
வெளியிலே பேசக் கூடாது என்ற எழுப்பப்பட்ட பிறகு
பேசவில்லை. நீங்கள் அனைவரும் மரபையொட்டி நான்
மத்திய அரசு அலுவலர்களுக்குச் மிக நன்றாக அறிவீர்கள்.
அரசு ஊழியர்களுக்குத் தர சமமான ஊதியத்தை மாநில
ஏற்றுக் கொண்டு, சிலபல வேண்டும் என்ற கோரிக்கையை
விட அதிகமான ஊதியத்தைக் கட்டங்களிலே மத்திய அரசை
வழங்கி உள்ள அரசு இந்த அரசு. கூட சில அலுவலர்களுக்கு
சற்றொப்ப 400 கோடி ரூபாய் அது மாத்திரமல்ல. முதலில்
வழங்கிய பின்னர் சில குறைபாடுகள் கடந்த ஆண்டு அவர்களுக்காக
தால் அவர்களை எல்லாம் தெரிவிக்கப்பட்ட காரணத்
எல்லாச் சங்கங்களைச் அழைத்து வைத்துப் பேசி—
பேசி—குறைகளைத் சேர்ந்தவர்களையும் அழைத்து வைத்துப்
கோடி ரூபாய் ஆக தெரிந்துகொண்டு மேலும் ஒரு 30
வழங்கப்பட்டது. மொத்தம் 430 கோடி ரூபாய் அதற்காக
ஸ்பெஷல் கிரேடு—தேர்வு அதற்குப் பிறகும் கூட செலக்ஷன் கிரேடு,
போய்விட்டது என்று நிலை, சிறப்பு நிலை இது விட்டுப்
சொன்னேன், மத்திய சொன்னார்கள். நான் அவர்களிடத்தில்
சிறப்பு நிலை இல்லை; அரசு ஊழியர்களிடத்திலே தேர்வு நிலை;
கேட்டபோது, 'நீங்கள் அதை ஏன் கேட்கிறீர்கள் என்று
முன்பு முதலமைச்சராக இருந்த



1990 ஏப்ரல் 12] [டாக்டர் மு. கருணாநிதி]

போது தேர்வு நிலை, சிறப்பு நிலை இருந்தது; அதை இப்போது
எடுத்துவிடக் கூடாது ; ஆகவே தரவேண்டும் என்று கேட்
டார்கள். அதிகப் பணம் செலவாகும் என்று சொன்னேன்.
ஒரு கோடி ரூபாய் தான் ஃபைனான்ஷியல் கமிட்மென்ட்
இருக்கும் என்று சொன்னார்கள். ஒரு கோடி இருக்குமானால்
ஒத்துக்கொள்கிறேன் என்று சொன்னேன். அவர்களுடைய வார்த்
தையை நம்பி பட்ஜெட் தயாரிக்கும் பொழுது ஒரு கோடி
என்று அவர்கள் சொன்னது பத்துக் கோடியாக ஆகிவிட்டது.
பட்ஜெட்டை இங்கே படித்த பொழுது அதற்காக அதிகச் செலவு
10 கோடி ரூபாய் என்று படித்தேன். அதன் பின்னர் பட்ஜெட்
டுக்கு நான் பதில் சொல்கிற நேரத்தில், அதிலேயும் சில திருத்
தங்களைச் சொன்ன காரணத்தால் அதையும் ஏற்றுக்கொண்டு
10 கோடி என்பது 15 கோடியாக ஆகி, 15 கோடி ரூபாய்
—இந்தப் பட்ஜெட்டிலே ஏற்கெனவே செலவழிக்கின்ற 430
கோடி ரூபாய் அதிகச் செலவு அன்னியில் 15 கோடி ரூபாயும்—
ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இவ்வளவு அரசு ஊழியர்களுக்குச்
செய்த பிறகும் கூட இன்னும் மத்திய அரசு அலுவலர்களுக்குச்
சமமாக ஊதியம் தரும்பொழுது, 'எஃபிஷியன்சி பார்' என்று
மத்திய அரசிலே இருந்ததைக் கூட இங்கே எடுத்துவிட்டோம்.
இன்னும் சொல்லப்போனால் இந்தியாவிலேயே முதன்
முதலாக 'கான்பிடென்ஷியல் ரிப்போர்ட்'—அந்த முறையை
ஒழித்துக்கட்டிய அரசு முன்பு இருந்த திராவிட முன்னேற்றக்
கழக அரசு தான். (மேசையைத் தட்டும் ஒலி.) தந்தை
பெரியார் கூட இராசாசி மண்டபத்தில் நடைபெற்ற
பாராட்டுக் கூட்டத்தில் அப்படிச் செய்த அந்தக் காரியத்தைப்
பாராட்டி, 'ஆபிரகாம் லிங்கன்' என்று என்னை அன்போடு
அழைத்தார். பெரியார் அழைத்ததனால் சொல்கிறேன். நான்
அந்த அளவுக்குத் தகுதி படைத்தவன் அல்ல என்றாலும் கூட,
இரகசியக் குறிப்பேடு முறையை முதன் முதலாக இந்தியாவி
லேயே ஒழித்த மாநிலம் தமிழ்நாடு தான் என்பதற்காகத்
தந்தை பெரியார் அப்போது என்னைப் பாராட்டிப் பேசியதை
நினைவுபடுத்துகின்றேன். இப்பொழுதும் அந்த 'எஃபிஷியன்சி
பார்' இல்லை என்று சொல்லிவிட்டோம். ஆனால்
இப்பொழுது 'பெர்சனல் ஃபைல்' என்று இருக்கின்ற
அந்த முறை ஒழிக்கப்பட வேண்டும் என்று சொல்கிறார்கள்.
'பெர்சனல் ஃபைல்' என்பது திறந்த புத்தகம். அதை யார்
வேண்டுமானாலும் படித்துப் பார்க்கலாம். தாமே 'அப்பீல்'
செய்யலாம். அது மாத்திரம் அல்ல. பெர்சனல் ரிஜிஸ்டர்முறை.
ஒரு மனு எப்பொழுது வந்தது, அந்த மனு எந்த அதிகாரியிடம்
போனது, அந்த அதிகாரியிடம் இருந்து அந்த மனு பிறகு
எப்பொழுது திரும்பி வந்தது என்று இந்தத் தேதிகளைக்
குறிப்பு எடுப்பது கூட முடியாது என்று சொன்னால் எப்படி
ஏற்றுக்கொள்ள முடியும் ? பொது மக்களுக்காக அதிகாரிகள்
இருக்கிறார்கள். பொது மக்களினுடைய மனுக்கள் எப்பொழுது
வந்தன, எப்பொழுது திரும்பி வந்தன, யார் யாரிடத்திலே

சென்றன என்று அந்த மனுவினுடைய வரலாற்றை எழுதி வைப்பதால் என்ன தவறு வந்துவிட முடியும்? அதிலே கூட வருவாய்த் துறை அமைச்சரும் செயலாளரிடத்திலே பேசும் போது அதிலே இருக்கின்ற சில சங்கடங்களைக் கூட ஏற்கனவே அம்புரோஸ் கமிட்டியின் சார்பாகச் சொல்லப்பட்ட அந்தப் பரிந்துரைகளை ஏற்று, அந்தச் சிரமங்களையும் குறைப்ப தாகச் சொல்லி இருக்கின்றார்கள்.

18-20 மணி

அதுமாத்திரமல்ல, நேற்றைக்கு முன்தினம் பத்திரிகை களிலே செய்யப்பட்ட விளம்பரங்களில் எத்தனை கோரிக்கை களை நாம் ஏற்று இருக்கிறோம் என்று குறிப்பிட்டு இருக் கின்றோம். இடையிலே ஒரு நாள் வருவாய்த் துறை அமைச்சரை அவர்கள் சந்தித்தபொழுது அமைச்சர் என்னைச் சந்தித்து என்னிடத்திலே சில விபரங்களைக் கேட்டபொழுது ஓரளவு முடிவுக்கு வரும் என்று நான் எண்ணிக் கொண்டு இருந்தேன். அப்பொழுது அவர்கள் தாசில்தார்களை, ஃபிர்கா வாரியாக இல்லாமல், ஜோனல் வாரியாக நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள் என்று சொன்னார்கள். இப்பொழுது வேலை நிறுத்தத்தை அவர்கள் திரும்பப் பெறட்டும், ஜோனல்வாரியாக என்பதைப் பிறகு சிந்தித்து ஒரு நல்ல முடிவு எடுக்கலாம், அதைச் சொலுங்கள் என்று, சொன்னேன். அதைச் சொன்ன பிறகு நேற்றைய தினம் வந்து மீண்டும் எங்களுக்கு ஜோனல்வாரி தேவை இல்லை, ஃபிர்க்காவாரி தான் தேவை என்று சொல்லிவிட்டு, போராட்டத்தைத் தொடர்வதாகச் சென்று விட்டார்கள்.

கடந்த நான்கைந்து நாட்களாக, ஒவ்வொரு நாளும் காலையிலே கைது செய்யப்பட்டவர்கள் மாலையிலே விடு விக்கப்பட்டார்கள்.

அவர்களும் இப்பொழுது பிடிவாதமாக இருக்கிற காரணத் தால் அரசும் பிடிவாதமாக இருப்பதைத் தவிர வேறு வழி யில்லை என்கிற நிலைக்கு வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண். 10—பால் வழங்குத் திட்டங்கள்.

திருவாளர்கள் உ. ரா. வரதராசன், ஆர். சிங்காரம், டி. சி. விஜயேந்திரையா, எஸ். டி. உகம்சந்த், ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள்—என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,46,08,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(ஆ) கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற் சாலைகளும்.

திருவாளர்கள் கே. ஆர். சுந்தரம், மா. சுந்தரதாஸ் ஆகிய வர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

திருவாளர்கள் டி. சி. விஜயேந்திரையா, எஸ். டி. உகம்சந்த் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன் னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்—என்ற தலைப்பின்கீழ் ரூ. 34,09,09,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.'

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(இ) கோரிக்கை எண். 44—எழுதுபொருள்—அச்சுத்துறை

திருமதி பாப்பா உமாநாத், திருவாளர்கள் டி. சி. விஜயேந்திரையா, எஸ். டி. உகம்சந்த் ஆகியவர்களுடைய வெட்டுத்தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி ;

''மானியக் கோரிக்கை எண். 44—எழுது-பொருள் அச்சுத் துறை—என்ற தலைப்பின்கீழ் ரூ. 22,77,75,000க்கு-மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் 16-4-1990 திங்கட்கிழமை காலை 9-00 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை மாலை 18-22 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்
—எதுவுமில்லை—

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்

92. கோரிக்கை எண். 10—பால்பண்ணை வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990-91 (தமிழ், ஆங்கிலம்).

93. கோரிக்கை எண். 29—தொழிலாளர், தொழிற்சாலை மற்றும் வேலை வாய்ப்பு—பயிற்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990-91 (தமிழ், ஆங்கிலம்).

94. கோரிக்கை எண். 44—எழுதுபொருள்-அச்சுத் துறையின் பணி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1990-91, (தமிழ், ஆங்கிலம்)

95. அவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் ஐந்தாவது அறிக்கை, 1989-90 (தமிழ்).



## இணைப்புகள்.

(401ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க).

### 1990-91 ஆம் ஆண்டிற்கான பால் பண்ணை வளர்ச்சித் துறை மற்றும் பால் வழங்கும் திட்டங்கள் பற்றிய கொள்கை விளக்கம்.

கோரிக்கை எண். 10

முன்னுரை :

பால் வளத் துறை 1958ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. 1963 ஆம் ஆண்டு முதன் முதலில் நவீன பால் பதப்படுத்தும் தொழிற் சாலை மாதவரத்தில் தொடங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 1967ஆம் ஆண்டில் மதுரை பால் பண்ணை நிறுவப்பட்டது. 1—7—1972 முதல் பால் வளத் திட்டங்கள் அனைத்தும் குஜராத் மாவட்டத்தில் உள்ளதைப்போல் பால் கூட்டுறவு சங்கங்களை அடிப்படையாகக் கொண்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இதனுடைய நிர்வாக அமைப்பு மூன்று அடுக்குகள் கொண்டதாகும். அடிப்படையில் (கிராம அளவில்) பிரதம பால் உற்பத்தியாளர் சங்கமாகவும், இடையில் மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர் சங்கங்களின் ஒன்றியமாகவும், மேல் மட்டத்தில் மாநில அளவில் ஒன்றியங்களின் இணையமாகவும் இயங்கி வருகின்றது.

குறிக்கோள்கள் :

பால் வளத் துறையின் முக்கியமான குறிக்கோள்கள் :

(அ) நிலையான, மாறாத மற்றும் நன்றாக ஒழுங்குபடுத்தப்பட்ட வியாபார உதவிகள் மூலம், பால் உற்பத்தியாளர்களுக்கு உற்பத்தி செய்யப்படும் பாலுக்கு நல்ல விலை கிடைக்க வழி செய்தல்.

(ஆ) நுகர்வோர்களுக்கு பாலும் மற்றும் பாலில் இருந்து செய்யப்படும் பொருள்களும் நியாயமான விலையில் கிடைக்க வழி செய்தல்.

நடவடிக்கைகள் :

மேலே குறிப்பிட்டுள்ள குறிக்கோள்களை கருத்தில் கொண்டு பின்வரும் நடவடிக்கைகளை பால் வளத் துறை எடுத்து வருகிறது.

(அ) பால் கூட்டுறவு சங்கத்தில் உள்ள அங்கத்தினர்கள் வைத்திருக்கும் கால்நடைகளுக்கு இலவசமாக கால்நடை மருத் துவ வசதி அளித்தல், செயற்கை முறை கருவூட்டல் நடத்துதல், சரிவிகித கால்நடை தீவனம் அளித்தல், அங்கத்தினர்களுக்கு நவீன கால்நடை பராமரிப்பு பயிற்சி அளித்தல், இவைகள் அனைத் தும் கறவை மாடுகளின் தரத்தை உயர்த்துதவற்கும் அதன் மூலம் அம்மாடுகள் தொடர்ந்து அதிக பால் அளிக்கவும் கருத் தில் கொண்டு செயல்படுத்தப்படுகிறது.

(ஆ) அதிக அளவில் பால் கொள்முதல் செய்யவும், பதப் படுத்தவும் மற்றும் விற்பனை செய்யவும், தகுந்த அளவில் உள் ளீடு வசதிகள் (infrastructure facilities) அளித்தல், பால் கொள்முதல் வழிகள் அமைத்தல், பால் குளிரூட்டும் நிலையங் கள் அமைத்தல், பால் பதப்படுத்தப்படும் ஆலைகள் அமைத்தல், பால் துகள்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் மற்றும் நவீன பால் விற்பனை முறை ஆகியவைகள் நுகர்வோர்கள் நலனுக்காக அமைத்தல் ஆகியவைகள் அடங்கும்.

பால் வளத் துறையின் வணிக சம்பந்தமான பால் கொள் முதல், பங்குவப்படுத்துதல் மற்றும் விநியோகம் செய்தல் போன்ற நடவடிக்கைகள் தமிழ்நாடு பால்வள நிறுவனத்திடம் 1—7—1972 முதல் ஒப்படைக்கப்பட்டன. பின்னர் இந்நிறு வனம் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் ஆக 1—2—1981 முதல் மாற்றப்பட்டது. தமிழ்நாடு பால் வள நிறுவனம் மேற்கொண்ட பணிகள் அனைத்தும் இவ்விணை யம் மேற்கொள்ளும் வகையில் ஏற்படுத்தப்பட்டது.

இவ்விணையம் பால்வளத் திட்டங்களைப் பால் பெருக்குத் திட்டங்களிலும் தேசிய பால் பண்ணை மேம்பாட்டு வாரியம், நிதி உதவியுடன், தமிழ்நாட்டில் உள்ள 15 மாவட்டங்களில் சென்னை, செங்கை-அண்ணா, தென் ஆற்காடு, வட ஆற்காடு, அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர், சேலம், தர்ம புரி, கோயம்புத்தூர், நீலகிரி, பெரியார், மதுரை, திண்டுக்கல்- காயிதே-மில்லத், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் புதுக் கோட்டை மாவட்டங்களில் நிறைவேற்றி வருகின்றன.

பால்வளத் திட்டங்கள் எஞ்சியுள்ள 6 மாவட்டங்களான கன்னியாகுமரி, நெல்லை - கட்டபொம்மன், சிதம்பரனார், இராமநாதபுரம், பசும்பொன் தேவர் திருமகன் மற்றும் காம ராசர் மாவட்டங்களில் மாநில திட்ட நிதி மற்றும் சிறப்பு திட்டங்களான மேற்கு மலைத் தொடர்ச்சி மேம்பாட்டுத் திட் டம், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம் பாட்டுத் திட்டம், ஆதி திராவிடர் நலத் திட்டத்திலும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.



பால் வளத் திட்டங்களை மாவட்ட அளவில் நிறைவேற்றிட 17 துணைப் பதிவாளர் (பால் பதம்) அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. மற்றும் கால்நடைகளுக்கு மருத்துவ வசதி மற் றும் செயற்கை முறை கருவூட்டல் வசதி அளிக்கும் வகையில் 11 பால் சேகரிப்பு குழுக்களும், 14 நடமாடும் மருந்தகங்களும் பால் பெருக்குத் திட்டம் செயல்படாத மாவட்டங்களிலும் பால் பெருக்குத் திட்டங்கள் செயல்படும் தஞ்சை, புதுக்கோட்டை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் இயங்கி வருகின்றன.

பால் வளத் துறை, முக்கியமாக, பால் உற்பத்தியாளர் கூட்டு றவு சங்கங்களை அமைத்தல், பதிவு செய்தல், அவைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் ஊரக பால் கூட்டுறவு சங்கங் கள், மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் ஆகியவை களை கட்டுப்படுத்தும் பணிகளை கவனித்து வருகிறது.

தற்போதுள்ள அரசு கொள்கையின்படி, கிராம அளவில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் மட்டுமே ஆரம்பிக் கப்படுகின்றன. இச் சங்கங்களில் பால் உற்பத்தியாளர்கள் மட்டும் உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இவ்வுறுப்பினர்களால் உற்பத்தி செய்யப்படும் பாலை, மேற் படி சங்கங்கள் சேகரிக்கின்றன. ஒவ்வொரு அங்கத்தினரும் வழங்கும் பாலை பரிசோதித்து அதன் தரத்தின் அடிப்படையில் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட விலையில், அவர்களுக்கு பணம் பட்டு வாடா செய்யப்படுகின்றது. பால் உற்பத்தியாளர்களின் மாடுகளுக்கு மருத்துவ வசதி, கொள்முதல் மற்றும் மருத்துவ வசதிக் குழுக்களில் இருக்கும் கால்நடை மருத்துவர்கள் மூலம் அவர்கள் வீட்டிலேயே வழங்கப்படுகிறது. மேலும் குறைந்த செலவில் செயற்கை முறை கருவூட்டல் வசதியும் வழங்கப்படுகின்றன. உறை விந்து குச்சிகள், திரவ நைட்ரஜன் குப்பிகளின் செயற்கை முறை கருவூட்டல் செய்யும் வகையில் எப்போதும் தயாராக வைக்கப்படுகின்றன. இச்சங்கத்தின் செயலாளர்கள் சங்க உறுப்பினர்களின் மாடுகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் மற்றும் முதலுதவி செய்யும் வகையிலும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஒவ்வொரு சங்கமும் தங்கள் சொந்த செலவில் முதலுதவி பெட்டிகள் வைத்துள்ளனர். இக் கிராம சங்கங்களில் கொள்முதல் செய்யப்படும் பாலில் உள்ளூர் உபயோகத்திற்கு வைத்துக் கொண்டது போக எஞ்சியுள்ள பால் மாவட்ட ஒன்றியங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. பால் உற்பத்தியாளர்களுக்கு வாரம் ஒரு முறை தரத்தின் அடிப்படை யில் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது.

மாவட்டங்கள் அளவில் பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் பால் பண்ணை திட்டங்களை நிறைவேற்றி வருகின்றன. மாவட்ட ஒன்றியங்களின் முக்கிய பணி, கிராமங்கள் அளவில்

உள்ள பால் உற்பத்தியாளர் சங்கங்களில் இருந்து பாலை கொள்முதல் செய்து அதனை பதப்படுத்தி, அந்தந்த மாவட்டங்களில் விற்பனை செய்கின்றன. மாவட்டங்களில் இருக்கும் அதிகப்படியான பாலை தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்திற்கு சென்னை நகரில் விற்பனை செய்யும் வகையில் அனுப்பி வைக்கப்படுகின்றன.

பால் உற்பத்தி அதிகமாக உள்ள காலங்களில் அனைத்து மாவட்டங்களில் கூடுதலாக உள்ள பாலை, பால் பொருள் உற்பத்தி செய்யும் ஆலைகள் கொண்ட மதுரை, சேலம், ஈரோடு மற்றும் கிருஷ்ணகிரிக்கு கொண்டு வரப்பட்டு பால் பொடியாகவும் மற்றும் கொழுப்பு சத்து வெண்ணெய் மற்றும் நெய்யாகவும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவைகள் ஒன்றியங்கள் மூலமாகவும் இணையம் மூலமாகவும் சிறிய பாக்கெட்டுகளிலும் மொத்தமாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. பெரும்பாலும் மொத்த விற்பனையை இணையம் செய்து வருகின்றது.

பால் வளத்துறையின் முன்னேற்றம் :

மாநில திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 1988-89 ஆம் ஆண்டிற்கு ரூ. 86.45 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட நிதி உதவியுடனும் மற்றும் இதர சிறப்பு திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளுடனும் கீழ்க்கண்ட குறிப்பிடத் தக்க முன்னேற்றங்கள் பால் வளத்துறையில் அடைந்துள்ளன.

| வரிசை எண், பெயர். | 6-வது ஐந்தாண்டுத்திட்ட முடிவில் உள்ள நிலைமை (1984-85). | 1988-89ல் உள்ள முன்னேற்றம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 சங்கங்களின் எண்ணிக்கை (எண்). | 5,301 | 7,908 |
| 2 மாவட்ட ஒன்றியங்கள் (எண்). | 15 | 17 |
| 3 உறுப்பினர்கள் எண்ணிக்கை | 14.98 இலட்சம் | 23.53 இலட்சம் |
| 4 பால் உற்பத்தி (சங்கங்கள் அளவில்). | 8.83 லட்சம் லிட்டர்/நாள் ஒன்றுக்கு. | 15.03 லட்சம் லிட்டர்/நாள் ஒன்றுக்கு. |



| | | |
|---|---|---|
| 5 பால் கொள்முதல் (ஒன்றியம் அளவில்). | 6.28 இலட்சம் லிட்டர்/நாள் ஒன்றுக்கு. | 12.75 லட்சம் லிட்டர்/நாள் ஒன்றுக்கு. |
| 6 சென்னை நகரத்தில் பால் விற்பனை. | 4.13 லட்சம் லிட்டர்/நாள் ஒன்றுக்கு. | 6.1 லட்சம் லிட்டர்/நாள் ஒன்றுக்கு. |
| 7 பால் பதப்படுத்தும் ஆலைகள் எண்ணிக்கை திறன். | 14<br>10.23 லட்சம் லிட்டர்/நாள் ஒன்றுக்கு. | 16<br>12.5 லட்சம் லிட்டர்/நாள் ஒன்றுக்கு. |
| 8 குளிரூட்டும் நிலையங்கள் எண்ணிக்கை திறன். | 32<br>5.80 லட்சம் லிட்டர்/நாள் ஒன்றுக்கு. | 41<br>6.56 லட்சம் லிட்டர்/நாள் ஒன்றுக்கு. |
| 9 தானியங்கி பால் நிலையம் | 26 | 130 |

பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைப்பதில் வளர்ச்சி :

தமிழ்நாட்டில் தற்போது ஏழாயிரத்து எண்ணூற்று பதினாறு ஆரம்ப பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. 1989-90ல் புதியதாக 1,080 சங்கங்கள் அமைக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு இதில் 905 சங்கங்கள் 31-3-1990 முடிய அமைக்கப்பட்டுள்ளது. மேலும் ஏப்ரல் 1990 முதல் ஜூன் 1990 முடிய கூடுதலாக 500 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பால் கூட்டுறவு சங்கங்களின் சிறப்பு அம்சங்களும், புள்ளி விவரங்களும் ;

தமிழகத்தில் உள்ள செயல்படும் ஆரம்ப பால் கூட்டுறவு சங்கங்கள் ஒன்றியங்கள்.

| | |
|---|---|
| (அ) பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் | 7,816 |
| (ஆ) பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள் ... | 18 |
| (இ) கூட்டுறவு பால் பண்ணைகள் .. | 2 |
| (ஈ) பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் .. | 52 |
| (உ) கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியங்கள் | 3 |
| (ஊ) பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் | 17 |
| | 7,908 |

பால் கூட்டுறவு சங்கங்களில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை [1990 ஏப்ரல் 12

பால் பண்ணை வளர்ச்சித் துறையால் செயல்படுத்தப்படும் திட்டப்பணிகள்: 23,53,462

(1) நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால் பண்ணை வளர்ச்சித் திட்டம் :

பால் பெருக்குத் திட்டம், செயல்படும் மாவட்டங்களில்
இருக்கும் பால் பண்ணைக்கு இணையாக உள்ளீட்டு வசதிகளை
நெல்லை கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்
களில் ஏற்படுத்துவதற்கென ரூ. 7.05 கோடி திட்ட மதிப்பு
டன் கூடிய ஒரு பெரிய ஒருங்கிணைந்த பால் பண்ணை வளர்ச்சி
திட்டத்தினை தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், புதுடில்லி
ஒப்பளித்துள்ளது. இத் திட்டத்திற்கு இக்கழகம் திட்ட மதிப்
பீட்டில் 70 சதவிதம் கடனாக வழங்கும். மீதி 30 சதவிதத்தை
மாநில அரசு மானியமாக வழங்கும். இத்திட்டம் 1987-88 ஆம்
ஆண்டு முதற்கொண்டு நிறைவேற்றப்படுகிறது.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் ;

(1) 651 கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் அமைத்தல்.

(2) மேலும் கூடுதலாக 73,000 கால்நடைகளை கூட்டுறவு திட்டத்தின் கீழ் கொண்டுவருதல்.

(3) 651 கூட்டுறவு சங்கங்களுக்கு கால்நடை மருத்துவ வசதி செய்தல்.

(4) மூன்று பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல்.

(5) தற்போதுள்ள திருநெல்வேலி பால் பதம்படுத்தும் நிலையத்தின் கொள்திறனை நாளொன்றுக்கு 50,000 லிட்டரி லிருந்து 1,00,000 லிட்டராக உயர்த்துதல்.

(6) நாளொன்றுக்கு 75,000 லிட்டர் பால் விற்பனை செய் தல், இத்திட்டம் 53,000 விவசாய உறுப்பினர்களுக்கு பயன்படும் என திட்டமிடப்பட்டுள்ளது. பால் கொள்முதல் நாளொன் றுக்கு 28,000 லிட்டரிலிருந்து 75,000 லிட்டருக்கு உயர்த்தப் படும்.

அரசு தன் பங்குத் தொகையான ரூ. 211.50 இலட்சத்தில், ரூ. 165.88 லட்சங்கள் இந்நாள்வரை ஒப்பளிப்பு செய்துள்ளது.



1990 ஏப்ரல் 12]

(2) பால் பெருக்குத் திட்டம் அமுல்படுத்தாத மாவட்டங்களிலுள்ள பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உள்ளமைப்பு வசதிகள் ;

தமிழ்நாட்டிலுள்ள 21 மாவட்டங்களில் 15 மாவட்டங்களில்,
தேசிய பால்வள நிறுவனம் வழங்கப்படும் நிதி ஆதாரத்தினைக்
கொண்டு தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம்
மூலம் பல்வேறு பால்பெருக்குத் திட்டங்கள் அமுல்படுத்தப்
படுகின்றன. எஞ்சியுள்ள ஆறு மாவட்டங்களான கன்னியா
குமரி, நெல்லை—கட்டபொம்மன், சிதம்பரனார், பசும்
பொன் தேவர் திருமகன், இராமநாதபுரம் மற்றும் காமராசர்
மாவட்டங்களில் பால் பெருக்குத் திட்டங்கள் அமுல்படுத்த
வில்லை. நெல்லை—கட்டபொம்மன் மாவட்டத்தில் தேசிய
கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தாரின் நிதி உதவியுடன் ரூபாய்
7.05 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த பால் பண்ணை வளர்ச்சி
திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கூறிய ஆறு
மாவட்டங்களில் பால்பெருக்குத் திட்டம் அமுல்படுத்தாத நிலை
யில் அம்மாவட்டங்களில் உள்ள 250 பால் கூட்டுறவுச் சங்கங்
களுக்கு உள்ளமைப்பு வசதிகள் அதாவது பால் சோதனை கருவி
கள், மேலாண்மை மானியம், மருந்துகள், கால்நடை, மருத்துவ
வசதிகள், திரவ அமோனியா, கால்நடை உறைவிந்து குழல்கள்
முதலியன வழங்குவதற்கு எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில்
ரூபாய் 100 இலட்சம் ஒதுக்கீடு செய்ய கோரப்பட்டுள்ளது.
1990-91-ஆம் ஆண்டில் பால் பெருக்குத் திட்டம் செயற்படுத்தாத
ஆறு மாவட்டங்களிலுள்ள 50 பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு
உள்ளமைப்பு வசதிகள் செய்வதற்கு பகுதி II திட்டத்தின் கீழ்
ரூபாய் 2 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(3) மாதவரம் பால் பண்ணையிலுள்ள குடியிருப்புகளைப் பழுது பார்த்தல் :

1989-90ம் ஆண்டிற்கு மாதவரம் பால் பண்ணையிலுள்ள குடியிருப்புகளின் சிறப்பு பழுது பார்க்க அரசு ரூபாய் 2 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்தது.

(4) மாதவரம் பால் பண்ணையில் உள்ள குடியிருப்புகளில் புதிதாக மின்சார கம்பிகள் போடுதல் :

மாதவரம் பால் பண்ணையில் குடியிருப்புகளுக்கு புதிய மின் கம்பி பொருத்த 1989-90-ம் ஆண்டில் அரசு ரூபாய் 2.25 லட்சம் நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

(5) மாதவரம் பால் பண்ணையிலுள்ள குடியிருப்புகளின் மேல்கூரையினை பழுது பார்த்தல் :

மாதவரம் பால் பண்ணையிலுள்ள குடியிருப்புகளின் மொத்த
மேல்தளம் 15,000 சதுர மீட்டராகும். இக்குடியிருப்புகள்
1963-ம் ஆண்டில் கட்டப்பட்டுள்ளன. மழை காலங்களில் ஏற்

[1990 ஏப்ரல் 12

படும் நீர்கசிவினை சீர் செய்வதற்கு பகுதி II திட்டத்தின் கீழ்
1990-91 ஆம் ஆண்டில் ரூபாய் 3 இலட்சம் செலவில் பணிகள்
மேற்கொள்ளப்படவுள்ளது.

பால் பெருக்குத் துறையில் செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டங்கள் :

1. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

மலைப்பகுதிகளில் பால் பண்ணை தொழில்வளம் பெருக
அரசால் கடன் உதவி மற்றும் பங்கு மூலதன உதவி முதலியன
வழங்கப்படுகின்றன. 1989-90 ஆண்டிற்கென ரூபாய் 3.52
இலட்சம் நீலகிரி மாவட்டத்திற்கு 50 சதவீதம் கடனாகவும்
50 சதவீதம் பங்கு மூலதனமாகவும் அரசு ஒப்பளிப்பு
செய்துள்ளது.

2 மேற்குமலைத் தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டம் :

மேற்குமலைத் தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்
கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள அண்ணூரில் 10,000 லிட்டர்
கொள்ளளவு கொண்ட பால் குளிர்விக்கும் நிலையம் ஒன்றினை
ரூபாய் 25 இலட்சம் செலவில் அரசு ஒப்பளித்துள்ளது. 1986-87-ல்
ரூபாய் 7 இலட்சம், 1987-88-ல் ரூபாய் 14 இலட்சம் 1989-90-ல்
ரூபாய் 4 இலட்சமும் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்தப்
பால் குளிரூட்டும் நிலையம் 31—7—1989 முதல் செயல்பட்டு
வருகிறது.

3. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் :

(அ) இத்திட்டத்தின் கீழ் காமராஜர் மாவட்ட கூட்டுறவுப்
பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்கு பால் சோதனை மற்றும்
பால் பொருள் வைப்பு கிடங்கு நிலையம் ஒன்று கட்டுவதற்கு
ரூபாய் 2.05 இலட்சம் 1989-90-ம் ஆண்டில் அரசு ஒப்பளிப்பு
செய்துள்ளது.

(ஆ) திண்டுக்கல்—காயிதேமில்லத் மாவட்டத்திலுள்ள
அய்யம்பாளையம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திற்கு
பால் சோதனை கருவிகள் மற்றும் 20 பால் கேன்கள் வாங்கு
வதற்கு ரூ. 19.95 இலட்சம் அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

(4) ஆதிதிராவிடர் நலத் திட்டம்/சிறப்பு மத்திய உதவி:

இத்திட்டத்தின்கீழ் பால் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள ஆதி
திராவிட உறுப்பினர்களுக்கு கறவை மாடுகள் வாங்குவதற்கு
என ஆதிதிராவிடர் நலத்துறை வரவு-செலவு திட்டத்தின் கீழும்
சிறப்பு மத்திய உதவியின் கீழும் மானிய தொகை வழங்கப்பட்டு
வருகிறது. ஒவ்வொரு ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கும் ஒவ்
வொரு கறவை மாட்டு விலையில் 33 1/3 சதவீதம் மானியமாக



1990 ஏப்ரல் 12]

வழங்கப்படுகிறது. ஒரு கறவை மாட்டின்விலை ரூபாய் 2,500 என
30—11—1988 முடிய நிர்ணயம் செய்யப்பட்டு இருந்தது. அரசு
இத்தொகையை 1—12—1988 முதல் ரூபாய் 2,500-லிருந்து
3,200ஆக உயர்த்தியுள்ளது. எஞ்சிய தொகையை அரசுடமை
யாக்கப்பட்ட வங்கிகளினால் கடனாக வழங்கப்படுகிறது.

ஆதிதிராவிட நல வரவு-செலவு திட்டத்தின்கீழ் 1988-89 ஆம்
ஆண்டில் ரூபாய் 42 இலட்சத்தினை 4,692 நபர்கள் பயனடையும்
வகையில் வழங்கப்பட்டுள்ளது. 1989-90-ம ஆண்டிற்கு 10,000
ஆதிதிராவிட இனத்தவர்கள் பயனடையும் வகையில், ரூபாய்
106.70 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. 1990-91-ம்
ஆண்டிற்கு 10,065 நபர்கள் பயனடையும் வகையில் ரூபாய்
107.39 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

சிறப்பு மத்திய நிதி உதவித் திட்டத்தின்கீழ் 88-89ஆம் ஆண்
டில் ரூபாய் 149.37 இலட்சத்தினை 17,933 ஆதிதிராவிட உறுப்
பினர்கள் பயனடையும் வகையில் வழங்கப்பட்டுள்ளது. 1989-90-ம்
ஆண்டிற்கு ரூபாய் 315.42 இலட்சத்தினை 29,561 நபர்கள் பய
னடையும் வகையில் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
1990-91-ஆம் ஆண்டிற்கு 24,211 நபர்கள் பயனடையும் வகையில்
ரூபாய் 258.33 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

ஆதிதிராவிட இனத்திலிருந்து கிறிஸ்தவர்களாக மதம் மாறிய
வர்களுக்கு 1988-89-ம் ஆண்டில் 120 நபர்கள் பயனடையும் வகை
யில் ரூபாய் 1.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
1989-90 ஆம் ஆண்டிற்கு 140 நபர்கள் பயனடையும் வகையில்
1.5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1990-91 ஆம்
ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் 334 நபர்கள் பயனடையும் வகை
யில் ரூபாய் 3.56 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பால் பெருக்குத் துறையில்
நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள்.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்கு (1990-1995-ல்)
பால் பெருக்குத் துறையில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை
செயல்படுத்துவதற்கு ரூ. 580 50 இலட்சத்துக்கு கீழ்கண்ட
திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன :

(1) காமராசர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால் பண்ணை வளர்ச்சித்
திட்டம் :

காமராசர் மாவட்டத்திலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூரில் 50,000
லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் பதப்படுத்தும் ஆலை ஒன்
றினை ரூபாய் 490 இலட்சத்தில் தேசிய கூட்டுறவு அபிவிருத்தி
நிறுவனத்தின் நிதி உதவியுடன் நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டு
உள்ளது.

[1990 ஏப்ரல் 12

(2) நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால் பண்ணை வளர்ச்சித் திட்டம் செயல்படுத்துதல் :

இத்திட்டத்தின் கீழ் நெல்லை—கட்டபொம்மன் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால் வளர்ச்சி திட்டத்தினை அமுல்படுத்த அரசு பங்கு/மானியம் ஆக ரூபாய் 46 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய கோரப்பட்டுள்ளது. இந்திட்டம் ஏழாவது ஐந்தாண்டு திட்டத்திலிருந்து செயல்படுத்தப்பட்டு வருவதால், எஞ்சியுள்ள மேற்கூறிய தொகை எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

(3) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பால்பத ஆலையினை விரிவு படுத்துதல் :

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நாகர்கோவிலில் தற்போதுள்ள நாளொன்றுக்கு 16,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பால்பத ஆலையினை நாளொன்றுக்கு 30,000 லிட்டர் கொள்ளளவாக உயர்த்தும் வகையில் விரிவுபடுத்த ரூபாய் 25 இலட்சம் (தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் மூலம் நிதி உதவி பெற்று) செலவில் செயல்படுத்துவதற்கு உத்தேசித்தல்.

(4) தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்திற்கு பங்கு மூலதன வசதி வழங்குதல் :

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தின் கட்டுப்பாட்டிலுள்ள அயன்புரம் பால்பத ஆலையினை விரிவு படுத்துவதற்காக ரூபாய் 50 இலட்சத்தினை அரசு பங்கு மூலதனமாக வழங்குவதற்கு உத்தேசித்தல்.

(5) பால் பெருக்குத் திட்டம் அமுல்படுத்தாத மாவட்டங்களில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு உள்ளமைப்பு வசதி செய்தல் :

பால்பெருக்குத் திட்டங்கள் அமுல்படுத்தாத கன்னியாகுமரி, நெல்லை-கட்டபொம்மன், சிதம்பரனார், பசும்பொன்-தேவர் திருமகன், இராமநாதபுரம் மற்றும் காமராசர் ஆகிய மாவட்டங்களிலுள்ள பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உள்ளமைப்பு வசதிகள் வழங்குவதற்கு எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூபாய் 100 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(6) சூரிய சக்தி அடுப்புகள் வழங்குதல் :

இத்தலைப்பின் கீழ், 5 பால்பத ஆலைகளுக்கும் மற்றும் 5 பால் குளிரூட்டும் நிலையங்களுக்கும் ரூபாய் 30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.



1990 ஏப்ரல் 12]

(7) நெல்லை—கட்டபொம்மன் மாவட்டத்தில் ஒரு பால் பொடி ஆலை நிறுவுதல் :

நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்தில் 10 மெட்ரிக் டன்
கொள்ளளவில், ரூபாய் 667 இலட்சம் செலவில் (தேசிய கூட்டுறவு
வளர்ச்சி நிறுவனத்தாரின் நிதி உதவியுடன்) ஒரு பால் பொடி
ஆலை எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கட்டி முடிக்க உத்
தேசிக்கப்பட்டுள்ளது.

(8) மேற்கு மலை தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டம்:

கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு
இத்திட்டத்தின் கீழ், கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு
பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தின் மூலம் 50 சங்கங்களுக்கு
கால்நடை மருத்துவ வசதி மற்றும் செயற்கை முறை கருவூட்டல்
பணிகளுக்கு ரூபாய் 7.37 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்
படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும் கோயம்புத்தூர் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தி
யாளர் ஒன்றியத்திற்கு, கால்நடை செயற்கை முறை கருவூட்டல்,
தீவன அபிவிருத்தி மற்றும் பல உள்ளீட்டு வசதிகள் செயல்படுத்து
வதற்கு ரூபாய் 25 இலட்சம் செலவில் இத்திட்டம் உத்தேசிக்கப்
பட்டுள்ளது.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் :

பால்பெருக்குத் திட்டம் மூன்று அடுக்கு '' ஆனந்த் '' பாணி
முறையில் செயல்படுத்துவதற்காக கிராம அளவில் பால் உற்பத்தி
யாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களும், மாவட்ட அளவில் உற்பத்தி
யாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களும், மாநில அளவில் கூட்டுறவு
இணையமும் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் வழி பால்
உற்பத்தியை பெருக்கவும், பால் உற்பத்தியாளர்களுக்கு இலாப
கரமான (கட்டுபடியான) விலையை அளிக்கவும் நகரங்களில் வாழ்
கின்ற மக்களுக்கு தரமான பாலை நியாயமான விலையில் விற்
பதும் கொள்கையாகும்.

தற்போது பால் பெருக்குத் திட்டத்தை அந்தந்த மாவட்ட
ஒன்றியங்களே செயல்படுத்தி வருகின்றன. சேலம், பெரியார்
கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்களில் 1981ஆம் வருடத்தி
லும், தர்மபுரி மாவட்டத்தில் 1982-ஆம் வருடத்திலும்,
செங்கை—அண்ணா, தென் ஆற்காடு, மதுரை ஆகிய மாவட்டங்
களில் 1983 ஆம் வருடத்திலும், முன்னாள் வட ஆற்காடு
மாவட்டத்தில் 1984 ஆம் வருடத்திலும் திருச்சிராப்பள்ளி,
தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் 1985 ஆம்
வருடத்திலும், திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தில்
1987 ஆம் வருடத்திலும் பால் பெருக்குத் திட்டம் செயல்படுத்து
வதை அந்தந்த ஒன்றியங்கள் ஏற்று செயல்படுத்தி வருகின்றன.
மேலும், இவ்விணையம் உறுப்பினர் ஒன்றியங்களுக்காகத் தேவை
யான திரவ நைட்ரஜன், உறைவிந்து நிலையம், பொலிகாளைப்
பேணல், கால்நடைத் தீவனம் முதலிய பொதுவான வசதிகளை
அமைத்து ஒன்றியங்களுக்கு அளித்து வருகிறது.

தற்சமயம் இவ்விணையத்தின் கீழ் 3 பால் பண்ணைகள் அம்பத்தூர், மாதவரம் மற்றும் அயனாவரம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இப்பால் பண்ணைகளின் திறன் நாளொன்றுக்கு 3 இலட்சம் லிட்டர்—அம்பத்தூர், 1.25 இலட்சம் — மதவரம், 12,000 லிட்டர்—அயனாவரம் ஆகும். அம்பத்தூர் மற்றும் மாதாவரம் பால் பண்ணைகளைப் பயன்படுத்தி பாலை பதப்படுத்தி, நிலைப்படுத்தி, பாலிதீன் பைகளின் மூலமாகவும், தானியங்கி நிலையங்களின் மூலமாகவும் பால் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. அயனாவரம் பால் பண்ணை, பால் உப பொருட்களாகிய ஐஸ்கிரீம், யோகர்ட், லஸ்ஸி மற்றும் கோவா உற்பத்தி செய்ய பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இது தவிர, மாவட்ட பால் உற்பத்தியாளர்கள், கூட்டுறவு ஒன்றியங்களுக்கு சொந்தமான கிருஷ்ணகிரி, சேலம் ஈரோடு மற்றும் மதுரை ஆகிய 4 பால் பண்ணை மற்றும் பால்பொடி தயாரிக்கும் ஆலைகளின் மூலமாக பிற பால் உற்பத்தி பொருட்கள் அதாவது பால்பொடி, வெண்ணெய், நெய் மற்றும் பாலாடை கட்டி ஆகியவை உற்பத்தி செய்யப்பட்டு '' ஆவின் '' பெயரால் தமிழ்நாட்டிலும், மற்ற மாநிலங்களிலும் விற்பனை செய்ய உதவி புரிகின்றது. இவ்விணையம் மற்ற ஒன்றியங்களுக்குத் தேவையான தொழில் நுட்ப உதவி அவ்வப்பொழுது அறிவிப்பதுடன், திட்ட ஆக்க விபரம் ஒப்பந்தப்புள்ளி அட்டவணை மேலும் பால் குளிரூட்டும் நிலையம் மற்றும் பால் பண்ணை நிறுவுதல் ஆகியவற்றைத் தாமே மேற்கொள்வதுடன், தேவைப்படின் விஸ்தரிப்பு வேலையையும் இலாப நோக்கமின்றி ஒருவர் சார்பில் மற்றவர் பெற்றுக் கொள்வது போன்ற அடிப்படை மேற்கொள்கிறது.

## தேசிய பால்வள வாரியத்தின் பணி

இத்திட்டத்திற்கு இந்தியப்பால் பண்ணைக் கழகம் கடன்களை காலம் தாழ்த்தி கொடுப்பதற்கான சட்ட இசைவுக் காலம் 3 வருடங்கள் உள்ளிட்டு, 10 விழுக்காடு வட்டி கணக்கீட்டின்படி 15 ஆண்டுகளில் திருப்பி செலுத்தக் கூடிய கடன் மற்றும் மானியம் 70 : 30 என்ற விகிதத்தில் கொடுத்து உதவுகிறது. மேலும் கூட்டுறவு பால் சங்கங்கள் நிறுவ மற்றும் பராமரிக்க 100 விழுக்காடு மானியம் ஆக கொடுத்து உதவுகிறது. அத்துடன் தேசிய பால்வள வாரியம் தொழில் நுட்ப உதவி அளிப்பதுடன் திட்ட ஆக்க விபரம், ஒப்பந்தப் புள்ளி அட்டவணை மேலும் பால் குளிரூட்டும் நிலையங்கள், பால் பண்ணை நிறுவுதல் ஆகியவற்றைத் தானே மேற்கொள்வதுடன் தேவைப்படின் விஸ்தரிப்பு வேலையையும் இலாப நோக்கமின்றி ஒருவர் சார்பில் மற்றவர் பெற்றுக் கொள்வது போன்ற அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.



மாவட்ட ஒன்றியங்கள் வாரியாக கொள்முதல் செய்யப்பட்ட பால் :—

| வரிசை எண்ணும், மாவட்டமும். | 1987. | | 1988. | | 1989. | |
|---|---|---|---|---|---|---|
| | வருடத்திற்கு. | நாளொன்றுக்கு. | வருடத்திற்கு. | நாளொன்றுக்கு. | வருடத்திற்கு. | நாளொன்றுக்கு. |
| | (சராசரியாக) | | (சராசரியாக) | | (சராசரியாக) | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 செங்கை-அண்ணா | 215.92 | 0.60 | 197.88 | 0.54 | 238.45 | 0.65 |
| 2 தென்னாற்காடு | 235.23 | 0.64 | 259.26 | 0.71 | 318.90 | 0.87 |
| 3 வட ஆற்காடு-அம்பேத்கார் திருவண்ணாமலை—சம்புவராயர் | 609.44 | 1.67 | 666.27 | 1.82 | 829.71 | 2.27 |
| 4 தர்மபுரி .. | 232.51 | 0.64 | 255.39 | 0.70 | 319.39 | 0.88 |
| 5 சேலம் .. | 496.36 | 1.36 | 550.50 | 1.50 | 699.48 | 1.92 |
| 6 பெரியார் .. | 353.04 | 0.97 | 356.37 | 0.97 | 477.64 | 1.31 |
| 7 கோயம்புத்தூர் | 173.32 | 0.47 | 255.87 | 0.70 | 388.42 | 1.06 |
| 8 நீலகிரி .. .. | 72.54 | 0.20 | 89.22 | 0.24 | 103.71 | 0.28 |
| 9 திருச்சிராப்பள்ளி.. | 135.11 | 0.37 | 178.04 | 0.49 | 249.82 | 0.88 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 10 தஞ்சாவூர் .. | 50.88 | 0.14 | 49.74 | 0.14 | 61.25 | 0.17 |
| 11 புதுக்கோட்டை | 10.40 | 0.03 | 11.38 | 0.03 | 17.57 | 0.05 |
| 12 திண்டுக்கல்–காயிதேமில்லத். | 120.40 | 0.33 | 139.42 | 0.38 | 175.44 | 0.48 |
| 13 மதுரை .. | 157.93 | 0.43 | 282.51 | 0.77 | 366.72 | 1.00 |
| 14 இராமநாதபுரம் மற்றும் பசும்பொன் தேவர் திருமகன் | 54.01 | 0.15 | 62.05 | 0.17 | 96.99 | 0.27 |
| 15 காமராசர் .. | 52.83 | 0.14 | 45.13 | 0.12 | 61.35 | 0.17 |
| 16 நெல்லை–கட்டபொம்மன். | 93.48 | 0.26 | 82.73 | 0.23 | 166.92 | 0.46 |
| 17 கன்னியாகுமரி .. | 37.39 | 0,10 | 41.77 | 0.11 | 50.69 | 0.14 |
| மொத்தம் .. | 3,100.79 | 8.50 | 3,523.53 | 9.63 | 4,622.45 | 12.66 |





பால் விலை ;

அ. கொள்முதல் (உற்பத்தியாளர்களுக்கான விலை)

பால் உற்பத்தி மற்றும் கால்நடைகளின் பராமரிப்புச் செலவு அதிகரித்ததாலும் கொள்முதல் விலை விவசாயிகளுக்கு அவ்வப்போது கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்பட்டது ;—

| காலம். | எருமைப்பால் கிலோ (கொழுப்பு) ஒன்றுக்கு. | பசும்பால் கிலோ (மொத்த திடப் பொருள்) ஒன்றுக்கு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூ. பை. | ரூ. பை. |
| 15—8—1987 முதல் 14—10—1987 வரை .. .. .. | 50.00 | 24.00 |
| 15—10—1987 முதல் 31—10—1987 வரை .. .. .. | 48.00 | 24.00 |
| 1—11—1987 முதல் 31—3—1988 வரை .. .. .. | 48.00 | 23.00 |
| 1—4—1988 முதல் 2—11—1988 வரை .. .. .. | 50.00 | 24.00 |
| 3—11—1988 முதல் இன்று வரையிலும் .. .. .. .. | 58.00 | 28.00 |

(ஆ) விற்பனை விலை :

அதிகப்படியான கொள்முதல் விலை உற்பத்தியாளர்களுக்கு கொடுத்ததாலும், பால் விநியோகப் போக்குவரத்துச் செலவு மற்றும் பாலிதீன் பை அடைப்பான் விலை அதிகரித்ததாலும், பணியாளர்களின் சம்பள விகிதம் அதிகரித்ததாலும், விற்பனை விலையை கீழ்க்கண்டவாறு அவ்வப்போது மாற்றி அமைக்கப்பட்டது :—

| (1) | 8-8-1987 முதல் (2) | 1-11-1987 முதல் (3) | 16-11-1988 முதல் (4) |
|---|---|---|---|
| | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. |
| பால் அட்டைக்கு .. .. .. .. .. | 4.20 | 4.50 | 5.00 |
| ரொக்கத்திற்கு .. .. .. .. .. | 4.30 | 4.60 | 5.20 |



கால்நடைத் தீவன ஆலை :

தற்போது 3 கால்நடைத் தீவன ஆலைகள் ஒவ்வொன்றும், ஷிப்டு ஒன்றுக்கு 40 டன் உற்பத்தித் திறனுடன் சென்னை, ஆம்பூர் மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. சென்னையிலுள்ள கால்நடைத் தீவன நிலையம் இவ்விணையத்தின் கீழ் இயங்குகிறது. ஆம்பூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையிலுள்ள கால்நடைத் தீவன உற்பத்தி ஆலை தொடர்ந்து குத்தகைக்கு எடுக்கப்பட்டு இவ்விணையத்தின் மேற்பார்வையில் 1976 முதல் இயங்கி வருகிறது. ஈரோட்டிலுள்ள கால்நடைத் தீவன ஆலை, பெரியார் மாவட்ட ஒன்றியத்திற்குரியது.

கால்நடைத் தீவனத்தை, பால் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உற்பத்தியாளர்களுக்கும், கால்நடை பராமரிப்புத் துறையிலுள்ள கால்நடை பண்ணைகளுக்கும் மற்றும் கன்று வளர்ப்புத் திட்டங்களுக்கும், சென்னை மாநகராட்சி போன்ற உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் விற்பனை செய்து வருகிறது. கால்நடைத் தீவன விற்பனையை அதிகரிக்கும் வகையில் உள்ளூர் விற்பனையாளரும் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். 1987, 1988 மற்றும் 1989ஆம் ஆண்டுகளில் கால்நடைத் தீவனத்தின் விற்பனை கீழ்வருமாறு :—

| (1) | 1987 (2) | 1988 (3) | 1989 (4) |
|---|---|---|---|
| | | (டன்கள்) | |
| மாதவரம் .. .. | 13,737 | 14,067 | 19,686 |
| ஆம்பூர் .. .. | 6,971 | 7,023 | 7,888 |
| ஈரோடு .. .. | 11,976 | 17,250 | 25,560 |
| மொத்தம் .. | 32,684 | 38,340 | 53,134 |

ஈரோட்டிலுள்ள கால்நடைத் தீவன ஆலை, சேலம் பெரியார், கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களுக்கான தேவைகளை பூர்த்தி செய்கிறது. மேலும் மதுரையில் புதிதாக கட்டப்படும் கால்நடைத் தீவன ஆலை ஷிப்டு ஒன்றுக்கு 40 டன் திறனுடன் தென் மாவட்டங்களின் தேவைகளை பூர்த்தி செய்ய கட்டப்பட்டு வருகிறது.

பால் மற்றும் பால் பொருட்களின் விற்பனை :

சென்னையிலுள்ள பால் பண்ணைகள் 4.5 விழுக்காடு கொழுப்புச் சத்தும், 8.5 விழுக்காடு கொழுப்புச் சத்தில்லாத திடச் சத்தும் உள்ள நிலைப்படுத்திய பாலை விற்பனை செய்து

வருகின்றது, கடந்த ஆண்டில் சென்னையில் பால் விற்பனை
நாளொன்றுக்கு 5.30 இலட்சம் லிட்டருக்கு எதிரிடையாக 5.9
இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இவ்
வாண்டு இதை 6.75 இலட்சம் லிட்டராக உயர்த்த திட்டமிடப்
பட்டுள்ளது. பால் நுகர்வோர்கள் தங்களின் பால் தேவையை
538 பால் விற்பனை நிலையங்கள், 51 பாலகங்கள் மற்றும் 130
தானியங்கி பால் விற்பனை நிலையங்கள் மற்றும் 99 பைபர்
பிளாஸ்டிக் தொட்டிகள் (எப். ஆர். பி. டேங்க்) மூலமாக பெற்று
வருகின்றனர். பால் நுகர்வோர்களைப் பால் விற்பனையில் ஈடு
பாடு கொள்ளவும், உபயோகிப்பாளர்களுக்கு சேவையின் தரத்
தை உயர்த்தவும் 31 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்
நிறுவப்பட்டுள்ளன.

1990—91 ஆம் வருடத்தில் கூடுதலாக 40 தானியங்கி பால்
வழங்கு நிலையங்கள் சென்னையில் அமைக்கவும், இது தவிர 20
தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் அமைக்க முக்கிய
நகரமான மதுரை, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு மற்றும்
திருச்சியில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் புறநகரில் தற்போதுள்ள பால் விற்பனை
அளவாகிய (நாளொன்றுக்கு) 11.00 இலட்சம் லிட்டர்,
1994 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 17.00 இலட்சம் லிட்ட
ராக உயரும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பால் பொருட்கள் விற்பனை விபரம் பின்வருமாறு :

| இனங்கள் (1) | 1987 (2) | 1988 (3) | 1989 (4) |
|---|---|---|---|
| | (எண்கள் இலட்சத்தில்) | | |
| பால் (லிட்டர்களில்) | 1,872.45 | 1,941.80 | 2,146.20 |
| நாளொன்றுக்கு சராசரி | 5.13 | 5.32 | 5.88 |
| வெண்ணெய் (கி. கிராமில்) | 8.80 | 8.83 | 9.48 |
| நெய் (கி. கிராமில்) | 0.85 | 1.06 | 1.34 |
| பால்பொடி (டன்களில்) | 3.80 | 3.68 | 3.10 |

இணையத்தின் 1989—90 ஆம் ஆண்டின் மொத்த விற்பனை
ரூபாய் 120.44 கோடியாகும்.



பால் பெருக்குத் திட்டம் : I

பால் பெருக்குத் திட்டம் முதல் கட்டமாக ஜூலை 1972 முதல் மார்ச் 1981 வரை செயல்படுத்தப்பட்டது. இதற்காக இத்திட்டங்களின் கீழ் ரூ. 15.64 கோடி தேசிய பால்வள வாரியம் வழங்கியதில் ரூ. 15.48 கோடி செலவிடப்பட்டுள்ளது.

பால் பெருக்குத் திட்டம் : II

பால் பெருக்குத் திட்டம் I-ன் தொடர்ச்சியாக பால் பெருக்குத் திட்டம் II துவங்கப்பட்டது. பால் பெருக்குத் திட்டம் III-ன் கீழ் உள்ள முன்னேற்பாடு செயல்பாட்டுத் திட்டத்தின் கீழ் முன்பிருந்த 9 மாவட்டங்கள் தவிர திருச்சி ராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட் டங்களில் ஏப்ரல் 1985 முதல் துவங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் முடிவுற்ற நிலையில் 12 மாவட்டங்களில் பால் உபரிக் காலத்தில் நாள் ஒன்றுக்கு 10.15 இலட்சம் லிட்டர் பாலை 5,170 கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கொள் முதல் செய்ததன் வழி 8.19 இலட்சம் விவசாயிகள் பயன் அடைந்துள்ளார்கள். இத்திட்ட காலத்தில் ரூ. 26.26 கோடி செலவிடப்பட்டுள்ளது.

பால் பெருக்குத் திட்டம் : III

ஆனந்த் பாணியில் ஒட்டுமொத்தமான கூட்டுறவில் ஒரு நிலையான எதிர்கால வளர்ச்சியை உருவாக்க, 13 மாவட் டங்களையும் நகர்ப்புற பால் பண்ணைகளையும் உள்ளடக்கிய ஒரு கருத்துரு ரூ. 68.19 கோடியில் தேசிய பால்வள நிறுவனத் திடம் 1987 ஆம் ஆண்டில் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் உலக வங்கி குறிப்பிட்ட '' கடன் வழங்குவதில் முன் நிபந்தனைகளை '' செயல்படுத்துவதில் ஏற்பட்ட நிர்வாக நிர்பந்தங்களின் காரணத்தினால் தேசிய பால்வள நிறுவனம் 1989 ஆம் ஆண்டில் தான் அவற்றை முன் பரிசீலனை செய்ய எடுத்துக் கொண்டது.

உலக வங்கியின் உதவியைப் பெற்று பால்வள பெருக்குத் திட்டம் III செயல்படுத்த தேவையான கடன் மற்றும் மானி யத்தை பெறுவதற்கான பேச்சுவார்த்தை முன்னாள் மின் துறை மற்றும் பால்வளத்துறை அமைச்சர் அவர்கள் தேசிய பால்வள வாரியத் தலைவர் டாக்டர் குரியன் அவர்களிடம் 29—5—1989 மற்றும் 4-8-1989 ஆகிய தேதிகளில் நடத்தி னார்.

மேலும், கடந்த டிசம்பர் மாதம் மூன்றாவது பால்பெருக்குத் திட்டத்தை தமிழகத்தில் செயல்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட பல்வேறு பிரச்சினைகளை தமிழகத்திற்கு வருகை தந்த உலக வங்கிக் குழுவிடம் தமிழக அதிகாரிகள் கலந்துரையாடி, மேற்படி திட்டங்களுக்கான பொருளாதார உதவி உலக வங்கி மற்றும் தேசிய பால்வள வாரிய நிறுவனத்திடமிருந்து விரைவில் கிடைக்க ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மூன்றாவது பால் பெருக்குத் திட்டத்தில் மேற்காணும் பல்வேறு திட்டங்கள் இந்த நிதி ஆண்டில் முதற் காலாண்டில் ஆரம்பிக்கப்படவுள்ளது:—

(1) தென் சென்னையில், சோழிங்கநல்லூரில் நாளொன்றுக்கு 3 இலட்சம் லிட்டர் கொள்திறனுள்ள ஒரு புதிய பால் பண்ணை அமைக்கப்பட உள்ளது. இது 1992 ஆம் ஆண்டிற்குள் முழுமையாகக் கட்டி முடிக்கப்படும்.

(2) அம்பத்தூர் பால் பண்ணையின் கொள்திறனை நாளொன்றுக்கு 3 இலட்சம் லிட்டர்களிலிருந்து 4 இலட்சம் லிட்டர்களாகவும், கிருஷ்ணகிரி பால்பண்ணையின் கொள்திறனை நாளொன்றுக்கு 1 இலட்சம் லிட்டர்களிலிருந்து 1.5 இலட்சம் லிட்டர்களாகவும், கோயம்புத்தூர் பால் பண்ணையின் கொள்திறனை நாளொன்றுக்கு 1 இலட்சம் லிட்டர்களிலிருந்து 1.5 இலட்சம் லிட்டர்களாகவும் மற்றும் மதுரை பால் பண்ணையின் கொள்திறனை நாளொன்றுக்கு 1.5 இலட்சம் லிட்டர்களிலிருந்து 2.5 இலட்சம் லிட்டர்களாகவும் விரிவாக்கம் செய்யப்பட உள்ளது.

(3) திருச்சிராப்பள்ளியில் நாளொன்றுக்கு 1.5 இலட்சம் லிட்டர் கொள்திறன் கொண்ட புதிய பால் பண்ணை அமைக்கப்படவுள்ளது.

(4) ஈரோடு மற்றும் சேலம் பால்பண்ணையின் கொள்திறனை நாளொன்றுக்கு 1.5 இலட்சம் லிட்டர்களிலிருந்து 3 இலட்சம் லிட்டர்களாக விரிவாக்கம் செய்யும் பணிகள் நடைபெற்று, முடிவுறும் தருவாயில் உள்ளது.

(5) செங்கை-அண்ணா மாவட்டத்தில் புக்கத்துறை என்னும் இடத்தில் நாளொன்றுக்கு 50,000 லிட்டர் கொள்திறன் கொண்ட புதிய பால்பண்ணை அமைக்கப்பட உள்ளது.

(6) தென்னாற்காடு மாவட்டத்தில் விழுப்புரத்திலுள்ள குளிரூட்டும் நிலையத்தை நாளொன்றுக்கு 1 இலட்சம் லிட்டர் கொள்திறன் கொண்ட பால்பண்ணை அமைக்கப்படவுள்ளது. திண்டுக்கல்—காயிதே மில்லத் மாவட்டத்திலுள்ள திண்டுக்



கல்லில் பால் குளிரூட்டும் நிலையத்தை நாளொன்றுக்கு 50,000 லிட்டர் கொள்திறன் கொண்ட பால்பண்ணையாகவும் மாற்றியமைக்கப்பட்டு வருகிறது.

(7) வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டம் கொடக்கல், தர்மபுரி மாவட்டத்தில் அரூர், சேலம் மாவட்டம் மேட்டூர் ஆகிய இடங்களில் நாளொன்றுக்கு 50,000 லிட்டர், தென் ஆற்காடு மாவட்டம் திண்டிவனத்தில் நாளொன்றுக்கு 30,000 லிட்டர் கொள்திறன் கொண்ட புதிய பால் குளிரூட்டும் நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன.

(8) செங்கை-அண்ணா மாவட்டத்திலுள்ள திருவள்ளூர், தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள சின்னசேலம், வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்திலுள்ள ஆம்பூர், திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்திலுள்ள அனக்காவூர், திருவண்ணாமலை, சேலம் மாவட்டத்திலுள்ள நாமக்கல், பெரியார் மாவட்டத்திலுள்ள சத்தியமங்கலம், சங்கராண்டம்பாளையம், கோயமுத்தூர் மாவட்டத்திலுள்ள சுல்தான்பேட்டை, சண்முகாபுரம், மதுரை மாவட்டத்தில் உள்ள தேனி, திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள பெரம்பலூர், கரூர் மற்றும் ஜெயங்கொண்டசோழபுரம், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள மன்னார்குடி ஆகிய இடங்களில் உள்ள பால் குளிரூட்டும் நிலையங்களின் கொள்திறன் விரிவாக்கம் செய்யப்படவுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு ;—

| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | இடம். | தற்போதுள்ள கொள் திறன். | விரிவாக்கப்பட இருக்கும் கொள் திறன். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 செங்கை-அண்ணா .. | திருவள்ளூர் .. | 30 | 50 |
| 2 தென் ஆற்காடு .. | சின்ன சேலம் .. | 30 | 50 |
| 3 வட ஆற்காடு—அம்பேத்கார் .. | ஆம்பூர் .. | 30 | 50 |
| 4 திருவண்ணாமலை—சம்புவராயர் .. | திருவண்ணாமலை | 30 | 100 |
| | அனக்காவூர் .. | 30 | 50 |

[1990 ஏப்ரல் 12

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 5 சேலம் | நாமக்கல் | 30 | 50 |
| 6 பெரியார் | சத்தியமங்கலம் | 30 | 50 |
| | சங்கராண்டாம் பாளையம். | 30 | 50 |
| 7 கோயமுத்தூர் | சுல்தான்பேட்டை | 10 | 50 |
| | சண்முகாபுரம் | 10 | 50 |
| 8 மதுரை | தேனி | 10 | 30 |
| 9 திருச்சிராப்பள்ளி | கரூர் | 8 | 30 |
| | பெரம்பலூர் | 10 | 50 |
| | ஜெயங்கொண்ட சோழபுரம். | 2 | 10 |
| 10 தஞ்சாவூர் | மன்னார்குடி | 4 | 30 |

(9) ஈரோட்டில் நாளொன்றுக்கு 30 டன் உற்பத்தித் திறனுடன் ஒரு பால்பொடி ஆலை அமைக்கும் பணிகள் நடை பெற்று வருகிறது. இவ்வாலை 1992 ஆம் ஆண்டில் தொடங் கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(10) மதுரை மாவட்டத்தில் கப்பலூரில் நாளொன்றுக்கு 100 டன் கொள்திறனுள்ள கால்நடைத் தீவன ஆலை உரு வாக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இவ்வாலை 1990 ஆம் ஆண்டு இறுதிக்குள் உற்பத்தியை தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாநிலத்திலுள்ள ஊரக, நகர்ப்புற பால்பண்ணைகளின் தற் போதைய நடைமுறை கொள்திறன் நாளொன்றுக்கு 12.5 இலட்சம் லிட்டராக இருக்கிறது. இதனை பால் உச்சகட்ட கொள்முதல் காலமான நவம்பர்/டிசம்பர்-90/ஜனவரி-91 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 15.5 இலட்சம் லிட்டர் கையாள ஏதுவாக உயர்த்தத் திட்டம் உள்ளது.

மூன்றாவது பால்பெருக்குத் திட்டத்தின் திட்டகால முடிவான 1994 வருடத்தில் தமிழகத்தில் பால் கொள்திறன் நாளொன்றுக்கு 27.50 இலட்சம் லிட்டர் திறனுடையதாக இருக்கும். மேலும் 1994 ஆம் ஆண்டிற்குள் பால் விற்பனையை சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளொன்றுக்கு 10 இலட்சம் லிட்டராகவும், மாவட்டங்களில் நாளொன்றுக்கு 7 இலட்சம் லிட்டராகவும் அதிகரிக்க திட்டமிடப்பட்டிருக்கிறது.



1990 ஏப்ரல் 12]

பால் பண்ணைகளில் பதனிடும் கொள்திறன்.

| மாவட்டம். (1) | இருப்பிடம். (2) | தற்போதைய கொள் திறன். (3) (இலட்சத்தில்) |
|---|---|---|
| **I. பெருநகர் பால்பண்ணைகள் :** | | |
| சென்னை | மாதவரம் | 1.75 |
| | அம்பத்தூர் | 3.00 |
| | | 4.75 |
| **II. கிராமப்புற பால்பண்ணைகள் :** | | |
| வடஆற்காடு-அம்பேத்கார் | வேலூர் | 0.70 |
| தர்மபுரி | கிருஷ்ணகிரி | 0.50 |
| சேலம் | சேலம் | 1.50 |
| பெரியார் | ஈரோடு | 1.50 |
| கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 1.00 |
| நீலகிரி | ஊட்டி | 0.50 |
| மதுரை | மதுரை | 1.50 |
| திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி | 0.50 |
| தஞ்சாவூர் | தஞ்சாவூர் | 0.26 |
| இராமநாதபுரம் மற்றும் பசும்பொன் தேவர் திருமகன். | காரைக்குடி | 0.50 |
| நெல்லை-கட்டபொம்மன் | திருநெல்வேலி | 0.50 |
| கன்னியாகுமரி | நாகர்கோயில் | 0.16 |
| | | 9.62 |

மொத்தம் : (4.75 9.62) 14.37 (நாளொன்றுக்கு)

[1990 ஏப்ரல் 12

(மேலே குறிப்பிட்டுள்ள நாளொன்றுக்கு 14.37 இலட்சம்
விட்டர் பால் பதனிடும் கொள்திறன் சுமார் 2 இலட்சம் லிட்டர்
பால் திரும்பவும் பதனிடப்படுவதால் (சென்னையில் 1.25
இலட்சம் லிட்டரும், இதர உற்பத்தி சமப்படுத்தும் பால்
பண்ணையில் 0.75 இலட்சம் லிட்டரும்) நடைமுறை கொள்
திறன் 12.37 இலட்சம் லிட்டர்கள் மட்டுமே ஆகும்).

பால் பெருக்கு மேம்பாட்டு நடவடிக்கைகள் :

கடந்த ஆண்டில் பால் உற்பத்தியைப் பெருக்க 453 பால்
உற்பத்தியாளர்கள் சங்கங்கள் நிறுவப்பட்டு 243 சங்கங்கள்
பதிவு செய்யப்பட்டன. 13 இலட்சம் பசு மற்றும் எருமை
கறவை இனங்கள் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வரப்
பட்டு அவைகளுக்குத் தேவைப்படும் செயற்கை இனவிருத்தி,
கால்நடைத் தீவனங்கள், புல் உற்பத்திக்கான மானியம்
நோய்க்கட்டுப்பாடு ஆகிய வசதிகள் அளிக்கப்பட்டன.

ஏறக்குறைய எல்லா பால் கூட்டுறவுச் சங்கங்களிலும்
செயற்கை இனவிருத்தி செய்முறை பயிற்சி அளித்து 1989-90-ல்
5.84 இலட்சம் கறவை இனங்களுக்கு உறைவிந்து செலுத்தப்
பட்டது.

எல்லா பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்
களிலும், நடமாடும் கால்நடை மருத்துவ உதவி தடங்கள்
அமைத்து நல்ல பயிற்சி பெற்ற கால்நடை மருத்துவர்கள் மூலம்
1989 ஆம் ஆண்டு 4.77 இலட்சம் கால்நடைகளுக்கு, மருத்துவ
உதவி செய்யப்பட்டது. மேலும், பால் உற்பத்தியாளர்களின்
கால்நடைகளுக்கு அவசர மருத்துவ உதவி அளிக்க அவசர
வழித் தடங்களும் செயல்படுத்தப்படுகின்றது. இந்த வரு
டத்தில் 71 முறையான கால்நடை வழித்தடங்களும் 33 அவசர
வழித்தடங்களும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றி
யங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டன.

இந்த வருடத்தில் செயற்கை இனவிருத்தியின் பயனாக
69,712 உயர்ந்த ரக கிடேரி கன்றுகள் பெறப்பட்டன. தமிழ்
நாடு பசுக்களுடன் மேல்நாட்டு ஜெர்சி/பிரிசியன் இனங்களின்
கலப்பினால் பால் உற்பத்தி அதிகரித்து உள்ளது. இவ்வாறு
பிறந்த கிடேரிக் கன்றுகள் தங்கள் தாய் கறவையினங்களைக்
காட்டிலும் 5 மடங்கு அதிகமான பாலைக் கொடுக்கும் திறனை
பெற்றுள்ளன. எனவே, உயர்ந்த ரக அயல்நாட்டு விந்துக்கள்
அதிக அளவில் தொடர்ந்து கிடைக்கச் செய்து அதன் மூலம்
நம் கால்நடைகளின் உற்பத்தித்திறனை பெருக்கும் நோக்



1990 ஏப்ரல் 12]

கோடு 1973 ஆம் ஆண்டு உதகையில் ஒரு ஜெர்சி இன கால்
நடை பண்ணை நிறுவப்பட்டது. இந்தப் பண்ணையின் மூலம்
உயர்ந்த ரக ஜெர்சி இன காளைகள் தொடர்ந்து பெறும்
நிலை உறுதி செய்யப்பட்டது.

மேலும் பிரிசியன் இனக் காளைகளுக்கும் தேவை அதிகரித்
தால் அந்த வகைக் காளைகளும் இந்தப் பண்ணையில் பரா
மரிக்கப்பட்டு வருகிறது.

அதிக வீரியமுள்ள அயல் இன ரகமான ஜெர்சி/பிரிசியன்
இனங்களால் நம்நாட்டு உஷ்ண சீதோஷ்ண நிலையைத் தாக்குப்
பிடிக்க முடிவதில்லை. இத்தகைய சூழ்நிலையினால் மேல்
நாடுகளில் உள்ளதுபோல் அதிக பால் உற்பத்தி செய்ய
அவற்றால் முடியவில்லை. மேலும், கால்நடை விஞ்ஞானிகள்
நமது நாட்டு வெப்பநிலைக்கு ஏற்கும் வகையில் அயல் இன
பாரம்பரியம் 50 விழுக்காடுகளுக்கு மிகைப்படாமல் பரா
மரிக்கப்பட வேண்டுமென கருதுகிறார்கள். எனவே, கலப்பின
பசுக்களை மீண்டும் அயல் இன பொலிகாளையுடன் இன
விருத்தி செய்யாமல் கலப்பின வகை காளைகளுடன் இன
விருத்தி செய்து 50 விழுக்காடுகளுக்கு மேல் அயல் இனப்
பாரம்பரியம் மிகாமல் இருக்கப் பார்க்க வேண்டும். நமது
கலப்பின பசுக்களுக்கு இன விருத்தி செய்ய கலப்பின காளை
களை உற்பத்தி செய்யவும் பராமரிக்கவும் வசதிகள் தேவைப்
படுகின்றன. இப்போது உதகையில் உள்ள ஜெர்சி பண்ணை
யில் கலப்பின ஜெர்சி காளைகளின்/கலப்பின காளைகளின்
விந்துகள் சேகரிக்கப்பட்டு உறை விந்து குச்சிகள் தயாரிக்கப்
பட்டு செயற்கை முறை இனவிருத்திக்கு உபயோகப்படுத்தப்
படுகிறது.

கலப்பின காளைப்பண்ணை :

கலப்பின உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்வதற்கு ரூ. 59
இலட்சம் செலவில் ஒரு கலப்பின காளை பண்ணை உருவாக்க
திட்டமிடப்பட்டுள்ளது.

எருமை இன உறைவிந்து நிலையம் :

எருமைகளின் பால் உற்பத்தி திறனை, முர்ரா இன எருமை
களின் கலப்பினால் அதிகரிக்க முடியும். முர்ரா இன உறை
விந்து தேவையை நிறைவுச் செய்ய ஈரோட்டில் ஒரு எருமை இன
உறைவிந்து நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த நிலையத்
தில் 68 முர்ரா எருமை பொலி காளை மூலமாக உறை
விந்துக் குச்சிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இந்த ஆண்டில் உதகை ஜெர்சி பண்ணை மூலம் 7.4
இலட்சம் அதிக வீரியமுள்ள உறைவிந்து குச்சிகளும், ஈரோட்டில்
உள்ள எருமை உறைவிந்து பண்ணையில் 2.34 இலட்சம் முர்ரா
எருமை உறைவிந்து குச்சிகளும் உற்பத்தி செய்யப்பட்டன.

**கால் நடை வழித்தோன்றல் ஆய்வுத்திட்டம் :**

பொலி காளைகள் தான் பெற்றுள்ள பால் உற்பத்தித்
திறனைத் தன் சந்ததிக்கு அளிக்கக்கூடிய திறமை அதற்கு இருக்
கின்றனவா என்பதைத் தெரிந்துக் கொள்ள இத்திட்டம் 1986
ஆம் ஆண்டில் ஈரோட்டில்
இத்திட்டம் தற்சமயம் தென்னாற்காடு, தர்மபுரி, சேலம்,
பெரியார் மற்றும் கோவை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு
வருகிறது. மேலும், இத்திட்டம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்
திலும், பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்திலும் விரிவு
படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதுவரை இந்தத் திட்டத்தில் 22,410 முர்ரா இன உறை
விந்து குச்சிகளும், 9,665 கலப்பின உறைவிந்து குச்சிகளும் உப
யோகிக்கப்பட்டுள்ளது. இவ்வகையில் பிறந்த பெண் கன்று
களின் பால் உற்பத்தித் திறன் அவற்றின் தாயின் பால் உற்பத்தித்
திறனுடன் ஒப்பிடப்பட்டு, இனவிருத்தி உபயோகித்த காளை
யின், பால் அதிகரிக்கும் திறன் கணிக்கப்படுகிறது.

**பசுந்தீவனப் பெருக்குத்திட்டம் :**

இத்திட்டம் தேசிய பால்வள/தேசிய பயன் குறைந்த நில
அபிவிருத்தி வாரியத்தின் உதவியுடன் மாவட்ட பால் உற்பத்தி
யாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் மூலம் கிராம அளவில்
செயல்படுத்தப்படுகின்றது. பால் பெருக்குத் திட்ட மாவட்
டங்களில், பசுந்தீவனம் பயிரிட 1,800 ஹெக்டேர் நிலம்
உபயோகிக்கப்படுகிறது. இது 1992 ஆம் ஆண்டில் 6,180
ஹெக்டேர் நிலமாக கொண்டுவர இலக்கு நிர்ணயிக்கப்பட்
டுள்ளது. இதனால் பால் உற்பத்திக்கு ஆகும் செலவு குறைக்கப்
பட்டு உற்பத்தியாளர்களுக்கும், நுகர்வோர்களுக்கும் நன்மை
பயக்கும் வாய்ப்புள்ளது.

**நாற்றங்கால் திட்டம் :**

தேசிய பால்வள நிறுவனம், பசுந்தீவனம் மற்றும் மரக்கன்று
கள் வளர்ப்புக்கு நாற்றங்கால் அமைக்க நிதியுதவி வழங்கி
வருகிறது. பால் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு ஒவ்வொரு
நாற்றங்காலிலும் ஆண்டொன்றிற்கு 10,000 மரக்கன்றுகள்
உற்பத்தி செய்யப்படுகின்றன. இதற்காக ரூ. 4,500 வரை மானி
யம் வழங்கப்படுகிறது.



**புல் வளர்ப்புத் திட்டம் (சில்வி பாஸ்ச்சர் திட்டம்) :**

இத்திட்டத்தின்கீழ் எப்படி மழை நீரைத் தேக்கி பசுந்
தீவனப் பெருக்கத்தை உண்டுபண்ணி, அதன் மூலம் கால்
நடைகளுக்குத் தேவையான தீவனத்தைக் கொடுத்து பால் உற்
பத்தியைப் பெருக்குவது என்பதை எல்லாப்பால் உற்பத்தி விவ
சாயிகளுக்கும் விளக்கப்படுகின்றது. இது மட்டுமில்லாது பால்
உற்பத்தி சங்க அங்கத்தினர்களின் விவசாயத்திற்கு உபயோக
மற்ற காலி நிலங்களை குறைந்தது ¼ ஹெக்டேர் நிலத்தில்
நல்ல தரமுள்ள விதையை அளித்து புல் வளர்ப்பு மற்றும்
பசுந்தீவனத்தைப் பெருக்க உதவி செய்யப்பட்டு வருகிறது.

கிராம வன திட்டத்தின்படி பால் உற்பத்தியாளர் சங்கங்
களின் சாதாரண புல் தரையையும் அரசு நிலம் மற்றும் வனத்
துறையின் நிலங்கள் ஆகியவற்றை நீண்டகால குத்தகைக்கு
எடுத்து 10 ஹெக்டேர் நிலப்பரப்பிலாவது புல் அல்லது பசுந்
தீவனம் நாற்றங்கால்கள் வளரச்செய்யக் கேட்டுக் கொள்ளப்
படுகிறது. இத்தகைய பசுந்தீவன நிலப்பரப்பானது சங்க
உறுப்பினர்களுக்கு ஒரு செயல் விளக்க நிலமாக இருப்பதோடு
பசுந்தீவனம் கிடைக்கவும் உதவுகிறது.

தமிழ்நாட்டில் 124 நாற்றங்கால்கள் ஏற்படுத்தப்பட்டு,
11.58 இலட்சம் விதைக்கன்றுகள் மூலம் பசுந்தீவனம் பெருக்க
2,052 ஹெக்டேர் நிலம் உபயோகப்படுத்தப்படுகிறது.

விவசாய வனத் திட்டத்தின் கீழ் 15 சங்கங்களில் 505 ஹெக்
டேர் நிலப்பரப்பில் பசுந்தீவன கன்றுகள் வளர்க்கப்பட்டு
இதன் மூலம் 954 விவசாயிகள் பயனடைகிறார்கள்.

கிராமவன திட்டத்தின் கீழ் 150 ஹெக்டேர் நிலப்பரப்பில்
31,214 விதைக் கன்றுகள் பயிர் செய்யப்பட்டு வருகின்றன.

**சிறப்பு கால்நடை இனவிருத்தி திட்டத்தின் கீழ் கலப்பின பசுங்
கன்று வளர்ப்புத் திட்டம் :**

தமிழ்நாட்டில் 6 மாவட்டங்களில் முறையே தென்னாற்
காடு, வட ஆற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்புவ
ராயர், மதுரை, சேலம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்
களில் தமிழ் நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணை
யத்தினால், கலப்பின பசுங்கன்று வளர்ப்புத் திட்டம் அமுல்
படுத்தப்படுகிறது.

நான்கு மாத வயது முதல் பத்து மாத வயதிற்குள் உள்ள
கலப்பின பசுங்கன்றுகள் வைத்திருக்கும் சிறு விவசாயிகள், குறு
விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலிகளை பயனாளிகள்
( Beneficiaries ) இத்திட்டத்தில் சேர்க்கப்படுகின்றனர்.

இத்திட்டத்தில் சேர்ந்துள்ள ஒவ்வொரு
ஒரு கன்று வீதம் வளர்க்க திட்டத்தில் மானியம் பயனாளியும்,
அளிக்கப்படுகிறது. தீவனமாக

1988-89 ஆம் ஆண்டில், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்
கூட்டுறவு இணையம் நிர்ணயிக்கப்பட்ட 2,013 கன்றுகள்
என்ற இலக்கைத் தாண்டி 2,069 கன்றுகளை ரூ. 63.89 இலட்சம்
செலவில் சேர்த்துள்ளது.

1989-90 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 3,250 கன்று
கள் என நிர்ணயிக்கப்பட்ட இலக்கு எட்டப்பட்டுள்ளது. அதற்
காக அரசு நிதியாக ரூ. 101.97 இலட்சங்கள் ஒதுக்கியுள்ளது.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம்
1990-91 ஆம் ஆண்டில் 6,500 கலப்பின பசுங்கன்றுகள் ரூ.
202.63 இலட்சங்கள் செலவிலும் மற்றும் 200 எருமைக்கன்று
கள் ரூ. 6.80 இலட்சங்கள் செலவிலும் சேர்ப்பதற்கான கருத்துரு
அரசின் ஆய்வில் உள்ளது.



## தமிழ்நாட்டில் தொழிலாளர் நலன்.

## 1990—91.

### அத்தியாயம் 1.

### 1. பொதுவான அணுகுமுறை

நாட்டின் உற்பத்தித் திறனை பெருக்குவதில் தொழிலாளர்களுக்கு முக்கிய பங்கு பணி இருந்தாலும், தொழிலாளர்கள் இவ்வகையில் மிக முக்கியமாகவும் தவிர்க்க முடியாதவர்களாயும் கருதப்படுகின்றனர். இன்றைய தொழில் நுட்ப மற்றும் அறிவியல், விஞ்ஞானத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் காரணமாகவும் அதன் அடிப்படையில் ஏற்பட்டுள்ள இதர சூழ்நிலைகள் காரணமாகவும் தொழிற்சாலைகளிலும் ஏனைய தொழில் நிறுவனங்களிலும் தொழிலாளர்களின் எண்ணிக்கை, குறைக்க வழிவகைகள் ஏற்படலாம். இருப்பினும் தொழிலாளர்களுடைய ஆக்கப் பூர்வமான பணியை, உழைப்பை, நிரந்தரமாக முடக்கி வைக்கவோ, நிறுத்தவோ, தவிர்க்கவோ இயலாது. ஆகவே தான் இந்த அரசு தொழிலாளர்களின் சிறப்பைக் கருதி அவர்களது வளர்ச்சியிலும் மேம்பாட்டிலும் அக்கறை கொண்டு, இதனை ஏற்றுக் கொண்டுள்ளது.

1.2 அதே நேரத்தில் தொழில் வளர்ச்சியும் ஆக்கப் பணியும் பொறுத்தமட்டில் முன்னேற்றம் அவசியம் என கருதப்படுகிறது. தொழில் வளர்ச்சியும் தொழிலாளர் நலனும் அரசின் முக்கிய குறிக்கோள் எனக் கருதப்பட்டு, இதனையே அரசு ஒரு பின்பற்றத்தக்க வழிவகையாக கொண்டுள்ளது.

1.3 தொழிலாளர்களின் '' வேலை நிறுத்தம் '' உரிமைக்கு எதிராகவோ அல்லது கதவடைப்பு செய்யும் நிர்வாகத்தினருக்கு சாதகமாகவோ இருப்பது இந்த அரசின் கொள்கை அல்ல. மாறாக, எவ்வகையிலும் நாட்டின் உற்பத்தித் திறன் பாதிப்பிற்கு உட்படலாகாது என்பதே அரசின் எண்ணம். தொழிலாளர்களின் வேலை நிறுத்த நடவடிக்கைகளுக்கும், மற்றும் நிர்வாகத்தினரின் கதவடைப்பு போன்ற நடவடிக்கைகளுக்கான உண்மையான காரணங்களை அறிந்து அவைகளை களைந்து, நல்ல ஆரோக்கியமான ஒரு சூழ்நிலையை உருவாக்குவதில் இந்த அரசு மிகவும் நாட்டம் கொண்டுள்ளது. இதற்காக தொழிலாளர் நலத்துறை முடுக்கி விடப்பட்டு மிகவும் முனைப்பாகவும், ஆக்கப் பூர்வமாகவும் பணியாற்றிடவும், மேற்குறிப்பிட்டுள்ள குறைபாடுகள் களைந்திடவும் செயற்திட்டங்கள் தீட்டி, ஏற்படும் சிக்கல்களை போக்கவும் துரித நடவடிக்கைகள் மேற்கொண்டு அரசு இயந்திரம் செயல்பட்டு வருகிறது.

1.4 அரசினரால் அவ்வப்போது நடைமுறைப்படுத்தப்படும்
நலத் திட்டங்கள், மற்றும் வளர்ச்சிப் பணிகள் உண்மையில்
தொழிலாளர்களுக்கும் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட
வர்க்கத்திற்கும் போய்ச்சேரும் வகையில், திட்டங்களை தீட்டு
வதில் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது. தொழிலாளர் நலச்
சட்டங்கள், நீதிமன்ற ஆணைகள்/தீர்ப்புகளை அமுல் செய்யா
தவர்களின் மீது குற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்
பட்டாலும், தொடர்ந்து இந்த அரசு தண்டனையோ அல்லது
தண்டிப்பதையோ மட்டும் வழிவகையாக எண்ணாமல் இன்னமும்
சற்று தாழ்ந்து சுமுகமான முறையில் பிரச்சினைகளுக்கு தீர்வு
காண்பதையே விரும்புகிறது. இந்த வகையில் தொழிலாளர்கள்
மற்றும் நிர்வாகத்தினருக்கிடையே எழுகின்ற பிரச்சனைகளை
சமூக ரீதியில், நாட்டின் நலன் கருதியும், உற்பத்தி திறன்
பாதிக்கப்படாமல் இருக்கும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்
பட்டு வருவதோடு, தொழிலாளருக்கு நலம் பயக்கும் சட்டங்களை
நியாயமான முறையில் அமுல்படுத்தவும் தீவிர நடவடிக்கைகள்
மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1.5 தொழிலாளர் மற்றும் அதில் வகைப்படுத்தாத தொழி
லாளர்கள் ஆகியோரின் பெரும்பாலான பிரச்சினைகள் மற்ற
நிலைமைகளை அரசு முழுமையாக அறிந்துள்ளது. வகைப்
படுத்தப்படாத தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள்
பெரும்பாலும் புறநகர் பகுதிகளில் வாழ்பவராக இருக்
கின்றார்கள் என்ற காரணத்தால் அவர்களது உரிமைகளை
யும், அவர்களுக்கென வரையறுக்கப்பட்டுள்ள நலத்திட்டங்கள்,
மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய குறைந்த பட்சக்
கூலி போன்ற பணி நிலவரங்களும் அறியாத துர்
பாக்கியசாலிகளாக இருக்கின்றார்கள். எனவே தான்,
இந்த அரசு இவ்வகை தொழிலாளர்கள் நலன் கருதி செம்மை
யான முறையில் விரைவு நடவடிக்கைகள் எடுத்து அவர்களுக்குக்
கிடைக்க வேண்டிய நியாயமான சலுகைகள் கிடைக்க பாடுபட்டு
வருகிறது. அரசு, இதனை ஒரு கொள்கையாகக் கொண்டு
வகைப்படுத்தப்படாத தொழிலாளர்களுக்கான குறைந்தபட்சக்
கூலியை இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை திருத்தம் செய்து
சீராய்வு செய்ய உத்தேசித்துள்ளது. இந்த வகையில் வாழ்க்கை
செலவுப் புள்ளி 50 புள்ளிகளுக்கு மிகைப்படும்போதோ அல்லது
இரண்டாண்டுகளுக்கு ஒருமுறையோ இவ்விதம் குறைந்த
பட்சக் கூலியை திருத்தியமைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

2. தொழில் நல்லுறவில் ஒரு புதிய அணுகுமுறை :

1.6 நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் தொழில்
வளர்ச்சிக்கும், சமூகத் தொழில் உறவு, மிக முக்கியமானதாகும்.
வளர்ந்து வரும் தொழில் வளர்ச்சியின் அடிப்படையிலும்,
விரைவாக முன்னேறி வரும் தொழில் மையத்தின் காரணமாக
வும் தொழில் உறவுகளில் சிறிது விரிசல் ஏற்பட்டு சில நேர்வு



களில் சற்று சிக்கலான பிரச்சினைகளாக உருவெடுக்கின்றன.
தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் இடையில் அதிக
அளவில் பிரச்சினைகள் தோன்றி வருகின்றன. இம்மாதிரியான
நேர்வுகளில் சுமுகமான தீர்வு காணப் பெறாத அவர்களுக்
கிடையே சிக்கலை ஏற்படுத்திக் கொள்வதும் காணப்படுகிறது.
இவ்விதமான சிக்கல்கள், சம்பந்தப்பட்ட பகுதியினருக்கு
பாதிப்பு ஏற்படுத்துவதோடன்றி நுகர்வோரின் தேவைக்கான
உற்பத்தித் திறனையும் பாதிக்கிறது. எனவே தொழில் வளத்
திற்குரிய ஆதரவை சமூகம் தர இயலாத நேர்வில், தொழி
லாளர்களும் சரி, வேலையளிப்போரும் சரி முன்னேற முடி
யாது. இவ்விதம் சமுதாய நலன் கருதி, சமூக நலனை நினைவிற்
கொண்டு, உற்பத்தியையும், உற்பத்தித் திறனை வெகுவாக
பாதிக்கும் காரண காரியங்களையும் அறிந்து அவற்றைத் தடுத்து
தகர்த்தெறிய வேண்டியுள்ளது. எனவே, தொழில் உறவின்
காரணமாக ஒரு நல்ல சூழ்நிலையையும், தொழிலாளர் பிரச்
சனைகள் காரணமாக எழும் தொழில் அமைதியின்மையை
அகற்றியும், நாட்டில் தொழில் அமைதியை நிலை நாட்டுவதே
அரசின் தலையாய கடமையாகக் கருதப்படுகிறது. இதன்
காரணமாக தொழில் உறவில் நல்ல சீரான முன்னேற்றத்தையும்
நல்ல ஏற்புடைய சூழ்நிலையையும் உருவாக்குவதில் அரசு
நாட்டம் கொண்டுள்ளது. தொழிலாளர்களும் நிர்வாகத்தினரும்
இணைந்து தொழில் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பாடு
பட வேண்டுமென்பதே அரசின் எண்ணம். தொழிலாளர்களின்
நலனும், நிர்வாகத்தினரின் உரிமைகளும் ஒன்றுக்கொன்று
பின்னிப்பிணைந்து ஒன்றோடொன்று சார்ந்துள்ளன. ஆனால்
சுயமாக இயங்கலாகாது. பிரச்சினைகளை மேலும் சிக்க
லாக்காமல், பொது நோக்குடன், பொது நலன் கருதி பிரச்சனை
களைத் தீர்ப்பதில் அக்கறைகாட்டும் பாங்கை வளர்த்துக் கொள்ள
வேண்டும். வேறு வகையில் சொல்ல வேண்டுமாயின், அரசாங்க
மும், சமுதாயமும் எதிர்பார்க்கின்ற அளவு, தன்னலம் கரு
தாமல், தியாக மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள
வேண்டும். சட்டம் மற்றும் வழக்காடுதல் போன்ற சிக்கல்களைத்
குறைப்பதில் அக்கறை செலுத்தி, மனிதநேயம், நம்பிக்கை
மற்றும் ஒற்றுமையுடன் பிரச்சினைகளை அணுகுவதில் மிகுந்த
அக்கறையைக் காட்டுதல் வேண்டும். இந்த தத்துவத்தின் அடிப்
படையில், நல்ல சூழ்நிலையுடனும், செம்மையான அளவில்
ஆரோக்கியமான சூழ்நிலையுடன் கூடிய தொழில் அமைதியைக்
காத்திடவும் தொழில் உறவை வலுப்படுத்தவும் இந்த அரசு
அனைத்து வழிகளிலும் பாடுபட்டு வருகிறது.

[1990 ஏப்ரல் 12

புதிய அணுகுமுறையில் தொழில் தகராறுகளைத் தீர்க்கும் வகையில் தொழில் நல்லுறவை நிலைநாட்டவும் புதிய யுக்திகளை புகுத்தும் நோக்குடனும், அரசு சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அவை :—

(அ) தொழிலாளர்கள் கூட்டுப் பொறுப்பினை வளர்த்தல்.

(ஆ) மதிப்பீட்டு முறை பற்றிய சொற்பொருள் விளக்கத்தைத் திருத்தியமைத்தல்.

(இ) புதிய கருத்து ஒருமைப்பாட்டு முறையைக் கொண்டு வருதல்.

(ஈ) ஒருவருக்கொருவர் நன்கு புரிந்து செயல்பட உதவுதல்.

(உ) மனத்திற்கிசைந்த தொழில் அமைதியையும் சூழ்நிலையையும் வளர்த்தல்.

அ. நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் தொழில் நல்லுறவு :

1.7 தமிழகத்தைப் பொறுத்தமட்டில் தொழில் நல்லுறவு சிறப்பாகவே உள்ளது. மேலும் 1989-ஆம் ஆண்டில் வேலை நிறுத்தங்கள் கதவடைப்பு போன்றவை மிகக் குறைந்த அளவிலேயே காணப்பட்டுள்ளன. 1988-ஆம் ஆண்டில் 190 வேலை நிறுத்தங்கள் இருந்தன. ஆனால் அவற்றின் எண்ணிக்கை 1989-ஆம் ஆண்டில் 168 மட்டுமே. 1988 ஆம் ஆண்டில் 21, 1989-ஆம் ஆண்டில் கதவடைப்பு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 18. இவ்விதமே 1988-ஆம் ஆண்டில் வேலை நிறுத்தங்களின் காரணமாக 16,93,198 மனிதநாட்கள் இழப்பிற்கு மாறாக 1989-ஆம் ஆண்டில் இதன் அளவு 14,54,084 மட்டுமே.

ஆ. தொழிற்தகராறுகளை பயனுள்ள முறையில் தீர்த்தல் :

1.8 மாநில சமரச அலுவலர்களால், மொத்தம் உள்ள 11,110 தொழிற் தகராறுகளில் 9,213 தொழிற் தகராறுகள் தீர்த்து வைக்கப்பட்டன. இது 83 சதவிகிதம் ஆகும். இதில் தொழிலாளர் ஆணையர் மற்றும் தொழிலாளர் துறையின் முதுநிலை அதிகாரிகளால் தீர்த்து வைக்கப்பட்ட பெரிய ஒப்பந்தங்களும் அடங்கும். சில முக்கிய ஒப்பந்தங்களை ஏற்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு தொழிலாளர் மற்றும் செய்தித்துறை அமைச்சர் ஆகியோரின் உதவி [illegible] ஆலோசனையும் தொழிலாளர் துறைக்குக் கிடைக்கும் [illegible]யிருந்தது. ஏற்பட்டுள்ள ஒப்பந்தங்களில் மூடிய



1990 ஏப்ரல் 12]

நிர்வாகங்களைத் திறக்கவும், பெருமளவிலான அமைதியின்மையைத் தடுக்கவும் வழிகோலிய கீழ்க்கண்ட முக்கிய ஒப்பந்தங்களைப் பற்றிக் குறிப்பிடலாம் :—

| | ஒப்பந்தம் ஏற்பட்ட தேதி. | தொழிலாளர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. மெட்டல் பாக்ஸ் (இந்தியா) லிட், தண்டையார்பேட்டை, சென்னை. | 24-4-1989 | 1,050 |
| 2. ருக்மணி மில்ஸ், சிலைமான், மதுரை. | 28-6-1989 | 600 |
| 3. பேரிஸ் கன்பெக்ஷனரி லிட்., நெல்லிக்குப்பம். | 1-9-1989 | 435 |
| 4. சர்க்கரைத் தொழிற்சாலைகள் | 28-9-1989 | 21,000 |
| 5. சினிமா தொழிலாளர்கள் .. | 8-10-1989 | சுமார் 10,000 |
| 6. ஸ்டாண்டர்டு மோட்டார் ப்ராடக்ஸ் இண்டியா லிட்., சென்னை-63. | 3-1-1990 | 3,030 |
| 7. சேஷசாயி பேப்பர் அண்டு போர்ட்ஸ் லிமிடெட், சேலம். | 7-1-1990 | 3,200 |
| 8. ஜி. கே. டி. டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ், கோயம்புத்தூர். | 11-1-1990 | 850 |
| 9. தமிழகத்திலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகள். | 5-4-1989 | சுமார் 20,000 |
| 10. சிம்கோ மீட்டர்ஸ், திருச்சி .. | 29-9-1989 | 750 |
| 11. பென்னர் (இண்டியா) லிட்., மதுரை. | 26-9-1989 | 1,055 |
| 12. தமிழ்நாடு சிமெண்ட்ஸ், ஆலங்குளம் மற்றும் அதன் உப நிறுவனங்கள். | 24-10-1989 | 2,250 |

| | | | |
|---|---|---|---|
| 13. | கெமிக்கல்ஸ் அண்டு பிளாஸ் டிக்ஸ் (இந்தியா) லிட்., மேட் டூர் டேம். | 30-5-1989 | 502 |
| 14. | லிம்கோ சால்ட் பேக்டரி, வேதாரண்யம். | 8-12-1989 | 60 தொழி லாளர்கள் 300 ஒப் பந்த தொழிலா ளர்கள். |

ஊ. மூடப்பட்ட ஆலைகள் மற்றும் பொறியியல் நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளித்தல்.

1.9. பல்வேறு மூடப்பட்ட தொழிற்சாலைகளில் குறிப் பாக பஞ்சாலைகளில் உள்ள தொழிலாளர்களின் துயர் துடைக்க அவர்களுக்கு நிவாரண நிதி அளித்தும் நிதி ஸ்தாபனங்கள் மூலமாக நிர்வாகத்தினருக்கு மூடிய ஆலை களைத் திறக்க நிதி உதவி அளிக்கவும் அரசு நடவடிக்கை எடுத்து வந்துள்ளது. 1989-ஆம் ஆண்டில் 19 மூடப்பட்ட பஞ்சாலைகள் மற்றும் 4 பொறியியல் நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதியி லிருந்து ரூ. 35.25 லட்சம் நிவாரணமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் 14,100 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர். இதற்கு மேலாக முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 33,91,400-ஐ முதலமைச்சர் அளித்துள்ளார். இதனால் மூடப் பட்டுள்ள 19 பஞ்சாலைகள் மற்றும் 4 பொறியியல் நிறுவனங் களிலுள்ள 16,957 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர். இவ்விவரங்கள் இணைப்பு 1-ல் அளிக்கப்பட்டுள்ளன.

எ. மூடப்பட்ட ஆலைகளைத் திறத்தல்.

1.10 இவ்வரசு ஆட்சிக்கு வந்த பின்னர் மூடிய ஆலை களில் உள்ள தொழிலாளர்களுக்கு நீண்ட கால நிவாரண மளிக்க மூடிய ஆலைகளைத் திறக்க எல்லா தீவிர முயற்சி களையும் மேற்கொண்டு 1989 ஓராண்டுக்குள் தொழிலாளர் களுக்கு வேலையளிக்கும் வகையில் கீழ்க்கண்ட மூடப்பட்ட ஆலைகளைத் திறந்து ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைச் செய்தது.



| வரிசை எண்ணும் ஆலையின் பெயரும். | மூடப் பட்ட தேதி. | திறக்கப் பட்ட தேதி. | தொழிலா ளர்கள் எண்ணிக் கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ் லிட்., ஆலைப் புதூர், கோயம்புத்தூர். | 8-6-1981 | 15-3-1989 | 250 |
| 2. கே. ஜி. எஸ். ஸ்பின்னர்ஸ், கோயம்புத்தூர். | 8-1-1985 | 15-3-1989 | 150 |
| 3. வாசுதேவா டெக்ஸ் டைல்ஸ், கோயம்புத்தூர். | 27-4-1987 | 15-3-1989 | 83 |
| 4. ஸ்ரீபாலாஜி காட்டன் மில்ஸ், வேம்படிதளம், சேலம் மாவட்டம். | 7-8-1987 | 21-8-1989 | 225 |
| 5. கோயம்புத்தூர் அமர் ஜோதி மில்ஸ். | 30-9-1987 | 9-2-1989 | 147 |
| 6. ராம்ஸ் டெக்ஸ்டைல்ஸ், கோயம்புத்தூர். | 30-10-1987 | 12-4-1989 | 170 |
| 7. அமராவதி டையிங்ஸ், உடு மலை, கோயம்புத்தூர் மாவட்டம். | 23-12-1987 | 8-11-1989 | 93 |
| 8. சற்குணா டெக்ஸ்டைல்ஸ், கோயம்புத்தூர். | 22-8-1988 | 10-7-1989 | 220 |
| 9. ருக்மணி மில்ஸ், சிலை மான், | 29-10-1988 | 17-7-1989 | 6(1) |

2. தொழில் நீதிமன்றங்களை வலுப்படுத்துதல் ;

1.11. தொழில் தகராறுகள் குறித்த வழக்குகள் நீதிமன் றங்களில் தேக்கமடைந்து காலதாமதமாவது அரசின் கவனத்தில் உள்ளதால், இதன் காரணமாக நீதிமன்றங்களின்

[1990 ஏப்ரல் 12

எண்ணிக்கையை உயர்த்தும் வகையில் மேலும் கூடுதலாக மூன்று
லேபர் கோர்ட்டுகள் முறையே, வேலூர், சேலம், மற்றும்
திருச்சி ஆகிய பகுதிகளில் துவக்கப்பட்டுள்ளன. இதனால்
ஓரளவு நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை குறை
வாகவும், உடனடி தீர்வு காணவும் வழிவகைகள் காணப்பட்
டுள்ளன. மேலும், வழக்குகளுக்கு விரைவில் தீர்வு காணும்
வகையிலும், தொழிலாளர் மற்றும் நிர்வாகத்தினர் வசதி
களைக் கருத்திற்கொண்டும், சென்னை மாநகரில் இயங்கும்
கூடுதல் லேபர் கோர்ட்டை கடலூருக்கும், இவ்விதமே மதுரை
யில் இயங்கும் கூடுதல் லேபர் கோர்ட்டை திருநெல்வேலிக்கும்
மாற்றல் செய்ய அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

ஊ. வலிவான ஒருங்கிணைந்த தொழிற்சங்கத் தேவை:

1.12. வளமான தொழில் உதவிக்கு வலிவான, பொறுப்புள்ள
தொழிற்சங்கம் இன்றியமையாததாகும். ஒரு வலிவான
சங்கம் இருக்கிறது என்பதே தொழிலாளர்களுக்கு தங்களின்
சட்டப்படியான நலன்கள் காக்கப்படும் என்ற நம்பிக்கையின்
ஆதாரமாக இருக்கிறது. இந்த நம்பிக்கை நிறைவான தொழி
லுறவை நிறுவிட மிகுந்தளவு உதவியாக இருக்கும். மிகுந்த
அளவிலான தொழிற் சங்கங்கள், தொழிலாளர்களின் கூட்டு
பேர ஆற்றலை வலிவு குன்றச் செய்வதோடு மட்டுமல்லாது
தொழிலாளர்களின் நலனைப் பாதிக்கும் வகையில் சங்கங்
களுக்கிடையே தேவையற்ற போட்டி மனப்பான்மையையும்
உருவாக்குகிறது. தொழிலாளர்கள் பெரும் அளவில் நன்மை
பெறும் பொருட்டு அவர்களின் நன்மைக்குரிய சட்டப்படியான
கடமையினை நிறைவேற்றிட இத்துறை தேவையான
நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

3. அமுலாக்கம் :—

அ. தொழிலாளர் நலச் சட்டங்கள் அமுலாக்கம் குறித்து
மேற்கொள்ளப்பட்டு வரும் சிறப்பு முயற்சிகள்.

1.13. கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள், உணவு
நிறுவனங்கள், பீடி நிறுவனங்கள் போன்ற நிறுவனங்களில்
உள்ள தொழிலாளர்கள், ஒப்பந்தத் தொழிலாளர்கள் போன்ற
பல்வேறு பிரிவுத் தொழிலாளர்களின் பணி நிலைகளின்
பொருட்டு பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள் அமுலில்
இருந்து வந்த போதும், மேற்படிச் சட்ட அமுலாக்கம் சிறந்த
முறையில் இல்லாவிடில், அச் சட்டத்தின் பயன்கள் தொழி
லாளர்களைச் சென்றடையாது. எனவே தொழிலாளர் நலச்
சட்ட அமுலாக்கம் பயனுள்ள வகையிலும், தீவிரமாகவும்
இருக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், தொழி
லாளர் துறையின் சட்ட அமுலாக்க அமைப்பு சீர் செய்யப்



1990 ஏப்ரல் 12]

பட்டுள்ளது. இதன்பொருட்டு, தக்க நடைமுறைத் திறன் மற்றும்
சரியான வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. மரபு வழியான
ஆய்வுகள் மற்றும் வழக்கு நடவடிக்கைகளை மேற் கொள்
வதற்குப் பதிலாக, கொள்கை மற்றும் செயல் முறைகளுக்கு
புது வடிவம் அளிக்கப்பட்டுள்ளது. சட்டத்தை அமுலாக்கம்
செய்யும் முன்னர், தவறு செய்யும் நிறுவனங்களுக்கு உரிய
அறிவுரைகள் மற்றும் சட்ட விவரங்களைக் கற்பிக்கும் பணி மேற்
கொள்ளப்படுகிறது. அமுலாக்கப் பணியின் முக்கிய குறிக்
கோளை விரிவாக்கும் வகையில் பின்வரும் தன்மைகள் சுருங்கக்
குறிப்பிடப்படுகின்றன.—

1. சட்டத்தின் பயன்களை தொழிலாளர்கள் அடையச்
செய்வது.

2. நுகர்வோர் நலத்தை பாதுகாத்தல்.

3. சட்டத்தை அமுல் செய்வதன் மூலம் துன்புறுத்தலை
யும், அச்சுறுத்தலையும் தவிர்த்தல்.

1.14. இதன் விளைவாக, தொழிலாளர் சங்கத்திடையே
நல்ல எதிர் விளைவுகளும், விழிப்புணர்வும் ஏற்பட்டுள்ளது.
1989 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில், இம் மாநிலத்தில் முக்கிய
நகரங்களிலுள்ள பெரிய நிறுவனங்களை ஆய்வு செய்யும் நோக்
கில், மாநிலம் தழுவிய அளவில் சிறப்பு ஆய்வு இயக்கம் மேற்
கொள்ளப்பட்டது. இதனால் தொழிலாளர் நலச் சட்டங்கள் கடை
வலியுறுத்தும், சட்ட ரீதியான தேவைகளை நிறுவனங்கள் கடை
பிடிக்கவேண்டிய சூழல்கள் ஏற்பட்டன. ஆரம்பத்தில் நிறுவனங்
கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்த போதும், கருத்தரங்குகள்
மற்றும் கூட்டங்கள் மூலம் தக்க விளக்கங்கள் அளிக்கப்பட்ட
தனால் அவர்கள் தற்போது அலுவலர்களுடன் இணக்க நிலை
யில் இருந்து வருகின்றனர்.

1.15. எடையளவுகள் சட்டத்தின் கீழும் நுகர்வோர் பாது
காப்பின் பொருட்டு, சிறப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு
வருவதுடன் முரண்பாடுகள் காணப்பெறும் தருணங்களில்
உரிய வழக்கு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வரு
கின்றன. குற்றங்களை ஈடு செய்தல் முறைக்கு முதன்முதலாக
சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இம் முறை வர்த்
தகர்கள் தங்களின் தவறினை உணரவும், நீதிமன்றம் செல்
வதை தவிர்க்கவும் பெரிதும் உதவுகிறது. மேலும், இம்
முறையின் மூலம் சட்ட அமுலாக்க அலுவலர்கள், தங்களது
பொறுப்பு மிக்க பிற அலுவலக பணிகளை தவிர்த்து, நீதி
மன்றங்களுக்குச் சென்று, வழக்கின் பொருட்டு, அங்கு பெருத்த
கால விரயத்தை செய்வதும், இதன் மூலம் தடுக்கப்பட்டுள்

ளது. இம் முறையின் மூலம், உரிய சட்டப் பிரிவுகளை பயன்
படுத்தி, கடந்த 9 மாதங்களில் (1—4—1989 முதல்
31—12—1989 வரை) 9,584 வழக்குகளில் ரூ. 13,47,145
அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

ஆ முறைப்படுத்தப்படாத அமைப்பு ரீதியற்ற தொழி
லாளர்களின் நலனை பாதுகாக்கும் பொருட்டு
மேற்கொள்ளப்பட்ட போதிய முயற்சிகள்.

1.16. போராடும் வலிவற்ற அமைப்பு ரீதியற்ற தொழி
லாளர்களுக்கும் சட்ட ரீதியான சலுகைகளை அளிப்பதில்
இவ்வரசு பெரிதும் அக்கறை கொண்டுள்ளது. இப் பணி
யில், 1948 ஆம் ஆண்டு குறைந்த பட்ச ஊதியச் சட்டம்,
பெரும் பங்கேற்று வருகிறது. இச் சட்ட அட்டவணையில்
இதுநாள் வரை 70 தொழில்கள் சேர்க்கப்பட்டு, அத் தொழில்
களில் உள்ள பல்வேறு தொழிற் பிரிவுகளுக்கும் குறைந்த
பட்ச ஊதிய விகிதங்கள் நிர்ணயம்/மறு நிர்ணயம் செய்யப்
பட்டு வருகின்றன. பரிசீலனைக்குரிய ஆண்டில் கோணி தொழி
லுக்கு முதன் முறையாக குறைந்த பட்ச ஊதிய விகிதங்கள்
நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. மேலும், பின்வரும் தொழில்
களுக்குக் குறைந்த பட்ச ஊதிய விகிதங்கள் மறு நிர்ணயம்
செய்யப்பட்டுள்ளன.

1. மருத்துவமனை மற்றும் மருத்துவ இல்லத் தொழில்
(அரசு மற்றும் ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனைகள் மற்றும் மருந்
தகங்கள் நீங்கலாக).

2. விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்.

3. புகையிலை தயாரிப்புத் (பீடி தயாரிப்பு உள்பட)
தொழில்.

4. கைத்தறி நெசவுத் தொழில்.

5. புகையிலை தயாரிப்புத் (பீடி சுருட்டுதல்) தொழில்.

6. கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள்

1.17. குறைந்த பட்ச ஊதிய நிர்ணயம்/மறு நிர்ணயம்
குறித்துப் பின்வரும் தொழில்கள் தொடர்பாக ஆலோசனைக்
குழுக்கள் அரசால் அமைக்கப்பட்டு, அவைகள் செயல்பட்டு
வருகின்றன :—



குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம்.

1. தகர கொள்கலன்கள் தயாரிப்புத் தொழில்.

2. எலக்ட்ரானிக் தொழில்.

3. தேங்காய் உரிக்கும் தொழில்.

4. காகிதம் மற்றும் அது தொடர்புடைய தொழில்கள்.

5. பாலிதீன், புராசசிங் போம் வகைகள் மற்றும் பிளாஸ்டிக் தயாரிப்புத் தொழில்.

6. பட்டு வளர்ப்புத் தொழில்.

7. அப்பளம் தயாரிக்கும் தொழில்.

குறைந்தபட்ச ஊதிய மறு நிர்ணயம்.

1. முந்திரி தொழில்.

2. வெளுப்பாக்கல் அல்லது சாயம் தோய்த்தல் அல்லது இரு தொழில்கள்.

3. திரைப்பட தொழில் (தயாரிப்பு, விநியோகம் மற்றும் விளம்பரம் உட்பட).

4. உணவு நிறுவனங்கள்.

1.18. கீழ்க்காணும் தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் தொடர்பாக ஆலோசனைக் குழுக்கள் அமைப்பது குறித்த செயற் குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன :—

1. கெமிக்கல் மற்றும் டிஸ்டில்லரி தொழில்.

2. பட்டு இழை முறுக்கும் தொழில்.

3. கைவினைத் தொழில்.

4. நர்சரிப் பள்ளிகள், தனிப்பயிற்சி கல்லூரிகள் போன்ற வர்த்தக ரீதியில் நடத்தப்பெறும் கல்வி நிறுவனங்கள் தொழில்.

1.19. பின்வரும் தொழில்களுக்குக் குறைந்த பட்ச ஊதிய நிர்ணயம்/மறு நிர்ணயம் குறித்த செயற் குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

குறைந்த பட்ச ஊதிய நிர்ணயம்.

1. கழிவுப் பஞ்சாலை தொழில் (குழு முறை).

2. கள் மற்றும் பதநீர் இறக்கும் தொழில் (குழு முறை).

குறைந்த பட்ச ஊதிய மறு நிர்ணயம் (அறிவிப்பு முறை).

1. காபி பதப்படுத்தும் தொழில்.

2. அரிசி ஆலை, மாவு ஆலை மற்றும் பருப்பு ஆலைத் தொழில்.

3. வாசனை மற்றும் மெல்லும் புகையிலை தயாரிப்புத் தொழில்.

4. மூக்குப்பொடி தயாரிப்புத் தொழில்.

5. பொது மோட்டார் போக்குவரத்துத் தொழில்.

6. தோல் மற்றும் தோல் பதனிடும் தொழில்.

7. கயிறு தயாரிக்கும் தொழில்.

8. தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழில்.

9. செங்கல் மற்றும் ஓடு தயாரிக்கும் தொழில்.

10. லாண்டரி மற்றும் துணி வெளுக்கும் தொழில்.

11. ஜவ்வரிசி தொழில்.

12. அச்சக தொழில்.

13. விலைக்கு வாங்கும் தேயிலை தொழிலகங்கள்.

14. ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி தொழில்.

1.20. அட்டவணையில் உள்ள தொழில்களுக்குக் குறைந்த பட்ச ஊதிய நிர்ணயம்/மறு நிர்ணயம் செய்யும் தருணங்களில் நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்ணில் ஏற்படும் உயர்வினை ஈடு செய்யும் வகையில், நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்ட அகவிலைப் படியை நிர்ணயம் செய்வதை அரசு கொள்கையாகக் கொண்டுள்ளது.



1.21. கடந்த 21-8-1989 அன்று நடைபெற்ற குறைந்த பட்ச ஊதிய (மாநில) ஆலோசனை வாரிய கூட்டத்தின்போது பல்வேறு அட்டவணை தொழில்களுக்கும் அகவிலைப் படி நிர்ணயம் செய்வது குறித்து நெறிமுறைகளை வகுக்க வேண்டுமென கோரிக்கை எழுப்பப்பட்டதன் பேரில் குறைந்த பட்ச ஊதிய (மாநில) ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களைக் கொண்ட துணை குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இத் துணைக் குழு நீண்ட விவாதங்களை நடத்திய பின்னர் 1948 ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் அகவிலைப்படி நிர்ணயம் செய்வது சம்பந்தமான நெறிமுறை ஒன்றை ஒரு மனதுடன் பரிந்துரை செய்துள்ளது. துணைக் குழுவின் மேற்படி பரிந்துரை குறைந்த பட்ச ஊதிய (மாநில) ஆலோசனை வாரியத்தின் ஒப்புதலைப் பெற்ற பின்னர் இனி வருங்காலங்களில் குறைந்த பட்ச ஊதிய நிர்ணயம்/மறு நிர்ணயம் குறித்த வழி காட்டும் நெறிமுறையாகக் கொள்ளப்படும்.

(இ) விதிவிலக்குகளை திரும்பப் பெறல் :

1.22. கடந்த ஆண்டில் மாநில சட்ட மன்றத்தில் அறிவித்தபடி ஏற்கனவே பீடி தொழில் நிறுவன உரிமையாளர்களுக்கு அளிக்கப்பட்ட கீழ்க்காணும் விதிவிலக்குகள் திரும்ப பெறப்பட்டுள்ளன :—

1. வீட்டில் பணியாற்றும் பீடி சுற்றும் தொழிலாளர்களுக்காக பராமரிக்கப்பட்டு வரும் ஊதியத்துடன் வழங்கும் விடுப்புப் பதிவேடுகள்.

2. வீட்டில் பணியாற்றும் பீடித் தொழிலாளர்கள் லாக் புத்தகம் பராமரித்தல்.

3. வீட்டில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு பராமரிக்கப்படும் பணிப்பதிவேடு.

இந்த விதிவிலக்குகளை ரத்து செய்வதால் பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர் சட்ட விதிகளின் கீழ் பயனுள்ள வகையில் அமுல் செய்ய ஏதுவாக இருப்பதோடு குறிப்பாக வீட்டில் பணியாற்றும் பெண் தொழிலாளர்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

4. நலத் திட்டங்கள் மேற்கொள்ளுதல் :

(அ) பீடி தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி செய்து தருதல்.

1.23. பீடி சுற்றும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களில், பொருளாதார நிலையில் பின்தங்கிய நிலையில் உள்ள தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி செய்து தரும் வகையில் வீடு கட்டிக்கொள்ள, ஒரு வீடு கட்ட தேவையான தொகையில் 50 சதவீதம் அல்லது அதிக பட்சம் ரூ. 5,000-க்காக அரசு மானியம், இந்திய அரசால் தமிழகத்திற்கு அளிக்கப்பட்டு வருகிற இத் திட்டத்தின் கீழ் வேலூரில் சத்துவாச்சாரி என்னுமிடத்தில் 150 வீடுகள் ஏற்கனவே கட்டப்பட்டு விட்டன.

1.24. மாநிலத்தில் உள்ள பீடித் தொழிலாளர்களுக்கென 1,000 வீடுகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. ஒவ்வொரு வீடும் ரூ. 15,000 செலவில் கட்டப்படும். இதற்கு பீடித் தொழிலாளர் நல நிதியிலிருந்து ரூ. 5,000 மானியமாகப் பெறப்படும். மீதமுள்ள ரூ. 10,000 அட்கோவிடமிருந்து கடனாகப் பெறப்படும். இந்தக் கடன் தொகை 7 சதவீதமாக ஆண்டு வட்டியுடன் 22 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

(ஆ) புதிய சட்டங்கள் :

1.25. பாராளுமன்றத்திற்கும், தமிழக சட்டப் பேரவைக்கும் நடைபெறும் தேர்தல் நேரத்தில், தேர்தல் நாளன்று தொழிலாளர்களுக்குக் கட்டாயமாக விடுப்பு அளிக்கும் பொருட்டு 1958-ம் ஆண்டு தமிழ்நாடு தொழிற் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைகள்) சட்டத்தைத் திருத்த அரசு உத்தேசித்துள்ளது.

1.26. தமிழ்நாட்டிலுள்ள தொழிற்சாலைகளிலும், தொழிற் நிறுவனங்களிலும் தனியார்களின் கீழ் பாதுகாவலர்களாகப் பணிபுரியும் தொழிலாளர்களின் வேலை வாய்ப்பினையும், பணி நிலைமைகளையும், முறைப்படுத்துவதற்கும், ஊதியம் மற்றும் இதர சலுகைகள் அளிப்பதற்கு வேண்டி தனியாக சட்டமொன்றை இயற்ற இந்த அரசு முடிவு செய்துள்ளது. மத்திய அரசின் இசைவு பெற்றதும், அதற்கான சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்படும்.

1.27. தொழிலாளர் சமூகத்திற்கு குறிப்பாக அமைப்பு ரீதி இல்லாத தொழிலாளர்களுக்கு தக்கமுறையில் உதவும் பொருட்டு, தொழிலாளர் சட்ட ஆலோசனைக் குழுக்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட உள்ளன.

1.28. தொழிலாளர்களிடையே தலைமை ஏற்று நடத்தும் ஆற்றலை ஊக்குவிக்கும் பொருட்டு, அவர்களுக்கு தொழிலாளர்களைப் பற்றியும், தொழிலாளர் நலச் சட்டங்களை நடைமுறைப்படுத்துவது மற்றும் அது தொடர்பான பொருள்கள் பற்றியும்



தக்க பயிற்சி அளிக்க வேண்டுமென்று அரசு கருதுகிறது. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையமும், தொழிலாளர் கல்வி நிலையங்களும், ''தொழிற்சங்கத் தலைமை'' பற்றியும் மற்றும் அது தொடர்பானவைகள் பற்றி தொழிலாளர்களுக்கென்று பல பயிற்சிகள் நடத்தி வருகின்றன.

5. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம், சென்னை.

1.29. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் 1973 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்குமிடையே சுமுகமான உறவுகள் நிலைபெற தேவையான வழிவகைகளை ஆராய பயன்படும் வகையில் ஆராய்ச்சி மையமாகவும், சிறந்த தொழிற்சங்க அமைப்பை உருவாக்க உதவிடவும், மேலும் தொழிலாளர் துறையில் பணியாற்றும் அலுவலர்களின் திறமையை மேம்படுத்தும் நோக்குடனும் இக்கல்வி நிலையம் துவக்கப்பட்டது. இக் கல்வி நிலையத்தில் துறையின் பணியாளர்களுக்கு புதிதாகப் பயிற்சி அளிப்பதோடன்றி, கடைகள் நிறுவனச் சட்ட விதிகள், தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்ட விதிகள் மற்றும் நிர்வாகத்தினர் ஆகியோருக்கு தொழிலாளர் நலச் சட்ட விதிகள் மேலாண்மையையும், செயலாக்கத்தையும், வளர்க்கும் வகையில் அவ்வப்போது கருத்தரங்குகள் சிறப்பான முறையில் நடத்தப்பட்டு வருகின்றன. தொழிற்சாலைச் சட்டத்தின் கீழ் மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் நிர்வாகத்தினர் மற்றும் தொழிலாளர்களுக்கும் பலனளிக்கும் வகையில் இக்கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன. சென்னை பல்கலைக் கழகத்தின் ஒப்புதலுடன் தொழிலாளர் கல்வி பட்டப் படிப்பும் மற்றும் பி.எல். எம். எம்., எல். எம்., போன்ற பட்டப் படிப்புக் கல்வியும் கற்பிக்கப்பட்டு வருகிறது. இவற்றில் பி.எல்.எம்., மற்றும் எம்.எல்.எம். ஆகிய பட்டப்படிப்புகள் இக்கல்வி நிலையத்தில் முறையே 1987–88 மற்றும் 1988–89 ஆம் ஆண்டுகளில் துவக்கப்பட்டன. இவ்வகையில் 60 மாணவர்கள் இப்பட்டப் படிப்பினைப் பயின்று வருகிறார்கள்.

6. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் :

1.30. நடைமுறையில் இருந்து வரும் தொழிலாளர் நலச் சட்டங்களின் பயன் கிடைக்கப் பெறாதவர்களுக்கு அதன் பயன் கிடைக்கும் வகையில், தொழிலாளர்களின் நலனுக்கென உருவாக்கப்பட்ட ஒரு சட்டமாகும். தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம், 1972 இச்சட்டத்தின் கீழ் மாநில தொழிலாளர் நல அமைச்சரை தலைவராகக் கொண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் இயங்கி வருகிறது. இவ்வாரியத்தின் நிதியிலிருந்து தொழிலாளர்களுக்கும், அவர் தம் குடும்பத்தினருக்கும் பல்வேறு அடிப்படை வசதிகள் சலுகைகள், செய்யப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் இவ்வாரியத்தின் கட்டுப்பாட்டில் 52 தொழிலாளர்

நல மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இம் மையங்களில் தொழிலாளர்களின் குடும்பத்தின் ஆதரவில் வாழ்ந்து வரும் பெண்களுக்கு தையற் தொழில் கற்றுக் கொடுத்தலும் மற்றும் இளங் குழந்தைகளுக்கான பள்ளியும் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பள்ளியில் பயிலும் சிறார்களுக்கு சத்துணவுடன் கூடிய மதிய உணவு மற்றும் பால் வழங்கப்படுகின்றன. பயிற்சி பெறுவோருக்கு உதவித் தொகையும் வழங்கப்படுகின்றன.

வாரியத்தின் எதிர்காலத் திட்டங்கள்.

(1) தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் ஊட்டி, கொடைக்கானல் போன்ற இடங்களிலும், இராமேஸ்வரத்திலும் தங்கும் விடுதிகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(2) மதுரை, ஆஸ்தின்பட்டி, வேலூர் மற்றும் பெண்ணாத்தூர் ஆகிய இடங்களில் காச நோயால் அவதியுறும் தொழிலாளர்களின் நலன் கருதி, அரசு பொது மருத்துவமனைகளில் தொழிலாளர்களுக்கென தனியே காசநோய் வார்டுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளன.

(3) சென்னை மாநகரில், இவ்வாரியத்தால் மே தின நூற்றாண்டு நினைவு மண்டபம் ஒன்று கட்ட நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் 2.

தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை.

தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் 15 இதர முக்கியத் தொழிலாளர் சட்டங்களான; ஊதியம் வழங்குதல் சட்டம் 1936, குறைந்தபட்ச ஊதியச் சட்டம் 1948, மகப்பேறு பயன் சட்டம் 1961, ஒப்பந்தத்தில் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம் 1970, சம ஊதியச் சட்டம் 1976, குழந்தைத் தொழிலாளர் (தடுப்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1986, பணிக் கொடை வழங்கல் சட்டம் 1972, அபாயகரமான பொறிகள் முறைப்படுத்துதல் சட்டம் 1983, வேலையாள் இழப்பீட்டுச் சட்டம் 1923, மாநிலங்கள் ஊடே பெயரும் தொழிலாளர்கள் சட்டம் 1979, பருத்திக் கொட்டை பிரித்தல் அழுத்தல் தொழிற்சாலைகள் சட்டம் 1925, தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறை நாள்) சட்டம் 1958, தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களை நிரந்தரப்



படுத்தும்) சட்டம் 1981, தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்குதல் சட்டம் 1981, தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம், 1972, ஆகியவற்றை அமுல்படுத்துகிறது. மேற்கண்ட சட்டங்கள் அனைத்தும் தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற தொழிற்சாலைகளில் அமுல்படுத்தப்படுகின்றன. மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொழிலாளர் நலச் சட்டங்களை அமுலாக்கினால், தொழிற் சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் உடல் நலம், பாதுகாப்பு ஆகியவை காப்பாற்றப்படுகின்றன,

2.1 இத்தொழிலாளர் சட்டங்களினை செயல்படுத்தி நிர்வகிக்க இத்துறையில் முழுப் பொறுப்பும் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வரைச் சாரும், தொழிற்சாலை தலைமை ஆய்வருக்கு உறுதுணையாக ஐந்து தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வர், 28 தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வர்கள், 46 தொழிற்சாலைகள் ஆய்வர்கள், ஒரு மகளிர் தொழிற்சாலை ஆய்வர், 44 தொழிற்சாலைகள் உதவி ஆய்வர்கள், ஒரு அறுவை சிகிச்சை மருத்துவர், எட்டு உதவி அறுவை சிகிச்சை மருத்துவர்கள் மற்றும் ஒரு கணக்கு அலுவலர் உள்ளனர்.

2.2 இந்த ஆய்வகத் துறையின் பணிகள் ஆவன—

(1) தொழிற்சாலைகள் மற்றும் ஏனைய தொழிலாளர் சட்டங்களை நிர்வகிப்பது.

(2) பாதுகாப்பு முறைகள் மற்றும் பயிற்சி.

(3) அழுத்தக் கலன்கள் சோதனை.

(4) தொழிலாளர் உடல் நலம் பேணுதல்.

(5) உற்பத்தி திறன் முறைகள்.

(6) தொழிலாளர் நலம் காத்தல்,

2.3. தொழிற்சாலைகள் மற்றும் ஏனைய தொழிலாளர் சட்டங்களை நிர்வகித்தல்.

1989 ஆம் ஆண்டு துவக்கத்தில் 14,649 தொழிற்சாலைகள் 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் இருந்தன, அவைகள் 1989 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியில் 15,625 ஆக அதிகரித்து உள்ளன. 31-12-1989-ல் 1946 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் உத்தேசமாக 8,40,086 தொழிலாளர்கள் உள்ளனர். 1989 ஆம் ஆண்டு ரூபாய் 1,19,28,311 உரிமத் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது.

2.4. நடப்பு ஆண்டில் 18,431 முறையான ஆய்வுகள் மேற்கொண்டதோடு, விடுமுறை, சிறப்பு, இரவு ஆய்வுகள் மற்றும் மேல் ஆய்வுகளையும் சேர்த்து 30,00[illegible] ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. ஆய்வு விபரங்கள் இணைப்பு 12-ல் தரப்பட்டுள்ளன.

2.5. நடப்பு ஆண்டில் ஒப்பந்தத் தொழிலாளர் சட்டம் 1970, ஊதியம் வழங்குதல் சட்டம் 1936, குறைந்தபட்ச ஊதியச் சட்டம் 1948 ஆகியவற்றின் கீழ் 738 வழக்குகள் தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் 2,294 வழக்குகள் தொடரப்பட்டு, ரூ. 8,39,640 அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளன. வழக்கு விபரங்கள் இணைப்பு 14-ல் தரப்பட்டு உள்ளன.

2.6. 1988 ஆம் ஆண்டு தொழிலாளர் சட்டங்கள் (அறிக்கைகள் அளித்தல் மற்றும் பதிவேடுகள் பராமரித்தல்) சட்டம், குறைந்த தொழிலாளர்கள் பணியாற்றும் நிறுவனங்களுக்கு பதிவேடு பராமரிப்பிலும் அறிக்கைகள் அளிப்பதிலும் விதிவிலக்கு அளிக்க வகை செய்து, 1-5-1989 முதல் இம்மாநிலத்தில் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு 19 தொழிலாளர்களுக்கு உள்ளிட்ட தொழிற்சாலைகளுக்கு இச்சட்டம் பொருந்தும். இத்தொழிற்சாலைகள் இச்சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளை தொழிற்சாலைகள் சட்டம், (2) ஊதியம் வழங்குதல் சட்டம், (3) குறைந்தபட்ச ஊதியச் சட்டம், (4) சம ஊதியச் சட்டம், மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம் ஆகியவற்றின் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளுக்கு பதிலாக பராமரித்து அனுப்ப செயல்படுகின்றது.

2.7. தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வர்களால் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாதந்தோறும் தொழிற்சங்க பிரதிநிதிகளைக் கூட்டி தொழிலாளர்களின் குறைகளை அறிந்து அதனை உடனுக்குடன் ஆய்வர்களால் கவனிக்கப்படுகின்றது. நடப்பு ஆண்டில் 974 புகார்கள் பெறப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளன. முரண்பாடுகள் காணப்பட்ட நேரத்தில் அவைகளை களைய நடவடிக்கைகள் உடன் எடுக்கப்பட்டுள்ளன.

2.8. பாதுகாப்பு மற்றும் சுகாதாரமான சூழ்நிலையில் பணி புரியும் நிலையை உறுதிப்படுத்த வரைபடங்கள் தொழிற்சாலை ஆய்வகத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டியுள்ளது. தொழிற்சாலை கட்டிடத்தின் உறுதி, தன்மை, காற்றோட்டம், ஒளி, பணி செய்யும் சூழ்நிலைகள், குறிப்பாக உற்பத்தி செய்யும் முறையில் உள்ள ஆபத்துக்கள் அமைப்பு, பொருள்களை கையாளும் முறைகள் ஆகிய விவரங்களைக் கவனத்திற் கொண்டு வரைபடங்கள் ஒப்புதல் அளிக்கப்படுகின்றன.



2.9. வரைபடங்கள் ஒப்புதல் அளிப்பதை துரிதப்படுத்த வரைபடங்கள் ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் சார்நிலை அலுவலர்களுக்குள் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது.

2.10. அபாயகரமான உற்பத்தி முறை உள்ள தொழிற்சாலைகளைத் தவிர்த்து 100 தொழிலாளர்களுக்கு குறைவாக உள்ள தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்ட வரைபடங்களைத் தொழிற்சாலை துணைத் தலைமை ஆய்வாளர்கள் ஒப்புதல் அளிக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

2.11. 100-க்கும் மேற்பட்டு 500க்கும் குறைவாக உள்ள தொழிலாளர்கள் உள்ள தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்ட வரைபடங்கள் தொழிற்சாலை இணைத் தலைமை ஆய்வாளர்களுக்கு ஒப்புதல் அளிக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

அபாயகரமான உற்பத்தி முறையில் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் 500 தொழிலாளர்களுக்கு மேற்பட்டு உள்ள தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்ட வரைபடங்கள் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளரால் ஒப்புதல் அளிக்கப்படுகின்றன.

2.12. இந்த வருடம் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளரால் 677 வரைபடங்கள், தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர்களால் 271 வரைபடங்கள், தொழிற் சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்களால் 2,022 வரைபடங்கள் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன.

**2.13 சம்பளப் பட்டுவாடாச் சட்டம், 1936 :**

தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் பொறுத்தவரை இச்சட்டம் தொழிற்சாலை ஆய்வகத் துறையால் அமுல் நடத்தப்படுகிறது. 15,959 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 175 வழக்குகள் இந்த ஆண்டில் இச்சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவ் விபரங்கள் இணைப்புகள் 13 மற்றும் 14 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

**குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948 ;**

2.14. இச்சட்டம் தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பதியப்பெற்று தொழிற்சாலைகளில் தொழிற்சாலை ஆய்வகத் துறையால் அமுல்நடத்தப்படுகிறது. 9,075 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 217 வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவ்விபரங்கள் இணைப்புகள் 13 மற்றும் 14 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

[1990 ஏப்ரல் 12

1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (ஒழுங்குப்படுத்தல் மற்றும் நீக்குதல்) சட்டம் :

2.15. தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் இயங்கி வரும் தொழிற்சாலைகளில் இச் சட்டம் இத்துறையால் அமுல்படுத்தப் பட்டு வருகிறது. இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட, முதன்மை நிர்வாகிகள் 639 உரிமம் பெற்ற ஒப்பந்தக்காரர்கள் 722. இந்நிறுவனங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 41,292.

2.16. நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்ட வகையில் கட்டண மாக ரூபாய் 7,834.25 மற்றும் உரிமக் கட்டணமாக ரூபாய் 28,530.60ம் வசூல் செய்யப்பட்டது.

2.17. ஆய்வுகள் மற்றும் வழக்குகள் தொடுத்த விவரங்கள் இணைப்புகள் 13 மற்றும் 14இல் கொடுக்கப்பட்டுள்ளன.

## தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள்

## (தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துல்) சட்டம் 1981.

2.18 இச்சட்டம், தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் வரும் தொழிற்சாலைகளில், தொழிற்சாலை ஆய்வகத் துறையால் அமுல் நடத்தப்படுகிறது. 6,275 தொழில் நிறுவனங்கள் இச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. 7,319 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 16,537 தொழிலாளர்கள் சென்ற நிதி நிலை கூட்டத்தின் பொழுது மேற்கொண்ட உறுதியின் பேரில் இந்த ஆண்டு பணியில் நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் பயிற்சி அளித்தல் :

2.19. போபாலில் நடந்த துக்ககரமான விபத்துக்குப்பின் இந் திய அரசு தொழிலாளர் பாதுகாப்பு மற்றும் உடல் நலம் ஆகியவை குறித்து உள்ள பல தொழிலாளர்கள் நலச் சட்டம் பிரிவுகளை மேலும் கடுமையானதாக மாற்ற விரும்பியது. அவ்வாறு மாற்ற விரும்பிய தொழிலாளர்கள் நலச் சட்டங்களில் தொழிற்சாலை கள் சட்டமும் ஒன்றாகும். தொழிலாளர் உடல் நலனை பாது காக்கவும், அபாயகரமான விளைவுகளால் உடல் நலம் பாதிக்கப் படும் நிலைமை இருப்பின் அதனின்று பாதுகாத்துக் கொள்ள உரிய பாதுகாப்பு நடைமுறைகளை சேர்த்தும் தொழிற்சாலைகள் சட்டத்திற்கு 1987ஆம் ஆண்டு இந்திய அரசு ஒரு திருத்தச் சட் டம் கொண்டு வந்தது. தொழில் பாதுகாப்பு என்ற குறிக் (கோ) ளை விரிவுபடுத்தி தொழிற்சாலைக்குள் பணியாற்றும் தொழி



1990 ஏப்ரல் 12]

லாளர்களின் பாதுகாப்பினை மட்டும் அல்லாமல் அத் தொழிற் சாலைகளின் சுற்றுப்புறத்தில் குடியிருக்கும் பொது மக்களின் நலனையும், பாதுகாப்பையும் கருத்தில் கொள்ள வேண்டும் என் பதும் திருத்தச் சட்டத்தில் இடம் பெற்றது.

2.20. நம் மாநிலத்தில் அபாயகரமான தொழிலில் ஈடுபட் டுள்ள தொழிற்சாலைகள் இயங்கும் ஆறு பகுதிகளை அடை யாளம் கண்டுள்ளோம். அவையாவன :

மணலி, நெய்வேலி, கடலூர், இராணிப்பேட்டை, மேட்டூர், மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களாகும். இந்த இடங்களை பொறுத்தவரை அபாயகரமான உற்பத்தி முறை கையாளும் தொழிற்சாலைகளுக்கு தொழிற்சாலைகளுக்குள் விபத்து ஏற் படாமல் தடுக்கும் முறைகளும், அவ்வாறு விபத்து ஏற்பட்டால் அதனை சமாளிக்கும் முறைகள் உள்ள நடைமுறைத் திட்டங் களும் (on site plar) தொழிற்சாலையை சுற்றியுள்ள பகுதி யில் எந்தவிதமான,பாதிப்பு ஏற்படும்போதும் மக்களைபாதிப்புக்கு உள்ளாக்காமல் பாதுகாப்பாக வெளியியேற்றும் திட்டம், பாது காப்பு நடைமுறைகள் (off site plan) ஆகியவை தீட்டப் பட வேண்டும், சோதனை மற்றும் பாதுகாப்பு கோட்டம் மற்றும் பெரும் விபத்து தடுப்புப் பிரிவும் (The testing and safety divisions and major accident H z: d Control cell) இணைத்து இத்திட்டங் களைத் தயாரிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றன.

2.21. ஒவ்வொரு மாவட்ட ஆட்சியாளர் தலைமையில் அபாயகரமான உற்பத்தி முறைகளை கையாளும் தொழிற்சாலை கள் (Hazardous Process I: dustries) ஒருங்கிணைந்தத் திட்டம் தயாரிக்கவும், சோதனை மற்றும் பாதுகாப்பு கோட்ட அலுவலர் கள் இணைந்து செயல்படுகிறார்கள், அபாயகரமான இரசாயனப் பொருள்களை மூலப் பொருளாகக் கொண்டு செயல்படும் 59 தொழிற்சாலைகள் இம்மாநிலத்தை பொறுத்தவரை அடையாளம் காணப்பட்டுள்ளது. சோதனை மற்றும் பாதுகாப்பு கோட்ட அலு வலர்கள், தொழிலாளர்கள், மேற்பார்வையாளர்கள் நிர்வாக மட்ட அலுவலர்களுக்கு தொழிற்சாலையில் பல்வேறு மட்டத்தில் கையாள வேண்டிய பாதுகாப்பு முறைகளைக் கற்பிக்க பயிற்சி வகுப்புக்கள் நடத்தி வருகிறார்கள்.

2.22. 143 பாதுாகப்புப் பயிற்சி வகுப்புக்கள் இந்த ஆண்டில் நடைபெற்று அதன் மூலம் 4,300 தொழிலாளர்கள் பயனடைந் துள்ளனர். அதிக விபத்துக்கள் நடக்கும் தொழிற்சாலைகளை தேர்ந்து எடுத்து அத்தொழிற்சாலைகளை பொறுத்தவரை 29 பாதுகாப்பு ஆய்வுகள் நடத்தப்பெற்று அதன் முடிவுகள் சம்பந்தப் பட்டத் தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு தக்க பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ள அனுப்பப்பட்டன. 38 தொழிற் சார்ந்த சுகாதார ஆய்வுகள் 1989 ஆம் ஆண்டு மேற்கொள்ளப் பட்டுள்ளன.

[1990 ஏப்ரல் 12

2.23. தொழிற்பாதுகாப்பு குறித்து சோதனை மற்றும் பாதுகாப்புப் பிரிவினால் காலாண்டு இதழ் வெளியிடப்படுகிறது. இதில் பாதுகாப்பு விபத்து பற்றிய குறிப்புகள் கேலிப்படங்கள் ஆகியவை நிர்வாகம் மற்றும் தொழிலாளர்கள் பயிற்சி பெற உள்ளது.

2.24. இத்துறையினரால் பாதுகாப்பு முறைமைகள் நிறைவேற்றினதனால் 1988 ஆம் ஆண்டில் 14,301 விபத்துக்களாக இருந்தது, 1989 ஆம் ஆண்டில்12,520 வாகக் குறைந்து உள்ளன.

விபத்துக்களின் எண்ணிக்கை விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| ஆண்டு. | | | மரண விபத்து. | மரணம் இல்லாத விபத்து. |
|---|---|---|---|---|
| (1) | | | (2) | (3) |
| 1987 | .. | .. | 83 | 17,062 |
| 1988 | — | — | 52 | 14,249 |
| 1989 | — | — | 49 | 12,471 |

2.25. மாநில பாதுகாப்புப் பரிசுகள் மற்றும் சிரம்வீர் பரிசுகள் தொழிற்சாலையில் சிறந்த பாதுகாப்பு செயல்களைத் தெரிந்து கொள்ளவும், தொழில் பாதுகாப்பில் ஆழ்ந்த பற்றுக்கொண்டு இயங்கச் செய்யவும் நிர்வாகத்தினர்களுக்கு தமிழக அரசு மாநில பாதுகாப்பு பரிசுகள் வழங்குகிறது. இந்தப் பரிசுகள் வழங்கும் நோக்கத்திற்காக தொழில் நிறுவனங்கள் கீழ்க்கண்ட மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது :—

தொகுதி ''அ''—10 இலட்சம் மனித நேரத்திற்கு குறைவில்லாமல் வேலை செய்த தொழிற்சாலைகள்.

தொகுதி ''ஆ'' 5 மற்றும் 10 லெட்சம் மனித நேரங்களுக்கு இடையில் வேலை செய்த தொழிற்சாலைகள்

தொகுதி ''இ''.—2 முதல் 5 இலட்சம் மனித நேரங்களுக்கு இடையில் வேலை செய்த தொழிற்சாலைகள்

கீழ்க்கண்ட மூன்று திட்டங்கள் செயலில் உள்ளன :—

திட்டம் 1 —முந்தைய ஆண்டை ஒப்பு நோக்குகையில் விபத்து விகிதத்தை மிக அதிகமாகக் குறைத்து காண்பிக்கும் தொழிற்சாலைக்கு இந்த பரிசினை வழங்குதல்.



1990 ஏப்ரல் 12]

திட்டம் 2—அதே வகைப்பட்ட மற்ற தொழிற்சாலைகளுடன் ஒப்பிடும்போது நிறையிட்ட அளவு எண் வீதத்தை அந்த ஆண்டில் மிகக் குறைத்து காண்பிக்கும் தொழிற்சாலைக்கு இந்த பரிசினை வழங்குதல்.

திட்டம் 3—பரிசுக்குரிய ஆண்டில் விபத்தின்றி அதிக மனித நேரம் செயற்புரிந்த தொழிற்சாலைக்கு வழங்குதல்.

2.26. இந்தத் தொழிற்சாலைகள் மேலும் 10 பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. (நூற்பு, சிமெண்ட், பொறியியல் மற்றும் பல).

2.27. விபத்துக்களைத் தவிர்த்தல் உற்பத்தி திறனைப் பெருக்குதல் மற்றும் தொழில் திறமைகளை வளர்த்தல் போன்றவற்றில் சீரிய முறையில் பங்கு கொள்ள தொழிலாளர்களை ஊக்கப்படுத்த சிரம்வீர் பரிசுகள் வழங்கப்படுகிறது. பாதுகாப்பு பற்றிய கருத்துக்கள்- அதிக உற்பத்தி தொழிலில் சிரத்தை மற்றும் வேலை செய்யும் முறைகளில் புதிய கண்டுபிடிப்பு, முன்னேற்றம், சேதம் மற்றும் விபத்துக்களைக் குறைத்தல் ஆகியவற்றிக்கான கருத்து எடுத்துக் கூறும் தொழிலாளர்களுக்கு இப்பரிசு வழங்கப்படுகிறது.

2.28. மாநில பாதுகாப்புப் பரிசுகள், கேடயங்கள் மற்றும் சான்றிதழ்கள் தேர்வு பெற்ற நிர்வாகத்தினர்களுக்கு வழங்கப்பட்டது.

2.29. 1987 ஆம் ஆண்டிற்கு 338 விண்ணப்பங்களுக்கு முதல் பரிசாக 72 கேடயங்கள் (சான்றிதழுடன்) 112 சான்றிதழ்கள் இரண்டாவது மற்றும் மூன்றாவது பரிசாக அளிக்கப்பட்டுள்ளது.

2.30. 1987 ஆம் ஆண்டிற்கான சிரம்வீர் பரிசுகளுக்கு 70 விண்ணப்பங்கள் பெறப்பட்டன, அவைகளில் 3 முதல்பரிசுகள் 6 இரண்டாவது பரிசுகள் மற்றும் 15 மூன்றாம் பரிசுகள் அளிக்கப்பட்டுள்ளன.

2.31. மேற்குறிப்பிடப்பட்டுள்ள பரிசிற்குரியோர் அரசால் அமைக்கப்பட்ட குழுவினரால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

அழுத்த இயந்திரங்கள் சோதனை ;

2.32. தமிழ்நாட்டில் 21,586 அழுத்த இயந்திரங்கள் உள்ளன. தொழிற்சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு அழுத்த இயந்திரத்தையும் தகுதியுள்ள நபர்களில் காலமுறைதோறும் முழுமையாக ஆராய்ந்து அதன் பாதுகாப்பாக வேலை செய்யும் தன்மைக்கு தகுதிச்சான்று வழங்கவேண்டும் என 1948 ம்

ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் 1950 ஆம் ஆண்டு
தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.
தமிழ்நாட்டில் தொழிற்சாலை ஆய்வகத் துறையே இப்பணியினை
தாமே செய்து வருகின்றனர். அழுத்த யந்திரங்களைச் சோதனை
செய்ய மற்றும் பாதுகாப்பு கோட்டங்களுக்கு ஒப்படைக்கப்
பட்டுள்ளது.

2.33. 1988 ஆம் ஆண்டில் சோதனை செய்யப்பட்ட சலன்
களின் விவரம் கீழே வருமாறு :—

| | |
|---|---|
| வெளிப்புறம் .. .. .. | |
| உட்புறம் .. .. .. .. .. | 17,631 |
| நீர்மங்களின் நிலை (ஹைடிரோஸ்டேடிக்) .. .. | 373 |
| .. | 3,584 |
| மொத்தம் .. | 21,588 |

2.34. இந்த நோக்கத்திற்காக வசூலிக்கப்பட்டக் கட்டணம்
ரூபாய் 21,45,870.

**தொழிலாளர் உடல் நலம் பேணுதல் ;**

2.35. கடும் விபத்து தடுப்புப் பிரிவுடன் (Major Accident
Hazard Control Cell) இணைந்துள்ள தொழிற்சாலை
துப்புறவு சோதனைக்கூடத்திற்கு அறுவை சிகிச்சை மருத்துவர்
ஒருவர் பொறுப்பிலுள்ளார். இவ் வாய்வகத் துறையில் சென்னை,
கோவை, வேலூர், சேலம், திருச்சி, சிவகாசி, திருநெல்வேலி
மற்றும் மதுரை ஆகிய 8 இடங்களில் உதவி அறுவை சிகிச்சை
மருத்துவர்கள் பணியாற்றுகின்றனர்.

2.36. நடப்பு ஆண்டில் சுகாதாரம் மற்றும் நலவியல் ஆய்வு
கூடத்திற்கு பலதரப்பட்ட தொழிற்சாலைகளிலிருந்து காற்றில்
பரவும் நச்சுத் தன்மையுள்ள மாசுகளை மதிப்பிடுவதற்கு நவீன
தளவாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

2.37. 1989 ஆம் ஆண்டு 14 தொழிற்சார்ந்த சுகாதார
ஆய்வுகள் தொழிற்சாலை துப்புறவு சோதனை கூடத்தினால்
மேற்கொள்ளப்படுகிறது. குளோரின் சல்பர்-டை ஆக்ஸைட்,
சல்ட்யூரிக் ஆசிட் மிஸ்ட், கார்பன்-டை-ஆக்ஸைடு, கார்பன்
பிளாக் மெர்குரி போன்ற நச்சுப்பொருள்களால் தொழிலாளர்
களுக்கு ஏற்படும் உடல் மற்றும் மனக்கேடுகள் பரிசோதித்து
கண்டு பிடிக்கப்பட்டது அவை மதிக்கப்பட்டதை விட அதிகமான
நச்சுத்தன்மை அதிகமாக இருப்பின், அதனைக் குறைத்து தகுந்த
காப்பினை அமைப்பதற்கான வழிமுறைகள் பரிந்துரைக்கப்படு
கின்றன.



2.38. பம்பாயில் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் தொழி
லாளர் ஆலோசனை சேவை நிலைமை இயக்குநரகத்திலிருந்து
பெறப்பட்டுள்ள நவீன தளவாடங்கள் மூலமாக அதிகப்படியான
தொழிற்சார்ந்த சுகாதார ஆய்வுகள் தொழிற்சாலை துப்புறவு
சோதனைகூடத்தினால் வரும் ஆண்டுகளில் மேற்கொள்ளமுடியும்.

2.39. 1989 ஆம் ஆண்டு அறுவை சிகிச்சை மருத்துவர்களால்
53 தொழிற்சாலைகள் (குறிப்பாக அபாயகரமான தொழிற்
சாலைகள்) பார்வையிடப்பட்டது. 501 தொழிலாளர்கள்
தொழில் சார்ந்த அபாயங்களைக் கண்டுபிடிக்க பரிசோதிக்கப்
பட்டனர். 498 இரத்த மாதிரிகள், 325 சிறுநீரக மாதிரிகள்
பலதரப்பட்ட தொழிலைச் சார்ந்த தொழிலாளர்களிடம் இருந்து
சேகரிக்கப்பட்ட இரத்தம் மற்றும் சிறுநீர் வேலையின் தன்மை
யால் ஏற்படும் மாறுபாட்டை அளவிடப்பட்டது. மேற்படி பரி
சோதனையில் குறிப்பிடும்படியாக யாதொரு குறைபாடும் எதிர்
கொள்ளவில்லை.

2.40. ஆய்வின்போது தொழிற்கூடம் நலன் மற்றும் தனி
நபர் நலன் பற்றி பலதரப்பட்ட விற்பனைகளை அணுகி நிர்
வாகம், மேற்பார்வையாளர்கள், தொழிலாளர்கள் தெளிவாக்கப்
பட்டார்கள்.

2.41 அறுவை சிகிச்சை மருத்துவர் மற்றும் உதவி சிகிச்சை
மருத்துவர்களின் பணிகள் வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1 | நடப்பு ஆண்டில் 1989 பார்வையிடப்பட்டுள்ள தொழிற்சாலைகள் .. .. .. | 1,150 |
| 2 | அபாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பரிசோதிக்கப்பட்ட எண்ணிக்கை .. | 8,260 |
| 3 | நடப்பு ஆண்டில் சான்றளிக்கப்பட்டவை :— | |
| | (1) அபாயத் தொழில் .. .. | 9,213 |
| | (2) இளம் வயதினர் .. .. .. | 6,386 |
| | (3) சிற்றுண்டி விடுதி .. .. .. | 3,961 |
| 4 | வசூலிக்கப்பட்ட பரிசோதனைக் கட்டணம் .. | 1,77,131 |

**உற்பத்தித் திறன் முறைகள் :**

2.42. உற்பத்தித் திறன் 20 அம்சத் திட்டத்தின்கீழ் வரும்
ஒரு முக்கிய அம்சமாக இருப்பதால் தொழிலில் உற்பத்தித்திறனை
மேம்படுத்த இந்திய அரசு மிகுந்த கவனம் செலுத்துகிறது.

2.43. இத்திட்டத்தைத் திறம்படச் செயல்படுத்துவதற்காக
ஒரு தொழிற்சாலைகள் ஆய்வரின் உதவியுடன் தொழிற்சாலை
கள் இணைத் தலைமை ஆய்வர் (உற்பத்தித் திறன் குழு) பதவி
ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழுவில் மேலும் இரண்டு உதவி
தொழிற்சாலை ஆய்வாளர்களை நியமித்து உற்பத்தித் திறன்
நுணுக்கங்களை விரிவாகசெயல்படுத்த வளப்படுத்தப்பட்டுள்ளது.

2.44. ஆலோசனை நல்கும் அமைப்பாணை உற்பத்தித் திறன்
குழு உற்பத்தித்திறன் மேம்படுத்துதல் அதிக ஆதாரங்களைப்
பயன்படுத்துதல், வீணாவதை நீக்குதல், கால ஆய்வு/இயக்க
ஆய்வு, நடத்துவதன் மூலம் பணி கோட்பாடுகளை வரையறுத்
தல், வேலை பகுப்பாய்வு வேலை பாதுகாப்பு பகுப்பாய்வு நடத்து
தல், பரிசு வழங்கும் திட்டத்தைக் கொண்டு வருதல், தொழிலா
ளர்களுக்கும் மேற்பார்வையாளர்களுக்கும் முறையாக பயிற்சி
அளித்தல் போன்ற பணிகளைப் புரியும்.

2.45. சென்னை உற்பத்தித் திறன் குழுவின் ஆட்சிக்குழு
மத்தில் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வரும், கோவை,
மதுரை, சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களி
லுள்ள பிராந்திய உற்பத்தித் திறன் குழுவின் ஆட்சிக்குழு
மத்தின் அப்பிரதேச எல்லையிலுள்ள தொழிற்சாலைகள் இணைத்
தலைமை ஆய்வர், தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்
வர் உறுப்பினராக செயலாற்றுகின்றனர்.

2.46. இந்த உற்பத்தித் திறன் பிரிவு தொழிற்சாலைகள்
தலைமை ஆய்வர் அலுவலகத்தில் செயல்பட்டு வருகின்றது.
இக்குழு உற்பத்தித் திறன் பற்றி 38 பயிற்சி வகுப்புகள் நடத்தி
1,044 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளார்கள்.

2.47. காரமடையிலுள்ள ஸ்ரீஇராமகிருஷ்ணா ஸ்டீல் இண்
டஸ்ட்ரீஸ் என்ற தொழிற்சாலையில் குறைவான உற்பத்திக்கான
காரணங்களை அறிந்து அதனை களைவதற்கான வழிமுறைகளை
காண் கால ஆய்வு/இயக்க ஆய்வு நடத்தி ஆலோசனை கூறப்
பட்டுள்ளது.

2.48. உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதற்காக தொழில்
களுக்கிடையே ஆரோக்கியமான போட்டியை ஊக்குவிக்கும்
பொருட்டு மாநில அளவிலான பரிசு வழங்கும் திட்டத்தைத்
தமிழக அரசு ஏற்படுத்தி 1985–86 மற்றும் 1986–87 ஆகிய
ஆண்டுகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன. 1987–88 மற்றும்
1988–89 ஆகிய ஆண்டுகளுக்கு இப்பரிசு திட்டத்தின் கீழ் வெற்றி
பெற்றவர்களுக்கு விரைவில் பரிசுகள் வழங்க உள்ளன. இதற்
காக 92 விண்ணப்பங்கள் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டன.





**இராசாயனத் தொழிற்சாலைகள் குறித்த பணிக்குழு :**

2.49. ஆபத்து விளைவிக்கும் தொழிலில் பிரிவுகளை அடையாளம் காணவும், நடைமுறைகளில் உள்ள பாதுகாப்பு நிலைகளைக் கண்டறியவும், ஒவ்வொரு நிலையிலும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கருத்து தெரிவிக்கவும் பணிக் குழு (Task force) ஒன்று அரசால் நியமிக்கப்பட்டு உள்ளது.

2.50. பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்திற்கு மாநில அளவில் உயர்மட்ட முத்தரப்பு பாதுகாப்புக் குழு (State level High power Tripa tite Safety Committee) ஒன்றும் தொழிலாளர் நல அமைச்சர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

இது மாநிலத்தின் தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய கொள்கைகள் வகுக்கும் மாநில அளவிலான முத்தரப்பு தலைமையிடமாகும்.

2.51. மேற்கூறப்பட்ட இரு குழுக்களும் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வர் பணியமைப்பில் உறுப்பினர், செயலாளர் கட்டுப்பாட்டின்கீழ் ஏற்படுத்தப்பட்டதுடன் குழுவின் பரிந்துரைகள் மீது தொடர் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு ஒருங்கிணைப்பு அலுவலராகவும் (Nodal officer) அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

2.52. 1989 ஆம் ஆண்டு மேற்படி மாநில அளவிலான வல்லுநர் குழு பணிக் குழு மூன்று முறை கூடி கீழ்க்கண்ட முடிவுகளை எடுத்து அதன்மீது தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது :—

2.53. மாவட்ட அளவிலான '' அ '' பிரிவு தொழிற்சாலைகளில் தயாரித்து அனுப்புமாறு மாவட்ட ஆட்சியாளர்களை கேட்டு அதே போன்று '' 14 off site lands '' பெறப்பட்டு உறுப்பினர்களுக்கு சுற்றுக்கு விடப்பட்டுள்ளது.

2.54. மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினால் கொடுக்கப்பட்ட வினாப் பட்டியலுக்கு அபாயகரமான தொழிற்சாலைகளிலிருந்து பெறப்பட்ட பதிலினை அளிக்குமாறு காடுகள் மற்றும் சுற்றுப் புறச்சூழல் துறை சார்ந்த இயக்குநரை கேட்கப்பட்டுள்ளது.

2.55. செங்கை அண்ணா மாவட்ட ஆட்சியரின் ஒத்துழைப்புடன் மணலியில் ஒரு செயல்முறை தீ விபத்தினை நடத்திக் காட்டப்பட்டது.

2.56. பொறியியல் தொழிற்சாலைகளில் கூட்டு இணைப்பினை மாநில அளவிலான வல்லுநர் குழு பணிக் குழு அமைப்பின் உறுப்பினராக சேர்த்துக் கொள்ளப்பட்டது.

D 2 53–104—31

2.57. மேற்படி குழுவின் முடிவின்படி பாதுகாப்பு அதிகாரிகளை அமர்த்துவதற்கான 30 தொழிற்சாலைகள் அரசு அறிவித்துள்ளது.

2.58. அபாயகரமான தொழிற்சாலைகளில் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வரின் ஒத்துழைப்புடன் ஆய்வு மேற்கொள்ள 3 அதிவேக ஆய்வுக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் விபத்து ஆயுள் ஈட்டுறுதி தொகுதித் திட்டம்.

2.59. 11-7-1986-ல் இருந்து காமராசர் மாவட்டத்தில் உள்ள தீப்பெட்டி பட்டாசு தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் பயன் கருதி தமிழக அரசு தொழிலாளர்கள் விபத்து ஆயுள் ஈட்டுறுதி தொகுதித் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. பின்னர் தமிழகம் முழுமைக்குமான இதே தொழிற்சாலைகளுக்கு விரிவுபடுத்தப்பட்டது.

2.60. இத்திட்டம் ஈட்டுறுதி செய்யப்பட்டவர்களுக்கும் பார்வை அல்லது கை கால்கள் இழப்பு அல்லது இறப்பு ஏற்பட்டால் நிவாரணம் அளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. ஈட்டுறுதி செய்யப்பட்டவர்கள் உண்மையில் வேலை செய்து கொண்டிருக்கையில் விபத்து ஏற்பட்டுள்ளவர்களுக்கு மட்டும் என்று வரையறுக்காமல் விபத்துக்கான ஈட்டுறுதித் தொகை வழங்கப்படும்.

இத்திட்டத்தினால் 14 வயது முதல் 65 வயது வரையிலான தீப்பெட்டி பட்டாசு தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பயனடைவர்.

இத்திட்டத்தின்கீழ் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களை அதிக அளவில் சேர்க்கும் பொருட்டு சந்தா தொகையினை ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ. 5 ஆக குறைக்கப்பட்டுள்ளது. இத்தொகையினை தொழிலாளர்கள் தொடர்பான தொழில் அதிபர்கள் செலுத்தி பின்னர் தொழிலாளர்கள் ஊதியத்திலிருந்து அத்தொகையை பிடித்துக் கொள்ளப்படுகிறது. ஆனால், இச்செலவினத்தைத் தொழில் அதிபர்களே ஏற்றுக்கொள்கின்றனர்.

இத்திட்டம், தேசிய ஆயுள் ஈட்டுறுதி நிறுவனத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படுகின்றது. 31-12-1989-ல் காமராசர், சிதம்பரனார், திருநெல்வேலி கட்டபொம்மன், கன்னியாகுமரி, வடாற்காடு—அம்பேத்கார் மற்றும் திருவண்ணாமலை—



சம்புவராயர் மாவட்டங்களில் இத்திட்டத்தின்கீழ் 48,361 தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். ரூ. 2,43,305 சந்தா தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது.

1989 ஆம் ஆண்டு 3 கோரிக்கைகள் முடிவு செய்யப்பட்டு 4 கோரிக்கைகள் முடிவு செய்ய வேண்டிய நிலையில் உள்ளன.

தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் :

மத்திய அரசால் ஏப்ரல் 1986-ஆம் ஆண்டு சிவகாசியில் இந்தத் திட்டம் துவங்கப்பட்டது. தீப்பெட்டி தொழிற்சாலைகளில் குடும்பத்தின் வருவாய் பெருக்குவதற்காக 14 வயதுக்கு கீழ் உள்ள குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவதை/நீக்குவதை அடிப்படையாகக் கொண்டு அக்குழந்தைகளுக்கு கல்வி, சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகளை கொடுக்க வேண்டி மேற்கொள்ளப்பட்டது. 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவு சட்டத்தின்கீழ் பதிவு செயயப்பட்ட தேசிய குழந்தை தொழிலாளர் திட்ட சங்கத்தினரால் இத்திட்டம் செயலாற்றப்படுகிறது.

காமராசர் மாவட்ட ஆட்சித் தலைவர் இச்சங்கத்தின் தலைவராகவும், மாவட்ட வருவாய் அதிகாரி (திட்ட இயக்குநராக) உறுப்பினர் செயலாளராகவும் இச்சங்கத்தில் உள்ளனர். இத் திட்டத்தின்கீழ் பல அரசுத் துறைகளில் நடவடிக்கைகளை மேற்பார்வையிட ஒரு கமிட்டி தமிழக அரசினரால் அமைக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் 3

### 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (பல்வகை விதித் துறைகள்) சட்டம்

1952ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (பல்வகை விதித்துறைகள்) சட்டத்திலுள்ள மூன்று திட்டங்களில் 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டமும் ஒன்றாகும். இத்திட்டம் 1952 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் முதல் நாளிலிருந்து செயற்பாட்டுக்கு வந்தது. வருங்கால வைப்பு நிதி என்பது தொழிலாளரும் வேலையளிப்பவரும் சேர்ந்து பங்கு கட்டணம் கட்டாயமாக செலுத்த வேண்டும் என்ற குறிக்கோளுடன் ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும். துவக்கத்தில் ஆறு பெரிய தொழில்கள் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டன. இத்திட்டம் படிப்படியாக அதிகமான தொழிலகங்களுக்கும் நிறுவனங்களுக்கும் விரிவாக்கப்பட்டன. இன்றளவில் 174 தொழிலகங்களில் உள்ள தொழிலாளர்கள் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர். 1971 ஆம் ஆண்டு குடும்ப நல ஓய்வூதியத் திட்டம், 1976ஆம் ஆண்டு தொழிலாளர் வைப்பீட்டுத் தொகையுடன் இணைந்த காப்பு நிதித் திட்டம் ஆகிய வேறு இரு திட்டங்களும் இச்சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டுள்ளன.

[1990 ஏப்ரல் 12

இந்நிதியின் நிர்வாகம்

தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் 10 பேரையும், வேலையளிப்போர் பிரதிநிதிகள் 10 பேரையும், மாநில அரசுகளின் பிரதிநிதிகள் 15 பேரையும், மைய அரசின் பிரதிநிதிகள் 5 பேரையும், மைய அரசால் நியமிக்கப்படும் தலைவர் ஒருவரையும் கொண்ட முத்தரப்பு அமைப்பாகிய மத்திய அறங்காவலர் கழகத்தால் இம் மூன்று திட்டங்களும் நிர்வகிக்கப்படுகின்றன. 1985 ஆம் ஆண்டு செப்டம்பர் 28ஆம் நாளன்று தற்போதுள்ள மத்திய அறங்காவலர் கழகம் திருத்தி அமைக்கப்பட்டது.

இச்சட்டம் பொருந்துதல் பற்றி :

மைய அரசால் குறித்தறிவிக்கப்படும் 20-ம் அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களையும் கொண்ட தொழிற் சாலைகளுக்கும் தொழில் நிறுவனங்களுக்கும் இச்சட்டமும் அதன் திட்டங்களும் பொருந்தும்.

பங்குக் கட்டணத் தொகையளவு :

அகவிலைப்படி மற்றும் அடிப்படை சம்பளம் ஆகியவற்றில் 8⅓ விழுக்காட்டுத் தொகையே ஒவ்வொரு தொழிலாளரும் அவர்தம் வேலையளிப்போரும் இத்திட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய பங்குக் கட்டண அளவாகும், 50 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட சில குறியிடப்பட்ட 98 தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகள்/தொழில் நிறுவனங்களைப் பொறுத்தவரை பங்குக் கட்டணத் தொகை 10 சதவீதம் என 1-6-1989 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

பங்குக் கட்டணத் தொகையை செலுத்தாது நிலுவையில் வைக்கும் வேலையளிப்பவர் இச்சட்டப் பிரிவு 14ன் கீழ் தண்டிக் கப்படுவதற்குரிய குற்றத்தைச் செய்தவராவார். பல்வேறு மாவட்ட நீதிமன்றங்களில் 1989 ஆம் ஆண்டில் தொடரப்பட்ட 75 குற்றவியல் வழக்குகளில் அம்மன்றங்கள் 60 வழக்குகள் மீது தீர்ப்பளித்து உள்ளன. இருப்பினும், 31—12—1989 நிலவரப் படி 1902 குற்றவியல் வழக்குகள் வெவ்வேறு நீதிமன்றங்களில் முடிவிற்காக காத்துள்ளன. அம்முடிவுறா வழக்குகளின் பட்டி யல உயர்நீதிமன்ற பதிவாளருக்கு அனுப்பி அவ் வழக்குகளை விரைந்து முடிக்கும்படியும் குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை வழங்கும்படியும் அவ்வழக்குகள் நிலுவையில் உள்ள நீதிமன்றங் களுக்கு அறிவுறுத்தும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். இம் மாதிரி வழக்குகளில் தண்ட பணத்தையும், தண்டனையையும் 1-8-88 முதல் அதிகரித்து இச்சட்டம் கடுமையாக்கப்பட்டுள்ளது.



1990 ஏப்ரல் 12]

உறுப்பினர் நிலை :

3 மாதங்கள் தொடர் பணி அல்லது 60 வேலை நாட்கள் அல்லது நிரந்தரமாக்கப்பட உள்ளது, அவற்றில் எந்த நாள் முந்தியதோ அந்நாளிலிருந்து ரூ. 2,500 க்கு மேற்படாமல் சம்பளம் பெறும் அனைத்து தொழிலாளர்களும் இத்திட்டத்தில் உறுப்பினர் ஆக வேண்டும்.

1. காப்புக்குரிய நிறுவனங்கள்—கட்டணதாரர்கள் :

இம்மாநிலத்தில் 31—12—1989 முடிய இச்சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட நிறுவனங்களும் கட்டணதாரர்களின் எண்ணிக்கையும் வருமாறு:—

| | விலக்களிக்கப் பட்டவை, | விலக்களிக்கப் படாதவை, | மொத்தம். |
|---|---|---|---|
| நிறுவனங்களின் எண்ணிக்கை. | 453 | 20,784 | 21,237 |
| கட்டணதாரர் எண்ணிக்கை. | 2.98 | 14.88 | 18.86 |
| | (லட்சங்கள்) | (லட்சங்கள்) | (லட்சங்கள்) |

1989ஆம் ஆண்டில் 1,244 நிறுவனங்கள் 1.11 லட்சம் உறுப்பினர்களுடன் இச்சட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டன.

தொழிலாளர் வருங்கால வைப்புநிதியின் உரிமைக் கோரிக்கைகள் தீர்க்கப்பட்ட விவரங்கள் :—

1989ஆம் ஆண்டில் (31—12—1989 முடிய) பெறப்பட்ட, தீர்க்கப்பட்ட, திருப்பப்பட்ட, நிலுவையில் உள்ள உரிமைக் கோரிக்கைகளின் (claims) விவரங்கள் வருமாறு :—

| | | |
|---|---|---|
| (1) | 31—12—1988 அன்று நிலுவையிலிருந்த உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 7,888 |
| (2) | 1—1—1989 முதல் 31—12—1989 முடிய பெறப்பட்டவை. | 1,07,336 |
| (3) | தீர்க்கப்பட வேண்டிய உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 1,15,224 |

| | |
|---|---|
| (4) 1989ஆம் ஆண்டு தீர்க்கப்பட்டவை .. | 80,924 |
| (5) குறைபாடுகளைச் சரிசெய்வதற்காக திருப்பப் பட்டவை. | 23,693 |
| (6) 31—12—1989 அன்று நிலுவையில் இருந்தவை | 10,607 |

1989ஆம் ஆண்டு தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் பகுப்பாய்வு வருமாறு :—

| | நிகழ்வுகளின் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட தொகை. (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|
| 1. இறப்பு .. .. .. .. | 3,780 | 363.04 |
| 2. பணிமுதிர்வோய்வு .. .. | 9,059 | 2,205.49 |
| 3. நிரந்தர இயலாமையுறல் .. | 35 | 10.50 |
| 4. பணித் துறவு .. .. .. | 60,882 | 2,737.35 |
| 5. பணியிழப்பு .. .. .. | 6,356 | 536.75 |
| 6. பல்வகை .. .. .. | 812 | 123.33 |
| | 80,924 | 5,976.46 |

31—12—1989 அன்று நிலுவையிலிருந்த உரிமைக் கோரிக்கைகளின் பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ளது:—

| | |
|---|---|
| (1) 2 மாதங்களுக்கு குறைவாக நிலுவையிலுள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 9,058 |
| (2) 6 மாதங்களுக்கு குறைவாகவும் 2 மாதங்களுக்கு மேற்பட்டும் நிலுவையிலுள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 1,549 |
| | 10,607 |





1989 ம் ஆண்டில் 16.20 இலட்சம் ஆண்டிறுதிக் கணக்குத் துண்டுச் சீட்டுகள் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆண்டு இறுதியில் 1.81 இலட்சம் கணக்குத் துண்டுச் சீட்டுகள் வழங்கப்பட உள்ளன.

1971 ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்பநல ஓய்வூதியத்திட்டம்.

1971ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்ப நல ஓய்வு ஊதியத் திட்டத்தின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு :—

1. 1952ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (பல்வகை விதித் துறைகள்) சட்டத்தின்கீழ் உள்ள தொழிலாளர்கள் அகால மரணமடையும் போது அவர்களின் குடும்பங்கள் நீண்ட கால பண உதவி பெறும் பொருட்டு 1971ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்ப நலத் திட்டத்தை அரசு கொண்டு வந்துள்ளது.

2. இத்திட்டம் பொருந்துதல் பற்றி :

1952ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (பல்வகை விதித் துறைகள்) சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட எல்லா தொழிற்சாலைகளிலும்/நிறுவனங்களிலும் 1-3-1971 முதல் தொழிலாளர் குடும்ப நலத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

3. உறுப்பினராவதற்கான தகுதி :

1971ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முதல் நாள் அல்லது அதற்குப் பின் வருங்கால வைப்பு நிதியில் உறுப்பினரான எல்லா தொழிலாளர்களும் இத்திட்டத்தில் கட்டாயம் உறுப்பினராக வேண்டும். 1-3-1971-க்கு முன்னர் வருங்கால வைப்பு நிதியில் உறுப்பினரானவர்கள் இத்திட்டத்தில் சேர்வது குறித்து அவர்களின் முடிவிற்கே விடப்பட்டது. 30—9—1971-க்கு முன்பு விருப்பம் தெரிவிக்காத தொழிலாளர்கள், 1971 மார்ச் திங்களில் இருந்து இன்றுவரை பங்குக் கட்டணமும் அதற்குரிய வட்டியும் செலுத்தி 1971ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்ப நலத் திட்டத்தில் உறுப்பினராகலாம்.

4. பங்குக் கட்டணம் :

தொழிலாளர் குடும்ப நல ஓய்வூதிய நிதிக்கு தனியாக பங்குக் கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை. வருங்கால வைப்புநிதிக்கு தொழிலாளரும் வேலையளிப்பவரும் செலுத்தும்

[1990 ஏப்ரல் 12

பங்குக் கட்டணத்திலிருந்து தொழிலாளர் சம்பளத்தில் 1¼க்கு சமமான தொகையை தனியே எடுத்து தொழிலாளரின் குடும்ப நல ஓய்வூதிய நிதியாக சேர்க்கப்படுகிறது. வேலை யளிப்பவர்கள் செலுத்தும் பங்குக் கட்டண விதத் தொகைக்கு சமமான தொகையை குடும்ப நல ஓய்வூதிய நிதிக்கு தமது பங்காக மைய அரசும் செலுத்துகிறது.

5. இத்திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் பயன்கள் :

இத்திட்டத்தின்கீழ் 4 வகையான பயன்கள் அளிக்கப்படு கின்றன. அவையாவன :—

(1) மாதந்தோறும் குடும்ப ஓய்வூதியம்.

(2) வாழ்க்கைக் காப்பீட்டுப் பயன்.

(3) ஓய்வு ஊதியப் பயனும் திரும்பப் பெறும் பயனும் (Retirement cum withdrawal benefit).

(4) கட்டணதாரரின் பங்குக் கட்டணத் தொகையை திரும்பத் தருதல்.

6. மாதாந்திர குடும்பஓய்வூதியம் :

(அ) தகுதி (Eligibility).

(1) கணக்கிற்குட்பட்ட பணிக்காலத்தில் இறப்பு நிகழ்ந் திருக்கவேண்டும்.

(2) உறுப்பினர் இறந்த நாளில் 60 வயதை அடைந் திருக்கக்கூடாது.

(3) 3 திங்களுக்கு குறைவில்லாமல் குடும்ப நல ஓய்வூதிய நிதிக்கு உறுப்பினர் பங்குக் கட்டணத்தை செலுத்தியிருக்க வேண்டும்.

(4) குடும்பத்தின் ஏதாவதொரு தகுதியுள்ள உறுப்பினர் உயிரோடு இருக்க வேண்டும்.

(ஆ) குடும்ப நல ஓய்வூதிய அளவு :

கீழே குறிப்பிட்டுள்ளவாறு மாதாந்திர குடும்ப நல ஓய்வூதியம் வழங்கப்படும்.

(1) வழக்கமான குடும்பநல ஓய்வூதியம்.



1990 ஏப்ரல் 12]

அட்டவணை.

| குடும்ப ஓய்வூதிய நிதிக்கு பங்குக் கட்டணம் செலுத்த அடிப்படையான உறுப்பினரின் மாதாந்திர சம்பளம். | குடும்ப நல ஓய்வூதியத்தின் மாதாந்திர அளவு. |
|---|---|
| (1) | (2) |
| ரூ. 300 வரை .. .. | ரூ. 225 (மாறாதது). |
| ரூ. 300-க்கு மேல் ரூ. 650வரை | ரூ. 275 (மாறாதது). |
| ரூ. 650-க்கு மேல் 1,200 வரை | ரூ. 450-க்கு மிகாததும் ரூ. 300-க்கு குறைவுறாததுமான சம்பளத்தில் 40 விழுக்காடு. |
| ரூ. 1,200-க்கு மேல் ரூ. 1,600 வரை. | ரூ. 510-க்கு மிகாமலும், ரூ. 450-க்கு குறையாததுமான சம்பளத்தில் 35 விழுக்காடு. |
| ரூ. 1,600-க்கு மேல் .. | ரூ. 750-க்கு மிகாமலும், ரூ. 510-க்கு குறையாததுமான, சம்பளத்தில் 30 விழுக்காடு. |

(2) அதிகரிக்கப்பட்ட குடும்ப நல ஓய்வூதியம் :

உறுப்பினர் இறப்பதற்கு முன் 7 ஆண்டுகளுக்கு குன்ற யாமல் குடும்ப நல ஓய்வூதிய நிதிக்கு தம் பங்குக் கட்டணத்தைச் செலுத்தியிருந்தால் அவரது சார்பாளர் அதிகரிக்கப்பட்ட ஓய்வூ தியத்தை கீழ்க்கண்டவற்றுள் எது முந்தியதோ அதுவரை பெறுவார் ;

(அ) உறுப்பினர் இறந்த நாளிலிருந்து ஏழாண்டுகள்

அல்லது

(ஆ) உறுப்பினர் உயிரோடிருந்தால் எந்த நாளில் தாம் 60 வயதை எய்தியிருப்பாரோ அந்த நாள் வரை.

மேலே குறிப்பிட்டுள்ள குடும்ப நல ஓய்வூதிய அளவிற்கு கூடுதலாக, சம்பளத்தில் 20 விழுக்காடு அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியம் பெறுவார். எனினும், இத்தொகை, குடும்ப நல ஓய்வூதியம் போல் இரு மடங்குகளுக்கு மிகாமல் இருக்கும்.

[1990 ஏப்ரல் 12

31–12–1989 அன்றுள்ளபடி, தமிழ்நாட்டில் 11,531 குடும்பங்களுக்கு மாதாந்திர குடும்ப நல ஓய்வூதியம் வழங்கப் பட்டு வருகிறது.

### (3) 1976ஆம் ஆண்டு தொழிலாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதித் திட்டம்.

அகால மரணமடையும் வருங்கால வைப்பு நிதி உறுப்பினர் களின் குடும்பங்களுக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (பல்வகை விதித்துறைகள்) சட்டத்தின் கீழ் 1976ஆம் ஆண்டு தொழிலாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதித் திட்டம் வடிவமைக்கப்பட்டது.

2. இத்திட்டம் பொருந்துவது பற்றி :

1976 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் முதல் நாளிலிருந்து தொழிலாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதித் திட்டம் செயல்பாட்டுக்கு வந்தது. 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (பல்வகை விதித்துறைகள்) சட்டம் பொருந்தக்கூடிய எல்லா தொழிற்சாலைகளுக்கும் தொழில் நிறுவனங்களுக்கும் இத்திட்டம் பொருந்தும்.

3. உறுப்பினராவதற்கான தகுதி :

வருங்கால வைப்பு நிதியில் உறுப்பினராயுள்ள அனைவரும் 1952 ஆம் ஆண்டு வருங்கால வைப்பு நிதி (பல்வகை விதித்துறை கள்) சட்டப்பிரிவு 17-ன் கீழ் விதி விலக்களிக்கப்பட்ட வருங்கால வைப்பு நிதி உறுப்பினர்களும் இத்திட்டத்தின் கீழ் கொணரப் படுகின்றனர்.

4. பங்கு கட்டண அளவு :

தொழிலாளர் இத்திட்டத்திற்கு பங்குக் கட்டணம் செலுத்து வதில்லை. ஆயினும் வேலையளிப்போரும் மைய அரசும் தொழிலாளர் சம்பளத்தில் முறையே 0.5 சதவிகிதம் மற்றும் 0.2 சதவிகிதம் என்ற அளவில் இக்காப்பீட்டுத் திட்டத்திற்கு பங்குக் கட்டணம் செலுத்துகிறார்கள்.

5. பயன்கள் :

பணியில் இருக்கும்போது இறக்க நேரிடும் வருங்காலவைப்பு நிதி உறுப்பினரின் வருங்கால வைப்பு நிதியைப் பெறுவோருக்கு இறப்பிற்கு முந்தைய மூன்று ஆண்டுகள் அல்லது அவர் உறுப்



1990 ஏப்ரல் 12]

பினராக இருந்த காலம் இவற்றில் எது குறைவானதோ அக்கால அளவில் அவரின் வருங்கால வைப்பு நிதி கணக்கின் இருப்பிலுள்ள சராசரி தொகைக்கு சமமாக அல்லது ரூ. 10,000 மிகாமல், கூடுதலாக காப்புறுதிப் பயன் தொகை (Insurance Benefit) வழங்கப்படுகிறது.

6. இத்திட்டத்தில் பயன் பெறுவதற்கான முன் தேவைகள் :

(1) இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட 1–8–1976-க்குப் பின்னர் இறப்பு நிகழ்ந்திருக்க வேண்டும்.

(2) தொழிற்சாலை-தொழில் நிறுவனத்தின் பணியிலிருக்கும் போது இறப்பு நிகழ்ந்திருக்க வேண்டும்.

(3) உறுப்பினரின் இறப்பிற்கு முந்தைய மூன்று ஆண்டுகள் அல்லது அவரது உறுப்பினர் காலம் முழுவதுமான இவற்றில் எது குறைவானதோ அக்கால அளவில் அவரது கணக்கிலுள்ள சராசரி இருப்புத்தொகை ரூ. 1,000-க்கு குறையாமல் இருக்க வேண்டும்.

1989ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 1,655 உரிமைக் கோரிக்கைகளுக்காக ரூ. 88.09 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

31-12–1989 முடிய பெறப்பட்ட, தீர்க்கப்பட்ட, திருப்பப் பட்ட, மீதமுள்ள உரிமைக் கோரிக்கைகளின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| (1) 1—1—1989-ல் நிலுவையிலிருந்த உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை .. | 277 |
| (2) 1989 ஆம் ஆண்டில் பெறப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை .. | 4,945 |
| (3) தீர்க்கப்படவேண்டிய உரிமைக் கோரிக்கை களின் மொத்த எண்ணிக்கை .. .. | 5,222 |
| (4) 1989 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை .. | 1,655 |
| (5) குறைகள் களைந்தனுப்புமாறு திருப்பப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை .. | 3,217 |
| (6) 31-12-1989 முடிய நிலுவையில் உள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை | 350 |

31-2-1979 முடிய நிலுவையிலுள்ள உரிமைக் கோரிக்கைகள் பற்றிய பகுப்பாய்வு கீழ்க்கண்டவாறு :—

| | |
|---|---|
| (1) இரண்டு மாதங்களுக்கு குறைவாக நிலுவையிலுள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை .. .. .. .. | 330 |
| (2) இரண்டு மாதங்களுக்கு மேலும் 6 மாதங்களுக்குக் குறைவாகவும் நிலுவையிலுள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை | 20 |
| (3) ஆறு மாதங்களுக்கு மேல் நிலுவையிலுள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை | .. |
| மொத்தம் .. | 350 |

## அத்தியாயம் 4.

### தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்

1955 ஆம் ஆண்டிலிருந்து இம்மாநிலத்தில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களுடன் மின் சாரத்தைப் பயன்படுத்தி வரும் தொழிற்சாலைகளுக்கும் மற்றும் மின்சாரத்தைப் பயன்படுத்தாது 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களுள்ள தொழிற்சாலைகளுக்கும் இத்திட்டம் பொருந்தும். புதிய துறைகளில் (New sectors) 20-ம், அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களையும் கொண்டுள்ள கடைகள் உணவகங்கள் (Hotels) அருந்தகங்கள் (Restaurants) செய்தியிதழ் நிறுவனங்கள், திரையரங்குகள் உள்ளிட்ட திரைப் பட நிறுவனங்கள், தனியார் மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் ஆகியவையும் இச்சட்டத்தின்கீழ் கொண்டு வரப் பட்டுள்ளன. தொழிலாளர் அரசு ஈட்டுறுதிச் சட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கு தொழிலாளர்களின் சம்பளம் மாதம் ரூ. 1,600 குள் இருக்க வேண்டும் என்ற வரையறையை மாதம் ரூ. 3,500 ஆக உயர்த்திட தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் கருதி யுள்ளது.

2. இத்திட்டம் பின்வரும் பயன்களுக்கு வகை செய்கிறது.

(1) மருத்துவப் பயன் .. .. மருத்துவப் பொருட்களாக வழங்கப்படுகிறது.



சென்னை

(2) உடல் நலமின்மைக்கான பயன்

(3) தற்காலிக ஏலாமையுற்றோருக்கான பயன்.

(4) நீடித்த உடல்நலமின்மைக்கான பயன்.

(5) பேறுகாலப் பயன் .. ..

(6) இறுதிச் சடங்குக்குரிய பயன்

(7) நிரந்தர ஏலாமைக்கான பயன்

(8) உடல் நலமின்மைக்கான கூடுதல் பயன் (குடும்பக்கட்டுப் பாடு).

(9) சார்ந்துள்ளவர்களுக்கான பயன்.

} பணமாக அளிக்கப் படுகிறது.

இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் ஈட்டுறுதி செய்து கொண்டவர்களின் குடும்ப நபர்களும் முழு மருத்துவ வசதி பெறத் தகுதி பெற்றவர்களாவர்.

இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள ஈட்டுறுதியாளர் களின் எண்ணிக்கை தொடர்பான விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

| | |
|---|---|
| (1) இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை. | 7,09,770 |
| (2) ஈட்டுறுதி செய்து கொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை. | 7,82,521 |
| (3) ஈட்டுறுதி செய்து கொண்டோரின் குடும்பங்களின் எண்ணிக்கை. | 7,82,521 |
| (4) இத்திட்டத்தில் பயனடைவோரின் மொத்த எண்ணிக்கை. | 30,36,181 |

மருத்துவ வசதிக்காகச் செலவிடப்படும் மொத்த தொகையை மாநில அரசும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகமும் 1 : 7 என்று ஒப்புக்கொள்ளப்பட்ட வீதத்தில் பகிர்ந்து கொள்கின்றன.

இக்கழகம் மருத்துவச் செலவிற்காக செலவிடப்படும் மொத்த தொகைக்கு உச்சவரம்பு நிர்ணயித்துள்ளது. 1-4-1990 முதல் தற்போதுள்ள உச்சவரம்பு, தொழிலாளர்களின் குடும்பம்

ஒன்றுக்கு ரூ. 220 ஆகும். (ஈட்டுறுதி செய்து கொண்டவர்
களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் முழு மருத்துவ
வசதி).

1-4-1990 முதல் மேற் சொன்ன உச்சவரம்புத் தொகைக்கு
மேல், ஒவ்வொரு தொழிலாளருக்கும் ஆண்டொன்றுக்கு மருந்து
கள், மருத்துவப் பொருட்கள் செலவிற்காக ரூ. 40க்கு மேற்பட்டு
ரூ. 90க்கு மேற்படாத தொகை அனுமதிக்கப்படுகிறது.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் சென்னையில்
அயன்புரம், மற்றும் கலைஞர் கருணாநிதி நகர், மதுரை,
கோயம்புத்தூர், வேலூர், சேலம், சிவகாசி ஆகிய இடங்களில்
ஒவ்வொன்று வீதம் ஏழு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ
மனைகளும், 135 நிலையான மருந்தகங்களும், 6 நடமாடும்
[redacted]களும் 2 பயன்பாட்டு மருந்தகங்களும் செயல்பட்டு
[redacted] மேற்கூறிய ஏழு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி
[redacted]னைகளில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை

| (1) | படுக்கைகள். (2) |
|---|---|
| (1) அயன்புரம் (சென்னை-23) .. .. | 616 |
| (2) கலைஞர் கருணாநிதி நகர், சென்னை-78 | 234 |
| (3) மதுரை .. .. .. .. | 309 |
| (4) கோயம்புத்தூர் .. .. .. | 540 |
| (5) வேலூர் .. .. .. .. | 50 |
| (6) சேலம் .. .. .. .. | 50 |
| (7) சிவகாசி .. .. .. .. | 50 |

1989–90ல் கீழ்க்கண்ட இடங்களில் அவற்றிற்கெதிரே குறிப்
-டுள்ள நாட்களிலிருந்து இத்திட்டம் செயல்படுத்தப்
-டுள்ளது :—

| (1) | செயல்படுத்தப் பட்ட நாள். (2) |
|---|---|
| மடத்துக்குளம், கோயம்புத்தூர் மாவட்டம். | 1—9—1989 |
| கே. சாத்தனூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம். | 16—10—1989 |
| சோமயம்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம். | 1—11—1989 |
| விராலிமலை, புதுக்கோட்டை மாவட்டம். | 1—3—1990 |
| கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டம். ... | 1—3—1990 |





சென்னை வட்டாரத்திலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களைச் சிறப்பாகவும் பயனூக்கமுள்ளதாகவும் நிர்வ கிக்க, ஒரு புதிய வட்டார நிர்வாக மருத்துவ அலுவலர் அலு வலகம் சென்னை கலைஞர் கருணாநிதி நகரில் 1—10—1989 முதல் துவங்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

1990–91ஆம் ஆண்டில் வேலூர்—அம்பேத்கார் மாவட்டத்தி லுள்ள மேல்விஷாரம் மற்றும் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள சங்கரன்கோவில் ஆகிய இரு இடங்களில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

## அத்தியாயம் 5

### வேலைவாய்ப்புப் பணி :

இராணுவத்திலிருந்து மிகுந்த எண்ணிக்கையில் விடுவிக்கப்பட
விருந்த போர் வீரர்களுக்கும், இராணுவத்தில் பணியாற்றியவர்
களுக்கும் மறுவாழ்வு அளிப்பதற்கென ஒரு தனியான அமைப்பு
தேவை என உணரப்பட்டதால் நாட்டில் பல இடங்களில் வேலை
வாய்ப்பு அலுவலகங்கள் படிப்படியாகத் தோற்றுவிக்கப்பட்டன.
வேலைவாய்ப்பு அலுவலகங்களின் நிர்வாகக் கட்டுப்பாடானது
1—11—1956 முதல் இந்திய அரசிடமிருந்து அந்தந்த மாநில
அரசுக்கு மாற்றப்பட்டது. அவ்வாறு மைய அரசிடமிருந்து
மாநில அரசுக்கு இந்த அமைப்பு மாறிய பிறகு தமிழ்நாட்டில்
இருந்த வேலை வாய்ப்பு அலுவலகங்கள் 1963 வரை தொழி
லாளர் நல ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வந்தன.
1963இல் அதுவரை தொழில் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி
வந்த தொழில் பயிற்சி நிலையங்களும், வேலை வாய்ப்பு அலு
வலகங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு வேலைவாய்ப்பு மற்றும்
பயிற்சித்துறை என்ற பெயரில் ஒரு புதிய துறை உருவாக்கப்பட்டு
தனியான இயக்குநரின் கீழ் அமைக்கப்பட்டது.

### 1. வேலைவாய்ப்பு அலுவலகங்கள் :

தமிழ்நாட்டில் மொத்தம் 43 வேலைவாய்ப்பு அலுவலகங்கள்
இயங்கி வருகின்றன. அவற்றில் ஆறு துணை வேலை வாய்ப்பு
அலுவலகங்களும் தொழில் நுட்ப வகையினர்க்கு ஐந்தும், உடல்
ஊனமுற்றோருக்கு ஒன்றும், தொழில் மற்றும் நிர்வாக நிலை
மனுதாரர்களுக்கு ஒன்றும் ஆக மொத்தம் ஏழு சிறப்பு வேலை
வாய்ப்பு அலுவலகங்களும், சென்னை, மதுரை மற்றும் அண்ணா
மலைநகர் ஆகிய நகரங்களில் தலா ஒவ்வொன்றாக மொத்தம்
மூன்று பல்கலைக் கழக வேலைவாய்ப்புத் தகவல் மற்றும் வழி

காட்டு மையங்களும் அடங்கும். இவை வேலை தேடுவோரின்
எல்லா வகையினருக்கும் உதவி செய்வதற்கேற்ப பணிபுரிகின்றன.
இவை தவிர பல்வேறு போட்டித் தேர்வுகளில் கலந்துகொள்ளும்
ஆதி திராவிடர் பழங்குடியினருக்கு சிறப்பு வகையில் பயிற்சி
அளிப்பதற்காக திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்
வேலி மற்றும் வேலூரில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி
யினர் பயிற்றுவிக்கும் மற்றும் வழிகாட்டு நிலையங்கள் நான்கு
1989 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருகின்றன.

1988 மற்றும் 1989 ஆம் ஆண்டுகளில் வேலைக்காக பதிவு செய்துள்ள மனுதாரர்கள், வேலை அளிக்கப்பட்டவர்கள் வேலைக்காக வேலைவாய்ப்பகங்களில் செல்லுப்படிப் பதிவேட் டில் (Live Register) காத்திருப்பவர்கள், அறிவிக்கப்பட்ட காலியிடங்களின் எண்ணிக்கை, வேலைவாய்ப்பகங்களை பயன் படுத்திக் கொண்ட அரசுத்துறை, தனியார் துறையைச் சேர்ந்த தொழிலதிபர்களின் எண்ணிக்கை விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

| (1) | 1—1—1988 முதல் 31—12—1988 வரை. (2) | 1—1—1989 முதல் 31—12—1989 வரை. (3) |
|---|---|---|
| 1. பதிவு செய்தோரின் எண்ணிக்கை. | 5,27,036 | 6,74,130 |
| 2. அறிவிக்கப்பட்ட காலியிடங்கள். | 62,666 | 67,969 |
| 3. பணியில் அமர்த்தப் பட்டோர். | 54,368 | 51,699 |
| 4. வேலைவாய்ப்பகங்களைப் பயன்படுத்திய வேலையளிப்போர். | 19,202 | 19,382 |
| 5. டிசம்பர் 31 ஆம் நாளில் வேலை வாய்ப்பகங்களின் பட்டியலில் காத்திருந் தவர்களின் எண்ணிக்கை. | 25,07,092 | 27,92,504 |





2. தொழில் மற்றும் செயல் வேலை வாய்ப்பு அலுவலகம், சென்னை.

இந்த அலுவலகம் உயர்ந்த தொழில் அனுபவம், அறிவியல் பொறியியல் மற்றும் நிர்வாக மேற்பார்வை பணிக் கல்வித் தகுதி யுடைவர்களின் தேவைகளை கவனிக்கிறது. பொது மற்றும் தனி யார் துறைகளின் முதல் இடங்களை வகிக்கும் (Leading Employers) வேலையளிப்போருடன் தொடர்ச்சியான நெருங்கிய தொடர்பு கொண்டு மருத்துவர்கள், பொறியாளர்கள் மற்றும் முதுநிலைப் பட்டதாரிகள் போன்ற தொழில் சார்ந்த கல்வி கற்றவர்களுக்குத் தகுதியான வேலைவாய்ப்புக்களைத் தேடுவதற்கேற்ப இந்த அலு வலகம் பணியாற்றுகிறது. 1988 மற்றும் 1989 ஆம் ஆண்டுகளில் இந்த அலுவலகம் ஆற்றிய பணிகள் தொடர்பான புள்ளி விவரங் கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| | 1—1—1988 முதல் 31—12—1988 வரை. | 1—1—1989 முதல் 31—12—1989 வரை. |
|---|---|---|
| (1) பதிவு செய்யப்பட்ட மனு தாரர்களின் எண்ணிக்கை. | 23,452 | 25.193 |
| (2) பணியில் அமர்த்தப்பட்டோர் | 2,373 | 2,671 |
| (3) டிசம்பர் 31 ஆம் நாளில் பதிவேட்டில் காத்திருப்போரின் எண்ணிக்கை. | 69,527 | 32,231 |

3. உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம்.

பார்வையற்றோர், செவிப்புலன் குறைந்தோர் மற்றும் உறுப்பு நலம் குறைந்தோர் போன்ற உடல் ஊனமுற்ற மனு தாரர்கள் வேலைவாய்ப்புப் பெறுவதில் உதவுவதற்கேற்ப சென்னை அண்ணாநகரில் சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம் ஒன்று இயங்கி வருகிறது. இது மட்டுமின்றி, மதுரை, கோயம் புத்தூர், திருச்சி, சேலம், தஞ்சாவூர், நாகர்கோவில், காஞ்சி புரம், திருநெல்வேலி மற்றும் கடலூர் ஆகிய 9 இடங்களில் உடல் ஊனமுற்றவர்களுக்காக மொத்தம் 9 சிறப்பு பிரிவுகளும் இயங்கி வருகின்றன. மேற்குறித்த அலுவலகங்கள் உடல் ஊன முற்றோரைப் பதிவு செய்வது மட்டுமின்றிப் பொது மற்றும் தனியார் துறைகளைச் சார்ந்த வேலையளிப்போருடன் நெருக்

கமான தொடர்புகளை ஏற்படுத்திப் பேணுவதின் மூலம் உடல் ஊனமுற்றோருக்கு ஏற்ற வேலை வாய்ப்புகளைத் தேடிக் கண் டறிகின்றன. 1988 மற்றும் 1989 ஆம் ஆண்டுகளில் இந்த அலுவலகங்கள் ஆற்றிய பணிகளின் விவரம் கீழ்வருமாறு:—

1—1—1988 முதல்
31—12—1988 வரை.

| | பதிவு செய்தோர். | பணியில் அமர்த்தப் பட்டோர். | 31-12-88 அன்று பதிவேட்டில் காத்திருப்போர் (காலாவதியானது நீங்கலாக). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| பார்வையற்றோர் | 270 | 13 | 2,284 |
| செவிப்புலன் குறைந்தோர் | 279 | 30 | 1,794 |
| உறுப்பு நலன் குறைந்தோர் | 4,696 | 1,257 | 26,119 |
| மொத்தம் .. | 5,245 | 1,300 | 30,197 |



1—1—1989 முதல்
31—12—1989 வரை.

| | பதிவு செய்தோர். | பணியில் அமர்த்தப் பட்டோர். | 31-12-89 அன்று பதிவேட்டில் காத்திருப்போர் (காலாவதியானது நீங்கலாக). |
|---|---|---|---|
| (1) | (5) | (6) | (7) |
| பார்வையற்றோர் | 678 | 18 | 2,889 |
| செவிப்புலன் குறைந்தோர் | 611 | 34 | 2,332 |
| உறுப்பு நலன் குறைந்தோர் | 5,778 | 1,072 | 28,922 |
| மொத்தம் .. | 7,067 | 1,124 | 34,143 |

4. சென்னை, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் வேலூர் ஆகிய நகரங்களில் தொழில் நுட்பத் தகுதி பெற்றவர் களுக்கெனத் தனியாக வேலை வாய்ப்பு அலுவலகங்கள், தொழில் நுட்பத் தகுதி பெற்றவர்களைப் பணியமர்த்துவதைச் சிறப் பாகக் கவனிப்பதற்காக நிறுவப்பட்டுள்ளன.

5. வேலை நிலவரத் தகவல் திட்டம் :

வேலை நிலவரத் தகவல் திட்டத்தின் கீழ் பொதுத் துறையில் உள்ள எல்லா நிறுவனங்களிலிருந்தும், தனியார் துறையில் 25 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்களைக் கொண்டுள்ள எல்லா நிறுவனங்களிலிருந்தும் (வேளாண்மை நீங்கலாக) வேலை வாய்ப்பு நிலையில் ஏற்படும் மாற்றங்களைப்பற்றிய தகவல்கள் காலாண்டு இடைவெளியில் சேகரிக்கப்படுகின்றன. 10 முதல் 24 பணியாளர்கள் பணியாற்றும் தனியார் துறையைச் சேர்ந்த நிறுவனங்களிலிருந்தும் இத்தகவல் தாங்களாகவே முன்

வந்து அளிக்கும் வேலையளிப்போரிடமிருந்து திரட்டப்படு
கிறது. இவ்வாறு தகவல் திரட்டும் பணி தொழில் சங்க
அமைப்பு ரீதியான துறைகளில் மட்டும் (o gariser sector) சட்டம்
மேற்கொள்ளப்பட்டது. கட்டாய காலியிட அறிவிக்கைச் சட்டம்
1959 இன் கீழ் வகுக்கப்பட்ட விதிமுறைகளின்படி பொதுத்
துறையில் உள்ள எல்லா நிறுவனங்களும் தனியார் துறைகளில்
25-ம் அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்களைக் கொண்
டுள்ள அனைத்து நிறுவனங்களும் எந்த வேலை வாய்ப்ப
கத்தின் அதிகார எல்லைக்குள் தங்கள் நிறுவனம் அமைந்
துள்ளதோ அந்த வேலைவாய்ப்பகத்திற்கு தங்கள் நிறுவனங்
களில் தோன்றும் காலியிடங்களை அறிவிக்க வேண்டும்.

6. வாழ்க்கைத் தொழிலுக்கு வழிகாட்டுதல் வேலைவாய்ப்பு அறிவுரை
வழங்குதல்.

தமிழ்நாட்டில் மொத்தம் 19 வாழ்க்கைத் தொழில் வழி
காட்டும் பிரிவுகள் வாழ்க்கைத் தொழிலைத் திட்டமிடுவதன்
அவசியம் பற்றிய விழிப்புணர்வை வேலை தேடுவோரிடையே
ஏற்படுத்துவதற்காகவும் வேலைவாய்ப்பு அலுவலகங்களில்
பதிவு செய்துள்ள வேலை தேடுவோரின் பயனுக்காகத் தொழில்
மற்றும் பயிற்சி குறித்த தகவல்களைப் பகுத்து வைப்பதற்
காகவும், இயங்கி வருகின்றன. இந்த பிரிவுகளால் மாணவர்கள்
மற்றும் வேலை தேடுவோரின் பயனுக்காக வாழ்க்கைத்
தொழிலைத் தெரிந்தெடுப்பதற்காகவும், பயிற்சிக்கான வாய்ப்பு
களை அறிந்து கொள்வதற்காகவும் ஏற்ற வகையில் பயனுள்ள
தகவல்கள் அடங்கிய காலாண்டு வழிகாட்டும் செய்திச்
சிற்றேடுகள் தயார் செய்யப்பட்டு வெளியிடப்படுகின்றன.

வாழ்க்கைத் தொழிலுக்குத் திட்டமிடுவது பற்றி பல்கலைக்
கழக மாணவரிடையே பரப்புவதற்கேற்பவும் அவர்கள் தங்கள்
வாழ்க்கைத் தொழிலைச் சரியாக தெரிவு செய்வதற்கு உதவு
வதற்கேற்பவும் பல்கலைக்கழக வேலை வாய்ப்புத் தகவல்
மற்றும் வழிகாட்டு மையங்களாலும், வாழ்க்கைத் தொழில்
வழிகாட்டும் பிரிவுகளாலும் வாழ்க்கைத் தொழில் பொருட்
காட்சிகள் நடத்தப்படுகின்றன.

7. பழங்குடியினருக்கான சிறப்பு வாழ்க்கைத் தொழில் வழி காட்டும்
நிலையங்கள்.

பழங்குடியினத்தைச் சார்ந்த மனுதாரர்களுக்கு வாழ்க்
கைத் தொழில் வழிகாட்டும் பணியைச் செய்வதற்காகவும்
அவர்களுக்குப் பொருத்தமான காலியிடங்களைக் கண்டறிந்து





பரிந்துரைப்பதற்காகவும் உதகமண்டலம் மற்றும் தென்னாற்
காடு மாவட்டத்தில் உள்ள சங்கராபுரம் ஆகிய இடங்களில்
பழங்குடியினருக்கான சிறப்பு வாழ்க்கைத் தொழில் வழி
காட்டும் நிலையங்கள் இரண்டு இயங்கி வருகின்றன.

8. வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் திட்டம் :

வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவேட்டில் 5 ஆண்டு
களுக்கு மேலாகக் காத்திருக்கும் வேலை தேடுவோரின் 9
வகையினருக்குச் சில விதிமுறைகளுக்கும் வரையறைகளுக்கும்
உட்பட்டு, வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை
வழங்கும் திட்டம் ஒன்றை தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தி
உள்ளது. அந்த நிவாரணத் தொகையானது பட்டதாரிகளுக்கு
மாதந்தோறும் ரூபாய் 100 என்ற வீதத்திலும், புகுமுக வகுப்பு
பிளஸ் 2 தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதந்தோறும் ரூபாய் 75
என்ற வீதத்திலும் எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றவர்களுக்கு
மாதந்தோறும் ரூபாய் 50 வீதத்திலும் மூன்றாண்டுகளுக்கு
வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் இதுவரை
அதாவது திட்டம் தொடங்கப்பட்ட 1—7—1980 முதல்
3,50,355 மனுதாரர்கள் பயனடைந்துள்ளனர். மேலும்
இத்திட்டத்தின்கீழ் இதுவரை ரூபாய் 41.73 கோடி நிவாரண
மாக வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை காலாண்டுக்கொரு
முறை தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் வழங்கப்
படுகிறது. 30—11—1988 முதல் இத்திட்டம் பார்வையற்ற
மனுதாரர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. ஓராண்டுக்கும்
மேலாக வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவேட்டில் காத்திருக்
கும் பார்வையற்ற மனுதாரர்கள் சுமார் ஐந்து வருட காலத்
திற்கு இத்தொகையைப் பெறத் தகுதியுள்ளவராகின்றனர்.
1—2—1990 முதல் இத்திட்டத்தின்கீழ் பார்வையற்ற மனு
தாரர்கள் கீழ்க்கண்டவாறு உதவித் தொகை பெற தகுதியுடை
யவர் ஆவர்:

| (1) | மாதம் ஒன்றுக்கு ரூபாய். (2) |
|---|---|
| பட்டதாரிகள்/முதுநிலைப் பட்டதாரிகள் | 200 |
| புகுமுக வகுப்பு/மேனிலைப் பள்ளித் தேர்வு/ பட்டக் கல்வியை இடையில் விட்டோர் | 150 |
| மற்றவர்கள் | 100 |

9. சுயவேலைவாய்ப்பு ஊக்கப் பிரிவுகள் :

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள மனு
தாரர்கள் நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன்
பெறுவதற்கு உதவி செய்வதன் மூலம் அவர்களிடையே சுய

தொழிலை ஊக்குவிப்பதற்கேற்ப வேலூரிலும்,
முத்தூரிலும் மைய அரசின் நிதி உதவியுடன் இரண்டு கோய
தொழில் ஊக்கப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. சுய
இரண்டு பிரிவுகளும் சேர்ந்து 3,881 மனுதாரர்களுக்கு இந்த
செய்துள்ளன. அதன் பயனாய் நாட்டுடைமையாக்கப்பட்ட உதவி
வங்கிகளால் மொத்தம் ரூ. 4.37 கோடி சுய தொழில்
தொடங்குவதற்காகக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**10. ஆதிதிராவிடர் பழங்குடி இனங்களைச் சார்ந்த மனுதாரர்களுக்கான சிறப்புப் பயிற்சி வகுப்புகள் :**

பல்வேறு தேர்வு முகமை நிறுவனங்களால் நடத்தப்பெறும்
போட்டித் தேர்வுகளில் ஆதி திராவிடர்/பழங்குடி இனங்களைச்
சார்ந்த மனுதாரர்கள் போட்டியிட்டுத் தேர்ச்சி பெறுவதற்கு
உதவும் வகையில் இந்தத் துறையானது ஆதி திராவிடர்/
பழங்குடி இனங்களைச் சார்ந்த மனுதாரர்களுக்காகச் சிறப்புப்
பயிற்சி வகுப்புகளை நடத்தும் முனைப்புத் திட்டம் ஒன்றை
மேற்கொண்டுள்ளது. பொறுப்பு அலுவலர் ( Probationary
Officer) எழுத்தர் நிலைப் பதவிகளுக்காக வங்கிப் பணி
யாளர் தேர்வாணையம் நடத்திய தேர்வுகள், கீழ்நிலை எழுத்தர்
பதவிகளுக்காக பணியாளர் தேர்வாணையம் நடத்திய தேர்வுகள்,
உதவியாளர் நிலைப் பதவிகளுக்காக மைய அரசுப் பணியாளர்
தேர்வாணையம் நடத்திய தேர்வுகள் மற்றும் குடிமைப்
பணிகள் முதனிலைத் தேர்வுகள், இந்திய பொதுக் காப்பீட்டுக்
கழகம் நடத்திய எழுத்தர் நிலைத் தேர்வு, பணியாளர் தேர்
வாணையத்தின் சுருக்கெழுத்தர் தேர்வு. இந்திய ரிசர்வ் வங்கி
நடத்திய எழுத்தர் நிலைத் தேர்வு, தமிழ்நாட்டில் உள்ள
பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்கைக்காக
நடத்தப்பட்ட நுழைவுத் தேர்வு ஆகியவற்றில் கலந்து
கொண்ட ஆதி திராவிடர்/பழங்குடி இனங்களைச் சார்ந்த
மனுதாரர்களுக்காக இத்தகைய சிறப்புப் பயிற்சி வகுப்புகள்
நடத்தப்பட்டன. மேற் குறித்த தேர்வுகளில் போட்டியிடுவ
தற்காக 1989–90-ஆம் ஆண்டில், 3,861 ஆதி திராவிடர் பழங்
குடியின மாணவர்கள், இத்துறை நடத்திய பயிற்சி வகுப்பு
களில் கலந்து கொண்டனர்.

**11 வேலை வாய்ப்பு அலுவலகங்களில் கம்ப்யூட்டரைப் பயனுக்குக் கொண்டு வருதல் :**

வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள
வேலை தேடுவோருக்கும் வேலையளிப்போருக்கும் திறமை
யாகவும் விரைவாகவும், புகாருக்கு இடமின்றி சேவை புரிவதற்
காகவும் மனுதாரர்களை உடனுழைப்பின் மூலம் தேர்வு செய்யும்
தற்போதைய நடைமுறையில் எதிர் கொள்ளப்படும் குறைபாடு
களைத் தவிர்ப்பதற்காகவும், வேலை வாய்ப்பு அலுவலகங்களில்



'கம்ப்யூட்டரைப்' பயன்படுத்தும் திட்டம் தமிழ் நாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது. சென்னையில் இரண்டு அலுவலகங்கள், கோயம்புத்தூரில் ஒன்று, திருச்சிராப்பள்ளியில் ஒன்று என மொத்தம் நான்கு வேலை வாய்ப்பு அலுவலகங்களில் 'கம்ப்யூட்டர்களை' அமைப்பதற்காக அரசு ஏற்கெனவே ரூ. 17.33 இலட்சம் ஒப்பளித்துள்ளது. இதில் மைய அரசிடமிருந்து பெறப்பட்ட ரூபாய் 3.68 இலட்சமும் அடங்கும். 1989-ஆம் ஆண்டில், அடையாறு (சென்னை), திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் மொத்தம் மூன்று 'கம்ப்யூட்டர்கள்' நிறுவப்பட்டுள்ளன. நான்காவது 'கம்ப்யூட்டர்' அண்ணா நகரில் (சென்னை) உள்ள வேலை வாய்ப்பு அலுவலகத்தில் நிறுவப்படும். வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பணிகளைக் 'கம்ப்யூட்டர்' மூலம் செயல்படுத்துவதற்குத் தேவையான 'அப்ளிகேஷன் சாப்ட்வேர்' ( Application Software ) எனப்படும் செயற் திட்டங்கள் தொகுப்பு முழுமையாகத் தயார் செய்யப்பட்டு சோதனை பார்க்கப்பட்டது. இந்த வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள மனுதாரர்களின் பதிவு விவரங்களை உள்ளீட்டுத் தகவல்களாக (Data entry) மாற்றும் பணி தொடங்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, திருச்சிராப்பள்ளியில் உள்ள வேலை வாய்ப்பு அலுவலகத்தில் இந்த உள்ளீட்டுத் தகவல் தயாரிக்கும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டு சுமார் 10,000 பதிவட்டைகளின் தகவல் உள்ளீடு செய்யப்பட்டுள்ளன. மற்ற மூன்று வேலை வாய்ப்பு அலுவலகங்களில் உள்ளீட்டுத் தகவல் தயாரிக்கும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

வேலை வாய்ப்பு அலுவலகங்களில் 'கம்ப்யூட்டரை' பயன்படுத்துவதற்கு ஆகும் செலவில் ஒரு பகுதியை ஏற்பதின் வாயிலாக மைய அரசு இத்திட்டத்தை ஊக்குவித்து வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள எஞ்சிய வேலை வாய்ப்பு அலுவலகங்களில் 'கம்ப்யூட்டரை' வைப்பதற்கு மொத்தம் ரூ. 104.33 இலட்சம் செலவாகும் என கணக்கிடப்படுகிறது. இதில் ரூ. 15.53 இலட்சத்தை இந்திய அரசு தன் பங்காக வழங்கும். எஞ்சிய வேலை வாய்ப்பு அலுவலகங்களில் 'கம்ப்யூட்டர்' வைக்கும் திட்டத்தை எட்டாவது திட்ட காலத்தில் படிப்படியாக அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

**12. சிறப்புக் குழு அமைத்தல் :**

1,371 எண்ணும் 20—7—1989 நாளுமிட்ட தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் நிலை அரசாணையின் வாயிலாக அரசு வேலை வாய்ப்பு அலுலகங்களின் செயல்பாடு குறித்துப் பொது மக்களிடமிருந்து பெறப்படும் கடுமையான புகார்களைக் கவனிப்பதற்காகச் சிறப்புக் குழு ஒன்றை

அமைத்துள்ளது. வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை
இயக்ககத்தைச் சார்ந்த ஒரு துணை இயக்குநரும் ஓர் உதவி
இயக்குநரும் அந்தச் சிறப்புக் குழுவில் பதவி வகிக்கின்றனர்.
அவர்கள் தம் வாலாயப் பணிகளுடன் அக்குழுவின் பணிகளை
யும் கவனித்து வருகின்றனர். அந்தக் குழு அமைக்கப்பட்ட
குறுகிய காலத்திற்குள்ளாகவே, பல உடனடி விசாரணைகளை
நடத்தியுள்ளது. கடுமையான புகார்கள் பலவற்றில் தொடர்
புடைய ஆவணங்களை ஆழ்ந்து ஆய்வு செய்துள்ளது. அதன்
பயனாக தேவையான இடங்களில் ஒழுங்கு நடவடிக்கை
வழங்கப்படுவதற்கு இக்குழு காரணமாக இருந்துள்ளது.

### 13. வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கான கட்டடங்களைக் கட்டுதல் :

தற்போது வேலை வாய்ப்பு அலுவலகங்கள் பெரும்பாலும்
தனியாருக்குச் சொந்தமான வாடகைக் கட்டடங்களில்
அமைந்துள்ளன. அந்த கட்டடங்கள் குடியிருப்பதற்கு ஏற்றன
வாகக் கட்டப்பட்டுள்ளதால், வேலை வாய்ப்பு அலுவலகங்கள்
கவனித்து வருகின்ற பல்வேறு பணிகளுக்கு அக் கட்டடங்கள்
பொருத்தமானவையாக இருப்பதில்லை. எனவே 1989–90ஆம்
ஆண்டில், கடலூர், தஞ்சாவூர், மதுரை, கோயம்புத்தூர்
மற்றும் தூத்துக்குடி ஆகிய ஐந்து இடங்களில் மொத்தம்
ரூ. 77.24 இலட்சம் மதிப்பீட்டில் வேலை வாய்ப்பு அலுவலகங்
களுக்குச் சொந்த கட்டடங்களைக் கட்டுவதற்கு அரசு ஒப்ப
ளிப்பு வழங்கியுள்ளது. பிற இடங்களில் உள்ள வேலை வாய்ப்பு
அலுவலகங்களுக்குச் சொந்த கட்டடங்களைக் கட்டுவது
பற்றிய திட்டம் படிப்படியாக எடுத்துக் கொள்ளப்படும்.

### புதிய திட்டங்கள் :

1990–91-இல் செயல்படுத்தப்படுவதற்காகப் பின்வரும்
திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 14. டாகுமெண்ட் லாமினேட்டர் (Document Laminator) வழங்குதல் :

வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள மனு
தாரர்கள் தங்கள் வாழ்க்கைத் தொழில் பற்றித் திட்டமிடுதலின்
அவசியத்தைப் பரவச் செய்வதற்கேற்ப சென்னை, வேலை
வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்ககம் தமிழிலும் ஆங்கிலத்
திலும் தனித்தனித் தொழில்கள் பற்றிய வாழ்க்கைத் தொழில்
சிற்றேடுகளைத் தயார் செய்து அச்சிடுகிறது. அவை மாணவர்
களுக்குப் பகிர்வு செய்யப்படுவதற்கேற்ப பள்ளி நிறுவனங்
களுக்கு அனுப்பப்படுகின்றன. வாழ்க்கைத் தொழில் சிற்றேடு
கள் நாள்பட்டு இருப்பதற்கேற்பவும் அவை பொலிவுடன்



காணப்படுவதற்கேற்பவும் அவற்றை லாமினேட் (Laminate)
செய்து மெருகூட்டலாம் எனத் திட்டமிடப்பட்டுள்ளது. எனவே
சென்னை வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்க
கத்திற்கு 1990–91ஆம் ஆண்டில், ரூபாய் 15,000 செலவில்
ஒரு ' டாகுமெண்ட் லாமினேட்டர் ' வழங்குவதற்குத் திட்ட
மிடப்பட்டுள்ளது.'

### 2. எலக்ட்ரானிக் பைண்டர் (Electronic Binder) வழங்குதல்:

வேலை தேடுவோர் பற்றிய முக்கியமான விவரங்கள்
வேலை வாய்ப்பு அலுவலகங்களில் ' பதிவு திரட்டு (R cord
of Registration) எனப்படும் ஒரு பெரும் பதிவேட்
டில் குறித்து வைக்கப்படுகின்றன. இந்தப் பதிவேடுகள் ஒவ்
வொன்றும் 500 பக்கங்கள் கொண்டதாகப் பேணப்படுகின்றன.
அடிக்கடிப் பயன்படுத்துவதன் காரணமாக இந்தப் பதிவேடு
கள் கிழிந்துள்ளன. வேலை வாய்ப்பு அலுவலகங்களில் உள்ள
கிழிந்த இத்தகைய பதிவுத் திரட்டுகளைப் பிணைத்துச் செப்பம்
செய்வதற்கேற்ப சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும்
திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள நான்கு மண்டல
அலுவலகங்கள் ஒவ்வொன்றுக்கும் ஓர், 'எலக்ட்ரானிக் பைண்டர்'
என்ற வீதத்தில் நான்கு பொறிகளை மொத்தம் ரூ. 38,000
செலவில் 1990–91ஆம் ஆண்டில் வழங்குவதற்குத் திட்டமிடப்
பட்டுள்ளது.

## அத்தியாயம்—6.

## கைவினைஞர் பயிற்சித் திட்டம்.

தமிழ்நாட்டில் கடந்த சில ஆண்டுகளாக கல்வித் துறையில்
ஏற்பட்டுள்ள வசதிகளின் விளைவாக 14 முதல் 17 வயதுள்ள
சிறுவர்கள் கல்வி பயின்று ஒவ்வொரு வருடமும் பள்ளியிலிருந்து
தேர்ச்சி அடைந்து வெளியேறுகின்றனர். தொடர்ச்சியான
பொருளாதார மற்றும் சமூக மாற்றங்களை உறுதி செய்ய
கல்வி முறை முக்கிய பங்காற்ற வேண்டும். இன்றுள்ள நிலையில்
மாணவர்கள் செயல் முறைசாராக் கல்வியைப் பயிலுவதைக்
காட்டிலும் தொழில் கல்வி மற்றும் தொழில் நுட்பக் கல்வி
ஆகியவற்றை கற்பதில் அதிகமாக நாட்டம் கொண்டுள்ளனர்
என்பது தெரிய வருகிறது. பொருளாதார நெருக்கடி காரண
மாக உயர்கல்வி பெற வாய்ப்பற்ற நலிவுற்ற மக்களின் குழந்தை
கட்கு கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின் கீழ் வாழ்க்கைக் கல்வி
பயிற்சி முறை வாய்ப்பினை அளிக்கிறது. தொழில் பயிற்சி
நிலையங்களில் அளிக்கப்படும் கைவினைஞர் பயிற்சி முழுவதும்

இலவசமாக கற்றுக் கொடுக்கப்பட்டு வரும் காரணத்தினால் ஆ்த் [1990 ஏப்ரல் 12
திட்டம் நலிவுற்ற மக்களுக்கு வரப் பிரசாதமாக உள்ளது. இலவச
மான பயிற்சியாக இருப்பினும், தொழிற் பயிற்சி நிலை
யங்களில் முறையான, தரமான பயிற்சிகள் அளிக்கப்படுவதனால்,
அகில இந்திய தொழிற் திறனாய்வுத் தேர்வுகளில் பலமுறை
சிறந்த மாநிலத்திற்கான விருதை இம்மாநிலம் பெற்றதோடு அல்
லாமல், மீண்டும் 1988 ஆம் ஆண்டும் அவ்விருதினைப் பெற்
றுள்ளது.

தற்பொழுது, தமிழ்நாடு முழுவதும், மகளிருக்கென ஐந்து
அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களும், சிதம்பரத்தில்
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கென ஒன்றும், மலை
வாழ் மக்களுக்கென தென்னாற்காடு மாவட்டத்தில் சங்கரா
புரத்தில் ஒன்றுமாக சேர்த்து மொத்தம் 44 அரசினர் தொழிற்
பயிற்சி நிலையங்கள் சீரிய முறையில் தமிழ்நாட்டில் இயங்கி
வருகின்றன. இவைகளில் பொருத்துநர், கடைசலர், இயந்திர
வேலையாள், இயந்திரப் பட வரைவாளர், கட்டிடப் பட
வரைவாளர், பிளாஸ்டிக் பதனப்படுத்துதல் செய்பவர், சுருக்
கெழுத்தாளர், தோல் பொருள் செய்பவர் போன்ற ஓராண்டு
மற்றும் ஈராண்டிற்கான பொறியியல் மற்றும் பொறியியல்
அல்லாத 46 தொழிற் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வரு
கிறது. ஏறத்தாழ 15,132 மாணவர்களும், 1,086 மாணவி
களும் அனைத்து தொழிற் பயிற்சி நிலையங்களிலும் தொழிற்
பயிற்சி பெற்று வருகின்றனர். ஆண்டுதோறும் ஏறத்தாழ
10,000 பயிற்சியாளர்கள் வெற்றிகரமாக பயிற்சி முடித்து,
தேர்ச்சி பெற்று வெளியேறுகின்றனர். அரசினர் தொழிற் பயிற்சி
நிலையங்களில் பயிற்சி பெற விரும்பும் மாணவர்களின் எண்
ணிக்கை ஆண்டுதோறும் பன்மடங்கு பெருகி வருவதனால்
தமிழ் நாட்டில் 13,622 இருக்கைகளுடன் கூடிய தேசிய வாழ்
வியல் தொழில் கல்வி (என்.சி.வி.டி.) பயிற்சித் திட்டத்தின்
கீழ் 235 தனியார் தொழில் பயிற்சி நிலையங்கள் செயல்பட
அரசு அங்கீகரித்துள்ளது. சமுதாயத்தில் குறிப்பாக எளிய
பிரிவினர்களுக்கு அதிகமான அளவு பயிற்சியில் வாய்ப்பு அளிக்கும்
வகையில் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் உள்ள
இருக்கையில் 50 விழுக்காடு அரசிற்கு ஒதுக்கீடு செய்து தற்
போது நடைமுறையில் உள்ள சாதி சுழற்சி முறையை
நடைமுறைப் படுத்தி இருக்கைகள் நிரப்பப்படல் வேண்டும்
என அரசு ஆணை வழங்கியுள்ளது. தமிழ்நாட்டில் மாநில
முறை பயிற்சித் திட்டத்தின்படி (ஸ்டேட் பேட்டர்ன்) 175
தனியார் தொழில் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவை
களில் 52 தொழில் பள்ளிகள் ஆசிரியர் சம்பளம் மற்றும்
பயிற்சி செலவு ஆகியவைகளுக்கான செலவில் 75
விழுக்காடு செலவினை அரசு மானியமாக அவை பெற்று
வருகின்றன.



1990 ஏப்ரல் 12]

பல்வேறு அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொடர்புடைய திட்டங்கள் செயலாக்கப்பட்டு வருகின்றன:

**1. வாழ்வியல் மேம்பாட்டு பயிற்சித் திட்டம் ;**

வாழ்வியல் மேம்பாட்டு பயிற்சித் திட்டம், அம்பத்தூர், கோயம்பத்தூர், மற்றும் ஓசூர் தொழிற் பயிற்சி நிலையங்களில் செயல்பட்டு வருகின்றது. தொழிற்சாலைகளில் பணி புரிந்து வருகின்ற தொழிலாளர்கள் நவீன நுண்ணிய தொழில் நுட்பம் கொண்ட சாதனங்களை இயக்கவும், பராமரிக்கவும் தக்கவாறு அவர்களின் தொழிற் திறனை உயர்த்திக் கொள்ள வழி வகை செய்வதே இப்பயிற்சித் திட்டத்தின் தலையாய நோக்கமாகும். இத் திட்டம் தொழில் துறையினரால் வெகுவாகப் பாராட்டப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும். 1979 முதல் மார்ச் 1989 வரையில் 4,957 தொழிலாளர்கள் இத் திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்று பலனடைந்துள்ளனர்.

**2. தொழில் பழகுநர் பயிற்சித் திட்டம் ;**

1961 ஆம் ஆண்டின் தொழிற் பழகுநர் சட்டத்தின்படி தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி முடித்த முன்னாள் பயிற்சியாளர்கள் மற்றும் புதிதாக பயிற்சி பெற உள்ளவர்கட்கும் 1963 முதல் செப்டம்பர் 1989 வரையில் பயிற்சி வசதிகள் அமைந்துள்ள 1,818 தொழில் நிறுவனங்களில் தொழிற் பழகுநர் பயிற்சித் திட்டம் அமுலாக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் இம் மாநிலத்தில் 1963 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. 30—9—1989 வரையில் இத் திட்டத்தின்கீழ் 90,996 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்று பயனடைந்துள்ளனர். தற்பொழுது 13,257 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

**3. தொழிலாளருக்கான மாலைநேர வகுப்புகள் ;**

அதிகத் தொழிற்சாலைகள் ஒருமுகப் படுத்தப்பட்டுள்ள இடங்களான அம்பத்தூர், வடசென்னை, கிண்டி, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, மேட்டூர் அணை மற்றும் ஓசூர் ஆகிய 8 இடங்களில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் தொழிலாளருக்கான மாலைநேர வகுப்புகள் நடத்தப்படுகின்றன. தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்கட்கு சம்பந்தப்பட்ட தொழில் பிரிவுகளில் கருத்தியல் அறிவை வளப்படுத்தி கொள்ள இத்திட்டம் வழிவகை செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் 1975 ஆம் ஆண்டு முதல் 1989 ஆம் ஆண்டு வரையில் 8,852 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

[1990 ஏப்ரல் 12

4. தொழிற் பயிற்சி நிலையங்களில் ஊரக இளைஞர்களுக்கான பயிற்சித் திட்டம் :

ஊரக இளைஞர் பயிற்சித் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் திட்டத்தின் கீழ் 11 யாகவும் 21 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் முழு நேரப் பயிற்சி நேர பயிற்சியுமாக அளிக்கப்பட்டு நிலையங்களில் பகுதி யின் கால அளவு ஆறு மாதங்கள்/ஒரு வருகிறது. இப்பயிற்சி பயிற்சி 23 தொழிற் பிரிவுகளில் வருடமாகும். இப் கவே வேலை வாய்ப்பு அமைப்புகளை ஊரக இளைஞர்கள் தாமா மளவில் செயலாக்கப்பட்டு உருவாக்கிக் கொள்ளு முதல் மார்ச் 1990 வரையில் வருகிறது. 1979 ஆம் ஆண்டு ஊரக இளைஞர்கள் பயிற்சி இத்திட்டத்தின் கீழ் 21,949 885 ஊரக பெற்றுள்ளனர். இளைஞர்கள் தற்பொழுது பெற்று வருகின்றனர். ஊரக இப் பயிற்சியினைப் மோட்டார் ரீவைண்டிங், இளைஞர்களிடையே மின் மெக்கானிசம், இரட்டை சக்கர வானொலி மோட்டார் கானிசம், மற்றும் தொலைக் காட்சி பம்ப் மெக்கானிசம் மெக் களில் பயிற்சி போன்ற தொழிற் பிரிவு பெறுவதில் அதிக ஈடுபாடு காணப்படுகிறது.

இது போன்ற பயிற்சித் திட்டங்களை அமுல் படுத்துவதற்காக பெருமளவில் ஆம் ஆண்டின் மாநில அரசு தனது வரவு-செலவுத் 1990-91 செலவாக ரூ. 1,107.40 திட்டத்தில் தொடரினச் செலவான. இலட்சங்களும் கட்டிடம் தொடரா இனச் கட்காக இயந்திரங்கள் மற்றும் தளவாடங் ரூ. 310.15 இலட்சங்கங்களும் துள்ளது. ஒதுக்கீடு செய்

உலக வங்கி உதவியுடன் திறன் மேம்பாட்டுத் திட்டம்.

தொழிற் பயிற்சி நிலையங்களை தமிழ்நாட்டில் நவீனப்படுத்துவதோடு, வெவ்வேறு புதிய தொழிற் பயிற்சி இடங்களில், நிலையங்கள் மகளிருக்கென வித்தல் ஆகியவற்றிற்காக படிப்படியாக 1990-91 தோற்று 324.00 இலட்சம் (மூலதனச் ஆம் ஆண்டில் ரூபாய் இலட்சம் வருவாய் கணக்குச் செலவின் கீழ் ரூ. 286.44 இலட்சம்) நிதி ஒதுக்கீடு செலவின் கீழ் ரூ 37.56 தொழிற் பயிற்சி செய்யப்பட்டுள்ளது. இத் தொகை றும் அபிவிருத்தி நிலையங்களை நவீனப்படுத்துதல் மற் வங்கி திறன் செய்தல் போன்ற மேம்பாட்டுத் திட்டங்களுக்காக உலக தொகை ரூ. 2,174.41 திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட முன்னேற்றத்தில் இலட்சங்களில் மகளிர் அடங்கும். நாட்டு என்கின்ற கருத்தின் பங்கை உயர்த்திட வேண்டும் ஒன்றும் அடிப்படையில் கோயம்புத்தூரில் திருச்சி மாவட்டத்தில் தொழிற் பயிற்சி ஒன்றுமாக இரண்டு புதிய நிலையங்கள் மகளிருக்கென 1990-91 ஆம்



1990 ஏப்ரல் 12]

ஆண்டில் தோற்றுவிக்க அரசு முடிவு செய்துள்ளது. தொழிற் பயிற்சி நிலையங்களை நவீனப்படுத்துதல் என் கிற திட்டத்தின்கீழ் தொழிற் பயிற்சி நிலையங்களில் பழைய மற்றும் உபயோகமற்ற இயந்திரங்கள் மற்றும் தளவாடங் களை மாற்றியமைத்தல் போன்ற பணிகள் உட்பட்டிருப் பதால் இப்பணிகள் ரூ. 80.54 இலட்சம் செலவில் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

உலக வங்கி திறன் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1990-91 ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்கள் செயல்பட உள்ளன. கீழ் கொடுக்கப்பட்டுள்ளவைகள் இச்செயல் திட்டத்தில் செயலாக்கப்படும் :

| | | |
|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1 | ஆறு பராமரிப்பு மையங்கள் அமைத்தல் .. | 25.98 |
| 2 | ஒலி, ஒளி விளக்கப்பட சாதனங்கள் அமைத்தல் | 24.00 |
| 3 | ஒவ்வொரு தொழிற் பயிற்சி நிலையத்திலும் இரண்டுபுதிய தொழிற் பிரிவுகள் அறிமுகப் படுத்துதல் .. .. .. | 47.12 |
| 4 | இரண்டு அடிப்படை பயிற்சி மற்றும் நான்கு தொடர் அறிவுரை மையங்கள் அமைத்தல் | 90.40 |
| 5 | கோவை அரசினர் தொழிற் பயிற்சி நிலையத் தில் முன்னேற்ற வாழ்வியல் பயிற்சித் திட்டம் விரிவு படுத்துதல் .. .. .. | 25.26 |
| 6 | மகளிருக்கென 2 புதிய தொழிற்பயிற்சி நிலை யங்கள் அமைத்தல் .. .. | 25.00 |
| 7 | உலக வங்கி திட்டங்கள் செயல்படுத்துவதற்காக இயக்ககத்தில் திட்ட நிர்வாகப் பிரிவு நிறுவு தல் .. .. .. | 5.70 |

பிளாஸ்டிக் பதனிடுதல் செய்பவர் தொழிற் பிரிவு :

வேலை வாய்ப்பைக் கருத்தில் கொண்டு 1989-90 ஆம் ஆண்டில் மேற் குறிப்பிட்ட தொழிற் பிரிவு கிண்டி அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் 35 இருக்கைகளுடன் அறிமுகப் படுத்தப்பட்டது. மேலும் இத் தொழிற் பிரிவு 1990-91 ஆம் ஆண்டில்

கோவை அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில், 32 இருக்கைகளுடன் ரூ. 16.00 இலட்சம் செலவில் அறிமுகப் படுத்தப்பட உள்ளது.

மாநிலத் திட்டத்தின் கீழான மற்ற திட்டங்கள் ;

கீழ்க்கண்ட மற்றத் திட்டங்களும் 1990–91 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் செயல்படுத்த அரசு தீவிரமாக பரிசீலித்து வருகிறது.

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1 ஈரோடு மற்றும் விருதுநகர் தொழிற் பயிற்சி நிலைய பயிற்சியாளர்கள் விடுதி மற்றும் பணியாளர்கள் குடியிருப்புக்கென போதிய தண்ணீர் வசதி செய்ய திறந்தவெளி கிணறு/ஆழ் கிணறு அமைத்தல் .. | 2.00 |
| 2 கோவை தொழிற் பயிற்சி நிலையத்தில், பிளாஸ்டிக் பதனப்படுத்துதல் செய்பவர் தொழிற் பிரிவு அறிமுகப்படுத்துதல் (மத்திய அரசின் ஆதரவுடன்) 40 விழுக்காடுகள் மாநில அரசின் பங்கு .. .. | 6.40 |
| 3 வகுப்பறைகட்காக மரச் சாமான்கள் கொள் முதல் செய்தல் .. .. | 2.00 |
| 4 அம்பத்தூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு வளாகச் சுவர் கட்டுதல் .. | 2.50 |
| 5 இளநிலை பயிற்சி அலுவலர்களை பயிற்சிக்காக மத்திய பயிற்சி நிலையங்களுக்கு மாற்றுப் பணி முறையில் அனுப்புதல் .. | 1.00 |
| மொத்தம் .. | 13.90 |

## அத்தியாயம் 7.

### அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்.

அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம், தமிழ்நாடு அரசு அமைத்துள்ள ஒரு நிறுவனம் ஆகும். இது மாநில அரசுக்கு சொந்தமான ஒரு வரையறுக்கப்பட்ட நிறுவனமாக 30-11-1978 ஆம் நாளன்று இந்தியக் கம்பெனிகள் சட்டத்தின் கீழ்



அமைக்கப்பட்டது. இந்நிறுவனம் அயல் நாடுகளில் வேலை வாங்கித் தருவேன் என்று பணம் பறிக்கும்—முக்கியமாக தனியார் முகவர்களின் ஏமாற்று வேலைகளிலிருந்து பாமர மக்களைக் காப்பாற்றும் பொருட்டு தொடங்கப்பட்டது.

இந்நிறுவனத்தின் அமைக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 50 இலட்சம் ஆகும். (ஒரு பங்கு ரூ. 1,000 வீதம் 5,000 பங்குகள்). இதனுடைய பங்குத் தொகை செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 20 இலட்சம் ஆகும்.

அலுவல்கள் :

பின்வருபவை இந்நிறுவனத்தின் முதன்மையான அலுவல்கள் ஆகும்.

(1) இந்தியாவில் வேலை வாய்ப்பைத் தேடிக் கொண்டிருப்பவர்களுக்கு அயல் நாடுகளில் வேலை வாய்ப்பைத் தேடித் தருதல்.

(2) அயல்நாடுகளில் உள்ள இந்தியர்களிடமிருந்து சேமிப்பில் ஒரு பகுதியைத் திரட்டி இந்தியாவில் பயனுள்ள திட்டங்களைத் தொடங்க வழி வகுத்தல்.

(3) இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் கூட்டாக-தொழில் திட்டங்கள் அமைத்தல்.

(4) இந்தியாவில் தயாரிக்கப்படும் பொருள்களை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஊக்குவித்தல்.

மேலே குறிப்பிட்டுள்ளபடி இந்நிறுவனம் மேற்கொண்டு கவனிக்க வேண்டிய பல்வேறு நோக்கங்கள் இருந்த போதிலும், இது தற்போது இந்தியாவில் பயிற்சி பெற்று தேர்ச்சி பெற்றிருப்பவர்களுக்கு அயல் நாடுகளில் வேலை தேடித் தரும் நோக்கத்தை மட்டும் கவனித்து வருகிறது. அயல் நாடுகளில் வேலை வாய்ப்பை விரும்புவோரின் பெயரை இந்நிறுவனம் பதிவு செய்து கொள்கிறது.

31—3—1989 ஆம் ஆண்டு முடிவுவரை இந்நிறுவனம் 3,668 ஆட்களுக்கு குறிப்பாக அரபு நாடுகளில் வேலை வாய்ப்பைத் தேடித் தந்துள்ளது. (காண்க இணைப்பு 15.)

தற்போது 1—4—1989 ஆம் ஆண்டிலிருந்து இந்நிறுவனம் கடவுச் சீட்டு எடுத்துக் கொடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இந்நிறுவனம், 1989 டிசம்பர் இறுதி வரை 116 ஆட்களை வெளி

நாட்டுக்கு அனுப்பியுள்ளது. நிதி ஆண்டு இறுதிக்குள் குறைந்தது
100 ஆட்கள் வெளிநாட்டுக்கு அனுப்பப்படுவார்கள் என்று
எதிர்பார்க்கப்படுகிறது.

கோரிக்கை—58 பலவகை மூலதனச் செலவு.

[4250 மூலதனச் செலவு மற்றும் ஏனைய சமூக நலப் பணிகள்
203 வேலை வாய்ப்பு.]

1990-91 ஆம் ஆண்டு பகுதி 1 திட்ட மதிப்பீட்டில், அரசினர்
தொழிற் பயிற்சி நிலையத்தில் துணை திட்டங்களை செயல்
படுத்துவதற்காகவும், கட்டிடங்கள் கட்டுவதற்காகவும், தள
வாடங்கள் கொள்முதல் செய்வதற்காகவும் மாநிலத் திட்டங்
களுக்காக ரூ. 23.71 இலட்சங்களும் மத்திய அரசு உலக வங்கி
திறன் மேம்பாட்டுத் திட்டங்களுக்காக ரூ. 286.44 இலட்சங்
களும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திட்ட விவரங்கள் :

1. தொழிற் பயிற்சி நிலைய மாணவர் விடுதி கட்டிடங்கள் :

மொத்தமாக உள்ள 44 அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்
தில் 28 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு மட்டுமே
நிலையான விடுதி கட்டிடங்கள் உள்ளன. தேனி அரசினர்
தொழிற் பயிற்சி நிலையத்துக்கு விடுதி கட்டுவதற்காக 1986-87
ஆம் ஆண்டு அரசு அனுமதியளித்துள்ளது. தற்போது கட்டிடம்
கட்டுவது முழுமை அடைந்துள்ளது. ஆயினும் மேலும் பல
பயிற்சியாளர்களுக்கு விடுதியில் தங்க இடவசதி செய்யும்
பொருட்டு, 1989–90-ல் இரண்டாவது மாடி கட்டுவதற்கு பணி
மேற் கொள்ளப்பட்டது. பணிகள் தொடர்ந்து நடைபெறும்
நிலையில் உள்ளது. இதற்கு 1990-91 ஆண்டு திட்ட மதிப்பீட்
டில் அடையாளத் தொகை ரூ. 1,000 நிதி ஒதுக்கீடு செய்யப்
பட்டுள்ளது.

2. தொழிற் பழகுநர் பயிற்சித் திட்டம்.

இத்தலைப்பில் 1990-91 ஆம் ஆண்டு மதிப்பீட்டில் கட்டிடங்
கள் கட்டுவதற்காகவும் தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்
காகவும் அடையாளத் தொகை ரூ. 1,000 நிதி ஒதுக்கீடு செய்யப்
பட்டுள்ளது.



3. தொழில்களை பல்திறப்படுத்துதல் :

1990-91 ஆம் ஆண்டு திட்ட மதிப்பீட்டில் இத் தலைப்பின்
கீழ் இதுவரை வாங்கப்படாத மீதமுள்ள தளவாடங்களைக்
கொள்முதல் செய்வதற்காக ரூ. 31.16 இலட்சங்களும், மேலும்,
அடையாள தொகையாக ரூ. 1,000 '13 (பெரும்பணிகள்)';
என்ற துணைத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. தொழில் பயிற்சி நிலையங்களில் இல்லாத தளவாடங்களைக் கொள்
முதல் செய்தல் :

அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கட்கென சர நிர்ணயப்
படி முன்னர் வழங்கப்படாத தளவாடங்களை கொள்முதல் செய்
வதற்காக ரூ. 21.00 இலட்சங்கள் 1986–87 ஆம் ஆண்டு அனுமதி
அளிக்கப்பட்டது. இத்தொகை படிப்படியாக செலவிடப்
பட்டு வருகிறது. 1990–91 ஆம் நிதியாண்டில் ரூ. 6,000 மீதமுள்ள
தளவாடங்களைக் கொள்முதல் செய்வதற்காக நிதி ஒதுக்கீடு
செய்யப்பட்டுள்ளது.

5. அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களை அபிவிருத்தி செய்தல் :

1989–90 ஆம் நிதியாண்டில் கிண்டியிலுள்ள மகளிர் தொழிற்
பயிற்சி நிலையத்துக்கு நிரந்தர கட்டிடம் கட்டுவதற்காக ரூ.
42.00 இலட்சங்கள் அனுமதியளிக்கப்பட்டு 1989–90 ஆம் நிதி
யாண்டில் ரூ. 22.00 இலட்சங்கள் மட்டுமே செலவிட
அனுமதியளிக்கப்பட்டது. எனவே 1990-91 ஆம் நிதியாண்டில்
இப்பணிக்காக ரூ. 5.01 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு
செய்யப்பட்டுள்ளது. மேலும் இராமநாதபுரம் மற்றும் தர்மபுரி
அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்துக்கு தளவாடங்கள் கொள்
முதல் செய்வதற்கான ரூ. 4.40 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்
யப்பட்டுள்ளது.

6. அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களை நவீனப்படுத்துதல் :

அடையாளத் தொகையாக ரூ. 1,000 "13. பெரும் பணிகள்"
என்ற துணைத் தலைப்பின் கீழும், மேலும் ரூ. 1,000 "15 இயந்
திரங்கள் மற்றும் தளவாடங்கள்" என்ற தலைப்பின் கீழும் நிதி
ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7. ஸ்ரீமூல இராமவர்மா மகளிர் அரசு தொழிற்பயிற்சி நிலையம்,
நாகர்கோவில் :

1990–91 ஆம் நிதியாண்டில் நாகர்கோவில் ஸ்ரீமூல இராம
வர்மா அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்துக்காக கொள்முதல்
செய்யவேண்டிய தளவாடங்கள் இருப்பின் அவற்றை கொள்
முதல் செய்வதற்காக, அடையாளத் தொகை ரூ. 1,000 ஒதுக்கீடு
செய்யப்பட்டுள்ளது.

[1990 ஏப்ரல் 12

8. ''பிளாஸ்டிக் பதனப்படுத்துதல் செய்பவர்'' தொழிற் பிரிவினை அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் அறிமுகப்படுத்துதல் :

மத்திய அரசு உதவியுடன் பிளாஸ்டிக் பதனப்படுத்துதல் செய்பவர் தொழிற் பிரிவு 1989-90 ஆம் ஆண்டில் கிண்டி அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்காக 1990-91 ஆம் ஆண்டு திட்ட மதிப்பீட்டில் ரூ. 1,000 அடையாளத் தொகையாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

9. உலக வங்கி உதவியுடன் திறன் மேம்பாட்டுத் திட்டம் :

உலக வங்கி நிதியுதவியுடன் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்துவதற்காக ரூ. 297.44 இலட்சங்கள் 1990-91 ஆம் ஆண்டு திட்ட மதிப்பீட்டில், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (1989-90 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட திட்டங்களுக்கான ரூ. 11.00 இலட்சங்கள் இத்தொகையில் அடங்கும்.)

இச் செலவினம் மத்திய மற்றும் மாநில அரசுகளினால் சரி பாதியாக ஏற்றுக்கொள்ளப்படும்.

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் உள்ள பழைய இயந்திரங்களை மாற்றவும் ஏற்கனவே வழங்கப்படாத இயந்திரங்கள் வழங்குவதன் மூலம் நவீனப்படுத்தும் திட்டம். | 80.54 |
| 2. ஆறு பராமரிப்பு மையங்களை நிறுவுதல் .. .. | 21.00 |
| 3. வகுப்பறை போதனா முறையை மேம்படுத்தும் வகையில் விளக்கப்பட சாதனங்கள் அமைத்தல். | 24.00 |
| 4. ஒவ்வொரு தொழிற் பயிற்சி நிலையத்திலும் 2 புதிய தொழிற்பிரிவுகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் 16 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களை விரிவுபடுத்தும் திட்டம். | 42.50 |
| 5. இரண்டு அடிப்படைப் பயிற்சி மற்றும் நான்கு தொடர் அறிவுரை மையங்களை ஏற்படுத்துதல். | 70.40 |
| 6. வாழ்வியல் மேம்பாட்டுத் திட்டத்தினை விரிவாக்கும் திட்டம். | 23.0[illegible] |
| 7. மகளிருக்கென இரண்டு புதிய தொழிற்பயிற்சி நிலையங்களை தொடங்குதல். | 25.0[illegible] |
| 8. ஏற்கனவே 1989-90 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட சேலம் மகளிர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தினை தொடங்குதல். | 11.0[illegible] |
| மொத்தம் .. | 297.4[illegible] |



1990 ஏப்ரல் 12]

கோரிக்கை எண் 44.

எழுதுபொருள்—அச்சுத் துறை, 1990-91.

எழுதுபொருள்—அச்சுத் துறையின் பணி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

எழுதுபொருள்-அச்சுத் துறை, முதலில் 1831ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசிதழ்களை மட்டுமே அச்சிடுவதற்காக 10 தொழிலாளர்களுடன் தொடங்கப்பட்டது. பின்னர் அது படிப்படியாக வளர்ச்சி அடைந்து தற்போது மாவட்டங்களில் 8 அச்சகங்களைக் கொண்டு விளங்குகின்றது.

எழுதுபொருள்-அச்சுத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அச்சகங்கள் பின்வரும் இடங்களில் அமைந்துள்ளன :—

1. அரசு மைய அச்சகம், வள்ளலார் நகர், சென்னை.

2. அரசு கிளை அச்சகம், உயர்நீதிமன்ற வளாகம், சென்னை.

3. அரசு கிளை அச்சகம், சூளை, சென்னை.

4. அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை.

5. அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி.

6. அரசு கிளை அச்சகம், சேலம்.

7. அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்.

8. அரசு கிளை அச்சகம், மதுரை.

மேற்கூறிய பிரிவுகளைத் தவிர, எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்ககத்தின் கட்டுப்பாட்டின் கீழ், எழுதுபொருள் பிரிவும் அரசு வெளியீடுகள் விற்பனை நிலையமும் செயற்படுகின்றன.

பணியாளர் நிருவாகம், தொழில் உறவுகள், பொது நிருவாகம், பொருட்களின் மைய நிருவாக அமைப்பு, இயந்திரங்கள் வாங்குதல், அச்சுப் பிரிவுகளுக்குத் தேவையான பொருட்களைக் கொள் முதல் செய்தல், மாநிலத்திலுள்ள அரசுத் துறைகள் அனைத் திற்கும் தேவைப்படும் எழுதுபொருள்கள், தட்டச்சுப் பொறி கள், படிபெருக்கிகள், கணக்கீட்டுப் பொறிகள் முதலியவற்றைக் கொள்முதல் செய்து வழங்குதல் போன்ற பணிகள், தலைமைச் செயலகம், துறைத் தலைவர்கள், தமிழ்நாடு மாநில கணக்குத் துறைத் தலைவர், அரசுத் துறை நிறுவனங்கள் ஆகியவை ஒப் படைக்கும் அச்சுப் பணிகள் வரவு-செலவுத் திட்ட ஆவணங்கள்,

தமிழ்நாடு அரசிதழ் மந்தண தனி அறிக்கைகள், விதிக் கோவை
கள், நடைமுறை நூல்கள், வாக்குச் சீட்டுகள், வினாத்தாள்கள்,
போன்ற மிகவும் இரகசியத்தன்மை வாய்ந்த இனங்கள், நிலைப்
படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள் அச்
சிடுதல் ஆகிய பணிகள் எழுதுபொருள்—அச்சுத் துறையின்கீழ்
வருகின்றன.

எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்ககம், மேற்கூறிய அச்சுப்
பிரிவுகள் பணிபுரிவதைக் கண்காணிக்கும் தலைமை அமைப்பா
கும். இதன் அனுமதிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கை
231 ஆகும். இத்துறை இயக்குநர், எழுதுபொருள்-அச்சுத் துறை
தொடர்பான பணிகளில் தமிழ்நாடு மாநில அரசுக்கு ஆலோசக
ராகவும் செயல்படுகிறார். இவருக்கு இணை இயக்குநர், பொது
மேலாளர், பணி மேலாளர், துணைப் பணி மேலாளர்கள், உதவிப்
பணி மேலாளர்கள், ஏனைய தொழிட்நுட்பப் பணியாளர் ஆகி
யோர் உதவி புரிகின்றனர்.

மாவட்டங்களில், மாவட்ட அரசிதழ்களை அச்சிடும்
பணியைக் கிளை அச்சகங்கள் கவனித்து வருகின்றன. உயர்
நீதிமன்றத்திற்குரிய அன்றாட வழக்குப் பட்டியல்களையும்,
சட்ட அறிக்கைகளையும் அச்சிடும் பணியைச் சென்னை உயர்
நீதிமன்றத்திலுள்ள கிளை அச்சகம் கவனித்து வருகிறது.

(1) அரசு மைய அச்சகம், சென்னன-79 :

இது, ஒரு பணி மேலாளரின் கட்டுப்பாட்டின் கீழ் மொத்தம்
3,427 பணியாளர்களைக் கொண்டு மூன்று முறைமாற்றுப் பணி
களில் செயற்பட்டு வருகிறது. இவ்வச்சகத்தில் அச்சிடும் இயந்
திரங்கள், புத்தகம் கட்டும் இயந்திரங்கள், அச்சுக் கோர்க்கும்
இயந்திரம், போட்டோ கம்போசிங் இயந்திரம், பிளாக்
தயாரிப்புப் பிரிவு, ரப்பர் முத்திரைப் பிரிவு ஆகிய அனைத்து
வசதிகளும் உள்ளன.

தலைமைச் செயலகம், துறைத் தலைவர்கள், தமிழ்நாடு
மாநிலக் கணக்குத்துறைத் தலைவர், பொதுத் துறைக் கழகங்கள்
ஆகியவை ஒப்படைக்கும் அச்சுப் பணிகளின் பெரும்
பான்மைப் பணியையும், வரவு-செலவுத் திட்ட ஆவணங்கள்,
தமிழ்நாடு அரசிதழ்கள், இரகசிய ஆவணங்கள், வினாத்தாள்கள்
போன்ற மிக இரகசியத் தன்மை வாய்ந்த பணிகள், வரையறுக்கப்
பட்ட மற்றும் வரையறுக்கப்படாத சில படிவங்கள் ஆகியவற்
றையும் அரசு மைய அச்சகம் அச்சிடுகிறது.



1989ஆம் ஆண்டில் மைய அச்சகம் செய்து முடித்த சில
முக்கியப் பணிகள் வருமாறு :—

| | நகல்கள், |
|---|---|
| 1. மாநில கணக்குத் துறைத் தலைவர் அலுவலக ஓய்வூதிய பணிப் பட்டுவாடா ஆணைப் பதிவேடுகள். | 20,000 |
| 2. மாநில கணக்குத்துறைத் தலைவர் அலுவலகப் பொது வருங்கால வைப்பு நிதி படிவங்கள். | 5,00,000 |
| 3. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விவாதங்கள். | |
| 4. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கம்ப்யூட்டர்கோடிங் விடைத்தாள்கள். | 3,00,000 |
| 5. குடும்ப அட்டைகள் 'இ' படிவம் .. | 50,00,000 |
| 6. கால்நடைப் பராமரிப்புத் துறை பால் அட்டைகள். | 1,00,000 |
| 7. 'சிறு சேமிப்பு' எப்சி பாஸ் புத்தகங்கள் .. | 8,00,000 |
| 8. 'நல்விதை' காலாண்டு இதழ் (எண்ணெய் வித்துக்கள் இயக்குநருக்காக). | |
| 9. 'தோரண வாயில்' இதழ்-முறை சாரா மற் றும் முதியோர் கல்வி இயக்குநருக்காக. | |

மேலும் 1989 நாடாளுமன்றத் தேர்தலுக்காகவும் மற்றும்
பெரணமல்லூர் சட்டப் பேரவை இடைத் தேர்தலுக்காகவும்
வாக்குச் சீட்டுகள் அச்சிடப்பட்டன.

இந்த அச்சகத்தில் ஓய்வு அறை ஒன்று உள்ளது. தனியார்
ஒப்பந்தக்காரர் ஒருவர் சிற்றுண்டிச்சாலை ஒன்று நடத்துகிறார்.
பணிபுரியும் மகளிரின் குழந்தைகளைப் பணி நேரங்களில்
கவனித்துக் கொள்ள குழந்தைகள் காப்பகம் ஒன்று உள்ளது.

(2) அரசு கிளை அச்சகம், சூளை, சென்னை :

இந்த அச்சகம் அனுமதிக்கப்பட்ட 627 பணியாளர்களுடன்
மூன்று முறைமாற்றுப் பணிகளில் செயல்படுகிறது. இந்த அச்ச
கம், முக்கியமாக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,
காவல்துறை, மருத்துவத் துறை, வணிகவரித் துறைகளின்
அச்சுப் பணியை மேற்கொள்கிறது. 1989-ம் ஆண்டு நாடாளு
மன்றத் தேர்தலுக்காக வாக்குச் சீட்டுகள் இவ்வச்சகத்தில் 1989ல்
அச்சடிக்கப்பட்டன.

தொழிலாளர் நல உதவி அலுவலர் ஒருவர் இக்கிளை அச்சகத்
தொழிலாளர் நலனைக் கவனிக்கிறார்.

(3) சென்னை, உயர்நீதிமன்ற வளாகத்திலுள்ள அரசு கிளை
அச்சகம் :

இக்கிளை அச்சகம், அனுமதிக்கப்பட்ட 237 பணியாளர்
களுடன் மூன்று முறைமாற்றுப் பணிகளில் செயல்படுகிறது.

இவ்வச்சகத்தின் முக்கியப் பணி உயர் நீதிமன்றத்திற்குரிய
தினசரி வழக்குப் பட்டியல்களை அச்சிட்டு வழங்குவதும் இந்தியச்
சட்ட அறிக்கைகளை அச்சிடுவதும் ஆகும்.

பின்வரும் துறைத் தொடர்பான அச்சுப் பணிகளும் 1989
ஆம் ஆண்டில் இவ்வச்சகத்தில் மேற்கொள்ளப்பட்டன:—

1. தேர்வுகள் இயக்குநர்—எஸ். எஸ். எல். சி. விடைத்
தாள்கள்.

2. சிறைத் துறைத் தலைவர்—நிலைப்படுத்தப்பட்ட
சிறைத் துறைப் படிவங்கள்.

3. நுகர்பொருள் வழங்கல் துறை—கணக்கெடுத்தல் படிவம்
மற்றும் அடையாளச் சீட்டுகள்.

4. தமிழ்நாடு சட்டப் பேரவை விவாதங்கள்.

5. மோட்டார் வண்டிகள் சட்டப் படிவங்கள் (14 வகை
கள்).

(4) அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை :

இக்கிளை அச்சகம் 254 பணியாளர்களைக் கொண்டு இரண்டு
முறைமாற்றுப் பணிகளில் இயங்கி வருகிறது. ஆதிதிராவிட
நலத் துறைப் படிவங்கள், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைப்
படிவங்கள், பதிவுத் துறைப் படிவங்கள், கருவூலக் கணக்குகள்
துறைப் படிவங்கள், பொதுப் பணித் துறை படிவங்கள், உயர்
நீதிமன்றத்திற்கான படிவங்கள், மீன் துறைப் படிவங்கள்,
தேசியக் கல்விக் கடன் உதவித் தொகை படிவங்கள் போன்ற
வழக்கமான வரையறுக்கப்பட்ட படிவங்கள் இவ்வச்சகத்தில்
அச்சிடப்படுகின்றன.

இவற்றுடன், சென்னை, செங்கை-அண்ணா, நீலகிரி,
வேலூர்-அம்பேத்கார், தஞ்சாவூர், புதுக்கோட்டை கன்னியா
குமரி, நெல்லை-கட்டபொம்மன், சிதம்பரனார், இராமநாத



புரம், பசும்பொன் தேவர் திருமகன், காமராசர், தர்மபுரி,
கோயம்புத்தூர் மற்றும் திருவண்ணாமலை-சம்புவராயர்
மாவட்டங்களின் அரசிதழ்களும் இக்கிளை அச்சகத்தில் அச்சிடப்
படுகின்றன.

இவை தவிர, தஞ்சை, நாகப்பட்டினம், மயிலாடுதுறை,
தென்காசி நாடாளுமன்றத் தொகுதிக்கான வாக்குச் சீட்டுகள்
இவ்வாண்டில் அச்சிடப்பட்டன.

(5) அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி :

இக்கிளை அச்சகம், 1965ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு,
அரியமங்கலம் தொழிற்பேட்டையில் நான்கு வாடகைக் கட்டி
டங்களில் 182 பணியாளர்களுடன் இயங்கி வருகிறது.

இக்கிளை அச்சகம், தமிழ்நாட்டிலுள்ள எல்லா அரசுத்
துறைகளுக்கும், அன்றாட பணிக்குத் தேவைப்படக்கூடிய பொது
வான படிவங்களையும், பதிவேடுகளையும் அச்சிட்டு வழங்கி
வருகிறது. இதைத் தவிர நில அளவை-நிலவரி ஏற்பாடுகள்
'ஏ' பதிவேடுகள், தலைமைச் செயலக உள்துறைக்குத் தேவை
யான வார அட்டவணைகள், பொதுப் பணித் துறை அட்ட
வணை வீதங்கள், மற்றும் வேளாண்மைத் துறை மாத வெளி
யீடான 'நீரும் நிலமும்' என்ற இதழ் முதலானவைகள் இவ்
வாண்டில் அச்சிடப்பட்டன. மற்றும் 1989ஆம் ஆண்டு நாடாளு
மன்றத் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகளும் அச்சிடப்பட்டன.
திருச்சி, திண்டுக்கல்-காயிதே மில்லத் மற்றும் மதுரை மாவட்ட
அரசிதழ்களும் இக்கிளை அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன.

(6) அரசு கிளை அச்சகம், சேலம் :

இவ்வச்சகம் 221 பணியாளர்களைக் கொண்டு, சொந்த
கட்டிடத்தில் இரண்டு முறைமாற்றுப் பணிகளில் இயங்கி வரு
கிறது.

இவ்வச்சகத்தில் இவ்வாண்டில் பின்வரும் பணிகள் மேற்
கொள்ளப்பட்டன :—

1. தமிழ்நாடு கருவூல விதிக்கோவை படிவங்கள் மற்றும்
பதிவேடுகள் அனைத்தும் அச்சிடப்பட்டு தமிழ்நாடு அரசுத்
துறைகள் அனைத்திற்கும் வழங்கப்பட்டன.

2. சேலம் மற்றும் பெரியார் மாவட்ட அரசிதழ்கள்
தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டன.

3. சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டத்திற்கான பொதுப்
பணித் துறை அட்டவணை வீதங்கள்.

இவை தவிர, வந்தவாசி, கோபிசெட்டிப்பாளையம் மற்றும் பொள்ளாச்சி தொகுதிக்கான நாடாளுமன்ற வாக்குச் சீட்டுகளும் 1989 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டன.

(7) அரசு கிளை அச்சகம், விருத்தாசலம் :

இவ்வச்சகம், 1966ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு அதன் சொந்தக் கட்டிடத்தில் 212 பணியாளர்களைக் கொண்டு இரண்டு முறை மாற்றுப் பணிகளில் இயங்கி வருகிறது.

இவ்வச்சகத்தில் பொதுப் பணித் துறை, நீதித் துறை, வேளாண்மை, தொழில் மற்றும் வணிகம், வனம், கால்நடைப் பராமரிப்பு, கூட்டுறவு, தமிழ்நாடு தியணைப்புத் துறை, தேசிய மாணவர் படை மற்றும் புள்ளியல் துறை, நில நிலவரி ஏற்பாடுகள் துறை, மருத்துவத் துறை, காவல் துறை, அளவை பொது வணிகத் துறை ஆகியவற்றிற்குத் தேவைப்படும் நிலைப் படுத்தப்பட்ட படிவங்கள் அச்சிடப்படுகின்றன. மேற் சொன்னதைத் தவிர, தென் ஆர்க்காடு மாவட்ட அரசிதழும் இவ்வச்சகத்தில் அச்சிடப்படுகின்றது.

மேலும் 1989 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகளும் இவ்வச்சகத்தில் அச்சிடப்பட்டன.

(8) அரசு கிளை அச்சகம், மதுரை :

இக்கிளை அச்சகம், 1976 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு நன்முறையில் வடிவமைக்கப்பட்ட இதன் சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இதில் 357 பணியாளர்கள் பணி புரிகின்றனர்.

இவ்வச்சகத்தில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப் பட்டன :—

1. வருவாய்த் துறைப் படிவங்கள் (R. F. Group).

2. போக்குவரத்துத் துறை (மோட்டார் வண்டிகள் சட்டம்)

3. பத்திரப் பதிவுத் துறை படிவங்கள் (ப.ப. II 2 சி).

4. காவல் துறைப் படிவங்கள் (கா.பி. 60, 62 மற்றும் 32).

5. தமிழ்நாடு கருவூல விதிக்கோவை.

6. கருவூல-கணக்குகள் இயக்குநர் (D.T.A. Group).

7. நிலம் மற்றும் வெள்ளை விதைக் கொடிகள்.



8. மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு உரிமங்கள் (14 வகைகள்.)

9. மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் தணிக்கை அறிக் கைகள் (6 வகைகள்).

10. பொதுப் பணித் துறை அட்டவணை விதங்கள்.

11. பொதுப் பணித் துறை ஒப்பந்தப் புள்ளி அட்டவணை.

12. கருவூல-சார்பு கணக்குகள் (5 வகைகள்).

இதைத் தவிர 1989 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் வாக்குச் சீட்டுகள் அச்சிடும் பணியும் மேற்கொள்ளப்பட்டது.

2. எழுதுபொருள் பிரிவு :

எழுதுபொருள்-அச்சுத் துறையிலுள்ள எழுது பொருள் பிரிவு, எழுதுபொருள்களையும், தட்டச்சு இயந்திரங்கள், படிப் பெருக்கிகள், கணக்கிடும் பொறிகள் முதலியவற்றையும் கொள் முதல் செய்து தமிழ்நாட்டிலுள்ள அரசு அலுவலகங்கள் அனைத் திற்கும் வழங்கும் மைய முகவரமைப்பாக இயங்கி வருகிறது. இந்த எழுதுபொருட்கள் அரசு அலுவலகங்கள் அனைத்திற்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

1—4—1989 முதல் 30—11—1989 வரையிலான காலத்தில் ரூ. 6,95,12,135 அளவிற்கு எழுது பொருள்கள் வாங்கப்பட்டன. மத்திய அரசின் உதவி பெறும் அல்லது மத்திய அரசு பொறுப் பேற்கும் திட்டங்களைச் செயல்படுத்தும் நிறுவனங்களுக்கு, அவை முன்கூட்டியே உரிய தொகை செலுத்துவதன் பேரில், எழுதுபொருட்கள் வழங்கப்படுகின்றன.

3. எழுதுபொருள் கொள்முதல் :

காகிதம் அட்டை, தட்டச்சுப் பொறிகள், படிப்பெருக்கிகள் கதர் மற்றும் கைத்தறித் துணிகள் அச்சக மற்றும் சிறைச்சாலைத் தயாரிப்புப் பொருட்கள் நீங்கலாக ஏனைய எல்லா எழுதுபொருட் களும் ஆண்டு தோறும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு வெளி அங்காடியில் வாங்கப்படுகின்றன.

4. காகிதம் மற்றும் அட்டைகள் கொள்முதல் :

காகிதம் மற்றும் அட்டைகள் போன்றவைகள், புதுடெல்லியில் உள்ள வழங்கல்-விற்பனைத் தலைமை இயக்குநர், விலை வீத ஒப்பந்த அடிப்படையில் செய்யும் ஒதுக்கீட்டின் பேரில் பல காகித ஆலைகளிலிருந்து கொள்முதல் செய்யப்படுகின்றன.

வழங்கல்-விற்பனை தலைமை இயக்குநரின் விலை வீத ஒப்பந்
தத்தின்கீழ் வராத சிறப்பு வகைக் காகிதம் மற்றும் அட்டைகள்
போன்றவை, வெளி அங்காடியில், பகிரங்க ஒப்பந்தப்புள்ளிகள்
(அ) வரம்பிற்குட்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கோருவதன்
மூலம் பொதுப் பணித் துறையின் ஆணையர் மற்றும் செயலர்
அவர்களைத் தலைவராகவும், எழுதுபொருள் மற்றும் அச்சுத்
துறை இயக்குநர் மற்றும் நிதித் துறையின் துணைச் செயலர்,
ஆகியவர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட சிறப்புக்
கொள்முதல் குழுவின் ஒப்புதல் பெற்று கொள்முதல் செய்யப்படு
கின்றன.

5. அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம், சென்னை :

சென்னை அண்ணா சாலை, அரசு வெளியீடுகள் விற்பனை
நிலையம் மற்றும் சென்னை, உயர்நீதிமன்ற வளாகத்திலுள்ள
கிளை விற்பனை நிலையம் ஆகிய இவ்விரண்டும், உதவி இயக்கு
நரின் கட்டுப்பாட்டின்கீழ் 56 பணியாளர்களைக் கொண்டு
செயற்பட்டு வருகின்றன. இவை, சட்டங்கள், விதிகள், விதிக்
கோவைகள், நடைமுறை நூல்கள், அரசிதழ்கள், செய்தி அறிவிப்பு
வெளியீடுகள் மற்றும் பணிப் பதிவேடுகள் போன்ற அரசு
வெளியீடுகளை விற்பனை செய்து வருகின்றன. இந்திய அரசு
வெளியீடுகளுக்கும் முகவரமைப்பாகச் செயல்படுகிறது. இந்த
வெளியீடுகள் தரகு அடிப்படையில் இம் மாநிலம் முழுவதிலுமுள்ள
அனுமதிபெற்ற முகவர்கள் மூலமாகவும் விற்கப்படுகின்றன.
1—4—1989 முதல் 30—11—1989 வரையிலான கால அளவில்
இந்த அரசு வெளியீடுகள் விற்பனை நிலையத்தின் விற்பனை
அளவு வருமாறு:—

| | ரூ. |
|---|---|
| (1) அரசு அலுவலகங்களுக்கு இலவசமாக வழங்கிய வெளியீடுகள் மதிப்பு .. .. | 4,265.45 |
| (2) மாநில அரசு மற்றும் மைய அரசு வெளியீடுகளின் விற்பனை மதிப்பு .. .. | 9,21,585.75 |
| (3) உயர்நீதிமன்ற வளாகத்தில் இருக்கும் அரசு கிளை விற்பனை நிலையத்தின் மாநில மற்றும் மைய அரசு வெளியீடுகளின் விற்பனை மதிப்பு .. .. .. | 1,06,897.15 |



6. பணியாளர்களின் வசதிகள் :

(1) குடியிருப்புகள் :
சென்னை, தண்டையார்பேட்டையில் பணியாளர்களுக்கென
300 குடியிருப்புகள் உள்ளன. இவற்றில் 104 குடியிருப்புகள்
'ஏ' வகையையும் 96 குடியிருப்புகள் 'பி' வகையையும், 100
குடியிருப்புகள் 'சி' வகையையும் சேர்ந்தவை. இந்த வீடுகளில்
மின் விசிறி, கம்பி வலைகள் பொருத்தப்பட்டுள்ளதுடன், இக்
குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியும் தெரு
விளக்கு வசதியும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

(2) தொழிலாளர் நலம்:
தொழிலாளர் நல அதிகாரியும், சுகாதார ஆய்வாளரும்
அடிக்கடி இங்கு சென்று குடியிருப்போரின் நலன்களைக் கவனித்து
வருகின்றனர். தொழிலாளர்களின் குறைகளைக் கேட்டறிந்து
களைவதற்காக, தொழிலாள நல அதிகாரி, சென்னை மற்றும்
வெளியூர்களிலுள்ள இத்துறைப் பிரிவுகளுக்கு நேரடியாகச்
சென்று வருகிறார். சுகாதார ஆய்வாளர் நகரில் உள்ள எல்லாப்
பிரிவுகளுக்கும் அடிக்கடி சென்று சுகாதார வசதிகள் நன்முறை
யில் பராமரிக்கப்படுகின்றனவா என்பதை மேற்பார்வையிடு
கின்றார். ஓய்வு அறை, சிற்றுண்டி அறை, மிதிவண்டி நிறுத்து
மிடம், வானொலி பெட்டிகள் ஆகியவற்றுடன் பிரிவு அளவில்
வகுப்புகள் நடத்தும் அறைகள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.
தொழிலாளர்கள் தொடர்ந்து இவ்வசதிகளைப் பயன்படுத்தி
வருகின்றனர். உடல் ஊனமுற்ற பணியாளர்களுக்கு உதவி
புரியும் நோக்கத்துடன், அரசு மைய அச்சகம், சென்னை-79-ல்
உள்ள ஆறு உடல் ஊனமுற்ற பணியாளர்களுக்கு ஆறு மூன்று
சக்கர மிதி வண்டிகளும், அரசு கிளை அச்சகம், சேலம் பிரிவில்
உள்ள ஒரு உடல் ஊனமுற்ற பணியாளருக்கு ஒரு மூன்று சக்கர
மிதி வண்டியும் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய செயலரால்
கொடுக்கப்பட்டுள்ளது.

(3) மருத்துவ வசதி :
அரசினர் மைய அச்சகத்திலுள்ள மருந்தகத்தைச் சார்ந்த
மருத்துவ அலுவலர், வாரம் ஒருமுறை எழுதுபொருள் இயக்ககம்,
உயர்நீதிமன்றக் கட்டிட கிளை அச்சகம், எழுதுபொருள் கிடங்கு,
குளையில் ஆனைக்காரன் தோட்டம் கிளை அச்சகம் ஆகியவற்
றிற்குச் சென்று பார்வையிடுகிறார். பணியாளர்களுக்கும் அவர்
கள் குடும்பத்தினருக்கும் மைய அச்சகத்தில் உள்ள மருந்தகத்
தில் நாள்தோறும் மருத்துவ வசதிகள் அளிக்கப்படுகின்றன.

(4) பன், தேநீர், பால் இலவசமாக வழங்குதல் :
அரசு மைய அச்சகம், அதன் கிளை அச்சகங்கள் அனைத்தி
லும் பணிபுரியும் எல்லாப் பணியாளர்களுக்கும் பன், தேநீர்
இவற்றிற்குப் பதிலாக ரொக்கமாக ஒரு நபருக்கு மாதம் ரூ. 20

வீதம் படி வழங்கப்படுகிறது. மேலும் உலோகப் புகையினால்
உடல் நல இன்னல்களுக்குட்படக்கூடிய பணியாளர்களுக்கு முன்
னர் நாள்தோறும் 250 மில்லி லிட்டர் பால் வழங்கப்பட்டதற்குப்
பதிலாக ஒரு நாளைக்கு 60 பைசா வீதம் ஒவ்வொரு பணியாள
ருக்கும் வழங்கப்படுகின்றது. இத்துடன் இலவசமாக ஊட்டச்
சத்து மாத்திரைகளும் வழங்கப்படுகின்றன. ரூ. 2.50 என்ற
வீதத்தில் இரவு நேர முறைப்பணிப் படி வழங்கப்படுகிறது.
சென்னை அரசினர் மைய அச்சக வரவு-செலவுத் திட்ட
இரகசியப் பிரிவிலும், பரம இரகசியப் பிரிவிலும் பணிபுரியும்
தொழிலாளர்களுக்கு 7 நாள் வார ஈட்டுப் படியாக மாதம்
ஒன்றுக்கு முறையே ரூ. 12, ரூ. 15 ஆகவும் வழங்கப்படுகின்றன.

(5) தொழிலாளர் நல நிதி :

எழுதுபொருள்-அச்சுத் துறையில் அந்தந்த மனமகிழ் மன்றங்
களுக்குத் தொழிலாளர் நல நிதியிலிருந்து விளையாட்டுக்கள்,
நலப் பணிகள் ஆகியவற்றிற்காக நிதி வழங்கப்படுகின்றது.
மேலும் இந்த நிதியிலிருந்து பணியாளர்களுக்கு சுதந்திர தின
விழா, ஆயுத பூசை முதலிய விழாவினைக் கொண்டாடவும்
தொகை வழங்கப்படுகிறது. தொழிலாளர் நல நிதிக்குப் பங்குத்
தொகை செலுத்தும் தொழிலாளர்களுடைய குழந்தைகளின்
பள்ளிப் பாடப் புத்தகங்களுக்காகும் செலவு, சென்னை-6.
தொழிலாளர் நல வாரியத்தால் ஒவ்வோர் ஆண்டும் ஈடு செய்யப்
படுகிறது.

(6) நலத் திட்டங்கள் :

பெண்கள் துணை வருவாய் பெற உதவும் வகையில் ஒரு
நலத் திட்டமாக புத்தகம் கட்டும் வேலைகள், கோடிடுதல்,
மேலுறை தயாரித்தல் ஆகிய பணிகள் சென்னை மாநகரில் உள்ள
காவல் துறை நலப் பிரிவுகள், பட்டிணப்பாக்கம் மகளிர் மன்றம்,
சென்னை நகரிலுள்ள ஊனமுற்றோர் நலக் கூட்டுறவுச் சங்கம்
போன்ற சமூக நல அமைப்புகளிடம் ஒப்படைக்கப்படுகின்றன.

(7) குழந்தைகள் காப்பகம் :

பணிபுரியும் மகளிரின் வசதிக்காக அரசினர் மைய அச்சகம்,
சூளையில் உள்ள அரசு கிளை அச்சகம் ஆகியவற்றில் குழந்தைகள்
காப்பகங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. காப்பகத்தி
லுள்ள குழந்தைகளைக் காப்பகப் பணியாளர் பார்த்துக் கொள்
கிறார். குழந்தைகளுக்குப் பால், பிஸ்கட், பொம்மைகள் முதலி
யன அரசு செலவில் கொடுக்கப்படுகின்றன.



(8) சீருடைகள் :

இத்துறையின் தொழிலாளர்களுக்கு இலவச சீருடைகள்
வழங்கும் திட்டம் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது.
இதுவரை 1,728 தொழிலாளர்களுக்குச் சீருடைகள் வழங்கப்
பட்டுள்ளன.

(9) தொழிலாளர் கல்வித் திட்டம் :

தொழிலாளர்கள், தொழிலாளர்-ஆசிரியர் பயிற்சி பெற
சென்னை வட்டாரத் தொழிலாளர் கல்வி இயக்ககத்திற்கு
அனுப்பப்படுகின்றனர். பணியாளர்-ஆசிரியர் மற்றும் பணியாளர்
பயிற்சியினருக்கு மொத்தமாக ஒரு தொகை வழங்கப்படுகிறது.
பயிற்சிக் காலம் பணிக் காலமாகக் கொள்ளப்படுகிறது.

(10) சிற்றுண்டிச் சாலை :

அரசு மைய அச்சக சிற்றுண்டிச்சாலை, சூளை, ஆனைக்
காரன் அச்சகத்தில் உள்ள சிற்றுண்டிச்சாலை ஆகியவை
தனியார் ஒப்பந்தக்காரரால் நடத்தப்படுகின்றன.

(11) தொழிலாளர் நற்பணி நலநிதி :

தொழிலாளர் இறக்க நேரிடின் அவருடைய குடும்பத்தின
ருக்கு உடனடி நிவாரணமாக இந்த நிதியிலிருந்து ரூ. 100
வழங்கப்படுகிறது. இதைத் தவிர, தொழிலாளர் நல வாரியத்
திலிருந்து இந்தத் தொழிலாளர்களின் சட்டபூர்வமான வாரிசு
தாரருக்கு ரூ. 200 வழங்கப்படுகிறது.

(12) தொழில் பழகுநர் :

1961 ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் சட்டத்தைச் செயற்
படுத்தும் வகையில், வெவ்வேறு வகைத் தொழில்களின்கீழ்
197 தொழில் பழகுவோரும் குறுகிய கால பட்டயக் கல்விச்
சான்றிதழ் பெற்ற 12 பேரும் அச்சகப் பிரிவுகளில் நியமிக்கப்
பட்டுள்ளனர். இத்தொழில் பழகுவோர் சென்னை மாநகரிலும்
வெளியூர்களிலும் உள்ள அரசு அச்சகங்களிலும் பணிபுரிய
நியமிக்கப்படுகின்றனர்.

(13) கூட்டுறவுச் சங்கம் :

சென்னை மைய அச்சகத்தில் இயங்கிவரும் தமிழ்நாடு அரசு
அச்சக எழுதுபொருள் துறை தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்,
2,203 'எ' பிரிவு உறுப்பினர்களையும் 598 'பி' பிரிவு உறுப்
பினர்களையும் கொண்டுள்ளது. அதன் பங்கு மூலதனம்

ரூ. 36.43 இலட்சமாகும். உறுப்பினர்களுக்கு [1990 ஏப்ரல் 12
மூலம் 1988-89-ல் 4.51 கோடி ரூபாய் கடனாக இச்சங்கத்தின்
முந்தைய ஆண்டாகிய 1987-88-ல் 3.72 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டது.
வழங்கப்பட்டது. இச்சங்கம்,1988-89-ல் ரூ. 8.88 இலட்சமும்
1987-88-ல் ரூ. 5.87 இலட்சமும் நிகர லாபம் ஈட்டியது
1988-89-ஆம் ஆண்டில் அதன் உறுப்பினர்களுக்கு 14 சதவீதம்
ஆதாயப் பங்குத் தொகை வழங்கப்பட்டது.

(14) கூட்டுறவு பண்டகசாலை :

தமிழ்நாடு அரசு எழுதுபொருள்-அச்சுத் துறை கூட்டுறவுப்
பண்டகசாலை, உணவுப் பொருள் பங்கீட்டு ஏற்பாட்டின்கீழ்
வரும் பொருட்கள் உட்பட இன்றியமையாத பண்டங்களை
நியாய விலையில் பணியாளர்களுக்கு விற்பனை செய்வதன் மூலம்
பயனுள்ள வகையில் பணியாற்றி வருகிறது. 31-3-1989ஆம்
நாள் நிலவரப்படி இப்பண்டகசாலையில் 2,584 உறுப்பினர்கள்
உள்ளனர். இப்பண்டகசாலை ரூ. 25,840 பங்கு மூலதனத்தைக்
கொண்டுள்ளது. இது அரசிடமிருந்து பங்கு மூலதன உதவியாக
ரூ. 20,000 பெற்றுள்ளது. பங்கீடு அட்டைகள் வைத்திருப்
பவருக்கு பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. தொழிலாளர்
நலம் கருதி, 3 முதல் 6 சதவீதம் மட்டுமே ஆதாயம் கிடைக்கும்
வகையில் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. மாத
மொன்றிற்கு ரூ. 200 வரை, உறுப்பினர்கள் கடன் பேரில்
பொருட்களை வாங்கும் வசதியும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

(15) அரசு அச்சகச் சங்கம் :

இது அச்சகப் பிரிவு தொழிலாளர்களால் ஏற்படுத்தப்பட்ட
ஓர் அமைப்பாகும். இக்குழு உறுப்பினர்கள் எவரேனும் இறக்க
நேரிடின் அவருடைய குடும்பத்திற்குத் தேவையான அவசர
உதவிகளை இச்சங்கம் தொடர்ந்து செய்து வருகிறது. இச்சங்கத்
தில் 31-12-1989-ல் உள்ளபடி 3,064 உறுப்பினர்கள் உள்ளனர்.
1989ஆம் ஆண்டில் அரசு அச்சகப் பணியாளர் சங்கத்தைச்
சேர்ந்த இறந்துபோன 23 உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு
ரூ. 13,800 ஈமக்கிரியை செலவிற்காகவும் மற்றும் இறந்துபோன
8 உறுப்பினர்களின் குடும்பத்திற்கு ரூ. 16,000 சேர வேண்டிய
தொகைக்காகவும் வழங்கப்பட்டுள்ளது.

அச்சகத்தின் செயல் திறனை மேலும் பெருக்குதல் :

(அ) தளவாடங்களும் இயந்திரங்களும் :

1989-90ஆம் ஆண்டில் அச்சகத்தின் 8 பிரிவுகளுக்கும்
அண்ணா சாலை, அரசு வெளியீட்டுப் பிரிவுக்கும் ரூ. 5,37,104
மதிப்புள்ள தளவாடங்கள், இயந்திரங்கள் மற்றும் அறைக்
கலன்கள் வாங்கப்பட்டன.



1990 ஏப்ரல் 12]

(ஆ) கட்டிடங்கள் :

திருச்சிராப்பள்ளியிலுள்ள அரசு கிளை அச்சகத்திற்காக
திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள துவாக்குடியில் ரூ. 20.24
இலட்சம் செலவில் புதிய கட்டிடம் கட்ட அரசு அனுமதித்
துள்ளது. இப்பணி முடிவடைந்து விட்டது. விரைவில் இக்
கட்டிடம் பயன்படுத்தத் தயாராகிவிடும் என எதிர்பார்க்கப்படு
கிறது.

தற்பொழுது சென்னை, கூளை, ஆனைக்காரன் தோட்டத்
தில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கிவரும் கிளை அச்சகத்திற்
காக கிண்டி தொழிற்பேட்டையில் உள்ள டான்சி பௌண்டரிக்
குரியதான (செயல்படாதது) 2.96 ஏக்கர் நிலத்தையும் அதில்
அமையப்பெற்றுள்ள கட்டிடத்தையும் கையகப்படுத்தும் செயற்
குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) நவீனப்படுத்துதல் :

தலைமைச் செயலக நிதித் துறையின் வரவு-செலவுத் திட்டப்
பிரிவில் கணினிமயமாக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள
தால், சென்னை அரசு மைய அச்சகத்திற்கு அதற்கேற்ப நவீன
இயந்திரங்கள் வாங்குவது அவசியமாகிறது. அரசு மைய அச்சகத்
தில் வரவு-செலவுத் திட்ட அலுவல்களை அச்சிட 1990-91-ல்
ரூ. 107.25 இலட்சம் மதிப்புள்ள இயந்திரங்கள் வாங்க கருத்துத்
தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை தவிர, ரூ. 32.50 இலட்ச மதிப்புள்ள கீழ்க்கண்ட
நவீன இயந்திரங்களையும் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது :—

(ரூபாய் இலட்சத்தில்.)

| | | |
|---|---|---|
| 1. இருவண்ண ஷீட்பெட் ஆப்செட் இயந்திரம் | 1 எண் | 18.00 |
| 2. பர்பெக்ட் பைண்டிங் | 1 எண் | 12.00 |
| 3. ஓவர் ஸ்டிச்சிங் இயந்திரம் | 4 எண்கள் | 2.50 |
| | | 32.50 |

இவ்வாறு மேற்படி இயந்திரங்களை வாங்குவதனால், பாட
நூல்களை ஆண்டு முழுவதும் அச்சிடுவதற்கும், வரவு-செலவுத்
திட்ட ஆவணங்களை அச்சிடும் வேலைகளைக் குறுகிய காலத்தில்
முடிப்பதற்கும் ஏதுவாகிறது. இதன் மூலம் 20 இலட்சம் பாட

நூல்களை அச்சிடும் வேலையை தற்பொழுது செய்ய உத்தேசிக்
கப்பட்டுள்ளது. இந்தப் பணி தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்
தினால் எடுத்து செய்யப்படும் மொத்த பணிகளில் ஏறக்குறைய
10 விழுக்காடாகும். மேலும், மேற்படி நவீன இயந்திரங்கள்
வாங்கப்படுவதால், அவைகள் உபயோகப்படுத்தப்படாமலிருக்
கும் காலங்களைக் கணக்கில் கொண்டு, இத்துறையின் அச்சுப்
பணிகளை படிப்படியாக அதிகப்படுத்துவதற்கும் உதவி செய்
கிறது.

அரசு அச்சகங்களிலுள்ள தொழிலாளர்களின் பணி நிலைமை
யையும், அச்சகங்களில் உள்ள பணிச்சுமைக்கு உகந்தாற்போல்
தேவைப்படும் மனித ஆற்றல் மற்றும் இயந்திரங்கள் பற்றியும்,
அச்சகங்களில் புதிய தொழில் நுணுக்கங்களைப் புகுத்துதல்
பற்றியும், இன்ன பிறவற்றைப் பற்றியும் ஆய்வு செய்ய பொதுப்
பணித் துறையின் 7–8–1989ஆம் நாளிட்ட 1540ஆம் எண்
அரசாணையில் திரு. கே. மலைச்சாமி, இ.ஆ.ப. அவர்கள்
தலைமையில் வல்லுநர் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இவ்
வல்லுநர் குழு எல்லா அம்சங்களையும் விரிவாக ஆய்வு செய்து
வருகிறது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் :

இந்தத் திட்டக் காலத்தில், இயந்திரங்களை வாங்குவதற்
காகவும் மற்றும் திருச்சி கிளைப் பிரிவு அச்சகத்தினர் இடவசதிக்
கென கட்டிடம் கட்டுவதற்காகவும் ரூ. 35 இலட்சம் செல
வழிக்கப்பட்டுள்ளது.

பொது :

பணியாளர்களின் குறைகளைக் கேட்டு, அவற்றைக் களை
யும் பொருட்டு, எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்குநரும்
எழுதுபொருள்-அச்சுத் துறை இணை இயக்குநரும் நேரம் ஒதுக்கு
கின்றனர்.

D
V21,31 N90
N90 2713

143806